T. 1913

கழக வெளியீடு : கஉஎ

பொய்யாமொழிப் புலவர்
இயற்றிய

# தஞ்சைவாணன் கோவை

[சொக்கப்ப நாவலர் உரை]

இக் கோவை நாற்கவிராசநம்பி அகப்பொருள் விளக்கத்திற்கு
இலக்கியமாகவுள்ளது.

:: திருநெல்வேலித் தென்னிந்திய ::
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி :: சென்னை-1.

First Edition: October, 1952

(Copy-right)

*Published by*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY :: MADRAS-1.

*Head Office:*

24, EAST CAR STREET :: THIRUNELVELI

Appar Achakam, 2/140, Broadway, Madras-1.

# பதிப்புரை

உலகில் தோன்றியிருக்கும் உயிர்கட்கெல்லாம் இன்பமே நிலைக்களன். இன்பத்தில் தலைசிறந்த இன்பம் காதல் வாழ்வு. இக்காதல் கட்டற்ற அன்பினின்றும் கிளைத்தெழும் பெற்றியது. இஃது ஆண்மை பெண்மை முகிழ்த்த ஆடவர் பெண்டிரின் மனத்தில் ஊன்றிக் கிளைத்துத் தழைத்துப் பற்றிப் படர்ந்து திகழும் பான்மையது. இதனை விளக்குவனவே கோவை நூல்கள்.

கோவைகளின் மாண்பு முழுதும் வற்ருத களஞ்சியம், இத் தஞ்சைவாணன் கோவை. இதற்கு நல்லுரை வகுத் தமைத்து ஈந்துதவியவர் சொக்கப்ப நாவலரென்னும் புலவர் பெருமானராவர்.

இத்தகைய நூலைச் செவ்விய அமைப்புடன் செப்பஞ் செய்து தமிழுலகு கூட்டுண்டு மகிழ ஆசிரியர் வரலாறு, உரையாசிரியர் வரலாறு, முன்னுரை முதலியவற்றுடன் வெளியிட்டுள்ளோம்.

இதனைத் தமிழ் கூறும் நல்லுலகத்து மக்கள் யாவரும் வாங்கிக் கற்று, முத்தமிழ்த் துறையின் முறைபோகிய வித்தகர்களாய் என்ஞான்றும் விளங்கி, இந்நூற் கருத்தையும் சிறப்பியல்களையும் நாடெல்லாம் பரப்புவார்கள் என நம்புகின்றோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

# முன்னுரை

என்றுமுள தென்றமிழ் மொழிக்கண் நின்று நிலவும் நூல்களுள் முதன்மை வாய்ந்தது தொல்காப்பியம் : இது, எழுத்து சொல் பொருள் என்னும் முப்பகுப்புடைய இலக்கணங்களைக் கொண்டு திகழ்கின்றது. அதன் வழியாய் அதன் கருத்தை விரித்தும் தொகுத்தும் வகுத்தும் கூறுகின்ற இலக்கண நூல்கள் பல. அவற்றுள், 'நம்பி அகப்பொருள் விளக்கம்' என்னும் நூலும் ஒன்று. இஃது, அகப்பொருள் இலக்கணத்தை வகைப்படுத்திக் கூறுகின்றது. இதற்கு ஏற்ற இலக்கியமாகத் திகழ்வது, 'தஞ்சைவாணன் கோவை' என்னும் இந்நூல்.

இதனைச் செந்தமிழணங்கிற்கு மணிக்கோவையாக ஆக்கி அணிந்தவர்; 'எய்யா நல்லிசைச் செவ்வேற் சே'யால், 'பொய்யாமொழி' என்று புகழப்பெற்ற **பொய்யாமொழிப் புலவர்** பெருமகனாராவர்.

மங்கலப் பாண்டி வளநாட்டின்கண், தெங்கும் பலவும் செந்நெலும் கன்னலும் பொங்கிய வளமிகு *மாறை நாட்டில், '**சந்திரவாணன்**' என்னும் தோன்றல் ஒருவர் இருந்தனர்; இவர், **சோமாற வர்மர் திரிபுவனச் சக்கரவர்த்தி குலசேகர தேவருக்கு** அமைச்சராகவும், படைத்தலைவராகவும் புலவர்களைப் புரக்கும் புரவலராகவும் புகழுடன் விளங்கினர்; இவர் தஞ்சாக்கூரில் பிறந்தவராதலால், **தஞ்சைவாணன்** என்னும் சிறப்புப்பெயர் பெற்றிருந்தனர். ஆத

---

* மாறைநாடு என்பது, பாண்டிநாட்டில் கொற்கை, வல்லம், தஞ்சாக்கூர், மல்லை என்னும் நான்கு ஊருக்கும் இடைப்பட்டுப் பொருநையாற்றங் கரையிலுள்ள நாடு.

லால் இவர்மீது அகப்பொருட் சுவை பலவும் தோன்றத் 'தஞ்சைவாணன் கோவை' என்னும் பெயரமைத்து இந் நூலைப் பாடி அரங்கேற்றினர்.

இந்நூலின் காலம் கோமாறவர்மர் திரிபுவன சக்கர வர்த்தி காலமாகிய கி. பி. கஉ-ஆம் நூற்றாண்டு என்று கொள்ளக் கிடக்கின்றது. அஃதாவது, ஏறக்குறைய இற் றைக்கு (750) ஆண்டுகட்குமுன் பாடப் பெற்றதெனக் கொள்ளலாம்.

நாற்கவிராச நம்பி இயற்றிய 'அகப்பொருள் விளக் கம்' அகத்திணை இயல் களவியல் வரைவியல் கற்பியல் ஒழிபியல் என்னும் ஐந்து பெரும் பிரிவுகளையும், அவை களின் உள்ளடக்கமான இயற்கைப்புணர்ச்சிமுதல் திணை மயக்கம் ஈறாக (ருங) கிளவிக் கொத்துக்களையும், அவை களின் உட்பிரிவான பலதுறை விளக்கங்களையும் விளக்கிக் கூறுகின்றது. அத் துறைகளுக்கேற்ற இலக்கியமாக இக் கோவை படர்ந்து மிளிர்கின்றது.

பொதுவாக நோக்குமிடத்துக் கோவைகள் *'உருவும் திருவும் பருவமும் குலனும் குணனும் அன்பும் முதலிய வற்றால் தம்முள் ஒப்புமையுடையராய தலைமகனும் தலை மகளும் பிறர் கொடுப்பவும் அடுப்பவும் அன்றிப் பால்வகை யால் தாமே எதிர்ப்பட்டு'க் களவிற் புணர்ந்து இன்பந் துய்த்துப் பின் கற்புநிலையின் இற்கிழமை பூண்டு விருந்து புறந்தந்து அருந்தவர்ப் பேணி ஒழுகிவரும் இல்லற இயற்கை நுட்பத்தைப் புனைந்துரை வகையால் எடுத் துரைத்து ஒரு கோவை (தொடர்பு) ஆக்கி, கற்றோர்க்கும் கேட்டோர்க்கும் இன்பம் பயக்கும் துள்ளலோசையான்

* திருக்குறள், காமத்துப்பால், அதி. (கO௯) பரிமேலழகர் விளக்கவுரை.

அமைந்த கட்டளைக் கலித்துறைப் பாக்களால் பாடப் பெறுவதாகும்.

இம்முறையில் அமைந்து விளங்குவன: திருக்கோவை யார், பாண்டிக்கோவை, அம்பிகாபதி கோவை, திருவெங்கைக் கோவை, கோடீசுரக் கோவை முதலிய பலவுமாம். இவைகள் கடவுளரையோ அரசர்களையோ குறுநில மன்னர்களையோ வள்ளல்களையோ பாட்டுடைத் தலைவராகக்கொண்டு அத் தலைவர்களின் ஆட்சி முறைக்குட்பட்ட நாட்டில் இக் காத லர் நிகழ்ச்சி நிகழ்வதாகத் துறைகொண்டு அமைந்து செல்லும். இவற்றுள், திருக்கோவையாரும் திருவெங் கைக் கோவையும் கோடீசுரக் கோவையும் தனக்கொப் புமை யில்லாத் தலைவனை இறைவனையே பாட்டுடைத் தலைவனகக்கொண்டு மிளிர்வன. அம்பிகாபதி கோவை யாரையும் பாட்டுடைத் தலைவனகக் கொள்ளாது கோவை நிகழ்ச்சியைமட்டும் கூறுகின்றது. பிற கோவைகள் மக் களுட் சிறந்த அரசர்களையும் வள்ளல்களையும் பிறரையும் தலைவராகக்கொண்டு நிகழ்வனவாகும். இவைகள்போன்றே இத் தஞ்சைவாணன் கோவையும் வள்ளலான சந்திர வாணன்மேற் பாடப்பெற்றுத் தானே தனக்கொப்பான தனிநூலாகத் தமிழ் கூறும் நல்லுலகத்தில் ஓங்கி மிளிர் கின்றது.

அகப்பொருள் துறையில் முதலாவது கைக்கிளை நிகழ் வது இயற்கை. *'கைக்கிளையாவது: ஒருமருங்குபற்றிய கேண்மை' என்பர், நச்சினர்க்கினியர். ஒருமருங்குபற்றிய கேண்மையாவது, தலைவனே தலைவியோ ஒருவர் காதல் கொள்ளாமல் இருப்ப, (இருவரும் ஒன்றுபட்டுக் காதல் கொள்ளாமல்) ஒருவர்மட்டும் காதல் கொள்வது. அஃ தாவது, ஒருவர் விரும்ப மற்றொருவர் விரும்பாதிருத்தல்;

* தொல். அகத்திணை இயல், சூத்திரம்-க. நச். உரை விளக்கம்.

அல்லது அறியாதிருத்தல். ஆகலான், இது முற்றுப் பெறுத காதல் ஆகின்றது. இருவரும் ஒருங்கியைந்து முற்றுப்பெற்ற காதலே அன்பின் ஐந்திணை ஒழுகலாறு. இதனைத் திருவள்ளுவப் பெருமான்,

> *'தாம் வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றுரே
> காமத்துக் காழில் கனி.'

என்ருர். 'விதை இல்லாத கனி' என்று கனிந்து கூறுவதை ஊன்றி நோக்குக. ஐந்திணை : ஐவகை ஒழுக்கம். அவை, முல்லை குறிஞ்சி பாலை மருதம் நெய்தல் ஆகிய இருத்தல் புணர்தல் பிரிதல் ஊடல் இரங்கல் என்னும் நிகழ்ச்சிகளாம். இவைகள் நிகழுமுன் நிகழ்வதே கைக்கிளை. அதற்கு முதல் முதல் காணுதல்வேண்டும். அது தலைவன் தலைவியைத் தன் கண்ணுற் காண்பது. இதனைக் கோவைகளில் துவக்கத்திலேயே 'காட்சி' என்ற துறையமைத்துக் கூறப்பெறும். அந்த முறையிலேயே எல்லாக் கோவைகளும் தொடக்கமுறுகின்றன.

கோவைகளுட் சிறப்புடையதாக ஆன்ருேரால் பண்டு தொட்டுப் பாராட்டப் பெறுவது, திருச்சிற்றம்பலக் கோவையெனப் பெயரிய திருக்கோவையார். மற்றக் கோவைகளைக் குறிக்குங்கால் உயர்வு குறிக்கும் 'ஆர்' விகுதி கொடுத்து வழங்கிஞரில்லை; இது ஒன்றுக்குமட்டும் அவ் விகுதி கொடுத்து அழைக்கப்பெறுவது அதன் சிறப்பியல்பு நோக்கியே. அது சொல் பொருள் நயம், ஒப்பற்ற இறைவனையே தலைவனுகக் கொண்டுள்ள பண்பு முதலியவற்ருல் சிறப்புற்றிருத்தலை ஓர்க.

இதில் தலைவன் தலைவியைக் கண்ட காட்சியை முதல் முதலாகத்,

* திருக்குறள் : கககக.

*'திருவளர் தாமரை சீர்வளர் காவிகள் ஈசர்தில்லைக்
குருவளர் பூங்குமிழ் கோங்குபைங் காந்தள்கொண் டோங்குதெய்வ
மருவளர் மாலையொர் வல்லியின் ஒல்கி அனநடைவாய்ந்து
உருவளர் காமன்தன் வென்றிக் கொடிபோன் றொளிர்கின்றதே.'

என்பதாம். (க)

பெண்ணலங்கனிய நின்ற தலைவியின் ஒவ்வோர் உறுப்பையும் ஐந்திணை நெறிபடரும் நிலத்தின் கருப் பொருள்களான மலர்களானியன்ற மாலை எனத் தலைவன் வியக்கின்றான்.

இவ்வாறே மற்றக் கோவைகள் எல்லாவற்றினும் அவ்வவ் ஆசிரியன்மார் எடுத்துக்கூறிச் செல்வதைக் காண லாம். இவைகள்போன்றே இந் நூலகத்தும் காட்சித் துறையை முதலில் அமைத்துள்ளனர். பிறரெல்லாம் மலர் களையும் அரும்புகளையும் அமுதக்குடங்களையும் பொருத்திக் காட்டிப் பெண்மை வடிவைக் குறிக்க, இவர்,

'புயலே சுமந்து பிறையே அணிந்து பொருவிலுடன்
கயலே மணந்த கமலம் மலர்ந்தொரு கற்பகத்தின்
அயலே பசும்பொன் கொடிநின்றது.' (க)

என்று தலைவியின் செவ்விய திருவுரு தோன்றக் கூறினர்.

இதில் தலைவியின் கூந்தல் நெற்றி கண் முகம் இவை களின் பொற்புத்தோன்ற உருவகமாகக் கூறி, கற்பகத்தின் பக்கலில் பசும்பொன்கொடி நின்றது என்று தலைவியின் முழுவடிவத்தையும் குறித்துக் காட்டினர். தலைவியின் ஒவ் வோர் உறுப்பும் கற்பகம் என்றார். கற்பகமென்பது ஒரு வர்க்கு நினைந்தவற்றை நினைந்தவாறே கொடுக்கும் பெற்றி மையுடைய ஒரு தெய்வத் தாரு. அதைப்போல் இப் பெண்ணணங்கின் ஒவ்வோர் வடிவும் இன்பந் தருவது

* திருக்கோவையார் : க.

என்று வியக்கின்றான். இக் கொடிபோல்வாளின் செவ்வியினால் கண்ட அத்தலைவன் கண்ணும் மனமும் அவள்பாற் கலந்துறவாட அவளே தானாய்த் தானே அவளாய்ப் பிரித்தறியாவண்ணம் நிற்றலினானும் அவள் வனப்பை எண்ணுந்தோறும் எண்ணுந்தோறும் புத்துணர்வும் புதிய இன்பமும் கிளர்ச்சியும் மகிழ்ச்சியும் கொண்டு உடல் மயிர்க்கூச்செறிந்து நிற்றலானும், 'பசும்பொன் கொடிநின்ற'தென்று வியந்து நின்றான் தலைவன். இதனைத் திருவள்ளுவரும்,

> *'வேட்ட பொழுதின் அவைஅவை போலுமே
> தோட்டார் கதுப்பினாள் தோள்.'

என்றதும் இக் கருத்தோடொப்ப இருத்தலை அறிக.

மற்றக் கோவைகட்கும் இதற்கும் வேறுபாடென்னையெனின், மற்றவையெல்லாம் இலக்கண நூல்களிற் கூறிய துறைக்குச் சில துறைகள் குறைந்தும் மிக்கும் விரவியும் கிடப்ப, இஃது அகப்பொருள் விளக்கத்திற் கூறியிருக்கும் துறைகள் எல்லாவற்றையும் ஒருங்கே அமைத்துத் திகழும் பெற்றிமைமிக்க சீர்மையுடையது. இதனாலன்றோ இதன் பாடல்களையே அகப்பொருள் விளக்க நூற்பாத் துறை இலக்கணத்திற்கு எடுத்துக்காட்டாக அமைப்பாராயினர்.

இதன்கண் பழங்காலச் சங்கநூற் பாடல்களின் கருத்தமைதிகள் ஆங்காங்கே இடம் நோக்கி அமைந்து மிளிர்தலைக் காணலாம். 'பிரிவுழி மகிழ்ச்சி' என்னும் கிளவித் துறையில், தலைவன் தலைவியைப் பிரிந்து செல்லுங்கால் தலைவியின் அழகு இளமை நலம் முதலியன தன் மனத்தைக் கவற்றக் கூறுகின்ற முறையில்,

---

* திருக்குறள் : கக0டு.

'அகில்ஏந்து கூந்தல் ஒருகையில் ஏந்தி அசைந்தொருகை
துகில்ஏந்தி ஏந்தும் துணைச்சிலம் பார்ப்பத் துளிகலந்த
முகில்ஏந்து பூம்பொழில் சூழ்தஞ்சை வாணன்முந் நீர்த்துறைவாய்
நகில்ஏந்து பூங்கொடி போல்செல்லு மால்நெஞ்சம் நம்உயிரே.' ()

என்று கூறுகின்றான். இதில் தலைவன் தலைவியின் அழகு நலத்தில் ஈடுபட்டுத் தன் நெஞ்சொடு பகர்கின்றான்: 'உயிரென்றால் உடலகத்து இயங்கிக்கொண்டு கட்புலனுக்குத் தோன்றாமல் இருக்குமே, அந்த உயிரன்று; இதுவோ நம் உயிர்; இது வேறு தன்மையுடையது' என்கின்றான். 'அது நீண்டு விரிந்து அடர்ந்து கறுத்துக் காரொளி காட்டிப் பளபளப்புடன் விளங்கும் தன் கூந்தலை ஒரு கையில் தாங்கி நிற்கும்; மெல்லிய பூங்கரைகளையுடைய ஆடையை மற்றொரு கையில் தாங்கி அரும்பைத் தாங்கிய பூங்கொடிபோல் மெல்ல மெல்லச் செல்லும்' என்கின்றான். என்ன அரிய கருத்து பார்மின்கள். ஓர் இள நங்கையின் சாயலோடு கூடிய தோற்றம், காண்பார் ஒருவர்க்குப் புலனாவது, கூந்தலும் ஆடை அமைதியுமே. அவைகளை நேரிற் படம் பிடித்ததுபோல் எளிதிற் புலனாகுமாறு தலைவன் கூற்றாகச் சில்வகை எழுத்துக்கள் கொண்ட தொடரினால் தீட்டிக் காட்டிய புலவர் பெருமானின் அறிவுத் திறத்தைக் காண்மின். இதே கருத்தமைந்த சங்ககாலச் சான்றோர் பாடலையும் ஒப்பிட்டு நோக்கிநோக்கி மகிழ்க.

*'காணா மரபிற்று உயிர்என மொழிவோர்
நாணிலர் மன்ற பொய்ம்மொழிந் தனரே
யாஅம் காண்டும்எம் அரும்பெறல் உயிரே
சொல்லும் ஆடும் மென்மெல இயலும்
கணைக்கால் நுணுகிய நுசுப்பின்
மழைக்கண் மாதர் பணைப்பெருந் தோட்டே.'

என வருவதறிக.

---

* தொல். களவியல் நூற்பா : ௧௰௧ மேற்கோள்.

பாங்கற் கூட்டத்துக் கிளவித்துறையில் பாங்கன் தலைவனை நோக்கி, 'நீ கண்ட தலைவி வாழும் இடம் எது?' என்று வினவுகின்றான். அப்போது தலைவனைத் தன் முன்னிலைப்படுத்தி அழைக்கின்றான். அதில் தலைவனை நடுநிலையாளன், முறைபிறழான், தனக்கென ஒன்றும், பிறர்க்கென ஒன்றும் மொழியான் என்னும் கருத்து நயம் தோன்ற,

'நுகத்தில் பகலனையாய் தன்மை எது? நுவல் எனக்கே' (௧அ)

என்பது. இதன் சொல்லும் கருத்தும்,

*'தத்தமக்குக் கொண்ட குறியோ தவமல்ல
செத்துக சாந்து படுக்கமனன்—ஒத்துச்
சகத்தனாய் நின்றொழுகும் சால்பு தவமே
நுகத்துப் பகலாணி போன்று.'

எனவரும் பழமொழி நானூற்றுப் பாடலின் கருத்தினோடும்,

†'பால்கொளல் இன்றிப் பகல்போன் முறைக்கொல்கா
கோல் செம்மை.'

எனவரும் கலித்தொகைக் கருத்தினோடும்,

‡'பகலன்ன வாய்மொழி, நுகத்திற் பகலாணி போன்ற
நடுநிலைச் சொல்.'

எனவரும் புறப்பொருள் வெண்பா மாலையார் கருத்தினோடும்,

§'கொடுமேழி நசை உழவர்
நெடுநுகத்துப் பகல்போல
நடுவுநின்ற நன்னெஞ்சினோர்.'

எனவரும் பட்டினப்பாலைக் கருத்தினோடும்,

---

* பழமொழி நானூறு: ௩௩௧ † கலித்தொகை-அ௬: ௬எ-அ
‡ புறப்பொருள் வெண்பா: கடுஎ § பட்டினப்பாலை: ௨0௫-எ

*' தகுதிஎன ஒன்று நன்றே பகுதியால்
பாற்பட் டொழுகப் பெறின்'

' வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோல் செயின்.'

எனவரும் திருக்குறட் கருத்தினேடும், ஒத்து இன்பந் தருதலை ஓர்க.

இன்னும் இந் நூற்கண் திருக்குறள் நாலடியார் போன்ற அறநூற் கருத்துக்களும், மக்கள் வாழ்க்கை முறைக்கு வேண்டும் உலகியல் ஒழுக்கங்களும் ஈண்டி 'அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயனே.'† என்னும் சீரிய மொழிக்கு இலக்காகி மக்கள் வாழ்க்கை நெறி காட்டியாய் என்றும் நின்று நிலவும் திருநூலாய் இலங்குகின்றது.

தமிழில் இன்பச்சுவை காண விழைவார்க்கும், தமிழில் முற்றக் கற்றுத் துறைபோக எண்ணுவார்க்கும், எல்லாப் பொருளும் இதன்பால் உள என்று அறிஞர் வியக்குமாறு கொடுத்து, வற்றுவளஞ்சுரக்கும் பெருநிதியாய் நீண்ட தமிழின் பேரிலக்கியமாகத் திகழ்ந்து உலவி வருவது இதன் சிறப்பின்வளமே என்ப தொருதலை.

செல்லூர்க்கிழார், செ. ரெ. இராமசாமிபிள்ளை
கழகப் புலவர்.

* திருக்குறள் : ௧௧௧, ௧௨0. † நன்னூல் : ௧0.

## நூலாசிரியர் வரலாறு

செந்தமிழணங்கிற்கு அணிபல புனைந்து அழகுபடுத்தியவர் நல்லிசைப் புலமை வல்லுநராவர். அவருள் 'தஞ்சைவாணன் கோவை'யை அணிந்து மகிழ்ந்த புலவர் பெருமானுர் பொய்யாமொழிப் புலவரும் ஒருவராவர்.

இவர் தொண்டைமண்டலத்தில் சைவ வேளாண் குடியில் தோன்றியவர். இவர் தம் இளமைப் பருவத்தில் வயிரபுரம் என்னும் ஊரில் ஓர் தமிழாசிரியர்பால் கல்வி பயின்று வந்தார். ஒருநாள் தம் ஆசிரியர் தம் பயிர்க் கொல்லையைக் காத்துவரக் கூறினர். அவ்வாறே சென்று காவல் புரிந்தார்; அப்போது அங்கிருந்த காளிகோயில் ஒன்றின் பக்கலில் ஒரு மர நிழலில் படுத்துறங்கினர்; அப்போது பயிர்களைக் குதிரையொன்று வந்து மேய்வதாகக் கனவு கண்டார்; உடனே திடுக்கிட்டெழுந்தார். பார்த்தார்; கனவிற் கண்டவாறே குதிரை யொன்று பயிரை மேய்வது கண்டார்; உடனே விரைந்து சென்று அக் குதிரையை ஓட்டினர். ஓட்டியும் அது, அப்பயிர் மேய்வதை விட்டுச் செல்லவில்லை. உடனே காளி கோயிலுக்குச் சென்றார்; காளியை வணங்கினர்; தம் ஆசிரியர்க்குப் பிழை செய்ததாகக் கருதி, அப்பிழை நீங்க அருள்புரிய வேண்டிக் காளியை வாழ்த்தினர்; காளிதேவி அவருக்கு நேரில் காட்சியளித்து அருள்செய்து மறைந்தனள்.

காளியின் அருளால் கல்வியுணர்ச்சியும் பாப்புனையும் திறனும் கைவரப் பெற்றார். அக்கொல்லையின் பயிர் அக் குதிரையால் அழிவுற்றதற்குச் சினந்து,

'வாய்த்த வயிரபுர மாகாளி அம்மையே
ஆய்த்த மணலில் அணிவரையில்—காய்த்த
கதிரைமா ளத்தின்னும் காளிங்கன் ஏறும்
குதிரைமா ளக்கொண்டு போ'

என்னும் வெண்பாவைப் பாடினர். அதுபோழ்தே அக் குதிரை கீழே வீழ்ந்து இறந்தது.

அதனைக் கண்ட அருகிலிருந்தோர் இவர்தம் ஆசிரியரிடம் போய்க் கூறினர். ஆசிரியர் வந்து நேரிற் பார்த்தார்; 'இது காளிங்கராயன் குதிரையன்றோ! அவன் அறியின் யாதாமோ'! எனக் கலங்கினர். அதனை அறிந்த பொய்யா மொழிப்புலவர், அவ்வெண்பாவின் ஈற்றடியை மட்டும் 'குதிரைமீ ளக்கொண்டு வா' என்று மாற்றிப் பாடினர். குதிரை உயிர் பெற்றெழுந்தது. இதனைக் கண்ட யாவரும் வியப்புற்றனர். ஆசிரியர் தம் அருமை மாணவரைத் தழுவினர். அவர்தம் வாக்காகிய பாட்டு, தப்பாமல் குறித்த பயனைத் தந்ததை வியந்து பாராட்டினர். அவர் அதுகாலை,

'பொதியில் அகத்தியனுப் பொய்யா மொழியாய்ச்
சிதைவில்புல வர்சிகா மணியாய்த்—துதிசேரும்
செங்காட்டங் கோட்டத் துறையூர் எனுந்தலத்தில்
தங்காட்டங் கொண்டிருப்பாய் தான்'

என்னும் வெண்பாப் பாடி அவரை வாழ்த்தி நின்றார்.

அன்று முதல் ஆசிரியர் இட்ட காரணப் பெயரான, 'பொய்யாமொழி' என்பதே பெயராக வழங்கிற்று. இவரது இயற்பெயர் மறைவதாயிற்று. பின்னரும் காளியின் அருளினல் செய்யுள் பாடும் திறனில் மிக்கோங்கி விளங்கினர். இவர் காளியையே பாடும் கடப்பாடுடையரானர்.

இவர்பால் ஒருநாள் முருகக் கடவுள் அடியார் கோலத்துடன் வந்து தம் மீது ஒரு பாடல் பாட வேண்டுமென்று கேட்டார். அதற்குப் புலவர்,

'கோழியையும் பாடிக் குஞ்சையும் பாடுவனே' என்று மறுத்துரைத்தார். வேற்றுருவில் வந்த முருக வேள் நாணினர் போன்று விடைகொண்டு சென்றார்.

பின்பு பொய்யாமொழிப் புலவர் மதுரைக்குச் சென்றுவர எண்ணினர்; அங்கே பழைய தமிழ்ச் சங்கத்தை மீண்டும் நிறுவி நடத்த நினைத்தார்; மதுரை நோக்கிப் புறப்பட்டார்; வழியில் திருச்சிராப்பள்ளியில் தங்கினர். ஆங்கு எழுந்தருளியிருக்கும் தாயுமானவரைப் போற்றினர்; அவர்மீது கலித்துறை ஒன்று பாடிப் பணிந்தார். அப்பால் அங்கிருந்து தன்னந்தனியராக ஒரு காட்டின் வழியாக மதுரையை நோக்கிப் புறப்பட்டார். அது கொடிய காடு. வெம் பரற் கற்களும் வேல முட்களும் படர்ந்த வெவ்விய அனல் கொளுத்தும் காடு. அதன் வழியாக வழிக்கொண்டு சென்று கொண்டிருந்தார். முருகக் கடவுள் அங்கே ஒரு வேட்டுவச் சிறுவன்போல் உருவங்கொண்டு இவர்முன் தோன்றினர். 'இவ்வழியாக இக்காட்டில் நீ செல்வது கூடாது,' எனக் கூறினர். பொய்யாமொழியார், 'நாம் இன்று ஒரு கள்வனிடம் அகப்பட்டுக் கொண்டோம்' என்று கருதி அஞ்சி நின்றார். அப்போது முருக வேடன் 'நீ யார்?' என்று கடுகடுத்த குரலுடன் வினவினர். அதற்குப் புலவர் 'யான் ஒரு புலவன்' என்றார். 'ஆனல், உனக்குப் பாடத் தெரியுமோ?' என்று வினவினர் முருகவேள். 'தெரியும்' என்றார் புலவர் பெருமானர். முருகவேடன், 'என்மீது சுரம்போக்காக ஒரு பாடல் பாடுக' என்று கூறினர். உடனே புலவர் 'உன் பெயர் யா'தெனக் கேட்டனர். அப்போது முன், 'முட்டையையும் பாடுவேனே' என்று மொழிந்ததை நினைவாகக்கொண்டு முருகவேள், 'என் பெயர் முட்டை' என்றார். அப்போது புலவர்,

'பொன்போலும் கள்ளிப் பொறிபறக்குங் கானலிலே
என்பேதை செல்லற் கியைந்தனளே—மின்போலும்
மானவேல் முட்டைக்கு மாறாய தெவ்வர்போம்
கானவேல் முள்தைக்குங் காடு'

என்னும் வெண்பாவைப் பாடினர்.

இச்செய்யுளைக் கேட்டுக்கொண்டிருந்த முருகவேடன், 'இச் செய்யுளிற் பொருட் குற்றமுளது. அஃதாவது கள்ளியே பொரிந்து தீயாகி அதன் பொறி பறக்குங் கானலில் வேல முட்கள் வெந்தெரிந்து போகாமல் கிடப்ப தெங்ஙனம்?' என்று நகைத்தார். 'வேலமுள் வெந்து போகாது கிடந்து காலில் தைக்க இயலுமோ? இவ்வாறு குற்றமுள்ள பாடல் புலவர் பாடுவரோ? யான் பாடுவேன் கேட்குக,' என்று பொய்யாமொழியார் மீது,

'விழுந்ததுளி அந்தரத்தே வேமென்றும் வீழின்
எழுந்து சுடர்சுடுமென் றேங்கிச்—செழுங்கொண்டல்
பெய்யாத கானகத்திற் பெய்வளையும் சென்றனளே
பொய்யா மொழிப்பகைஞர் போல்'

என்னும் வெண்பாவைப் பாடினர். அப்பால் 'நீ முன் குஞ்சைப் பாடேனென்று கூறிய வாயால் இப்போது முட்டையைப் பாடியது வியப்புக் குரித்தே,' என்று கூறினர். அப்போது புலவர், இவ்வுருவில் வந்துள்ளோர் முருகப்பெருமானே எனத் துணிந்தனர். தம் பிழையைப் பொறுத்தருளுமாறு வேண்டி வணங்கினர். முருகக் கடவுள் தம் தெய்வத் திருக்கோலங் காட்டி புலவர் நாவில் வேலால் எழுதி மறைந்தனர்.

அப்பால் அவ்வழியைக் கடந்து பாண்டிநாடு போந்தனர். அதுகாலை ஆட்சி செய்து கொண்டிருந்த வணங்காமுடிப் பாண்டியனைக் கோயிலில் போய்க் கண்டனர். கண்டு 'கழற்கால் அரவிந்தம்' என்னும் செய்யுளைப்

பாடித் தம்மைத் தெரிவித்தனர். பாண்டியன் புலவரிடம் நன்மதிப்புக் காட்டாமல் இருந்து, 'இங்குக் கல்லுருவில் இருக்கும் சங்கப்புலவரைத் தலையசைக்கவும் கை தட்டவும் செய்க,' என்ருன். அதற்குப் புலவர் இசைந்தார்.

'உங்களிலே யானெருவன் ஒவ்வுவனே ஒவ்வேனே
திங்கட் குலன் அறியச் செப்புங்கள்—சங்கத்தீர்
பாடுகின்ற முத்தமிழ்க்கென் பைந்தமிழும் ஒக்குமோ
ஏடெழுதார் ஏழெழுவீர் இன்று'

எனப்பாடி அவ்வாறே செய்வித்தனர். பின்னர்ப் 'பொற்ருமரைக் குளத்தில் அமிழ்ந்து கிடக்கின்ற சங்கப் பலகையை மிதக்கப் பாடுக' எனப் புலவர்,

'பூவேந்தர் முன்போல் புரப்பார் இலையெனினும்
பாவேந்தர் உண்டென்னும் பான்மையால்—கோவேந்தன்
மாறன் அறிய மதுரா புரித்தமிழோர்
வீறணையே சற்றே மித'

என, ஒரு வெண்பாப் பாடியவுடன் அதுவும் மிதப்பக் கண்டான் வேந்தன். அதற்கும் வியவாமல் இருந்ததுடன் புலவருக்கு நன்மதிப்புங் கொடுத்தானில்லை. அதுகண்டு புலவர் சினங்கொண்டு மீண்டனர்.

பின்னர், அக்காலத்தில் பாண்டி மண்டலத்தின்கண் உள்ள சிறு நாடுகளில் ஒன்ருகிய மாறை நாட்டில் தஞ்சாக்கூர் என்னும் ஊரில் மாவலிவாண மரபைச் சேர்ந்த **சந்திரவாணன்** என்னும் வேளாளச் செல்வன் அந்நாட்டை அரசாண்ட **கோமாறவர்மா திரிபுவனச் சக்கரவர்த்தி குலசேகர தேவருக்கு** அமைச்சராகவும் படைத்தலைவராகவும் புலவர்களைப் புரக்கும் வள்ளலாகவும் வாழ்ந்து வந்தனர்.

பொய்யாமொழிப் புலவர் அச் செல்வரையடைந்து அவர்மீது நாற்கவிராச நம்பி அகப்பொருள் இலக்கணத்

திற்கு இலக்கியமாகக் கோவையொன்று பாடினர். அக் கோவைக்குப் பாட்டுடைத் தலைவன் மேற்கூறிய சந்திர வாணனே. சந்திரனுக்கு மகனாகிய வாணன் என்று சொக் கப்ப நாவலர் உரையிற் காணக்கிடப்பதால், அவ்வள்ளலின் இயற்பெயர் அறிவதற்கில்லை. புலவர் இக் கோவையை அரங்கேற்றுங்கால் ஒவ்வொரு பாடலுக்கும் மூன்று கண் களிலும் மணிபதித்துச் செய்யப்பெற்ற பொன் தேங்காய் ஒவ்வொன்று பரிசாக வழங்கிப் பல வரிசை முறைகளும் செய்து சிறப்பித்தார் என்பர். இன்னும் பொய்யா மொழிப்புலவர் பாடிய தனிப்பாடல்களைக்கொண்டு வழங்குகின்ற வேறு பல வரலாறுகளையும் தமிழ் நாவலர் சரிதம் முதலிய நூல்களால் அறிந்து கொள்ளலாம்.

பின்பு, பொய்யாமொழியார் சோழநாட்டைச் சேர்ந்து பெருஞ் செல்வராகிய சீனக்க முதலியாரிடம் சார்ந்து நட்புரிமை கொண்டார்; உயிரும் உடலும்போல் பிரிவின்றியைந்த பெருங்கிழமை கொண்டு வாழ்ந்தனர். இவ்வாறு ஆங்கு வாழ்ந்து வருங்கால் ஒருநாள் புலவர் பெருமானார் வெளியூருக்கு ஒரு அலுவலை முன்னிட்டுச் சென்று மீண்டார். அதற்குள் சீனக்க முதலியார் இறந் தனர்; இவர் வருமுன் நன்காடு கொண்டுசென்று எரியூட்ட முற்பட்டனர்; புலவர் திரும்பி வரும்போது செய்தி யறிந்து விரைந்து நன்காடு சென்றார்; அப்போது முதலி யாரைக் கிடத்திச் சிதைகள் அடுக்கப்பெற்றிருந்தது. அதன் பக்கலில் சென்று,

'அன்று நீ செல்லக்கிடவென்றாய்' என்று தொடங்கி ஒரு வெண்பாப் பாடினார். அப்போது சிதையில் கிடத்தி யிருந்த முதலியாரின் உடல் ஒரு பக்கமாக ஒதுங்கியது; அதில் தம் நண்பருடன் படுத்தார்; உடனே உயிர்

பிரிந்தது; தம்முயிர்கொண்டு தம் நண்பரைத் தேடிச் சென்றதுபோல் சென்று விண்ணுலகெய்தி இருவரும் அன்பால் ஒன்றுபட்டனர்.

பொய்யாமொழிப்புலவர் கோமாறவர்மர் திரிபுவன சக்கரவர்த்தி குலசேகர தேவர் காலமாகிய 12-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்பதும், இவர் காலத்திலேயே, நாற்கவி நம்பியும் வாழ்ந்தவர் என்பதும் வரலாறுகளினுல் அறியக் கிடக்கின்றது. ஆதலால் இவர் எழுநூற்றைம்பது ஆண்டுகட்கு முற்பட்டிருந்தவர் என்பது புலனுகும்.

## உரையாசிரியர் வரலாறு

இத் தஞ்சைவாணன் கோவைக்கு விளக்கவுரை எழுதிய சொக்கப்ப நாவலர் பிறந்த ஊர், தொண்டைமண்டலத்தைச் சார்ந்த குன்றத்தூர். இவர் சிறந்த தமிழ்ப் புலமையும் நாவன்மை பாவன்மையும் பெற்று அட்டாவதானியாக விளக்கம் பெற்றிருந்தனர். இவர் இந் நூலாசிரியரான பொய்யாமொழியார் மரபில் வந்தவர். இவர் கஎ-ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் சேலம் கணக்கத்தெருவில் வாழ்ந்து வந்தார். அதுகாலத்தில் இக் கோவைக்கு உரையும், சேலம் தலபுராணமும், சுகவனநாதர் தோத்திர நூல்களும் இயற்றினர் என்பர். நாவலரின் மரபில் வந்தவர்கள் சேலம் வழக்குரைஞர் சுப்பராய முதலியாரும் இவரின் புதல்வர் கனகராய முதலியார் எம்.ஏ., பி.எல்; ஆன பெருநிலக் கிழவரும் ஆவர்.

தொண்டை மண்டலத்து வேளாளர்கள் விசயநகரத்தரசர் காலத்து கஎ-ஆம் நூற்றாண்டில் தாரமங்கலம் முதலிய இடங்களில் குறுநில மன்னர்களாக இருந்து சிவபெருமான் திருக்கோயில்கள் பல கட்டுவித்தமை துருக்கங்களாலும் சாசனங்களாலும் தெரிகின்றது. இன்னும் இவ் வுரையாசிரியரைப்பற்றிய விரிந்த வரலாறுகள் அறிதற்கரியனவாக இருக்கின்றன.

---

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| பதிப்புரை | ... | 3 |
| முன்னுரை | ... | 5 |
| நூலாசிரியர் வரலாறு | ... | 15 |
| உரையாசிரியர் வரலாறு | ... | 22 |

நூல்

| | | |
|---|---|---|
| உரைத் தற்சிறப்புப் பாயிரம் | ... | க |

க. களவியல்

| | | | |
|---|---|---|---|
| க. | கைக்கிளை | ... | ரு |
| உ. | இயற்கைப் புணர்ச்சி | ... | கசு |
| ௩. | வன்புறை | ... | ௩ரு |
| ச. | தெளிவு | ... | ச௩ |
| ரு. | பிரிவுழி மகிழ்ச்சி | ... | சச |
| சு. | பிரிவுழிக் கலங்கல் | ... | சசு |
| எ. | இடந்தலைப்பாடு | ... | ருக |
| அ. | பாங்கற்கூட்டம் | ... | ருரு |
| கூ. | பாங்கி மதி யுடன்பாடு | ... | எசு |
| க0. | பாங்கியிற் கூட்டம் | ... | கூசு |
| கக. | ஒருசார் பகற்குறி | ... | கச0 |
| கஉ. | பகற்குறி இடையீடு | ... | கருஉ |
| க௩. | இரவுக்குறி | ... | கருஎ |
| கச. | இரவுக்குறி இடையீடு | ... | களச |
| கரு. | வரைதல் வேட்கை | ... | கஅஎ |
| கசு. | வரைவு கடாதல் | ... | உ00 |

கஎ. ஒருவழித் தணத்தல் ... உகச

கஅ. வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல் ... உஉஉ


## உ. வரையியல்


கக. வரைவு மலிவு ... உச0

உ0. அறத்தொடு நிற்றல் ... உசசு

உக. உடன்போக்கு ... உருஅ

உஉ. கற்பொடு புணர்ந்த கவ்வை ... உஎக

உங. மீட்சி ... உஅஅ

உச. தன்மனை வரைதல் ... உகஉ

உரு. உடன்போக்கு இடையீடு ... உகரு

உசு. வரைதல் ... ங00


## ங. கற்பியல்


உஎ. இல்வாழ்க்கை ... ங0ங

உஅ. பரத்தையிற் பிரிவு ... ங0க

உக. ஓதற் பிரிவு ... ஙங0

ங0. காவற் பிரிவு ... ஙஙஉ

ஙக. தூதிற் பிரிவு ... ஙஙச

ஙஉ. துணைவயிற் பிரிவு ... ஙஙசு

ஙங. பொருள்வயிற் பிரிவு ... ஙஙஅ

ஓம்

# தஞ்சைவாணன் கோவை

## உரைத் தற்சிறப்புப் பாயிரம்

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

பொய்யா மொழியா ரெனும்பெரியோர்
புகலும் வாணன் கோவையுரை
மையார் சோலைக் குன்றத்தூர்
வளரட் டாவ தானிசொக்கன்
கையார் கனிபோல் அகப்பொருளிற்
காணுஞ் சங்கையெ லாந்தீர
மெய்பார்ந் தொல்காப் பியநூலின்
விதியால் எழுதி விளக்கினனே.

இது, மன்னு புகழ்பெற்ற வாணன் தன்மேல் பன்னிய கோவையுரை பகர்ந்தான் இவன் என்பது.

(இதன்பொருள்) திரிபுபடாத சொல்லினை யுடையா ரென்று யாவராலும் புகழப்படும் பெருமையுடையராற் சொல்லப்படும், வாணன் என்னும் இயற்பெயருடையோனது கோவை யென்னும் பாட்டிற்கு நால்வகைத்தாகிய உரையை, மேகங்களைப் பொருந்தாநின்ற சோலை சூழ்ந்த குன்றத்தூர் என்னும் நகர் வளர்தற்கேதுவாகிய அட்டாவதானத்தை உடையனாகிய சொக்கன் என்னும் இயற்பெயரையுடைய நாவலர்பிரான், அகங்கையிற் பொருந்திய நெல்லிக்கனிபோலத் தன்னால் ஐயந்திரிபறக் காணப்படும் அகப்பொருளிடத்துப் பிறர்க்குத் தோன்றுங் கடாவிடை

யெல்லாந் தீரும்படி, உண்மையாமென்று அதங்கோட்டாசிரியர் முதலானோராற் கொள்ளப்படும், தொல்காப்பியன் என்னும் முனிவனாற் செய்யப்பட்டதாய் நிரம்பிய இலக்கணத்ததாய அந்நூலினியல்பால் எழுதுதலைச் செய்து, யாவரும் அறியும்பொருட்டுத் தெரிவித்தான் என்க.

திரிபாவது ஒன்றை யொன்றாகக் காண்டல். [1] 'பொய்யாமொழியார்' எனவே, வந்தனை முதற்காரணமாகவுடைய பாவினையும் உடையார் என்பது பெற்றாம். சொல்லினையும் பாவினையும் திரிபின்றி யுணரவே, அவ்வுணர்ச்சிக்குப் பயனாகிய ஒழுக்கமும் உடையார் என்பதாம். இவ்வகையாய பேருணர்வுடையராற் புகழப்பட்டான் எனவே, அவனது பெருமை கூறவேண்டாவாயிற்று. 'வளரட்டாவதானி' என்றது ஏதுப்பொருண்மைக்கண் வந்த வினைத்தொகை.

[2] 'தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலில் தோன்றாமை நன்று.'

என்னும், திருவள்ளுவர் கூறிய திருக்குறளினது பயனுக்கு உதாரணம் இவன் என்பது பெற்றாம். முன்னை நல்வினையுண்மையாற் பிறந்த நுண்ணறிவான் இவன் காண்டலாற் சங்கையின்றென்பது தோன்ற, 'காணும் அகப்பொருள்' என மாறிப் பிறர்க்குத் தோன்றும் என வருவித்து உரைக்க. நிரம்பிய இலக்கண முணராதார் தாம் வேண்டியவாறே கூறிய கூற்றைத் தன்மொழியான் நீக்கி, மாசுண்ட மணியைத் துடைப்பார் போன்று செய்தான் என்பது, 'விளக்கினன்' என்பதனாற் பெற்றாம். 'குன்றத்தூர்ச் சொக்கன் கையார் கனிபோல் கோவைக்கு உரையெழுதி விளக்கினன்' என ஒரு தொடர் ஆக்குக.

'பொய்யா' என்னும் எதிர்மறைப் பெயரெச்சம், 'மொழியார்' என்னும் வினைக்குறிப்புப் பெயரது முத

1. அது பயிலாமொழியார் எனவே, அதனை முதற்காரணமாகவுடைய பாவினையும் உடையார் என்பது இதனானே பெற்றாம்.

2. திருக்குறள். புகழ் - ௬.

னிலையாகிய, 'மொழி' என்னுங் கருவிப் பெயர்கொண்டு முடிந்தது. 'புகலும்' என்னும் பெயரெச்சம், 'கோவை' என்னுஞ் செயப்படுபொருள் கொண்டது. 'வாணன் கோவை' என்றவழி ஆறும்வேற்றுமைச் செய்யுட் கிழமைக்கண் வந்தது. 'சோலைக் குன்றத்தூர்' என்பது உருபும் பொருளும் உடன்தொக்க தொகை. 'அட்டா வதானி' என்பது வடசொன் முடிபாகிய குறிப்புவினைப் பெயரெச்சக் குறிப்பாய்ச், 'சொக்கன்' என்னும் பெய ரோடு இயைந்தது; இது,

[1] 'குறிப்புமுற் றீரெச்ச மாகலு முளவே.'

என்னும் விதிபெற்றது. நச்சினார்க்கினியர், 'எச்சம் முற் றாதலன்றி முற்று எச்சமாகாது' என்று கூறினாராலோ வெனின், அஃதிலக்கணமன்று; குறிப்பு வாய்பாட்டான் எச்சங்கண்டன்றே முற்றாய்த் திரிந்ததென்று சொல்லுதல் கூடுவது, அது காணாது முற்றே கூறினமையால் என்க.

கை என்பது ஆகுபெயர். போல் என்னும் உவம வுருபு வினையுவமத்தின்கண் வந்தது. தொல்காப்பியநூல் என்றவழி மூன்றாம் வேற்றுமையுருபும் பொருளும் உடன் தொக்கதொகை. நிலைமொழி யீறு திரிந்து கருத்தனுகு பெயராய்ப் பண்புத்தொகை யாயிற்றெனினும் இழுக்காது.

உரைத் தற்சிறப்புப் பாயிரம்

முற்றிற்று.

1. நன்னூல் வினையியல் - ௩௨.

# தஞ்சைவாணன் கோவை

## மூலமும் உரையும்

முதலாவது

## களவியல்

### க. கைக்கிளை

காட்சி

காட்சி என்பது தலைமகன் தலைமகளைக் காண்டல். தலைமகன் என்றும் தலைமகள் என்றும் கூறிய இவர் யாரெனின், இல்லது **இனியது நல்லது** என்று புலவரான் நாட்டிக் கூறப்பட்ட மூன்றனுள், இல்லதாகிய புனைந்துரையால் தோன்றினோர் என்க. இவரது இலக்கணம் யாதோவெனின், பிணி மூப்பு இறப்புக்களின்றி, எஞ்ஞான்றும் ஒரு தன்மையராய், உருவும் திருவும் பருவமும் குலனும் குணனும் அன்பும் முதலியவற்றான் தம்முள் ஒப்புமையராய்ப் பொருவிறந்தார் என்ப. என்னை,

> [1] ‘ பிறப்பே குடிமை ஆண்மை யாண்டோ
> டுருவு நிறுத்த காம வாயில்
> நிறையே அருளே உணர்வொடு திருவென
> முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே.’

என்னும் மெய்ப்பாட்டியற் சூத்திரவிதியான் இப்பத்து வகையும் ஒத்திருப்பது இலக்கணம். இவற்றுள் ஆண்டு என்பது இருவர்க்கும் களவிற் காணும்போதில் எத்தனை யாண்டு கூறவேண்டுமெனின், பதினைந்தாண்டும் பத்துத் திங்களும் புக்க தலைமகனும், பதினோராண்டும் பத்துத் திங்களும் புக்க தலைமகளும் களவொழுக்கத்தில் நிகழ்வரென்று [2] கூறுக. என்னை,

---

1. தொல். பொருள். மெய்ப்பா - உடு.
(பாடம்.) 2. உணர்க.

[1] 'களவினுள் தவிர்ச்சி வரைவின் நீட்டம்
திங்க ளிரண்டின் அகமென மொழிப.'

எனவும்,

'களவி னொழுக்கமுங் காலமுந்
திங்க ளிரண்டின் அகமென மொழிப.'

எனவும் வருஞ் சூத்திரங்களாற் கண்டுகொள்க.

தலைமகன் என்றும் தலைமகள் என்றும் கூறப்படும் விதி யாதெனின், கோவையாதலின் கூறவேண்டும் என்பது. கோவை யாவதென்னெனின், பாட்டியலுட் கூறப்படுஞ் செய்யுட்களில் இஃதோர் செய்யுட்கோவை யென்று பெயராயது. அஃது என்னை யெனின், மணிகளை யோரினமா யொழுங்குபடக்கோப்பது கோவை என்று பெயர்; அதுபோல, இதுவும் அகப்பொருட் கிளவிகளை ஒழுங்குபடக் கோத்து நிற்றலின் கோவையென்று பெயராயிற்று என்பது.

அகப்பொருள் என்பது யாதோவெனின், அகத்திணைய பயன் என்பது. ஆயின், அகம் என்பது யாதோவெனின், ஒருவனும் ஒருத்தியும் தம்முள் ஒத்த அன்பினராய்க் கூடும் கூட்டத்தின்கண் பிறந்த இன்பம் அக் கூட்டத்தின் பின்னர் ஆண்டு அனுபவித்த அக் காலத்தில் இன்பம் எவ்வாறிருந்ததென்று அவ்விருவரி லொரு வரை யொருவர் கேட்கின், தமக்குப் புலப்படக் கூறப்படாததாய், உள்ளத்துணர்வே நுகர்வதாய் அகத்தே நிகழ்தலின், அகம் எனப் பெயராயிற்று. ஆயின், அகத்தே நிகழ்கின்ற இன்பத்திற்கு அகம் என்றது ஓர் ஆகுபெயராம் என்பது. தொல்காப்பியம் பொருளதி காரத்தில் அகத்திணையியல் என்பதற்கு நச்சினார்க்கினியரும் இவ் வாறே உரை கூறினாரென்றுணர்க.

பொருள் என்பது யாதோவெனின், அகத்திற்கும் புறத்திற்கும் பொது என்பது. அகத்தைச் சார்ந்து வரும் பொருளெல்லாம் அகப்பொருள் என்னப்படும். புறத்தைச் சார்ந்து வரும் பொரு ளெல்லாம் புறப்பொருள் என்னப்படும். இனிச் சுவை ஒன்பானுள் இஃது **இன்பச்சுவை** யென்று கூறப்படும். அச்சுவை யாவையோ வெனின், **வீரம், அச்சம், இழிவு, வியப்பு, காமம், அவலம், உருத் திரம், நகை, சாந்தம்** என இவை. இவற்றுள் சாந்தம் ஒழிந்த எட்டுங் கூறப்படுவன. அவற்றுள் இச்சுவை **காமம்** என்று சொல்லப்படுவது. காமம் எனினும், இன்பம் எனினும், சிங்காரம் எனினும் ஒக்குமாகலின், இக்கோவை **இன்பச் சுவை** யென்னப் படும்.

1. இறையனார் அகப்பொருள். களவு - ௩௨.

இஃது எனைத்து வகையாற் கூறப்பட்டதோ எனின், களவு, கற்பு என்னும் இரண்டு கைகோளாற் கூறப்படும். கைகோள் என்பது யாதோவெனின், கை என்பது ஒழுக்கம், கோள் என்பது கொள்ளுதல். 'நிரைகோட் பறை' என்பதுபோல நின்றது; எனவே, களவொழுக்கம் கற்பொழுக்கம் எனப்பட்டது.

களவாவது யாதோவெனில், தலைமகனும் தலைமகளும் கொடுப்போரும் அடுப்போரும் இன்றிப் பான்மைவகையான் தாமே யெதிர்ப்பட்டுப் [1]புணர்தல்; ஆதலான், இவ்வியற்குக் களவியல் என்று பெயராயிற்றென்பது. ஆயின், களவென்பது தருமநெறி யன்றே, இலக்கணம் பலவற்றினுங் கூறிய வழக்குப் பயிற்சியாய் வருவதென்னையெனின், களவில் தீங்குதருவதாய் நரகத்துக் கேதுவாய செய்யத்தகாத களவு அன்றென் றறிக. அறஞ்செய்ய மறமாகவும், மறஞ்செய்ய அறமாகவும் வருதலும் உள.

அஃதென்னை யெனின், தக்கன் வேள்விசெய்ய அஃது அவனுக்கே தீங்கு தருதலான் அறஞ்செய்ய மறமாயிற்று. ஒருவன் அயலார் மனைவியைக் கைதொட்டான்; அப்போது ஒருவனைக் கரிகூறிக் கூவினாள்; கூவவே, தொட்டானை அரசன்முன்னே யீர்த்துப்போய் விடக் கரியோனை யழைத்து உள்ளபடி கரி கூறென்ன, அவன் கைதொட்டதில்லையென்று கூறினான்; கரி கூறவே அவனைப் போவென்று அரசன் விடுத்தனன். ஆங்குப் பொய்யுரைத்தது அறமாயிற்று. இவன் கைதொட்டானெனின், அவன் தலையோடு முடியும். இனிப் பொய்யும் களவும் இரண்டும் ஒக்கும் என்ப. ஆதலான், களவினும் நன்குதரு களவுமுண்டு. இக்களவு கேடு முதலிய துன்பங்களைத் தருவதன்று; எண்மணத்துள் ஒருமணமாய்க் கந்தருவநெறி யென்று மறையொழுக்கமாய்க் கூறப்பட்டதாகலின், தருமவொழுக்கம் எனப்படும். நாகபட்டினத்தில் புத்தர்தெய்வம் பசும்பொன்னாற் செய்திருந்தது. அதனை [2]ஆலிநாடர் களவிற் கொண்டுவந்து திருவரங்கத்து மதில் செய்வித்தனர். அவர் அச்சமயத்தில் கடவுட்டன்மையராய் விளங்கினார். அவரைக் குற்றங் கூறுநர் ஒருவரும் இலராதலான், களவினும் நன்குதரு களவும் உண்டென் றறிக.

ஆயின், களவியல் என்று பெயர்கூறவேண்டுவது என்னை யெனின், வேதத்தினைப் பலபொருளும் மறைந்திருக்குங் காரணத்தான் மறை என்று பெயர் கூறினாற்போல, பிறரறியாமை இருவரும் கரந்த உள்ளத்தராய்க் கூடுதலான் களவியல் என்றது என்க. பின் கற்பின்வழி நின்று விளங்குதலான் குற்றமின்றெனக் கொள்க.

---

(பாடம்.) 1. புணர்தலான்.
2. திருமங்கை யாழ்வார்.

இக்களவொழுக்கத்திற்கு முன்னர்க் கைக்கிளை கூறப்படும். என்னை,

[1] ‘மெய்க்கிளை யாழோர் வேண்டும் புணர்ச்சிமுன்
கைக்கிளை நிகழ்தல் கடனென மொழிப.’

என்ப திலக்கணமாகலின்.

கைக்கிளை யென்பது யாதோ எனின், கை யென்பது சிறுமை, கிளை யென்பது உறவு; ஆகலின், சிறுமையுறவு என்பது கைக்கிளை என்று பெயராயிற்று. கைக்குடை, கைவாய்க்கால், கையரிவாள் என வழக்கிடத்துஞ் சிறுமைபற்றி வருதல் காண்க. அஃதென்னை யெனின், ஒருதலைக் காமம் என்னப்பட்டுத் தலைமகன் கூற்றாய் நிகழ்தலினான் என்க. அதனுள் இக்கிளவி **காட்சி** யென்னப்பட்டது.

காணுமியல்பு யாதோவெனின், முன் சொன்ன தலைவனும், கற்கந்தும் எறிபோத்தும் கடுங்கண்யானையும் தறுகட்பன்றியும் கருவரையும் இருநிலனும் பெருவிசும்பும் அனையார் ஆளிமொய்ம்பினர் அரிமான்துப்பினர் பற்பனூறாயிரவர் கூர்வேல் இளைஞர் தற்சூழச் செல்வன் என்பது முடிந்தது. அவளும் உடன்பிறந்து உடன்வளர்ந்து நீருடனாடிச் சீருடன் பெருக்கி ஓலுடனாட்டப் பாலுடனுண்டு பல்லுடனெழுந்து சொல்லுடன் கற்றுப் பழமையும் பயிற்சியும் பண்பும் நண்பும் விழுப்பமும் ஒழுக்கமும் மாட்சியும் உடையார், கண்ணும் மனமும் கவரும் ஒண்ணுதல் மகளிர் பற்பனூறாயிரவர் தற்சூழத் தாரகைநடுவண் தண்மதிபோலச் செல்வாள் என்பது முடிந்தது. முடியவே, தமியராய்ப் புணர்ந்தாரென்பதனோடு மாறுகொள்ளுமெனின், மாறுகொள்ளாது; என்னை, அவள் ஆயங்களும் பொழிலிடம் புகுதலும் விளையாட்டு விருப்பினாற் பிரியும். என்னை பிரியுமாறு எனின், ஒருவர் ஒருவரின் முன்னர் தழை [2]விழைதக்கன தொடுத்தும் என்றும், கண்ணி தண்ணறு நாற்றத்தன செய்தும் என்றும், போது மேதக்கன கொய்தும் என்றும், மயிலொடு மாறாடுதும் என்றும், குயிலொடு மாறுகூவுதும் என்றும், அருவியாடி அஞ்சுனைகுடைதும் என்றும், வாசமலர்க் கொடியில் ஊசலாடுதும் என்றும் பரந்து, அப்பாலுள்ளார் இப்பாலுள்ளார் கொல்லோ எனவும், இப்பாலுள்ளார் அப்பாலுள்ளார் கொல்லோ எனவும், இவ்வகை நினைத்துப் பிரிப என்பது.

இவ்வகை அவளைத் தமியளாக்கிப் பிரிபவோவெனின், எட்டியுஞ் சுட்டியும் காட்டப்படுங் குலத்தினளல்ல ளாகலானும், பான்

1. அகப்பொருள் விளக்கம், அகத்திணையியல் - உஅ.
(பாடம்.) 2. விழையத்தக்கன தொடுத்தும்.

மையும் அவ்வகைத் தாகலானும், பிறவாறு நினையார் பிரிப என்பது. ஆயின், இவ்வகைப்பட்ட ஆயத்திடை மேனாட் பிரிந்து பயின்றறி யாதாள் தமியளாய் நிற்குமோ எனின், நிற்கும்; தான் பயின்ற இடம் தன் ஆயத்தினோடு ஒக்குமாகலான் என்பது. யாங்ஙனம் நிற்குமோ எனின், சந்தனமும் சண்பகமும் தேமாவும் தீம்பலவும் ஆசினியும் அசோகும்[1] வேங்கையும் குரவமும் விரிந்து, நாகமும் திலகமும் நறவும் நந்தியும் மாதவியும் மல்லிகையும் மௌவலொடு மணங் கமழ்ந்து, பாதிரியும்[2] பராரைஞாழலும் பைங் [3]கொன்றையொடு பிணியவிழ்ந்து, பொரிப் புன்கும் புன்னைகமும் முருக்கொடு முகை சிறந்து வண்டறைந்து தேனார்ந்து வரிக்குயில்கள் வரிபாடத் தண் தென்றல் இடைவிராய்த் தனியவரை முனிவுசெய்யும் பொழிலது நடுவண் ஒரு மாணிக்கச் செய்குன்றின்மேல் விசும்பு துடைத்துப் பசும்பொன் பூத்து வண்டு துவைப்பத் தண்தேன் துளிப்பதோர் வெறியுறு நறுமலர் வேங்கை கண்டாள்.

கண்டு, பெரியதோர் காதற்களிகூர்ந்து, தன் செம்மலர்ச் சீறடி மேற் சிலம்பு கிடந்து புடைப்ப, மலரணிக் கொம்பர் நடைகற்ப தென நடந்து சென்று, நறைவிரிவேங்கை நாள்மலர் கொய்தாள். கொய்தவிடத்து மரகதமணி விளிம்படுத்த மாணிக்கச் சுனை மருங்கின தோர் மாதவிவல்லி மண்டபத்துப் போதுவேய்ந்த பூநாறு கொழு நிழற்கீழ்க் கடிக்குருக்கத்திக் கொடிபிடித்துத் தகடுபடு பசும்பொற் சிகரங்களின் முகடு தொடுத்து வந்திழிதரும் அருவி பொன் கொழித்து மணிவரன்றி மாணிக்கத்தொடு வயிரம் உந்தி அணிகிளர் அருவி ஆடகப் பாறைமேல் அதிர்குரன் முரசினிரட்ட, வண்டும் தேனும் யாழ் முரல, வரிக்குயில்கள் இசைபாட, தண்டாது தவிசு படப் போர்த்ததோர் பளிக்குப்பாறை மணித்தலத்துமிசை நீல ஆல வட்டம் விரித்தாற்போலத் தன் கோலக் கலாபம் கொளவிரித்து, முளையிள ஞாயிற்று இளவெயிலெறிப்ப ஓர் இளமயில் ஆடுவது கண்டு நின்றாள்.

அப்பால், தலைமகனும் [4]பற்பனூறாயிரங் கூர்வே விளைஞரொடு [5]நளிமா மலைச்சாரல் வேட்டம்போய் விளையாடுகின்றான், ஆண்டெ ழுந்ததோர்[6] கடமான்பின்னோடிக் காவல் இளைஞரைக் கையகன்று, நெடுமான்தேரோடும் பாகனை நிலவுமணற் கான்யாற்று[7] நிற்கச் செய்து, தொடுகழலடி யதிரச் சுருளிருங்குஞ்சி பொன்ஞாணிற் பிணித்து, கடிகமழ் நறுங்கண்ணி மேற்கொண்டு வண்டு மணமயர, அஞ்சாந்தின் நறுநாற்றம் அகன்பொழிலிடைப் பரந்து நாற, அடுசிலையொடு கணையேந்தி வடிவுகொண்ட காமன்போலச்

1. கோங்கும். 2. பரவைஞாழலும். 3. கொன்றையும். (பாடம்.) 4. பற்பனூறாயிரவர். 5. குளிர். 6. கடுமான். 7. நிற்கப்பணித்து.

சென்று, அவள் நின்ற இரும்பொழிலிலே புகும். அஃது யாங்ஙனமோ வெனின், வடகடலிட்ட ஒருநுகத் தொருதொளை, தென்கடலிட்ட ஒருகழி சென்று கோத்தாற்போலவும், வெங்கதிர்க் கனலியும் தண்கதிர் மதியமும் தங்கதி வழுவித் தலைப்பெய்தாற்போலவும் தலைப்பெய்து ஒருவரொருவரைக் காண்டல் நிமித்தமாகத் தமியராவர் என்பது.

புயலே சுமந்து பிறையே அணிந்து பொருவிலுடன்
கயலே மணந்த கமல மலர்ந்தொரு கற்பகத்தின் [நெல்
அயலே பசும்பொற் கொடிநின்ற தால்வெள்ளை அன்னஞ்செந்
வயலே தடம்பொய்கை சூழ்தஞ்சை வாணன் மலயத்திலே.

உரை கூறுமிடத்து [1] நான்கு வகையாற் கூறப்படும். அவை யாவையெனின், கருத்துரைத்தல், கண்ணழித்தல், பொழிப்புத்திரட்டல், அகலங்கூறல் என இவை. அவற்றுள், கருத்துரைத்தலாவது—சொல்லப்படுஞ் செய்யுளின் கருத்தையுரைத்தல். கண்ணழித்தலாவது—பதப்பொருள் உரைத்தல். பொழிப்புத்திரட்டலாவது—அச் செய்யுளிற் கூறப்படும் பொருளைத் தொகுத்து ஒரு பிண்டமாகக் கூறுதல். அகலங் கூறலாவது—அச்செய்யுளின் பொருளைத் தூய்மை செய்தற்குக் கடாவிடை யுள்ளுறுத்தி ஐயந்தீர விரித்துக் கூறல்.

அவற்றுள் இச் செய்யுட்குக் கருத்துரை யாதோவெனின், களவி கூறவே [2]கருத்துரை விளங்கிநின்றதெனக் கொள்க.

(இ - ள்.) புயலே சுமந்து - புயலைத் தாங்கி, பிறையே அணிந்து - மதிக்கலையைத் தரித்து, பொரு வில்லுடன் கயலே மணந்த கமலம் மலர்ந்து - போர் செய்யும் வில்லுடனே கெண்டை மீன் பொருந்திய தாமரை மலர்ந்து, ஒரு கற்பகத்தின் அயலே - ஒரு கற்பகத்தின் பக்கத்து, பசும்பொற்கொடி - பசிய காமவல்லிக்கொடி, நின்றது - என் கண்ணெதிரே நின்றது, ஆல் - அசை, வெள்ளை

1. 'பொழிப்பே யகல நுட்ப மெச்சமெனப்
பழிப்பில் சூத்திரம் பன்னல் நான்கே.'—என்பதனுனுணர்க.
(பாடம்.) 2. கருத்துரையாய்.

அன்னம் - வெள்ளை நிறத்தையுடைய அன்னம், செந்நெல் - சிவந்த நெல், வயல் - கழனி, தடம்பொய்கை - பெரிய வாவி, சூழ் - சூழ்ந்த, தஞ்சை வாணன் - [1]தஞ்சையில் இருக்கும் வாணன், மலயத்திலே - பொதிய மலையிடத்து என்றவாறு— இது கண்ணழித்தல்.

**(பொழிப்புரை)** அன்னப்புள் செந்நெல் செறிந்த வயலும், வாவியும் சூழ்ந்த தஞ்சைவாணன் பொதிய வெற்பில் ஒரு கற்பகத் தருவின் பக்கத்தில் ஒரு பசும்பொற்கொடி, புயலைத்தாங்கிப் பிறையைத் தரித்துப் போர்செய்யும் வில்லுடன் கெண்டைமீன் பொருந்திய தாமரை மலர்ந்து என் கண்ணெதிரே நின்றது என்றவாறு— இது பொழிப்புத் திரட்டல்.

**(விரிவுரை)** 'புயலைச்சுமந்து பிறையையணிந்து பொருவிலுடன் கயலேமணந்த கமலமலர்ந்து' என்னும் வினையெச்ச அடுக்குகள், 'நின்றது' என்னும் அஃறிணை முற்றுவினைகொண்டு முடிந்தன. புயலைப் பிறையைக் கமலத்தை என்னும் இரண்டாமுருபு தொக்கு நின்றன. ஏகாரம் அனைத்தும் ஈற்றசை. 'வயல் பொய்கை' என்புழி எண்ணும்மை தொக்கு நின்றது. புவியின்கண் கற்பகத்தருவைக் கூறினது குற்றமெனின், குற்றமன்று. என்னை, தேவரெல்லாரும் பொதியமலையிற் கூடியிருத்தலின் அம்மலைக்குப் பொதுஇல் என்னும் பெயர், இக்காலத்து பொதியில் எனத் திரிந்து மரூஉவாய் நின்றது; ஆதலால், தேவரிருக்குமிடத்துக் கற்பகத்தரு இருக்குமென்பது துணிபு. அன்றியும், குறுமுனியிருக்கும் மலையாதலானுங் கூறப்படும். கற்பகத்தின் அயலில் நிற்பது காமவல்லிக்கொடி யாதலான், பசும்பொற்கொடி - காமவல்லிக்கொடி யென்றுணர்க.

இக்கவி கட்டளைக்கலித்துறை என்றுணர்க. திலதக்கலித்துறை, கோவைக்கலித்துறை யெனினும் அமையும். இதற்கு விதி, 'நேர்பதி னாறே' என்னுங் கட்டளைக்கலித்துறைச் சூத்திர அடியிற் கண்டுகொள்க. ஆயின், 'யானுந் தோழியும்' என்பதும், [2]'வென்றான் வினையின்' என்பதும், கலித்துறை யன்றோவெனிற் கூறுதும் :

[3]'மூவா முதலா வுலகமொரு மூன்று மேத்தத்
தாவாத இன்பந் தலையாயது தன்னி னெய்தி
ஓவாது நின்றகுணத் தொண்ணிதிச் செல்வ னென்ப
தேவாதி தேவ னவன்சேவடி சேர்தும் அன்றே.'

---

1. தஞ்சாவூரில், தஞ்சாக்கூரில். தொல் - பாயிரஉரை மேற்கோள். 2. சூளாமணி - காப்பு. 3. சிந்தாமணி. கடவுள் வாழ்த்து-க.

என்னும் சிந்தாமணிப் பதிகச்செய்யுளில் இதற்குப் பெயர், விருத்தத் தோசையாய் விருத்தத்திலக்கணம் நிரம்பாமையானும், நெடிலடி நான்காய்க் கலித்துறை யோசையிலக்கணம் நிரம்பாமையானும், விருத்தக்கலித்துறை யென்று நச்சினார்க்கினியர் கூறிய உரையான் உணர்க.—இது அகலங்கூறல்.

இதனில் அகப்பாட்டுறுப்பு வருமாறு :

[1] 'திணையே கைகோள் கூற்றே கேட்போர்
இடனே காலம் பயனே முன்னம்
மெய்ப்பா டெச்சம் பொருள்வகை துறையென
அப்பால் ஆறிரண் டகப்பாட் டுறுப்பே.'

என்பதனான் இப்பாட்டிற்குத் **திணை** - குறிஞ்சி, **கைகோள்** - களவு, **கூற்று** - தலைவன் கூற்று, **கேட்போர்** - நெஞ்சு, **இடம்** - பொழில் விடம்.

[2] 'ஒருநெறிப் பட்டாங் கோரியல் முடியுங்
கரும நிகழ்ச்சி இடமென மொழிப.'

என்பவாகலின். காலம் - இறந்தகாலம், பயன் - காட்சி வியப்பினால் உள்ளமகிழ்தல். முன்னம் - தலைவியைக் கண்டு தலைவன் வியந்து பொருளைக்கூறாது உவமையே கூறுதல். புறத்துக் கண்ட பொருள்காரணமாக நெஞ்சிற்றோன்றிய விகாரத்தின் விளைவு மெய்ப்பாடாதலான், **மெய்ப்பாடு** - **மருட்கை**. திருக்கோவையாருரையில் காட்சிச் செய்யுட்கு மெய்ப்பாடு உவகையென்று பேராசிரியர் எழுதினாராலோவெனின், உவகையாகாது, என்னை, கண்டபொருளான் நெஞ்சில் மயக்கந் தோன்றி ஒன்றையொன்றாகக் கூறுதலின் மருட்கையேயாம் என்க. எச்சம் - நெஞ்சம், பொருள்வகை - ஆற்றொழுக்கு, துறை ஒவ்வோரிடங்களில் அரிதாய் வருமெனக் கொள்க. வந்தவிடத்து உரையிற் கூறுதும், கண்டு கொள்க.

காட்சிக்குப் பாட்டுப்பாடும் இயல் ஓரினஞ்சார்ந்த பொருளாற் பாடவேண்டும் என்பது இயல்பு. அது சான்றோர் கூறிய கோவைச்செய்யுளிற் கண்டுகொள்க. ஆயின், இச்செய்யுட்கு ஓரினஞ்சார்ந்தது எங்ஙனமெனின், குறிஞ்சி நிலத்துப் பொருளையே ஓரினஞ்சார்த்திப் பாடியவாறு கண்டுகொள்க. இக்காட்சிக் கன்றி வழிநிலைக்காட்சிக்கு எவ்வாறு கூறினும் அமையும். காட்சிக்குக் கண்டபொருளை (அவயவத்தை)க் கூறாது உவமையைக் கூறவேண்டுவ தென்னையெனின், இங்ஙனஞ் சிறந்து தோன்றா

1. அகப்பொருள் விளக்கம் ஒழிபியல் - சூ. உ.
2. தொல். பொருள். செய்யுளியல் - சூ. கககூ.

விடின் ஐயம் நிகழாதாதலான் இங்ஙனங் கூறவேண்டுமென்பது. வாணன் நாட்டிடத்துப் பொருவிறந்த தலைமகன் பொருவிறந்த தலைமகளைக் கண்ணுற்றானென்புழி, இவன் பொருவிறப்புக்கு மாறு கொள்ளுமெனின், எண்டிக்குங் கீர்த்தியை நிலைநிறுத்தித் தெய்வத்தோ டொத்தவனாதலின், தேவருள் ஒருவனென்று கூறப்படுமவன் கீர்த்தியிற்பாடும் புலவரால் தோன்றுந் தலைவனும் தலைவியுமாதலான், மக்கட்டன்மையிற் பொருவிறந்தா ராயினாரெனக் கொள்க.

இத்தமிழ், நாடகத்தமிழ் எனப்படும். என்னை, கிளவியொழுங்குபடக் கோத்துக் கதைபோல வந்து நாடகத்துக்கேற்றலின். ஆயின், இலக்கணமென்று இலக்கணத்திற் கூறியவாறென்னை யெனின், அந்நாடகத்தமிழ்க்கே இலக்கணங் கூறினார் என்க. இவையெல்லாம் அகலவுரைப்பாற்படும். (௧)

ஐயம்

ஐயம் என்பது, கண்ணுற்ற தலைமகன் கொடிஅல்லள் பெண்ணென்றறிந்து, இங்ஙனங் காட்சியிற்சிறந்து தோன்றிய இவள் தெய்வப் பெண்களில் எத்தெய்வப் பெண்ணோ என்று ஐயப்படுதல் கூறல்.

பாரணங் கோதிருப் பாற்கடல் ஈன்றபங் கேருகத்தின்
ஓரணங் கோவெற் புறையணங் கோஉயர் பாவலர்க்கு
வாரணங் கோடி தருந்தஞ்சை வாணன்தென் மாறைவையை
நீரணங் கோநெஞ்ச மேதனி யேஇங்கு நின்றவரே.

(இ - ள்.) பாரினிடத்துப் பொழிலின் மேலிருந்து புவியினுள்ளோர் சிறப்புச்செய்ய அச்சிறப்பைக்கொள்ளுந் தெய்வப்பெண்ணோ! திருப்பாற் கடல்பெற்ற பங்கேருகத்துக்கண் இருக்கும் ஒப்பில்லாத தெய்வப்பெண்ணோ! வரையரமகளோ! உயர்ந்த பாவலர்க்குக் கோடி யானையைக் கொடுக்கும் தஞ்சைவாணனது தென்மாறை நாட்டகத்து வரும் வையையாற்றின்கண் தோன்றிய நீரரமகளோ! நெஞ்சமே, தனியே இங்கு நின்றவர் யாரோவென்று அறியப்படாது.

இதனுள் ஒகாரங்கள் ஐயப்பொருளவென்று உணர்க. நெஞ்சமே, தனியே யிங்கு நின்றவர் யார்? என, நெஞ்சொடு வினாதற் பொருண்மை யென்று வினா ஒகாரம் என்பாரும், அவரோ

இவரோ என்று ஆராய்தற் பொருண்மைக்கண் வந்ததென்று தெரி நிலை ஓகாரம் என்பாரும் உளராலோவெனின், இக்கிளவி ஐயமாத லால் ஐயப்பொருண்மையை விளக்குவது இவ்வோகாரங்கள்; அல்ல வெனின், ஐயப்பொருண்மையை யுணர்த்துவது வேறின்மையால், அவர் கூறிய வினா ஓகாரமும், தெரிநிலை ஓகாரமும் அப் பொருண்மை யறிக.

[1] 'பிரிநிலை வினாவே யெதிர்மறை யொழியிசை
தெரிநிலைக் கிளவி சிறப்பொடு தொகைஇ
இருமூன் றென்ப வோகா ரம்மே.'

எனச் சூத்திரத்துள் ஐய ஓகாரங்கொண்டிலரால் எனின், இச்சூத் திரத்திற் கொண்டிலர்; எழுத்ததிகாரத்து உயிர்மயங்கியலில் ஓகார வீற்றுப் பதமுடிப்புழி,

[2] 'மாறுகோ ளெச்சமும் வினாவும் ஐயமும்
கூறிய வல்லெழுத் தியற்கை யாகும்.'

என்னுஞ் சூத்திரத்தில் ஐய ஓகாரமுங் கொண்டார். அதற்கு உதா ரணம், 'பத்தோ பதினொன்றோ' என உரையாசிரியர் காட்டிப் போந்ததனானுங் கொள்க. பாரணங்கோ என்பதற்குத் தெய்வப் பெண்ணோ என்று கூறினமையால் இறையனார் அகப்பொருளில்,

[3] 'உரையுறை தீந்தமிழ் வேந்த னுசிதன்தென் னாட்டொளிசேர்
விரையுறை பூம்பொழில் மேலுறைதெய்வங்கொ லன்றிவிண்தோய்
வரையுறை தெய்வங்கொல் வானுறை தெய்வங்கொல் நீர்மணந்த
திரையுறை தெய்வங்கொ லையந் தருமித் திருநுதலே.'

என ஐயத்திற்குக் காட்டிய பாட்டில் பொழிலின்மேலுறை **தெய்வம்** எனச் சூரரமகளைக் கூறியவாறு கண்டுகொள்க. 'பங்கேருகத்தி னோரணங்கோ' என்பது மகரவீற்றுப்பதம் அத்துச்சாரியை பெற்று, இன் என்னும் ஐந்தாமுருபு ஏழாவதின் பொருள்பட வந்தது.

[4] 'யாத னுருபிற் கூறிற் றாயினும்
பொருள்செல் மருங்கின் வேற்றுமை சாரும்.'

என்னுஞ் சூத்திரவிதியாற் கண்டுகொள்க. அன்றியும் ஊரினிருந் தார், மனையினிருந்தார் என்பதுபோற் கொள்ளினும் அமையும்.

1. தொல். சொல். இடையியல் - அ.
2. தொல். எழுத். உயிர் மயங்கியல் - அஅ.
3. களவியல். உ-ம் சூ. மேற்கோள்.
4. தொல். சொல். வேற்றுமை மயங்கியல் - சூ. உங.

பொழிலைச்சார்ந்து நிற்றலின், 'பாரணங்கோ' என்றும், பசும பொற்றகடுவேய்ந்து மரகதவிளிம்படுத்த மாணிக்கச்சுனையருகு சண்பகம், பாதிரி, வகுளம், அசோகு, சந்தன முதலாய தருக்கள் மலர்ந்த பூநாறு கொழுநிழற்கீழ் ஒரு கற்பகத்தைச் சார்ந்து பளிக் குப் பாறைமேல் கோலக்கலாபம் விரித்து மயிலாடநோக்கி நின்று ளாகலின், இவள் நிற்குமிடத்துச் சிறப்புநோக்கிப்; 'பங்கேருகத்தி ணேரணங்கோ' என்றும், மலையிடத்து நிற்றலால், 'வரையரமகளோ' என்றும், சுனைநீ ரருகுநிற்றலின், 'நீரரமகளோ' என்றுங் கூறினு ரென்க.

பொழிலின்மேலிருந்து பூசைகொள்ளுந் தெய்வம் யாதோ எனின் சூரரமகள் என்ப. 'பாற்கடல்' என்ன அமையாதோ, 'திரு' என்றது எற்றுக்கோ வெனின்; கடல்களில் குணமிக்க கட லாதலானும், தேவருக்கு அமுதங் கொடுத்ததாதலானும், நெடுமால் பள்ளிகொண்ட இடமாதலானும், 'திருப்பாற்கடல்' என்று கூறப் பட்டது.

இவ்வாறு தலைவியும் ஐயுருதது என்னையெனின், ஐயுறின், 'கந்திருவனே! முருகவேளோ! இயக்கனே!' என ஐயுறவேண் டும். அங்ஙனம் ஐயுறவே, அச்சந்தோன்றும்; தோன்றவே, காமவேட்கை நிகழாது, ஆதலால், கூறிற்றிலர் எனக் கொள்க. (உ)

### துணிவு

துணிவு என்பது, கண்ணிவாடுதல் கண்இமைத்தல் முதலிய குறிகளான் மானிடமாதே யென, முன் ஐயுற்ற தலைமகன், தெளிந்து கூறல்.

**மையார் குவளை வயல்தஞ்சை வாணனை வாழ்த்தலர்போல்**
**நையா தொழிமதி நன்னெஞ்ச மேஇனி நம்மினுந்தன்**
**நெய்யார் கருங்குழற் செம்மலர் வாடின நீலஉண்கண்**
**கையால் அழைப்பன போலிமை யாநிற்குங் காரிகைக்கே.**

(இ - ள்.) நல்ல நெஞ்சமே, இக் காரிகைக்கு நம் மினும் தனது நெய்யார்ந்த கருங்குழலில் சூடிய செம்மலர் வாடின; அன்றியும், நீலம்போன்ற மையுண்டகண் கையி னால் வாவென்று அழைப்பனபோலும் இமையாநின்றன; ஆதலால், கருமைபொருந்திய குவளை மலர்ந்த வயல் சூழ்ந்த தஞ்சைவாணனை வாழ்த்தாத தெவ்வர்போல நீ இனி நையாதொழிவாயாக.

மதி - முன்னிலையசை. உண் கண் - மையுண்ட கண். நெய் - புழுகு.

[1] 'நெய்யொடு குங்குமம் நிறைந்த நாணினுற்
பொய்கைகள் பூம்படாம் போர்த்தல் போன்றவே.'

என்றார் பிறருமென்க. (ரு)

குறிப்பறிதல்

குறிப்பறிதல் என்பது, தலைவி வேட்கை, அவள் பார்வையால் தன்னிடத்து உண்டென்று குறிப்பால் அறிவது.

மண்ணிற் சிறந்த புகழ்த்தஞ்சை வாணன் மலயவெற்பில்
பெண்ணிற் சிறந்தஇப் பேதைதன் பார்வை பெருவினையேன்
எண்ணிற் சிறந்த இருந்துயர் நோய்தனக் கின்மருந்தாய்க்
கண்ணிற் சிறந்த உறுப்பில்லை யாவதுங் காட்டியதே.

(இ - ள்.) மண்ணிலே மிகுந்த புகழையுடைய தஞ்சை வாணன் பொதிய வெற்பிடத்துப் பெண்மையிற் சிறந்த இப்பேதையினது பார்வை பெரிய தீவினையேன் எண்ணத் தின் மிகுந்த பெரிய வேட்கைநோய் தனக்கு வருத்தப்பாடு செய்யாது இன்பஞ்செய்யும் மருந்துமாகி, கண்போற் சிறந்த உறுப்பில்லையாவதுங் காட்டியது.

துயர் - ஆகுபெயர். வேட்கையை நோயாக்கலால் பார்வையை மருந்தாக உருவகம் செய்யப்பட்டது. அவயவம் பலவற்றினும் பயன்தருவ தின்மையாய்க் கண் பயன்தருவதாய்ச் சிறத்தலின், 'கண்ணிற் சிறந்த வுறுப்பில்லை யாவதுங் காட்டியது' என்று கூறியது.

காட்சி முதல் குறிப்பறிதல் ஈறாக நான்கும் கைக்கிளை யென்று கூறப்படுதலின், கைக்கிளையுள் தலைவி வேட்கைக் குறிப்பினை யறிந் தான் என்புழி, கைக்கிளையென்பதனோடு மாறுகொள்ளும்; மற் றென்னை யெனின், மாறுகொள்ளாது; என்னை

தலைமகள் பார்வை பொதுப் பார்வையே, இவன் தன் அவா மிகுதியால் பார்வையில் வேட்கையுளதென்று கருதினனென்ப தாயின், தலைவன் அறிவிலனும்; மற்றென்னை யெனின், தலைமகள் வேட்கைக் குறிப்பால் பார்த்தாள் என்புழிப் புணர்ச்சிக்கு உடன் பட்டாளாயிற்று; உடன்பட்டாள் எனவே தொல்லாசிரியர் கைக் கிளையிற் கூறார்.

1. சிந்தா. நாமக - ருக.

மெய்ப்பாட்டியலில் தலைவிக்குக் கூறிய அவத்தையில்,

[1]"புகுமுகம் புரிதல் பொறிநுதல் வியர்த்தல்
நகுநய மறைத்தல் சிதைவுபிறர்க் கின்மையொடு
தகுமுறை நான்கே ஒன்றென மொழிப."—(முதல் அவத்தை)

'கூழை விரித்தல் காதொன் றுகளைதல்
ஊழணி தைவரல் உடைபெயர்த் துடுத்தலோ
டூழி நான்கே இரண்டென மொழிப.'—(இரண்டாம் அவத்தை)

'அல்குல் தைவரல் அணிந்தவை திருத்தல்
இல்வலி யுறுத்தல் இருகையும் எடுத்தலொடு
சொல்லிய நான்கே மூன்றென மொழிப.'—(மூன்றும் அவத்தை)

'பாராட் டெடுத்தல் மடந்தப வுரைத்தல்
ஈரமில் கூற்றம் ஏற்றலர் நாணல்
கொடுப்பவை கோடல் உளப்படத் தொகைஇ
எடுத்த நான்கே நான்கென மொழிப.'—(நான்காம் அவத்தை)

'தெரிந்துடம் படுதல் திளைப்புவினை மறுத்தல்
கரந்திடத் தொழிதல் கண்டவழி யுவத்தலொடு
பொருந்திய நான்கே ஐந்தென மொழிப.'—(ஐந்தாம் அவத்தை)

இங்ஙனம் நான்கு அவத்தைக் கண்ணுங் கூறிய மெய்ப்பாடு பதினாறும் நிகழ்ந்ததில்லை; ஐந்தாம் அவத்தைக் குணம் நான்கினும் முதற்குணம் 'தெரிந்துடன்படுதல்' என்பதற்கு, 'ஆராய்ந்துடன் படுதல்' என்று இலக்கணங் கூறினமையால், இவற்றின் ஒன்று மின்றிக் கைக்கிளையில் உடன்பட்டாள் என்று சொல்லுவது பொருந்தாதென்பது. ஆயின், சான்றோர் செய்யுள் பலவற்றினுங் கைக்கிளையுட் குறிப்பறிந்தானென்று கூறியவாறென்னையெனின், அவள் பார்த்த பார்வை நன்றெனக் கோடற்கும் அன்றெனக் கோடற்கும் பொதுவேயாம். அஃது என்னையெனின், ஒருவன் பசித்து வந்தானொருவனைக் கண்டான்; அவன் பசியோடிளைத்து வந்தவன் முகத்தைப் பார்த்தான்; அப்பார்வை பசி தீர்க்குமென் பதோ தீராதென்பதோ என்னல்போல நின்றது. பசித்துவந்த வன், இவன் சோறு கொடுப்பானென்று எண்ணுவதல்லது, கொடா னென எண்ணுவது இல்லை; யாதினாலெனின், தன் அவாவினால் என்பது. அது போலத் தலைமகனும் தன் அவா வயத்தனாய்க் கூறியதல்லது, அறிவிலனாய்க் கூறினான் அல்லனென்று உணர்க.

இனி, வேட்கையின் குறிப்பு உணர்ந்தது பதினாறுங் கவி முறு வற்குறிப்பு உணர்தற் செய்யுளிற் கூறியவாற்றான் உணர்க. இனி, இவ்வாறே அகத்திணையியலில்,

1. தொல், பொருள். மெய் - கங, கச, கரு, கசு, கஎ.

[1]"முன்னைய நான்கு முன்னதற் கென்ப."

என்னுஞ் சூத்திரத்தில் நச்சினார்க்கினியர் உரையின், 'அவ் வேட்கை மிகுதியாற் கூறியதல்லது உடம்பட்டாளல்லள்', என்று கூறியவாறுணர்க. அவளுடம்படுவது எங்ஙனமெனின், மறுத்தெதிர்கோடலின்கண்ணே உடம்பட்டவாறு உணர்க. ஆயின், அந்நான்கு அவத்தைக்கண் ஓதிய பதினாறுவகையும் [2]நிகழ்ந்தன்றோ உடம்படுவது எனின், நிகழ்ந்தது உண்டென்று உணர்க. எங்ஙனமெனின் மெய்தொட்டுப் பயிறல் முதலிய நிகழ்ந்துழி எல்லாவகையும் நிகழ்ந்தவாறு கூறவேண்டாவாயிற்று. (௪)

கைக்கிளை முற்றிற்று

---

1. தொல். பொருள். அகத் - ருஉ. (வே. பா.) 2. நிகழாதன்றோ.

## உ. இயற்கைப் புணர்ச்சி

அஃதாவது, தெய்வத்தாற் கூடுதலும், தலைவியாற் கூடுதலும் என இருவகைப்படும். செய்யுட்பாடுவார் தெய்வப்புணர்ச்சி பாடுவாருமுளர், தலைவியிற்புணர்ச்சி பாடுவாருமுளர்; இவ்விரண்டிற்கும் இயற்கைப் புணர்ச்சியென்று பெயர் கூறப்படும். அவற்றுள் இச்செய்யுள் தலைவியிற் புணர்ச்சியாய இயற்கைப் புணர்ச்சி [1]என்க.

[2]"வேட்கை யுணர்த்தல் மறுத்தல் உடன்படல்
கூட்டமென் றிறைவியிற் கூட்டநால் வகைத்தே."

என்னுஞ் சூத்திரவிதியால், இயற்கைப்புணர்ச்சி நான்கு வகைப்படுமெனக் கொள்க. அவை வருமாறு:

### இரந்து பின்னிற்றற் கெண்ணல்

இரந்து பின்னிற்றற் கெண்ணல் என்பது, தலைவன் தலைவியையிரந்து பின்னிற்றற் கெண்ணல். பின்னிற்றல் என்பது ஒரு சொல்; அதற்குப் பொருள் இதஞ்சொல்லுதல்.

தேங்கிய காதர வாதரஞ் செப்பித்தண் செப்பிணைபோல்
வீங்கிய மாமுலை மேவுதும் யாம்விச யக்கொடிமேல்
வாங்கிய சாபம் உயர்த்தவன் போர்வென்ற வாணன்வையம்
தாங்கிய மாலனை யான்தஞ்சை சூழ்வரைத் தாழ்குழற்கே.

(இ - ள்.) நெஞ்சமே, வெற்றிக்கொடிமேல் வளைவில்லை யுயர்த்தவனாகிய சேரனது போரைவென்ற வாணன் வையந்தாங்கிய மாலுக் கொப்பானவன் தஞ்சையைச் சூழ்ந்த வரையிலிருக்குந் தாழ்ந்த குழலினை யுடையாட்கு நிறைந்த அச்சந்தரும் ஆதரத்தைச் சொல்லி, தண்ணிய செப்பிணை போற் பூரித்த பெரிய முலையிடத்து யாம் கூடுதும் என்றவாறு.

காதரம் - அச்சம்; வடசொல். ஆதரம் - காதல். தாழ்குழல் - அன்மொழித் தொகை. நெஞ்சம் முன்னிலையெச்சம். (௫)

### இரந்து பின்னிலை நிற்றல்

இரந்து பின்னிலை நிற்றல் என்பது, தலைவியை யிரந்து இதஞ் சொல்லுதல். நிலையாகப் பின்னிற்றல் என்று மாறிக் கொள்க.

---

(வே. பா.) 1. என்று கொள்க.

2. அகப்பொருள் விளக்கம், களவியல் - ௧௦.

செறிவேற வெஞ்சிலை வேள்தஞ்சை வாணன் திருந்தலர்மேல்
எறிவேலை வென்றகண் ணென்னுயிர்க் கேவி யிருண்டறல்போல்
நெறிவேய் அலங்கன் முடித்தலை சாய்த்திங்ங னிற்பதுதான்
அறிவே யறிந்த வுனக்கலர் மாளிகை ஆரணங்கே.

(இ-ள்.) அலர்மாளிகையிலிருக்கும் அரிய தெய்வம் போல்வாய், வென்றி செறிந்த கருப்பு வெஞ்சிலையையுடைய வேளன்ன தஞ்சைவாணன் பகைவர்மேலெறிந்த வேலை வென்ற நின்கண்ணை என்னுயிர்மேலே விடுத்தலைச் செய்து, அறல்போல் இருண்டு நெறிவேய்ந்த மாலையைச் சூடிய முடித்தலையைச் சாய்த்து, இவ்வாறு நிற்பது எல்லா மறிந்த உனக்கு அறிவோ என்றவாறு.

'இருண்டறல்' என்புழியும், 'அறிவே யறிந்த உனக்கு' என் புழியும் மொழி மாற்றிக்கொள்க. 'வேள் தஞ்சை வாணன்' என்புழி, அன்ன என்னும் பெயரெச்ச வினைக்குறிப்பாகிய உவம வுருபு தொக்கது. 'என்னுயிர்க்கேவி' என்புழி, நான்கனுருபு, மேல் என் னும் ஏழனுருபாயினவாறு கண்டுகொள்க.

[1] 'கிளையரில் நாணற் கிழங்குமணற் கீன்ற'

என்பதுபோலக் கொள்க. நெறி - மயிர் இருபக்கமும் வகிர்ந்த நடுவொழுங்கு. முடித்தலை - இருபெய ரொட்டுப் பண்புத் தொகை. ஆரணங்கு - ஆகுபெயர்; அன்னம் போல்வாளை அன்னம் என் றதுபோலக் கொள்க. (சு)

### முன்னிலையாக்கல்

முன்னிலை யாக்கல் என்பது, தலைமகன் தலைமகளை முன்னிலை யாக்கிக் கூறுதல். அஃதென்னை யெனின்,

காரியத்திற்கு முன்னிற்பது யாதோ அது முன்னிலை யென்று பெயர் பெறும். முன்னிலை யெனினும் முதனிலை யெனினும் காரணம் எனினும் ஒக்கும். ஆயின், என்சொல்லியவாறோ வெனின், இவள் நிற்பது தன் காரணமாக்கிக் கூறுதல்.

வழுதியர் நாமம் வளர்க்கின்ற வாணன்தென் மாறைவண்டு
கொழுதிய லார்செய் குழன்மட வீர்நுங்குற் றேவல்செய்து
தொழுதிய லாபத் தொகுதியொ டாடிச் சுனைகுடையா
தொழுதிய பாவையைப் போல்நின்ற வாறென் இயம்புமினே.

1. அகநானூறு - உகஉ.

(இ-ள்.) பாண்டியருடைய புகழை வளர்க்கின்ற வாணன் தென்மாறை நாட்டு, வண்டு கொழுதப்பட்ட, செய்ய வேண்டும் இலக்கணமெல்லாம் முற்றச் செய்த குழலையுடைய மடவீர், நும்மிடத்துக் குற்றேவல் செய்து தொழுது சஞ்சரிக்கும் ஆயக்கூட்டத்தோடு விளையாடிச் சுனைகுடையாது எழுதிய சித்திரப் பாவைபோல, நீர் நின்றவாறு யாது காரணம்? என்னைக் காக்கவோ? சொல்லும் இப்போதே என்றவாறு.

'வழுதியர் நாமம் வளர்க்கின்ற வாணன்' என்பது, பாண்டியனுக்கு அமைச்சனாதலால் என்று கொள்க. வழுதி யென்னாது வழுதியர் எனப் பன்மையாற் கூறியது என்னையெனின், வழுதி குலத்து முன்னுள்ளோர் படைத்த புகழும், இப்பாண்டியன் படைத்த புகழும் எல்லாம் வளர்ப்பவனாதலின் பன்மையாற் கூறப்பட்டது.

நாமம் - புகழ். தென் - அழகு; தெற்குத் திசையிலுள்ள மாறை யென்றுமாம். கொழுதுதல் - கோதுதல். இயல் - இலக்கணம். ஆர் - நிறைய; ஆர என்னுஞ் சொல் விகாரத்தால் ஆர் என நின்றது. இயலுதல் - சஞ்சரித்தல். தொகுதி - கூட்டம். குடைதல் - குளித்தல். இன்னே - இப்பொழுதே. 'என்னைக் காக்கவோ' என்னுஞ் சொல் வருவித்து உரைக்க; இச்சொல் உரையாவிடின் முன்னிலையாக்கற் பொருள் தோன்றாமை யுணர்க. இலக்கணமெல்லாம் முற்றச்செய்த குழல் என்றது, திருமுருகாற்றுப்படையில்,

[1] 'துவர முடித்த துகளறு முச்சி'

என்பதற்கு, 'முற்றமுடித்த வுச்சி' எனப் பொருள் கொண்டவாறு உணர்க. (எ)

## மெய்தொட்டுப் பயிறல்

மெய்தொட்டுப் பயிறல் என்பது, தலைவன் தலைவி மெய்யினைத் தீண்டி நெருங்குதல்.

தீண்டுமாறு என்னை, மெய்யைத் தொடக் கொடுக்கின் நாணிலளாம்; நாணுடையள் எனின் தொட்டது இன்றாம். மற்றென்னையெனின், நாணும் உடையள், தொட்டதும் உண்டு எனல் வேண்டும். எவ்வாறு எனின், புனல் ஓடும்வழி புல் சாய்ந்து புறங்கிடப்பது போல, வேட்கை மீதூரப்பட்டு நாணம் ஒருபாற் சாய்ந்துகிடப்ப நின்றாளென்க. அக்காலத்தில் தலைவன் தீண்டற்கஞ்சி நின்று,

1. திருமுரு. உசு.

குழலில் வண்டை யோட்டுவதுபோல நெருங்கி வண்டை யோட்டு கையில் கைபட்டது போலத் தொட்டான் என்க. அங்ஙனந் தீண்டிற் பயனென்னை யெனின், இவனுக்கு ஊற்றின்பமும், தலைவி நாணைத் தன்வசப்படுத்தலும் பயனென்றுணர்க. பயிறல் என்பதற்குப் பழகுதல் என்றுரைப்பாரும் உளர். நெருங்கி நிற்றலால் பழகுதலுமாம். நச்சினார்க்கினியர், மெய்தொட்டுப் பயிறல் என்பதற்கு, புலையன் தீம்பால்போல மனங்கொள்ளவும் கொள்ளாவுமாகி யிருக்கின்ற காலத்தே தொட்டான் என்று உரை கூறினார். அஃதென்னையெனின், புலையன் தொட்டான் என்பதனான் சிறிது அருவருப்பும், பாலுக்குக் குற்றமின்று என்பதனான் விருப்பும் என்று பொருள்கொள்க. அருவருப்பும் விருப்பும் இவட்கு எற்றினாலாயதோவெனின், களவொழுக்கம் என்பதனான் அருவருப்பும், கந்தருவ மணம் என்பதனான் விருப்பும் என்று பொருள் கொள்க. இனி, எவ்வுறுப்பைத் தொட்டானெனின், தோள் தீண்டினான் என்க. என்னை,

[1] ‘உறுதோ றுயிர்தளிர்ப்பத் தீண்டலாற் பேதைக்
அமிழ்தின் இயன்றன தோள்.’

என்பதனாற் கண்டுகொள்க.

நல்லார் விழிபோ லிருந்தும் அளியெனு நாமம்பெற்றும்
அல்லார் குழலில் அமர்ந்திருந் தாலம ரரைவெல்ல
வல்லான் வரோதயன் வாணன்றென் மாறை மதுகரங்காள்
நில்லா திடையுமக் கோபழி சால நிலைநிற்குமே.

(இ - ள்.) பகைவரை வெல்ல வல்லமை படைத்து வரத்தினால் உதயஞ்செய்தவனாகிய வாணனது தென்மாறை நாட்டு வண்டுகாள், நல்லார்க்கு நீர் கண்போலிருந்தும், அன்பு என்கிற அளியென்னும் பெயரைப் பெற்றும், இவளுடைய இருள் போன்ற குழலின்மேற் பொருந்தியிருந்தீராயின், இடை நில்லாது இறும்; அதனால் இவள் இறந்துபடும்; படின் உமக்குப் பெண் கொலைப் பாவம் மிகவும் நிலைநிற்கும்; அவ்வண்ணம் கொலைப்பாவம் வாராமல் நீக்குவீராக என்றவாறு.

நீக்குவீராக என்பது வருவித்து உரைக்கப்பட்டது. ஓ என்பது அசை நிலை. அல்லார் என்புழி, ஆர் உவமவுருபாய் நின்றது.

1. குறள். புணர்ச்சி மகிழ்தல் - கூ.

வரோதயன் வடசொன் முடிபு. வல்லான் என்னும் வினைக்குறிப்பு முற்றுவினை யெச்சமாய் நின்றது. என்னை, திருமுருகாற்றுப் படையுள்,

[1] 'குழலன் கோட்டன் குறும்பல் லியத்தன்'

என்பதற்கு, 'குழலையூதிக் கோட்டைக் குறித்துப் பல்லியத்தை யொலித்து' என முற்றுவினை யெச்சமாக நச்சினார்க்கினியர் கூறிய வுரையிற் கண்டுகொள்க. இக்கிளவிக்கு வண்டு முன்னிலையாகப் பாடவேண்டும் என்பது. (அ)

பொய்பாராட்டல்:

பொய்பாராட்டல் என்பது, தலைமகன் தலைமகள் மாட்டு உள்ளதும் இல்லதும் கூட்டிக் கொண்டாடுதல்.

ஆயின், இக்கிளவியிற் பொய்பாராட்டல் எனக் கூறியதல்லது, உள்ளதும் எனக் கூறியதில்லையால் இவ்வாறு உரை கூறியதென்னை யெனின், இல்லதனைக் கூறிக்கொண்டாடுவான் உள்ளதனை விடுவதிலன், மிகவுங் கொண்டாடுவான் என்பதாதலான், பொய்பாராட்டற்கு உள்ளதும் இல்லதுங் கூட்டிக் கொண்டாடுதல் என [2] 'மெய்தொட்டுப் பயிறல், பொய்பாராட்டல்' என்னுஞ் சூத்திரத்தில் உரையாசிரியர் எழுதிய வுரையிற் கண்டுகொள்க.

பருந்தோன்று கூரிலை வேற்படை வாணன் பரிமளப்பூஞ்
செருந்தொன்று சோலைத்தென் மாறைஅன் னீர்செழுந் திங்களுங்
முருந்தொன்று கோப முகங்கண்டு நாணி முயல்மறுத்தீர் [கள்
மருந்தொன்று நாடியன் றேவட மேரு வலங்கொள்வதே

(இ-ள்.) பகைவருடலில் தோய்ந்து அவர் ஊன் பற்றிப் புலவு நாறுதலால் பருந்து பொருந்துங் கூரிய இலை போலும் வேலாகிய படையையுடைய வாணனது பரிமளம் பொருந்திய பூவோடு கூடிய செருந்திமரஞ் செறிந்த சோலை சூழ்ந்த தென்மாறை நாடுபோலும் வனப்புடையவரே, நிறைந்த திங்கள் உமது முருந்து பொருந்துங் கோபமுடைய முகத்தைக் கண்டு, தன்னிடத்து முயலாகிய மறு உண்மையான் ஒவ்வாமையாய் நாணி, அம் முயல்மறுத் தீர்தற்கு மருந்தொன்று மனத்தில் நாடியன்றோ வடமேருவை தினம் வலங்கொள்வது என்றவாறு.

1. திருமுரு. ௨0௬. 2. தொல்-பொருள். களவியல்—௧௧.

முருந்து - இறகின் முதன்முள் ; பற்கு உவமை. கோபம் - இந்திரகோபம் ; இதழ்க்கு உவமை. இஃதிரண்டும் ஆகுபெயர். இதனுள் இல்லது மருந்தொன்று நாடுதல் ; உள்ளது வடமேரு வலங்கொள்வது. மகளிர்க்கு உறுப்புப் பலவற்றினும் முகனும் முலையும் சிறந்த உறுப்பாதலின், இவ்விரண்டினுளொன்றை இக் கிளவிக்குப் பாடவேண்டும் என்பது புலவர் வழக்கு, 'சிறப்புடைப் பொருளைத் தானெடுத்து மொழிதல்' என்னுந் தந்திர உத்தியாத லான். (சு)

### இடம்பெற்றுத்தழால் :

இடம்பெற்றுத்தழால் என்பது, தலைவி நிற்குமிடத்து அயலாய்த் தேனருவி யாற்றங்கரையில் அசோகமரம் நிற்க, பூங்கொடி சுற்றும் படர்ந்திருக்க, மாதவிக்கொடி நின்று மலர்பூத்து வண்டும் தேனும் பாட வரிக்குயில் கூவத் தென்றல் வீசாநிற்க மணல் பரந்து பூந்தாது தவிசுபடுத்தாற்போற் பொலியும் அவ்விடத் தைக் காணப்பெற்று, அவ்விடத்துத் தலைவன் தலைவியைத் தழுவ விரும்பிக் கூறுதல்.

இவ்வாறு விரித்துச் சிறப்பித்துக் கூறவேண்டுவது என்னை யெனின், களவிற் பகற்குறியிற் கூடுங் கூட்டமெல்லாவற்றிற்கும் இதுவே குறியிடமாக நிற்றலின் எனக் கொள்க.

**படம்பட்ட வாளர வல்குலி லேதனை பட்டநெஞ்சம்**
**விடம்பட்ட வாள்பட்ட வேதனை தீரவிண் தோய்பொழிலும்**
**தடம்பட்ட வாவியுஞ் சூழ்தஞ்சை வாணன் தமிழ்க்கிரிநாம்**
**இடம்பட்ட வார முலைத்தடந் தோய்தற் கிடமிதுவே**

**(இ - ள்.)** ஒளி பொருந்திய அரவினது படம்போல் உண்டாகப்பட்ட அல்குலிடத்துக் கட்டுப்பட்ட நெஞ் சமே, விடத்திலே பதப்பட்ட வாளாலறுக்கப்பட்ட துன் பந்தீர, விண்ணைத்தொட்ட பொழிலும், விரிவுபட்ட வாவி யும் சூழ்ந்த தஞ்சைவாணனது பொதியமலையினிடத்து நாம் மார்பெல்லாம் இடமாகப்பட்ட முத்துமாலை பூண்ட முலையாகிய வாவியிற் குளித்தற்கு இதுவே இடம் என்றவாறு.

'படம்பட்டவாளரவு' என்புழி மொழி மாற்றிக்கொள்க. நெஞ்சம் அண்மைவிளி. வாள் போன்றதனை வாள் என்றார், அஃது ஆகுபெயராற் கண்ணென்று கொள்க. தமிழ்க்கிரி என்புழி

கண் என்னும் உருபு தொக்கது. இதுவே யென்னும் ஏகாரம் தேற்றம்; அத் தேற்றத்தினால் இடம் வேறில்லை யென்பது உணர்த்தப்பட்டது. (௧0)

வழிபாடு மறுத்தல்:

வழிபாடு மறுத்தல் என்பது, 'இரந்து பின்னிலை நிற்றல்' முதலாகப், 'பொய் பாராட்டல்' ஈறாகத் தலைவன் வழிபட்டதனைத் தலைவி மறுத்தல்.

இடம் பெற்றுத் தழால் என்னுங் கிளவியில் இடங்குறித்துத் தலைவன் தன்னுட் கூறுதலும், தலைவி தன் இயல்பான் அவன் கூறியவிடத்துக் காகதாலியம் போலச் சென்றாள், கூறக்கேட்டு இவன் சொற்படி சென்றாளல்லள்; அங்ஙனஞ் சென்றாளாயின், புணர்ச்சிக்கு உடன்பட்டனளாம்: ஆகவே, மறுத்தெதிர்கோடலோடு மாறு கொள்ளும் அன்றியும், இக்கிளவியின் பொருள் தலைவன் வழிபாட்டைத் தலைவி மறுத்தாள் என்பதாகலின், மறுத்தே கூறவேண்டும் எனப்படும். அஃதென்னை யெனின், தலைவன் நெஞ்சுட் கூறியதனைத் தலைவி அறியாளென்று உணர்க.

தேருந தெவ்வென்ற வாணன்தென் மாறைச்செந் தேனருவி
ஊருந காலத்து மூறுநண் சார லொதுங்கிடந்தந்
தாருந சோகமும் ஆற்றுநல் வேண்டும் அசோக மெய்தி
மாருந தண்ணளி கூர்மலர் வாள்முக மாதவியே.

(இ-ள்.) அசோகமரத்தைப் பொருந்தி எஞ்ஞான்றும் மாறாத தண்ணிய வண்டு செறிந்த மலரை ஒளி பொருந்திய முகத்திலேயுடைய குருக்கத்தியே, நீ யொரு காரியஞ் செய்யவேண்டும்; அஃதென்னை யெனின், தெளிவில்லாத பகையை வென்ற வாணனது தென்மாறை நாட்டகத்துச் செந்தேன் கலந்த அருவியாறு ஊறாத வேனிற் காலத்தும் ஊறப்பட்ட குளிர்மலையினிடத்து இருக்கின்றனை நீ யாதலால், எனக்கு ஒதுங்குமிடம் கொடுத்து, இவரது ஆறாத சோகமும் ஆற்றுதல் வேண்டும் என்றவாறு.

இவரது சோகத்தை ஆற்றுந் தன்மை பெண்தன்மை யாகலின், நினக்கு அப்பெண்தன்மை சிலேடைவகையால் தோன்ற நின்றனை யென்று கூறினாள் என்பது. அஃதென்னை யெனின், நீ சோக மின்மையை யெய்தினை; அன்றி, தண்ணளியையுமுடையை; மலர்

போலும் வாண்முகத்தையுமுடையை; அன்றியும், மாதவியென்று ஒரு பெண் பெயரினையுமுடையை; ஆதலான், இவர் சோகத்தை யாற்றல் வேண்டுமென்பதனுன், நீ யோர் கருமஞ் செய்யவேண்டும் என வருவித்து உரைக்கப்பட்டது. மாதவியை நோக்கி நீ செய் கென்று கூறினமையான், தலைவி மறுத்தமை தோன்றிற்று. இங்ஙனங் கூறத் தலைவன் நெருங்கி வருதலால், நாணிக் கண்புதைத்தாள் என்க. இஃது இச்செய்யுளில் இல்லையால், கூறியவாறு என்னை யெனின், மேல்வருங் கவியுள் கண்புதைக்கு வருந்தல் கூறுகின்ருராதலான், இச் செய்யுளிற் கண்புதை கூறவேண்டுவ தென்று உணர்க.

தேருத - தெளியாத. தெவ் - பகை. அருவி யூரு த காலம் - வேனிற் காலம். உம்மை - சிறப்பு. சாரல் - மலைப்பக்கம்.

குருக்கத்திமேல் ஏற்றுங்கால்—அசோகம் - ஓர் மரம். அளி - வண்டு. மலர் வாண்முக மாதவி - மலர்பொருந்திய முகத்தையுடைய குருக்கத்தி.

பெண்மேல் ஏற்றுங்கால்—அசோகம் - துன்பமின்மை. தண்ணளி - அருள். மலர் வாண் முகம் - மலர்போலும் ஒளி பொருந்திய முகம். மாதவி - மாதவி யென்னும் பெண். (௧௧)

### இடையூறுகிளத்தல் :

இடையூறு கிளத்தல் என்பது, தலைவி நாணிக் கண்புதைத்ததினுன் எழுந்த துன்பத்தைக் கூறுதல்.

சிதையா முளரித் திருமா ளிகையிற் சிறந்ததென்றென்
இதயார விந்தத் தினிதிருப் பீரிரு கோட்டொருகை
மதயானை வாணன் வருந்தஞ்சை சூழ்வையை நாட்டுறைவோர்
புதையார் தனமென்ப தோமதர் வேற்கண் புதைத்ததுவே.

(இ - ள்.) கேடில்லாத தாமரைத் திருமாளிகையினுஞ் சிறந்ததென்று என் இதய தாமரை வீட்டில் நன்ருக இருக்கின்றவரே, இரு கொம்பையும் ஒரு கையையுங் கொண்ட மதயானையையுடைய வாணன் வரப்பட்ட தஞ்சையைச் சூழ்ந்து வரும் வையைநாட்டின்கணுள்ளோர் தனம் படைக்கின் புதையார் என்னும் நாட்டு வழக்கமோ, தனத்தைப் புதையாது, நீர்மதர்த்த வேல்போலுங் கண்ணைப் புதைத்தது என்றவாறு.

இவரைத் திருமகள் எனப் பாவித்துக் கூறினமையான், தாமரை மாளிகை யாயிற்று. இதயாரவிந்தம் வடசொன் முடிபு. வையைநாட்டு உறைவோர் தனத்தைப் புரையார் என்றது, தினந் தோறுந் தருமத்தின் பொருட்டும் புகழின் பொருட்டும் வழங்குவர் என்று கூறியவாறு உணர்க. (௧௨)

### நீடுநினைந்திரங்கல் :

நீடுநினைந் திரங்கல் என்பது, புணர்ச்சி யெய்தாமையான் இவளுள்ளம் எஞ்ஞான்று இயையுங்கொல்லோ எனக் காலநெடிதாகத் தலைவியை நோக்கி நினைந்து இரங்கிக் கூறல்.

**தமிழ்தங் கியதஞ்சை காவலன் வாணன் தடஞ்சிலம்பில்**
**குமிழ்தங் கியமதிக் கொம்பரன் னீர்குளிர் வெண்ணிலவூ**
**டுமிழ்தண் தரளப் பவளச்செங் கேழ்வள்ளத் துள்ளிருக்கும்**
**அமிழ்தந் தருவதென் றோபெரு வேட்கையென் னாருயிர்க்கே.**

(இ-ள்.) தமிழ் நிலையாய்த் தங்கிய தஞ்சைக்கு வேந்தாகிய வாணன் பெரிய மலையிடத்தில் குமிழ் தங்கிய மதியையுடைய கொம்புபோல்வீர்! பெரு வேட்கை கொண்ட என்னாருயிர்க்குக் குளிர்ந்த வெள்ளிய நிலவினை உள்ளே காலப்பட்ட தண்ணிய தரளம் பொருந்திய பவளத்தினாற் செய்த சிவந்த நிறம் பொருந்திய கிண்ணத்தின் உள்ளிருக்கும் அமிழ்த நீர் தருவது எஞ்ஞான்றோ, என்று நீடுநினைந்திரங்கிக் கூறினான் என்றவாறு.

‘குமிழ் தங்கிய மதிக் கொம்பரன்னீர்’ என்றது, நாசி பொருந்திய முகத்தையுடைய கொம்புபோல்வீர் என்றும், ‘குளிர்வெண்ணிலவூ டுமிழ்தண் தரளம்’ என்றது, முறுவல் என்றும், ‘பவளச் செங்கேழ் வள்ளம்’ என்றது வாயென்றும், பொருளைக் கூறாது உவமத்தினாற் கூறினார், ஆகுபெயரென்னும் இலக்கணங் கொண்டென்று உணர்க. (௧௩)

### மறுத்தெதிர்கோடல் :

மறுத்தெதிர்கோடல் என்பது, முன் வழிபாடு மறுத்ததனை மறுத்துத் தலைவன் கூறிய சொல்லை யேற்றுக்கோடல்.

எதிர்கோடல் ஏற்றுக்கோடலாமோ எனின், போரெதிர்ந்தான் என்றால் போரேற்றான் என்று பொருள் கூறுதல் போலும் என்று

உணர்க. வழிபாடு மறுத்ததனை மறுத்தலென்றது, வழிபாடு மறுத்தல் இக்கிளவியைத் தொடராதன்றே. இடையூறு கிளத்தல், நீடுநினைந்திரங்கல் என்னும் இரண்டு கிளவியும் இடையிட்டு நிற்க, வழிபாடு மறுத்ததனை, மறுத்தெதிர்கோடல் எங்ஙனம் இயையுமோ வெனின், இயையும். என்னையெனின், வழிபாடு மறுத்தல் தலைவி கூற்றாகலின், அக்கூற்றுக்கு மறுத்தெதிர்கோடலும் தலைவி கூற்றாகலின், அடுத்த கூற்றாய் இயைந்தவாறு காண்க. இவ்வியை புடைமை [1] 'மறைந்தவற் காண்டல்' என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தில், கிளவி கோக்குமுறைமையில் தலைவி கூற்றெல்லாம் ஒருங்குபடத் தொகுத்துக் கூறுமிடத்து வழிபாடு மறுத்தல், மறுத்தெதிர்கோடல் எனத் தொடர்ச்சியாய்க் கூறியவாறு உணர்க.

**கறையார் இலங்கிலை வேலன்பர் காமக் [2]கடற்கெதிர்ந்த**
**நிறையாம் வரம்பினி நிற்பதன் றுனிறை நீருலகை**
**மறையாமல் வன்கலி மாற்றிய வாணன்தென் மாறையினும்**
**பொறையார் தவஞ்செய்தி லேநெஞ்ச மேயென் புகல்வதுவே.**

(இ-ள்.) நெஞ்சமே, குருதியார்ந்திலங்கிய இலை போலும் வேலையுடைய அன்பரது காமக்கடல் கரை புரண்டுவர, அக் கடற்கெதிராய நம்முடைய நிறையாகிய வரம்பு தடுக்கும் எனக் குறுக்கிடின் நிற்பதன்று; நிறைந்த நீர் சூழ்ந்த வுலகை மறைக்கவந்த வன்கலியை மறையாமல் மாற்றியிடுந் தன்மையையுடைய வாணனது தென்மாறை நாட்டுக்கண் வேட்கையைப் பொறுக்கத்தக்க நிறைதவம் செய்திலேம், நாமினிப் புகல்வது என் என்றவாறு.

கறை - குருதி. ஆல் - அசை. கடல் எழுந்து வரின் குறுக்கே தடுக்க நினைப்பார் உலகத்தில்லை யென்பது குறிப்பாற் பெறப் பட்டது. நிறை - மறை பிறரறியாமை. [3] 'நிறை யெனப்படுவது மறை பிறரறியாமை' என்றார் பிறரும். அன்றியும்,

[4] 'காமக் கணிச்சி உடைக்கும் நிறையென்னும்
நாணுத்தாழ் வீழ்த்த கதவு.'

என்று கூறியவாற்றானும் உணர்க. (கச)

1. தொல். பொருள். களவியல்—உ௦. 3. கலித். நெய்தல்—கரு.
(வே-பா) (2) கடற்கெதிர் நம். 4. குறள். நிறையழிதல்—க.

**வறிது நகை தோற்றல்:**

வறிதுநகை தோற்றல் என்பது, தலைவி முகத்தே சிறுநகை தோற்றல். என்னை [1] 'வறிதுசிறிதாகும்' என்னுஞ் சூத்திரத்தான் உணர்க. நகை தோற்றல் - நகை வெளியாய்த் தோன்றிய தென்னின் பொருந்தாது என்னை, தலைவன் முன் நாணுடையளாதலின் பல்தோன்றச் சிறுமுறுவல் தோன்றலும் அமையாது. அமையாதாயின், வறிது நகை தோற்றல் என்னுங் கிளவிப் பொருள் பொய்க்குமே யெனின், அற்றன்று;

[2] 'முகைமொக்கு ளுள்ளது நாற்றம்போற் பேதை
நகைமொக்குள் உள்ளதொன் றுண்டு.'

என்பதனுன் நகை வெளிதோன்ருதென்பது கூறியவாறு உணர்க. நகைதான் தோன்றுமாறென்னை யெனின், தலைவன் சொற்கு வேட்கையாலுடன்பட்டு மகிழ்ச்சியான் முகமலர்ந்து அம்மலர்ச்சிக் குறிப்பினுன் நகையெனத் தோற்றுவித்தவாறு உணர்க.

**எறிதேன் அலம்புஞ் சிலம்பினெப் போதும் இரந்திவள்பின்**
**வெறிதே திரிந்து மெலிந்தன நாமுள்ள மெல்லியற்குப்**
**பிறதேகொ லென்னும் பெருந்தகை தேறப் பெரிதுயிர்த்து**
**வறிதே முறுவல்செய் தாள்தஞ்சை வாணன் வரையணங்கே.**

(இ - ள்.) இறகாற் காற்றை யெறியும் வண்டுகள் எப்போதும் ஆரவாரிக்குஞ் சிலம்பிடத்தில் குறையிரந்து இவள் பின்னே பயனின்றியே திரிதலைச் செய்து நாம் மெலிந்தனம்; இம் மெல்லியற்கு உள்ளம் வேறென்று சொல்லும் பெருந்தகை தேறுமாறு பெரிதாய நெட்டுயிர்ப் பெறிந்து தஞ்சைவாணன் வரையணங்கு போல்வாள் வறிதே முறுவல் செய்தாள் என்றவாறு.

'எறிதேன்' என்பது ஒற்றுமை நயத்தால் சினைவினை முதன் மேல் நின்றது. அலம்பல் - ஆரவாரித்தல். 'எப்போதும்' என்பதனை வண்டுகளோடு கூட்டுக. பெரிதுயிர்த்தல் எற்றுக்கோவெனின், நிறையால் தடுக்கரிதாயிற்றென்னும் எண்ணத்தினுல் நெட்டுயிர்ப் புத் தோன்றிற்றெனக் கொள்க.

இக்கவி யார்கூற்றெனின், உரைப்போரும் கேட்போரும் இன்மையான் கவிக்கூற்றென்று கொள்க. அகப்பாட்டுறுப்புப்

---

1. தொல். சொல். உரியியல்—௩௦. 2. குறள். குறிப்பறிவுறுத்தல்—௪.

பன்னிரண்டினும் துறை யென்னும் உறுப்பு இக்கவியெனக் கொள்க. தலைவன் கூற்றாய்க் கூறாது கவிக்கூற்றாய்க் கூறவேண்டுவ தென்னை யெனின், இது தலைவன் கூற்றாயின், மேல் முறுவற் குறிப்பு உணர்தல் என்னும் தலைவன் கூற்றுத் தோன்றாதாதலான் இது கவிக்கூற்றாயிற்று. (கரு)

## முறுவற் குறிப்புணர்தல்:

முறுவற் குறிப்புணர்தல் என்பது, அம் முறுவலின் குறிப்பைத் தலைமகன் உணர்தல்.

**வின்மலை வேலன்ன நன்னுதல் வாட்கண்ணி வேட்கையெண்ணாள்**
**என்மலை வேனென்னு மென்னுயிர் தாங்கு மெதிர்ந்த வொன்னார்**
**மன்மலை வேழந் திறைகொண்ட சேய்தஞ்சை வாணன்மஞ்சார்**
**தென்மலை வேய்நிக ரும்பெருந் தோளி சிறுநகையே.**

(இ - ள்.) போரிலெதிர்ந்த பகைவரது நிலைபெற்ற மலைபோன்ற யானையைத் திறையாகக் கொண்ட, முருக வேளை யொக்குந் தஞ்சைவாணனது முகிலார்ந்த பொதிய மலையிலெழுந்த வேயை நிகரும் பெரிய தோளினை யுடையாளது சிறிய நகையானது, 'வில்லும் பொருகின்ற வேலும் போன்ற நன்னுதலும் வாட்கண்ணுமுடையாள் எனது வேட்கையினை யெண்ணாளாயின், நான் இனி யாது செய்வேன்' என்னும் என்னுயிரைத் தாங்கா நிற்கும் என்றவாறு.

'வின்மலை வேல்' என்புழியும், 'நன்னுதல் வாட்கண்ணி' என்புழியும் உம்மைத்தொகை நிரனிறை. மலைவேல் -பொருவேல். என் மலைவேன் - யாது செய்வேன். மலை வேழம் - உவமத்தொகை. என்னுயிர் தாங்கா நிற்கும் என்பதனால், தலைவிவேட்கைக் குறிப்பை முறுவலினான் உணர்ந்தானென்று கொள்க. கைக்கிளையில், 'குறிப்பறிதல்' என்பது தன் அவாவினாற் கூறியதல்லது வேட்கைக் குறிப்பு நிகழ்ந்ததன் றென்பது இக்கிளவியாற் றெளியப்பட்ட தென்று உணர்க. (கசு)

## முயங்குதலுறுத்தல்:

முயங்குதலுறுத்தல் என்பது, தலைவி முயங்குதற்கு உடன் பட்ட அருமையை வலியுறுத்திக் கூறுதல்.

வானக் கதிரவன் மண்ணைக மாதை மணந்ததன்றோ
நானக் குழலியை நானின்று பெற்றது நாவலர்க்குத்
தானக் களிறு தரும்புயல் வாணன் தமிழ்த்தஞ்சைசூழ்
கானக் கடிவரை வாய்விரை நாண்மலர்க் காவகத்தே.

(இ - ள்.) நாவலர்க்கு மதம் பொழியும் யானையைக் கொடுக்கும் புயல் போன்ற வாணனது தமிழ்த் தஞ்சை சூழ்ந்த காடு மிகுந்த வரையிடத்து, மண நாறும் நாட் கொண்ட மலர் செறிந்த சோலையிடத்து, மான்மதமார்ந்த குழலினை யுடையாளை நான் இன்று முயங்கப்பெற்ற அருமை, வானத்தை யிடமாக வுடைய ஆதித்தன் மண்ணிடத்து மாதை வந்து கூடியதாம் என்றவாறு.

வானம் - ஆகாயம். நானம் - மான்மதம். தானம் - மதம். புயல் வாணன் - உவமைத் தொகை. கானம் - காடு. கடி - மிகுதி. நாண் மலர் - முறுக்கவிழ் மலர். 'நானின்று பெற்றது' என இறந்த காலத்தாற் கூறியது, கூடும் விரைவுபற்றி யெனக்கொள்க. என்னை,

[1] 'வாராக் காலத்தும் நிகழுங் காலத்தும்
ஓராங்கு வரூஉம் வினைச்சொற் கிளவி
இறந்தகா லத்துக் குறிப்பொடு கிளத்தல்
விரைந்த பொருள என்மனார் புலவர்.'

என்னுஞ் சூத்திர விதியாற் கண்டுகொள்க. (கஎ)

**புணர்ச்சியின் மகிழ்தல் :**

புணர்ச்சியின் மகிழ்தல் என்பது, தலைவன் புணர்ச்சியான் மகிழ்தல்.

மலைநாடு கொண்ட வழுதிகண் போல்பவன் வாணனெண்ணெண்
கலைநாடு தஞ்சையர் காவலன் மால்வரைக் கன்னிபொன்னுண்
முலைநா முயன்று முயங்கின மால்முயன் றுபிவியைந்
தலைநாக நன்மணி யும்பெற லாமித் தரணியிலே.

(இ - ள்.) நெஞ்சமே, சேரமானுடாகிய மலைநாட்டை வெற்றியாற் கவர்ந்த வழுதிக்குக் கண்போன்றவன், அறு

1. தொல். சொல். வினை - சச.

பத்து நான்கு கலைகளும் இருப்பதற்கு நாடிய தஞ்சை நகரிலுள்ளார்க்கு அரசனாகிய வாணனது பெரிய மலையிடத்து, பெறுதற்கரிதாகிய இக் கன்னியினுடைய பொன்னாணணிந்த முலையினிடத்து நாம் முயற்சியான் முயங்கினம்; ஆதலால், இன்று இத்தரணியிற் கிடைப்பதற்கு அரிதாகிய ஐந்தலை நாகத்தினது நல்ல மணியும் பெறவேண்டுமென்று சிந்தித்தலை முயன்றாற் பெறலாம் என்றவாறு.

தவஞ்செய்து முயன்றோர்க்கும் எய்துதற்கு அரிதாகிய இவளை நம் முயற்சியாற் பெற்றமையான், நாகமணியும் பெறலாமென்று தன் முயற்சியின் பெருமை கூறினனென்க. என்னை,

[1] 'ஊழையும் உப்பக்கங் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்.'

இக்குறளில், ஊழில் ஒருவற்குப் பேறில்லாவிடினும், முயற்சி ஊழைப் புறங்கண்டு நினைத்தது முடிக்கும் எனக் கூறினாராகலின் என்க. இவண் முயற்சி யாதெனின்,

[2] 'காட்சி முதலாச் சாக்கா டீறாக்
காட்டிய பத்துங் கைவரு மெனினே
மெய்யுறு புணர்ச்சி எய்துதற் குரித்தே.'

என்னுஞ் சூத்திரவிதியால், இப் பத்து அவத்தைக்கண்ணும் மடியின்றி முயன்று செய்தல் எனக் கொள்க.

ஆயின், சாக்காடு என்பது என்னையெனின், உணர்விலனாதல். மலைநாடு - சேரமானாடு. வழுதி - பாண்டியன். எண்ணெண்கலை - கல்வி. மால் - பெருமை. வரை - மலை. பொன்னாண் - பொன்னினாற் செய்த நாண். முயன்று - முயற்சிப்பட்டு. முயங்கினம் - புணர்ந்தனம். இனி - இன்று. (௧அ)

புகழ்தல்:

புகழ்தல் என்பது, தலைவியது நலத்தைப் பாராட்டல்.

திரண்மா மரகதச் செய்குன்று காளென்றுஞ் செவ்வனநீர்
முரண்மா தவங்கள் முயன்றுசெய் தாலு மௗரிமங்கை
சரண்மாறை வாணன் தமிழ்த்தஞ்சை நாட்டென் தனியுயிர்க்கோர்
அரண்மா னனையகண் ணாள்கொங்கை போறல் அரிதுமக்கே.

---

1. குறள். ஆள்வினை - ௧௦. 2. அகப்பொருள் விளக்கம், அகத்திணை - ௩௬.

(இ - ள்.) திரண்ட பெரிய மரகதத்தாற் செய்த செய்குன்றுகாள், நீர் செவ்விய வனத்தின்கண்ணிருந்து இரவு பகல் எப்பொழுதும் முலைக்கு நிகராகவேண்டு மென்று மாறுபட்ட பெருந்தவத்தை முயன்று செய்கின்றீர்; செய்யினும், திருமகளடைக்கலமாக விருக்கும் மாறையென்னும் வாணனது தமிழ்த் தஞ்சை நாட்டகத்துத் துணையில்லாத எனது உயிர்க்கு அரணும் மானும் அனையகண்ணுள் கொங்கையை யொப்பாதல் உமக்கு அரிது என்றவாறு.

செய்குன்று - வினைத்தொகை; செய்குன்றாவது—மாதர் விளையாடுவதற்கு மரகதமணியாற் செய்யும் மேடை. செவ்வனம் என்புழி ஏழாம் வேற்றுமைத் தொகை. முரண் - மாறுபாடு; மாறுபாடாவன—மழையில் நனைந்தும், வெயிலில் உலர்ந்தும், பனியில் குளிர்ந்தும், காற்றில் அலைபட்டும் நிலையிற் பிரியாதிருத்தல். மா - பெருமை. முயன்று - வருந்தி. மூளரிமங்கை - திருமகள். சரண் - அடைக்கலம். தனி - துணையின்மை. அரண்மான் என்புழி உம்மைத் தொகை: மதன்போர்க்கு அரணாயிருத்தலின் அரண் என்று கூறியது. போறல் - போல்தல்.

[1] 'நெடியதன் முன்ன ரொற்றுமெய் கெடுதலும்'

என்பதனுன் நிலைமொழி லகரங்கெட்டு,

[1] 'லனவென வரூஉம் புள்ளி முன்னர்
தநவென வரிற் றனவா குமமே.'

என்பதனுன், வருமொழித் தகரங்கெட்டு றகரமாய்ப், போறல் என முடிந்து நின்றது. செய்தாலும் என்புழி உம்மை அருமை தோன்ற நின்றது.

'இரந்து பின்னிற்றற்கெண்ணல்' முதல், 'நீடுநினைந்திரங்கல்' ஈறாகிய ஒன்பதனுள், 'வழிபாடு மறுத்தல்' ஒன்றும் ஒழித்து ஒழிந்த எட்டும் வேட்கை யுணர்த்தற்கு உரியன. வழிபாடு மறுத்தல் ஒன்றும் மறுத்தற்கு உரித்து. மறுத்தெதிர் கோடலும், வறிதுநகை தோற்றலும் ஆகிய இரண்டும் உடன்படற்கு உரியன. முறுவற் குறிப்புணர்தலும், முயங்குத லுறுத்தலும், புணர்ச்சியின் மகிழ்தலும், புகழ்தலும் ஆகிய நான்கும் கூட்டத்திற்கு உரியனவாம்.

இங்ஙனம் புணர்ந்த தலைவன், புணர்ச்சியால் வேட்கையிற் குறைபாடுளனோ, முன்போலும் வேட்கையுடையனோ என்னும்

1. தொல். எழுத். தொகை - கஅ, எ.

இரண்டில், வேட்கையிற் குறைபாடுடையன் எனின், தலைவியிடத்தில் அன்பிலனும்; என்னை, வேட்கையினுற் பிறந்த அன்பாதலான். அன்றி முன்னின்ற வேட்கையிற் குறைபாடிலனெனின், புணர்ச்சியாற் பயனின்றெனவாம். மற்று என்னை யெனின், அன்பும்—இயற்கை யன்பு என்றும், செயற்கை யன்பு என்றும் இரண்டு வகைப்படும். அவற்றுள் இயற்கையன்பாவது, ஊழ்வினை வயத்தான் ஒருவரிடத்து ஒருவர்க்குப் பற்றிய அன்பு. செயற்கையன்பாவது, புணர்ச்சிக்கண் தலைவியிடத்துப் பிறந்த குணங்களாற் றோன்றும் அன்பு. ஆதலால், புணர்ச்சிக்கண் குறைந்த வேட்கை இயற்கை யன்பினுனும், செயற்கை யன்பினுனும் நிறையு மாதலான், புணராத முன்னின்ற வேட்கையும் அன்பும் புணர்ந்த பின்னும் ஒத்து நிற்குமென்று உணர்க. என்னை,

[1] 'அதுவே, தானே அவளே தமியர் காணக்
காமப் புணர்ச்சி இருவயி னொத்தல்.'

என்னும் இறையனுர் அகப்பொருட் சூத்திரத்தில், இருவயினொத்தல் என்பதற்குப் பொருள், புணராத முன்னும் புணர்ந்த பின்னும் ஆகிய இரண்டிடத்தும் வேட்கையும் அன்பும் ஒத்திருக்குமென்பது அவ்வுரையாற் கண்டுகொள்க. (௧௧)

இயற்கைப் புணர்ச்சி முற்றிற்று.

---

1. இறையனுர். அகப். - ௨.

## ரு. வன்புறை

அஃதாவது, தலைவி ஐயுற்றவழி ஐயுறவு தீரத் தலைவன் வற்புறுத்திக் கூறல். அஃது,

[1] 'ஐயந் தீர்த்தல் பிரிவறி வுறுத்தலென்
றெய்திய வன்புறை இருவகைத் தாகும்.'

என்னும் சூத்திரவிதியால், வன்புறை இரண்டு வகைப்படும்.

அணிந்துழி நாணியது உணர்ந்து தெளிவித்தல் :

அணிந்துழி நாணியது உணர்ந்து தெளிவித்தல் என்பது, புணர்ச்சியிடத்து, தலைவி யணிந்த முத்துமாலை முதலிய கொங்கையணி குழலணி இவைகள் வேறுபட்டதனைத் தலைவன் தன் கையினால் வேறுபாடு தீர அணிந்துழி, தலைவி பாங்கியால் அணியப்பட்ட அணி இவர்கையா லணியும்போது வேறுபடும் என்றும், இவ் வேறுபாட்டைப் பாங்கியறியின் ஐயம் பிறக்கும் என்றும் நாணினளாகி முகம் வேறுபட்டாளாக, அவ்வேறுபாடு தலைவன் அறிந்து தலைவியைத் தெளிவித்தல்.

நாவியுங் காரகி லாவியுந் தோய்குழல் நாணியஞ்சேல்
வாவியுஞ் சோலையுஞ் சூழ்தஞ்சை வாணன்றென் மாறைவயற்
காவியுஞ் சேலுங் கமலமுங் காட்டுநின் கண்மலரும்
ஆவியும் போலினி யாரணி யாக வணிந்தனனே.

(இ - ள்.) மான்மதமும் கரிய அகிற் புகையும் தோய்ந்த குழலையுடையாய், யான் அணிந்த அணியால் ஐயுற்று நாணி யஞ்சலை; வாவிகளும் சோலைகளும் சூழ்ந்த தஞ்சைவாணனது தென்மாறை நாட்டு வயலிடத்துண்டாகிய நீலப்போதும் கயலும் கமலப்போதும் ஒப்புக்காட்டும் நினது கண்மலரும் ஆவியும் போன்ற தோழிமார் அணிந்த அணியாக அணிந்தனனுதலான் என்றவாறு.

நாவி - மான்மதம். தோய்குழல் - ஆகு பெயர்; தாழ்குழல் என்பது போல அன்மொழித்தொகை யாகாதோ எனின்,

---

1. அகப். விளக்கம், களவியல் - கஉ.

ஆகாது. என்னை, தாழ்குழல் என்பது வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. தோய்குழல் அவ்வண்ணமாகாது மற்றுமோர் சொல்லை நோக்கி நிற்றலான் ஆகுபெயர் ஆயிற்று. காவி - நீலப்போது. சேல் - கயல். இனியார் - ஈண்டுத் தோழி மார். (உ0)

பெருநயப் புரைத்தல் :

பெருநயப் புரைத்தல் என்பது, மீண்டும் இவன் வருவன் கொல்லோ! வாரான்கொல்லோ! என்றெண்ணி முகம் வேறு பட்டாளாக, அவ் வேறுபாட்டைத் தலைவன் குறிப்பான் உணர்ந்து, தனது மிகுந்த காதலை உரைத்தல்.

**மன்னு உலகத்து மன்னிய சீர்த்தஞ்சை வாணன்வெற்பில்**
**என்னுயி ரன்ன இவளிடை மேலிணை கொண்டெழுந்த**
**பொன்னு ணணிகொங்கை போலவண் டீருங்கள் பொய்கை**
**நன்னுள் அரும்பொரு தாளிரண் டீனு நளினங்களே. [யுண்டோ**

**(இ - ள்.)** நிலையில்லாத உலகத்தினிடத்து நிலைபெற்ற கீர்த்தியையுடைய தஞ்சைவாணனது வெற்பிடத்து வண்டு காள், என் ஆவியையொத்த இவளிடைமேல் இரண்டு என்னும் எண்ணைக்கொண் டெழுந்த பொன்னுண் என் னும் பூணையணிந்த கொங்கைபோல, நல்லநாட் கொண்ட அரும்புகள் ஒரு தாள் இரண்டீனுந் தாமரைகளை உங்கள் பொய்கைக்கண் கண்டதுண்டோ என்றவாறு.

வண்டுகாள், நீர் எவ்விடத்து வாவிகளினுஞ் சென்று எல்லாப் பூக்களையுங் கண்டறிதிரன்றே? அவ்வாவிகளில் ஒரு தாள் இரண்டு அரும்பு ஈனுந் தாமரைகளைக் கண்டதுண்டேல் சொல்லுவீராக என்று கூறியது, வயிற்று ரோமரேகை ஒரு தாளாகவும், முலை யிரண்டும் அத்தாளிலே பிறந்த அரும்பாகவும், தன் காதலாற் றோன்றியதென்று தன்னயப்பு உரைத்தவாறுணர்க. அன்றியும், 'என்னுயி ரன்ன விவள்' என்பதனான், இவள் நீங்கும்போதில் உயிர் நீங்கும் உடம்பாகுவேன் என்பது தோன்றலானும், தன் னயப்பு உணர்த்தியவாறு உணர்க.

சீர் - கீர்த்தி. பொய்கை யுண்டோ என்புழி ஏழனுருபு தொக்கு நின்றது. 'வெற்பகத்து வண்டீர்' எனக் கூட்டுக. இக்கிளவிக்கு வண்டு முன்னிலையாகப் பாடவேண்டு மென்பது. (உக)

### தெய்வத்திறம் பேசல்:

தெய்வத்திறம் பேசல் என்பது, இங்ஙனம் கூறியும் தெளிந்திலனால் ஊழ்வலியினது திறத்தைக் கூறல்

**மன்னிய பார்புகழ் வாணன்தென் மாறையின் மாந்தளிர்போல்**
**மின்னிய மாமை விளர்ப்பதென் னேவிதி கூட்ட நம்மில்**
**பின்னிய காதல் பிரிப்பவர் யாரினிப் பேரருவி**
**இன்னிய மாக இளமயி லாடும் இரும்பொழிற்கே.**

(இ-ள்.) பாரிடத்து நிலைபெற்ற புகழையுடைய வாணனது தென்மாறைவெற்பில் வரும் பேரருவி தண்ணுமையாக இளமயில் ஆடும் இப்பெரிய சோலையிடத்து, இன்று மாந்தளிர்போல் ஒளிவிடப்பட்ட அழகை விளர்த்துக் காட்டுவது என்னே! விதியானது கூட்டுவிக்க நம்முட் பிணித்த காதலைப் பிரிப்பவர் யார்? ஆதலால், நீ ஐயுறேல் என்றவாறு.

'அருவி யின்னியமாக இளமயில் ஆடும்' என்பதனுன், வெற்பு வருவிக்கப்பட்டது. 'பார் மன்னிய' என இயையும். மாமை-அழகு; நிறமுமாம்.

[1] 'தம்மி லிருந்து தமதுபாத் துண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு.'

என்னுங் குறளில், 'அம் மா அரிவை' என்பதற்கு, 'அழகிய மாமை நிறத்தை யுடைய அரிவை' என்று பரிமேலழகர் எழுதிய வுரையாற் கண்டுகொள்க.

விளர்த்தல் - மனக் கவற்சியால் வெளுத்தல். விதி - ஊழ்வினை. பின்னிய - பிணித்த. இனி - இன்று. இன்னியம் - ஈண்டுத் தண்ணுமை. இருமை - பெருமை. பொழிற்கே என்புழி வேற்றுமை மயக்கம். ஏகாரம் இரண்டும் ஈற்றசை. தலைவி - முன்னிலையெச்சம். (உ௨)

### பிரியேனென்றல்:

பிரியேனென்றல் என்பது, நீர்க்கரைப் பசுங்கொடி வேனில் வெப்பத்தால் நிறம் வேறுபடல் போல, புணர்ச்சியின்பத்தாற் பெற்ற அழகு, எம்பெருமான் பிரிவன் என்னுங் கவற்சியால் விளர்த்த வெளுப்பு நீங்காமை கண்ட தலைமகன் நின்னிற் பிரியேன் என்று வற்புறுத்திக் கூறல்.

---

1. குறள். புணர்ச்சி மகிழ்தல் - எ.

வண்கொடி யேய்மதில் மாறை வரோதயன் வாணனென்னூர்
எண்கொடி யேனெய்த இவ்வண்ண நீயிரங் கேலிரங்கேல்
நுண்கொடி யேரிடை வண்டிமிர் பூங்குழல் நூபுரத்தாள்
பெண்கொடி யேபிரி யேன்தரி யேனிற் பிரியினுமே.

(இ - ள்.) கொடுக்குங் கொடையாற் கட்டிய கொடி பொருந்திய மதில் சூழ்ந்த மாறைநாட்டில், வரத்தினு லுதயஞ் செய்த வாணனுக்குப் பகைவரா யுள்ளார் எய்தும் எண்ணத்தைக் கொடியேனாகிய யான் எய்த நினைக்கின், விளர்ப்பு வண்ணமாக நீ யிரங்கற்க இரங்கற்க; நுண்ணிய கொடிபோல் அழகையுடைய இடையையும் வண்டுக ளிமிரும் பூவணிந்த குழலையும் பரிபுரமணிந்த தாளையும் உடைய பெண்கொடியே, நின்னிற் பிரியேன்; அன்றிப் பிரியினும், கணப்போதும் தரியேன் என்று அணங்கின் முன்னே சூளுற்றான் என்றவாறு.

வண்மைக் கொடி, வண் கொடி யென நின்றது; நன்மை நெறி நன்னெறி யென நின்றாற்போல. வண்மை, நன்மை யென்பன பண்புப்பத மாகலின், ஈற்றுயிர் மெய்கெடுதல் அப் பதத்திற் கியல் பெனக் கொள்க. வண்மை - கொடை. எய்தல் - பொருந்துதல். 'வாணனென்னூர்' என்பது,

[1] 'அதுவென் வேற்றுமை யுயர்திணைத் தொகைவயின்
அதுவெ னுருபுகெடக் குகரம் வருமே.'

என்னும் வேற்றுமை மயங்கியற் சூத்திரத்தால், அது என்னும் ஆறனுருபு, 'வாணனுக்கு ஒன்னார்' என நான்கனுருபாகப் பொருள் கொள்க.

எண் - எண்ணம். இவ்வண்ணம் என்புழி, சுட்டு, முற்கவியில், 'விளர்ப்பதென்னே' என்று கூறினமையான், அவ்விளர்ப்பு வண் ணத்தைச் சுட்டிற்று. 'இரங்கேல் இரங்கேல்' என்றது அடுக்கு மொழி. என்னையெனின்,

[2] 'கொல்லல் கொல்லல் செய்நலங் கொல்லல் எஞ்ஞான்றும்
சொல்லல் சொல்லல் பொய்ம்மொழி சொல்லல் எஞ்ஞான்றும்
புல்லல் புல்லல் தீநெறி புல்லல் எஞ்ஞான்றும்.'

1. தொல். சொல். வேற்றுமை மயங். - கக.
2. யாப்பருங் - விரு. செய். கடு-ஆம் சூ. உரை மேற்கோள்.

என்னும் இம்மூவடி வெளிவிருத்தத்துள், அடிதோறும் அச்சப் பொருண்மைக்கண் விரைவுபற்றிய அடுக்குமொழி வந்தவாறு போலக் கொள்க. ஏர் - அழகு. இமிர்தல் - முரலுதல். என்னை,

[1] 'வேங்கை தொலைத்த வெறிபொறி வாரணத்
தேந்து மருப்பி னினவண் டிமிர்பூதும்.'

என்னுங் குறிஞ்சிக் கலியுள், இமிர்தல் வண்டொலிக்கு வந்தவாறு கண்டுகொள்க.

'நுண்கொடியேரிடை' உவமைத் தொகை. 'நுண்கொடி யேரிடை வண்டிமிர் பூங்குழ லூபுரத்தாள்' என்புழி உம்மைத் தொகை. 'பிரியேன்' என்னுங் கிளவியில், 'தரியேன் நிற்பிரியி னும்' என்று கூறியவாறு என்னை யெனின், இங்ஙனங் கூறுவிடின், 'பிரிந்து வருகென்றல்' என்று அடுத்த கிளவி வருதலின், 'பிரியேன்' என்று முன்சொல்லி, உடனே, 'பிரிந்து வருவேன்' எனக் கூறின், தலைவன் பொய்யனெனத் தோன்றித் தலைவி யிறந்து படும். அதனால், பிரியே னென்றவுடனே பிரிவையும் அறிவுறுத் திக் கூறினன் என்பது. இக்கிளவிக்குப், 'பிரியேன் பிரியினுந் தரியேன்' என்று கூறுவது இலக்கணம். என்னை,

[2] 'மின்னிற் பொலிந்தசெவ் வேல்வலத் தான்விழி ஞத்தெதிர்ந்த
மன்னர்க்கு வானங் கொடுத்தசெங் கோன்மன்னன் வஞ்சியன்ன
நின்னிற் பிரியேன் பிரியினு மாற்றே னெடும்பணைத்தோள்
பொன்னிற் பசந்தொளி [3]வாடிட வென்னீ புலம்புவதே.' [ய்]

[2] 'பொன்னூற் புனைகழற் பூழியன் பூலந்தைப் பூவழிய
மின்னு ரயில்கொண்ட வேந்தன் விசாரிதன் வெண்டிரைமேல்
முன்னுண் முதலறி யாவண்ண நின்ற பிரான்முசிறி
யன்னாய் பிரியேன் பிரியினு மாற்றே னழுங்கற்கவே.'

எனவும் கூறிய சான்றோர் செய்யுட்களான் உணர்க.

இக்கிளவியில் அணங்கொடு சூளுற்றுக் கூறினன் என்பது. சூளுறல் செய்யுளிற் கூறியதில்லையால் எனின், வரைவியலில் [4]'துதித்தே னணங்கொடு சூளுமுற்றேன்' என்பதனானும், [5]'தெய் வம் பொறைகொளச் செல்குவம்' என்பதனானும் உணர்க. இஃது

1. கலித். குறிஞ்சி - ௭.
2. இறைய. அகப்பொருள் - ௨-ம் சூ. உரை மேற்கோள்கள். (வே. பா.) 3. வாடவென்னுங்கொல் புலம்புவதே.
4. தஞ்சைவா - ௨௬௦. 5. அகப். விளக்கம், வரைவியல் - ௬.

இக்கிளவிக்க ணல்லது கூறுதற்கு வேறோரிடம் இன்மையான் இங்ஙனம் கூறியதென்று உணர்க.

[1] 'இலங்கு மருவித் திலங்கு மருவித்தே
வானி னிலங்கு மருவித்தே தானுற்ற
சூள்பேணான் பொய்த்தான் மலை.'

என்னுங் குறிஞ்சிக்கலியுள், சூளுறவு கூறியவாறு உணர்க. (உ௩)

பிரிந்து வருகென்றல் :

பிரிந்து வருகென்றல் என்பது வெளிப்படை. பிரிந்து வருகேன் என்னுஞ் சொல் விகாரப்பட்டதெனக் கொள்க.

சென்றே பகைவென்ற திண்படை வாணன் செழுந்தஞ்சைசூழ்
நன்றே தருவையை நாடனை யாய்நம தாருயிர்போல்
ஒன்றே யெனதுரை யூங்குயர் சோலையி னுடொளித்து
நின்றே வருவலிங் கேவிளை யாடுக நீசிறிதே.

(இ - ள்.) மேற்சென்று பகையை வென்ற திண்ணிய சேனையையுடைய வாணனது வளவிய தஞ்சையைச் சூழ்ந்து வந்து [2] நன்றேதரப்பட்ட வையை நாடு போன்றவளே, யான் ஒரு சொல் சொல்லுகின்றேன், அது கேட்பாயாக; நம்மிருவர்க்கும் அரியவுயிர் ஒன்றாய துபோல என் சொல்லும் ஒன்றே; யாதெனின், உவ்விடத்துயர்ந்த சோலையினுள் ஒளித்து நின்று வருவேன், இவ்விடத்து நீ சிறிதுபோது விளையாடுக என்றவாறு.

'சென்றே பகைவென்ற' என்றது, வஞ்சித் திணைப்பொருள்; அது மேற்சென்று பகைபொருதல்.

[3] 'வெட்சி நிரைகவர்தல் மீட்டல் கரந்தையாம்
வட்கார்மேற் செல்வது வஞ்சியாம்—உட்கார்
எதிரூன்றல் காஞ்சி யெயில்காத்தல் நொச்சி
அதுவளைத்த லாகு முழிஞை.'

என்னும் வெண்பாவானும்,

1. கலித். குறிஞ்சி - ௫. (வே. - பா.) 2. நன்மை.
3. சேந். திவா. கஉ-ஆம் தொகுதி.

[1] 'வஞ்சி தானே முல்லையது புறனே.'

[2] 'எஞ்சா மண்ணசை வேந்தனை வேந்தன்
அஞ்சுதகத் தலைச்சென் றடல்குறித் தன்றே.'

என்னுஞ் சூத்திரங்களானும், பகைவேந்தனை வேந்தன் மேற் சென்று பொருவது வஞ்சித்திணை. மேற்சேறல் எனினும், தலைச் சேறல் எனினும் ஒக்குமாதலான், 'சென்றே பகைவென்ற திண் படை வாணன்' என்றார்.

நன்று - நன்மை. ஆருயிர் - அரிய வுயிர். ஊங்கு - சுட்டு நீண்டது. 'சிறிது' என்றது காலத்தின்மேல் நின்றது. காலத்திற் சிறிது கணமாதலின் கணப்போது விளையாடுக என்றவாறாயிற்று. ஆயின், இங்ஙனம் பிரியின், இவன் அன்பிலனும், தலைவி யாற்றாளாம்; மற்றென்னை பிரிந்தவாறு எனின், பிரியாவிடின் களவு பிறர்க்குப் புலனும்; புலனாகவே, இவள் பெரு நாணினளாதலால் இறந்துபடு மாதலின், பிரியவேண்டுமென்று கருதிப் பிரிந்தான் என்பது. தலைமகள் பிரிவுக்கு இயைந்து ஆற்றுமோவெனின், ஆற்றும். எங்ஙனமெனின், ஆற்றாமையான் இறந்துபட்டுழி எம்பெருமானும் இறந்துபடும் என்று கருதிப் பிரிவினை ஆற்றல் வேண்டுமென்று ஆற்றினளாம். (உச)

இடமணித் தென்றல் :

இடமணித் தென்றல் என்பது, தலைவனூர் சேய்த்தோ அணித்தோ என்று தலைமகள் கவலைப்பட்டவதனைக் குறிப்பினுலறிந்த தலைவன், இடம் அணித்தென்று கூறுதல்.

மணிபொன் சொரியுங்கை வாணன்தென் மாறை மருவினர்போல்
தணிபொன் சொரியுந் தடமுலை யாயுயர் சந்தமுந்தி
அணிபொன் சொரியு மருவியெஞ் சார லகத்தலர்தேங்
கணிபொன் சொரியுநின் சாரல்மென் காந்தளங் கையகத்தே.

(இ-ள்.) ஏற்றார்க்கு மணியும் பொன்னுஞ் சொரியப்பட்ட கையையுடைய வாணனது தென்மாறை நாட்டின்கண் உறைவார்போல, தணிவாகப் பொன்போற் பசலை நிறத்தைச் சொரியும் பெரிய முலையாய், நீ இங்ஙனம் ஆற்றாமை கொள்ளவேண்டா; நின்னூர்க்கு எம்மூர் சேய்த்தன்று, அணித்தாயிருக்கும்; எங்ஙனமெனின், உயர்ந்த

1. தொல். பொருள். புறத் - சு. 2. தொல். பொருள். புறத்-எ.

சந்தனத் தருக்களைத் திரையா லெறிந்து அணியணியாகப் பொன்னைச் சொரியும் அருவி பொருந்திய எம் சாரலகத்துத் தேனொடு கூடிய வேங்கை நின்சாரலிடத்திருக்கும் மெல்லிய காந்தட்போதாகிய கையிடத்திலே பொன்போல் அலரைச் சொரியும் என்றவாறு.

'சந்த முந்தி அணிபொன் சொரியும் அருவி' என்றதனால் திரை வருவிக்கப்பட்டது. 'மணி பொன்' என்புழி உம்மைத் தொகை. தணிதல் - நிறைதல். உந்தல் - எறிதல். 'பொன்போல் அலரைச் சொரியும்' என மொழிமாற்றிக் கொள்க. ஆதலான், என் சாரலும் நின் சாரலும் அணித்தென்றவாறாயிற்று. என்சாரல் வேங்கைத் தருவால் நின்சாரற் காந்தள் பயன்பெற்றாற் போல, என்னால் நீயும் நீங்காது பயன்பெறுவை யென உள்ளுறையுவமம் தோன்றியவாறு உணர்க. இவ்வாறு இடமணித்தென்று கூறித் தலைவன் நீங்கும். எவ்விடத்து நீங்குமோ எனின், தலைவி ஆற்றுவாள் கொல்லோ, ஆற்றாள்கொல்லோ என்பது அறிது மென்று, தலைவி காணாததோர் அணிமைக்கண் தான் மறைந்திருந்து தலைவியை நோக்கி யிருக்குமெனக் கொள்க. முன்னைய மூன்றும், 'ஐயந்தீர்த்தல்,' பின்னைய மூன்றும், 'பிரிவறிவுறுத்தல்' என்க. (உரு)

**வன்புறை முற்றிற்று.**

## ௪. தெளிவு

அஃதாவது,

[1] ‘தலைவன் மாற்றந் தலைவி தேற்றம்
தெளிவா மென்பர் தெளிந்திசி னோரே.’

என்னுஞ் சூத்திரவிதியால் தலைவன் கூறிய சொல்லைத் தலைவி மெய்யெனத் தெளிந்து ஆற்றுவது.

**எத்துந் தமதுரை தேறிநின் றேனையிங் கேதனியே**
**வைத்தங் ககன்று மறந்துறை யார்வறி யோர்கவர**
**முத்துந் துகிரு மிரங்குந் தரங்க முகந்தெறிந்து**
**தத்துங் கரைவையை சூழ்தஞ்சை வாணன் தமிழ்வெற்பரே.**

(இ-ள்.) எத்திறத்துந் தரியேம் நிற்பிரியினு மென்று கூறிய தமதுரையை மெய்யாகத் தேறிநின்றேனை இவ்விடத்துத் தனியாக வைத்து நீங்கி அவ்விடத்து நம்மை மறந்து தரித்து இரார், வறியோர் கவர முத்தையும் பவளத்தையும் ஒலிக்குந் திரையாகிய கையினான் மொண்டு வீசித் தத்துங் கரைபொருந்திய வையை சூழ்ந்த தமிழ் வெற்பர் என்றவாறு.

வறியோர் கவர முத்தும் துகிரும் திரைக்கையாலே முகந்து எறிகின்ற அருளுடைய வையைநதி சூழ்ந்த நாட்டுவெற்பராதலான், இவரும் அருளுடையாராய் நம்மைத் தனியே இங்கு வைத்து அங்ககன்று உறையார் என்பது தோன்றிநின்றது.

எத்தும் - எத்திறத்தும். ‘அகன்று அங்கு’ என்று இயையும். துகிர் - பவளம். இரங்குதல் - ஒலித்தல். தரங்கம் - அலை. தத்தல் - தாவல். (௨௬)

**தெளிவு முற்றிற்று.**

---

1. அகப். விளக்கம், களவியல் - ௧௪.

## ரு. பிரிவுழிமகிழ்ச்சி

அஃதாவது, தலைவி பிரிந்து போகுழிப் போகின்ற தன்மையைக் கண்டு தலைவன் மகிழ்தல்.

### செல்லுங்கிழத்தி செலவுகண் டுளத்தொடு சொல்லல் :

செல்லுங் கிழத்தி செலவு கண்டு உளத்தொடு சொல்லல் என்பது, தலைவன், புணர்ச்சிக்களத்தினின்றும் பெயர்ந்து போகாநின்ற தலைமகளது செலவைக்கண்டு தன் நெஞ்சத்தோடு சொல்லுதல்.

அகிலேந்து கூந்த லொருகையி லேந்தி யசைந்தொருகை
துகிலேந்தி யேந்துந் துணைச்சிலம் பார்ப்பத் துளிகலந்த [வாய்
முகிலேந்து பூம்பொழில் சூழ்தஞ்சை வாணன்முந் நீர்த்துறை
நகிலேந்து பூங்கொடி போற்செல்லு மானெஞ்ச நம்முயிரே.

(இ - ள்.) நெஞ்சமே நம்முயிராயதோர் வடிவு கொண்டு அகிற்புகை யேந்திய கூந்தலை யொருகையி லேந்திக்கொண்டு, ஒரு கையிற் றுகிலை யேந்திக்கொண்டு அசைந்து, தாளிணையேந்துந் துணைச்சிலம்பு ஆரவாரிக்கத் துளி கலந்த முகிலையேந்திய பூவொடுகூடிய பொழில் சூழ்ந்த தஞ்சைவாணனது கடற்கரையிடத்து, முலையை யேந்து பூங்கொடி நடந்து செல்லல்போற் செல்லும், நீ காண்பாயாக என்றவாறு.

கூந்தல் முடியாமலும் துகில் உடாமலும் வந்த தென்னை யெனின், புணர்ச்சிக்களத்து இருப்புழி ஆயக்கூட்டத்தார் வருவாரென்றும், வந்தால் களவு புலனாமென்றுங் கருதி, அவ்விடத்து நீங்கிக் குழல் முடிக்கவும் துகில் உடுக்கவும் நினைத்து வந்தாளெனக.

அகில் - ஆகுபெயர். துகில் - புடைவை. துளி - தண்ணீர். நகில் - முலை. நெஞ்சம் - அண்மைவிளி. ஆல் - அசை. 'காண்பாய்' என்னுஞ்சொல் எச்சமாய் நின்று முடிந்தது. (உஎ)

### பாகனொடு சொல்லல் :

பாகனொடு சொல்லல் என்பது, தலைவன் தன்னைத் தேடி வந்த பாகனொடு தலைவி செல்வதைக் காட்டிக் கூறல்.

தென்பால் திலகமன் னன்றஞ்சை வாணன்தென் மாறைமுந்நீர்
வன்பால் திரண்முத்த வண்டலின் மேல்வரும் ஏதமஞ்சி
முன்பார்த்தென் னெஞ்சம் வரும்வழி பார்த்து முறைமுறையே
பின்பார்த் தொதுங்குதல் காண்வல வாவொரு பெண்ணணங்கே.

( இ - ள். ) வலவா, ஒரு பெண்ணணங்கு தென்றிசைக்குத் திலகம் போன்றவனாகிய தஞ்சைவாணனது தென்மாறை நாட்டுக் கடற்கரையில் வலிய பாற்றிரள் போன்ற முத்தத்தினன் வண்டலம்பாவை செய்து விளையாடும் ஆயக்கூட்டத்தார் மேலாகவருங் குற்றமஞ்சி முன்னே பார்த்து, நெஞ்சம் வருகிற வழியை முறைமுறையாய் இருபக்கமும் பார்த்து, யான் வருகின்றேனோ என்று பின்பார்த்து நடந்து ஏகல் காண்பாயாக என்றவாறு.

'பாற்றிரண் முத்தம்' என்புழி உவமைத் தொகை. வண்டலின் மேல்வரும் ஏதம் - ஆயக்கூட்டத்தார் தான் வருகின்ற கோலங் கண்டு ஐயுறுவார் என்னுங் குற்றம்.

வலவன் - தேர்ப்பாகன். 'பெண்ணணங்கு' என்றது பின்மொழி நிலையல். 'அணங்குபோலும் பெண்' என்று பொருள் கூறுக ; இதனை முன்மொழி நிலையல் என்பாரும் உளர். (உஅ)

பிரிவுழிமகிழ்ச்சி முற்றிற்று.

## கூ. பிரிவுழிக்கலங்கல்

அஃதாவது, தலைவி பிரிந்தவிடத்தில் தலைவன் கலங்கிக் கூறல்.

> [1] 'மருளுற் றுரைத்தல் தெருளுற் றுரைத்தலென்
> திருவகைத் தாகும் பிரிவுழிக் கலங்கல்.'

என்னுஞ் சூத்திரவிதியால் பிரிவுழிக்கலங்கல் இரண்டு வகையாகும்.

**ஆயவெள்ளம் வழிபடக்கண்டு இது மாயமோவென்றல்:**

ஆயவெள்ளம் வழிபடக் கண்டு இது மாயமோ என்றல் என்பது, தலைவியை ஆயக்கூட்டம் வந்து வழிபடுதலைக்கண்டு, இவ்வாயத்துள்ளாள் என்னைத் தனித்துக் கூடியது என்ன மாயமோ என்று மயங்கிக் கூறுதல்.

சீயங்கொ லோவெனத் தெவ்வென்ற வாணன்தென் மாறைவையைத்
தோயங்கொ லோவெனு நேயநம் பால்வைத்துச் சோலைமஞ்ஞை
ஆயங்கொ லோவெனு மாயத்துள் ளாளிவ் வரிவையென்ன
மாயங்கொ லோநெஞ்ச மேமணம் போலிங்கு வந்துற்றதே.

(இ-ள்.) நெஞ்சமே, தெவ்வர் போர்க்களத்திற் பொரும்போது இவன் சிங்கமோ என்று சொல்லும்படி வெற்றி யடைந்த வாணனது தென்மாறை நாட்டில் வரும் வையையாற்றினது நீரோ என்று சொல்லப்பட்ட அன்பை நம்மிடத்திலே வைத்து, சோலையிடத்துலாவும் மயிற்கூட்டமோ என ஐயங்கொடுக்கும் இவ்வாயக் கூட்டம் வழிபட நடுவே விளங்குகின்றாளாகிய இவ்வரிவை மணஞ்செய்தது போல இங்கு வந்து கூடியது யாது மாயமோ! என்றவாறு.

சீயம் - சிங்கம். தெவ்வு - பகை. தோயம் - நீர். நேயம் - அன்பு. மஞ்ஞை - மயில். கொல் நான்கும் ஐயம். ஓகாரம் நான்கும் அசை நிலை. அன்றி, ஓகாரம் ஐயமெனின், கொல் அசைநிலை.

இங்ஙனம் தலைவி காணுததோர் அணிமைக்கண் நின்ற தலைமகன், ஆயக்கூட்டத்தில் தலைவி சேர்ந்தவுடன், அவர், குறுங்கண்ணியும் நெடுங்கோதையும் தளிரும் கொண்டுவந்து வழிபடு

---

1. அகப். விளக்கம், களவியல், சூ - கசு.

வாரும், குற்றேவல் செய்வாரும் பல்லாண்டு கூறுவாருமாய்ச் சூழ, தாரகை நடுவண் தண்மதிபோல இவள் வீற்றிருப்பதைக் கண்டு கூறியவாறென்று உணர்க. (உக)

**வாயில்பெற்றுய்தல் :**

வாயில்பெற்று உய்தல் என்பது, தலைவி ஆயக்கூட்டத்திற் செல்லும்போது உயிர்ப்பாங்கி முகத்தை நோக்கிச் செல்ல அறிந்து, அவ்வுயிர்ப்பாங்கியைத் தலைவன் தூதாகப் பெற்று உய்வதாகக் கூறல்.

வாயில் எனினும், தூது எனினும் ஒக்கும். பக்கத்திற் பிரியா திருத்தலான் பாங்கி யென்று பெயராயிற்று.

இடந்தலைப்பாடும் பாங்கற் கூட்டமும் கூறி, மதியுடம்பாட்டில் அறியும் பாங்கியை ஈண்டு அறிந்ததாகக் கூறவேண்டிய தென்னையெனின், மதியுடம்பாட்டில் வாயில்பெற்று இரவு வலியுறுத்திக் கண்ணியும் தழையும் ஏந்திச்சென்று, ஊர் பெயர் முதலிய வினவுழிப் பாங்கியை அறிதற்கெனக் கொள்க. ஈண்டு அறியாவிடின், இடந்தலைப்பாடு பாங்கற்கூட்டத்தில் அறியும் இடமின்று ; ஆதலான், இவ்வாயில்பெற்று உய்தற்கும், அவ்வாயில்பெற்று இரவு வலியுறுத்தற்கும், 'மாட்டேற்றுப் பூட்டு' என்று உணர்க.

பெருமால் மருந்தொன்று பெற்றனம் யாநெஞ்சம் பேருறல்பார்
மருமான் வரோதயன் வாணன்தென் மாறை மணங்கமழ்பூந்
திருமான் முகமலர்ச் சேயரி பாய்கயல் சென்றுசென்றவ்
வொருமா னகைமுக மாமல ரோடை யுலாவருமே.

(இ-ள்.) நெஞ்சமே, பாரின் வழித்தோன்றி வரத் துதித்தவனாகிய வாணனது தென்மாறை நாட்டு மண நாறும் பூவிலிருக்கப்பட்ட திருமகள் போன்ற தலைவியது முகமலரின்கணுள்ள செவ்வரி பரந்த கயல்போன்ற கண்கள் போய்ப் போய்ப் பாங்கியது ஒளிபொருந்திய முகமாகிய மலரோடையுள் உலாவிக்கொண்டு வருதலான், நமது பெரிய மாலாகிய நோய்க்கு மருந்தொன்று யாம் அறியப்பெற்றனம் ; இம் மருந்தினான் அந்நோய் தீரும், மயங்கல்வேண்டா என்றவாறு.

எனவே, தலைவிநோக்குத் தலைவற்கு உயிர்ப்பாங்கியை அறிவித்தவாறு கண்டுகொள்க. 'மருந்தொன்று யாம் அறியப் பெற்ற

னம்' என இயையும். பேதுறல் - மயங்கல். நெஞ்சம் - அண்மை விளி. மருமான் - வழித்தோன்றியோன் ; அவ்வழியை வளஞ்செய்தல் இயல்பாதலான், 'பாரின் வழித்தோன்றி' எனப் பட்டது; பூமி பாலகன் எனினும் அமையும். 'மருமான்' என்னும் வினைமுற்று வினையெச்சமாய் நின்றது. திருமானும் கயலும் ஆகுபெயர். 'சென்று சென்று' என்பது அடுக்கு. அவ்வொருமான் - உயிர்ப் பாங்கி. அதிகாரம், 'பிரிவுழிக்கலங்கல்' என வைத்துக், 'கலங்கல்' கூறாது, 'உய்தல்' கூறியது என்னையெனின், 'மருளுற் றுரைத்தல்' 'தெருளுற் றுரைத்தல்' என்று இரு வகையாற் கூறப்படும் என்னும் இலக்கணம் சூத்திரத்துட் கூறலான், 'தெருளுற் றுரைத்தல்' என்னும் இலக்கணத்தாற் கூறப்பட்டது. (ரு0)

பண்பு பாராட்டல் :

பண்பு பாராட்டல் என்பது, தலைவியது அழகைப் பரிந்து கொண்டாடல். பண்பு என்று அழகிற்குப் பெயரோவெனின், அழகும் பண்பு பலவற்றினுள்ளும் ஓர் பண்பாதலான் அழகு பண் பெனப்பட்டது.

**மயலார் களிற்றண்ணல் வாணன்தென் மாறையில் வாய்த்தவர்கண்**
**கயலா மெனிற்கயல் கள்ளங்கொள் ளாகருந் தாழளகம்**
**புயலா மெனிற்புயல் போதுகொள் ளாதிப் புனையிழையார்**
**இயலாம் அனைத்தையும் வேறென்ன பேரிட் டியம்புவதே.**

(இ - ள்.) நெஞ்சமே, மயக்கமார்ந்த யானைப் பெருமையை யுடைய வாணனது தென்மாறை நாட்டில் நமக்கு நல்வினைப் ப்யத்தால் வாய்த்த மடவாரது கண்களைக் கண்களல்ல, கயலேயாம் எனச் சொல்லின், அக்கயல்கள் கள்ளப்பார்வை கொள்ளா ; கரிதாய்த் தாழ்ந்த அளகத்தை அளகம் அன்று, புயலாமெனில், அப்புயல் அலங்காரமாகப் போதுகளைப் புனையாது ; இவ்விரண்டு உறுப்பிற்கும் அழகின் பெருக்கத்தான் உவமப் பொருள்களைப் பெயரிட்டுக் கூற இயையாமையாற் புனையிழையாரது இலக்கணமாகிய அனைத்துறுப்பையும் உவமப் பெயர்களில் வேறாக என்ன பெயரிட்டு இயம்புவது என்றவாறு.

எனவே, அழகின் பெருக்கத்தான் அவ்வுறுப்புகள் தமக்குத் தாமே உவமை கூறவேண்டுவ தல்லது, வேறு பொருள்கள் ஒப்புக் கூறப்படாவாயின.

மயல் - மயக்கம். வாய்த்தல் - முயற்சியான் எய்தற்கு அரிதாகிய பொருள் ஓர் காலத்து ஓரிடத்து நல்வினைப்பயத்தான் தானே வந்து எய்துதல். அளகம் - குழல். இயல் - இலக்கணம். இயம்புவது - சொல்லுவது. நெஞ்சம் - முன்னிலையெச்சம். (௩க)

## பயந்தோர்ப் பழிச்சல்:

பயந்தோர்ப் பழிச்சல் என்பது, தலைவியைப் பெற்றாரைத் தலைவன் வாழ்த்தல்.

அணியுஞ் சுடர்விரி சங்குபங் கேருக மாடகமும்
மணியுந் தரமன்னி வாரிய ரோதஞ்சை வாணன்வெற்பில்
தணியுந் தொழிலொழித் தின்பமுந் துன்பமுந் தன்பதமே
பணியும் பணியெனக் குப்பயந் தாரைப் பயந்தவரே.

(இ - ள்.) நெஞ்சமே, ஒளிவிரியப்பட்ட சங்கநிதியும் பதுமநிதியும் பூணாரமும் செம்பொன்னும் நவமணியும் கொடுக்க மாறாது நிலைபெற்றுத், தஞ்சைவாணன் வெற்பில், மற்றத் தொழில்களெல்லாம் இன்பமுந் துன்பமுமாதலின் தாழுந் தொழிலென்று அவற்றை யொழித்து, என்ஞான்றும் இன்பந் தருவதாய தன்னுடைய பாதத்தைப் பணியுந் தொழிலை எனக்குக் கொடுத்தாளைப் பெற்ற தாயும் தந்தையும் என்னும் இவர்கள் பன்னாளும் வாழியர் என்றவாறு.

அணி - பூணாரம். சுடர் - ஒளி. சங்கு - சங்கநிதி. பங்கேருகம் - பதுமநிதி. 'சங்குபங்கேருகம்' என்புழி உம்மைத் தொகை. ஆடகம் - பொன். மணி - நவமணி. ஓகாரம் - அசைநிலை. தணிதல் - தாழ்தல். பணியும் பணி - வணங்குந் தொழில். பயத்தல் - கொடுத்தல். பயந்தவர் - இருமுதுகுரவர். 'இன்பமுந் துன்பமுந் தணியுந் தொழில்' எனவும், 'அணியுமாடகமு மணியும்' எனவும் இயையும். உம்மைகள் எண்ணின்கண் வந்தன. (௩௨)

## கண்படை பெறாது கங்குனோதல்:

கண்படை பெறாது கங்குனோதல் என்பது, அன்றிரவில் தலைவி தந்த வேட்கையான் துயில் பெறாது கங்குற்காலத்து நொந்து கூறல்.

வாமக் கலையல்குல் வாணுத லார்தஞ்சை வாணன்வெற்பில்
நாமக் கலவி நலங்கவர் போது நமக்களித்த
காமக் கனலவர் கையகல் காலைக் கடும்பனிகூர்
யாமக் கடலகத் துந்தணி யாதினி யென்செய்துமே.

(இ-ள்.) நெஞ்சமே, தஞ்சைவாணன் வெற்பில், நாம் முன் இயற்கைப்புணர்ச்சியில் இன்பங் கொள்ளும் போது அழகுபொருந்தி மேகலை சூழ்ந்த அல்குலையும், ஒளி பொருந்திய நுதலையும் உடையார் நமக்குக் கொடுத்த வேட்கைக் கனல் உள்ளடங்கியிருந்து, அவர் பிரிந்த விடத்துக் கடிய பனி மிகுந்த இரவாகிய கடலின்கண் மூழ்கி யுந் தணியாது; இன்று என்செய்யக் கடவோம் என்றவாறு.

வாமம் - அழகு. கலை - மேகலை. நலம் - ஆகுபெயர். கவர்தல் - கொள்ளுதல். கையகலல் - பிரிதல். யாமம் - இடையிரவு. உம்மை - சிறப்பு. இனி - இன்று. நெஞ்சம் - முன்னிலையெச்சம்.

'ஆயவெள்ளம் வழிபடக்கண்டு இது மாயமோ வென்றல்' ஒன்றும், 'மருளுற்றுரைத்தல்'; ஏனைய நான்கும், 'தெருளுற்றுரைத்தல்.' (௩௩)

பிரிவுழிக்கலங்கல் முற்றிற்று.

'காட்சி' முதலாகக் 'கண்படைபெறாது கங்குனோதல்'
ஈறாகக்கூறிய கிளவி முப்பத்து மூன்றும்
முதனாள் நிகழ்ந்ததெனக் கொள்க.

## எ. இடந்தலைப்பாடு

அஃதாவது, இயற்கைப்புணர்ச்சி புணர்ந்த தலைவன் மற்றைத் தினத்தில் அவ்விடத்தே வந்து தலைமகளைக் கூடுதல்.

[1] 'தெய்வந் தெளிதல் கூடல் விடுத்தலென்
றிவ்வோர் மூவகைத் திடந்தலைப் பாடே.'

என்னுஞ் சூத்திரவிதியால் இடந்தலைப்பாடு மூவகைப்படும்.

### தந்ததெய்வந் தருமெனச்சேறல்:

தந்த தெய்வம் தருமெனச் சேறல் என்பது, முன் இயற்கைப் புணர்ச்சியில் அவளைத் தந்த விதி இன்னும் அவ்விடத்திற் சென்றால் தருமெனச் சேறல்.

மன்றும் பொதியிலு மாமயில் சேர்தஞ்சை வாணன்வெற்பில்
துன்றும் புயலிளஞ் சோலையின் வாய்ச்சுற வுக்குழையைச்
சென்றுந்து சேல்விழி மின்னைமுன் னாள்தந்த தெய்வநமக்
கின்றுந் தருநெஞ்ச மேயெழு வாழியிங் கென்னுடனே.

(இ-ள்.) நெஞ்சமே, மன்றினிடத்தும் பொதியி லிடத்தும் பெரிய மயில் சேருந் தஞ்சைவாணன் வெற் பிடத்து, புயல் நெருங்கிய இளஞ் சோலையினிடத்து, மக ரக் குழையைப் போய்த் தள்ளுங் கெண்டைபோலும் விழியையுடைய மின்னை நெருநல் தந்த விதியானது நமக்கு இன்றுஞ்சென்றால் தருமாதலான், என்னுடன் ஒருப்பட்டு எழுவாயாக என்றவாறு.

மன்று - ஊர்க்கு நடுவாய் எல்லாரும் இருக்கத் திண்ணை போட் டிருக்கும் மரத்தடி. பொதியில் - அம்பலமாய் எல்லாருங் கூடியிருக் கும் கூடம். என்னை, திருமுருகாற்றுப்படையுள்,

[2] 'மன்றமும் பொதியிலுங் கந்துடை நிலையினும்'

என்பதனுற் காண்க.

மாமயில் - ஊரில்வளர்ந்த பெரியமயில். 'புயல்துன்றும்' என இயையும். சுறவுக்குழை - மகரக்குழை. உந்தல் - தள்ளுதல். சேல் விழி - உவமைத்தொகை. மின் - ஆகுபெயர். தெய்வம் - விதி. வாழி - முன்னிலையசை. (௩௪)

---

1. அகப். விளக்கம், களவியல் சூ - ௪அ.
2. திருமுரு. ௨௨௬.

முந்துறக்காண்டல் :

முந்துறக்காண்டல் என்பது, முந்துபோலக் காண்டல்.

மருவாய நாப்பண் மயிலுரு வாய்நென்னல் வாணன்தஞ்சைத்
தருவாய்த் தழைகொய்து தண்புனங் காத்துத் தடங்குடைந்து
திருவாய் மலர்ந்து சிலம்பெதிர் கூயின்றோர் தெய்வதப்பெண்
உருவா யொருதனி யேநின்ற தாலென் னுயிர்க்குயிரே.

(இ - ள்.) நெஞ்சமே, நெருநல் பொருந்திய ஆயக் கூட்டத்து நடுவே மயிலின்வடிவாக இற்றைப்பொழுது வாணனது தஞ்சைச் சோலையிடத்துத் தழைகொய்து, மழைபெய்தலாற் குளிர்ந்த புனங்காத்து, வாவியில் நீராடி, திருவாய்திறந்து மலையெதிர்கூவி, ஒப்பற்ற தெய்வப்பெண்ணுருவாய், ஒப்பற்ற தனியே யென்னுயிர்க்குயிர் நின்றது, காண்பாயாக என்றவாறு.

ஆயநாப்பண் - ஆயக்கூட்டத்து நடு. தரு - சாதியொருமை. தடம் - வாவி. சிலம்பெதிர் கூவுதல் - ஓர்விளையாட்டு. ஆல் - அசை. நெஞ்சம் - முன்னிலையெச்சம். (கூ௫)

முயங்கல் :

முயங்கல் என்பது புணர்தல்.

மானு கரன்தஞ்சை வாணன் வரோதயன் மாறையன்னுள்
தானுவி நின்றலர் தாமரை யேஅத் தடமலர்வாய்
ஆனு தொழுகுசெந் தேனல்லி மேவு மரசவன்னம்
யானு கிடைப்பது வேயின்ன பான்மை யிருவர்க்குமே.

(இ - ள்.) மானத்துக்குப் பிறப்பிடமாய் வரத்தினுதித்த தஞ்சைவாணனது மாறைநாடுபோல்வாள் வாவியினின்று மலர்ந்த தாமரை, அவ்வாவித் தாமரையிடத்து நீங்காமலொழுகுஞ் செந்தேனையுடைய அகவிதழின்கண் மேவியிருக்கும் அரசவன்னம் யானாயினேன்; ஆ, இத்தன்மை யிருவர்க்குங் கிடைக்கத்தக்கதோ என்றவாறு.

எனவே, ஊழ்வினைப்பயத்தானன்றி முயற்சியாற் கிடைக்கத்தக்கதோ என்றவா றுயிற்று. மானுகரன், வரோதயன் இவ்விரண்டும் வடசொல் முடிபு; வினைமுற்று வினையெச்சமாய்த் திரிந்தது.

தான் - சந்தவின்பப் பொருட்டு வந்தது. ஆவி - வாவி. ஆனுது - நீங்காது. அல்லி - அகவிதழ். ஆ - அதிசயக் குறிப்பு. கிடைப்பது - அரிதாகிய பொருள்வாய்ப்பு. ஏகாரம் - ஈற்றசை. (ரு௬)

புகழ்தல் :

புகழ்தல் என்பது, தலைவன் தலைவியைப் புகழ்ந்து கூறல்.

அரும்பாம் அளவில் தனத்தொடல் வாயல ராமளவில்
கரும்பா மொழிவத னத்தொடவ் வாய்களி யானைசெம்பொன்
தரும்[1]பாரி வாணன் தமிழ்த்தஞ்சை யான்நரி யாரின்முன்செய்
பெரும்பாவ மல்லது நீர்நின்ற பேறல்லி பெற்றிலையே.

(இ - ள்.) அகவிதழை யுடைய தாமரையே, நீ அரும்பாகுங்காலம் கரும்பையொத்த மொழியையுடையாளது தனத்துக்கொப்பாகாய்; அலராகுங் காலத்து முகத்தோடொப்பாகாய்; களித்தயானையும் செம்பொன்னும் நாவலர்க்குத்தரும் பாரியென்னும் வள்ளலுக் கொப்பான தமிழ்த்தஞ்சை நகரையுடைய வாணனுக்குப் பகைவரைப் போல முன்செய்த பெரும் பாவமல்லது, நீரிலே தவப் பேறு பெற்றிலையாயினை என்றவாறு.

எனவே, தலைவியைப் புகழ்ந்தவாருயிற்று. தனம் - முலை. வதனம் - முகம். பாரி - ஒர் வள்ளல். நரியார் - பகைவர். அல்லி - அண்மைவிளி; ஆகுபெயர். (ரு௭)

ஆயத்துய்த்தல் :

ஆயத்துய்த்தல் என்பது, ஆயக்கூட்டத்துத் தலைவியைச் செலுத்தல்.

மேவிக் கலைக்கட லென்புலன் மீனுண்டு மீண்டுவந்தென்
ஆவிக் கமலத் தமரன்ன பேநின் அயில்விழிபோல்
வாவிக் கயலுக ளுந்தஞ்சை வாணன் வரையினுடன்
கூவிக் கயங்குடை நின்குயி லாயங் குறுகுகவே.

---

1. பாரி இன்னர் என்பதனைச் சிறு பாணுற்றுப் படையுள், 'சுரும்புண - நறுவீ உறைக்கும் நாக நெடுவழிச், சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய, பிறங்குவெள் அருவி வீழுஞ் சாரற், பறம்பிற் கோமான் பாரியும்' என்றதனும் அதற்கு நச்சினர்க் கினியர் கூறிய உரையானும் உணர்க.

(இ-ள்.) கலையாகிய கடலில்மேவி, என்னறிவாகிய மீனையுண்டுபோய் மீண்டுவந்து, என்னுயிராகிய கமலத்திற் குடியாக அமர்ந்திருக்கும் அன்னமே! நின்னுடைய கூரிய கண்போல வாவியிற் கயல்கள் புரளுந் தஞ்சைவாணன் மலையில் எதிர் கூவிக் கயத்துட் குளித்து விளையாடும் நின்னுடைய குயிற்கூட்டம்போன்ற ஆயக்கூட்டத்திற் கூடுக என்றவாறு.

'கலைக்கடல்மேவி' என மாறுக. புலன் - அறிவு. கலை கடலாகவும், புலன் மீனாகவும், அதனை யுண்ணுந் தலைவி அன்னமாகவும், அவ்வன்னமிருக்கும் உயிர் கமலமாகவும் உருவகஞ் செய்யப்பட்டன. 'மீண்டு வந்து' என்பதனால், போய் என்ற சொல்வருவிக்கப்பட்டது. இயற்கைப்புணர்ச்சி புணர்ந்து இடந்தலைப்பாட்டில் வந்தமையால் போய்மீண்டுவந்தெனக் கூறியது.

அயில் - கூர்மை. விழி - கண். 'வாவி' என்புழி ஏழனுருபு தொக்கது. கயல் - மீன். 'கயல்போல்விழி' என்னாது, 'விழிபோற் கயல்' என்றது,

'பொருளது புணர்வே புணர்ப்போன் குறிப்பின்
மருளற வரூஉ மரபிற் றென்ப.'

என்னும் உவமவியற்சூத்திரத்தான் இன்னது பொருளென்றும், இன்னது உவமையென்றுங் கூறத்தக்கதில்லை. பொருளும் உவமமும் புணர்க்கும்புலவனால் எவ்வாறு செய்யப்பட்டதோ அவ்வாறு இயையுமென்று கொள்க. இதனை இயலுடையார் விபரீத வுவமையென்ப. உகளுதல் - பிறழ்தல். 'அலர்த்தேன் குதிக்க வாவிக் கயலுகளும்' என்று பாடமோதுவாரும் உளர். வரை - மலை. உடன்கூவுதல் - எதிர்கூவுதல். குடைதல் - குளித்தல். குயிலாயம் - உவமைத்தொகை. குறுகல் - கூடுதல்.

'தந்ததெய்வந் தருமெனச் சேறல்' ஒன்றும் தெய்வந் தெளிதற் குரித்து; 'காண்டல்,' 'முயங்கல்,' 'புகழ்தல்' மூன்றும் கூடற் குரிய; 'ஆயத்துய்த்தல்' ஒன்றும் விடுத்தற்குரித்து. (௩அ)

இடந்தலைப்பாடு முற்றிற்று.

இரண்டாநாள் இடந்தலைப்பாட்டிற் கூடினரென் றுணர்க.

## அ. பாங்கற் கூட்டம்

அஃதாவது மூன்ரு நாள் பாங்கனுற் கூடுங் கூட்டம்.

[1] ' சார்தல் கேட்டல் சாற்றல் எதிர்மறை
நேர்தல் கூடல் பாங்கிற் கூட்டலென்
ருங்கெழு வகைத்தே பாங்கற் கூட்டம்.'

என்னுஞ் சூத்திர விதியாற் **பாங்கற் கூட்டம்** எழுவகையினை யுடைத்து என்பது.

**தலைவன் பாங்கனைச் சார்தல் :**

தலைவன் பாங்கனைச் சார்தல் என்பது, தலைவன் இவ்வேட்கை நோய் பாங்கனு லன்றித் தீராதென் றெண்ணிப் பாங்கனைச் சார்தல்.

புனையாழி அங்கைப் புயல்வளர் பாற்கடற் பூங்கொடிவாழ்
மனையா கியதஞ்சை வாணனென் னுரென மற்றிங்ஙனே
இனையா தெழுமதி நன்னெஞ்ச மேநமக் கின்னுயிரே
அனையான் அருட்புன லாலனங் கானலம் ஆற்றுதற்கே.

(இ - ள்.) நல்ல நெஞ்சமே, நமக்கினிய உயிர்போன்ற உயிர்ப்பாங்கன் அருட்புனலால் காமாக்கினியை அவித் தற்கு, சக்கரத்தை யணியும் அழகிய கையினையுடைய புயல் போன்ற திருமால் கண்வளரும் பாற்கடலைப் பிறந் தகமாக வுடைய பூங்கொடிபோன்ற திருமகட்கு வாழ்க்கை மனையாகிய தஞ்சைமா நகரையுடைய வாணனுக்கு ஒன்னார் போல இவ்விடத்தில் வருந்தாது, அவன் பக்கற் சேர எழுவாயாக என்றவாறு.

'ஆழி புனை' என மாறுக. புயல் - மேகம். 'ஆழியங்கைப் புயல்' என்பதும், 'பாற்கடற் பூங்கொடி' என்பதும் சிறப்புருவகம். 'பூங்கொடி வாழ்மனை யாகிய தஞ்சை' எனவே, திருமகள் பிரியாத தஞ்சையென்ருயிற்று. ஒன்னார் - பகைவர். மற்று - அசை. இனை தல் - வருந்துதல். மதி - முன்னிலையசை. அருட்புனல் - அருள் நீர். அனங்கானலம் - காமாக்கினி ; வடசொல் முடிபு. (கூக)

---

1. அகப்பொருள் விளக்கம், களவியல் - உ௦.

### பாங்கன் தலைவனை உற்றது வினுதல் :

பாங்கன் தலைவனை உற்றது வினுதல் என்பது, பாங்கன் தலைவனது உள்ளமும் தோளும் வாடிய வேறுபாட்டைக் கண்டு நினக்கு இவ்வேறுபாடுற்ற காரணம் என்னவென்று வினுதல்.

வலம்புரி போற்கொடை வாணன்தென் மாறை மழைவளர்பூஞ்
சிலம்புறை சூர்வந்து தீண்டின போலொளி தேம்பியிவ்வா
றுலம்புனை தோளுநின் உள்ளமும் வாடி யுருகிநின்று
புலம்புவ தென்னைகொல் லோசொல்ல வேண்டும் புரவலனே.

(இ - ள்.) புரவலனே! சங்கநிதிபோற் கொடுக்கும் கொடையையுடைய வாணனது தென்மாறை நாட்டின்கண் உள்ள முகில் கண்வளரும் பொலிவினையுடைய சிலம்பில் உறையுஞ் சூர் என்னுந் தெய்வப் பெண் வந்து தீண்டியது போல, நின் திருமேனி ஒளிதேய்ந்து, திரண்ட கல்லுப் புனைந்தா லொக்கும் நின்னுடைய தோளும் உள்ளமும் வாடி உருகிநின்று இவ்வாறு புலம்புவது என்னே சொல்ல வேண்டும் என்றவாறு.

வலம்புரி - ஆகுபெயர். மழை - முகில். வளர்தல் - கண் வளர்தல். பூ - பொலிவு. சிலம்பு - மலை. சூர் - ஓர் தெய்வப் பெண். தேம்பல் - தேய்தல்.

[1] 'தேம்பலஞ் சிற்றிடை ஈங்கிவ டீங்கனிவாய்.'

என்றார் பிறரும். உலம் - திரண்டகல். கொல், ஓ என்பன அசைநிலை. (சப)

### தலைவன் உற்றதுரைத்தல் :

தலைவன் உற்றது உரைத்தல் என்பது, இவ்வாறு வினவிய பாங்கற்குத் தலைவன் தனக்குற்ற வேறுபாட்டின் காரணத்தைக் கூறல்.

மலைமுழு துங்கொற்றம் வைக்கின்ற வாணன்தென் மாறைநண்பா
சிலைமுழு துஞ்சுற்று முற்றுமெய் யாதிற்பச் செந்நிறத்தே
கொலைமுழு துங்கற்ற கூரிய வாளி குளிப்பஇன்றென்
கலைமுழு தும்பட்ட தாலொரு மான்முடிக் கண்ணியிலே.

---

1. திருக்கோவையார் - கக.

(இ - ள்.) எண்டிசையின் மலைமுற்றும் வெற்றிக் கொடியை வைக்கின்ற வாணன் தென்மாறை நாட்டிலிருக்கின்ற பாங்கனே ! புருவமாகிய சிலைமுழுதும் சுற்றுகிய திசைமுற்றும் எய்யாநிற்ப, கொலைத்தொழின் முற்றுங் கற்ற கண்ணுகிய கூரியவாளிகள் எனது செவ்விதாகிய நெஞ்சிடத்திலே மூழ்க, அப்போது என்னெஞ்சி லிருக்கின்ற கலையறிவு முற்றும் ஒருபெண் வைத்த தலைக்கண்ணியிற் பட்டது என்றவாறு.

'மலை முழுதுங் கொற்றம்' எனவே எண்டிசைக்கும் அவாய் நிலையான் வந்தது. கொற்றம் - ஆகுபெயர். சிலை - ஆகுபெயர். உலகிற் சிலை நடுநிலையி லெய்யும்; இச்சிலை அவ்வாறன்றிச் சிலை முற்று மெய்யா நின்ற தென்று கருவி கருத்தாவாகக் கூறியது. விற்றேன்றுந் திசையலன்றித் திசை யெட்டினும் எய்கின்றமையான் சுற்றுகிய திசைமுற்றும் என்றது, எண்திசையினும் இருந்து வரினுந் தைப்பது நெஞ்சிடத்தே யெனக் கொள்க.

செந்நிறம் - மார்பு. கொலை முற்றும் - கொலைத் தொழில் முற்றும். வாளி - ஆகுபெயர். குளிப்ப - மூழ்க. கலை - ஆகுபெயர். ஒரு மானுக்கு முடிபோட்ட கண்ணியிலே கலையெல்லாம் பட்டதென ஒரு பொருள் தோன்றியவாறு காண்க. ஆல் - அசை. கண்ணி - விலங்குகள் புட்கள் அகப்படுத்துங் கருவிக்கும், மாதர் குழலிற் சூடுங் குறுங்கோதைக்கும் பொதுவாகலான், இவ் விரண்டுவகைப் பொருளும் தோன்ற நின்றது. (சக)

### கற்றறிபாங்கன் கழறல் :

கற்றறிபாங்கன் கழறல் என்பது, வேதாகம புராணம் யாவுங் கற்றறிந்த பார்ப்பனப் பாங்கன் இடித்துக் கூறல். இடித்துக் கூறல் - உறுதிச்சொல் லுரைத்தல்.

தருகற் பகமன்ன சந்திர வாணன் றடஞ்சிலம்பில்
முருகக் கடவு ளனையவெற் பாமுகி லும்பிறையுஞ்
செருகக் கிளர்வரை வந்தவோர் பேதைக்குன் சிந்தையெல்லாம்
உருகக் கலங்கினை நீதகு மோமற் றுனக்கிதுவே.

(இ - ள்.) இரவலர் யார்வந்து கேட்பினும் கேட்பவை யெல்லாங் கொடுக்குங் கற்பகத் தருவையொத்த சந்திரற்கு மகனாகிய வாணனது தடஞ் சிலம்பிலிருக்கும் முருகக்

கடவுளை யொக்கும் வெற்பனே! நீ முகிலும் பிறையுஞ் செருகும்படி யெழுந்த வரையிடத்தில் வந்த ஓர் பெண்ணுக்கு நின் சிந்தையெல்லாம் உருகக் கலங்கினை, உனக்கிது தகாது என்றவாறு.

**சந்திரன்** - வாணனுக்குத் தந்தை. தடஞ்சிலம்பு - பெரிய மலை. செருகல் - செருகுதல்.

[1] 'துவர முடித்த துகளறு முச்சிப்
பெருந்தண் சண்பகஞ் செரீஇக் கருந்தகட்,
டுளைப்பூ மருதின்'

எனத் திருமுருகாற்றுப் படையுள், செரீஇ என்பதற்குச் செருகியென உரை கூறியவாறு கண்டுகொள்க. கிளர்தல் - எழுதல். வரை - மலை. ஓகாரம் - எதிர்மறை. மற்று - அசை. 'இது தகுமோ' என இயையும். (சஉ)

**கிழவோன் கழற்றெதிர்மறுத்தல்:**

கிழவோன் கழற்றெதிர் மறுத்தல் என்பது, பாங்கன் கூறிய கட்டுரையைத் தலைவன் மறுத்துக் கூறல்.

**மாலாய் மதம்பொழி வாரண வாணன்றென் மாறையன்னூர்**
**சேலார் கருங்கண்ணுஞ் செங்கனி வாயுஞ் சிறியநுண்ணேர்**
**நூலார் மருங்கும் பெருந்தன பாரமு நும்மையன்றி**
**மேலா னவருங்கண் டாலுரை [2]யாரிந்த வீரங்களே.**

(இ-ள்.) மயக்கமாய் மதத்தைப் பொழியும் வாரணத்தையுடைய வாணனது தென்மாறைநாடு போல்வாரது சேல் போன்ற கருங் கண்ணும், செங்கனிபோன்ற வாயும், சிறுமையாகிய நுண்ணிய அழகாகிய நூல்போன்ற இடையும், பெரிய தனபாரமும், கண்டார் நெஞ்சினை உருக்குந் தன்மையில் வலிய என்பதனை யெளியவாகக் கூறினீர்; நும்மையன்றி மேலானவருங் கண்டால் உரையார்கள் இத்தன்மையாகிய வீரமொழிகள் என்றவாறு.

---

1. திருமுரு. உசு, உஎ, உஅ. (வே-பா.) 2. யாரின்ன.

எனவே, நீரும் காணாத தன்மையால் இவ்வாறு கூறினீர் என்று கூறியவாறாயிற்று. மால் - மயக்கம். வாரணம் - யானை. சேல் - கயல். 'செங்கனி வாய்' என்புழி உவமைத்தொகை. ஏர்- அழகு. 'மேலானவரும்' என்புழி உம்மை சிறப்பும்மை; ஏனைய எண்ணின்கண் வந்தன. ஆர் என்பது ஒப்பு. பாங்கன்-முன்னிலை யெச்சம். (சகூ)

## கிழவோற் பழித்தல் :

கிழவோற்பழித்தல் என்பது, அவ்வாறு கூறிய தலைவனைப் பாங்கன் பழித்துக் கூறல்.

சூரார் சிலம்பிற் சிலம்பிமென் னூல்கொண்டு சுற்றவெற்றிப்
போரார் களிறு புலம்பிநைந் தாங்கொரு பூவைகொங்கை
வாரா லணைப்ப வருந்தினை நீதஞ்சை வாணன்வெற்பா
ஓராழி சூழுல கத்தெவ ரேநின்னை யொப்பவரே.

(இ - ள்.) தஞ்சைவாணன் வெற்பி லிருப்பவனே! சூர்பொருந்திய மலையினிடத்துச் சிலம்பியானது மெல்லிய நூலைக்கொண்டு சுற்ற, மாற்றார் படையிலே வெற்றிப்போர் செய்கின்ற யானையானது புலம்பி நைந்தாற் போலும், ஒரு பெண்ணினது வார்பொருந்திய கொங்கையாலணைப்ப நீ வருந்தினை; ஆதலால், ஒப்பற்ற ஆழி சூழ்ந்த வுலகத்தில் நின்னை யொப்பாவார் யார் என்றவாறு.

சூர்-தெய்வப் பெண்களில் ஓர் சாதி. சிலம்பு-மலை. சிலம்பி - சிலந்தி. களிறு - யானை. ஆங்கு - உவமையுருபு. பூவை - ஆகு பெயர். 'வார்க் கொங்கை' எனமாறுக. ஆழி - கடல். 'சிலம்பி மென் னூல்கொண்டு சுற்ற வெற்றிப் போரார்களிறு புலம்பி நைந் தாங்கு' என்பது அந்நூற்றளையை நீங்கி வருதற்கு அரிதாய்ச் சங்கிலித்தளைக்கு நில்லாத தன் வலியிழந்து புலம்பி நைந்தாற் போல; கடல்போல் வருகின்ற நால்வகைப் படையும் வென்று மனத்திற் கலங்காத வீரம், ஒரு பெண்வேட்கையாற் கலங்கி வருந் தினை, நின்னை யொப்பாவார் யார்? எனக் குறிப்பாற் பழிப்புத் தோன்றியவாறு உணர்க. (சச)

### கிழவோன் வேட்கை தாங்கற் கருமை சாற்றல் :

கிழவோன் வேட்கை தாங்கற்கருமை சாற்றல் என்பது, தலைவன் நீ பழிக்கின்ற என்னுள்ளம் தேறுதற்கு வேட்கை என்னால் தாங்கமுடியாதென்று கூறுதல்.

பொறைகொண்ட தாமரைப் போதன்ன கொங்கையும் பொங்கரிசேர்
கறைகொண்ட வாளன்ன கண்களுங் கொண்டொரு கன்னிதெவ்வைத்
திறைகொண்ட வாணன் செழுந்தஞ்சை சூழுஞ் சிலம்பிலின்றென்
நிறைகொண்ட வாறறி யாதிக ழாநிற்றி நீயுநின்றே.

(இ - ள்.) பாரங்கொண்ட தாமரை முகையன்ன கொங்கையும், மிகுந்த அரிபொருந்திய, மாற்றாரைப் பொருது அவருடற் குருதிக்கறைகொண்ட வாளையொத்த கண்களுங்கொண்டு ஒரு கன்னியானவள், பகையைத் திறைகொண்ட வாணனது செழுமையாகிய தஞ்சை மாநகரைச் சூழும் சிலம்பிடத்து, இன்று என்னுடைய நிறையைக் கவர்ந்தவாறறியாது, நீயும் என் முன்னின்று இகழா நின்றாய், யான் என் செய்வேன்! என்றவாறு.

பொறை - பாரம். போது - முகை ;

[1] 'காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலருமிந் நோய்.'

என்பதனான் உணர்க.

பொங்குதல் - மிகுதல். அரி - செவ்வரி. கறை - இரத்தம். தெவ் - பகை. திறை - வெற்றி. நிறை என்பது அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி யென்னும் மேன்மக்கள் குணங்களுள் ஓர் குணம் ; அஃதாவது, மனத்தின்கண் பிறரறியாமை அடக்கத்தக்க காரியத்தை யடக்குதல்.

[2] 'நிறை யெனப்படுவது மறைபிற ரறியாமை'

என்றார் பிறரும். நீயும் என்னும் உம்மை சிறப்பும்மை. பாங்கன் - முன்னிலையெச்சம். (சுகு)

---

1. குறள். பொழுதுகண் டிரங்கல் - எ.
2. கலித். நெய்தல் - கசு.

## பாங்கன் தன்மனத் தழுங்கல்:

பாங்கன் தன் மனத்தழுங்கல் என்பது, அதுகேட்ட பாங்கன் எம்பெருமான் ஆற்றனுப் இவ்வாறு கூறினால் யான் அதற்குத்தான் என் சொல்வேன் என்று தன்னுள்ளே யிரங்குதல்.

சீதள வாரங் கமழ்தஞ்சை வாணன்தென் மாறையன்னாள்
காதள வாவெங் கடுவள வாவொளிர் காவியந்தண்
போதள வாவிழி யென்றுமென் னாசைப் புறத்தளவா
தூதள வாமுலை யென்றுமென் நாமினிச் சொல்லுவதே.

(இ - ள்.) எம்பெருமான், குளிர்ச்சி பொருந்திய சந்தனங் கமழப்பட்ட தஞ்சைவாணன் தென்மாறை நாடு போல்வாளது கண்களைக் காதினாலும் அளவிட்டறியப் படா, வெவ்விய விடத்தினாலும் அளவிட்டறியப்படா, விளங்கப்பட்ட அழகிய குளிர்ந்த நீலப்போதினாலும் அளவிட்டறியப்படா என்று சொல்லும்; முலையை மலைபோல் வளர்ந்த என்னாசையிடத்தும் அளவிட்டறியப்படா, வல்லி னாலும் அளவிட்டறியப்படா என்று சொல்லும்; ஆதலால், நெஞ்சமே, நாம் இன்று சொல்லுவது என் என்றவாறு.

ஆரம் - மைந்தரும் மாதரும் மார்பினும் முலையினும் பூசுஞ் சந்தனம். கடு - விடம். காவி - நீலம். 'அந்தண் காவி' என மாறுக. புறம் - இடம். சூது - வல். இனி - இன்று. அளத்தல் - அறிதல்; அளவா - அறியப்படா.

காதைக் கடந்துபோதலான், 'காதளவா' என்றும், கடு உண்டாரைக் கொல்லும், அவ்வாறன்றிக் கண்டாரைக் கொல்லுதலான், 'கடு வளவா' என்றும், காவிப் பூவிற்குப் பார்த்தறியுங் குணம் இன்மையின், 'காவி யந்தண் போதளவா' என்றுங் கூறியது.

[1] 'காணிற் குவளை கவிழ்ந்து நிலனோக்கு
மாணிழை கண்ணொவ்வே மென்று.'

என்னுங் குறளினானுங் காவிக்குக் கண்டறியுங் குணமின்மை உணர்க.

ஆசையினும் முலை பெரிதாகலான், 'ஆசைப்புறத்தளவா' என்றும், வட்டங்கொண்டு குவிந்து வண்ணம்பொதிந்திருத்தலான்,

1. குறள். நலம்புனைந்துரைத்தல் - ௪.

'சூதளவா' என்றுங் கூறியது. 'என்னும்' என்பது இரண்டும் இறுதிவிளக்கு. நெஞ்சம் - முன்னிலையெச்சம். (௭௬)

பாங்கன் தலைவனோ டழுங்கல்:

என்மே லறைவது யானிங்கு நின்செவிக் கென்சொலெல்லாம்
வன்மே லடர்கொங்கை காரண மாய்த்தஞ்சை வாணன்வெற்பா
கன்மே லறைகின்ற மென்முளை போலுங் கடல்வெதும்பில்
தன்மேல் விளாவவுண் டோதரை மேலொரு தண்புனலே.

(இ - ள்.) தஞ்சைவாணன் வெற்பனே, பேரின்பத் திற்குரிய நீ இச் சிற்றின்பத்திற்கு இத்தன்மையனுதல் தகாது என்று, சூதின்மேற் பகை நெருங்குங் கொங்கையினை யுடையாள் காரணமாக, இங்குக் கூறும் என் சொல் லெல்லாம் நின்காதுக்குக் கல்லின்மேல் அறைகின்ற மெல்லிய மூங்கிலின் முளைபோலுமாயின; யான் மேற் சொல்லுமாறு யாது? கடல் வெப்ப முறின் அவ்வெப்பம் மாற அக்கடன்மேல் விளாவுதற்குப் பாரிடத்து ஒரு தண்ணீருண்டோ என்றவாறு.

அறைதல் - சொல்லுதல். 'யானென் மேலறைவது' என மாறுக. வல் - சூது. அடர்தல் - நெருங்குதல். கொங்கை - ஆகுபெயர். அறைதல் - அடித்தல். முளை - மூங்கில். வெதும்பல் - வெப்பமுறல். தன், அடிச்சந்த நோக்கிவந்தது. தரை - பார். புனல் - நீர். (௭௭)

எவ்விடத் தெவ்வியற்றென்றல்:

எவ்விடத் தெவ்வியற்றென்றல் என்பது, எம்பெருமான் இவ் வாறு கூறியும் ஆற்றானாயினன், அதனால், தலைவியைக் கூடா தொழியின் இறந்துபடு மென்றுதேறி, தலைவனை நோக்கி நின்னாற் காணப்பட்ட உரு எவ்விடத்து எவ்வியலையுடையதென்று வினவுதல்.

முகத்திற் பகழி யிரண்டுடை யார்க்கிட மூரிமுந்நீர்
அகத்திற் பிறந்த அரவிந்த மோவடை யார்தமக்கு
மகத்திற் சனியன்ன சந்திர வாணன்தென் மாறைவெற்போ
துகத்திற் பகலனை யாய்தன்மை யேது நுவலெனக்கே.

(இ - ள்.) நின்னாற் காணப்பட்ட முகத்தில் அம்பு போன்ற கண் இரண்டுடையார்க்கு இருப்பிடம், பெருமை பொருந்திய கடலகத்திற் பிறந்த தாமரையோ? பகைவர் தமக்கு மகநாளில் வந்த சனியையொக்கும் சந்திரவாணன் தென்மாறை வெற்போ? உழும் ஏர்ப்பெயலிற் பிணித்த நுகத்தின் நடுப்போன்ற தலைவனே! அவர்க்கு இலக்கணம் யாது? அறிய எனக்குச் சொல்வாயாக என்றவாறு.

பகழி - ஆகுபெயர். மூரி - பெருமை. முந்நீர் - கடல். அரவிந்தம் - தாமரை. அடையார் - பகைவர்.

மகத்திற் சனி வருங்கால் உலகில் தீமை பயத்தலால், 'அடையார் தமக்கு மகத்திற் சனியன்ன சந்திரவாணன்' எனக் கூறியது;

[1] 'மகத்திற் புக்கதோர் சனியெனக் காணாய்'

என்று, சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஓதியவாற்றானும் உணர்க. 'நுகத்திற் பகலனையாய்' என்றது, நடுவன்றி ஓர்பக்கஞ் சாயின் அவ்விடத்திற் பாரமுறைக்கும், நடுவாகின் சமனாயிருக்கும் ஆதலான், இவனும் நடுவுநிலைமையை யுடையவன் என்று கூறப்பட்டது.

தன்மை - இலக்கணம். நுவலல் - சொல்லுதல். ஓகாரம் இரண்டும் வினா. (சஅ)

அவன:. திவ்விடத் திவ்வியற்றென்றல் :

அவன் அஃது இவ்விடத்து இவ்வியற்றென்றல் என்பது, தலைவன் என்னாற் காணப்பட்ட உரு இவ்விடத்து இவ்வியலையுடையது என்று பாங்கற்குக் கூறல்.

கனமே குழல்செங் கயலே விழிமொழி கார்க்குயிலே
தனமே முகையென் தனிநெஞ்ச மேயிடை தன்பகைக்கு
வனமே யருளிய வாணன்றென் மாறை மணிவரைசூழ்
புனமே இடமிங்ங னேயென்னை வாட்டிய பூங்கொடிக்கே.

(இ - ள்.) இவ்வாறு என்னை வாட்டிய பூங்கொடி போல்வாட்கு இருப்பிடம், தன் பகைவர்க்குக் காடே யிடமாகக் கொடுத்த வாணனது தென்மாறை நாட்டு

1. திருவொற்றியூர்த் தேவாரம், செ. க.

முத்தத்தையீனும் மூங்கில் சூழ்ந்த தினைப்புனமே ; குழல் முகிலே ; விழி செவ்வரி பொருந்திய கயலே ; மொழி கருங்குயிலே ; தனம் முகையே ; இடை என் தனிமையாகிய நெஞ்சமே என்றவாறு.

கனம் - முகில். கயல் - மீன். தனம் - முலை. முகை - மொக்குள். மணி - முத்தம். வரை - மூங்கில். புனம் - தினைப்புனம். இங்ஙனம் - இவ்வாறு. பூங்கொடி - ஆகுபெயர்.

'கார்க்குயிலே மொழி' எனவும், 'முகையே தனம்' எனவும் மாறுக. 'இங்ஙனே' என்புழி ஏகாரமும் 'பூங்கொடியே' என்புழி ஏகாரமும் ஈற்றசை ; ஏனைய தேற்றம்.

'தனிநெஞ்சம்' என்றது வேட்கைப் பாரத்தைச் சுமந்து நைந்த தனால் அந்நெஞ்சம், முலைப்பாரத்தைச் சுமந்து நைந்த இடைக்கு உவமமாயிற்று. வரை கண்களை யுடைமையின் ஆகுபெயரான் மூங்கிற்குப் பெயராயிற்று. வரை மலையாகாதோ எனின், ஆகாது. என்னை, மேற்கூறும் பாங்கன் இறைவனைத் தேற்றுஞ் செய்யுட்கண், 'கழைவளர் சாரல்' என்றமையான், இவ்விடத்து மூங்கிலென்றே பொருள்கூற வேண்டுவதாயிற்று ;

[1] 'மால்வரை நிவந்த சேணுயர் வெற்பின்'

எனக் கூறியதனான் உணர்க. (௬௧)

பாங்கன் இறைவனைத்தேற்றல் :

பாங்கன் இறைவனைத் தேற்றல் என்பது, இவ்வாறு நீ வருந்தா தொழிக, நீ சொன்ன குறியிடத்துச் சென்று தலைவியைக் கண்டு யான் வருகின்றேன் என்று தேற்றுதல்.

மழைவளர் மாளிகை மாறை வரோதயன் வாணன்வெற்பின்
இழைவளர் வார்முலை யேரிளந் தோகையை யிக்கணம்போய்க்
கழைவளர் சாரலிற் கண்டுனை யான்வந்து காண்பளவும்
தழைவளர் தாரண்ண லேதணி வாய்நின் தகவின்மையே.

(இ - ள்.) மலரோடுந் தழைகலந்து நீண்ட மாலையை யுடைய இறைவனே ! முகில் துஞ்சும் மாளிகை நெருங்கிய மாறைநாட்டு வரோதயனாகிய வாணனது வெற்பில், அணிக்

1. திருமுரு - கஉ.

கியதுங் கச்சுப் பொருந்திய மூலைபமழகுடைய இளந்தோகை போல்வாளை நீ கூறிய குறியிடமாகிய மூங்கில் வேலியாய் வளர்ந்த புனத்தில், இக்கணம் போய்க் கண்டு உனை யான் மீண்டுவந்து காணுமளவும் நினது வருத்தம் ஒழிவாய் என்றவாறு.

மழை - முகில். இழை - ஆபரணம். வார் - கச்சு. ஏர் - அழகு. தோகை - ஆகுபெயர். சாரல் - ஆகுபெயர்; என்னை, தலைவன் குறி கூறியது, 'புனமே யிடம்' என்றதனால் என்று உணர்க. இங்ஙனம் மூங்கில் வேலிப்புனம் என்று அதிகாரப்படக் கூறியவாறென்னை யெனின், இக்கிளவிக் கடுத்த கிளவி 'குறிவயிற்சேறல்' என்றலின், தலைவி யிருக்குமிடமுங் குறியென்றலின், அக்குறியிற் குறியிடமெல்லாம் ஒன்றாய் வருதல் விதியாதலான், 'மூங்கிற்புனம்' என்று அதிகாரப்பட்டவாறு உணர்க. அன்றியும் வரைவு கடாவுதலில், [1] 'இரவு வருவானைப் பகல் வருகென்றல்' என்னுங் கிளவிச் செய்யுளில், 'கழைவிளை யாடுங் கடிபுனங் காத்தும்' என்று பாங்கி கூறிய வதனானும், இச்செய்யுளில் புனங் கூறுமிட மெல்லாம் மூங்கிலடையாளமன்றி வேறோர் அடையாளங் கூறுவது இன்றெனஉணர்க.

தார் - மாலை. மலராற் கட்டுதல் மாலையாகலான் மலர் கூறுது, தழை யிடையிடையே கட்டுதலின் தழை கூறினர். அண்ணல் - இறைவன். தணிதல் - ஒழிதல். தகவின்மை - வருத்தம். முன் வளர் இரண்டுங் கண்வளர்தல். பின் வளர் இரண்டும் நீடல். 'கழைவளர் சார லிக்கணம் போய்' என மாறுக. 'மீண்டு' என்பது அவாய்நிலை யான் வந்தது. (௫௦)

### குறிவயிற் சேறல்:

குறிவயிற்சேறல் என்பது, தலைவன் கூறிய குறியிடத்துத் தலைவியைக் காணப் பாங்கன் போதல்.

பாரித்த திண்மையெம் மண்ணலு ணீரைப் பருகிநின்று
பூரித்த செவ்விள நீர்களு நாங்கியப் பூங்கொடிதான்
வாரித்த லம்புகழ் வாணன்றென் மாறை வரைப்புனஞ்சூழ்
வேரித்த டம்பொழில் வாய்விளை யாடுங்கொல் மேவிநின்றே.

(இ - ள்.) நெஞ்சமே! தலைவன் கூறிய அப்பூங்கொடி தான், கடல் சூழ்ந்த நிலவுலகம் புகழும் வாணனது தென்

1. த - கோவை. செய்யுள் உ௬அ.

மாறைநாட்டு மூங்கில் வேலியை யுடைய தினைப்புனஞ் சூழ்ந்த மணம் பொருந்திய பெரிய சோலையிடத்துப் பொருந்தி நின்று, வீரமில்லாதார்க்கும் வீரத்தைப் பிறப்பித்த எம் அண்ணலது உள்ளத்துள்ள கலையறிவாகிய நீரைப்பருகி, நிலைகொண்டு விம்மிய செவ்விளநீர் போன்ற முலைகளையுந் தாங்கி, விளையாடுமோ என எண்ணிக்கொண்டு சென்முன் என்றவாறு.

பாரித்தல் - பிறப்பித்தல். திண்மை - வீரம். உண்ணீர் - உள்ளத்துள்ள கலையறிவு. பூரித்தல் - விம்முதல். உம்மை - அசை. வாரி-கடல். தலம் - நிலவுலகம். வரை - மூங்கில். வேரி - மணம். தடம் பொழில் - பெரியசோலை. கொல் - ஐயம். நெஞ்சம் - முன்னிலை யெச்சம். 'வரைப்புனம்' என்பது வரைக்கட்புனம் என அமையாதோ வெனின், இவ்விடத்து இவ்வியற்றென்னுஞ் செய்யுளில் 'மணிவரை சூழ்புனம்' எனவும், பாங்கன் இறைவனைத் தேற்றுஞ் செய்யுளில் 'கழைவளர்சாரல்' எனவும், இச் செய்யுளில் 'வரைப் புனம்' எனவும் மூங்கிலே யதிகாரப்பட்டு வருதலின் மலையாகா தென்க. (கூக)

இறைவியைக் காண்டல்:

கானேய் அளகங் கரும்புய லேயியல் கார்மயிலே
மானே விழிமுக மாமதி யேதஞ்சை வாணன்வெற்பில்
தேனேய் தொடையலச் சேயனை யான்சொன்ன சேயிழையாள்
தானே இவளிது வேஇட மாகிய தண்புனமே.

(இ - ள்.) நெஞ்சமே! தஞ்சைவாணன் வெற்பிடத் திருக்கும் முருகக்கடவுளனைய வண்டு பொருந்திய மாலையையுடைய எம் இறைவன் சொன்ன இடமாகிய தண் புனம் இதுவே; கருமையாகிய புயலே மணம் பொருந்திய அளகபாரமாயிருக்கின்றது; கார்காலத்து மயிலே இயலா யிருக்கின்றது; மானே விழியாயிருக்கின்றது; நிறை மதியே முகமா யிருக்கின்றது; ஆதலால், அச் சேயிழை யாள்தான் இவளே என்றவாறு.

கான் - மணம். ஏய்தல் - பொருந்துதல். இயல் - சாயல். கார் - கார்காலம். விழி - கண். மாமதி - நிறைமதி. தேன் - வண்டு. தொடையல் - மாலை. சேய் - முருகக்கடவுள்.

'கரும்புயலே கான்ஏயளகம்' எனவும், கார்மயிலேயியல்' எனவும், 'மதியே முகம்' எனவும், 'தஞ்சைவாணன் வெற்பிற்சேய்' எனவும் மாறுக. ஈற்றசை ஏகாரமொன்றும் ஒழித்து, ஏனைய ஏகாரமெல்லாந் தேற்றத்தின்கண் வந்தன. நெஞ்சம் - முன்னிலை யெச்சம். 'அச்சேயனையான் சொன்ன' என்பது இடைநிலை விளக்கு. (௫௨)

இகழ்ந்ததற்கிரங்கல் :

இகழ்ந்ததற்கு இரங்கல் என்பது, தலைவி பேரழகைக்கண்டு பாங்கன் காணு முன்னம் எம்பெருமானை அறிவின்றி இகழ்ந்தனம் என்று இரங்கிக்கூறல்.

கொலைகா லயிற்படை நேரியர் கோன்அகங் கோடவங்கைச்
சிலைகால் வளைத்துத் திருத்திய வாணன்தென் மாறைவெற்பில்
முலைகால் கொளக்கண் டிளைத்தநுண் நூலிடை முற்றிழைகண்
வலைகால் பிணிப்பவந் தார்வருந் தாரல்லர் மாலுழந்தே.

(இ - ள்.) நெஞ்சமே! கொல்லுந் தொழிலை உமிழ்கின்ற வேற்படையையுடைய சோழனது உள்ளம் மாறுபட அழகிய கைச்சிலையைக் காலால் வளைத்து, அம்மாறுபாட்டைத் திருத்திய வாணனது தென்மாறை வெற்பிடத்து, முலையிடங் கொள்ளக் கண்டதனால் இளைத்த நுண்ணிய நூல்போன்ற இடையையும், அணியும் அணியினிற் குறைவின்றி முற்றுப்பெற்ற அணியையும் உடையாளது கண்ணாகிய வலை காலிற் பிணிப்ப வந்தவர் ஆசைநோயை அனுபவித்து வருந்தாரல்லர் என்றவாறு.

எனவே, வருந்துவா ரென்றவா றாயிற்று. கொலை - ஆகுபெயர். காலுதல் - உமிழ்தல். அயிற்படை - வேற்படை. நேரியர் கோன் - சோழன். அகம் - உள்ளம். கோடல் - மாறுபடல். அம் - அழகு. 'கால்வளைத்து' என்புழி வேற்றுமைத் தொகை. திருத்தல் - செவ்விதாக்கல். கால்கொளல் - இடங்கொளல். முற்றிழை - அன்மொழித்தொகை. பிணித்தல் - கட்டல். உழத்தல் - அனுபவித்தல் :

[1] 'கடலன்ன காமம் உழந்து மடலேறாப்
பெண்ணிற் பெருந்தக்க தில்.'

என்னுங் குறளானு முணர்க. நெஞ்சம் - முன்னிலையெச்சம். (௫௩)

1. குறள். நாணுத்துறவுரைத்தல் - ௭.

### தலைவனை வியத்தல் :

தலைவனை வியத்தல் என்பது, பாங்கன் தலைவி கண்வலையிற் சிக்கி அத்தடையோடுந் தலைவன் நம்மிடத்து வந்தது வியப்பென்று அதிசயித்துக் கூறல்.

தலங்கா வலன்தஞ்சை வாணன்முந் நீர்பொருந் தண்பொருந்தத்
திலங்கார வல்வடக் கொங்கைவெற் பாலிணை நீலவுண்கண்
பொலங்காம வல்லி கடைந்தவப் போது புடைபெயர்ந்து
கலங்கா திருந்ததெவ் வாறெம்பி ரான்தன் கலைக்கடலே,

(இ - ள்.) நெஞ்சமே! இரண்டு நீலம்போன்ற உண் கண்ணையுடைய பொன்மயமாகிய காமவல்லிக்கொடி போன்றவள், உலகிற்குக்காவலனாகிய தஞ்சைவாணனது கடலையெதிருந் தண்ணிய பொருநையாற்றின்கண் பிறந் தொளிரும் முத்துக்களைக்கோத்த வலிய வடம்பூண்ட கொங்கையாகிய வெற்பினாலே கடைந்த அப்போது, அசைந்து எம்பிரான்றன் கலைக்கடலானது கலங்காதிருந்த தெவ்வாறு என்றவாறு.

எனவே, எனக்கிது வியப்பாயிருந்ததென்றவா றாயிற்று. தலம் - உலகு. பாதலநீர், பூதலநீர், மீதலநீர் இம்மூன்று நீருங் கூடியதால், கடல் முந்நீர் எனப் பெயராயிற்று. பொருதல் - எதிர்தல்.

பொருந்தம் - பொருநையாறு: பொருந் என்னும் தொழிற் பெயர் அஃறிணை யாதலின் ஐகாரவீறு பெற்றது. ஆரம் - முத்து. பொருநையாறுங் கடலும் எதிர்ந்து கலந்தவிடத்துப் பிறத்தலான் 'பொருந்தத்து இலங்கு ஆரம்' என்றார். பொலம் - பொன் ;

[1] 'பொன்னென் கிளவி யீறுகெட முறையின்
முன்னர்த் தோன்றும் லகார மகாரம்
செய்யுண் மருங்கிற் றொடரிய லான.'

என்பதனாலறிக.

காமவல்லி - கற்பகத்திற் படருங் கொடி: ஆகுபெயர். கடைதல் - ஈண்டு அறிவைச் சுழலச்செய்தல். புடைபெயர்தல் - அசைதல். கலைக்கடல் - கல்வியறிவாகிய கடல். நெஞ்சம் - முன்னிலையெச்சம். (௩௪)

1. தொல். எழு. புள்ளிமயங்கியல் - ௬௧.

### தலைவியை வியத்தல் :

தலைவியைவியத்தல் என்பது, தலைவியைப் பாங்கன் வியந்து கூறல்.

வெங்கோல் மழைபொழி வானவர் போர்வென்ற மீனவர்தம்
செங்கோல் முறைமை செலுத்திய வாணன்தென் மாறைவெற்பில்
நங்கோன் மெலிய நலிகின்ற காமவெந் நஞ்சினைப்
பைங்கோல் மணிவளை யார்தணி யாரல்லர் பார்வைகொண்டே.

(இ - ள்.) நெஞ்சமே! வெவ்விய அம்புமாரியைப் பொழிகின்ற சேரரது போரை வென்ற மீனவருடைய நீதிமுறைமையை எண்டிக்குஞ் செலுத்திய வாணனது தென்மாறை வெற்பிடத்திருக்கின்ற நம் பெருமான் மெலிவடைய வருத்தஞ் செய்யாநின்ற காமமாகிய வெவ்விய விடத்தை இந்தப் பசியகோலுடைய நல்ல வளையையுடையார் தமது அருட்பார்வை கொண்டு தணிப்பார் என்றவாறு.

வெங்கோல் - அம்பு. வானவர் - சேரர். மீனவர் - பாண்டியர். இறைமைத்தன்மை யுடையராதலால் உயர்த்துக்கூறியது. செங்கோல் - செவ்வியநீதி. நலிதல் - வருத்தல். கோல் - வளையிற்புள்ளி, கோலம் என்பது கடைக்குறையாய்க் கோல் என நின்றதென்பாருமுளர். நெஞ்சம் - முன்னிலையெச்சம்.

இச் செய்யுளில் வியத்தற்பொருண்மை வந்தது எங்ஙனமெனின், எம்பெருமான் இறந்துபடாமற் காத்து இன்றுங் குறியிடத்துத் தனித்து வந்து நிற்றலின், இவர் பார்வைகொண்டு தணிப்பாரெனக் கூறியது வியப்பின்மேல் நின்றது.

இவ்வைந்து பாட்டும் பாங்கன் தன்னுட் கூறியது. (௯௫)

### தலைவன்றனக்குத் தலைவி நிலை கூறல் :

தலைவன்றனக்குத் தலைவிநிலை கூறல் என்பது, பாங்கன் தலைவி குறியிடத்துத் தனித்து நிற்கின்ற நிலையைக் கண்டுவந்து தலைவற்குக் கூறல்.

வளங்கனி மாறை வரோதயன் வாணன் மலயவெற்பா
உளங்களி காத லுடனின்ற தானின் னுடலமெல்லாம்
களங்கனி போலக் கருகிவெண் கோட்டுக் களிறுண்டதோர்
விளங்கனி போல்வறி தாநிறை வாங்கிய மென்கொடியே.

(இ - ள்.) வளம் பழுத்த மாறைநாட்டு வரோதயனாகிய வாணனது மலையவெற்பனே! நின்னுடலமெல்லாங் களம் பழம்போலக் கருக, வெண்ணிறக் கோடுடைய யானை யுண்டதோர் விளங்கனிபோல் இல்லாமையுடையதாகி நின்று, நிறையாகிய குணத்தைக் கொண்ட மெல்லிய கொடியானது, நீ சொன்ன குறியிடத்து உளங்கனிந்த காதலுடன் நின்றதாதலால், நீ அக்குறியிடத்துச் செல்வாயாக என்றவாறு.

கனிதல் - பழுத்தல். கருக என்பது கருகி யெனத் திரிந்து நின்றது. என்னை,

[1] 'செயிர்த்தவள் சிவந்து நோக்கிச் சீறடி சென்னி சேர்த்தி
அயிர்ப்பரென் பணிசெய் வேனுக் கருளிற்றுப் பொருளதென்ன
உயிர்ப்பது மோம்பி யொன்று முரையலை யாகி மற்றிப்
பயிர்ப்பில்பூம் பள்ளி வைகு பகட்டெழின் மார்ப என்றாள்.'

என்னுஞ் சிந்தாமணிச் செய்யுளில், 'நோக்க' என்பது, 'நோக்கி' எனத் திரிந்து நின்றதுபோற் கொள்க. 'மின்கொடியே' என்று பாடம் ஓதுவாரும் உளர். வறிதா - இல்லாமையை யுடையதாக. வெற்பின் என்று பாடமோதி, 'இறைவா' என்பது முன்னிலை யெச்சமென்று பொருள் கூறுவாருமுளர். (நகூ)

## தலைவன் சேறல் :

தலைவன் சேறல் என்பது, பாங்கன் சொற்படி தலைவன் குறியிடத்துப் போதல்.

புறங்கூ றிருட்கங்குல் போன்றக நண்பகல் போன்றபொங்கர்
நிறங்கூர் படைக்கண்ணி நின்றன ளேநிழ லைச்சுளித்து
மறங்கூர் களிற்றண்ணல் வாணன்தென் மாறையில் வானுதலான்
அறங்கூர் மனத்தரு ளானின்ற தாமென தாருயிரே.

(இ - ள்.) நெஞ்சமே! தன்னிழலைப் பிறிதோர் யானை யெனக் கருதித் திரும்பிக் கோபமிகுங் களிற்றையுடைய

1. சிந்தா. விமலை - சு0க.

அண்ணலாகிய வாணன் தென்மாறை நாட்டின் புறத்தில் மிகுந்து இருண்ட கங்குலையொத்து, அகத்தில் மாணிக்கங்களின் ஒளியான் நல்ல பகல்போன்ற சோலையிடத்து, வாணுதலாளாகிய வெளி மிகுந்த படைக்கண்ணி நின்றனளே! அங்நின்ற தோற்றம் முறைமைகூர்ந்த மனத் தருளினுலே என்து ஆருயிர் நின்றதாம் என்றவாறு.

கூர்தல் நான்கும் மிகுதல். தழைகளினது செறிவால் புறம் கூர் இருட் கங்குல் போன்றது. பொங்கர் - சோலை. நிறம் - ஒளி. படைக்கண்ணி - உவமைத் தொகை. சுளித்தல் - திரும்பல். மறம் - கோபம். களிறு - யானை. அறம் - முறைமை. நெஞ்சம் - முன்னிலையெச்சம். (௫எ)

தலைவியைக் காண்டல்:

பாகையுந் தேனையும் போன்மொழி யார்தமிழ்ப் பைந்தொடையும்
வாகையுஞ் சூடிய வாணன்தென் மாறை வளமுமவன்
ஈகையும் போலு மெழிலியை நோக்கி யிரங்குபுள்ளும்
தோகையும் போல்நின்ற வாதனி யேயிந்தச் சோலையிலே.

(இ-ள்.) நெஞ்சமே! இந்தச் சோலையிடத்துத் தனியே என் வரவை நோக்கிப் பாகையுந் தேனையும் போன்ற மொழியார் நின்ற முறைமை, தமிழ்மாலையும் வாகைமாலையுஞ் சூடிய வாணனது தென்மாறைநாட்டு வளமும் அவன் கொடையும் ஒக்கும், மேகத்தை நோக்கி யிரங்குஞ் சாதகப்புள்ளையும் மயிலையும் ஒக்கும் என்றவாறு.

'மொழியார் நின்றவா' என மாறுக. தமிழ்ப்பைந் தொடை - தமிழ்மாலை. வாகை - ஆகுபெயர். வளம் - செழுமை. வளமும், ஈகையும் எல்லாருக்கும் உபகரித்தலான் மேகம் ஒப்பாயிற்று. ஈகை - கொடை. எழிலி - மேகம். நோக்கி - வரவுகருதி. இரங்கல் - ஒலித்தல். புள் - சாதகப் புள். தோகை - மயில். நெஞ்சம் - முன்னிலையெச்சம். வாகை மாலை - வென்றோர் சூடுவது. பாகையும் தேனையும் போன் மொழியார், நின்றவாறு இரங்கு புள்ளுந் தோகையும் ஒப்பு என்று பயனிலை கொண்டவாறு உணர்க. (௫அ)

**கலவியின் மகிழ்தல் :**

*கலவியின் மகிழ்தல் என்பது, புணர்ச்சியின் மகிழ்தல்.*

**யாரும்பர் தம்பத மென்போல வெய்தின ரிம்பரம்பொன்**
**வாருந் துறைவையை சூழ்தஞ்சை வாணன் மலயவெற்பில்**
**தேருந் தொறுமினி தாந்தமிழ் போன்றிவள் செங்கனிவாய்**
**ஆருந் தொறுமினி தாயமிழ் தாமென தாருயிர்க்கே.**

(இ - ள்.) நெஞ்சமே! அழகிய பொன்னை யொழுக்குந் துறைகளையுடைய வையையாறு சூழ்ந்த தஞ்சைவாணனது பொதிய வெற்பில், ஆராயுந்தோறும் ஆராயுந்தோறுந் தெவிட்டாத இன்பமாந் தமிழையொத்தவளது செங்கனி வாயிலூறிய நீர் நுகருந்தோறும் தெவிட்டாமல் இன்பமாய், எனது ஆருயிர் இறந்துபடாமைக்குக் காரணமாகிய அமிழ்தாகின்றதாதலால், இவ்வுலகில் உம்பர்தம் பதத்தை என்போல எய்தினர் யார்? யானொழிய ஒருவருமில்லை என்றவாறு.

உம்பர் - தேவர். இம்பர் - இவ்வுலகு. வார்தல் - ஒழுகுதல். தேர்தல் - ஆராய்தல். செங்கனிவாய் - ஆகுபெயர். ஆர்தல் - நுகர்தல். ஆருயிர் - அரிய வுயிர். மலய வெற்பு - பொதிய வெற்பு. 'மலய வெற்பிற் றமிழ்' என்றது அவ்வெற்பில் தமிழ் பிறத்தலான் என்க. இறப்பைத் தீர்த்தலால் அமிழ்தம் என்றது. 'வாணன் மலயவெற்பு' என்புழி ஆறனுருபு நிலப்பிறிதின் கிழமைப் பொருளாய்த் தொக்கது. நெஞ்சம் - முன்னிலையெச்சம். (௹௩)

**புகழ்தல் :**

புகழ்தல் என்பது, புகழ்ந்து கூறல்.

**தழல்கண்ட தன்ன கலிவெம்மை யாறத்தன் றண்ணளியாம்**
**நிழல்கண்ட சந்திர வாணன்தென் மாறை நிழல்பொதியுங்**
**கழல்கண்ட தன்ன கதிர்முத்த மாளிகைக் காரிகைநின்**
**குழல்கண்ட பின்னல்ல வோஅற லீருட் குளித்ததுவே.**

(இ - ள்.) தழலைக் கண்டதுபோன்ற கலியினது வெப்பந் தணியத் தனது அருளாகிய நிழலாக்கிக்கண்ட சந்திரவாணனது தென்மாறை நாட்டிற் றோன்றும் ஒளி மிகுந்த கழற்காய் போல, பரிதாகிய கதிரெறிக்கும் முத்து

மாலிகையையுடைய காரிகை, நினது கூந்தலைக் கண்ட பின்னல்லவோ முன் வெளிப்பட்டிருந்த அறலானது நாணி இப்போது நீருட் குளித்திருக்கின்றது என்றவாறு.

தழல் - நெருப்பு. கலி - கலியுகம். வெம்மை - வெப்பம். அளி - அருள். நிழல் - ஒளி. பொலிதல் - மிகுதல். கழல் - ஆகுபெயர். கதிர் - ஒளி. காரிகை - அண்மைவிளி. குழல் - கூந்தல். அறல் - கருமணல். குளித்தல் - மூழ்கல். 'நின்குழல்' என்புழி ஆறும் வேற்றுமை யுருப்புத் தற்கிழமைக்கண் வந்தது. 'அல்லவோ' என்புழி ஓகாரம் எதிர்மறை. (கூ0)

பாங்கியொடு வருகெனப் பகர்தல்:

பாங்கியொடு வருகெனப் பகர்தல் என்பது, இனி நீ வருங்கால் நின் உயிர்ப்பாங்கியொடு வருக எனக் கூறல்.

என்கா தலினென் றியம்புகின் றேனிங் கினிவருங்கால்
நின்கா தலியொடு நீவரல் வேண்டு நிலமடந்தை
தன்கா தலன்தஞ்சை வாணன்தென் மாறைத்தண் டாமரைவாழ்
பொன்காதல் கொண்டு தொழுஞ்சிலம் பாரடிப் பூங்கொடியே.

(இ - ள்.) நிலமடந்தை தனக்குக் கணவனாகிய தஞ்சைவாணனது தென்மாறைநாட்டிலிருக்கும் தண்ணிய தாமரையில் வாழுந் திருமகள் ஆசைகொண்டு பணியுஞ் சிலம்பார்ந்த அடிகளையுடைய பூங்கொடிபோல்வாய்! எனது காதல் மிகுதியால் ஒரு சொல் சொல்லுகின்றேன், இக்குறியிடத்து இனிமேல் வருங்கால் நின்னிடத்திற் காதலுடையவளாகிய உயிர்ப்பாங்கியொடு நீ வருதலைச் செய்ய வேண்டும் என்றவாறு.

காதல் - ஆசை. இயம்பல் - சொல்லல். காதலி - உயிர்ப்பாங்கி. காதலன் - கணவன். பொன் - திருமகள். பூங்கொடி - ஆகுபெயர். 'நிலமடந்தைதன் காதலன்' என்றது, பூவைநிலை யென்னும் புறப்பொரு ளிலக்கணத்தால், வாணனை மாயோனாகக் கூறியவாறு உணர்க. என்னை,

[1] 'மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பில்
தாவா விழுப்புகழ்ப் பூவை நிலையும்.'

என்னும் வெட்சிக்கரந்தையிற் கூறிய சூத்திரத்தான் உணர்க. (கூக)

1. தொல். பொருள். புறத்திணையியல் - ௫.

### பாங்கிற் கூட்டல்:

பாங்கிற் கூட்டல் என்பது, தலைவன் தலைவியை ஆயத்துச் செலுத்தல்.

என்னுடு நின்ற விளங்கொடி யேசங்க மேய்ந்துகுழாந்
தன்னுடு செல்லுஞ் சலஞ்சலம் போல்தஞ்சை வாணன்வெற்பில்
பொன்னுடு செல்லும் புகழ்மணி போனின் புடையகலா
மின்னுடு நுண்ணிடை யாருட னீசென்று மேவுகவே.

(இ - ள்.) என்னுள்ளே நிலையாய் நிற்கின்ற இளங் கொடிபோல்வாய்! சங்கக்கூட்டத்துள்ளே பொருந்திச் செல்லா நிற்குஞ் சலஞ்சல மென்னுஞ் சங்கு போலவும், தஞ்சைவாணனது வெற்பிடத்துப் பொன்னுள்ளே செல் லும் மாணிக்கம் போலவும், நின் பக்கம் அகலாத மின் பிணங்கும் நுண்ணிய இடையாராகிய ஆயக்கூட்டத்துடன் நீ போய்ப் பொருந்துக. என மாலை சூட்டித் தலைவியை விடுத்தான் என்க. என்றவாறு.

இளங்கொடி - ஆகுபெயர். 'குழாந் தன்னுடேய்ந்து செல் லும்' எனமாறுக. இப்பி ஆயிரம் சூழ்ந்தது இடம்புரி; இடம்புரி ஆயிரஞ்சூழ்ந்தது வலம்புரி; வலம்புரி ஆயிரம் சூழ்ந்தது சலஞ் சலம். புகழ்மணி - மாணிக்கம். சலஞ்சலம் சங்குகளிற் சிறத்த லானும், மாணிக்கம் மணிகளிற் சிறத்தலானும் உவமை கூறிய தென்று உணர்க. புடை - பக்கம். ஊடல் - பிணக்கம். மேவு தல் - பொருந்தல்.

இக்கிளவியில் மாலைசூட்டித் தலைவியை விடுத்தானென்பது; ஆயின், இச்செய்யுளில் முல்லைமாலை சூட்டி விடுத்தானென்பது இல்லையாலெனின், தலைவி ஆயக்கூட்டத்திற் சார்ந்தவுடன் தலை வியை நோக்கி, 'நினக்கு முல்லைமாலை சுனைப்புனல் சூட்டியவாறு நன்றால்' என்று பாங்கி கூறியவதனுன் இங்ஙனங் கூறப்பட்டது. வரைவியலில் தலைவனைப் பாங்கி வாழ்த்தற் செய்யுளில்,

[1] 'சங்கதி ரக்காட்டு நீயன்று சூட்டலரே'

என்றதனானும் அறிக.

1. தஞ்சைவாணன் கோவை - உ௬௫.

இவற்றுள் முன்னைய மூன்றும் சார்தல், கேட்டல், சாற்றல் என்னும் மூன்றற்குரிய; 'பாங்கன்கழறல்' முதல், 'கிழவோன் வேட்கை தாங்கற்கருமை சாற்றல்' ஈறாகக் கூறிய நான்கும் எதிர்மறைக்குரிய; 'பாங்கன் தன் மனத்தழுங்கல்' முதல், 'தலைவன் தனக்குத் தலைவி நிலைகூறல்' ஈறாகக் கூறிய பதினொன்றும் நேர்தற்குரிய; 'தலைவன்சேறல்' முதல், 'புகழ்தல்' ஈறாகக் கூறிய நான்கும் கூடற்குரிய; 'தலைவன் தலைவியைப் பாங்கியொடுவருகெனப் பகர்த'லும், தலைவன் 'தலைவியைப் பாங்கிற்கூட்ட'லும் ஆகிய இரண்டும் பாங்கிற்கூட்டற்குரிய எனக்கொள்க. (கூஉ)

**பாங்கற்கூட்டம் முற்றிற்று**

## சுல. பாங்கி மதியுடன்பாடு

அஃதாவது, தலைவி வேறுபாட்டைக் கண்டு புணர்ச்சியுண்மை அறிந்தாராய்ந்து தன்மதியை யுடன்படுத்தல்.

[1] 'முன்னுற உணர்தல் குறையுற உணர்தல்
இருவரும் உள்வழி அவன்வர வுணர்தலென்
றாங்குமூ வகைத்தே பாங்கிமதி யுடன்பாடு'

என்னுஞ் சூத்திரவிதியால் பாங்கிமதியுடன்பாடு மூவகைப்படும். அவற்றுள்,

முன்னுறவுணர்தலாவது—தலைவி பாங்கற் கூட்டத்தின்கண் பாங்கியை நீங்கிச் சென்று தலைவனைப் புணர்ந்து மீண்டுவந்து பாங்கி முன்னுற்றவழி, பாங்கி தலைவியது வேறுபாடு கண்டு அதனானே கூட்டமுண்மை யறிதல்.

குறையுற உணர்தலாவது—பாங்கி தலைவன் தழையுங் கண்ணியுங் கொண்டு தன்பாற் குறையுற்று நிற்பக் கண்டு அதனானே கூட்டமுண்மை யறிதல்.

இருவரு முள்வழி யவன்வர வுணர்தலாவது—தலைவியும் தானும் ஒருங்கிருந்துழி, தலைவன் அவ்வாறு வரக்கண்டு அதனானே கூட்டமுண்மை யறிதல்.

### முன்னுறவுணர்தல்

[2] 'நாற்றமுந் தோற்றமு மொழுக்கமு முண்டியும்
செய்வினை மறைப்பும் செலவும் பயில்வுமென்
றிவ்வகை யேழினு மையமுற் றோர்தலும்.'

நாற்றமாவது—தான் பண்டு பயின்றறியாததோர் நாற்றம்.

தோற்றமாவது—கூட்டத்தாற் பிறந்ததோ ரழகு.

ஒழுக்கமாவது—தெய்வந்தொழாமை முதலியன.

உண்டியாவது—ஊண் பண்டையிற் சுருங்குதல்.

செய்வினை மறைத்தலாவது—தான்செய்யும் வினையைப் பாங்கிக்கு மறைத்தல்.

செலவாவது—ஆயத்தை நீங்கித் தனியே சேறல்.

பயில்வாவது—எப்பொழுதும் ஓரிடத்தே நிற்றல்.

---

1. அகப்பொருள் விளக்கம். களவியல் - உஉ.
2. ,, - உரு.

இவ்வேழினும் பாங்கி தலைவியை ஐயமுற்று ஆராய்தல். இவ்வேழினுள் இச்செய்யுள் தோற்றத்தால் ஆராய்கின்றது.

தோற்றத்தாலாராய்தல் :

வண்டலை ஆயத் துடனயர்ந் தோவன்றி வண்டிமிர்பூந்
தண்டலை ஆரத் தழைகள்கொய் தோதஞ்சை வாணன்வெற்பில்
புண்டலை வேலினுங் கண்சிவப் பாரப் பொலஞ்சுனைத்தேன்
கொண்டலை நீர்குடைந் தோவிவண் மேனி குழைந்ததுவே

(இ-ள்.) நெஞ்சமே! இவள் மேனி குழைவுபட்டது, ஆயக்கூட்டத்துடன் வண்டலம் பாவையை வருந்திச் செய்தோ! அன்றி, வண்டு ஆரவாரிக்கும் பூஞ்சோலையிடத்துச் சந்தனத் தழைகள் கொய்தோ! அன்றித் தஞ்சைவாணனது வெற்பிடத்துப் புண்செய்யும் தலையையுடைய வேலினும் கண்சிவப்புப் பொருந்தப் பொன் விளையப்பட்ட சுனையினிடத்து மலைத்தேன் வந்துகூடக் கொண்டலையப்பட்ட நீருட் குளித்தோ! யாதோ! அறிகின்றிலேன் என்றவாறு.

வண்டல் - வண்டலம்பாவை. அயர்தல் - செய்தல். அன்றி - வினையெச்சக் குறிப்பு. இமிர்தல் - ஆரவாரித்தல். தண்டலை - சோலை. ஆரத்தழை - சந்தனத்தழை. பொலம் - பொன். குடைதல் - குளித்தல். குழைதல் - இளகுதல். ஒகாரங்களனைத்தும் ஐயத்தின்கண் வந்தன. நெஞ்சம் - முன்னிலையெச்சம்.

[1] 'அவ்வகை தன்னால் ஐயந் தீர்தல்'

அவ்வேழு வகையினானும் புணர்ச்சியுண்டென்று கருதித் தலைவியிடத்து ஐயந் தீர்தல். (சுஉ)

ஒழுக்கத்தாலையந்தீர்தல் :

திளைக்குந் திரைமே லுனக்குமுன் தோன்றலிற் செம்பொன்வெற்பை
வளைக்கும் பிரான்முடி வைகுத லாற்றஞ்சை வாணன்மண்மேல்
விளைக்கும் புகழ்போல் விளங்குத லாற்செக்கர் விண்பிறைநார்
தளைக்குங் குழற்றிரு வேதொழ வேதகுந் தன்மையதே.

1. அகப்பொருள் விளக்கம். களவியல் - உ௬.

(இ - ள்.) காரைத் தன்னிடத்து நின்று நீங்காமல் தளைசெய்யுங் குழலையுடைய திருவே! நிரம்புங் கடலினிடத்து நினக்குமுன்னே தோன்றலானும், செம்பொன் மலையை வில்லாக வளைக்கும் சிவனது திருமுடியிடத் திருத்தலானும், தஞ்சைவாணன் புவியின்மேல் விளையச் செய்யும் புகழ்போல நாட்குநாள் மிக்காய் விளங்குதலானும், செவ்வானத்திடைத் தோன்றிய பிறை திங்கடோறுந் தொழுதல்போல் இன்றுந் தொழத்தகுந் தன்மைய தாதலான், நீ தொழுவாயாக என்றவாறு.

திளைத்தல் - நிறைதல். திரை - ஆகுபெயர். செம்பொன் வெற்பு - மேருமலை. பிரான் - சிவன். முடி - சடைமுடி. வைகுதல் - தங்குதல். செக்கர்விண் - செவ்வானம். கார் - கருநிறம்; மேகமெனினும் அமையும். தளைத்தல் - தடைசெய்தல்.

திரு இவ்வுருக்கொண்டு வந்து பிறந்தாள் என்னும் கருத்தால் 'திருவே' என்று கூறியது. இவள் கற்புக்கடன் பூண்டவளாதலான்,

[1] 'தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை.'

என்னும் விதியினள் தொழாளாயினள்; ஆகவே ஒழுக்கத்தினால் ஐயந்தீர்ந்தவா றுயிற்று.

இப்பால் பாங்கி தலைவியை நோக்கிக், 'கண்சிவந்தும் இதழ் வெளுத்தும் நுதல் குறுவெயர் வரும்பியும் இருத்தலால், இவ் வேறுபாடு நினக்கெற்றினாலாயது?' என்று வினவுதலும், தலைவி, 'சுனையாடிப் போந்தேன்' அதனால் வந்தது என்று விடுத்தலும் இச்செய்யுளில் கவி கூறிற்றிலர்; யாதினாலெனின், அகப்பொருட் சூத்திரத்தில் இவ்விரண்டிற்குங் கிளவி கூறிற்றிலராதலானென்க. அவர் கிளவி கூறாததற்குக் காரணம் என்னையெனின், சுருக்க நூலாதலிற் கூறிற்றிலர். விரிநூலிற் கூறியதுண்டோ வெனின், கூறியதுண்டு. என்னை, தொல்காப்பியத்தில் [2] 'நாற்றமுந் தோற்றமும்' என்னுஞ் சூத்திரத்தில் நச்சினார்க்கினியருரையில் தலைவி வேறுபாடு பாங்கி வினவுதற்குச் செய்யுள்,

---

1. குறள். வாழ்க்கைத்துணைநலம் - ௫.
2. தொல். பொருள். களவியல் - ௨௩.

'தொய்யில் வனமுலையுந் தோளுங் கவினெய்தித்
தெய்வங் கமழுமால் ஐம்பாலு—மையுறுவல்
பொன்னங் கொடிமருங்குற் பூங்கயற் கண்ணினாய்க்
கென்னை யிதுவந்த வாறு.'

இதற்கு விடை: நின்னை நீங்கி மேதக்க சுனை கண்டு நெடுங் காலம் ஆடினேன், அதனான் ஆயிற்று என்னும். (௬௪)

### அதற்குப் பாங்கி மெய்யினாற் பல்வேறு கவர்பொருள் சொல்லி நாடலின் சுனை நயப் புரைத்தல்:

சுனைநயப்பு உரைத்தல் என்பது, மெய்யாயினது கூறி அக் கூறும் பொருளிற் பல்வேறு கவர்பொருள் சொல்லி ஆராய்தலின் சுனைநன்மையைக் கூறல்.

பூட்டிய வார்சிலை வீரரை வென்றெப் பொருப்பினுஞ்சீர்
தீட்டிய வாணன்தென் மாறையன் னீரிதழ்ச் செம்மையுமை
ஊட்டிய வாளின் கருமையுந் தான்கொண் டுமக்கிங்ஙனே
சூட்டிய வாறுநன் றால்முல்லை மாலை சுனைப்புனலே.

(இ - ள்.) நாண்பூட்டிய வில் வீரரை வெற்றி கொண்டு குலமலைகள் எட்டினும் கீர்த்தியைப் பொறித்த வாணனது தென்மாறை நாட்டையொப்பீர், நுமது இதழின் செம்மையும் மையூட்டிய வாள்போன்ற கண்ணின் கருமையும் தாவென வாங்கிக்கொண்டு உமக்கு இவ்வாறு கைம்மாறாகச் சுனைப்புனலானது முல்லை மாலையைச் சூட்டியவாறு நன்று என்றவாறு.

'வார் பூட்டிய' என மாறுக. வார் - நாண். பொருப்பு - குலமலை. சீர் - கீர்த்தி. தீட்டல் - எழுதல். ஊட்டல் - உட்கொள வைத்தல். வாள் - ஆகுபெயர். ஆல் - அசை.

தலைவன் பாங்கற் கூட்டத்தில் தலைவியைப் பாங்கிற் கூட்டும் போது நின் காதலியோடு நீ வருக எனக் கூறிக் கற்புடையவளென்றெண்ணி, கற்புடைய மகளிர் முல்லைமாலை சூடுவது இயல்பாதலான், முல்லைமாலை சூட்டி விடுத்ததனால், தலைவியும் தலைவன் சொல்லைக் கடவாளாதலால், தன் கற்புடைமை தன் உயிர்ப் பாங்கி யறியவேண்டுமென்று கருதி, தலைவன் சூட்டிய முல்லை

மாலையை மறையாது வந்தாளாதலால் அதுகண்டு கூறினனென்று உணர்க.

தலைவன் சூட்டினன் என்பது என்னை யெனின்,

[1]'ஆணெடுந் தானையை யாற்றுக் குடிவென்ற கோன்பொதியில்
சேணெடுங் குன்றத் தருவிநின் சேவடி தோய்ந்ததில்லை
வாணெடுங் கண்ணுஞ் சிவப்பச்செவ் வாயும் விளர்ப்பவண்டார்
தாணெடும் போதவை சூட்டவற் றேவத் தடஞ்சுனையே.'

என்னும் இறையனர் அகப்பொருளில் [1]'முன்னுறவுணர்தல்' என்னுஞ் சூத்திர வுரையில் இக்கிளவிக்குப், 'போதவை சூட்டவற்றே வத்தடஞ்சுனை' என்றமையான், தலைவன் போது சூட்டின னென்று உணர்க.

முல்லைமாலை சூட்டி வந்ததைக் கண்டு வினவினளென்று தலைவிக்குத் தோன்றவும், இதழ் வெண்மைக்கும், கண் செம்மைக் கும், முல்லைமாலை யுவமையாகப் பாங்கி கருதிக் கவர்படுபொரு ளாய்ச் சொல்லலின், மெய்யினைற் பல கவர்படுபொருள் சொல்லி நாடலாயிற்று. நாடல் - ஆராய்தல். இதழ் வெளுத்தல் அதரபானத் தாலும், கண் சிவத்தல் இறுகத் தழுவுதலானும் தோன்றியவென்று உணர்க. (கூ௫)

### சுனைவியந்துரைத்தல்

சுனைவியந்துரைத்தல் என்பது, அச்சுனை வியப்பை யானும் ஆடிக்காண்பேன் என்று கூறல்.

**மறலா யெதிர்ந்த மறமன்னர் வேழ மலையெறிவேல்**
**திறலார் முருகன் செழுந்தஞ்சை வாணன்தென் மாறைவையை**
**அறலார் குழலாய் நுதற்குறு வேர்வு மழகுநின்போற்**
**பெறலா மெனிற்குடை வேனடி யேனும் பெருஞ்சுனையே.**

(இ - ள்.) மதிமயக்கமா யெதிர்ந்த வீரமன்னரது யானையாகிய மலையை யெறியும்வேலால் (முன் மலையை யெறிந்த) வெற்றியார்ந்த முருகனை யொக்குஞ் செழுந் தஞ்சைவாணனது தென்மாறை நாட்டில் வரும் வையை யாற்றிலிருக்கும் அறல் போன்ற குழலையுடையாய், நுதற்குறுவேர்வும் அழகும் நின்னைப்போற் பெறலா

1. இறையனர் அகப்பொருள் - எ.

மெனின், அடியேனும் பெருஞ்சுனையை ஆடிக்காண்பேன் என்றவாறு.

மறல் - மயக்கம். மற மன்னர் - வீர மன்னர். திறல் - வெற்றி. அறல் - கருமணல். குடைதல் - நீராடுதல். 'பெறலா மெனில்' என்பது, பெறுதற்கு அருமைதோன்ற நின்றது. தான் குற்றேவல் செய்யும் முறைமையால், 'அடியேன்' எனக் கூறினு னென்று உணர்க. (கூ௬)

## பொய்யினுற் பல்வேறு கவர்பொருள் சொல்லி நாடலின் தகையணங்குறுத்தல்

தகையணங்குறுத்தல் என்பது தலைவி வேற்றழகினுல் அவளைத் தெய்வப் பெண்ணுக வலியுறுத்திக் கூறல்.

குவளை சிவத்துக் குமுதம் வெளுத்த குறையல்லவேல்
அவளை மறைத்துன்னைக் காட்டலு மாமலர்த் தேன்குதிக்கத்
தவளை குதிக்குந் தடம்பொய்கை சூழ்தஞ்சை வாணன்வெற்பில்
இவளை வரக்கண்டு நீயணங் கேபின் எழுந்தருளே.

(இ - ள்.) குவளையொக்குங் கண் சிவந்து, குமுத மொக்கும் வாய்வெளுத்த குறைபாடல்லவாயின், எங்கள் தலைவி யொருத்தியுண்டு அவள் வடிவில் நின்னையொப்ப வள், அவளை மறையவைத்து நின்னை அவளென்று காட் டலாமென்று எல்லாருஞ் சொல்லுவர்; அலரினின்றுந் தேன்குதிக்கப் புதுநீர் வந்ததென்று தவளை குதிக்கும் பெரிய பொய்கை சூழ்ந்த தஞ்சைவாணன் வெற்பிலிருக் கும் மலையணங்கே, எங்கள் தலைவி வருமளவும் இருந்து அவளை யொப்புக்கண்டு பின்னை நீ யெழுந்தருள்வாய் என்ற வாறு.

[1] 'கிளந்த வல்ல வேறுபிற தோன்றினுங்
கிளந்தவற் றியலா னுணர்ந்தனர் கொளலே.'

என்னும் மயங்கியற் சூத்திரத்தில் அன்னம்போல்வாளை அன்னம் என்றும், யானை போல்வானை யானை யென்றும் கூறினமையான், இவ்விடத்துங் குவளை போன்ற கண்ணைக் குவளை யென்றும்,

1. தொல். சொல். வேற்றுமை மயங்கியல் - கூச.

குமுதம்போன்ற வாயைக் குமுதம் என்றும் ஆகுபெயராகக் கூறிய வாறு உணர்க.

'அலர்த்தேன்' என்புழி ஐந்தனுருபு தொக்கது. தடம் பொய்கை - பெரிய பொய்கை. அணங்கு - தெய்வப்பெண்.

மனத்தில் தலைவிதான் என்று அறிந்துவைத்து வாயுரையில் அணங்காகக் கூறினமையின், பொய்யினாற் பல்வேறு கவர்பொருள் சொல்லி நாடலாயிற்று. 'கவர்பொருள்' என்னாது 'பல்வேறு கவர்பொருள்' என்றது என்னையெனின், ஒன்றல்ல வெல்லாம் பலவாதல் தமிழ்நடை யாதலின் என்றுணர்க. இவையிரண்டும் நாணநாட்டம். (கூஎ)

## நடுங்க நாட்டம்

நடுங்க நாட்டம் என்பது, தலைவியை நடுங்கத்தக்கதாக நாடுதல்.

**பால்போல் மொழிவஞ்சி யஞ்சிநின் றேனிந்தப் பார்முழுதும்**
**மால்போற் புரந்தவன் மாறை வரோதயன் வாணன்வென்றி**
**வேல்போற் சிவந்து நெறிமுறை கோடிய வேந்தன்வெய்ய**
**கோல்போற் கொடியன வாங்கொலை யானையின் கோடுகண்டே.**

(இ - ள்.) பால்போலும் மொழியையுடைய வஞ்சிக் கொம்புபோல்வாய்! இந்தப் பாருலகமுழுவதையுந் திருமால்போல் இடையூறு நீக்கிக்காத்த மாறைநாட்டில் வரோதயனை வாணனது வென்றி வேல்போற் குருதியளைந்து சிவந்து நெறிமுறைமை வழுவிய வேந்தனது கொடுங்கோல் போல யார்க்கும் அச்சங்கொடுக்குங் கொடுமையவாகிய கொலைத்தொழில் செய்யும் யானையது கோட்டைக்கண்டு அஞ்சிநின்றேன் என்றவாறு.

வஞ்சி - ஆகுபெயர். மால் - விண்டு. புரத்தல் - காத்தல். கோடிய - வழுவிய. கோடு - கொம்பு.

'நாணவு நடுங்கவு நாடாள் தோழி
காணுங் காலைத் தலைமகள் தேத்து.'

என்பதனால், நாண நாட்டமும், நடுங்க நாட்டமும் கூறியது அகப்பொருட் சிதைவாய்ப் பெருந்திணைப்பாற்படும். அன்றியும் பாங்கி இவ்வாறு கூறவே, தலைவி குறிப்பறியாது கூறினளுமாம்,

அவமதித்தாளுமாம், ஆசார மில்லாது கூறினளுமாம்; மற்று இக்குற்றமெல்லாம் நீங்குமாறும், அகப்பொருட் சிதைவு வாராமற் போற்றுமாறும் என்னையெனின், நாணநாட்டத்தின்கண், தலைவிக்கு உயிர்ப் பாங்கி யாதலின், இவளுள்ளமே அவளுள்ள மாதலின், புணர்ச்சியுண்மை யுண்டு என்பது அறிந்து கூறுகின்றாளென்பது தலைவியறியும். அறிந்த தலைவி பாங்கியுடன் கூறாதது என்னையெனின், இவள் பெருநாணினளாதலான் கூறலாகாதென் றிருந்தாள். தன்னுடன் உண்மை கூறவில்லை, தானுண்மைக்கு அயலாயினேன், அவ்வாறு அயலாகாது உடம்பட்டிருக்கத் தலைவி யாகத் தன்னோடு கூறவேண்டுமென்பது கருதி, பாங்கி ஆராய்ச்சி செய்த காரியமாதலான், நாணநாட்டத்தாற் குற்றமின்மை யறிக.

இனி நடுங்க நாட்டம், யானையைக் கண்டஞ்சினேன் என்ற வழி தலைவி நடுங்காம லிருந்தவழி என்னையெனின்,

[1]'மெய்யினும் பொய்யினும் வழிநிலை பிழையாது
பல்வேறு கவர்பொருள் நாட்டத் தானும்'

என்னும் சூத்திரத்தில், 'வழிநிலை பிழையாது' என்பதற்கு நச்சினார்க்கினியர் உரையில், 'பாங்கி குற்றேவல் முறைமை தப்பாது, பெருநாணினள், பேரச்சத்தாள் தலைவி யென்பதறிந்து, தானும் இறந்துபடாமற் கூறத்தகும் வார்த்தை கூறும்' என்று உரை கூறினாராதலானென்பது. நடுங்கநாடிக் கூறும்போதும் பாங்கி, எம்பெருமாட்டி கவற்சியுறும், கவற்சி யுற்றபோதே யிறந்துபடினும் படும் என்பதறிந்து, முகமலர்ச்சியாய் நகையாடுதல் போன்றுங் கூறுமாதலால், தலைவி இவள் முகக்குறிப்பு நோக்கியும், கவற்சி யில்லாமை நோக்கியும் பொய்யென்றறிந்திருந்தாளென்க. அன்றி யும் சான்றோர் செய்யுட்களிற் பெரும்பாலும் பயின்றுவருதலானும் குற்றமின்றென உணர்க. குற்றமாயின் சான்றோர் செய்யுட்கண் ஓதார் என வுணர்க.

தொல்காப்பியச் சூத்திரத்தும், [1]'வழிநிலை பிழையாது' என்பதனால் வழுவமைதி பெற்றாம். திருக்கோவையாரில் நாண நாட்டம், நடுங்க நாட்டத்தைப் பெருந்திணைப்பாற்படும் என்று பேராசிரியர் உரைகூறினா ரெனின், 'மாறுகொளக் கூறல்' என்னுங் குற்றமாம். என்னை,

[2]'அளவி லின்பத் தைந்திணை மருங்கிற்
களவுகற் பெனவிரு கைகோள் வழங்கும்.'

---

1. தொல். பொருள். களவியல் - உங.
2. அகப்பொருள் விளக்கம், அகத்திணையியல் - உகூ.

என்னும் அகப்பொருளினும், [1] ' அன்பினைந்திணைக் களவெனப் படுவது ' என்னும் இறையனர் அகப்பொருளினும்,

[2] ' இன்பமும் பொருளும் அறனு மென்றாங்
கன்பொடு புணர்ந்த வைந்திணை மருங்கிற் காமக்கூட்டம்.'

என்பதனன் தொல்காப்பியத்தினும், மற்றும் பிற நூல்களினும் [3] ஐந்திணை களவென்று கூறுவதல்லது பெருந்திணையை அகப் பொருளிற் கூறுவது ஒரு நூலினு மில்லை.

பெருந்திணையாவது,

' ஒப்பில் கூட்டமு மூத்தோர் முயக்கமும்
செப்பிய வகப்பொருட் சிதைவும் பெருந்திணை.'

என்னுஞ் சூத்திரவிதியாற் பெருந்திணைப்பாற் படும் என்றல் பொருந்தாது. அகத்திற் சிதைந்தது புறத்தின் பாற்படும்.

[4] ' மடலே றுதலொடு விடைதழா லென்று
குற்றிசை தன்னெடு குறுங்கலி யென்று
சுரநடை தன்னெடு முதுபாலை யென்று
தாபத நிலையொடு தபுதார நிலையெனப்
புகன்றவை [5] யியற்பெயர் பொருந்தா வாயின்
அகன்ற வகப்புறப் [6] பெருந்திணைத் தாகும்.'

என்பதனல் நாணநாட்டம் நடுங்கநாட்டம் இதனேடு ஒப்பதன்றி வழுவமைதி யென்று உணர்க.

இவற்றுள் முன்னைய இரண்டும் மெய்யினுற் சொல்லியது பின்னைய இரண்டும் பொய்யினுற் சொல்லியது. (சூஅ)

இத்துணையும் மூன்றுநாட் செய்தியென வுணர்க.

### முன்னுறவுணர்தல் முற்றிற்று

---

1. இறையனர் அகப்பொருள் - க.
2. தொல். பொருள். களவியல் - க.
(வே-பா.) 3. ஐந்திணைக் களவென்று.
4. அகப்பொருள் விளக்கம். ஒழிபியல் - ௩௫.
(வே-பா.) 5. இறைவற் பொருந்தாவாதலின்.
" 6. பெருந்திணைக் காகும்.

## குறையுறவுணர்தல்

### பெட்ட வாயில்பெற் றிரவுவலியுறுத்தல்

பெட்டவாயில் பெற்று இரவு வலியுறுத்தல் என்பது, இயற்கைப்புணர்ச்சிப் பின்னர்ப் பிரிவுழிக்கலங்கலின் வாயில் பெற்று உய்தல் என ஆண்டு விரும்பப்பட்ட பாங்கியைத் தூதாகப் பெற்றுக் குறையிரத்தலை வலியுறுத்திக் கூறல்.

**பொருமணி வெண்டிரைப் பைங்கடல் வங்கம் பொருந்திமுன்பு**
**தருமணி பின்பெற் றணிபவர் போற்சென்று சார்ந்திரந்து**
**பருமணி நன்கலப் பாங்கியை நீங்கியப் பாவையைநாம்**
**மருமணி வண்டுறை தார்வாணன் மாறை மருவுதுமே.**

(இ - ள்.) வெண்டிரை முத்துக்களைப் பொரப்பட்ட பசியகடலிடத்து மரக்கலத்தைமுன்புபொருந்திப் பின் அக்கடல்தரப்பட்ட மணிகளைப் பூண்பவர்போல, நாம் போய்ப் பரியமணிகளைக் குயிற்றிய நல்ல அணிகளையணிந்த பாங்கியைச் சார்ந்து நமது குறையையிரந்து, அவள் நேர்ந்தபின் பாங்கியை நீங்கி அப்பாவை போல்வாளை மணம்பொருந்திய கரியவண்டு உறையப்பட்ட தாரணிந்த வாணன் தென்மாறை நாட்டுக் கூடுதும், நெஞ்சமே! அஞ்சல் என்றவாறு.

'வெண்டிரை மணிபொரு' என மாறுக. வெண்டிரை - வெண்மை நிறம் பொருந்திய அலை. மணி - முத்து. வங்கம் - மரக்கலம். நன்கலம் - நல்லவணி. 'நாஞ்சென்று' எனவும், 'பாங்கியைச் சார்ந்து' எனவும் மாறுக. மரு - மணம். மணிவண்டு - கருவண்டு. தார் - மாலை. நெஞ்சம் - முன்னிலையெச்சம். மாறை நாடு கடலாகவும், பாங்கி மரக்கலமாகவும், தான் மரக்கலநாயகனாகவும், தலைவி அக்கடலிடத்திருக்கும் மணியாகவும் உவமித்தவதனால் இது **தொழிலுவமம்.**

[1]'நிரனிறை சுண்ண மடிமறி மொழிமாற்
றவைநான் கென்ப மொழிபுண ரியல்பே.'

என்னுஞ் சூத்திரவிதியால் மொழிகள் மாறிநின்றன. (கூக)

1. தொல். சொல். எச்சவியல் - அ.

### ஊர்வினுதல்

ஊர் வினுதல் என்பது, தலைவன் கண்ணியும் தழையும் ஏந்திக் குறையுற்ருன்போல வந்து நின்று ஊர் வினுதல்.

புதியேன் மிகவிப் புனத்திற்கி யான்றனிப் போந்தனனும்
பதியேது செல்லும் படிசொல்லு வீர்படி மேற்படிந்த
மதியேய் சுதைமதில் சூழ்தஞ்சை வாணன்தென் மாறைவையை
நதியேய் சுழிநிக ரும்பழி தீருந்தி நல்லவரே.

(இ - ள்.) புவியின்மேற் படிந்த மதியை யொப்பாகிய சுதையினுல் விளங்கிய மதில் சூழ்ந்த தஞ்சைவாணனது தென்மாறை நாட்டின்கண் வருகின்ற வையைநதியிற் பொருந்திய சுழியை யொக்குங் குற்றந்தீர்ந்த உந்தியை யுடைய மடவாரே! யான் இப்புனத்திற்கு மிகவும் புதியேன், ஒரு காலும் வந்தறியேன், இப்போது தனியாக வந்தேன், நீரிருக்கும் பதி யாது? யான் செல்லும்படிக்குச் சொல்லுவீர் என்றவாறு.

படி - புவி. ஏய் - ஒப்பு. சுதை - வெண்சாந்து. ஏய் - பொருந்துதல். உந்தி - கொப்பூழ். நல்லவர் - மடவார். (எ0)

### பெயர் வினுதல்

கரைத்தாவி யுந்திய காவிரி வைகிய காலத்தினும் [சூழ்
தரைத்தாரு வன்னசெந் தண்ணளி வாணன் தமிழ்த்தஞ்சை
வரைத்தாழ் சிலம்பினும் வாழ்பதி யீதென்று வஞ்சியன்னீர்
உரைத்தா லிழிவதுண் டேற்பெய ரேனும் உரைமின்களே.

(இ - ள்.) கரையைத் தாவித் திரையை யெறிந்த காவிரி வற்றிய காலத்தினும் பூமியின்கண் கற்பகத் தருவை யொத்த செவ்விய அருளையுடைய வாணனது இனிமை பொருந்திய தஞ்சையைச் சூழ்ந்த மலைகள் பணியப்பட்ட பொதியவெற்பில் நும்முடைய வாழ்வாகிய பதி யீதென்று உரைத்தால் உமக்கு இகழ்ச்சி வருவதுண்டேல், வஞ்சிக் கொம்புபோல்வீர், பெயராயினும் உரைமின்கள் என்றவாறு.

தாவுதல் - கடத்தல். உந்தல் - எறிதல். காவிரி - காவேரி. வைகல் - வற்றல். தரை - புவி. தாரு - கற்பகத் தரு. செந்தண் ணளி - செவ்விய அருள். தமிழ் - இனிமை. வரை - மலை; சாதி யொருமை. தாழ்தல் - பணிதல். சிலம்பு - ஈண்டுப் பொதிய வெற்பு. இழிவது - குறைவருவது.

'வரைத்தாழ் சிலம்பின்' என்புழி, ஐகார ஈற்றுப் பெயராக லான், 'வரை தாழ்சிலம்பு' என இயல்பாய் முடியாது, ஒற்று மிக்க வாறு என்னையெனின்,

> [1] 'வேற்றுமை யல்வழி இஐ யென்னும்
> ஈற்றுப்பெயர்க் கிளவி மூவகை நிலைய
> அவைதாம், இயல்பா குநவும் வல்லெழுத்து மிகுநவும்
> உறழா குநவும் என்மனார் புலவர்.'

என்னுஞ் சூத்திரவிதியால், இகர ஐகார ஈற்றுப் பதங்கள் இயல் பாய் முடிவனவும், வல்லெழுத்து முடிவனவும், உறழ்வாய் முடி வனவுமாகிய மூவகை முடிபினுள், திணைகுறிது - திணைக்குறிது என்றாற்போல, வரைதாழ் - வரைத்தாழ் என உறழ்ச்சி முடிபாயின வென்று உணர்க. (எக)

## கெடுதிவினுதல்:

கெடுதிவினுதல் என்பது, கெட்டபொருளை வினவுதல்.

> தண்பட்ட மேவும் வயற்றஞ்சை வாணன் தமிழ்ச்சிலம்பில்
> பண்பட்ட தேமொழிப் பாவையன் னீர்பனை பட்டகையும்
> மண்பட்ட கோடு மதம்பட்ட வாயும் வடிக்கணைதோய்
> புண்பட்ட மேனியு மாய்வந்த தோவொரு போர்க்களிறே.

(இ - ள்.) தண்ணிய வோடையும் பொருந்திய வய லும் சூழ்ந்த தஞ்சைவாணனது பொதிய வெற்பிடத்துப் பண்ணுண்டாகப்பட்ட இனிய மொழியையுடைய பாவை போல்வீர்! பனைபோ லுண்டாகிய கையும், தன்னிழலைச் சுளித்துப் பாய்தலான் மண்பட்ட கோடும், கரடத்தானத் திலிருந்து வடிந்தொழுகும் மதம்பட்ட வாயும், கூரிய என் கைக்கணை மூழ்கலால் புண்பட்ட வுடலுமாய் ஒரு போர்க் களிறு நும் புனத்தயலே வந்ததோ? கண்டிரேல் சொல் லுவீராக என்றவாறு.

---

1. தொல். எழு. தொகைமரபு - கரு.

பட்டம் - ஓடை. பட்டமும் வயலும் என உம்மைத்தொகை. மேவுதல் - பொருந்துதல். தமிழ்ச்சிலம்பு - பொதியமலை. பண் - இசை. படுதல் - உண்டாதல். தேம் - இனிமை. பாவை - சித்திரப் பாவை. பனைபட்ட கை - பனைபோலுண்டாகிய கை; உவமத் தொகை. வடி - வடித்தல். களிறு - யானை. உம்மை - எண்ணின் கண் வந்தன. கெடுதிவினுதல், வேழம் வினுதல், பன்றிவினுதல், நாய்வினுதல், இனையவினுதல் எனப் பலவும் உள; அவற்றுள் இது வேழம்வினுதல். (எஉ)

ஒழிந்ததுவினுதல்:

ஒழிந்தது வினுதல் என்பது, இவன் வினயதற்கு விடையின் மையால், நீர் பேசாதொழிந்தது என் என வினுதல்.

வனமார் குடிஞைப் பகைக்குர லாமென வாணன் தஞ்சைப்
புனமார் குளிரிப் புடைப்பொலி யாற்கிள்ளை போயினமீண்
டினமா மெனவந்திவ் வேனலெல் லாம்வவ்வு மென்பதற்கோ
கனமா நறுங்குழ லீர்மொழி யாதொழி காரணமே.

(இ - ள்.) வாணனது தஞ்சை நாட்டில் முகில் போன்ற கருமையாகிய நறிய குழலீர்! மொழியா தொழிந்த காரணம், காட்டிலார்ந்த கூகைக்குப் பகை யாகிய காக்கைக் குரலாமென, புனத்திற் பொருந்திய குளிரி யென்னுங் கருவியை நுங் கையாற் புடைத்திடும் ஓசையால் வெருண்டு போயின கிளிகளெல்லாம், நீர் வாய் திறந்து மொழியின், நுமது குரலென்றறியாது, கிளிக்குர லென் றெண்ணி மீண்டு வந்து, இவ்வேனற் கதிரையெல் லாங் கவரும் என்பதனுலோ, சொல்லுவீர் என்றவாறு.

'வாணன் தஞ்சைக் கனமா நறுங்குழலீர்' எனவும், 'பகைக் குரலாமெனப் புனமார் குளிரி' எனவும், 'போயின கிள்ளை' எனவும் மாறிக் கொள்க; என்னை,

[1] 'மொழிமாற் றியற்கை
சொன்னிலை மாற்றிப் பொருளெதி ரியைய
முன்னும் பின்னுங் கொள்வழிக் கொளாஅல்.'

என்னுஞ் சூத்திரவிதியால், மொழிமாற்றிப் பொருளுரைத்துக் கொள்க.

1. தொல். சொல். எச்சவியல் - கஈ.

'நல்லவரே சொல்லுவீர்' என்றும், 'வஞ்சியன்னீர் உரைமின்கள்' என்றும், 'பாவையன்னீர்' என்றும், 'கனகமாநறுங் குழலீர்' என்றும், வினுதல் நான்கினும் பன்மையாற் கூறிய சொற்கள் பாங்கி யொருத்தியையே.

[1] 'ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்'

என்னுஞ் சூத்திரவிதியாற் கூறிய உயர்சொற் கிளவி யென்று உணர்க. தலைவியும் கூடவிருந்தாளெனில் வருங்குற்றம் என்ன வெனின், குற்றம் உண்டு. என்னை, 'இருவரு முள்வழி யவன்வர வுணர்தல்' என மேலே கூறப்படுதலின், இங்ஙனம் இருவரும் உடனிருந்தார் என்று கூறலாகாது என வுணர்க.

வனம் - காடு. ஆர்தல் - பொருந்தல். குடிஞை - கூகை; பகை - காக்கை. குளிரி - தினைப்புனத்திற் கிளியோட்டுவோர் மூங்கிலில் வீணைபோற் கட்டித் தெறிக்குங் கருவி.

[2] 'தழலுந் தட்டையுங் குளிரும் பிறவுங், கிளிகடி மரபின்'

என்னும் பத்துப்பாட்டில், 'குளிரும்' என்பதற்கு நச்சினார்க்கினியர் கூறிய வுரையிற் கண்டுகொள்க. குளிர் எனினும், குளிரி எனினும் ஒக்கும். புடைத்தல் - விரலாற்றெறித்தல். கிள்ளை - கிளி. ஏனல் ஆகுபெயர். கனம் - முகில். மா - கருமை. கனங்குழல் என்புழி உவமைத்தொகை. 'கனமா நறுங்குழல்' பாரமாகிய நறிய குழல் எனினும் அமையும். 'என்பதற்கு' வேற்றுமை மயக்கம். ஓகாரம் - வினா. (எஉ)

யாரே யிவர்மனத்தெண்ணம் யாதெனத் தேர்தல்:

யாரே இவர்மனத்து எண்ணம் யாது எனத் தேர்தல் என்பது, இவ்வாறு கண்ணியும் தழையும் ஏந்தி, ஊர் பெயர் கெடுதியோடு ஒழிந்தவும் வினவி நின்றவர் யாரோ, இவர் மனத்து எண்ணம் யாதோ எனப் பாங்கி தன் மனத்தில் ஆராய்தல்.

**தரையார வண்புகழ் தேக்கிய வாணன் தமிழ்த்தஞ்சைசூழ்**
**வரையாது நும்பதி யாதுநும் பேரென்பர் வார்துளிக்கார்**
**புரையானை யம்பொடு போந்ததுண் டோவென்பர் பூங்கொடியீர்**
**உரையாத தென்னென்ப ராலென் கொலோவிவர் உட்கொண்டதே.**

(இ - ள்.) தரைநிறைய வளவிய புகழை நிறைத்த வாணனது தமிழ்த் தஞ்சைசூழ்ந்த வரையிடத்து நும்

1. தொல். சொல். கிளவியாக்கம் - உஎ.
2. குறிஞ்சிப்பாட்டு - சஉ.

முடைய பதி யாது? நம்முடைய பெயர்யாது? என்றுஞ் சொல்லுவர்; அல்லாமலும், நெடியதுளியைச் சொரியும் மேகத்தையொக்கும் யானை என் கையம்போடு வந்த துண்டோ? என்றுஞ் சொல்லுவர்; அன்றியும், பூங்கொடி போல்வீர்! யாதும் உரையாததது என் என்றுஞ் சொல்லுவர்; ஆதலால், இவர் யாரோ, இவர் உட்கொண்ட எண்ணம் என்கொல்லோ, அறிகின்றிலேன் என்றவாறு.

தரை - பூவுலகம். ஆர - நிறைய. வண்புகழ் - வளவியபுகழ். தேக்கல் - நிறைத்தல். தமிழ் - இனிமை. வரை - மலை. 'பதி யாது', 'பேர் யாது' என மாறுக. வார் - நெடுமை. துளிக்கார் - துளிசொரியுங் கார். புரை - உவமவுருபு.

'போந்தது'—'வந்ததோ வொருபோர்க் களிறே' என்று தலைவன் முன் வினவிய சொல்லையே பாங்கி யீண்டு, 'யானை அம்பொடு போந்ததுண்டோ' என்று அப்பொருளையே யெடுத்துக் கூறினமையால், 'வந்தது' என்னும் பெயராயினவாறு காண்க. அன்றியும், 'புதியேன் தகவிப் புனத்திற் கியான்றனிப் போந்தனன்' என்பதனும் உணர்க.

பூங்கொடியீர் - ஆகுபெயர். உம்மை - இறந்ததுதழீஇய எச்சவும்மை விகாரத்தாற் றொக்கது. கொல் - ஐயம். ஓகாரம் - அசை. உட்கொண்டது - உட்கொண்ட எண்ணம். (எச)

எண்ணந் தெளிதல் :

யாரே யிவரென் றறிகின்றி லேமெதிர்ந் தாரைவென்று
வாரேய் கழற்புனை வாணன்தென் மாறை வரையுறைவீர்
ஊரே தெனமுன் வினவிப்பின் வேறென் றுரைப்பதெல்லாம்
நேரே யிவர்பொருட் டாலென்று தோன்றுமென் நெஞ்சினுக்கே.

(இ - ள்.) கண்ணியும் தழையும் ஏந்திக் குறையுற்றார் போல் வினவிய இவர் யாரென்றறிகின்றிலேம்; போர்க்களத்தில் எதிர்ந்தாரை வென்று கயிறு பொருந்திய கழலைப் புனைந்த வாணன் தென்மாறைநாட்டில் வந்த இவர் நம்மைநோக்கி, வரையுறைவீர்! நமது ஊர் எது என முன் வினவிநின்று பின் வேறொன்றாகச் சொல்லும் வார்த்தையெல்லாம் ஆராய்ந்து எண்ணில், செவ்வனே இவள் பொருட்டென்று என் நெஞ்சினுக்குத் தோன்றும், இதற்கு ஐயமில்லை என்றவாறு.

யாரே - ஏகாரம் ஈற்றசை. வார் - கயிறு. ஏய்தல் - பொருந்தல். கழல் - வீரக்கழல். புனைதல் - தரித்தல். நேர் - செவ்வை. ஆல் - அசை. (எடு)

**துறையுறவுணர்தல் முற்றிற்று.**

இருவரு முள்வழி யவன்வர வுணர்தல்.

**தலைவன் கையுறையேந்தி வருதல்:**

தலைவன் கையுறையேந்தி வருதல் என்பது, தலைவியும் பாங்கியும் சேர்ந்திருப்பதுகண்டு தலைவன் கையுறை யேந்தி வருதல்.

**தண்டா மரைமலர்ப் பொன்னையும் பார்மங்கை தன்னையும்போல்**
**வண்டார் குழல்மட வார்மணந் தார்சென்று வாணன்தஞ்சை**
**நுண்டா தணிபொங்கர் நீழலின் கீழந் நுடங்கிடையார்க்**
**கண்டா தரவையெல் லாஞ்சொல்ல வேநல்ல காலமிதே.**

(இ - ள்.) வாணனது தஞ்சைசூழ்ந்த நுண்ணிய தாது பொருந்திய சோலைநிழலில் தண்ணிய தாமரைமலரிலிருக்குந் திருமகளும் பார்மங்கையாகிய நிலமகளும் போல, வண்டார் குழலின் மடவாராகிய தலைவியும் பாங்கியும் சேர்ந்திருந்தாராதலால், நாம் போய் அந் நுடங்கிடையாரைக் கண்டு நமது காதலெல்லாஞ் சொல்ல இது நல்ல செவ்வி என்றுவாறு.

பொன் - திருமகள். பார்மங்கை - நிலமகள். மணத்தல் - சேர்தல். தாது - பராகம். பொங்கர் - சோலை. நுடங்கல் - ஒசிதல். 'இடையார்க் கண்டு' என்புழி, இரண்டனுருபு தொக்கது. உம்மை - எண்ணும்மை. ஏகாரம் - ஈற்றசை. காலம் - செவ்வி; செவ்வி, பதம், அமயம், காலம் என்பன ஒரு பொருட் கிளவி. (எசு)

**தலைவன் அவ்வகை வினுதல்:**

தலைவன் அவ்வகை வினுதல் என்பது, தலைவன் முன் கெடுதி வினுதல்போல மீண்டு கலைவந்ததோ என்று வினுதல்.

**வல்லா ரிளங்கொங்கை வஞ்சியன் னீர்தஞ்சை வாணனைக்கண்**
**டொல்லார் களத்தி னுடைந்தது போல வொருகலைபோர்**
**வில்லார் கணைதைப்ப மெய்சோர்ந் தினம்விட்டு வெய்துயிர்த்துப்**
**புல்லார் வதுமின்றி யேவந்த தோநும் புனத்தயலே.**

(இ - ள்,) சூதுபோன்ற இளங்கொங்கையையுடைய வஞ்சிக்கொம்பு போல்வீர்! தஞ்சைவாணனைக் கண்டு பகைவர் போர்க்களத்தில் உடைந்து ஓடியது போலப், போர் செய்யும் எனது கையில் வில்லார்ந்த கணை தைப்ப ஒரு கலைமான் மெய் சோர்ந்து இனத்தைப் பிரிந்து பெருமூச் செறிந்து புல்லருந்தலுமின்றி நும் புனத்தயலிலே வந்ததோ? கண்டீராயிற் சொல்லுவீர் என்றவாறு.

வல் - சூது. ஆர் - ஒப்பு. ஒல்லார் - பகைவர். களம் - போர்க்களம். உடைதல் - படை தட்டழிதல். சோர்தல் - மயங்கல். விடுதல் - பிரிதல். வெய்துயிர்த்தல் - பெருமூச்செறிதல். ஆர்தல் - அருந்தல். வினையெச்ச அடுக்குகள், 'வந்ததோ' என்னும் வினைப் பொருண்மை வினை கொண்டு முடிந்தன. ஓகாரம் - வினா. (எஎ)

எதிர்மொழி கொடுத்தல் :

வாக்குந் திறனு மதனையொப் பீர்தஞ்சை வாணன்மஞ்சு
தேக்குங் குடுமிச் சிறுமலைக் கேதிரி கோட்டிரலை
போக்குஞ் சரமுங் குருதியுஞ் சோரக் கொடிச்சியரேம்
காக்கும் புனமருங் கேதனி யேவரக் கண்டிலமே.

(இ - ள்.) மெய்த்திருத்தத்தினும் வெற்றியினும் மதனைப்போல்வீர், தஞ்சைவாணனது முகில் நிறையும் உச்சியையுடைய சிறுமலையிடத்துத் திரித்ததுபோலிருக்கின்ற கொம்பையுடைய கலையும், யானைகட்குத் தலைமையாகிய குஞ்சரமும் குருதியொழுகக், கொடிச்சியராகிய யாங்கள் காக்கும் புனப்பக்கத்தே தனியேவரக் கண்டிலேம் என்றவாறு.

வாக்கு - திருத்தம்; மெய் அவாய்நிலையான் வந்தது. [1] 'வாக்கணங் கார்மணி வீணைவல் லாற்கு' என்னும் கேமசரியா ரிலம்பகத்துப் பாட்டில் 'வாக்கு' திருத்த மென்பதுணர்க. திறன் - வெற்றி. மஞ்சு - மேகம். தேக்கும் - நிறையும். குடுமி - உச்சி. சிறுமலை - மலைப்பெயர். 'சிறுமலைக்கு' என்புழி வேற்றுமை மயக்

1. சிந்தா. கேமசரியார் - கூஉ.

கம். திரிதல் - முறுக்குதல். கோடு - கொம்பு. இரலை-கலைமான். குஞ்சரம் - யானை. குருதி - இரத்தம். சோர்தல் - ஒழுகுதல். கொடிச்சியர் - குறத்தியர். இரலைக்கு உம்மை கொடாது குஞ்சரத்திற்கு உம்மை கொடுத்தது என்னை யெனின்,

[1] 'எஞ்சுபொருட் கிளவி செஞ்சொ லாயிற்
பிற்படக் கிளவார் முற்படக் கிளத்தல்'

என்னும் விதியாற் கொள்க. குருதியும் என்னும் உம்மை அசை.

### இறைவனை நகுதல் :

இறைவனை நகுதல் என்பது, தலைவன் அப்பாற் சென்றுழிப் பாங்கி தலைவியை நோக்கி அசதியாடி நகாநிற்றல்.

**மைவா ளிலங்குகண் மங்கைநல் லாய்தஞ்சை வாணன்வெற்பில்**
**இவ்வாளி மொய்ம்பரின் றெய்தமெய்ம் மானிள மாந்தளிரின்**
**செவ்வாளி யுங்கொண்டு சேட்சென்ற தாலன்று சீதைகொண்கன்**
**கைவாளி யுங்கொண்டு போனபொய்ம் மானினுங் கள்ளத்ததே.**

**(இ - ள்.)** தஞ்சைவாணன் வெற்பிடத்து மையெழுதிய வாள்போ லிலங்குங் கண்ணையுடைய மங்கைப்பருவத்து நல்லாய்! இந்த ஆளி போலும் வலியையுடையார் இப்போது எய்த மெய்யாகிய மான் இளமாந்தளிராகிய சிவந்த வாளியையுங் கொண்டு சேய்மைக்கண் சென்றதாதலால், பண்டை நாளில் இராமனது வாளியையுங் கொண்டு போன பொய்யாகிய மானினுங் கள்ளத்தையுடையது என்றவாறு.

'பொன்மான்' என்று பாடமோதுவாருமுளர்; இவரெய்த மெய்ம்மான் என்று கூறவே, அம்மான் பொய்மான் என்றே கூற வேண்டு மாதலால், அது பாடமன்மை யுணர்க. 'மைவாளிலங்கு கண்' உவமைத்தொகை. 'ஆளி மொய்ம்பர்' என்பதும் அது. மொய்ம்பு-வலி. 'இளமாந் தளிரின் செவ்வாளி' என்றது' கையில் அம்பின்றித் தளிர் பிடித்து நிற்றலின் நகையாடிக் கூறியது. சேண் - சேய்மை. அன்று - பண்டைக் காலம். சீதை கொண்கன்-இராமன். கைவாளி-கையம்பு. உம்மை-சிறப்பும்மை. (எக)

---

1. தொல். சொல். இடையியல் - ௩கூ.

### பாங்கிமதியின் அவரவர் மனக்கருத்துணர்தல் :

பாங்கிமதியின் அவரவர் மனக்கருத்து உணர்தல் என்பது, பாங்கி தன்னறிவினுன் தலைவன் தலைவி யென்றிருவரது மனக் குறிப்பை யாராய்ந்து கூறல்.

**புனங்காவ லின்றிவள் பூண்டதும் ஆண்டகை போந்ததுமான்**
**இனங்காவ லின்கலை யெய்யவன் றுலிக லாழிவிந்தை**
**தனங்காவ லன்தஞ்சை வாணனன் ஞட்டிவர் தங்களில்தாம் [தே.**
**மனங்காவல் கொண்டதெல் லாங்கண்க ளேசொல்லும் வாய்திறந்**

(இ-ள்.) போர்செய்யும் நேமியை யணிந்த வீரமக ளுடைய தனத்துக்குக் காவலஞகிய தஞ்சைவாணனது நல்ல நாட்டில், இவ்விருவரும் தங்களில் தாம் மனத்தைக் காவல் கொண்டதெல்லாம், இவர்கள் கண்கள் யாமறிய வாய் திறந்து சொல்லுதல்போல் அறிவிக்கு மாதலால், இவள் மனத்தின்கண் பூண்டிருப்பது புனங்காவல் அன்று; இவ்வாண்டகை வந்ததும் மானினங்கட்குக் காவலா யின் பத்தைக் கொடுக்குங் கலை யெய்ய அன்று என்றவாறு.

ஆண்டகை - அன்மொழித்தொகை. இகல் - போர். ஆழி - நேமி. விந்தை - வீரமகள்; வாணன் தோளைப் பிரியாதிருத்தலின், 'தனங்காவலன்' என்று கூறியது. மனங்காவல் கொள்ளல் - வேரோரிடத்திற் செல்லாது காவல் செய்வதுபோலத் தம்மிடத்தில் மனத்தை வைத்திருத்தல். (அ0)

### இருவரு முள்வழி யவன்வர வுணர்தல் முற்றிற்று.

காட்சியில் தலைவி ஆயவெள்ளம் புடைசூழ்ந்து குற்றேவல் செய்ய வீற்றிருந்தாள் என்று கூறி இங்ஙனந் தினைப்புனங் காத் திருந்தாளென்று கூறியதும், தலைவனும் பற்பல் நூருயிரங் கூர்வே வினைஞர் புடைசூழத் தேரேறி வேட்டையாட வந்தான் என்றுகூறி இங்ஙனந் தமியனுய்த் தழையேந்திவந்தான் என்றும் குறையிரந் தான் என்றும் கூறியதும் மாறுபாடன்றே எனின், மாறுபாடன்று; என்னை, தலைவி ஆயக்கூட்டமும் முன்போலே சூழ்ந்து பிரிந்து விளையாடாநிற்ப, இவளும் பற்பல விளையாட்டினுள் இதுவுமோர் விளையாட்டாகவும், தலைவன் குறியிடத்து வரின் தனித்து அவனைக் கூடவேண்டும் என்னுங் கருத்தாகவும் புனங்காத்தாளென்றும்,

தலைவன் கூர்வேலிளைஞரும் வேட்டை விருப்பாற் சூழ்ந்து பிரிந்து செல்லாநிற்ப, இவனும் வேட்கை மீதூரப்பட்டுப் பாங்கியாற் கூட வேண்டுமென்னுங் கருத்தினால், தலைவி குலமுறைமை ஒருவர்க்கொருவர் தழையும் கண்ணியும் கொடுத்துக் காண்டலும் இவர் அவற்றை யேற்றுக்கோடலும் தொன்றுதொட்டு நடந்துவரும் இயல்பாதலால், தழையும் கண்ணியும் ஏந்தி வந்துநின்று குறையிரந்தான் என்றுங் கூறியது மாறுபாடன்றென உணர்க. எனவே, எளியளாய்ப் புனங்காத்தாளும் அல்லள், எளியனாய்க் குறையுற்றிரந்தானும் அல்லன் என்பது தோன்றியவாறு உணர்க.

**பாங்கி மதியுடன்பாடு முற்றிற்று.**

---

## ௧௦. பாங்கியிற் கூட்டம்

அஃதாவது, பாங்கி கூட்டுவிக்கத் தலைவன் கூடும் கூட்டம்.

[1] 'இரந்துபின் நிற்றல் சேட்படை மடற்கூற்று
மடல்விலக் குடன்படல் மடற்கூற் றொழிதல்
குறைநயப் பித்தல் நயத்தல் கூட்டல்
கூடல் ஆயங் கூட்டல் வேட்டலென்
றீராறு வகைத்தே இகுளையிற் கூட்டம்.'

என்னுஞ் சூத்திரவிதியால், பாங்கியிற் கூட்டம் பன்னிரண்டு வகைப்படும்.

### தலைவனுட்கோள்சாற்றல்:

தலைவன் உட்கோள் சாற்றல் என்பது, தலைவன் தன் உள்ளத்தின்கண் கொண்ட காதலைக் கூறுதல்.

வாவுங் கலைவிந்தை காவலன் வாணன்தென் மாறையன்னீர்
ஏவுந் தொழிலெனக் கேதிய லாததிங் கேநுமக்கோர் [ணோர்
மேவுஞ்செய் குன்றமுஞ் சோலையு மாகப்பொன் வெற்பும்விண்
காவுந் தரவும்வல் லேனெனை யாளுங் கடைக்கண்வைத்தே.

(இ - ள்.) மேலெழுந்து தாவுதலைச்செய்யுங் கலையை ஊர்தியாயுள்ள வீரமகளுக்குக் காவலனாகிய வாணனது தென்மாறை நாடுபோல்வீர்! நீர் என்னை யேவுந்தொழில் இவ்விடத்து எனக்கு இயலாதது ஏது? எத்தொழில் செய்யவும் வல்லேன்; நுமக்கு விளையாடற்குப் பொருந்தும் ஒப்பற்ற செய்குன்றும் சோலையுமாக மேருமலையும் கற்பகக் காவும் தரவும் வல்லமையுடையேன்; என்னிடத்துக் கடைக்கண் வைத்து ஆளும்படி செய்வீர் என்றவாறு.

வாவுதல் - தாவுதல். விந்தை - வீரமகள். 'மேவுமோர் செய்குன்று' என மாறுக. 'தரவும் வல்லேன்' என்புழி, உம்மை, நீர் எத்தொழில் ஏவினும் அத்தொழில் செய்யவும் வல்லேன் என்று தோன்றினமையால், இறந்தது தழீஇய எச்சவும்மை. இதனுள் செய்குன்றமும் சோலையுமாகப் பொன்வெற்பும் விண்ணோர்காவும் என்பது நிரனிறை யெனக் கொள்க. (அக)

1. அகப்பொருள்விளக்கம், களவியல் - ௨௭.

### பாங்கி குலமுறை கிளத்தல் :

பாங்கி குலமுறை கிளத்தல் என்பது, தலைவன் இவ்வாறு கூறியதற்குப் பாங்கி குலமுறைமையால் இயையாது என மறுத்துக் கூறல்.

**நீவே றுரைக்கின்ற தென்குற மாதெங்க ணேரிழைபோற்**
**மாவேழ வன்படை வாணன்தென் மாறை மணியையன்றித்**
**தாவேது மில்லாத் தமனிய மீது தலம்புரக்குங்**
**கோவே அழுத்துவ ரோவறி யோருங் குருவிந்தமே.**

(இ - ள்.) இவ் வுலகைப் புரக்குங் கோவாகிய தன்மையைப் பெற்றோய்! நீ இயையுந் தன்மையைக் கூறாது இயையாது கூறியதென்னை? எங்கள் நேரிழை குறமாது, போர்செய்யும் பரியும் வேழமும் வலிய படையாகவுடைய வாணன் தென்மாறை நாட்டிற் பிறக்கும் மணியையன்றிக், கேடேதும் இல்லாத பசும் பொன்னின்மீது வறுமையுற்றோருங் குருவிந்தத்தை யழுத்துவரோ என்றவாறு.

'எங்க ணேரிழை குறமாது' என இயையும். 'மாவேழம்' என்புழி, உம்மைத்தொகை. மணி - பதுமராகம். தா - கேடு. தமனியம் - பொன். தலம் புரத்தல் - உலகைக் காத்தல்.

வறியோர் - நல்குரவோர். 'அன்றி' என்னும் வினையெச்சக் குறிப்பு, 'அழுத்துவரோ' என்னும் முற்றுவினை கொண்டது. ஓகாரம் எதிர்மறை. 'வறியோரும்' என்னும் உம்மை இழிவு சிறப்பு.

'குருவிந்தம்' என்பது [1]"கதிர்நிரை பரப்பு மணிமுடித் தேவர்கள்' என்புழி, 'குருவிந் தஞ்சௌ கந்திகோ வாங்கு, சாதுரங் கம்எனுஞ் சாதிகள் நான்'கில் ஒன்று என்று கூறிப், பின்னும் அப்பாட்டிலே,

'செம்பஞ் சரத்தந் திலகமு லோத்திரம்
முயலின் சோரி சிந்துரங் குன்றி
கவிரல ரென்னக் கவர்நிற மெட்டும்
குருவிந் தத்திற் குரித்தன நிறமும்.'

என்று கூறியவதனால், 'குருவிந்தம்' என்பது பதுமராகமண[illegible] பொதுமணியாவதும், உச்சிக் கதிர்போலக் கதிரெழுவதாங் [illegible]

1. கல்லாடம் - கக.

லாதது எட்டுவகையில் ஒரு நிறங்கொண் டிருப்பதும் குருவிந்தக்கல் என்று கண்டுகொள்க. (அஉ)

தலைவன் தலைவிதன்னை யுயர்த்தல்:

மிக்கா ருளரல்லர் மெல்லியன் மாதரின் மேதினிமேல்
தக்கார் புகழ்தஞ்சை வாணர்பி ரான்தமிழ் நாடனையாய்
மைக்கார் நிகர்குழல் வள்ளிசெவ் வேளுக்கு வல்லவையாம்
இக்கா ரணமுண ராதென்கொ லோநின் றியம்புவதே.

(இ-ள்.) மேதினிமேல் தகுதி யுடையோராற் புகழப்பட்ட தஞ்சையிலுள்ள வாணர்பிரானது தமிழ்நாடு போல்வாய்! மெல்லிய இயல்பினையுடைய மாதரில் மிகுதித் தன்மையை யுடையா ரல்லார் ஆர்? கரிய முகிலை யொக்குங் குழலினையுடைய வள்ளி முருகக் கடவுளுக்கு வல்லவை யாகிய இக் காரணம் உணராது, இயையாது என்று நீ சொல்லுவது என் என்றவாறு.

'மிக்குள ரல்லரார்' என மாறுக. மேதினி - புவி. தக்கார் - பெரியோர். செவ்வேள் - முருகக்கடவுள். வாணர்பிரான் - அவன் குலத்தில் வாணர் என்று பிறக்குமவர்கட்கெல்லாஞ் சிறந்தோன். 'கொலைகா லயிற்படை நேரியர்கோன்' [செ-ரு உ.] என்று முன்னங் கூறியதுபோலக் கொள்க. தமிழ்நாடு - பாண்டிநாடு. வல்லவை - தேவி. காரணம் - கதை. கொலோ - அசைநிலை. (அங)

பாங்கி யறியாள்போன்று வினுதல்:

பாங்கி யறியாள்போன்று வினுதல் என்பது, இவன் தலைவியிடத்துக் காதல்கொண்டது அறியாள்போல நீ எவளிடத்துக் காதல் கொண்டாய் என வினுதல்.

பொன்னிய லூசலும் பொய்தலு மாடியெப் போதுநன்னீர்
மன்னிய நீலமு நித்தில முங்குற்று வாணன்தஞ்சை
இன்னிய லாரு மிளமரக் காவி னிடம்பிரியாக்
கன்னியர் தாம்பலர் யார்நின்னை வாட்டிய காரிகையே.

(இ-ள்.) பொன்னுலியன்ற ஊசலும் விளையாட்டும் ஆடி யெஞ்ஞான்றும் நல்ல நீரினிடத்து நிலைபெற்ற நீல

மும் முத்தும் குற்றும் வாணனது தஞ்சைநாட்டில் இனிய இயல் பொருந்தும் இளமரச் சோலையிடம் பிரியாத கன்னியர்கள்தாம் பலர், அவருள் நின்னை வாட்டிய காரிகை யார்? யான் அறிய உரைப்பாயாக என்றவாறு.

'பொன்னியல்' என்புழி, மூன்றனுருபு தொக்கது. பொய்தல் - விளையாட்டு. நீலம் - குவளை. நித்திலம் - முத்து. இன்னியல் - இனிய சாயல். கா - சோலை. காரிகை - பெண். ஊசலும் விளையாட்டும் இவ்விரண்டையும் ஒரு தொழிற்படுத்தி, 'ஆடி' என்றும், நீலமும் நித்திலமும் இவ்விரண்டையும், 'குற்று' என்னும் பலபொருள் குறித்த வொருசொல்லால் நீலப்பூவைக் 'கொய்து' என்றும், நித்திலத்தை 'அவைத்து' என்றும் கூறினரென்று உணர்க.

அவைத்தல் - உரலில் நெல் முதலியன பெய்து குற்றுதல்.

'துவைக்குந் துணிமுன்னீர் கொற்கை மகளிர்
அவைப்பதம் பல்லிற் கழகொவ்வா முத்தம்
மணங்கமழ்தா ரச்சுதன் மண்காக்கும் வேலின்
அணங்கமுத மன்னலார் பாடல்.'

என இதனுள், பெண்கள் சிறுசோறடுதற்கு நித்திலங் குற்றுதற்கு அவைத்தல் என்று பொருள் வந்தவாறு கண்டுகொள்க. தலைவன் - முன்னிலையெச்சம். (அச)

இறையோன் இறைவிதன்மை யியம்பல் :

**தாளிணை மாந்தளி ரல்குல்பொற் றேரிடை சங்கைகொங்கை**
**கோளிணை கோலக் குரும்பைகை காந்தள் கொடிக்கரும்பார்**
**தோளிணை வேய்முகந் திங்கள்செவ் வாயிதழ் தொண்டையுண்கண்**
**வாளிணை வார்குழ லாய்வாணன் மாறையெம் மன்னுயிர்க்கே.**

(இ - ள்.) வார்குழலாய்! வாணனது மாறைநாட்டிலிருக்கும் எம் மன்னுயிர்போல்வாட்கு இலக்கணம், தாளிணை மாவினது தளிர்; அல்குல் பொன்னின் அலங்கரித்த தேர்; இடை உண்டு இல்லையென்னுஞ் சங்கை; கொங்கை கொத்தில் இரண்டிணைந்து அழகார்ந்த குரும்பை; கை காந்தள்; பூங்கொடியும் கரும்பும் குங்கும எழுத்தால் ஆர்ந்த தோளிணை வேய்; முகம் திங்கள்; சிவந்த வாயிதழ் கோவைக்கனி; மையுண்டகண் வாளிணை; நீ யறிவாயாக என்றவாறு.

சங்கை - ஐயம். கோள் - கொத்து; [1] 'கோட்டெங்கின் குலை வாழை' என்புழி, கோள் கொத்தினை யுணர்த்தியவா றுணர்க. அன்றியும், [2] 'வண்கோட்பலவின்' என்புழியும், கோள் கொத்தினை யுணர்த்தியவாறுணர்க. கோலம் - அழகு. கொடி - வல்லி. 'கொடிக் கரும்பு' என்புழி, உம்மைத்தொகை. தொண்டை - கொவ்வைக்கனி. மன்னுயிர் - ஆகுபெயர். (அ௫)

பாங்கி தலைவியருமை சாற்றல் :

பாங்கி தலைவியருமை சாற்றல் என்பது, பாங்கி தலைவியை அரியளாக்கிக் கூறல்.

புகழார் வரையெம் புரவலன் காதற் புதல்வியைநீர் [மை
இகழா வெளியளென் றெண்ணப் பெறீரெமக் கென்றும்வண்
திகழா பரணன் செழுந்தஞ்சை வாணன் சிலம்பினுள்ளீர்
அகழார் கலியுல கிற்புல னை அணங்கவளே.

(இ - ள்.) எமக்கென்ஞான்றும் வளமையொளிரும் ஆபரணம்போன்ற செழுந்தஞ்சை வாணனது சிலம்பிலிருப் பீர், புகழ் நிறைந்த வரைக்கு இறைவனாகிய எம் புரவலர்க் குக் காதற் புதல்வியா யுள்ளாளை யிகழ்ந்து எளியளென் றெண்ணப்பெறுந் தகுதியுடையீ ரல்லீர்; அவள் சகரரால் அகழப்பட்ட கடல்சூழ்ந்த வுலகில் அறிவுருவான தெய்வப் பெண் என்றவாறு.

வரை - மலை. புரவலன் - அரசன். ஆர்கலி - கடல். (அசு)

தலைவன் இன்றியமையாமை இயம்பல்

தலைவன் இன்றியமையாமை இயம்பல் என்பது, இன்றியமை யாமை ஓர் சொல், முடிந்த பொருளாய்த் துணிபுபற்றிய சொல்; என்னை,

[3] 'நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு.'

என்பதுபோலத் தலைவி இன்றியமையாமை கூறல்.

1. பட்டினப்பாலை - கசு.
2. மலைபடுகடாம் - ௩௩எ.
3. திருக்குறள். வான்சிறப்பு - க௦.

வனைந்தா லனகொங்கை மாதுரு வாய்த்தஞ்சை வாணன்வெற்
புனைந்தா லனைய புனத்தயல் வாய்வண்டு போதகத்தேன் [பில்
நனைந்தா லனையவென் னல்வினை தான்வந்து நண்ணிற்றென்று
நினைந்தா லணங்கனை யாய்தமி யேனுயிர் நிற்கின்றதே.

(இ - ள்.) அணங்குபோல்வாய்! தஞ்சைவாணனது வெற்பிடத்து அலங்கரித்தாற்போலும் புனத்தின் பக்கத்தில் என் நல்வினைதான், கைவல்லார் கையினாற் செய்து வைத்தாற்போலுங் கொங்கையையுடைய மாதுருவாய்வந்து பொருந்திற்றென்று நீ நினைத்தால், போதகத்திலிருக்குந் தேனில் வண்டு நனைந்தாலொத்த அத்தலைவி யின்பத்தின் மூழ்குந் தமியேனுயிர் நிற்கின்றது; நினையாவிடின் நில்லாதென் றறிவாய் என்றவாறு.

போது தலைவியாகவும், தேன் இன்பமாகவும், வண்டு தானாகவும் உவமித்தவதனான் தலைவியின்பத்து மூழ்கும் என்று வருவிக்கப்பட்டது.

வனைதல் - செய்தல். புனைதல் - அலங்கரித்தல். அயல் - பக்கம். நண்ணல் - பொருந்தல். அணங்கு - தெய்வப்பெண். 'நினையாவிடினுயிர் நில்லாது' என்பது அவாய்நிலையான் வந்தது. 'போதகத் தேன் வண்டு' எனவும், 'என் நல்வினை தான் வனைந்தா லன கொங்கை மாதுருவாய்' எனவும் மாறுக. (௭௭)

பாங்கி நின்குறை நீயே சென்றுரையென்றல் :

மருப்பா வியதொங்கல் வாணன்தென் மாறை வனசமலர்த்
திருப்பாவை யன்னவென் சேயிழை யாட்குன் திருவுளத்து
விருப்பா கியகுறை யுள்ளதெல் லாஞ்சொல்லி வேண்டுகநீ
பொருப்பா மொழியப் பெருரெம்ம னேரிவை போல்வனவே.

(இ - ள்.) குறிஞ்சிநிலத்து இறைவனே! மணம் பொருந்திய மாலையையுடைய வாணனது தென்மாறை நாட்டுத் தாமரைமலரில் எழுந்தருளியிருக்குந் திருமாது போன்ற எம்பெருமாட்டிக்கு உனது திருவுளத்து விருப்பமாகிய குறையுள்ளதெல்லாம் நீயே சொல்லி வேண்டிக்

கொள்வாயாக; அன்றி எம்போல்வார் இவைபோன்ற காரியங்கள் மொழியப்பெறுந் தகுதியர் அல்லர் என்ற வாறு.

மரு - மணம். பாவுதல் - பொருந்துதல். தொங்கல் - மாலை. வனசமலர் - தாமரைமலர். திருப்பாவை - திருமாது. பொருப்பன் - குறிஞ்சிநிலத்து இறைவன். (அஅ)

பாங்கியைத் தலைவன் பழித்தல்:

வில்லார் நுதல்வெய்ய வேலார் விழிக்கென் மெலிவுசொல்ல
வல்லா ரிலைசொல்ல வல்லையென் றியான்தஞ்சை வாணன்றெவ்
வொல்லா திதுநுமக் கென்றுண ரேனின் றுணங்கியிந்நாள்
எல்லா மிரந்தது நின்குறை யேயல்ல என்குறையே.

(இ - ள்.) வில்போன்ற நுதலும், வெவ்விய வேல் போன்ற விழியுமுடையாட்கு எனது மெலிவுசொல்ல, நின்னை யல்லால் வல்லாரில்லை; நீ சொல்ல வல்லை யென் றெண்ணி யான், தஞ்சைவாணனுக்குப் பகைவர்செய்தி யார்க்கும் பொருந்தாததுபோல, என் செய்தி நுமக்குப் பொருந்தாதென்று அறியேன் வேட்கைவெயிலினால் உலர்ந்து, செஞ்சுடர்தோன்றுங் காலையில் தொடங்கி இன் றாகிய இந்நாள்முற்றும் நும்மை யிரந்தது நின்மேற் குறை யல்ல, என்மேற் குறை என்றவாறு.

ஆர் - ஒப்பு. 'நுதல்விழி' என்புழி, உம்மைத்தொகை. விழி - ஆகுபெயர். தெவ் - ஆகுபெயர். ஒல்லாது - பொருந் தாது. உணங்கல் - உலர்தல். 'இன்றிந்நாள்' என இயையும். 'நின்குறையல்ல என்குறை' என்றது குறிப்புமொழி. 'கற் கறித்து நன்கட்டாய்' என்பதுபோல, [1]'வயக்குறு மண்டிலம்' என்னும் பாலைக்கலி பன்னீரடித்தரவில், 'இறத்திராலைய மற்றிவ ணிலைமை கேட்டீமின்' என்றது போலும் ஒருமை பன்மை மயக்க மெனக் கொள்க. பாங்கி - முன்னிலையெச்சம். (அகூ)

---

1. கலித். பாலை - ௨௪.

'இன்றிங்நாளெல்லா மிரந்தது' என்று வரையறுத்துக் கூறிய வதனால், 'குறையுற வுணர்தல்' முதல், **நாலாநாட் செய்தி** என்று அறிவித்தற்குக் கூறியவாறென்று உணர்க.

### பாங்கி பேதைமை யூட்டல் :

பாங்கி பேதைமை யூட்டல் என்பது, தலைவி பிறர் துயரம் அறியாளெனப் பேதைமையைப் பாங்கி தலைவன் உளங்கொளச் சாற்றல்.

**தேனுஞ் சுரும்புஞ் செறிதொங்கல் வாணன்தென் மாறைவெற்பா**
**மானுங் கலையும் வடிக்கணை யாலெய்து மன்னுயிரும்**
**ஊனுங் கவர்கின்ற தன்னையர் போலயி லொத்தகண்ணாள்**
**தானும் பிறருள்ள நோயறி யாத தகைமையளே.**

(இ - ள்.) பெடையும் சுரும்பும் செறிந்த மாலையை யணியும் வாணனது தென்மாறைநாட்டு வெற்பிலுள்ள வனே! மானும் கலையும் வடித்த கணையால் எய்து, அவ் விலங்கினது உயிரும் ஊனும் கொள்கின்ற தன்னுடன் பிறந்த தன்னையர்போல, வேலொத்த கண்ணினை யுடையாள் தானும் பிறருள்ளத்தின்கண்ணுள்ள நோயை யறியாத முறைமையள் என்றவாறு.

தேன் - சாதிப்பெயர்; பெடைமேல் நின்றது. சுரும்பு - ஆண் வண்டு. வடி - வடித்தல். கவர்தல் - கொள்ளுதல். தன்னையர் - தமையர். அயில் - வேல். தகைமை - முறைமை. ஓரிடத்திற் பிறந்தவராகலான் தன்னையர் குணம் இவட்குமாயினவாறு உணர்க.

### காதலன் தலைவி மூதறிவுடைமை மொழிதல் :

காதலன் தலைவி மூதறிவுடைமை மொழிதல் என்பது, அவ் வாறு கூறிய பாங்கியை நோக்கி, முதிர்ந்த அறிவினையுடையாள் தலைவி, அவளை அவ்வாறு கூறற்பாலை யல்லை என்று தலைவன் கூறல்.

**வருநீர் வனமுலை மங்கைநல் லாய்செங்கை வாணன்வையை**
**தருநீர் மலிவயல் தஞ்சையன் னாளன்று தஞ்சமிலேன்**
**அருநீர் நவையுறக் கண்மலர் நீர்தெளித் தாற்றினளால்**
**இருநீர் நிலங்கொள்ளு மோவறி யாளென்னும் இவ்வுரையே.**

(இ-ள்.) அழகின்றன்மை நாட்குநாள் மிக்காய்த் தோன்றும் முலையையுடைய மங்கைப்பருவ நல்லாய், சிவந்த கையையுடைய வாணனது வையையாறு தரும் நீரான் மலிந்த வயலினையுடைய தஞ்சைநகர்போல்வாள் முன் பற்றுக்கோடில்லேன், பிறர் எய்தற்கு அரிதாகிய கல்வியறிவு வேட்கையாற் குற்றமுறும்போது, அக் குற்றந்தீரத் தனது கண்மலரினுள்ள அருளாகிய நீரைத்தெளித்து ஆற்றினாளாதலால், அவளை யறியாளென்று கூறிய இவ்வுரையைப் பெருநீர் சூழ்ந்த இவ்வுலகம் முறைமையென்று கொள்ளாது என்றவாறு.

'வனநீர் வருமுலை' என மாறுக. மலிதல் - நிறைதல். தஞ்சம் - பற்றுக்கோடு. அரு நீர் - அரிய கல்வியறிவு. நவை - குற்றம். நீர் - அருள். ஆற்றுதல் - தணித்தல். இருநீர் - பெருநீர். ஓகாரம் - எதிர்மறை. (கூக)

பாங்கி முன்னுறு புணர்ச்சி முறையுறக் கூறல் :

பாங்கி முன்னுறு புணர்ச்சி முறையுறக் கூறல் என்பது, இவ்வாறு கூறக் கேட்ட பாங்கி முன் நின் வேட்கை தீர்த்தாள் என்று கூறினையே, அவ்வாறு இன்னுங் கூடுக என்று கூறல்.

**செறிவளர் காவி வயற்றஞ்சை வாணன் சிறுமலைமேல்**
**நெறிவளர் வார்குழல் நேரிழை யாளன்ன நீர்மையளேல்**
**குறிவளர் காவின்முன் கூடிய வாறின்னுங் கூடுகநீ**
**கறிவளர் சாரல்வெற் பாபிற ராலென்ன காரியமே.**

(இ-ள்.) கறிக்கொடி வளருஞ் சாரலை யுடைய வெற்பனே! ஒழுங்காய் வளர்ந்த வார்ந்த குழலையுடைய நேரிழையாள் நின் வேட்கை தணிக்கும் அத்தன்மையாகிய குணமுடையாளேல், வளருங் காவி செறிந்த வயல் சூழ்ந்த தஞ்சைவாணன் சிறுமலைமேல் நீ கூடுங்குறி வளரப்பட்ட காவில் முன் கூடியவாறுபோல் இன்னுங் கூடுக, என் போலும் பிறரால் என்ன காரியம் என்றவாறு.

'வளர் காவி செறி வயல்' என மாறுக. காவி - நீலம். நெறி - ஒழுங்கு. குறி - கூடுமிடம். கறி - மிளகு; ஆகுபெயர். சாரல் - மலைப்பக்கம். (கூஉ)

### தன்னிலை தலைவன் சாற்றல் :

தன்னிலை தலைவன் சாற்றல் என்பது, இவ்வாறு கூறக்கேட்ட தலைவன் வேட்கை நோயால் உழக்குந்தன்மை கூறல்.

**உரைத்தென் பிறவந்தப் பைந்தொடி யாக முருவிடில்வெண்**
**திரைத்தென் கடன்முத்துந் தென்மலைச் சந்துஞ் செழும்பனிநீர்**
**அரைத்தென் புருகமெய் அப்பினும் வெப்ப மருதினிநின்**
**வரைத்தென் கருமமெல் லாந்தஞ்சை வாணன் வரையணங்கே.**

(இ - ள்.) தஞ்சை வாணன் மலையி லிருக்கும் அணங்கே! அந்தப் பைந்தொடியை யுடையாளது ஆகத்தைக் கூடாவிடில் யான் சொல்லி யென்ன பயன்? வெண்மை நிறம்பொருந்திய திரை பொருந்தும் தென்கடலிடைப் பிறந்த முத்தும், பொதியமலையிற் பிறந்த சந்தனமும் செழும் பனிநீர் விட்டரைத்து வேட்கைத்தீயில் வெதும்பிய எலும்பு உருக என் மேனியெங்கும் அப்பினும் வெப்பம் ஆறுது; இன்று எனது காரியமெல்லாம் நினது எண்ணத்தின் மட்டிற் பட்டது என்றவாறு.

எனவே, உய்யச்செய்யினும் நையச்செய்யினும் நீயல்லால் வேறில்லை யென்றவாறாயிற்று. பிற - அசைநிலை. பைந்தொடி - அன்மொழித் தொகை. ஆகம் - மெய். திரை - அலை. தென்மலை - பொதியம். சந்து - சந்தனம். ஆறுது - அறுது எனக் குறுக்கும் வழிக் குறுக்கலாய் நின்றது, வாராது - வராது, தாராது - தராது என்றாற்போல. (௯௩)

### பாங்கி உலகிய லுரைத்தல் :

பாங்கி உலகியல் உரைத்தல் என்பது, இவ்வாறு கூறக்கேட்ட பாங்கி உலகில் வேட்கைகொண்டோர் சான்றோரை முன்னிட்டு வரைந்து கொள்வர்; அவ்வாறு உலகியலால் நீயும் வரைந்துகொள்க எனக் கூறல்.

**விரையக நாண்மலர் மெல்லியல் மாதை விரும்பினையேல்**
**வரையக நாட வரைந்துகொ ணீதஞ்சை வாணன்முந்நீர்**
**தரையக நான்மறைக் கேள்வியர் வேள்வியர் சான்றவர்தம்**
**உரையக நாடிமுன் னிட்டன தாகு முலகியலே.**

(இ - ள்.) மலையிடமாகிய நாட்டை யுடையவனே! தஞ்சைவாணனது முந்நீர் சூழ்ந்த புவியகத்தில் வேட்கை கொண்டார் செய்யும் உலகமுறைமை, நான்கு மறையையும் கேள்வியாலறிந்து வேள்விசெய்யுஞ் சான்றவர் கூறும் உரையிடத்துக் கொண்ட பொருளைக் கருதி அவரை முன்னிட்டு வரைந்து கொள்ளில், அன்னதாகுமாதலால், மணத்தைத் தன்னிடத்திலேயுடைய நாண்மலரிலிருக்கும் மெல்லிய இயல்பினையுடைய மாதுபோல்வாளை விரும்பினையேல், நீ வரைந்துகொள்வாயாக என்றவாறு.

விரை - மணம். நாண்மலர் - முறுக்கவிழ்மலர். மாது - ஆகுபெயர். வரைதல் - மணஞ்செய்தல். உரையகம் - ஆகுபெயர். கேள்வியர் - முற்றெச்சம். அனது - இடைக்குறைவிகாரம். (கூச)

தலைமகன் மறுத்தல் :

வெண்டா மரைமங்கை காதல னாகிய வேதியன்பால்
உண்டா கியதொல் லுலகிய லாலுங்க ளாரணங்கை [மை
வண்டார் குழலி வரைந்துகொள் வேன்தஞ்சை வாணன்வண்
கண்டா லருளுள்ள நீயென தாருயிர் காத்தபின்னே.

(இ - ள்.) வண்டார்ந்த குழலையுடையாய்! தஞ்சைவாணனது கொடை கண்டாற்போலும் அருளுள்ள நீயாதலால், இப்போது என்னுடைய அரியவுயிர் ஏகுந்தன்மையாய் நின்றது, அது ஏகாமற் காத்தபின் வெண்டாமரை மங்கைக்குக் கணவனாகிய மறையோனிடத்து உண்டாகிப் பழைமையாகிய வுலகியலால் உங்களுடைய ஆரணங்குபோல்வாளை நீ சொன்னபடி வரைந்துகொள்வேன் என்றவாறு.

வெண்டாமரை மங்கை - வாணி. வேதியன் - பிரமன். ஆரணங்கு - ஆகுபெயர். நல்குரவால் உயிர்போகின்றாரைப் போகாமல் நிலைமையைச் செய்யுங் கொடையாதலால், அக் கொடையைக் கண்டாற்போலும் அருளுள்ள நீ யெனவே, கொடைக்கும் அவளருளுக்கும் உவமை கூறியவாறாம், 'எனது ஆருயிர் காத்தபின்' என்று கூறியவாறு உணர்க. வண்மை - கொடை. (கூடு)

பாங்கி யஞ்சி யச்சுறுத்தல் :

பாங்கி அஞ்சி அச்சுறுத்தல் என்பது, பாங்கி தானும் அஞ்சினவளாய்த் தலைவனை அப் புனம்விட்டுப் போக அச்சமுறுத்திக் கூறல்.

மல்லார் புயன்தஞ்சை வாணன்வெற் பாவெமர் வந்திலியிக்
கல்லார் வியன்புனங் காவல்வி டாரவர் காணின்மிகப்
பொல்லா திருண்டது போதுமற் றியாங்களும் போதுமிங்கு
நில்லா தெழுந்தருள் நீயுமிப் போது நெடுந்தகையே.

(இ - ள்.) மற்றொழில் பொருந்திய புயத்தையுடைய தஞ்சைவாணன் வெற்பிடத்துள்ளவனே! எங்கட்குத் தமராயுள்ளவர் இன்றுவந்து மலையார்ந்தகன்ற புனம் இராக் காவல் விடார்; அவர் நின்னைக் காணில் மிகவும் பொல்லாரா யிருப்பர்; நெடுந்தகையை யுடையவனே, இருண்டதுபோது, எம்மூர்க்கு யாங்களும் போதும், நீயும் இப்போது இங்கு நில்லாது எழுந்தருள்வாயாக என்றவாறு.

எமர் - எமக்குத் தமர். வியன் - அகற்சி. நெடுந்தகை - அன்மொழித் தொகை. இதனுள், 'வெற்பா' எனவும், 'நெடுந்தகை' எனவும் இரண்டிடத்தும் பொருட்பெயர் முன்னிலையாய் நின்றது. இவ்வாறு வந்தது என்னையெனின்,

[1] 'பொருளொடு புணராச் சுட்டுப்பெய ராயினும்
பொருள்வேறு படாஅ தொன்றா கும்மே.'

என்னுஞ் சூத்திரவிதியால்.

[2] 'பொற்பூண் சுமந்த புணர்மென்முலைக் கோடு போழ
நற்பூங் கழலா னிருதிங்க ளயந்த வாறுங்
கற்பா டழித்த கனமாமணித் தூண்செய் தோளான்
வெற்பூ டறுத்து விரைவின்னெறிக் கொண்ட வாறும்.'

இதனுள், 'நற்பூங்கழலான்' எனவும், 'கற்பாடழித்த கனமாமணித் தூண்செய் தோளான்' எனவும் இரண்டிடத்தும் படர்க்கைப்பெயர் ஒரு பொருளைக் கருதியவாறு உணர்க.

'வையைக் கிழவன் வயங்குதார் மாணகலந்
தையலா யின்றுநீ நல்கினை நல்காயேற்
கூடலார் கோவொடு நீயும் படுதியே
நாடறியக் கவ்வை யொருங்கு.'

என்பதனுனும் உணர்க.

---

1. தொல். சொல். கிளவியாக்கம் - ௩௭.
2. சிந்தா. பதிகம் - கச.

இவ்வாறு வருதல் பெரும்பான்மையும் வழுவமைதியாய் வருதலின், இச்செய்யுளுள்ளும் இரண்டிடத்தும் முன்னிலைப்பொருளைக் கூறியவாறு உணர்க. மற்று - அசை. (கசு)

தலைவன் கையுறை புகழ்தல் :

**சிமையார் மலயத் தமிழ்த்தஞ்சை வாணன் சிறுமலைமேல்**
**அமையா கியதடந் தோளன்ன மேயணி யத்தகுமால்**
**உமையாள் இறைவன் பயில்கயி லாயத்தும் உம்பர்தங்கும்**
**இமையா சலத்துமெல் லாமில்லை யால்நிகர் இத்தழைக்கே.**

(இ - ள்.) சிகரத்தைப் பொருந்திய பொதியமலையிற் பிறந்த தமிழ் வளர்க்குந் தஞ்சைவாணனது சிறுமலைமேலிருக்கும் மூங்கிலிற் பெரியதோளையுடைய அன்னம்போல்வாய், இத்தழைக்கு நிகர் உமையாள் இறைவனாகிய சிவன் பிரியாது பழகியிருக்குங் கயிலாயத்தும், தேவர்கள் பிரியாதிருக்கும் இமையாசலத்தும் முற்றுமில்லை யாதலால் அணியத்தகும் என்றவாறு.

சிமையம் - சிமை யென விகாரப்பட்டு நின்றது. மலயம் - பொதிய மலை. அமை - மூங்கில். தடந்தோள் - பெரியதோள். அன்னம் - ஆகுபெயர். நிகர் - ஒப்பு. 'தடந்தோளாகிய' என மாறுக. ஆல் - அசை. இத்தழைக்கு நிகரில்லை யென்று கூறுவது என்னையெனின், தன் உயிரை நிறுத்தற்கு ஏதுவாகலானும், மணத்துக்குத் தான் முன்னிற்றலானும் என்றுணர்க. (கஎ)

பாங்கி கையுறை மறுத்தல் :

**மல்குற்ற தண்புனல் சூழ்தஞ்சை வாணன் மலயவெற்பா**
**நல்குற் றவையிந்த நாட்டுள வன்மையி னன்னுதலாள்**
**அல்குற் றடத்தெமர் கண்டால் அயிர்ப்பர் அதுவுமன்றிப்**
**பல்குற் றமும்வரு மால்யாங்கள் வாங்கேம் பசுந்தழையே.**

(இ - ள்.) நிறையுற்ற தண்புனல் சூழ்ந்த தஞ்சைவாணன் மலயவெற்பி லிருப்பவனே ! நீ தரப்பட்ட இத்தழை இந்நாட்டிலுள்ளன அல்லாமையால் நன்னுதலாள் அல்குற்றடத்திலே யணியில் எமக்குத் தமராயுள்ளார்

கண்டால் ஐயப்படுவர் ; அதுவுமன்றிப் பல குற்றமும் வருமாதலால், இப்பசுந்தழையை யாங்கள் வாங்குதல்செய்யேம் என்றவாறு.

மல்குறல் - நிறைதல். நல்குறல் - தருதல். அயர்த்தல் - ஐயப்படுதல். குலத்துக்கும் தலைவிக்கும் தனக்கும் மறு என்பதுபற்றிப் பல குற்றம் என்று கூறினாள். (௬அ)

### ஆற்றா நெஞ்சினோடவன் புலத்தல் :

ஆற்றா நெஞ்சினோடு அவன் புலத்தல் என்பது, ஆற்றாமையாகிய நெஞ்சுடனே தலைவன் புலந்து கூறியது.

**உழையும்வெங் காளமும் போலுங்கண் ணாளொரு காலமுள்ளம்**
**குழையுமெம் பாலென்று கொண்டநெஞ் சேகலிக் கோடைமண்**
**மழையுமந் தாரமும் வந்தன வாணன்தென் மாறையின்மாந் [மேல்**
**தழையுநம் போலிங்ங னேகவின் வாடத் தவஞ்செய்ததே.**

(இ - ள்.) மானும் வெவ்விய விடமும் போலுங் கண்ணையுடைய பாங்கியானவள் யாம் இரந்து பின்னின்றேமாயின், ஒருகால் எம்மிடத்து மனமிளகும் என்று எண்ணங்கொண்ட நெஞ்சே! கலியாகிய கோடைசூழ்ந்த இம் மண்ணுலகின்மேல், கோடை வெப்பந் தணிய மழையும் மந்தாரமும் வந்தாற்போன்ற வாணன் தென்மாறை நாட்டில், நம்மைப்போல் இந்த மாந்தழையும் அழகுவாடத் தவஞ் செய்ததது, யாம் என் செய்வோம் என்றவாறு.

உழை - மான். காளம் - விடம். குழைதல் - இளகுதல். கவின்- அழகு. 'மழையும் மந்தாரமும்' என்பதற்கு மேகமும் மந்தாரத் தருவும் என்று பொருளுரைப்பாரும் உளர். மழைபோல் உடனே வெப்பந் தணியாமையின் அது பொருளன்மை யுணர்க. 'யாம் என் செய்வோம்' என்பது சொல்லெச்சம். (௬௬)

### பாங்கி ஆற்றுவித் தகற்றல் :

பாங்கி ஆற்றுவித்து அகற்றல் என்பது, இவ்வாறு கூறுதல் கேட்ட பாங்கி தலைவனை அஞ்சலை நாளை வா எனக் கூறிவிடுத்தல்.

சோலையில் வாழிளந் தோகையன் னுனைத் தொழுதிரந்திம்
மாலையில் வாழி வரங்கொள்வல் யான்தஞ்சை வாணன்வெற்பா
வேலையில் வார்துகி ரன்னவெய் யோன்வெயில் வெற்பின்மல்கும்
காலையில் வாபின்னை யென்கைய தாகுநின் கையுறையே.

(இ - ள்.) தஞ்சைவாணன் வெற்பனே! சோலையில் வாழும் இளந்தோகைபோல்வாளை யான் இவ்விரா முற்றுந் தாளிற் பணிந்து இரந்து வரமாக வேண்டிக்கொள்வன்; கடலில் நெடிய பவளம்போன்ற கதிரோனது கிரணம் வெற்பிலெல்லாம் நிறையுங் காலைப்பொழுதில் வா; வந்தாயேல், அப்போது நின் கையுறை என் கையதாகும் என்றவாறு.

தோகை - மயில். வாழி - அசைநிலை. வேலை- கடல். துகிர் - பவளம். வெய்யோன் - சூரியன். வெயில் - கிரணம். மல்குதல் - நிறைதல். கையிலுறைதலின் கையுறையாயிற்று. (க00)

## இத்துணையும் ஐந்தாநாட் செய்தி

தலைமகன் கூற்றுயினவெல்லாம், 'இரந்துபின்னிற்றற்'கும், பாங்கி கூற்றுயின வெல்லாம், 'சேட்படுத்தற்'கும் உரியவாறு காண்க.

### இரந்து குறைபெருது வருந்திய கிழவோன் மடலே பொருளென மதித்தல்:

இரந்து குறை பெருது வருந்திய கிழவோன் மடலே பொருளென மதித்தல் என்பது, மற்றைநாட் காலையில் வந்த தலைமகன் இவளாற் காரியமின்றெனக் கருதி, இரந்து குறை பெருதாயினேம் என்று வருத்தமுற்று, இனி நமக்குப் பொருளாவது மடலே யெனத் தன்னுள்ளே மதித்துக் கூறல்.

திருந்தார் தொழுங்கழற் சேயன்ன வாணன்தென் மாறைவெற்பில்
அருந்தா அமுதன்ன அஞ்சொனல் லாரழ கார்குழைதோய்
பெருந்தாரை வேல்விழி தந்தவெங் காமப் பிணிதனக்கு
மருந்தா வதுநெஞ்ச மேயில்லை வேறு மடலன்றியே.

(இ - ள்.) நெஞ்சமே! பகைவர் தொழுந் தாளை யுடைய முருகவேளை யொத்த வாணன் தென்மாறை வெற்பிடத்து ஆராவமுதுபோன்ற அழகிய சொல்லையுடைய மடவாருடைய முகத்திற்கு அழகாயார்ந்த குழையைத் தொட்ட மணிபொருந்திய பெரிய வேல்போன்ற விழிப் பார்வையானது தந்த வெவ்விய காமமாகிய பிணிக்கு மருந்தாவது மடலேறலே யன்றி வேறில்லை என்றவாறு.

எனவே, யாம் அது செய்யக்கடவேம் என்பதாயிற்று.

மடலேறலாவது—தலைவன் ஒவ்வாக் காமத்தால் பனங்கருக் காற் குதிரையும், பனந்தருவி னுள்ளனவற்றால் வண்டில் முதலானவும் செய்து அக்குதிரையின்மே லேறுவது. மடலேறுவான் திகம்பரனாய், உடலெங்கும் நீறுபூசிக், கிழி ஓவியர் கைப்படாது தானே தீட்டிக், கிழியின் தலைப்புறத்தில் அவள்பேரை வரைந்து கைப்பிடித்து, ஊர்நடுவே நாற்சந்தியில் ஆகாரம் நித்திரை யின்றி, அக்கிழிமேற் பார்வையும் சிந்தையும் இருத்தி, வேட்கை வயத்தனாய் வேறு உணர்வின்றி, ஆ வூரினும் அழல் மேற்படினும் அறிதலின்றி, மழை வெயில் காற்றான் மயங்காதிருப்புழி, அவ்வூரிலுள்ளார் பலரும் கூடி வந்து நீ மடலேறுதியோ? அவளைத் தருதும், சோதனை தருதியோ? என்றவழி இயைந்தானாயின், அரசனுக்கறிவித்து, அவனேவலால் அவன் இளைந்து நையத்தந்து முடலேறென்றவழி, ஏறும் முறைமை: பூளை, எலும்பு, எருக்கு இவைகளாற் கட்டிய மாலை யணிந்துகொண்டு அம்மாவிலேற, அவ்வடத்தை வீதியில் ஈர்த்தலும், அவ்வுருளை யுருண்டோடும்பொழுது, பனங்கருக்கு அறுத்த இடமெல்லாம் இரத்தந் தோன்றாது வீரியம் தோன்றின், அப்போது அவளை யலங்கரித்துக்கொடுப்பது; இரத்தங்கண்டுழி அவனைக் கொலைசெய்துவிடுவது. இவை புலவரால் நாட்டிய வழக்கென்று உணர்க.

சேய் - முருகன். தோய்தல் - தொடுதல். தாரை - கண்மணி. ‘பெரு வேல்’ என மாறுக. வேல்விழி - அன்மொழித்தொகை. காமத்தைப் பிணியாகக் கூறப்பட்டமையின் மடலேறுதலை மருந்தாகக் கூறப்பட்டது. (க0க)

### பாங்கிக்குலகின்மேல் வைத்துரைத்தல்:

பாங்கிக்கு உலகின்மேல் வைத்து உரைத்தல் என்பது, தலைவன் அம்மடலேற்றினை உலகின்மேல் வைத்துப் பாங்கிக்குக் கூறுதல்.

விரையூர் குழலியர் தந்தசிந் தாகுல வெள்ளநிரை
கரையூர் பொழுதிளங் காளையர் தாங்கிழி கைப்பிடித்துத்
தரையூர் தொறும்பெண்ணை மாமட லூர்வர் தவிர்ந்துபின்னும்
வரையூர்வர் தஞ்சையர் கோன்வாணன் மாறையில் வாணுதலே.

(இ - ள்.) தஞ்சையி லுள்ளார்க்கு இறைவனாகிய வாணன் தென்மாறை நாட்டிலிருக்கும் ஒளிபொருந்திய நுதலினை யுடையவளே! மணமூருங் குழலையுடைய மாதர் தந்த காதலாகிய வெள்ளமானது நிரைத்த கரையின்மேற் செல்லும்போது, இளங்காளையர் தாம் வரைந்த கிழியைக் கையிலே பிடித்துப் புவியின்கணுள தாகிய ஊர்கடோறும் பனைமடலினாற் செய்த மாவை நடத்துவர்; அதனாற் சிந்தனை முடியாவிடில், அதனை விடுத்துப் பின்னும் வரை பாயச் செல்வர்; இதனை நீ அறிவாயாக என்றவாறு.

விரை - மணம். ஊர்தல் - நாற்றிக்குஞ் சென்று கமழ்தல். கரையூர்தல் - கரைமேற் செல்லுதல். கிழி - தலைவி யுரு எழுதப் பட்டது. பெண்ணை - பனை. 'மடல் மா' என மாறுக. வரை யூர்தல் - வரைபாய நடத்தல். (க0௨)

### அம் மடலேற்றினைத் தலைவன் தன்மேல்வைத்துச் சாற்றல்:

அம் மடலேற்றினைத் தலைவன் தன்மேல் வைத்துச் சாற்றல் என்பது, அம்மடலேற்றினைத் தலைவன் தன்மேல் வைத்துக் கூறல்.

வன்பணி போனிலந் தாங்கிய வாணன்தென் மாறைவெற்பில்
மின்பணி பூண்முலை மெல்லிய லீர்குறை வேண்டியுங்கள்
முன்பணி வேனின்று நாளைவெண் பூளை முகிழெருக்கோ
டென்பணி வேன்மடல் மேல்வரு வேனிவை யென்பணியே.

(இ - ள்.) வலிய அநந்தனைப்போல நிலவுலகத்தைத் தாங்கிய வாணன் தென்மாறை வெற்பில் மின்னும் பணியும் ஒளிப் பூண் பொருந்திய முலையினையுடைய மெல்லியலீர்! எனது குறையை முடிக்கவேண்டி யின்று உங்கள் முன் பணிவேன்; யான் பணிதலைக் கண்டு என் குறையை

முடியாவிடில், நாளை வெண்பூளைப்பூ எருக்கமுகையுடனே என்புமாலை அணிந்து மடன்மா ஏறி வருவேன்; என்னுடைய தொழில் இவை என்றவாறு.

'முடியாவிடில்' என்பது அவாய்நிலையான் வந்தது. வன்பணி- அநந்தன். 'எருக்க முகிழ்' என மாறுக. அணிவேன் - முற்றுச் சொல் எச்சமாய் நின்றது. பணி - தொழில்.

இவ்வாறு மடலேறுவேன் என்று கூறியது பெருந்திணைப்பாற் படுமே யெனின், படாது. என்னை, தலைவன் பாங்கி உடன்பட வேண்டுமென்று குறித்துச் சொல்லியதல்லது மடலேறுங் கருத்தாய்க் கூறினன் அல்லன். ஆதலானன்றே மடலேற்றெனவையாது மடற்கூற்றென்று கூறியது; சான்றோர் செய்யுட்களிலெல்லாம், மடற்கூற்றென்றே வருவதல்லது மடலேற்றென வாராமையானும், [1]'மடன்மா கூறு மிடனுமா ருண்டே.' என்று தொல்காப்பியர் கூறிய வாற்றானும் உணர்க (க0கூ)

பாங்கி தலைமகள் அவயவத் தருமை சாற்றல் :

பாங்கி தலைமகள் அவயவத் தருமை சாற்றல் என்பது, அவ்வாறு கூறக்கேட்ட பாங்கி கிழிதீட்டிய பின்னன்றே மடலேறுவது, ஆதலால் தலைவி யவயவம் தீட்டுதற்கு அருமையென்று கூறல்.

**தொடையே யெருக்கென்பு நீயணிந் தாலென்னை சூல்வளையூர்**
**மடையேய் வயற்றஞ்சை வாணன்வெற் பாமல ரோன்வகுத்த**
**படையே நயனம் படைத்தபொற் பாவை படியெடுக்க**
**இடையே தெனத்தெரி யாதுரை யாணி யிடவரிதே.**

(இ - ள்.) சூல்கொண்ட சங்குகள் ஊரும் மடை பொருந்திய வயல்சூழ்ந்த தஞ்சைவாணன் வெற்பனே! மாலையாக எருக்கையும் என்பையும் நீ யணிந்தால் நினக்கியாது பயனைத் தரும்? கிழிதீட்டிய பின்னன்றே மடலேறுவது, தீட்டுதல் நின்னால் முடியாது; எங்ஙனமெனின், பிரமன் வகுத்த படைக்கலமே நயனமாகப் படைத்த பொற்பாவையது உருப் படியெடுக்க இடையாதெனின் தெரியாது; சொல்லை யெழுது கருவியால் எழுதவரிது.

1. தொல். பொருள். களவியல் - கக.

இதனுள், 'பொற்பாவை' என்பது, பொன்னம்பாவை யாக்கிப் படிக்கல்லிட்டு நிறுக்க நிறையேதெனத் தெரியாது, உரைக்க எண்ணின் உரையாணியிடவரிது ; இவ்வாறு வேறு பொருடோன்றிச் சிலேடையாய் நின்றது காண்க.

தொடை - மாலை. ஏகாரம் - ஈற்றசை. சூல்வளை - கருப்பங் கொண்ட சங்கு. 'எருக்கென்பு' என்புழி, எண்ணும்மை தொக்கு நின்றது. உரையாணி - உரையை யறிவிக்குங் கருவி. (கOச)

தலைவன் தன்னைத்தானே புகழ்தல் :

தலைவன் தன்னைத்தானே புகழ்தல் என்பது, இவ்வாறு எழுதல் அரிதென்று கூறிய பாங்கியை நோக்கி, யான் எழுத வல்லேன் எனத் தன்னைத்தானே புகழ்ந்து தலைவன் கூறல்.

**நறையல ராவிரைப் போதிசை யாதிசை நான்முகத்தும்**
**மறையல ராவந்த மான்மகன் யான்தஞ்சை வாணன்வையைத்**
**துறையல ராவியங் காவியங் கண்ணி துணிந்துசொல்லுங்**
**குறையல ரார்குழ லாட்கினித் தீரக் குறையில்லையே.**

(இ - ள்.) நறையலரென்னும் அவ் விரைப்போதிலிசைந்து திக்குக்கொரு முகமாகும் நான்முகத்திடத்தும் வேதம் விரிவாக வந்த மாலுக்கு மகன் யானுதலால், தஞ்சைவாணன் வையைத் துறையினும், விரிவாகிய வாவியினும், நீரிற்றோன்றிய காவிப்பூப்போலுங் கண்ணையுடையாய், நீ யெழுதப்படாதென்று துணிந்து சொல்லுங் குறையலரார்ந்த குழலையுடையாட்கு இன்றெழுதப்படாதென்று விடத்தக்கதாய குறையில்லை என்றவாறு.

இன்னுமோர் பொருள், நறையலரென்னும் அவ்விரைப்போதிலிசையாது நான்கு திசையிடத்தும் களவு வெளியாக வந்த ஆசை கொண்ட புருடன் யானெனச் சிலேடைவகையால், பிரமன் யானெனத் தோன்றியவதனுல் எழுதற்கரிய தின்றென்று கூறியவாறுமாயிற்று.

நறை - மணம். அவ்விரை - ஆவிரை யெனச் சுட்டு நீண்டது, ஆவயினுன என்றாற்போல.

பிரமன்மேல் ஏற்றுங்கால்—இசையா - இசைந்து. மறை - வேதம். அலராவந்த - விரிவாகவந்த. மால் - மாயோன். மகன் - பிரமன்.

தலைவன்மேல் ஏற்றுங்கால்—இசையா - இசையாது. நான் முகம் - நான்கிடம். மறை - மறைகள். அலராவந்த - வெளியாக வந்த. மால் - ஆசை. மகன் - புருடன். ஆவி - வாவி. அம் - நீர். காவி - நீலப்பூ. அம் - சாரியை; அழகு. கண்ணி-அண்மை விளி. தீர்தல் - விடல். [1]"தீர்தலுந் தீர்த்தலும் விடற்பொருட் டாகும்.' என்பதனாற் கொள்க. குறை - குற்றம். குறை - குறைவு.

**பாங்கி அருளியல் கிளத்தல்:**

பாங்கி அருளியல் கிளத்தல் என்பது, அவ்வாறு தலைவன் கூறக் கேட்ட பாங்கி மடலேறத் தகாது என அருண்முறைமை கூறுதல்.

**செயலார் குடம்பையிற் செந்தலை யன்றிற் சினையுளபைங்**
**கயலார் வனவெண் குருகின்வண் பார்ப்புள கைக்கடங்கா**
**மயலார் களிற்றண்ணல் வாணன்தென் மாறைவை யைத்**
**இயலா தருளுடை யார்க்கென்று மாமட லேறுவதே. [துறைவா**

(இ - ள்.) பாகன் கைக்கடங்கா மதத்தால் மயக்க மார்ந்த களிற்றரசனாகிய வாணன் தென்மாறைநாட்டில் வருகின்ற வையைத் துறைவனே, பனையில் புட்களாற் செய் யப்பட்ட செயலார்ந்த கூட்டில் சிவந்த தலையினையுடைய அன்றில் முட்டைகளுள; பசிய கயலார்வனவாகிய வெண் ணிறக்குருகின் வளவிய பார்ப்புகளுள; ஆதலால், அரு ளுடையார்க்கு எக்காலத்தும் மடன்மா ஏறுதல் பொருந் தாது என்றவாறு.

எனவே, மடலேறத் தகாது என அருண்முறைமை கூறுதலால், பனையை வெட்டலும், முட்டைகளைச் சிதைத்தலும், பார்ப்புக்களை வதைத்தலும் ஆகிய பாவங்கள் சூழ்தலின், அருளுடையோர்க்கு ஆகாது என்றவாறாயிற்று. மடற்கூற்று அதிகாரப்பட்டு வருதலின் பனை யென வருவிக்கப்பட்டது.

செயல் - தொழில். குடம்பை - கூடு. 'செந்தலையன்றில்' - வண்ணச்சினைச்சொல்.

[2]'அடைசினை முதலென முறைமூன்று மயங்காமை
நடைபெற் றியலும் வண்ணச் சினைச்சொல்.'

என்னுஞ் சூத்திரத்தான் உணர்க.

1. தொல். சொல். உரியியல் - உஉ.
2. தொல். சொல். கிளவியாக்கம் - உசு.

சினை - முட்டை. குருகு - நாரை. பார்ப்பு - பிள்ளை.

[1] 'பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற் றிளமை'

என்பதனுன் உணர்க. மயல் - மயக்கம். களிறு - யானை. இயலாது - பொருந்தாது. அண்ணல் - வேந்தன். (கoகூ)

**கொண்டு நிலைகூறல் :**

கொண்டு நிலைகூறல் என்பது, தலைவன் உயிரைத் தாங்கிக் கொண்டு நிற்கும் நிலைமையாகிய மொழியைப் பாங்கி கூறல்.

**வெண்டோ டணிமுகப் பைங்குரும் பைக்கொங்கை வெய்யவுண்**
**கண்டோர் விரும்புங் கரும்பனை யாரைக் கடற்றுறைவா [கட்**
**கொண்டோர் குறைமுடி கொம்பனை யார்நின் குறைமறுத்தால்**
**வண்டோ லிடுந்தொங்க லான்வாணன் மாறை வளநகர்க்கே.**

(இ - ள்.) கடற்றுறைவா! கொம்பனையார் நினது குறையை மறுத்தால், வெண்மைநிறம்பொருந்திய தோடணிந்த முகத்தையும், பசிய குரும்பையாகிய கொங்கையையும், உண்ணப்பட்ட வெய்ய கள்ளையுமுடைய கண்டோரால் விரும்பப்படுகின்ற கரிய பனையாரைக்கொண்டு, வண்டுகள் ஆரவாரிக்கும் மாலையையணிந்தவாணன் மாறையாகிய வளவிய நகரிடத்து ஒப்பற்ற நின்குறையை முடிப்பாயாக என்றவாறு.

கொம்பனையார் மறுத்தகாலையில் தோடணிந்த முகமும், குரும்பைபோன்ற கொங்கையும், உண்கண்ணுமுடைய கரும்பு அனையாரைக்கொண்டு எனச் சிலேடையால் ஒரு பெண்ணுகத் தோன்றியவாறு உணர்க.

'மறுத்தாற் குறைமுடி' யெனவே, குறிப்பான் மறுவெனத் தோன்றி நிற்றலின், அவன் உயிரைத் தாங்கிக்கொண்டு நிற்கும் நிலைமையாயிற்று. முன்கூறிய செய்யுட்களில், 'வெற்பன், சிலம்பன், பொருப்பன்' என்று குறிஞ்சிநிலத்துத் தலைமகனைக் கூறி, இவ்விடத்தில் 'கடற்றுறைவா' என்று நெய்தனிலத்துத் தலைமகனைக் கூறியவதனுன், முன்கூறிய தலைவனேயோ, இவன் வேறேயோ எனின், அத்தலைவன்தானே இவன். ஐந்திணையில் எத்திணை கூறி

1. தொல். பொருள். மரபியல் - ௯.

னும் அத்திணைக்குரிய கருப்பொருளாற் கூறப்படும்; ஆயின், இக் கிளவி எத்திணைப்பாற்படுமெனின், நெய்தற்பாற்படும். அஃதென்னை யெனின், பனை நெய்தனிலத்துக் கருப்பொருளாதலான், 'கடற் றுறைவா' எனக் கூறியவாறு. பனை நெய்தனிலத்துக் கருப்பொரு ளானவாறு என்னையெனின், குறிஞ்சி கற்பூமியாதலான் பனைக் காகாது; பாலைக்குத் தீந்து போவதல்லது பயிராவதில்லை; முல்லை, வரகு சாமை முதிரை முதலாயின மக்கட்கு ஊணும், நிரையினங்கட் குப் புல்லு முதலியன உணவும், நிழலுமாக இருத்தலின் பனைக்கா காது; மருதநிலத்திற்கு வாவியும், குளனும், கமுகு, வாழை, செந் நெல், கரும்பு முதலியனவும் நீர்ச்சார்பாதலின், அந்நிலத்திற்கும் பனையாகாது; மணல்நிலத்திற் பயிராதலால் நெய்தனிலத்துக் கருப்பொருளாயிற்று.

தோடு - பனைமேலேற்றுங்கால் ஏடு; பெண்மேலேற்றுங்கால் செவியிற்குழை. குரும்பைக் கொங்கை-பனைக்குப் பண்புத்தொகை; பெண்ணுக்கு உவமைத்தொகை. 'உண்கட்' பனைக்கு உறுகள்; பெண்ணுக்கு மையுண்ட கண். ஓலிடுதல் - ஆரவாரித்தல். 'வள நகர்க்கே' என்புழி வேற்றுமை மயக்கம்.

தலைமகன் கூற்றாயினவெல்லாம், 'மடற்கூற்' றிற்கும், பாங்கி கூற்றாயின வெல்லாம், 'மடல்விலக்'கிற்கும் உரித்தாவாயினவாறு காண்க. (கOஎ)

தலைவி யிளமைத்தன்மை பாங்கி தலைவற் குணர்த்தல்:

**களவரும் பாகரு நீலங்கள் காமக் கடவுளுமால்**
**கொளவரும் பாபைங் குரும்பைக் குலஞ்செங் குமுதத்துவெண்**
**தளவரும் பாநண்ப னேதஞ்சை வாணன் தமிழ்வையைநாட்**
**டிளவரும் பாமிவள் மாட்டென்கொ லோநின் னிரப்பதுவே.**

(இ - ள்.) நண்பனே! கரு நீலம் போன்ற கண்களிற் களவு அரும்பவில்லை; காமக் கடவுளும் காதல்கொள்ளா மார்பில் பசிய குரும்பைக்குலைபோல முலைகள் அரும்ப வில்லை; செவ்விய குமுதம்போன்ற வாயில் வெண்டளவு போன்ற பல் அரும்பவில்லை: தஞ்சைவாணன் தமிழ் வையைநாட்டின் அரும்புபோன்ற இவளிடத்தில் யான் சென்று நின்று இரப்பது எவ்வாறு சொல்வாயாக என்ற வாறு.

பொருளை உவமைப்பொருளாய்க் கூறியவெல்லாம் ஆகுபெயர். சொல்லும், ஓவும் அசைநிலை. (கo அ)

தலைவன் தலைவி வருத்தியவண்ண முரைத்தல் :

சிலைபயில் வாணுதல் மின்னே பிறந்தவச் செவ்வியிலே
கொலைபயி ஞகக் குருளையைப் போற்குறி யோனிருந்த
மலைபயில் வார்தமிழ் வாணன்தென் மாறை மயிலனையாள்
அலைபயி லால்விழி யாலென தாவி யணங்கினளே.

(இ - ள்.) சிலை வளைவு பழகும் வாணுதலையுடைய மின்னே ! குறுமுனிவன் இருந்த மலையில் பழகிய நெடுந் தமிழ்கற்ற வாணன் தென்மாறைநாட்டு மயிலனையாள் பிறந்த அக்காலத்தே கொலைபழகிய நாகக் குட்டியைப் போல் அலையிற் பழகிய ஆலம்போன்ற விழியால் எனது ஆவியை வருத்தினுள் என்றவாறு.

சிலை - வில். பயிலல் நான்கும் பழகுதல். குருளை - குட்டி. குறியோன் - அகத்தியன். 'வாணுதன் மின்னே' என்றது சிறப் புருவகம். அலை - ஆகுபெயர். ஆலம் - ஆல் என விகாரப்பட்டது ; நீலம் - நீல் என நின்றாற்போல. (கoக)

பாங்கி தலைமகள் செவ்வியருமை செப்பல் :

பாங்கி தலைமகள் செவ்வி யருமை செப்பல் என்பது, தலைமக ளது காலப்பருவத்தின் அருமை கூறுதல்.

ஏடா ரலங்கல் இலங்கிலை வேல்வெற்ப ஏழுலகம்
வாடாமல் வந்தருள் வாணன்தென் மாறையில் வல்லியன்னுள்
சூடாள் குவளையு முல்லையஞ் சூட்டுஞ் சுனையும்பந்தும்
ஆடாள் தனக்கென்கொ லோஅடி யேன்சென் றறிவிப்பதே.

(இ - ள்.) பூவார்ந்த மாலை யணிந்து இலங்கப்பட்ட இலைபோலும் வேலையுடைய வெற்பனே ! ஏழுலகும் வாடா மைக்குக் காரணமாக வந்தருளப்பட்ட வாணன் தென் மாறைநாட்டில் வல்லிபோல்வாள் குவளைப்போதும் முல்லை யஞ்சூட்டும் சூடாள், சுனையும் பந்தும் ஆடாள், அவள்

தனக்கு அடியேன் போய் அறிவிப்பது எவ்வாறு என்றவாறு.

ஏடு - ஆகுபெயர். அலங்கல் - மாலை. இலங்குதல் - ஒளிர்தல். இலைவேல் - உவமைத்தொகை. 'குவளையு முல்லையஞ் சூட்டுஞ் சூடாள்' என்றும், 'சுனையும் பந்துமாடாள்' என்றும், ஒருவினை கொண்டு முடிந்தது. முல்லையஞ்சூட்டு - முல்லைப்பூவாற் சுட்டி போலச்செய்து நெற்றியிற் கட்டுவது. 'தனக்கு' என்புழி சுட்டு வருவிக்க. கொல்லும், ஓவும் அசைநிலை. (கக0)

### தலைவன் செவ்வியெளிமை செப்பல்:

*தலைவன் செவ்வி யெளிமை செப்பல் என்பது, செப்புதற்குப் பதம் எளிதெனத் தலைவன் கூறுதல்.*

தேன்வந்த வாயிதழ்ச் சேயிழை யாயிளஞ் செவ்விநவ்வி
மான்வந்த வாள்விழி வஞ்சிக்கு நீதஞ்சை வாணன்வெற்பில்
யான்வந்த வாசென் றியம்புதி யேலவர் யாவரென்னுள்
தான்வந்த வாவுட னேநின்னை யாரத் தழீஇக்கொளுமே.

(இ - ள்.) தேன்போன்ற சொல்வந்த வாயிதழையும் செய்ய பூணையும் உடையாய்! இளமையழகாகிய நவ்வி மான்போல் வந்த வொளிபொருந்திய கண்ணையுடைய வஞ்சிக்குத் தஞ்சைவாணன் வெற்பில் யான் வந்தவாறு நீ சென்று கூறுதியேல், அவர் யாவரென்று கூறாது, தான் ஆசையுடனே வந்து, நின்னை ஆகத்தோடு ஆகம் பொருந்தத் தழுவிக்கொள்வாள் என்றவாறு.

தேன் - ஆகுபெயர். நவ்வி மான் - இருபெய ரொட்டுப் பண்புத்தொகை. 'மான்வந்த வாள்விழி' - உவமைத்தொகை. வந்தவா - வந்தவாறு. 'நீ சென்று' எனவும், 'தான் அவாவுடன் வந்து' எனவும் இயையும். (ககக)

### என்னை மறைத்தபின் எளிதென நகுதல்:

*என்னை மறைத்தபின் எளிதென நகுதல் என்பது, நீர் இருவரும் ஒத்து என்னை மறைத்தபின் இக்களவொழுக்கம் ஒழுகுதற்கு எளிதென நகையாடிக் கூறல்.*

மண்ணும் பயில்வித்து மொன்றினுஞ் சந்திர வாணன்வெற்பா
நண்ணும் புனலின்றி அங்குரி யாதுங்கள் நல்வினையாற்
கண்ணுங் கருத்துங் கலந்தன வாயினுங் கண்ணினும்முள்
எண்ணுங் குறையென்னை நீர்மறைத் தாலிங் கியல்வதன்றே.

(இ - ள்.) சந்திரவாணன் வெற்பனே! நிலனும் நிலத்துப் பழகிய வித்தும் இரண்டும் ஒத்துக் கூடினும், அவ்விரண்டும் நனையப்பொருந்தும் புனலின்றி முளையாதது போல, நீங்கள் முன்செய்த நல்வினையால் கண்ணும் கருத்தும் கலந்தனவாயினும், கருதுமிடத்து நும்முள்ளத்துள் எண்ணுகின்ற குறை நீர் என்னை மறைத்தால் இவ்விடத்து முடிவதன்று என்றவாறு.

பயிலுதல் - பழகுதல். அங்குரியாது - முளையாது. எண்ணல்- கருதல். இயலுதல் - பொருந்துதல்; பொருந்தல் எனவே முடிவின் மேல் நின்றது. இச்செய்யுளில் 'அங்குரியாது, அதுபோல' என்று சுட்டிக்கூறாத உவமமாயிற்று. என்னை,

[1] 'சுட்டிக் கூறா வுவம மாயிற்
பொருளெதிர் புணர்த்துப் புணர்த்தன கொளலே.'

என்னுஞ் சூத்திரவிதியால்,

[2] 'மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.'

என்றாற்போலக் கொள்க. (ககஉ)

அந்நகைபொறாது அவன்புலம்பல்:

அந்நகைபொறாது அவன் புலம்பல் என்பது, அவள் நகையாடிக் கூறுதல் பொறாமல், தலைவன் புலந்து கூறுதல்.

வெவ்வே லெறிந்த விழுப்புண்ணின் மீட்டும் வெதுப்பியதோர்
செவ்வேல் நுழைப்பவர் சீலமன் றேதிரு வேமருவார்
வைவேல் அமர்வென்ற வாணன்தென் மாறை மயில்பொருட்டால்
நைவேனை அஞ்சலென் றுதின்ன வாறு நகைக்கின்றதே.

---

1. தொல். பொருள். உவமவியல் - எ.
2. குறள். விருந்தோம்பல் - க0.

(இ - ள்.) திருவையொப்பவளே, மருவார் வைவே லாற் செய்யும் போரைவென்ற வாணன் தென்மாறைநாட்டு மயில்போன்றவள் பொருட்டால் நைகின்ற என்னை அஞ்சலை யென்றோதாது இவ்வாறு நகைக்கின்றது, வெவ்விய வேலெறிந்து துன்பந்தரும் புண்ணில் மீட்டும் அழலிற் பழுக்க வெதுப்பியதோர் வேலை நுழைப்பவர் குணமன்றோ என்றவாறு.

வெவ்வேல் - கொடியவேல். விழுப்புண் - துன்பந்தரும் புண். வெதுப்பல் - அழலிடை வெதுப்பல். செவ்வேல் - பழுக்கக் காய்ந்த வேல். சீலம் - குணம். திரு - ஆகுபெயர். வை - கூர்மை. அமர்- போர். மயில் - ஆகுபெயர். ஆதலால், நகைக்கின்ற நின்குணமும், வேலை நுழைப்பவர்தங் குணமும் ஒக்கும் என்பதாயிற்று. (௧௧௩)

பாங்கி தலைவனைத் தேற்றல் :

**தன்கண் ணனையதன் பாங்கிய ருள்ளுந் தனக்குயிராம்**
**என்கண் ணருள்பெரி தெம்பெரு மாட்டிக் கிகல்மலைந்தார்**
**வன்கண் ணமர்வென்ற வாணன்தென் மாறையில் வந்தவளால்**
**புன்கண் ணடையலை நீயினி வாடல் புரவலனே.**

(இ - ள்.) புரவலனே! எம்பெருமாட்டிக்குத் தன் கண்போன்றுள்ள பாங்கியர் பலருளர், அப்பலருள்ளுந் தனக்கு உயிரொக்கும் என்னிடத்து அருள்பெரிது; பகையா யெதிர்ந்தார் கொடிய அமரைவென்ற வாணன் தென்மாறையில் வந்து அவளால் வருத்தமடையலையாய் இன்று வாடற்க என்றவாறு.

எனவே, பாங்கியர் பலருங் கண்போன்றவர் என்றும், தான் உயிர்போன்றவள், தன்னிடத்து அருள்பெரிதென்றும் கூறியவதனால், தன் சொல்மறாள், நீயஞ்சாதையென்று தேற்றியவாறாயிற்று. உயிராம் - உயிரொக்கும். இகல் - பகை. வன்கண் அமர் - கொடிய அமர். புன்கண்-வருத்தம். வாடல் - அல்லீற்று வியங்கோள். (௧௧௪)

பாங்கி கையுறை யேற்றல் :

**ஒலிதெண் கடல்புடை சூழுல கேழினு மூழ்வினைதான்**
**வலிதென் பதனை வயக்கிய தாற்றஞ்சை வாணன்வெற்பா**
**கலிதெங்கு மாவுங் கமுகும் பலாவுங் கதலிகளும்**
**பொலிதென் பொதியிலின் மேற்சந்த னடவிப் பூந்தழையே.**

(இ - ள்.) தஞ்சைவாணன் வெற்பா! இலாங்கலி தென்னை மா பாக்கு பலா வாழை ஆகிய மரங்கள் பொலிந்த தெற்கின்கணுள்ள பொதியமலையிடத்து உண்டாகிய சந்தனக்காட்டிற் றோன்றிய இப்பூந்தழையானது, ஒலியொடு கூடித் தெளிந்த கடன்மருங்கிற் சூழ்ந்த உலகேழிடத்தும் பழவினைதான் வலிதென்று சொல்வதனை இப்போது விளங்கச்செய்தது என்றவாறு.

எனவே, கையுறை யேற்றவா றாயிற்று. இதனுள் கருப்பொருள் மயங்கியவாறு,

[1] 'உரிப்பொரு ளல்லன மயங்கவும் பெறுமே.'

என்னுஞ் சூத்திரவிதியால் உணர்க.

புடை - மருங்கு. ஊழ்வினை - பழவினை. வயக்கியது - விளக்கியது. கலி - இலாங்கலி, தலைக்குறையாய் விகாரப்பட்டு நின்றது: தெங்கில் ஓர் வேறுபாடு. 'கலி தெங்கும்' என்புழி,

[2] 'எஞ்சுபொருட் கிளவி செஞ்சொ லாயின்.'

என்னுஞ் சூத்திரவிதியால், உம்மை தொக்கு நின்றது. உம்மைகள் எண்ணின்கண் வந்தன. கதலி - வாழை. அடவி - காடு. பூந்தழை - பூவோடு கூடிய தழை. (கககு)

### கிழவோனாற்றல் :

கிழவோனாற்றல் என்பது, தலைவன் துயர்மாறிக் கூறுதல்.

**மைப்போ தணிதொங்கல் வாணனென் னுரென வல்வினையேற்**
**கப்போ தடைந்த அருந்துயர் நீங்கி யரும்பியபொற்**
**செப்போ திளமுலை யாளைகை வாண்முகத் திங்களைக்கண்**
**டிப்போ திளகிய தாலிந்து காந்தங்கொ லென்னெஞ்சமே.**

(இ - ள்.) குவளைப் போதால் இயன்ற மாலையை யணிந்த வாணன் பகைவரையொத்த வல்வினையேனாகிய எனக்கு நென்ன லடைந்த அரிய துன்பம் நீங்கித் தோன்

1. தொல். பொருள். அகத்திணையியல் - கங.
2. தொல். சொல். இடையியல் - ௩௬.

றிய பொற்செப்பு உவமையா யோதிய இளமுலையையுடைய பாங்கியது மகிழ்ச்சி ஒளிபொருந்திய முகத்திங்களைக் கண்டு, இப்போது மகிழ்ச்சியால் இளகியதாதலால், என் னெஞ்சம் சந்திரகாந்தம் என்னுஞ் சிலை என்றவாறு.

எனவே, ஈரமின்றிப் புலர்ந்த தன்னெஞ்சம் பாங்கி முகத் திங் களைக் கண்டு, இப்போது மகிழ்ச்சி யென்னும் நீருண்டாதலின், 'இந்து காந்தம்' என்று கூறியது.

மைப்போது - குவளைப்போது. ஒன்னார் - பகைவர். அரும் பல் - தோன்றல். கொல் - அசைநிலை.

பாங்கி கூற்றாயினவெல்லாம், 'குறைநேர்தற்'கும், தலைவன் கூற்றாயின வெல்லாம், 'மடற்கூற் றொழிதற்'கும் உரியவாறு உணர்க. (ககசு)

இறைவன் றனக்குக் குறைநேர்பாங்கி இறைவிக்கு அவன்குறை யுணர்த்தல் :

**இருவர்கண் டால்வரு மேதமென் றெண்ணி யெனக்கெதிரே**
**வருவர்வந் தாலுந்தம் வாய்திற வார்தஞ்சை வாணன்வெற்பின்**
**ஒருவர்நஞ் சார லுழையக லார்தழை யுள்ளதெல்லாந்**
**தருவர்வம் பார்முலை யாயென்கொ லோசெயத் தக்கதுவே.**

(இ - ள்.) வம்பார் முலையாய்! இருவர் கண்டால் குற்றம் வருமென்றெண்ணி எனக்கு எதிராயேவருவர், வந்தாலும் தம் வாய்திறந்து ஒன்றுஞ் சொல்லார்; தஞ்சை வாணன் வெற்பில் ஒருவர் நம்முடைய மலைச்சாரலிடத்தை விட் டகலார்; இவ்வனத்திலுள்ள தழைகளையெல்லாங் கொய்துவந்து தருவர்; அவர்க்கு யாம் செய்யத்தக்க தென்னோ என்றவாறு.

ஏதம் - குற்றம். உழை - பக்கம். வம்பு - கச்சு. கொல் - அசைநிலை. (ககஎ)

இறைவி யறியாள்போன்று குறியாள் கூறல் :

இறைவி யறியாள்போன்று குறியாள் கூறல் என்பது, பாங்கி இவ்வார்த்தை கூறவே தலைவி தான் கேட்டு அறியாள்போல மனத் திற் கருதாத வேறொன்றைக் கருதிக் கூறல்.

பாங்கி வினவியதற்கு விடைகூறாது வேறொன்று கூறியது, [1]'செப்பும் வினவும் வழாஅ லோம்பல்' என்று கூறிய விதியின்றி வழுவக் கூறுதலால் செப்புவழு என்னுங் குற்றந் தங்குமேயெனின், தங்காது. என்னை, 'ஒருவர் வந்திருக்கின்றார், தழையுள்ளதெல்லாந் தருவர், அவர்க்கு யாம் என்செய்வோம்?' என்று வினயவழி, இவள் பெருநாணுடைய ளாதலால், அவன் நினைத்தபடி செய்வோமென்று கூறத் தகாதாதலானும், இவள் கற்புக்கடன் பூண்டவளாதலானும், மறுக்கத்தகா தாதலானும், காமம் ஒருபாலும் நாணம் ஒருபாலும் ஈர்த்துக்கொண்டு நிற்றலின், ஒருபாற் சாரமாட்டா ளாதலானும், என்செய்வோம் என்று நெஞ்சிற் கவற்சியுற்று நடுவாக நின்றாளாகலான், அவள் கேட்டதற்கு விடை செவ்வன் கூறாது, அக்கணம் மனத்திற்றோன்றிய வொன்று கூறுவது, இவ்விடத்திற்கு முன்னம் என்னும் உறுப்பாதலின், இவ்வாறு கூறுதல் செப்புவழு அன்றெனக் கொள்க.

இவ்வாறு கூறாது வாளாவிருக்கின் அமையாதோ வெனின், வாளாவிருக்கின் அவள் கூறியதற்கு உடம்பட்டாளாம்; உடன்படின் மேற்கூறுங் கிளவிகள் பலவற்றையும் நீக்கல்வேண்டுமாதலான், இவ்விடத்து இம்மொழி இவரிவர்க்கு உரியவென்று அவ்விடத் தவரவர்க்கு உரைப்பதுபற்றி,

> [2] 'முன்னத்தி னுணருங் கிளவியு முளவே
> யின்ன வென்னுஞ் சொன்முறை யான.'

என்னுஞ் சூத்திரவிதியால், இவ்வாறு கூறுதல் இயல்பெனக் கொள்க.

**கலைதொடக் கீண்ட கருவியந் தேன்பல கால்கொடுமா**
**மலைதொடுத் தூர்ந்து வருகின்ற தாற்றஞ்சை வாணன்வென்றிச்**
**சிலைதொடுத் தாங்கெழில் சேர்நுத லாய்பயில் செம்பழுக்காய்க்**
**குலைதொடுத் தோங்குபைங் கேழ்ப்பூக நாகக் குழாங்கவர்ந்தே.**

(இ - ள்.) தஞ்சைவாணன் வெற்றிச் சிலைதொடுத் தாற்போலும் அழகு சேர்ந்த நுதலையுடையாய்! பிறைக்கோடு தீண்டக் கிழிந்த இறாற்றொகுதிகள் தங்கிய தேனது ஒரு முகமாய் வாராது பலகால்கொண்டு பெரிய மலையுச்சி தொடுத்துக்கடந்து நெருங்கிச் சிவந்து பழுக்காய்க்

1. தொல். சொல். கிளவியாக்கம் - கங.
2. தொல். சொல். எச்சவியல் - சுந.

குலைவைத்தோங்கப்பட்ட பசிய நிறத்தையுடைய பூகக் குழாத்தையும் நாகக்குழாத்தையுங் கவர்ந்து வருகின்றது; நீ காண்பாயாக என்றவாறு.

கலை - பிறைக்கோடு. தொடுதல் - தீண்டுதல். கருவி-தொகுதி. தொடுத்து - தொடங்கி. நாகம் - புன்னை. குழாம் என்பது பூகத் துடனுங் கூட்டுக. கவர்தல் - கொள்ளுதல். (ககஅ)

பாங்கி யிறையோற்கண்டமை பகர்தல் :

பாங்கி யிறையோற் கண்டமை பகர்தல் என்பது, பாங்கி தலைவியின் வயத்தனாக வந்தவனைக் கண்டமை பகர்தல்.

திவாகர னேயன்ன பேரொளி வாணன்தென் மாறைநன்னாட்
டுவாமதி போலு மொளிர்முகத் தாயென் னொளிப்பதுன்மேல்
அவாவின னாகியோர் மானை வினவிவந் தானையின்றிக்
கவானுயர் சோலையின் வாய்வண்ட லாருழைக் கண்டனமே.

(இ - ள்.) ஆதித்தனையொத்த பேரொளி வாணன் தென்மாறை நாட்டு உவாமதிபோலும் ஒளிர்முகத்தாய்! நீ யொளித்துச் சொல்வது யாது காரணம்? உன்மேல் ஆசை கொண்டவனாகி ஓர் மானை வினவிவந்தவனை இப்போது இந்தத் திரளாயுயர்ந்த சோலையிடத்து விளையாடும் வண்டலம்பாவை பொருந்திய இடத்து யாம் கண்டனம் என்றவாறு.

உலகத்தில் கலியிருள் மாற்றுந் தன்மையால், 'திவாகரனே யன்ன' எனக் கூறியது.

ஒளி - கீர்த்தி. உவாமதி - பூரணமதி. ஒளிர்தல் - விளங்குதல். கவான் - திரட்சி. 'மாயோ னன்ன மால்வரைக் கவான்' என்றார் பிறரும். வண்டல் - ஆகுபெயர். 'வண்டலாடுழை' என்று பாட மோதுவாரும் உளர். (ககக)

பாங்கியைத் தலைவி மறைத்தல் :

செவ்வண்ண வேல்விழி யாய்தஞ்சை வாணன்தென் மாறைநன்னா
டிவ்வண்ண நீசொல்வ தேற்பதன் றுனின் னிடையெனத்தாம் [ட்
மெய்வண்ணம் வாடி வெறிதே வருந்தி விருந்தினராய்க்
கைவண்ண வார்தழை கொண்டுசென் றார்தமைக் கண்டுகண்டே.

(இ - ள்.) செவ்வண்ணமாகிய வேல்போன்ற விழியினையுடையாய், தஞ்சைவாணன் தென்மாறை நன்னாட்டில், நின்னிடைபோல தாம் மெய்வண்ணம் வாடிப் பயனின்றி வருந்தி நம் புனத்திற்குப் புதியோராய்க் கையிலே அழகிய நெடிய தழையைக் கொண்டு வந்து போனார் தம்மைக் கண்டு கண்டு, இவ்வண்ணம் நீ சொல்வது ஏற்பதன்று என்றவாறு.

செவ்வண்ண வேல் - பகைவருடற் குருதி தோய்ந்த கொடிய வேல். இவ்வண்ணம் - இவ்வாறு. ஆல் - அசைநிலை. வெறிதே - பயனின்றியே. விருந்தினர் - புதியோர். வண்ணம் - அழகு. கண்டு கண்டு - அடுக்குமொழி. (கஉ0)

பாங்கி யென்னை மறைப்ப தென்னெனத் தழால்:

பாங்கி என்னை மறைப்பது என்னெனத் தழால் என்பது, இவ்வாறு மறைத்துக் கூறிய தலைவியை உனக்கு நான் வேறோ என்று உவகையாய்த் தழுவிக்கொண்டு கூறல்.

பரக்கின்ற செவ்விதழ்ப் பங்கயப் பாதம் பணிந்துநின்னை
இரக்கின்ற தொன்றையும் எண்ணலை யாலெழு பார்முழுதும்
புரக்கின்ற கோன்றஞ்சை வாணன் பொதியிலிற் பொய்த்தென்னைநீ
கரக்கின்ற தென்னைகொ லென்னுயி ராகிய காரிகையே.

(இ - ள்.) ஏழுலக முழுதும் காக்கின்ற வேந்தாகிய தஞ்சைவாணனது பொதிய வரைக்கண் எனக்கு உயிரையொக்குங் காரிகையே! செவ்விதழ் பரக்கின்ற பங்கயம் போன்ற பாதத்தைத் தொழுது யான் நின்னை யிரக்கின்ற தொன்றையும் எண்ணலையாய் உண்மையை நீக்கி என்னை நீ மறைப்பது என்னோ என்றவாறு.

ஆல் - அசை. புரத்தல் - காத்தல். பொய்த்தல் - உண்மை நீக்கல். கரத்தல் - மறைத்தல். 'தஞ்சைவாணன் பொதியிலில் என்னுயிராகிய காரிகை' எனவும், 'செவ்விதழ் பரக்கின்ற' எனவும் மாறுக. வருந்துழி வருந்தியும், மகிழ்ந்துழி மகிழ்ந்தும், இறந்துழி இறந்தும் இயைவதாதலின், 'என்னுயிராகிய காரிகை' என்று கூறினர். (கஉக)

பாங்கி கையுறை புகழ்தல்:

சூடத் தகுவன வல்லதெல் லாம்படி சொல்லினுந்தாம்
வாடத் தகுவன வல்லநல் லாய்தஞ்சை வாணன்வெற்பர்
தேடத் தகுவன வல்லதல் லாத சிலம்பினுள்ளார்
நாடத் தகுவன வல்லகல் லார நறுந்தழையே.

(இ - ள்.) நல்லாய்! உலகமெல்லாஞ் சொல்லினும் சொல்லா தொழியினும் மலையிடத்துத் தோன்றிய இச்சந்தன நறுந்தழை சூடத்தகுவன வல்லது, தாம் வாடத்தகுவன அல்ல; அன்றியும், தஞ்சைவாணன் வெற்பர் தேடத் தகுவன வல்லதல்லாத மலையினுள்ளார் நாடத்தகுவன அல்ல என்றவாறு.

'படியெல்லாம்' என மாறுக. 'சொல்லினும்' என்புழி உம்மை எதிர்மறையாகலின், 'சொல்லாதொழியினும்' என்பது வருவிக்கப் பட்டது. 'அல்ல' என்பது அஃறிணைப் பன்மைவினைக் குறிப்பு முற்றுச்சொல். நாடல் - கருதல். கல் - மலை. ஆர நறுந்தழை - சந்தனத்தழை.

இவற்றுள் பாங்கி கூற்றாயினவெல்லாம், 'குறைநயப்பித்தற்' கும், தலைவி கூற்றாயினவெல்லாம், 'மறுத்தற்'கும் உரியவாறு உணர்க. (கஉஉ)

தோழி கிழவோன் துயர்நிலை கிளத்தல்:

தோழி கிழவோன் துயர்நிலை கிளத்தல் என்பது, பாங்கி தலைவனது வேட்கையால் கொண்ட துயர்நிலையைத் தலைவிக்குக் கூறல்.

வளையுங் குழல்வஞ்சி வாணன்தென் மாறை வரைக்களிறு
தினையுந் தழையும் பிடியொடு மேய்ந்து தெளிந்தவின்னீர்
சுனையுண்ட சோக நிழற்சோக நீங்கித் துயில்வதுகண்
டெனையுங் கடைக்கணி யாவினை யாநிற்பர் ஏதிலரே.

(இ - ள்.) அலங்கரிக்குங் கூந்தலையுடைய வஞ்சி நம்புனத்து அயலாராய் வந்தோர், வாணன் தென்மாறை வரையிடத்துக் களிறு பிடியொடு தினையும் தழையும் மேய்ந்து, சுனையிடத்துத் தெளிந்த இனிய நீரையுண்டு,

துன்பம் நீங்கி, அசோகமரத்து நிழலின்கீழ்த் துயில்வ தனைப் பார்த்து, என்னையும் கடைக்கண்ணால் நோக்கி வருந்தாநிற்பர் என்றவாறு.

'வஞ்சி ஏதிலர்' எனவும், 'களிறு பிடியொடு' எனவும், 'சுனைத் தெளிந்த வின்னீர்' எனவும், 'உண்டு சோக நீங்கி' எனவும் மாறுக. வனைதல் - அலங்கரித்தல். வஞ்சி - அண்மை விளி. இனையாநிற்பர் - வருந்தாநிற்பர். ஏதிலர் - அயலார். கடைக்கணித்தல் - கடைக் கண்ணால் நோக்குதல். 'பிடியொடு துயிலுங் களிற்றைக் கண்டு என்னையும் நோக்காநிற்பர்' எனவே நீ இதனை யறிந்திலையெனக் குறிப்பால் அறிவித்தவாறாயிற்று. (கஉ௩)

### மறுத்தற் கருமை மாட்டல்:

மறுத்தற்கு அருமை மாட்டல் என்பது, இவ்வாறு கூறிய சொற்கட்கு விடை யின்மையால், இனி அவர்வரின் என்னால் மறுத்தற்கு அரிதெனப் பொருத்திக் கூறுதல். மாட்டல் - பொருத் துதல்.

**கையுந் தழையுமுன் காண்டொறுங் காண்டொறுங் கட்டுரைத்த**
**பொய்யுந் தொலைந்தன பூந்தழை போலரி போர்த்துநஞ்சும்**
**மையுங் கலந்துண்ட வாள்விழி யாய்தஞ்சை வாணன்வெற்பர்**
**மெய்யுந் துவண்டதென் னுன்முடி யாது வெளிநிற்கவே.**

**(இ - ள்.)** செவ்வரியை மேற்கொண்டு நஞ்சும் மையும் கலந்துண்ட வாள்போல் விழியாய்! இவ்வனத்திலுள்ள மாந்தழைகளெல்லாம் நமக்குக் கொண்டுவந்து கொண்டு வந்து வாடி யெறிதலால், அப் பூந்தழைகள் தொலைந்தாற் போல், அவர் கையுந் தழையும் எதிரே காணுந்தோறும் காணுந்தோறும் யான் உறுதிச்சொல்லா யுரைத்த என் னிடத்திலுண்டான பொய்யெல்லாந் தொலைந்தன; அன்றி யும், தஞ்சைவாணன் வெற்பர் மெய்யும் அலைந்தலைந்து துவண்டதாதலால், இனி அவர் வரின் வெளியாய் நிற்க என்னால் முடியாது என்றவாறு.

எனவே, அவர் வரின் மறையவேண்டும் என்பதாயிற்று. கட்டுரைத்தல் - உறுதிச்சொற் கூறுதல். அரி - செவ்வரி. (கஉ௪)

### தலைவன் குறிப்பு வேறாக நெறிப்படக் கூறல்:

தலைவன் குறிப்பு வேறாக நெறிப்படக் கூறல் என்பது, தலைவன் எண்ணுங் குறிப்பு நம் பக்கல் இரப்பவன்போற் றோற்றவில்லை, வேறு நினைப்பானாகத் தோன்றியதென்று ஒழுங்குபடக் கூறுதல்.

**விடையான் மிசைவரு மேருவில் லானொடு மேழிவென்றிப்**
**படையா னொடும்வெம் பகைகொள் வதோபகல் போலுமெய்ம்மை**
**உடையா னுயர்தஞ்சை வாணனென் னூரென வொல்கியநுண்**
**இடையாய் பிறிதுகொ லோவறி யேன்வெற்ப ரெண்ணுவதே.**

(இ - ள்.) நடுவு நிலைமையையும் வாய்மையையும் உடையான் எல்லார்க்கும் புகழா லுயர்ந்த தஞ்சைவாணனுக்கு ஒன்றாரெனத் துவண்ட நுண்ணிய இடையை யுடையாய், வெற்பர் எண்ணுவது விடையான்மேல் வருந்தன்மையையுடைய மேருவில்லானோடும், மேழியைத் தனக்கு உறுப்பாகவுடைய வெற்றிப்படையை யுடையானோடும் வெய்ய பகைகொள்வதோ, பிறிதோ, அறியேன் என்றவாறு.

விடை - இடபம்; விடை ஆன் - பண்புத்தொகை. மேரு வில்லான் - சிவன். மேழிவென்றிப்படை - கலப்பை. படையான் - பலதேவன். சிவனுடன் பகைகொள்ளுதல் - எருக்கமாலை என்பு மாலை யணிதல். பலதேவனொடு பகைகொள்ளுதல் - பனையை வெட்டுதல். பனை அவனுக்குக் கொடியெனவே மடலேறுங் குறிப்புத்தோன்றியது. 'பிறிது' என்பதனால் வரை பாய்தல் கொள்க. பகல் - நடுவு நிலைமை. போலும் - அசைநிலை. "ஒப்பில் போலியு மப்பொருட் டாகும்"[1] என்பதனால் அறிக. மெய்ம்மை - வாய்மை. கொல் - ஐயம். ஓகாரம் - அசைநிலை. (கஉ௯)

### தோழி தலைவியை முனிதல்:

**தூற்று தலரை மறைப்பவர்க் கேகுறை சொல்லுகுற்றம்**
**ஏற்று தொழியெனை யெம்பெரு மாட்டிசென் றேற்றவர்க்கு**
**மாற்று தருள்செங்கை வாணன்தென் மாறையில் வந்துநெஞ்சம்**
**போற்றுது நின்றய லேன்சொன்ன தீங்கு பொறுத் தருளே.**

---

1. தொல். சொல். இடையியல் - ௩0.

(இ - ள்.) எம்பெருமாட்டி, தூற்றுது அலரை மறைக்கின்ற நினக்கு உண்மையானவர்க்கே நின் மனக் குறையைச் சொல், என்னைக் குற்றமேற்றுது விடு; சென்று ஏற்றவர்க்கு இல்லையென்னுது கொடுக்குஞ் செங்கையை யுடைய வாணன் தென்மாறை நாட்டில், நின் பக்கத்தில் வந்து நெஞ்சத்தைக் காவாமல், அயலேனுகிய யான் அறி யாமற் சொன்ன குற்றத்தைப் பொறுத்தருள்வாயாக என்றவாறு.

'எனைக் குற்றம்' எனவும், 'வந்து நின்று' எனவும் இயையும். போற்றுது - காவாது. (கஉசு)

தலைவி பாங்கியை முனிதல் :

தலைவி பாங்கியை முனிதல் என்பது, பாங்கியை முனிந்து தலைவி தன்னுட் கூறல்.

**மற்றே தவர்நினை வார்தஞ்சை வாணன் வரையின்மூந்நாள்**
**பொற்றேரின் வந்து புணர்ந்துசென் ருர்தம் பொருட்டுநம்மைக்**
**குற்றேவல் மங்கை குறையிரந் தாளெனுங் குற்றமிந்நாள்**
**எற்றே தவறுநம் பாலில்லை யாகவு மெய்தியதே.**

(இ - ள்.) தஞ்சைவாணன் வரையில் மூன்றுநாள் பொற் றேரினில் வந்து புணர்ந்து சென்ருர், அவர் மற் றேது நினைவார், அவர்தம்பொருட்டு நம்மைக் குற்றேவல் மங்கையாகிய இவள் குறையிரந்தாளென்னுங் குற்றம் இந் நாள் நம்பக்கல் இல்லையாகவும் தவறெய்தியது எத்தன் மைத்து என்றவாறு.

மற்று - அசைநிலை. 'ஏது' என்புழி இரண்டனுருபு தொக் கது. மூந்நாள் - மூன்றுநாள். அவையாவன, இயற்கைப்புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம் என்பன. 'தம்பொருட்டு' என் புழி, 'அவர்' என்னுஞ் சுட்டுப்பெயர் வருவிக்க. 'அவர் மற்றேது நினைவார்' எனவும், 'இந்நாள் நம்பால்' எனவும், 'தவறு எய்தியதே' எனவும் இயையும். (கஉள)

தலைவி கையுறை யேற்றல்:

ஆற்றுந் தலைவ ரருந்துய ராற்றினு மாற்றிலனுண்
மாற்றும் புனையின் மயிலனை யாய்தஞ்சை வாணன்தெவ்வின்
போற்றுங் கொடுவினை யேன்புனை யாவிடிற் போந்தலரே
தூற்றுந் தழையென்றி தொன்றெங்ங னேவந்து தோன்றியதே.

(இ - ள்.) மயில்போல்வாய், தஞ்சைவாணன் பகை போல மிக்காய்க் கூறுங் கொடிய வினையேன் அணிந்தேனுயின் நாணை மாற்றும், அணியாது தடுத்தேனுயின் எங்குஞ் சென்று அலரையே தூற்றும், தழையென்று பெயரிட்டுக்கொண்டு இஃதொன்று எவ்விடத்திலேயிருந்து இவ்விடத்தில் வந்து தோன்றியது, முன் நல்வினையாற்றுந் தலைவர் அரிய வேட்கையை ஆற்றல்செய்யினும் யான் ஆற்றிலன் என்றவாறு.

எனவே, தலைவி கையுறை வாங்கினுளாயிற்று. என்னை,

'நல்வினை யாற்று முயர்நாண மாற்றுமலர்
தூற்றவினுல் வந்த துயர்.'

இன் - ஐந்தனுருபு ஒப்பின்கண் வந்தது. போற்றல் - மிக்காய்க் கூறல். யான் என்பது தோன்ரு எழுவாய். தெவ் - பகை.

இவற்றுள் பாங்கி கூற்ருயினவெல்லாம், 'குறைநயப்பித்தற்'கும், தலைவி கூற்ருயினவெல்லாம், 'குறை நேர்தற்'கும் உரித்தாயின வாறு காண்க. (கஉஅ)

இறைவி கையுறையேற்றமை பாங்கி
இறைவற்குணர்த்தல்:

போயா னளித்தலுங் கைகுவித் தேற்றபின் போற்றியன்பால்
சாயாத கொங்கையின் மேலணைத் தாள்தஞ்சை வாணன்வெற்பா
காயா மலரன்ன மேனிமெய் யாகநின் கையுறையே
நீயாக வல்லது மாந்தழை யாக நினைந்திலளே.

(இ - ள்.) தஞ்சைவாணன் வெற்பனே! நீ தந்த கையுறையை நான் போய்க்கொடுத்தலுங் கைகுவித்து ஏற்

ருள், ஏற்றபின் அன்பினால் மிகவும் புகழ்ந்துகூறி, என் ஞான்றுஞ் சாயாத கொங்கையின்மேல் அணைத்தாள், அணைத்துக் காயாம்பூவையொத்த நிறத்தைப் பொருந்திய மெய்யாகத்தையுடைய நீயாக நினைத்தாளல்லது மாந்தழை யாக நினைந்திலள் என்றவாறு.

எனவே, நீ வந்துழி நிகழும் உபசாரம் யாவையும் தழையி னிடத்து நிகழ்ந்ததென்று கூறியவாறாயிற்று. 'யான்போய்' என வும், 'அன்பினாற் போற்றி' எனவும், 'மெய்யாகம் நீயாக' எனவும் மாறுக.

அளித்தல் - கொடுத்தல். போற்றி - புகழ்ந்து. மெய்யாகம் - பண்புத்தொகை. மேனி - நிறம். (கஉக)

பாங்கி தலைமகற்குக் குறியிடங் கூறல்:

அணிமா மலர்மயி லைப்புயத் தூணங்கொ ளாகமெனும்
மணிமா ளிகைவைத்த வாணன்மண் காவலன் மாறைவெற்பா
துணிமா மரகதப் பாசறை வேலைச் சுடரவன்போல்
பணிமா மணிதிக ழும்பகல் யாங்கள் பயிலிடமே.

(இ - ள்.) அழகாகிய மா என்னும் பெயரையுடைய திருமகளைப் புயமென்னுந் தூண்களையுடைய மார்பென்னும் மணிமாளிகையில் வைத்த வாணனாகிய வேந்தனது மாறை வெற்பனே! பகற்காலத்தில் யாங்கள் விளையாடுமிடம் பெருமையுடைய மரகதத் துண்டங்கள்போன்ற குருக்கத்தி யிலையாற் பச்சைநிறம் பொருந்திய முழையினிடத்தே கட லிடத்துக் கதிரோன்போல நாகமாணிக்கங்க ளொளிவிடும் என்றவாறு.

மலர்மயில் - திருமகள். ஆகம் - மார்பு. 'தூணம்' என்புழி, அம் பகுதிப்பொருள் விகுதி. 'மாமரகதத்துணி' என மாறுக. பாசறை - பசிய குருக்கத்தியிலையாற் செறிந்த முழை. 'குருக்கத்தி' என்று செய்யுளிற் கூறிய தில்லையாலெனின், மேல்வரும், 'குறி யிடத்து இறைவியைக் கொண்டு சேறல்' என்னுங் கிளவிச் செய்யு ளில், 'பூமாதவிப்பந்தர்' என்று கூறினமையானும், மேற்சொன்ன குறியிட முழையுங் குருக்கத்தி யென்று உய்த்துணர்ந்துகொள்ளக் கிடத்தலானும், ஈண்டு, 'குருக்கத்தி' என்று வருவிக்கப்பட்டது.

துணி - துண்டம்; ஆகுபெயர். மாமணி - மாணிக்கம். திகழ்தல் - ஒளிவிடுதல். பாசறை கடற்கும், மாணிக்கம் கதிரோனுக்கும் உவமையாதலின் பண்புவமை. 'மலர்மயிலை மார்பில் வைத்த வாணன்' எனவே பூவைநிலை. பயிலிடம் - ஈண்டு விளையாடுமிடம். குறியிடம் - பகலிற்கூடும் இடத்து அடையாளம். (கரு௦)

பாங்கி குறியிடத் திறைவியைக் கொண்டு சேறல்:

நாமாவி மூழ்கி நறுமலர் குற்றுநந் தாவனத்துத்
தேமா விளந்தளிர் செவ்வண்ணங் கொய்து சிலம்பெதிர்கூய்
வாமா நெடுங்கண் மடந்தைநல் லாய்தஞ்சை வாணன்வெற்பிற்
பூமா தவிப்பந்தர் வாய்விளை யாடுகம் போதுகவே.

(இ - ள்.) தாவுமான்போல் நெடியகண்ணையுடைய மடந்தைநல்லாய்! தஞ்சைவாணன் வெற்பில் நாம் வாவியினிடத்து மூழ்கி, நறிய மலர்களைக் கொய்து, நந்தவனத்துச் செவ்வண்ணமாகிய தேமாவினது இளந்தளிரைக் கொய்து, சிலம்பெதிர் கூவி, பூவொடு கூடிய குருக்கத்திப் பந்தரின் விளையாடுவாம், செல்வாயாக என்றவாறு.

ஆவி - வாவி. குற்று - கொய்து. வாமான் - தாவுமான். மாதவிப் பந்தர் - தினைப்புனத்தயலில் சோலையில் மாதவி படர்ந்து மலர்ந்து நாற்றம் வீசச் சுற்றும் புதல் சூழ்ந்து அகத்திருந்தோர் புறத்தில் வருவோர்க்குப் புலனாகாத மறைவு வாய்த்திருப்பதோர் இடம். (கருக)

பாங்கி தலைமகளைக் குறியிடத்துய்த்து நீங்கல்:

கண்சாயல் கையுருக் கொண்டுதன் வேன்மயில் காந்தள்வள்ளி
எண்சாய வென்றனை யென்றுசெவ் வேளிவ ரும்பவளம்
வண்சா யொசிக்கும் வயற்றஞ்சை வாணன் மலயமராத்
தண்சாயை நின்றணங் குந்தைய னீறிற்க சாரலிலே.

(இ - ள்.) தையலே, கண்ணுஞ் சாயலுங் கையும் உருவுங்கொண்டு, தனது வேலும் மயிலுங் காந்தளும் வள்ளியும் ஒப்பில்லையென் றெண்ணிய முருகவேளின் எண்ணத்தைத் தாழ்வுபட வென்றனையால், ஏறிப்படரும் பவளம் வளவிய கோரையை யசைக்கும் வயலையுடைய தஞ்

சைவாணன் மலயத்தினிடத்து, மராமரத்துத் தண்ணிய நிழலிலே நின்று, என்னுடன் நீ வந்தாயாகில், நின்னை அம் முருகவேள் வருத்துமாதலால், இச்சாரலில் இவ்விடத்தில் நிற்பாயாக என்று பாங்கி யகன்றுள் என்றவாறு.

எண்ணும்மை தொக்குநின்று, நிரனிறைப்பொருள் வந்தவா றுணர்க. இவர்தல் - ஏறுதல். சாய் - கோரை. ஒசித்தல் - அசைத்தல். சாயை - நிழல். சாரல் - மலைப்பக்கம். (கநூஉ)

இறைவி இறையோனிடத் தெதிர்ப்படுதல்:

முயங்கிய நூபுரப் பங்கயத் தாளு முலைசுமந்து
தயங்கிய நூலிடை தானுமென் போலத் தளர்வுறுமிங்
கியங்கிய வாறென் மனத்திரு ணீக்கவென் றேதுணிந்தோ
வயங்கிய சீருடை யான்வாணன் மாறை மணிவிளக்கே.

(இ - ள்.) விளங்கிய புகழை யுடையோனாகிய வாணன் தென்மாறை நாட்டு மணிவிளக்குப் போல்வாய்! நூபுர முயங்கிய பங்கயம்போன்ற தாளும், முலையைச் சுமந்து தள்ளாடிய நூல்போன்ற விடைதானும் என்னைப் போலத் தளர்வுறும்; இவ்விடத்துச் சஞ்சரித்தவாறு என் மனத்துன்பத்தை நீக்கவென்று துணிந்தோ சொல்வாயாக என்றவாறு.

'நூபுரமுயங்கிய பங்கயத்தாள்' என இயையும். நூபுரம் - சிலம்பு. தயங்கல் - தள்ளாடல். இயங்கல் - சஞ்சரித்தல். ஏகாரம் - ஈற்றசை. ஓகாரம் - வினு. வயங்குதல் - விளங்குதல். சீர் - கீர்த்தி. விளக்கு - ஆகுபெயர். தலைவியை விளக்கு என்று கூறினமையான் மனத்துன்பத்தை இருள் என்று கூறியது. இருள் - ஆகுபெயர். ()

புணர்ச்சியின் மகிழ்தல்:

தருந்தாரு வஞ்சுங் கொடையுடை யான்தஞ்சை வாணனின்சொல்
செருந்தார் பசுந்தமிழ்த் தென்வரை மேற்செம்பொன் மேருவெற்
கருந்தாரை நஞ்சுமிழ் வாசுகி யால்வெண் கடல்கடைந்து [பால்
வருந்தா அமுதளித் தாள்வல்ல ளாமிம் மடக்கொடியே.

(இ - ள்.) கேட்டவை பலவுந் தருந் தாரும் அஞ்சப் பட்ட கொடையை யுடையானுகிய தஞ்சைவாணன் இனிய புகழையும் செருந்திமரச்சோலையையும் பசியதமிழையு முடைய பொதியமலைமேல், செம்பொன் மேருவெற்பால், கரிய தாரையாய் நஞ்சை யுமிழப்பட்ட வாசுகி யென்னும் பாம்பால், வெண்மை நிறம்பொருந்திய கடலைக் கடைந்து, வருந்தாத அமுதை யளித்தாளாதலால், இம்மடக்கொடி வல்லளாம் என்றவாறு.

தருந்தாரு - கற்பகம். தென்வரை - பொதியமலை. தாரை - நீர்வரும்வழி; சலதாரை என்றாற்போல. வாசுகி - கடல் கடைந்த பாம்பு. வெண் கடல் - பாற்கடல். இவ்வாறு வருத்தப்படாமல் அமுதம் ஈந்ததினுல், 'வல்லள்' என்று கூறியது. வல்லள் - உயர் திணை யொருமைவினைக் குறிப்புமுற்று. (கரு௪)

புகழ்தல் :

மயனூர் விதித்தன்ன மாமதில் சூழ்தஞ்சை வாணன்வெற்பில்
பயனூர் பயோதரப் பாவையன் னீர்பசும் பொற்குழைதோய்
நயனூர விந்தத்து நஞ்சுநும் வாயிதழ் நல்லமுதம்
அயனூர் படைத்தில ரேலடங் காதவ் வரனுக்குமே.

(இ - ள்.) தெய்வத் தச்சனுர் விதித்ததுபோன்ற அரிய செயலாகிய பெரிய மதில் சூழ்ந்த தஞ்சைவாணன் வெற்பில் இன்பப் பொருளார்ந்த முலையையுடைய சித்திரப் பாவைபோல்வீர்! பசிய பொன்னுற் செய்த குழையைத் தொடும் நயனமாகிய தாமரையிலிருக்கும் நஞ்சானது அடங்குமாறு நும் வாயிதழோடு நல்லமுதம் அயனுர் படை யாமற் போனுராகில், முன்பு கடலிற்பிறந்த நஞ்சை யடக் கிய அவ்வரனுற்கும் அடங்காது என்றவாறு.

பயன் - இன்பப்பொருள். பயோதரம் - முலை. தோய்தல் - தொடுதல், 'நயனரவிந்தம்'- ஏகதேசவுருவகம். இதழமுதம் உண்டு விடந்தணிந்தா ஞதலால் இவ்வாறு கூறியதென்று உணர்க. மயன் - தெய்வத்தச்சன். (கரு௫)

தலைமகளைத் தலைமகன் விடுத்தல் :

தலைமகளைத் தலைமகன் விடுத்தல் என்பது, தலைமகளைத் தலை மகன் ஆயக்கூட்டத்திற் செல்லவிடுதல்.

நேயம் புகலிட மின்றிநின் பால்வந்து நின்றதுபோல்
ஆயம் புகல வடைந்தரு ளீயடை யாதமன்னர்
வாயம் புகவில் வளைக்கிய வாணன்தென் மாறைநன்னீர்
தோயம் புகரிணை வேல்விழி யாய்நின் துணையுடனே.

(இ - ள்.) சரணென்று வந்தடையாத பகைமன்னரிடத்து அம்புகளுதிர வில்லைவளைத்த வாணன் தென் மாறை நாட்டுள்ள நல்ல நீரிலே தோய்த்துப் பதஞ்செய்த அழகிய புகர்நிறத்தையுடைய இணைவேல்போலும் விழியாய்! நீ யன்புசொல்வதற் கிடமில்லாது நின் பக்கலிலே வந்து நின்றதுபோலச் சூழப்பட்ட ஆயக்கூட்டம் தங்களன்பைச் சொல்லத்தக்கதாக நின் பாங்கியுடனே நீ அடைந்தருள்வாயாக என்றவாறு.

நேயம் - அன்பு. நேயம் புகல்வதற்கு இவள்போலும் வேறொருவரின்மையால், இவளிடத்து வந்து சூழ்ந்ததுபோலும் என்று கூறியவாறுணர்க. வாய் - இடம். அம்புஉக - அம்புஉதிர. புகர் - இரத்தக்கறை. (கங்சு)

பாங்கி தலைவியைச் சார்ந்து கையுறை காட்டல்:

பாங்கி தலைவியைச் சார்ந்து கையுறை காட்டல் என்பது, குறியிடத்து நிறுத்திப்போயின பாங்கி தலைவன் போயினபின் தான் கையுறைக்குப் போயின பாவனையாய்க் கையுறைகொண்டு வந்து காட்டல்.

பொய்போ லிடைநின் விழிபோற் குவளையம் போதிவைநின்
மெய்போ லசோக மிளிர்பூந் தழையிவை மெல்லியலின்
கைபோற் கவின்கொள்செங் காந்தளம் போதிவை கண்டருள்யான்
மைபோற் குழலிதந் தேன்தஞ்சை வாணன் வரையினின்றே.

(இ - ள்.) மையை யொக்குங் குழலையுடையாய்! தஞ்சைவாணன் வரையினின்று யான் நினக்குத் தந்தேன்; பொய்யையொக்கும் இடையாய்! நினது கண்களையொக்குங் குவளைப்போது இவை; நினது மெய்யைப்போ லொளிவிடும் அசோகப்பூந்தழை இவை; மெல்லிய இயலையுடைய

நினது கையைப்போல அழகுகொண்ட செங்காந்தட் போது இவை ; நீ கண்டருள்வாய் என்றவாறு.

மிளிர்தல் - ஒளிவிடுதல். கவின் - அழகு. மை - மேகம். 'பொய்போலிடை,' 'மைபோற் குழலி' என இரண்டு முன்னிலை வந்தவாறு காண்க. 'தஞ்சைவாணன் வரையின் யான்' என மாறுக. அம் மூன்றும் சாரியை. (கசுஎ)

தலைவியைப் பாங்கிற் கூட்டல்:

குனிநாண் மதிநுதற் கோகில மேநின் குழலிலெல்லாப்
பனிநாண் மலரும் பறித்தணிந் தேனிந்தப் பூமடந்தை
தனிநா யகன்தஞ்சை வாணன்றண் சாரல் தனித்துநில்லா
தினிநா மகன்றிளை யார்விளை யாடிட மெய்துதுமே.

(இ - ள்.) வளைந்த நாட்கொண்ட மதிபோன்ற நுதலை யுடைய கோகிலமே! நினது குழலினிடத்தில் வனத்தி லுள்ள குளிர்ந்த முறுக்கவிழ்ந்த மலரனைத்தும் பறித் தணிந்தேன் ; இந்தப் பூமடந்தைக் கொப்பற்ற நாயகனுன தஞ்சைவாணனது குளிர்ந்த மலைச்சாரலிடத்துத் தனியாய் நில்லாது இவ்விடத்தினின்றும் அகன்று, இப்போது இளை யார் விளையாடுமிடத்தை யாம் எய்துவோம் என்றவாறு.

குனிநாண்மதி - பிறை. 'மதிநுதற் கோகிலம்' என்றது சிறப் புருவகம். தனி - ஒப்பின்மை. நாண்மலர் முறுக்கவிழ்மலர். (கசுஅ)

பாங்கி தலைவியை நீங்கித் தலைவற் கோம்படை சாற்றல் :

பாங்கி தலைவியை நீங்கித் தலைவற்கு ஓம்படை சாற்றல் என் பது, தலைமகளை ஆயத்திற் கூட்டி மீண்டு வந்து தலைவற்கு ஓம் படை சாற்றல். ஓம்படை - மறவாமை.

சின்னுண் மலர்க்குழல் காரண மாச்செவ்வி பார்த்துழன்று
பன்னு ளுரைத்த பணிமொழி நோக்கிப் பழிநமக்கீ
தென்னு திடைப்பட்ட வென்னிலை நீமற வேலிறைவா
தன்னுக மெய்ப்புக முன்தஞ்சை வாணன் தமிழ்வெற்பிலே.

(இ - ள்.) இறைவனே! தன் ஆகத்தை மெய்ப் புக ழாய் நிறுத்தின தஞ்சைவாணன் தமிழ் வெற்பிடத்துச் சில நாண்மலரை யணிந்த குழலையுடையாள் காரணமாக,

அவளது பதம்பார்த்து வருத்தப்பட்டு, நேற்றும் இன்று மாகிய பலநாள் உரைத்த தாழ்ந்த மொழியைக் கருதி, நமக்கிது பழியென்று சொல்லாது, நம்மிருவர்க்கும் நடுப் பட என்னிலைமையை நீ மறவாதிருக்கக்கடவை என்ற வாறு.

செவ்வி - காலம். உழன்று - வருந்தி. பணிமொழி - தாழ்ந்த மொழி. தன்னுகம் - தன்னுடல். இரண்டுநாளென்பதனைப் பன் னுளென்று கூறிய தென்னையெனின், ஒன்றல்லன எல்லாம் பல என்பது தமிழ்நடை யாகலின் கூறியவாறென்று உணர்க. (கசுக)

உலகியன் மேம்பட விருந்து விலக்கல் :

உலகியல் மேம்பட விருந்து விலக்கல் என்பது, உற்ருர் அய லூரிலிருந்துவந்தால், அவர்க்கு ஊண்கொடுத்து உபசாரஞ் செய்தல் உலகியல் பாதலால், அவ்வுலகியல் பெருமைப்படத் தலைமகனை எம்மூர்க்குவந்து இருந்து போம் எனக்கூறிப் பகற்குறியை விலக்கல்.

ஆயின், விருந்தென்பது உண்டிக்குப் பெயரோவெனின், விருந்து என்பது புதுமை, உலகின்கண் மருவி ஊண்மேல் நின்றது. அன்னே, ஒருவன் ஒருவற்கு விருந்து கூறினன் எனின், ஊண் கூறினன் என்பதல்லது புதுமை கூறினன் என்னும் பொருள்தரா தாதலான், விருந்தென்றது ஊணென்றே கொள்க.

வலைப்பெய்த மான்றசை தேன்ருேய்த் தருந்தி மரைமுலைப்பால்
உலைப்பெய்த வார்தினை மூரலு முண்டுளங் கூருவகை
தலைப்பெய்த நாளனை யான்தஞ்சை வாணன் சயிலத்தெம்மூர்
இலைப்பெய்த தாழ்குரம் பைத்தங்கி னுலுமக் கென்வருமே.

(இ - ள்.) தலைவரே! வலை சுற்றுமிட்ட மானினது தசையைத் தேனிற் ருேய்த்து அருந்தி மரைமுலையினின் றும் பாலினை உலையாகப் பெய்து அட்டு வடித்த தினைச் சோற்றை உண்டு, உளத்தின் மிகுந்த வுவகை வந்துகூடிய நாள்போன்றவனுகிய தஞ்சைவாணன் வரையிடத்து, எம் மூரில் இலையான்மேய்ந்த குடில்வீட்டுள் தங்கினுல் உமக் கியாது குறைவரும் என்றவாறு.

உலைப்பெய்த - உலையிற்பெய்த. வார்தல் - வடித்தல். மூரல் - சோறு. தலைப்பெய்தல் - கூடுதல். [1]"ஆங்க விரண்டே தலைப்பெயன்

1. இறையனர் அகப்பொருள் - ந.

மரபே.' என்பதனுலுணர்க. என்வரும் - யாது குறைவரும். இங் ஙனங் கூறியது இரவுக்குறியை நாடிப் பகற்குறியை விலக்கிய கருத் தென்றுணர்க. என்னே, தினைவிளைந்தால் நாளைத் தினையறுத்து இவள் ஊர்க்குப்போதலால், தலைவனையும் ஊர்க்கு வா என்றுகூறி, வந்தால் இரவுக்குறியிற் கூட்டுவிப்பேனெனுங் குறிப்புத் தோன்றக் கூறியதன்றி விருந்து கூறியதன்றென வுணர்க. தலைவன் - முன் னிலை யெச்சம். (கசo)

விருந்திறைவிரும்பல் :

விருந்து இறை விரும்பல் என்பது, அவ்வூணைத் தலைவன் விரும்பிக் கூறல்.

மஞ்சூட்டி யன்ன சுதைமதில் சூழ்தஞ்சை வாணன்வெற்பில்
பஞ்சூட் டியமென் பதயுகத் தீருங்கள் பாடியின்மான்
வெஞ்சூட் டிழுதன்ன ஊனும்பைந் தேனும் விருந்ினர்க்குச்
செஞ்சூட் டிளகுபொன் போல்தினை மூரலுந் தெள்ளமுதே.

(இ - ள்.) முகிலை யருந்தியதுபோன்ற சுதைபூசிய மதில்சூழ்ந்த தஞ்சைவாணன் வெற்பில் பஞ்சைப்பொருந் திய மெல்லிய பாதமிரண்டுடையீர்! உங்களூரிடத்து வெண்ணெய்போன்ற வெவ்விய சூட்டுண்ட மானூனும், பசிய தேனும், செஞ்சூடு சுட்டிளகிய பொன்போன்ற தினைச்சோறும் விருந்தினர்க்குத் தெள்ளமுதுபோலும் என்றவாறு.

எனவே, பாங்கி கூறிய இரவுக்குறியைத் தலைவன் குறிப்பா லுணர்ந்து இயைந்து கூறியது ; இக்கருத்தானேயன்றே பகற்குறி யிடையீடு பட்டவாறென் றுணர்க.

ஊட்டல் - அருந்துதல். சுதை - வெண்சாந்து. பஞ்சூட்டல் - செம்பஞ்சு பொருந்துதல். பாடி - முல்லை; ஊர்க்குப் பொருள் மயக்கம். செஞ்சூட்டிளகுபொன் - சிவக்கச்சுட்டிளகிய பொன். 'இழுதன்ன வெஞ்சூடு' எனவும், 'மானூன்' எனவுமியையும்.

பாங்கி கூற்றுயினவெல்லாம், 'கூட்டற்'கும், 'பாங்கிற்கூட் டற்'கும் உரிய. தலைவன் கூற்றுயின வெல்லாம், 'கூடற்'கும்; 'கூட்டற்'கும், 'வேட்டற்'கும் உரியவாறு உணர்க. (கசக)

பாங்கியிற் கூட்டம் முற்றிற்று.

## கக. ஒருசார் பகற்குறி

அஃதாவது, ஒருகூற்றுப் பகற்குறி. ஒருகூற்றுப பகற்குறி யாதெனில், தலைவன் மற்றைநாள் தன் வேட்கை மிகுதியால் பகற் குறியிடத்து வந்து நிற்க, தலைவியைப் பாங்கி குறியிடத்துச் செலுத் தாது மறுத்துக் கூறத் தலைவன் வருந்திப்போதலாதலான் பகற்குறி யாகாது, ஒருசார் பகற்குறி யாயிற்று.

[1] 'இரங்கல் வன்புறை இற்செறிப் புணர்த்தலென்
றொருங்கு மூவகைத் தொருசார் பகற்குறி.'

என்னுஞ் சூத்திரவிதியால், ஒருசார்பகற்குறி மூவகைப்படும் எனக் கொள்க.

கிழவோன் பிரிந்துழிக் கிழத்தி
மாலையம்பொழுதுகண் டிரங்கல்:

**ஆழ்ந்தார் தமக்கரு ளாதவர் போலிவ் வளவிலன்பு**
**சூழ்ந்தார் செலத்தொங்கல் சூழ்குழ லாய்சொற் பொருள்படைத்து**
**வாழ்ந்தார் புகழ்தஞ்சை வாணனைப் பேணலர் மானவெய்யோன்**
**வீழ்ந்தார் கலிக்கரந் தான்பனி மாலை வெளிப்படவே.**

(இ - ள்.) மாலைசூழ்ந்த குழலினையுடையாய், மிடியில் மூழ்கினர்க்குக் கொடாதவர்போல் இந்தமட்டில் அன்பு சூழ்ந்தார் பிரிந்துபோகச், சொற்பொருள் படைத்து வாழும் புலவரால் புகழப்பட்ட தஞ்சைவாணனை விரும்பா தவர் கடலில் விழுந்து மறைதல்போல, கதிரோன் பனி யொடுகூடிய மாலைக்காலம் வெளிப்படக் கடலில் வீழ்ந்து மறைந்தான்; யான் என்செய்வேன் என்றவாறு.

ஆழ்ந்தார் - மிடியிலாழ்ந்தார்; எனவே, ஆழ்ந்தார் தானைகவும், கொடாதவர் தலைவராகவும் கூறியவாறுயிற்று. சூழ்ந்தார் - பொருந் தினர். பேணலர் - விரும்பாதவர். ஆர்கலி - கடல். கரத்தல் - மறைதல். பனிமாலை - அந்தியம்போது. 'வெளிப்பட்டதே' என்று பாடமோதுவாருமுளர்.

இக்கிளவி, பாங்கியை நோக்கிக் கூறுதலும், மாலையம் பொழுதை நோக்கிக் கூறுதலும், தன்னுட் கூறுதலும் என மூவகைப்படும். அவற்றுள் இச்செய்யுள் பாங்கியை நோக்கிக் கூறியது.

---

1. அகப்பொருள் விளக்கம்; களவியல் - ருசு.

[1] 'புன்கண்ணை வாழி மருண்மாலை எங்கேள்போல்
வன்கண்ண தோநின் துணை.'

என்பது மாலையுடன் கூறியது.

[2] 'காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலருமிந் நோய்.'

என்பது தன்னுட் கூறியது. (கசஉ)

பாங்கி புலம்பல் :

காலையம் போருக வாள்முகத் தாளன்பர் கையகல
மாலையம் போது வருவித்த நீர்தஞ்சை வாணன்தெவ்வர்
ஆலையம் போலுங்க ளாதவன் கோயி லழல்கொளுந்த
வேலையம் போடுழல் வீர்பரி காளென்றும் வெய்துயிர்த்தே.

(இ - ள்.) பரிகாள், காலை அம்போருகம்போலும் ஒளியையுடைய முகத்தாளைத் தலைவர் கையகல மாலையம் பொழுதை வரச்செய்த நீர் தஞ்சைவாணன் தெவ்வராலயம் போல், உங்கட்கு இறைவனாகிய கதிரவன்கோயில் அழல் பற்றக் கடலில் தண்ணீரோடே யெப்போதும் நெட்டுயிர்த்து வருந்துவீராக என்றவாறு.

காலையம்போருகம் - முறுக்கவிழ்தாமரை. 'அம்போருகவாள் முகம்' - உவமைத்தொகை. 'முகத்தாள்' என்புழி இரண்டனுருபு தொக்கது. கையகல் - ஒருசொல்; அது பிரிதல்.

[3] 'செற்றா ரெனக்கை விடலுண்டோ நெஞ்சேயாம்
உற்றா லுறாஅ தவர்.'

என்பதுபோலும்.

தெவ்வர் - பகைவர். ஆதவன் - கதிரவன். கொளுந்தல் - கொளுத்தல். அம்பு - நீர். உழலுதல் - வருந்துதல். வெய்துயிர்த்தல் - நெட்டுயிர்த்தல். (கசா)

1. குறள். பொழுதுகண்டிரங்கல் - உ.
2. குறள். பொழுதுகண்டிரங்கல் - எ.
3. குறள். நெஞ்சொடு கிளத்தல் - கூ.

### தலைவனீடத் தலைவி வருந்துதல்:

தலைவன் நீடத் தலைவி வருந்துதல் என்பது, தலைவன் வாராது நாழிகை நீட்டித்துழித் தலைவி வருந்திக் கூறுதல்.

ஆராத வின்ப விடந்தொறு நீங்கிய வாயமென்பால்
வாராத முன்னம் வருகில ராற்றஞ்சை வாணன்வெற்பில்
கூரா தரநல்கி வல்வினை யேனலங் கொள்ளைகொண்டு
தேரா தவனுட னேநென்னல் மாலையிற் சென்றவரே.

(இ - ள்.) தஞ்சைவாணன் வெற்பில் மிகுந்த காதலைக்கொடுத்து, வல்வினையேன் நலத்தையெல்லாங் கொள்ளை கொண்டு, தேரோடுகூடிய சூரியனுடனே நெருநல் மாலைக் காலத்துச் சென்றவர் அமையாத விளையாட்டின்பத்தால் அவ்விடந்தோறும் நீங்கிய ஆயக்கூட்டம் என்னிடத்து வாராதமுன்னம் வருகிலார், யான் என்செய்வேன் என்றவாறு.

ஆல் - அசை. கூர் - மிகுதி. ஆதரம் - காதல். நலம்-அழகு. நென்னல் - முன்னைநாள். (கசச)

### தலைவியைப் பாங்கி கழறல்:

தலைவியைப் பாங்கி கழறல் என்பது, பாங்கி நீ வருந்துவது முறைமையன்றெனக் கட்டுரைத்தல். கழறல் என்பது கட்டுரை; இடித்துக் கூறல், உறுதிச்சொல். இவை ஒருபொருட் கிளவி.

சிறந்தார் தெரிந்த செழுந்தமிழ் வாணன்தென் மாறைவெற்பர்
துறந்தா ரெனையென்று சோருவ தேனிந்தத் தொல்லுலகில்
பிறந்தா ரெவர்க்கும் பிரிவெய்து மால்வெய்ய பேரமர்க்கண்
புறந்தாழ் கரிய குழற்செய்ய வாயைய பூங்கொடியே.

(இ - ள்.) வெவ்விய பெரியபோர்செய்யுங் கண்ணும் புறப்பக்கத்தே தாழ்ந்த கரியகுழலும் சிவந்த வாயும் உடைய அழகாகிய பூங்கொடிபோல்வாய்! இந்தப் பழைய வுலகின்கட் பிறந்தார் யாவர்க்கும் பிரிவுவாராமற் போகாது, வந்தெய்தும்; சிறந்த முன்னோர் ஆய்ந்த செழுந்தமிழைக் கற்ற வாணனது தென்மாறைநாட்டுத் தலைவர் என்னைவிட்

டுத் துறந்தாரென்று நீ அயர்வது என், இனி அயர வேண்டா என்றவாறு.

சிறந்தார் - அகத்தியனார், தலைச்சங்கத்தார் முதலாயினோர். சோருதல் - அயர்தல். எண்ணும்மை தொக்குநின்றன. ஐய - அழகாகிய. (கசரு)

### தலைவி முன்னிலைப் புறமொழிமொழிதல் :

தலைவி முன்னிலைப் புறமொழி மொழிதல் என்பது, பாங்கி முன்னிலையாய் நிற்கத் தலைவி அவள்மேல் வெறுப்பால் அவளை நோக்கிக் கூறாது புறமாய் மொழிதல்.

**பூவலர் வாவியி னீரற்ற போதுற்ற புன்மையல்லால்**
**காவலர் காமந் துறக்கிலென் னுங்கடம் பாய்மதுகை**
**மாவல வாணன் வயற்றஞ்சை வேந்தனை வாழ்த்தல்செய்யா**
**மேவலர் போலுங் கழற்றுரை யாளர் வியனறிவே.**

(இ - ள்.) தலைவர் ஆசையைத் துறக்கில் பூவலரும் வாவி நீரற்றபோதுற்ற இழிவுபோலு மல்லாமல் யாதாம்; இதனை யறியாது கட்டுரை சொல்வாரது விரிந்த அறிவு, மதம்பாயும் வலியையுடைய யானைத்தொழில் வல்ல வாணனாகிய வயல்சூழ்ந்த தஞ்சை வேந்தனை வாழ்த்தல் செய்யாத பகைவரறிவுபோலும் என்றவாறு.

எனவே, காலமிடனறியாது மதிகெட்டுக்கூறுவர் பகைவர், அவரறிவையொக்கும் கட்டுரைகூறுவா ரறிவு என்றவாறாயிற்று.

'பூவலர்வாவி' - வினைத்தொகை. புன்மை - இழிவு. கடம் - மதம். மதுகை - வலி. வியன் - விரிவு. (கசசு)

### தலைவி பாங்கியொடு பகர்தல் :

தலைவி பாங்கியொடு பகர்தல் என்பது, வெறுப்பால் முன்னிலைப் புறமொழி கேட்ட பாங்கி தலைவியை யுபசரித்தலால் வெறுப்பு நீங்கிப் பாங்கியொடு பகர்தல்.

**முலையார் முயக்கினு மல்லா விடத்தினு மூரிமுந்நீர்**
**அலையா ரமுதமு நஞ்சமும் போல அணங்கனையாய்**
**தொலையாத வின்பமுந் துன்பமுங் காட்டுவர் தூங்கருவி**
**மலையா சலத்தமிழ் தேர்வாணன் மாறைநம் மன்னவரே.**

(இ - ள்.) அணங்கனையாய்! ஒலிக்கும் அருவியை யுடைய பொதியமலையிற் பிறந்த தமிழை யாராய்ந்த வாணன் மாறைநாட்டு நம் மன்னவர், முலைபொருந்திய புணர்ச்சியினும் பிரிவினும், பெருமைபொருந்திய முந் நீராகிய கடலிடத்துப் பிறந்த அமுதும் நஞ்சும்போலத் தொலைவில்லாத இன்பமும் துன்பமும் காட்டுவாராதலால் இரண்டினும் [1]அல்லராயிருந்தார் என்றவாறு.

ஆர்தல் - பொருந்துதல். அலையார் என்புழி, ஆர்தல் - தோன் றுதல். தாங்கருவி - ஒலிக்குமருவி. 'வாண்மலைந் தெழுந்தோனை மகிழ்ந்துபறை தூங்க.' என்னுந் தொல்காப்பியச் சூத்திரவுரையாற் காண்க. மலயாசலம் - பொதியமலை. 'அமுதமும் நஞ்சமும் போல' என்பதனால், இன்பத்தினும் துன்பம் மிக்கு என்று கூறியவா றாயிற்று. என்னை,

[2] 'இன்பங் கடன்மற்றுக் காம மஃதடுங்கால்
துன்ப மதனிற் பெரிது.'

என்பதனானுணர்க. (கசஎ)

தலைவியைப் பாங்கி யச்சுறுத்தல் :

தலைவியைப் பாங்கி அச்சுறுத்தல் என்பது, தலைவியைப் பாங்கி அச்சமுறுத்திக் கூறுதல்.

பேணற் கரியநின் பெண்மையு நாணமும் பேணியவர்
காணத் தகுமென்று காண்பதல் லாற்கழி காதனெஞ்சு
பூணத் தருகினும் பொற்பல்ல [3]ஏருதல் கற்பல்லவால்
யாணர்த் தமிழுடை யான்வாணன் மாறையின் இன்னமுதே.

(இ - ள்.) புதிதாய்ப் புலவர் பாடுந் தமிழையெல் லாங் கொள்ளுந் தன்மையையுடைய வாணன் மாறையின் இனிய அமுதம்போன்றவளே! மிகுந்த காதலை நெஞ்சு பூணத்தருகினும் விரும்பற்கரிதாகிய நின் பெண்மையும் நாணமும் விரும்பியவரே காணத்தகுமென்று கருதுவ

1. (வே. பா.) வல்லராயிருந்தார்.
2. குறள். படர்மெலிந்திரங்கல் - சு.
3. (வே. பா.) (1) வாகுதல்.

தல்லாமல், இவ்வாறு துன்பத்தாலழுங்கி அழகல்லளாகு தல் கற்பல்ல என்றவாறு.

பேணற்கரிய நின் பெண்மை - தவஞ்செய்து விரும்பினும் எய் தற்கரிய பெண்தன்மை. பேணி - விரும்பி. தேற்றேகாரம் விகா ரத்தாற் றொக்கது. காண்பது - கருதுவது. பொற்பு - அழகு. யாணர் - புதுமை.

என்பதனால் யாது கூறியதெனின், துன்பமுறவே அத் துன் பத்தால் நலனழியும், நலனழியவே அன்னைக்கு ஐயந்தோன்றும், தோன்றவே இற்செறிப்பு வரும், வேற்றுவரைவு நேரினும் நேரும்; ஆதலான், கற்புக்கெடுமென்று அச்சமுறுத்திக் கூறியவாறாயிற்று. ()

**நீங்கற்கருமை தலைவி நினைந் திரங்கல் :**

நீங்கற்கு அருமை தலைவி நினைந்து இரங்கல் என்பது, தலை வன் விட்டு நீங்கற்கு அருமையைத் தலைவி நினைந்து தன்னுள் இரங் கிக் கூறல்.

**குன்ரு கியபொன்னும் வேழக் குழாமுங் கொடைபுகழ்ந்து**
**சென்ருர் முகக்குஞ் செழுந்தஞ்சை வாணன்தென் மாறைவெற்பில்**
**நன்ரு மிறைவற்கு நன்றியி [1]லேற்குமுன் நான்முகத்தோன்**
**ஒன்ரு விதித்தில னேயுயிர் போல உடம்பையுமே.**

(இ - ள்.) நெஞ்சமே! பொன்னாகிய மலையையும் யானைத்திரளையும் கொடையைப் புகழ்ந்து சென்றோர்கள் பரிசிலாய்க் கொள்ளப்பட்ட செழுமையையுடைய தஞ்சை வாணனது தென்மாறைநாட்டு வெற்பிடத்து, நல்வினை செய்த இறைவற்கும், தீவினை செய்த எனக்கும், நான் முகத்தோன் முன் இருவரையும் படைக்குங் காலத்தில் உயிர்போல் உடம்பையும் ஒன்றாய் விதியாமற்போயினான்; இனிச் செய்யுமாறு என் என்றவாறு.

வேழக்குழாம் - யானைக்கூட்டம். முகத்தல் - கொள்ளுதல். நன்றி - நல்வினை. 'முகக்குஞ் செழுந்தஞ்சை வாணன்' என்னும் பெயரெச்சம் வினைமுதலோடு முடியாது பிறவாற்றான் முடிந்தது. ()

---

1. (வே. பா.) வேற்குமந் நான்முகத்தோன்.

தலைவிக் கவன்வரல் பாங்கி சாற்றல் :

**நெஞ்சுக வாய்மல ரன்னகண் ணீர்மல்க நின்றவஞ்சொல்
கிஞ்சுக வாய்வஞ்சி கேட்டருள் நீயுங் கிளைத்தமிழோர்
தஞ்சுக வாய்மொழி நெஞ்சுடை யான்தஞ்சை வாணன்வெற்பில்
மஞ்சுக வார்த்தன வாலவர் தேரின் மணிக்குரலே.**

(இ - ள்.) நெஞ்சம் உதிரும்படி ஆய்ந்த மலர் போன்ற, கண்ணினிடத்து நீர் நிறைய நின்ற, அழகிய சொல்லையும் முருக்கம்பூப்போன்ற வாயையும் உடைய வஞ்சியே! கிளைத்தமிழையுடைய பெரியோர் தம் வாயுறை வாழ்த்தாகக்கூறிய மொழியை நெஞ்சிலே மறவாது வைத் திருக்குந் தன்மையனாகிய தஞ்சைவாணன் வெற்பில், அவரது தேரின் மணிக்குரல் முகிலுதிர வார்த்தன யான் கேட்டேன், நீயும் கேட்டருள்வாய் என்றவாறு.

நெஞ்சுக - நெஞ்சம் உதிர. ஆய்மலர் - மலருள் தெரிந்தெடுத்த மலர். கிஞ்சுகம் - முருக்கம்பூ; ஆகுபெயர். உம்மை - எச்ச வும்மை. கிளைத்தமிழ் - விரிந்ததமிழ். 'வாய்ச்சுகமொழி' என இயையும்; அது வாயுறை வாழ்த்து. மஞ்சுக - மஞ்சுதிர. ஆர்த் தன - ஒலித்தன. மணிக்குரல் - மணியோசைகள். (கஙுப)

இனித் தேரின் மணியோசை முகிலுதிர ஆரவாரத்துடன் வந்தானெனின், களவென்பதனோடு மாறுகொள்ளுமே யெனின், மாறுகொள்ளாது. என்னை, நால்வகைப் புணர்ச்சியினும் தலைவன் தேரோடும் சேனையோடும் வந்தானல்லது தமியனாய் வந்தானல்லன். எவ்வாறெனின், காட்சியிற் கூறியதானுணர்க; அன்றியும், பிரிவுழி மகிழ்ச்சியில், 'பாகனொடு சொல்லல்' என்பதனானும், பாங்கியிற் கூட்டத்தில், 'தலைவி பாங்கியை முனிதல்' என்னுங் கிளவிச் செய்யு ளில் முன்னாள் பொற்றேரின் வந்து புணர்ந்து சென்றார் என்றுங் கூறினமையானும், மேல் வரைவிடைவைத்துப் பொருள்வயிற் பிரிவோன் மீண்டு வருங்கால் பாகனொடு கூறலினுந் தேர்முந்த வேண்டுமென்று கூறுதலானும், வருந்தொறும் தேரொடுஞ் சேனை யொடும் வந்து, குறியிடத்துத் தமியனாய் வருதல் என்று உணர்க.

தோழி சிறைப்புறமாகச் செறிப்பறிவுறுத்தல் :

தோழி சிறைப்புறமாகச் செறிப்பு அறிவுறுத்தல் என்பது, தலை வன் சிறைப்புறமாகக் குறியிடத்து வரத் தோழி தங்களுக்குள்ள செறிப்பை அறிவுறுத்துக் கூறுதல். சிறைப் புறம் - வேலிப் புறம்.

[1] 'நிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை.'

என்பதனானுணர்க. செறிப்பு - கானவர் தினைகொய்யப் புனத்தின் இல் வந்திருத்தல்.

**தொடைக்கணி யார்தடந் தோளவர் கேளலர் தோகையன்னார்**
**உடைக்கணி யாந்தழை கொய்யா ருழவ ருடைத்ததெண்ணீர்**
**மடைக்கணி யார மிடுந்தஞ்சை வாணன் வரையின்முன்போல்**
**கடைக்கணி யார்கணி யார்நம்மை நாளைக் கருங்கணியே.**

(இ - ள்.) கரிய கண்ணையுடையாய்! மாலைக்கு அழகார்ந்த பெரிய தோளினையுடையார் நமக்கு இனி யுறவலர்; மயில்போன்ற ஆயக்கூட்டத்தாரும் அரையில் உடுத்தற்கு அழகார்ந்த தழையை இனிக் கொய்யார்கள்; உழவருடைத்த தெண்ணீர் வயல்மடையை அணியப்பட்ட முத்தினாலடைக்குந் தஞ்சைவாணன் வரையிடத்து நாம் தழைகொய்ய [2]வந்தோம் என்று அச்சத்தானாக்கி நிற்கும் வேங்கையார் நாளை நம்மை முன்போற் கடைக்கண்ணாற் பாரார் என்றவாறு.

எனவே, குறவர் தினைகொய்ய வந்தனர், யாம் இன்று ஊர்க்கு ஆயக்கூட்டத்துடன் போவோம் என்று செறிப்பறிவுறுத்தவாறாயிற்று.

கேளலர் - உறவலர். உடைக்கு - உடுத்தற்கு. ஆரம்-முத்து. கடைக்கணியார் - கடைக்கண்ணாற் பாரார். சிறப்பும்மை தொக்கது. கணியார் - வேங்கையார்; உயர்சொற்கிளவி.

[3] 'ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்
ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும்
வழக்கி னாகிய வுயர்சொற் கிளவி
இலக்கண மருங்கிற் சொல்லா றல்ல.'

என்னுஞ் சூத்திரவிதியானுணர்க. கடைக்கணித்தல் - கடைக்கண்ணால் நோக்குதல். (கஙிக)

1. குறள். வாழ்க்கைத்துணைநலம் - எ.
2. (வே. பா.) (1) வருவோம்.
3. தொல். சொல். கிளவியாக்கம் - உஎ.

### தோழி தலைமகற்கு முன்னிலைப் புறமொழி மொழிந் தறிவுறுத்தல்:

தோழி தலைமகற்கு முன்னிலைப் புறமொழி மொழிந்து அறிவுறுத்தல் என்பது, தலைவன் முன்னிலையாய் நிற்பத், தோழி தலைமகனைக் காணாள்போலப் புறமொழியாய்ப் புட்களை நோக்கிக் கூறுவாள் போன்று செறிப்பறிவுறுத்தல்.

பயில்காள பந்திப் புயலன்ன வோதியைப் பைங்கிள்ளைகாள்
மயில்காள் சிறிது மறக்கப் பெறீர்தஞ்சை வாணன்வெற்பில்
குயில்காள மெங்கு மியம்புதண் சோலையிற் கூடியின்பம்
அயில்காள வெங்கதிர் வேலன்பர் சால அயர்ப்பினுமே.

(இ - ள்.) பைங்கிள்ளைகாள், மயில்காள், நெருங்கிய கரியபந்தியாயிருக்கின்ற புயல்போன்ற வோதியை யுடையாளைத், தஞ்சைவாணன் வெற்பில் குயில் காளம்போல் எங்கும் ஒலிக்குங் குளிர்ந்த சோலையிற்கூடி இன்பமருந்தும் விடம்போன்ற வெங்கதிர் வேலையுடைய அன்பர் மிகுதியும் மறந்தாலும், நீங்கள் சற்றும் மறக்குந் தன்மையைப் பெறீராக என்றவாறு.

எனவே, யாம் ஊர்க்குப் போகாநின்றேம் எனச் செறிப் புணர்த்தலாயிற்று.

பயிலுதல் – நெருங்குதல். காளம் – கருமை. பந்தி – நிரை. ஓதி – கூந்தல். காள்ம் – காகளம். இயம்பல் – ஒலித்தல். அயிலுதல் – அருந்துதல். காளம் – விடம். அயர்த்தல்-மறத்தல். (கஞ௨)

### பாங்கி தலைமகன் முன்னின் றுணர்த்தல்:

கானலங் கான்மலர்க் கள்வாய்க் கருங்கணி கட்டுரையால்
கூனலஞ் சாய்பொற் குரலுங்கொய் தாரெமர் கொற்றவயாம்
ஏனலங் காவலு மின்றே யொழிந்தன மேழ்புவிக்கும்
தானலங் காரமன் னன்றஞ்சை வாணன் தமிழ்வெற்பிலே.

(இ - ள்.) கொற்றவ! ஏழுலகுக்கும் கீர்த்தியால் அலங்காரம் போன்றவனாகிய தஞ்சைவாணன் வெற்பிடத்துச் சோலையில் அழகிய மணத்தோடுங் கூடிய மலரிலிருக்குங் கள்ளைத் தன்னிடத்திலேயுடைய பெரிய வேங்கை

மரத்தினுடைய கட்டுரையால், எமர், தலைவனைந்து சாய்ந்த பொன்னிறமாகிய தினைக்கதிரைக் கொய்கின்றாராதலால், தினைப்புனங் காவலும் இன்று ஒழிந்தனம் என்றவாறு.

கானல் - சோலை. கான் - மணம். கணி - வேங்கை. கட்டுரை - உறுதிச்சொல்.

வேங்கை பூக்குங்காலம் தினைக்கதிர் கொய்யுங் காலமாதலால், வேங்கை கட்டுரையால் தினைக்கதிர் கொய்கின்றார் என்று கூறியது.

[1] 'வாராக் காலத்து நிகழுங் காலத்தும்.'

என்னுஞ் சூத்திரவிதியால் கொய்கின்றார் என்னும் நிகழ்காலச் சொல்லைக், 'கொய்தார்' என விரைவுபற்றி இறந்தகாலத்தாற் கூறினாரென வுணர்க. முன், 'இறைவனைக் குறிவரல் விலக்கல்' செய்யுளில் [2]'புனமும் பசுந்தினைச் செங்குர லேந்தும்' என்று கூறியவதனானும், 'கொய்கின்றார்' என்றே கொள்க.

கூனல் - தலைவளைதல். குரல் - கதிர். ஏனல் - தினை. 'சோலையில் அழகிய மணத்தோடுங் கூடிய மலரிலிருக்குங் கள் வாயினிடத்து நாறுங் கரிய நிறத்தையுடைய கணிக்காரிகை கட்டுரையால்' எனினும் அமையும், கணிக்காரிகையைக் கேட்டுத் தினை கொய்தல் அவர்க் கியல்பாதலின். (கடுரு)

### பாங்கி முன்னின் றுணர்த்தி யோம்படைசாற்றல்:

பாங்கி முன்னின்று உணர்த்தி ஓம்படை சாற்றல் என்பது, அவ்வாறு முன்னின்று உணர்த்திய பாங்கி எம்மை மறவாமை வேண்டுமென்று கூறுதல்.

**கனஞ்சாய நல்கிய கையுடை யானெதிர் கன்றினர்தம்**
**மனஞ்சாய வென்றருள் வாணன் வரோதயன் மாறைவெற்பில்**
**சினஞ்சாலும் வேலண்ண லேமறவே லெம்மைச் செவ்வியிரு**
**தனஞ்சா யினுமினி நின்னையல் லாதில்லைத் தாழ்குழற்கே.**

(இ - ள்.) கொடையில் மேகஞ்சாயக் கொடுக்கப்பட்ட கையையுடையவன் வீரத்தா லெதிராகிச் சினந்தவர் மனஞ்சாய வென்றருளிய வரோதயனாகிய வாணனது

1. தொல். சொல். வினையியல் - சச.
2. தஞ்சைவா - கடுகூ.

மாறை வெற்பில் கோபமமையும் வேலையுடைய தலைவனே! அழகையுடைய இரு தனம் சாயினும் இனித் தாழ்ந்த குழலையுடையாட்குப் பற்றுக்கோடு நின்னையல்ல தில்லை யாதலால், எங்களை மறவேல் என்றவாறு.

கனம் - மேகம். சாய்தல் - நிலைதளர்தல். நல்கல் - கொடுத்தல். மனஞ்சாய - செவ்விதி னில்லாது வளைய. சினஞ்சாலும் - சினம் நிறையும். செவ்வி - அழகு. தனஞ்சாய்தல் - முலைசரிதல். 'தனஞ் சாயினும்' என்று இங்ஙனங் கூறுதல், எடுத்துக்கோடற்கண்ணே எஞ்ஞான்றும் ஒருதன்மையர் என்று கூறியதனோடு மாறுகொள்ளும் எனின், மாறுகொள்ளாது. என்னை,

> [1] 'நாடக வழக்கினு முலகியல் வழக்கினும்
> பாடல் சான்ற புலனெறி வழக்கம்.'

என்னுஞ் சூத்திர விதியால், ஆண்டுக்கூறியது நாடக வழக்கு; ஈண்டுக் கூறியது உலகியல் வழக்கென்றுணர்க. பற்றுக்கோடு அவாய் நிலையான் வந்தது. (கரு௪)

### கிழவோன் தஞ்சம்பெறாது நெஞ்சொடு கிளத்தல்:

கிழவோன் தஞ்சம்பெறாது நெஞ்சொடு கிளத்தல் என்பது, இவ்வாறு கூறக்கேட்ட தலைவன் வேறோர் பற்றுக்கோடுபெறாது நெஞ்சொடு கூறல்.

**ஏவல ரேய்விழி மாந்தளிர் மேனிய ரேனலினிக்**
**காவல ரேமனங் காத்தனம் யாங்களி யானைசெம்பொன்**
**நாவல ரேபெற நல்குங்கை மேக நறுங்குவளை**
**மாவல ரேய்தொடை யான்றஞ்சை வாணன் வரையில்வந்தே.**

(இ - ள்.) மனமே! ஏவும் மலரும் போன்ற விழியினையும் மாந்தளிர்போன்ற மேனியையும் உடைய அவர் இனித் தினைப்புனங் காப்பாரல்லர்; களித்தயானையும் செம்பொன்னும் நாவலர்பெறக் கொடுக்குங் கையையுடைய மேகம்போன்ற நறுங் குவளையினது கரிய மலர் பொதிந்த மாலை யணிந்தவனாகிய தஞ்சைவாணன் வரையிடத்து வந்து நாம் வீணே காத்தனம் என்றவாறு.

---

1. தொல். பொருள். அகத்திணையியல் - ருங.

ஏ - அம்பு. ஏவலர் - எண்ணும்மை தொக்கு நின்றது. ஏய்தல் - ஒப்பு 'மாந்தளிர் மேனியர்' - உவமைத்தொகை. ஏனல் - தினை. இனி - இனிமேல். காவலர் - காப்பாரல்லர். 'யானைசெம்பொன்' - எண்ணும்மைத் தொகை. மாவலர் - கரியமலர். எய்தல் - பொதிதல். மனம் - அண்மைவிளி. (கருரு)

கிழவோன் பிரிந்துழிக் கிழத்தி மாலையம்பொழுதுகண் டிரங்கலும், பாங்கி புலம்புதலும், தலைவனீடத் தலைவி வருந்தலும், முன்னிலைப் புறமொழி மொழிதலும், பாங்கியொடு பகர்தலும், நீங்கற்கருமை தலைவி நினைந்திரங்கலும், கிழவோன் தஞ்சம்பெறாது நெஞ்சொடு கிளத்தலும் ஆகிய எழும் இரங்கற்குரிய. தலைவியைப் பாங்கி கழறலும், தலைவியைப் பாங்கி அச்சுறுத்தலும், தலைவிக் கவன்வரல் பாங்கி சாற்றலும் ஆகிய மூன்றும் வன்புறைக்குரிய. 'சிறைப்புறமாகச் செறிப்பறி வுறுத்தல்' முதல் நான்கு கிளவியும் இற்செறிப்பு உணர்த்தற்கு உரியவாறு காண்க.

ஒருசார் பகற்குறி முற்றிற்று.

## கஉ. பகற்குறி இடையீடு

அஃதாவது, பகற்குறிக்கண் வந்த தலைமகன் குறிக்கட் செல்லாது இடையீடுபட்டுப் போதல்.

> [1] 'விலக்கல் சேறல் கலக்க மென்றுங்
> கிளப்பின்மூ வகைத்தே பகற்குறி இடையீடு.'

என்னுஞ் சூத்திரவிதியாற் பகற்குறி யிடையீடு மூவகைப்படும்.

இறைவனைப் பாங்கி குறிவரல் விலக்கல் :

புனமும் பசுந்தினைச் செங்குர லேந்தும் புகன்றகிள்ளை
இனமுங் குழீஇவந் திறைகொள்ளு மாலிறை யார்வளையும்
மனமுங் கவர்வெற்ப வாணன்தென் மாறை மடப்பிடியும்
அனமுந் தொழுநடை பாற்பல கால்வரு மன்னையுமே.

(இ - ள்.) தலைவி கையின்கண் நிறைந்த வளையும் அவள் மனமும் இரண்டையுங் கவர்ந்து கொள்ளும் வெற்பனே! இப்புனமும் பசிய தினையினது முற்றிச் சிவந்த கதிரை யேந்தியிருக்கும்; இவள் சொல்லைப்போற் சொல்லப் பட்ட கிளியினமும் கூடிவந்து தங்கும்; வாணன் தென் மாறை நாட்டு மடப்பத்தோடுகூடிய பிடியும் அன்னமும் தொழும் நடையினை யுடையாள் பக்கல் அன்னையும் பல் கால் வரும் என்றவாறு.

எனவே, தலைவியும் புனம்விட்டு நீங்கத்தகாதாளல்லள், நீயும் இங்கு வாரற்க எனக் குறிப்பாற் பெறப்பட்டது.

குரல் - கதிர்; குழீஇ வருதல் - பலபல தொகுதியாய்க் கூடி வருதல். இறைகொள்ளுதல் - தங்குதல். இறை - ஆகுபெயர். தொழுநடை - ஆகுபெயர். கவர்தல் - கொள்ளுதல். (கடுசு)

இறைவியைப் பாங்கி குறிவரல் விலக்கல் :

நந்துசுற் றுங்கடல் ஞாலமெல் லாம்புகழ் நாமன்வளர்
சந்துசுற் றுங்கொங்கை மங்கையர் வேள்சஞ் சரீகநறை
வந்துசுற் றுந்தொங்கல் வாணன்தென் மாறை வரையின்மலர்க்
கொந்துசுற் றுங்குழ லாய்செல்லல் நீயக் குளிர்பொழிற்கே.

---

1. அகப்பொருள்விளக்கம், களவியல் - ந௨அ.

(இ-ள்.) சங்கு சுற்றுங் கடல்சூழ்ந்த வுலகமெல்லாம் புகழப்பட்ட பெயரைப் படைத்து நாட்கு நாள் வளருந் தகைமையையுடைய சந்தனந்திமிருங் கொங்கையையுடைய மங்கையர்க்கு வேளையொத்த சஞ்சரீகம் மணத்தால் வந்து சுற்றுந் தொங்கலையணிந்த வாணன் தென்மாறை வரையிடத்துள்ள மலர்க்கொத்துச் சுற்றிய குழலாய், குளிர்ந்த பொழிலிடத்து நீ செல்லற்க என்றவாறு.

நந்து - சங்கம். நாமம் - பெயர். சந்து - சந்தனம். சுற்றல் - திமிர்தல். சஞ்சரீகம் - வண்டு. நறை - மணம். கொந்து-கொத்து; மெலிந்து நின்றது. 'நாமன் வேள்' என்னும் வினைக்குறிப்புமுற்று எச்சமாய்த்திரிந்து நின்றது. (கருஎ)

இறைமகளாடிடம் நோக்கி யழுங்கல் :

அருவித் தடமு மணிமுத்த யாறு மவனியெங்கும்
திருவித் தியதஞ்சை வாணன் சிலம்புமிச் சிற்றிலும்பேர்
இருவிப் புனமுமின் றென்னினைக் கின்றன வென்னையின்னே
மருவிப் பிரிபவர் போலில்லை யேமண்ணில் வன்கண்ணரே.

(இ-ள்.) சிற்றருவி வந்து விழும் பொய்கையும், ஒழுங்காய முத்துக்களைக் கொழித்துவரும் பேரருவியாறும், புவியெங்குஞ் செல்வத்தையே வேளாண்மையாய் விதைக்கப்பட்ட வாணனது சிலம்பும், இச்சிற்றில்லமும், பெரிய தாளையுடைய தினைப்புனமும், இன்று என்னையென்னுக நினைக்கின்றனவோ, இப்போது பலநாளும் மருவிப் பிரிபவர்போல் உலகின் வன்கண்ணர் இல்லை என்றவாறு.

உம்மை - எண்ணும்மை. தடம் - பொய்கை. இருவி - தினைத்தாள். இன்னே - இப்போது. வன்கண்ணர் - கொடியர். அழுங்கல் - தன்னுள் இரங்கல். (கருஅ)

பாங்கி ஆடிடம்விடுத்துக் கொண் டகறல் :

பாங்கி ஆடிடம் விடுத்துக் கொண்டகறல் என்பது, பாங்கி விளையாடுமிடம் விட்டு நீங்கித் தலைவியைக்கொண்டு தம்மூர்க்குப் போதல்.

உன்னைய ராவல்கு னல்லவ ரேயென் றுசாவினெங்கள்
மன்னைய ராமல் வகுத்துரை நீதஞ்சை வாணன்வெற்பின்
என்னைய ராணைகொண் டேகுகின் றேனிவை யித்தனையும்
பின்னைய ராதொழி வாயித ணோயிது பெற்றனமே.

(இ - ள்.) பரணே! நீயும் யானும் இந்தப் பிரிவைப் பெற்றனமே, உன்னை யெங்கள் மன்னுகிய தலைவர் வந்து அரா வல்குல் நல்லவர் எங்கே யென்று உசாவில், அயர்ச்சி யடையாமல் நீ வகுத்துச் சொல்வாய்; தஞ்சைவாணன் வெற்பில் என்னையர் ஏவலால் தலைவியைக்கொண்டு ஊர்க் கேகுகின்றனன்; ஆடிடம் நோக்கி யழுங்கியதும், ஆடிடம் விடுத்துக்கொண் டகறலும், உன்னுடன் சொல்கின்ற சொற்களுமாகிய இவை யித்தனையும் பின் மறவாதொழிவா யாக என்றவாறு.

'நல்லவர்' என்புழி, 'எங்கே' என வருவித்து உரைக்க. 'அரா வல்குல்' உவமைத்தொகை. ஓகாரம் - அசைநிலை. உசாதல் - வினு தல். அயர்ச்சி - தளர்ச்சி. என்னையர் - ஈன்றோர். ஆணை - ஏவல். அயர்தல் - மறத்தல். இதண் - பரண். (கருகக)

இத்துணையும் ஆருநாட் செய்தியென்றுணர்க.

**பின்னாள் நெடுந்தகை குறிவயின் நீடுசென் றிரங்கல்:**

பின்னாள் நெடுந்தகை குறிவயின் நீடுசென்று இரங்கல் என்பது, ஏழாநாள் தலைவன் குறியிடமாகிய மாதவிப்பந்தரிடத்து வந்து நீட்டித்து நினைந்திரங்கல்.

மான்காள் நிகரில் மடமயில் காள்தஞ்சை வாணன்வெற்பில்
தேன்காள் நிரைமென் சிறைக்கிள்ளை காளென் தெருமரல்நோய்
தான்கா ணியகொலிச் சந்தனச் சோலையைத் தன்னையின்றி
யான்கா ணியகொல் எழுந்தரு ளாதநின் றென்னுயிரே.

(இ - ள்.) மான்காள்! உவமையில்லாத மடப்பத்தை யுடைய மயில்காள்! தஞ்சைவாணன் வெற்பிடத்திருக் கின்ற வண்டுகாள்! ஒழுங்காய் வருகின்ற மெல்லிய சிற கையுடைய கிளிகாள்! இன்று என்னுடைய சுழலும்

வேட்கைநோயைத் தானறியவோ, இச்சந்தனச்சோலையிற் கரந்திருக்கின்ற தன்னை இன்று யான் தேடிக்காணவோ, என்னுயிர்போல்வாள் எழுந்தருளாதது என்றவாறு.

தெருமரல் - சுழற்சி. 'சோலையை' என்புழி வேற்றுமை மயக்கம். உயிர் - ஆகுபெயர். (கசO)

**தலைவன் வறுங்களநாடி மறுகல்:**

தலைவன் வறுங்களநாடி மறுகல் என்பது, தலைவி யில்லாத தினைப்புனத்தை நோக்கி வருந்துதல்.

**செங்கேழ் விழிக்கு மொழிக்கும் பகைதிருப் பாற்கடலும்**
**பங்கே ருகமும் பயந்தன வாயினும் பைங்கிள்ளைகாள்**
**சங்கேய் தடந்துறை சூழ்தஞ்சை வாணன் தரியலர்போல்**
**எங்கே யினித்தங்கு வாரேனல் காத்திங் கிருந்தவரே.**

(இ - ள்.) பைங்கிள்ளைகாள்! செவ்வரி பொருந்திய விழிக்கும் மொழிக்கும் தாமரையும் திருப்பாற்கடலும் மாதரைப் பெற்றனவாயினும் பகையாயின வாதலால், தினைப்புனங் காத்திருந்தவர் சங்குபொருந்திய பெரிய வைகைத்துறை சூழ்ந்த தஞ்சைவாணன் தரியலர்போல் இன்று எங்கே தங்குவார் என்றவாறு.

இது மொழிமாற்று நிரனிறை.

[1] 'ஆடவர்க ளெவ்வா றகன்றொழிவார் வெஃகாவும்
பாடகமு மூரகமும் பஞ்சரமாய்—நீடியமால்
நின்று மிருந்தான் கிடந்தா னிதுவன்றோ
மன்றூர் மதிற்கச்சி மாண்பு.'

என்றாற்போல, நிரனிறை மொழிமாறி நின்றது.

கேழ் - நிறம். பங்கேருகம் - தாமரை. இடமாயினதன்றி பயந்ததின்றே யெனின், சீதை இலங்கையில் பொய்கைத் தாமரையிற் பிறந்தாளென்பது இராமர் கதையிற் கண்டுகொள்க. துறை - வைகைத்துறை. தரியலர் - பகைவர். ஏனல் - தினை. 'கோடாப் புகழ்மாறன்' என்னுஞ் செய்யுளும், 'வறுங்களநாடிமறுகல்' என்றே கொள்க. (கசக)

குறுந்தொடி வாழுமூர்நோக்கி மதிமயங்கல் :

குறுந்தொடி வாழும் ஊர் நோக்கி மதி மயங்கல் என்பது, தலைவியின் ஊர் தேடிச் சேறுமெனில், அறிந்திலம் என்று மதி மயங்கிக் கூறல்.

பெறவரி தாலவள் பின்சென்ற நெஞ்சமும் பேணலர்க்கு
மறவரி தானன்ன வாணன்தென் மாறை வரைப்புனஞ்சூழ்
நறவரி தாழ்முல்லை நாண்மல ரோதி நகருமெனக்
குறவரி தாமென்செய் வேனென்று சோருமென் னேருயிரே.

(இ - ள்.) அவளைப் பெறுதல் அரிதாயதுமன்றி அவள்பின்னே தொடர்ந்துசென்ற நெஞ்சமும் மீட்டு நாம் பெறவேண்டுமெனிற் பெறுதற்கு அரிதாயது ; பகைவர்க்கு வீரம் பொருந்திய சிங்கத்தையொத்த வாணன் தென் மாறை வரைப்புனஞ் சூழ்ந்த கள்ளால் வண்டு தாழப்பட்ட முல்லை நாண்மலரை யணிந்த குழலையுடையாளது நகரும் எனக்கு உறுதற்கரிதாதலான், என்செய்வேன் என்று என்னைப்பற்ற உயிர் சோராநிற்கும் என்றவாறு.

எனவே, இதற்குச் செய்யுமா றறிந்திலேனென மதிமயங்கிக் கூறியவாறாயிற்று.

மதி - அறிவு. ஆல் - அசை. பேணலர் - பகைவர். மறவரி - வீரச்சிங்கம். 'சூழ்ந்த' என்னும் பெயரெச்சம் 'நகர்' என்னும் பெயர்கொண்டு முடிந்தது. நெஞ்சமும் என்னும் உம்மை எச்ச வும்மை. நறவு - கள்ளு. அரி - வண்டு. 'தாழ்முல்லை' - வினைத் தொகை. 'நாள்மலரோதி' - ஆகுபெயர். முன்னர், 'இடமணித் தென்றல்' என்னுஞ் செய்யுளில் தன்னூரும் அவளூரும் ஒரெல்லை யென்று கூறினவன், இங்ஙனம் ஊரறியேன் என்று கூறியது முன்கூறியதனோடு மாறுகொள்ளுமெனின், மதிமயங்கிக் கூறலான் மாறுகொள்ளாதென்று உணர்க. (கசுஉ)

இவற்றுள் முன்னைய இரண்டும் விலக்கற்குரியன. 'பாங்கி யாடிடம் விடுத்துக்கொண் டகறல்' ஒன்றும் சேரற்குரித்து. ஏனைய நான்கும் கலக்கத்திற்குரியன.

பகற்குறி இடையீடு முற்றிற்று.

---

## கரு. இரவுக்குறி

அஃதாவது, தலைவன் தலைவியை இரவுக்குறியிற் கூடுதல்.

[1] 'வேண்டல் மறுத்த லுடன்படல் கூட்டம்
கூடல்பா ராட்டல் பாங்கிற் கூட்டல்
உயங்கல் நீங்கலென் றென்பது வகைத்தே
இயம்பிப் போந்த இரவுக்குறி தானே.'

என்னுஞ் சூத்திரவிதியான் இரவுக்குறி ஒன்பது வகைப்படும்.

### இறையோன் இருட்குறி வேண்டல்:

இறையோன் இருட்குறி வேண்டல் என்பது, தலைவன் இருட்குறியை விரும்பிப் பாங்கியுடன் கூறல்.

**கருவிருந் தெண்டிசை யுங்கன மாமழை கான்றதுள்ளம்**
**வெருவிருந் தெம்பதிக் கேகவொண் ணுது விதம்விதமாய்**
**வருவிருந் தென்றும் புரந்தருள் வாணன்தென் மாறையன்னீர்**
**ஒருவிருந் தெங்களைப் போலெய்து மோகங்குல் உங்களுக்கே.**

(இ - ள்.) வகைவகையாய் வரும் விருந்தை எஞ்ஞான்றும் ஓம்பும் வாணன் தென்மாறை நாடுபோல்வீர், சூல்கொண்டு முகில் எண்டிசையும் பெரிய மழையைப் பெய்தது; ஆதலால், உள்ளத்தினிடையே அச்சமிருந்தால் எம் பதிக்குச் செல்லுதல்கூடாது, இற்றைக்கு வைகுதல் வேண்டும்; எங்களைப்போல் ஒப்பற்ற விருந்து இந்தக் கங்குலின்கண் உங்களுக்கு நீர் வருந்தித் தேடினும் கிடைக்குமோ, சொல்லுவீராக என்றவாறு.

கரு - சூல். கனம் - முகில். கான்றல் - பெய்தல். வெருவு - அச்சம். ஏக - போக. ஒண்ணுது - கூடாது. விருந்து புரத்தல்- விருந்தோம்பல். அன்னீர் - உயர்சொற்கிளவி. (கசுரு)

### பாங்கி நெறியின தருமைகூறல்:

**மலைமாது வல்லவன் வாணன் வரோதயன் மாறைவெற்பில்**
**சிலைமா லுருமெங்குந் தீயுமி ழாநிற்குஞ் சிங்கமெங்கும்**
**கொலைமா கரியிரை தேர்ந்துழ லாநிற்குங் கொற்றவபொற்**
**கலைமா னுறைபதி நீவரு மாறென்கொல் கங்குலிலே.**

---

1. அகப்பொருள் விளக்கம், களவியல் - சo.

(இ - ள்.) வீரமகட்குக் கணவனாகிய வாணனென்னும் வரோதயன் வெற்பிடத்திற் கொற்றவனே! மேகலை பொருந்திய மான் உறைகின்ற பதிக்கு நீ வருகின்றவழி வில்லொடுகூடிய மேகத்திடத்து இடிகளெங்குந் தீயைக் கக்காநிற்கும்; சிங்கங்கள் எவ்விடத்துங் கொல்லுந்தொழிலை யுடைய கரிகளை யிரையாகத் தேடி வருந்தித் திரியாநிற்கும்; கங்குற்பொழுதில் நீ வந்தது எப்படியோ என்றவாறு.

எனவே, நீ வருதல் தகுதியன்றென்று கூறியவாறாயிற்று.

மலைமாது - வீரமகள்; மலைதல் - பொருதல். சிலை - வில். மால் - மேகம். உரும் - இடி. உமிழ்தல் - கக்கல். தேர்தல் - ஆராய்தல். உழலல் - வருந்தித் திரிதல். பொற்கலை மான் - மேகலையுடைய தலைவி. (ககூச)

இறையோன் நெறியின தெளிமைகூறல்:

வடுவரி நீள்கண்ணி அஞ்சலம் யாந்தஞ்சை வாணன்வெற்பில்
கொடுவரி கேழற் குழாம்பொரு கொல்லைபுங் குஞ்சரந்தேர்ந்
தடுவரி தாவும் அடுக்கமுஞ் சூர்வழங் காறுமைவாய்க்
[1]கடுவரி நாகந் தவர்மல்கு கல்லளைக் கானமுமே.

(இ - ள்.) வடுப்போன்று வரியோடுகூடிய நீண்ட கண்ணையுடையாய்! தஞ்சைவாணன் வெற்பிடத்துப் புலிக்குழாமும் பன்றிக்குழாமும் ஒன்றோடொன்று பொரப்பட்ட கொல்லைக்காடும், குஞ்சரத்தைத் தேடிக் கொல்லும் சிங்கம் தாவப்பட்ட மலைப்பக்கமும், அச்சத்தைக்கொடுக்குஞ் சூரரமகளென்னுந் தெய்வப்பெண் இயங்கும் வழியும், ஐந்து வாயும் விடமும் வரியுமுடைய நாகங்கள் தவர்ந்து செல்லும் நெருங்குகற்களின் வளைகளையுடைய காடும் யாம் அஞ்சலம் என்றவாறு.

வடு - மாவடு. வரி - செவ்வரி. கொடுவரி - புலி. கேழல் - பன்றி. தேர்தல் - ஆராய்தல். அடுக்கம் - மலைப்பக்கம். சூர் - சூரரமகள். ஆறு - வழி. வழங்கல் - இயங்கல். தவர் - தவர்தல்.

(வே. பா.) (1) கடுவரி நாகக் குழாமல்கு.

கல்லளை - கல்வளை. அடுதல் - கொல்லுதல். அரி - சிங்கம். அடு, முற்றியலுகர மாதலான் வகர வுடம்படுமெய் பெற்றது. தாவுதல் - பாய்தல். (கசுரு)

### பாங்கி யவனாட் டணியியல் வினுதல் :

பாங்கி அவன்நாட்டு அணி இயல் வினுதல் என்பது, பாங்கி தலைவன் நாட்டுப் பெண்களணியும் அணியையும் இயலையும் வினுதல். இயல் - புனைதல், முடித்தல், விளையாடிடம் முதலியன.

எனவே, தலைவன் நெறியினது எளிமை கூறிபவழி நன்றென்று கூட்டற்கு உடம்பட்டுக் கூறுது, அணியியல் வினுதல் வினுவழுவெனின், அன்று. தலைவனை அவனாட்டணியியல் வினுவுழித் தலைவன் தன்னாட்டணியியல் வினுவும், வினுவுழி அணியியல் கூறும்வழி அதுவே குறியிடமாகக் கூறலாம் என்று கருதிப் பாங்கி வினுவியவாறென்று உணர்க.

பூந்தழை யாது மலைமலர் யாது புனையிழையும்
சாந்தமும் யாது தடம்பொழில் யாது தரணியின்மேல்
மாந்தரில் வேளன்ன வாணன்தென் மாறை வளநகர்சூழ்
தேந்தரு சோலைவெற் பாவுங்கள் நாட்டுறை செல்வியர்க்கே.

(இ - ள்.) புவியின்மேல் மாந்தருக்குள் வேளையொத்த வாணன் தென்மாறை வளநகர்சூழ் தேனைத் தரும் மலரை யுடைய சோலைவெற்பனே! உங்கள் நாட்டுறையும் செல்வியர்க்கு இடையிலுடுக்கும் பூந்தழை யாது? சூடும் மலர் யாது? அணியும் அணியொடு பூசுஞ் சந்தனமும் யாது? விளையாடும் பெரிய பொழில் யாது? சொல்வாயாக என்றவாறு.

மலைதல் - சூடுதல். புனைதல் - அணிதல். இழை - அணி. உம்மை இரண்டும் அசைநிலை; எண்ணும்மை யாகாதோவெனின், ஆகின் பன்மை வாசகங்கொண்டு முடியுமா லான், எண்ணும்மை யாகாது; ஆதலால் மூன்றனுருபு உருவித்துரைக்கப்பட்டது. தடம் பொழில் - பெரியபொழில். தேம் - தேன். (கசுசு)

### தலைவ னவளாட் டணியியல் வினுதல் :

தலைவன் அவள் நாட்டு அணி இயல் வினுதல் என்பது, பாங்கிகுறிப்பு அறிந்து அவள் நாட்டு அணி இயலைத் தலைவன் வினுதல்.

எந்நாட் டவரணி கூறியென் பேறிங் கிகல்வடிவேல்
மைந்நாட்ட வெண்முத்த வாணகை யாய்தஞ்சை வாணன்மண்
உந்நாட் டரிவைய ராடிடஞ் சாந்த மொளியிழைபூ [மேல்
மொய்ந்நாட் டழையொடெல் லாமொழி யாமல் மொழியெனக்கே.

(இ - ள்.) போர்செய்யுங் கூரிய வேல்போன்ற மையெழுதிய நாட்டத்தையும், வெண்முத்துப்போன்ற வொளி நகையையும் உடையாய்! எங்கள் நாட்டவர் அணியும் அணி முதலிய கூறிப் பெறுவதியாது, தஞ்சைவாணன் மண்மேல் இவ்விடத்து உங்கள் நாட்டு அரிவையர் ஆடிடமும், பூசுஞ்சாந்தும், அணியும் ஒளிப்பூணும், முடிக்கும் பூவும், மொய்த்த நாட்டழையோடு எல்லாம் விடாமல் எனக்கு மொழிவாயாக என்றவாறு.

இங்கு - இவ்விடம். இகல் - போர். நாட்டம் - கண். வாள் - ஒளி- 'வடிவேல் நாட்டம்,' 'வெண்முத்தநகை' இரண்டும் உவமைத்தொகை. மொய்த்தல் - செறிதல். (கசுஎ)

தன்னுட் டணியியல் பாங்கி சாற்றல்:

வகைகொண்ட மாந்தழை காந்தள்ம் போது மருப்பின்முத்தம்
தகைகொண்ட சந்தனச் சாந்தணிந் தாடுவர் தஞ்சையர்கோன்
மிகைகொண்ட தெவ்வரை வெந்கண்ட வாணன்வெற் பாவெமதூர்
நகைகொண்ட வல்லியனா ரெல்லி நாக நறுநிழலே.

(இ - ள்.) குற்றங்கண்ட தெவ்வரைப் புறங்கண்ட தஞ்சையர் கோனாகிய வாணன் வெற்பனே! எமது ஊரிடத்து மகிழ்ச்சிகொண்ட வல்லிபோல்வார், வகைகொண்ட மாந்தழை, காந்தளம் போது, யானைக்கோட்டு முத்தம், அழகுகொண்ட சந்தனச்சாந்து இவையணிந்து கங்குற்காலத்துப் புன்னாகத்தின் நறிய நிழலில் விளையாடுபவர் என்றவாறு.

எனவே, குறியிடங் கூறியவாறாயிற்று. இரவுக்குறியிடம் மனையைச் சுற்றி வளைந்த மதிலகத்தென்று உணர்க.

'மிகை கொண்ட தெவ்வரை வெந் கண்ட தஞ்சையர் கோனு கிய வாணன்' என முடிக்க. 'நிழலிலாடுவர்' என இயையும். 'வகைகொண்ட' என்பதனைப் 'போது' முதலியவற்றிற்குங் கூட்டுக.

வகை கொள்ளலாவது: தழைவகையிற் கொண்ட மாந்தழையும், போதுவகையிற் கொண்ட காந்தட் போதும், முத்தவகையிற் கொண்ட யானைக்கோட்டு முத்தமும், சந்தனவகையிற் கொண்ட தகைகொண்ட சந்தனமும் என்று உணர்க.

தகை - அழகு. மிகை - குற்றம். வெந் - புறம். நகை-மகிழ்ச்சி. எல்லி - இரா. உடுப்பதற்கும், சூடுவதற்கும், பூண்பதற்கும், 'அணிந்து' என்னுஞ் சொல் பொதுவாகலான் அச்சொற்கொண்டு ஒரு முடிபாக்கிக் கூறியவாறு உணர்க. (கசுஅ)

### இறைவிக் கிறையோன்குறை யறிவுறுத்தல் :

இறைவிக்கு இறையோன் குறை அறிவுறுத்தல் என்பது, பாங்கி தலைவனை ஓரிடத்து நிறுவி தலைவிபக்கற் சென்று தலைமகன் குறையை யறிவித்தல்.

**புயலே றதிர்தொறும் பொங்குளை மீதெழப் போதகந்தேர்ந்**
**தியலே றதிரு மிருங்கங்குல் வரய்முத்த மீன்றுசங்கம்**
**வயலே றணைவளா ருந்தஞ்சை வாணன் வரையிலுண்கண்**
**கயலே றனையநின் பால்வரல் வேண்டினர் காதலரே.**

(இ - ள்.) இடி யதிருந்தொறும் மிகுந்த மயிரைச் சிலிர்த்து யானையைத்தேடி யியங்குஞ் சிங்கவேறு வாய் விடும் பெரிய கங்குலிடத்துச் சங்கம் முத்தங்களையீன்று வயலினுயர்ந்த வரம்பிலே துயிலுந் தஞ்சைவாணன் வரையிடத்துக் கயலேறுபோன்ற மையுண்ட கண்ணையுடைய நின்பக்கல் வரத் தலைவர் விரும்பினர் என்றவாறு.

புயலேறு - இடி. பொங்குதல் - மிகுதல். உளை - மயிர். மீதெழல் - மேலே சிலிர்த்தல். போதகம் - யானை. தேர்தல் - தேடுதல். இயலல் - இயங்குதல். ஏறு - சிங்கவேறு. 'இடித்தவுடன் மயிர்சிலிர்த்துச் சிங்கம் யானையைத் தேடும்' என்றது, இடியென் றறியாது களிறு பிளிறியதென்று கருதித் தேடியவாறென்று உணர்க. 'சங்கு முத்த மீன்று' எனவும், 'கயலே றனைய வுண்கண்' எனவும் மாறுக. கயலேறு - மீன்களிற் சிறந்தது. தலைவி - முன்னிலையெச்சம். (கசுக)

நேரா திறைவி நெஞ்சொடு கிளத்தல் :

நேராது இறைவி நெஞ்சொடு கிளத்தல் என்றது, இவ்வாறு கூறக்கேட்ட தலைவி இயையாது தன் நெஞ்சொடு கூறுதல்.

**விடவார் கணைவிழி மெல்லியல் மாதரை மேதினியோர்**
**மடவா ரெனுமுரை வாய்மைநெஞ் சேதஞ்சை வாணன்தெவ்விற்**
**கடவா ரணந்திரி கங்குனங் கண்ணன்ன காதலர்முட்**
**பிடவார் சிறுநெறி வாய்வரல் வேண்டினள் பெண்ணணங்கே.**

(இ - ள்.) நெஞ்சே! தஞ்சைவாணன் பகைவரைப் போல் மதம்பொழியும் யானைதிரியுங் கங்குலில் முட்பிட வார்ந்த சிறுநெறியிடத்து நம் கண்போற்சிறந்த காதலர் வர அணங்குபோலும் பெண் விரும்பின ளாதலான், விடம் பொருந்திய நெடிய கணைபோலும் விழியையும் மெல்லிய இயலினையும் உடைய மாதரை உலகினுள்ளோர் மடவார் என்று கூறும் உரை வாய்மைதானே என்றவாறு.

'கணைவிழி' - உவமைத்தொகை. மடவார் - அறிவிலார். வாய்மை - உண்மை. கடவாரணம் - மதவாரணம். பிடவு - ஓர் மரம். சிறுநெறி - அருநெறி. 'பெண்ணணங்கு' - பின்மொழி நிலையல். (கஎ0)

நேரிழை பாங்கியொடு நேர்ந்துரைத்தல் :

நேரிழை பாங்கியொடு நேர்ந்து உரைத்தல் என்பது, நெஞ்சொடு கூறிய தலைவி பாங்கியோடு உடன்பட்டுக் கூறுதல்.

**வெங்குல வாரண மேற்றவர்க் கேநல்கி வேற்றரசர்**
**தங்குல வாழ்வு தவிர்த்தருள் வாணன் தமிழ்ச்சிலம்பில்**
**கங்குல வாவினர் காதல ராயிற் களிபயந்த**
**கொங்குல வாவலர் சூழ்குழ லாயென்கொல் கூறுவதே.**

(இ - ள்.) வெவ்விய கூட்டமாகிய யானைகளை இரப் போர்க்குக் கொடுத்துப் பகைவேந்தர்தங் குலத்தினுள் ளோர் வாழ்வெல்லாந் தவிர்த்தருள் வாணன் தமிழ்ச்சிலம் பிடத்து வண்டுகட்குக் களிப்பைக்கொடுத்த மணம் வாடாத மலர்சூழ்ந்த குழலாய்! காதலர் இரவுக்குறியைக்

காதலித்தாராயின் யான் மறுவார்த்தை கூறுவது என் என்றவாறு.

எனவே, நேர்ந்தமை யாயிற்று.

குலம் - கூட்டம். தமிழ்ச்சிலம்பு - பொதியமலை. களி - களிப்பு. 'களிபயந்த கொங்கு' என்றதனல் வண்டு வருவித்து உரைக்கப்பட்டது. கொங்கு - மணம். உலவா - வாடா. (கஎக)

நேர்ந்தமை பாங்கி நெடுந்தகைக் குரைத்தல்

பரவாத வண்ணம் பரவியும் பாதம் பணிந்துநெஞ்சம்
கரவாத பொன்னைநின் காரண மாகக் கயிலையென்றே
வரவா தவனஞ்சும் வெண்மா ளிகைத்தஞ்சை வாணன்வெற்பா
இரவாத வண்ணமெல் லாமிரந் தேனிவ் விரவிடையே.

(இ - ள்.) வெண்சாந்து பூசியவதனற் கயிலாயமலையென்று கதிரோன் வருதற் கஞ்சும் மாளிகையுடைய தஞ்சைவாணன் வெற்பனே! நெஞ்சத்தில் நின் காதலை மறையாத பொன்னை நின் பொருட்டாகப் புகழாத வண்ணமெல்லாம் புகழ்ந்தும், பாதங்களைப் பலகாற் பணிந்தும், இவ்விடையிருளின்கண் அவள் மனம் இயைதற்கு இரவாத முறைமையெல்லாம் இரந்தேன் என்றவாறு.

பரவுதல் - புகழ்தல். கரத்தல் - மறைத்தல். பொன் - திருமகள். ஆதவன் - கதிரோன். வண்ணம் இரண்டும் முறைமை. ()

குறியிடை நிறீஇத் தாய்துயி லறிதல் :

குறியிடை நிறீஇத் தாய்துயில் அறிதல் என்பது, பாங்கி தலைவனைக் குறியிடத்து நிறுத்தித் தாயினது துயிலை யறிதல்.

மாகந் தரியலர்க் கீந்தருள் வாணன்தென் மாறைவெற்பில்
மேகந் தருமின் னிடையன்ன மேவிரை நாண்மலர்வேய்
நாகந் தழுவுங் குடம்பையின் வாய்நடு நாளிரவில்
சோகந் தவிர்வில வாய்த்துயி லாததென் தோகைகளே.

(இ - ள்.) தன்னைச் சேராத பகைவர்க்கு வானுலகத்தை அளித்தருள் வாணன் தென்மாறை வெற்பிடத்து

மேகங்கொடுக்கும் மின்போன்ற இடையையுடைய அன்னமே! மணநாண்மலர் பொருந்திய புன்னைகத்தைத் தழுவுங் குடம்பையிடத்தில் இரவில் இடையாமத்து மயில்கள் துன்பத்தை நீங்காவாய்த் துயிலாதது என் என்றவாறு.

மாகம் - வானுலகு. தரியலர் - பகைவர். குடம்பை - கூடு. வேய்தல் - பொருந்துதல். சோகம் - துன்பம். தோகை - மயில். ()

இறைவிக் கிறைவன் வரவறிவுறுத்தல் :

கந்தார நாணுங் கனிந்தசொல் லாய்நங் கடிமனைக்கே
வந்தார் அவாவின் பெருமையி னற்றஞ்சை வாணன்வெற்பில்
கொந்தா ரசோகந் தருஞ்செழும் போதுங் கொழுந்தழையும்
தந்தா ரகலந் தழீஇயக லாது தணந்தவரே.

(இ - ள்.) தஞ்சைவாணன் வெற்பில் கந்தாரம் நாணும் தித்தித்த சொல்லாய்! கொத்தார்ந்த அசோகத் தரு தரப்பட்ட செழும்போதும் கொழுந்தழையும் தந்து நிறைந்த முலையைத் தழீஇ மனத்தாற் பிரியாது மெய்யாற் பிரிந்த, ஆதரங்கொண்ட அவாவின் பெருமையினால், நமது விளங்கிய மனைக்கு வந்தார் என்றவாறு.

கந்தாரம் - ஓர் பண். கனிதல் - தித்தித்தல். கடி - விளக்கம். கொந்து-கொத்து. அகலம்-ஆகுபெயர். தணத்தல்-பிரிதல். (கஎச)

தலைமகளைக் குறியிடத்துக் கொண்டுசேறல் :

மின்னே யயிலொடு மின்விளக் காவந்த வெற்பரைநாம்
பொன்னே யெதிர்கொளப் போதுகம் வாபுவி யேழினுக்கும்
தன்னேயம் வைத்தருள் சந்திர வாணன் தமிழ்ச்சிலம்பில்
நின்னே ரியன்மயில் கண்டுயில் நாக நிழலகத்தே.

(இ - ள்.) ஏழ்புவிக்கும் தன் அன்பை வைத்தாளப்பட்ட சந்திரவாணன் தமிழ்ச்சிலம்பி லிருக்கப்பட்ட பொன் போன்றவளே! நின் இயலுக்கு நேராகிய மயில் கண்ணுறங்கும் புன்னை நிழலகத்து ஒளிபொருந்திய வேலுடனே மின்னும் விளக்காகக் கங்குலில் வந்த வெற்பரை நாம் எதிர்கொள்ளப்போதுகம் வா என்றவாறு.

மின் - ஒளி. எய்தல் - பொருந்துதல். அயில் - வேல். பொன் - ஆகுபெயர். நேயம் - அன்பு. தமிழ்ச்சிலம்பு - பொதியமலை. இயல் - சாயல். 'நின் இயல்' என மாறுக. (கஎகு)

குறியுய்த் தகறல் :

குறி உய்த்து அகறல் என்பது, பாங்கி தலைமகளைக் குறியிடத்துச் செலுத்தித் தான் அகன்றுபோதல்.

மந்தார மன்னகை வாணன்தென் மாறை மயிலனையாய்
நந்தா வனப்பொய்கை நான்கொய்கு வேன்குழ லுனுங்கங்குல்
கொந்தார் தெரியனின் செங்கனி வாயொடுங் கொங்கையொடும்
பைந்தா மரையையுஞ் சேதாம் பலையும் பகைப்பித்ததே.

(இ - ள்.) மந்தார தருப்போன்ற கையையுடைய வாணன் தென்மாறைநாட்டு மயில் போன்றவளே, குழலுக்கு நாணுங் கங்குலானது கொத்தார்ந்த மாலையணிந்த நின் செங்கனிவாயொடுங் கொங்கையொடுஞ் சேதாம்பலையும் பைந்தாமரையையும் பகைக்கச் செய்ததாதலால், கேடில்லாத சோலையிடத்திருக்கும் பொய்கையிற் போய், நான் அப்போதுகளைக் கொய்வேன், கொய்து வருமளவும் இவ்விடத்து நிற்பாயாக என்றவாறு.

மந்தாரம் - பஞ்ச தருவில் ஓர் தரு. நந்தா - கெடா. வனம் - சோலை. கொந்து - கொத்து. தெரியல் - மாலை. சேதாம்பல் - அரக்காம்பல்.

இவ்வாறு இரவுக்குறிக்கண் தலைவியைத் தமியளாய் நிறுத்திப் பாங்கி நீங்கில் இடையிருளில் அச்சமின்றி தலைவி நிற்பளோ எனின், தான் பயின்ற இடமும் தன் ஆயத்தோடு ஒக்குமாதலானும், தலைவன் ஓர்புடை அருகு நிற்றலானும், பாங்கியும் அப்பால் பொய்கையில் நிற்றலானும் அச்சமின்றி நிற்பளென்று உணர்க. (கஎசு)

வண்டுறை தாரோன் வந்தெதிர்ப் படுதல் :

முதிரா முலையிப் பனியந்த கார முனியவல்ல
கதிரா யிரமில்லை யேழ்பரித் தேரில்லைக் காவல்வெய்யோற்
கெதிராதல் சோமற் கியல்வதன் றேநும்மில் யார்திறந்தார்
மதுரா புரித்தமிழ் தேர்வாணன் மாறை வனத்துவந்தே.

(இ - ள்.) என்ஞான்றும் முதிர்ந்து சாயாத முலையை யுடையாய்! இந்தப் பனிபொருந்திய அந்தகாரமாகிய பூட்டைத் திறப்பதற்குத் திறவுகோலாகிய கதிராயிரமில்லை, திறப்பவனைக் கொண்டுவரும் ஏழ்பரியையுடைய தேரில்லை, திறக்குங் காவலையுடைய வெய்யோனுக்கு எதிராய்வந்து திறத்தல் சோமற்குப் பொருந்துவதன்றே யாதலான் நும் இல்லாகிய தாமரைமாளிகையை மதுராபுரித் தமிழை யாராய்ந்த வாணன் மாறை நாட்டிலிருக்கும் பொய்கை நீரில் வந்து திறந்தவர் யார் என்றவாறு.

அந்தகாரம் - இருள். பரி - குதிரை. வெய்யோன் - சூரியன். சோமன் - சந்திரன். இயல்வது - பொருந்துவது. வனம் - நீர். 'முதிராமுலை' என்றதற்கு 'நும்மில்' என்றது ஒருமைப்பன்மை மயக்கம். (களஎ)

பெருமகள் ஆற்றின தருமை நினைந் திரங்கல்:

பெருமகள் ஆற்றினது அருமை நினைந்து இரங்கல் என்பது, தலைவி தலைவன் வரும் வழியினது அருமையை நினைந்து இரங்கல்.

**செழியன் கயலைத் திசைவைத்த வாணன்தென் மாறையென்மேல்**
**கழியன் புடையநின் கால்கண்க ளாகக் கராம்பயிலும்**
**குழியன்றி யும்வெஞ் சுழியொன்றும் யாறுங் குழீஇக்கொடிதாம்**
**வழியன்ப நீயெங்ங னேவந்த வாறிம் மழையிருளே.**

(இ - ள்.) அன்பனே! பாண்டியனது கயற்கொடியைத் திசையெட்டினும் நிறுத்திய வாணனாட்டில் இருக்கின்ற என்மேல் மிகுந்த அன்புடைய நினது கால்களே கண்களாக, முதலைகள் நெருங்குங் குழிந்த மடுவல்லாமலும் வெவ்விய சுழி பொருந்தும் அருவியாறுங் கூடிக் கொடியதாம் வழியில் இம் மழைக்காலிருளில் நீ வந்த வாறு எவ்வாறு என்றவாறு.

செழியன் - பாண்டியன். கயல் - ஆகுபெயர். கழி - மிகுதி. கால் கண்களாதல், இருட்செறிவால் அக்கண் நெறி செல்லாதாக வான் காலறிவாற் நடவிவருதல். கராம் - முதலை. பயிலுதல் - நெருங்குதல். குழீஇ - கூடி. (களஅ)

**புரவலன் தேற்றல் :**

புரவலன் தேற்றல் என்பது, தலைவியைத் தலைவன் தேற்றல்.

**வெயிலுந் தரவிந்த மென்மல ரன்னமும் விந்தைவெற்றி**
**மயிலும் பயில்புயல் வாணன்தென் மாறைநின் வாள்விழிபோல்**
**அயிலுங் குயில்மொழி நின்னிடை போன்மின்னு மாடளிகள்**
**பயிலுந் தொடைநின் குழல்போ லிருளைப் பருகினவே.**

(இ - ள்.) குயில்போன் மொழியாய்! வெயிலினாலே முறுக்கைத் தள்ளப்பட்ட மெல்லிய தாமரை மலரிலிருக்குஞ் செல்வத் திருவும், விந்தையாகிய வெற்றித்திருவும் பழகிய புயத்தை யுடையவனாகிய வாணன் மாறைநாட்டு நின் ஒளியையுடைய விழியையொக்கும் என் கைவேலும், நின் இடையையொக்கும் மின்னும், ஆடும் வண்டுகள் செறிந்த மாலை சூழ்ந்த நின்குழலை யொக்கும் இருளைக் குடித்தன, ஆதலால், யான் அச்சமின்றி வந்தேன் என்றவாறு.

உந்தல் - தள்ளுதல். அரவிந்த மென் மலர் அன்னம் - செல்வத்திரு. விந்தை வெற்றிமயில் - வெற்றித்திரு. பயிலுதல் - பழகுதல். அயில் - வேல். பயிலுதல் - செறிதல். பருகுதல் - குடித்தல். ()

**புணர்தல் :**

**சுழிநீ ரலைகடற் றொல்லுல கேழினுந் தோற்றும்வண்மைக்**
**கழிநீடு மாடக மேருவின் மீதினுங் காவல்கொண்டு**
**வழிநீள் புகழ்கொண்ட வாணன்தென் மாறை வரையின்மலர்ப்**
**பொழினீழ லும்ப ரமுதனை யாரைப் புணர்ந்தனமே.**

(இ - ள்.) சுழிந்த நீரும் அந்நீரி லலையும்பொருந்திய கடல் சூழ்ந்த பழையவுல கேழினும் புரக்குஞ் செல்வ மிகுதி நீண்ட பொன்மேருவின் மீதினுங் காக்குந் தொழிலைக்கொண்டு, அத்தொழில் வழியே நீண்ட புகழைக் கொண்ட வாணன் தென்மாறை வெற்பிற்றோன்றிய மலர்ச்சோலை நீழலில் தேவாமிர்தம் போல்வாரை யாம் புணர்ந்தனம் என்றவாறு.

யாம் - தோன்று எழுவாய், 'சுழிநீரலே' என்புழி உம்மைத் தொகை. தொல்லுலகு - பழைய வுலகு. வண்மை - வளம். கழி - மிகுதி. ஆடகமேரு - பொன்மேரு. உம்பரமுதம் - தேவாமிர்தம். ()

புகழ்தல்:

மண்ணுர் பெரும்புகழ் வாணன்தென் மாறை [1]வரைபயிலும்
தண்ணுர முங்கமழ் சார்வருஞ் சாரலிற் சார்ந்துறையும்
பெண்ணு ரணங்கன்ன நின்முகந் தான்கண்ட பின்னுமுண்டோ
கண்ணுர் தடங்களின் வாயொடுங் காத கமலங்களே.

(இ - ள்.) நிலவுலகம் நிறைந்த பெரிய புகழுடைய வாணன் தென்மாறைவரையில் பயிலுந் தட்பமாய்ச் சந்தனமும் நாறுகின்ற பிறரொருவர் சார்தற்கரிய மலைச்சாரலிற் சார்ந்து உறையும் ஆரணங்குபோன்ற பெண்ணே! நின் முகத்தைக்கண்ட பின்னும் இடமார்ந்த பொய்கைகளில் வாய்குவியாத கமலங்களுண்டோ, இல்லை என்றவாறு.

'நின் முகத்தை மதியமென்று கருதி வாயொடுங்காத கமல முண்டோ' எனினும் அமையும். மண் - நிலவுலகம். ஆர்தல் - நிறைதல். ஆரம் - சந்தனம். தென்மாறைவரை - பொதியம். 'ஆரணங்கன்னபெண்' என இயையும். பெண் - அண்மைவிளி. கண் - இடம். ஒடுங்கல் - குவிதல். (கஅக)

இறைமக ளிறைவனைக் குறிவரல் விலக்கல்:

மூரற் கதிர்முத்த வார்முலை யாவியின் மூழ்கத்தனி
வாரற்க நீதஞ்சை வாணன்வெற் பாவய மாவழங்கும்
வேரற் கடிய கவலையி னூடு வெயிலவற்கும்
சாரற் கருமைய தாலிருள் கூருமெஞ் சாரலிலே.

(இ - ள்.) தஞ்சைவாணன் வெற்பனே, வயமாவாகிய சிங்கம் புலி யானை இவைகள் சஞ்சரிக்கும் வேரல் நெருங்கிய கடியவாகிய கவர்வழியாய், உள்ளே வெயிலவன் கிரணங்கட்கும் சேர்தற்கருமை யுடைத்தாதலால், எக்கால

1. (வே. பா.) (1) வரையகிலும்.

மும் இருள்மிகும் எஞ்சாரலிடத்து நகைத்தல்போன்ற கதிரையுடைய முத்தமும் கச்சும் பொருந்திய முலையென்னும் வாவியில் முழுக நீ தனியே வாரற்க என்றவாறு.

மூரல் - நகை. கதிர் - கிரணம் 'முத்தம்வார்' என்புழி உம்மைத் தொகை. வார்முலை - கச்சிறுக்கியமுலை. ஆவி - வாவி. வயமா, புலி யானை சிங்கம் மூன்றிற்கும் பொதுவாதலான் இம்மூன்றையுங் கூறப்பட்டது. வேரல் - மூங்கில். கவலை - கவர்வழி. வெயிலவன் - ஆகுபெயர். கூர் - மிகுதி. (கஅ௨)

இறைவியை இல்வயின் விடுத்தல் :

இறைவியை இல்வயின் விடுத்தல் என்பது, தலைவன் தலைவியை மனையிற் செல்லென விடுத்தல்.

மல்லையம் போர்வென்ற வாணன்தென் மாறைநின் மாளிகையாம்
தொல்லையம் போருகந் தேடவுங் கூடுந் தொடித்தளிரால்
முல்லையம் போது முகையுங்கொய் யாது முகிழ்முலையாய்
செல்லையம் பொற்பளிங் கிற்றலம் பாதஞ் சிவப்பிக்கவே.

(இ - ள்.) மல்லை யென்னும் ஊரிடத்தில் போரை வென்ற வாணன் தென்மாறைநாட் டிருக்கின்ற முகை போன்ற முலையாய்! நின் மாளிகையாகிய பழமையுடைய தாமரையானது தேடவும் அமையுமாதலால் தொடி செறிந்த தளிர்போன்ற கையினால் முல்லைப்போதும் அதனது முகையுங் கொய்யாது அழகிய பளிங்குத்தலத்தைப் பாதமானது சிவப்பேறச்செய்யச் செல்லக்கடவை என்றவாறு.

மல்லை - ஊரூர். 'தொடித்தளிர்' - ஆகுபெயர். அம் - சாரியை. அம் - அசைநிலை. செல் - செல்லக்கடவை. ஐ - சாரியை. பொன் - அழகு. 'தலம்' என்புழி இரண்டனுருபு தொக்கது. (கஅ௩)

இறைவியை யெய்திப் பாங்கி கையுறைகாட்டல் :

முகையா யலராய் முலைக்குநின் வாய்க்கு முறைமுறையே
பகையா முளரியுஞ் சேதாம் பலுமிவை பைங்கமுநீர்
வகையார் தொடைபுனை வாணன்தென் மாறையின் மௌவலன்ன
நகையா யவையிவை நின்குழற் காமுல்லை நாண்மலரே.

(இ - ள்.) பசிய கழுநீர் வகையார்ந்த மாலையணிந்த வாணன் தென்மாறைநாட்டின் மௌவல்போன்ற நகையினை யுடையாய்! முகையாய் அலராய் முலைக்கும் நின்வாய்க்கும் நிரனிறையாப் பகையான தன்மையையுடைய தாமரையும் செவ்வாம்பலும் இவை கண்டருள்; முல்லைநாண் மலராகிய இவையும், முன்காட்டிய அவையும் நின் குழற்குச் சூடுதற்காம் என்று கொண்டுவந்தேன் என்றவாறு.

முளரி - தாமரை. சேதாம்பல் - செவ்வாம்பல். கழுநீர் - குவளை. மௌவல் - முல்லை. இரவுக்காலமாதலால் தாமரையை முகை யென்றும், ஆம்பலையும் முல்லையையும் மலர் என்றும் கூறிய வாறென்று உணர்க. (கஅச)

இற்கொண் டேகல்:

இற்கொண்டு ஏகல் என்பது, தலைவியைப் பாங்கி மனையிடத் திற் கூட்டிப் போதல்.

ஒல்கா விருண்மணந் தொல்கரும் போழ்தி னுணர்ந்துநம்மை
நல்கா வியல்பன்னை நாடினுள் நாடு நடந்தருள்நீ
மல்காவி சூழ்தஞ்சை வாணன்தென் மாறையின் வள்ளையின்மேல்
செல்காவி யன்ன விழித்திரு வேநின் திருமனைக்கே.

(இ - ள்.) நிறைந்த பொய்கை சூழ்ந்த தஞ்சை வாணன் தென்மாறையில் வள்ளையின்மேற் செல்லுங் காவி போலக் காதின்மேற்செல்லும் விழியையுடைய திருவை யொப்பவளே! நம்மை நல்கும் அவ்வியல்பினையுடைய அன்னை சுருங்காத இருளைப்பொருந்திச் சுருங்குதற்கரிய இராப்போதிற் றுயில் எழுந்து தேடினுந் தேடுமாதலினால், நின் திருமனைக்கு நீ நடந்தருள் என்றவாறு.

ஒல்கா - சுருங்கா. உணர்தல் - துயிலெழுதல். நல்கல் - பயத்தல். ஆவியல், சுட்டுநீண்டது. மல்கல் - நிறைதல். ஆவி - பொய்கை. வள்ளை - வள்ளைக்கொடி. காவி - நீலம். (கஅரு)

பிற்சென் றிறைவனை வரவுவிலக்கல்:

பிற்சென்று இறைவனை வரவு விலக்கல் என்பது, பாங்கி தலைமகளை மனையிற் சேர்த்த பின்பு தலைமகன்பாற் சென்று இவ்விருளினில் நீ வாரல் என்று வரவு விலக்கிக் கூறுதல்.

வெம்போர் முருகென்ன வேல்வல னேந்தி வெறிதிங்ஙனே
வம்போர் நகரெல்லி வாரல்வெற் பாமரு வாவரசர்
தம்போர் கடந்த தடம்புய வாணன் தமிழ்த்தஞ்சைநாட்
டம்போ ருகமல்ல வோதிருக் கோயி லணங்கினுக்கே.

(இ - ள்.) வெற்பனே! பகைவேந்தர்தம் போரைக் கடந்த தடம்புயத்தையுடைய வாணன் தமிழ்த்தஞ்சை நாட்டின்கணுள்ள அணங்கு போல்வாட்குத் திருக்கோயில் அம்போருகம் அல்லவோ, ஆதலினால், வெம்போரில் முருக வேளென்று சொல்ல வேலை வலத்திலே யேந்திப் பயனின்றிப் புதுமை ஆராயும் நகரிடத்து இராப்பொழுதில் இவ்விடத்தில் நீ வாரல் என்றவாறு.

முருகு - முருகவேள். வலன் - வலப்பக்கம். வம்பு - புதுமை. ஓர்தல் - ஆராய்தல். எல்லி - இராப்போது. 'அல்லவோ' என்னும் ஓகாரம் எதிர்மறை. அம்போருகம் இராக்காலத்தில் கதவு திறவாதாதலால் தலைவி மனைவிட்டு வெளிவருதல் அரிது எனக் குறிப்பால் அறிவித்தவாறு உணர்க. (கஅசு)

பெருமகன் மயங்கல்:

பெருமகன் மயங்கல் என்பது, பாங்கி இவ்வாறு இரவுக்குறி விலக்கிய சொற்கேட்டுத் தலைமகன் மயங்கிக் கூறல்.

வஞ்சங் கலந்த கலிவென்ற வாணன்தென் மாறைவெற்பில்
தஞ்சங் கலந்தசொல் தையலும் யானுந் தனித்தனியே
நெஞ்சங் கலந்த நிலைமையெல் லாங்கண்டு நீயமுதின்
நஞ்சங் கலந்தனை யேநனை வார்குழல் நன்னுதலே.

(இ - ள்.) வார்ந்து அரும்பை முடித்த குழலையும் நல்ல நுதலையும் உடையாய்! வஞ்சனை கலந்த கலிகாலத்தை வென்ற வாணன் தென்மாறை வெற்பில் பற்றுக்கோடாகக் கலந்த சொல்லையுடைய தையலும் யானும் தனித் தனியே நெஞ்சங் கலந்த நிலைமையெல்லாங் கண்டும், நீ, உண்ணும் அமுதில் நஞ்சங் கலந்தாற்போலும், வாரல் என்னுஞ் சொல்லைச் சொல்லினை என்றவாறு.

தஞ்சம் - பற்றுக்கோடு. நனை - அரும்பு. வார்தல் - சீப்பிடுதல். (கஅஎ)

தோழி தலைமகள் துயர்கிளந்து விடுதல் :

தோழி தலைமகள் துயர் கிளந்து விடுதல் என்பது, தோழி தலைமகனுக்குத் தலைமகள் துயரைக் கூறி நீ ஊர்போய்ச் சேர்ந்த செய்தி யாம் அறியும்படி குறிசெய் என்று கூறிவிடுதல்.

முன்னூ ரரவுந் தெரியா விருணெறி முன்னிநையும்
மின்னூர் புனையிழை மின்னனை யாளுய்ய வேலின்வெம்போர்
மன்னூர் களிறு திறைகொண்ட வாணன்தென் மாறையன்ன
நின்னூ ரகம்புகுந் தாற்குறி காட்டு நெடுந்தகையே.

(இ - ள்.) நெடுந்தகையே! முன்னே ஊரப்பட்ட அரவும் தெரியா இருள் செறிந்த நெறியென்றதனை நினைந்து நையும் ஒளியூர்ந்த அணியையணியும் மின்போன்றவள் உய்யும்பொருட்டு, வேலினால் வெய்ய போரிற் பகை வேந்தன் ஊரப்பட்ட களிற்றைத் திறையாகக் கொண்ட வாணன் தென்மாறைபோன்ற நின்னூருட் புகுந்தால், ஓர் அடையாளங் காட்டுவாயாக என்றவாறு.

'அரவும்' என்புழி உம்மை சிறப்பும்மை. முன்னி - நினைந்து. மின் - ஒளி. 'இழைபுனை' என இயையும். புனைதல் - அணிதல். இழை - அணி. மன் - வேந்தன். குறி - அடையாளம். காட்டுதல் - கோடுகுறித்தல், சங்குகுறித்தல் முதலியன. (கஅஅ)

திருமகட் புணர்ந்தவன் சேறல் :

இருங்குன் றனமதி லெம்பதிக் கேக லெளிதுசெம்மை
தருங்குங் குமமுலைத் தையல்நல் லாய்தஞ்சை வாணன்வெற்பில்
கருங்குஞ் சரஇனம் வெண்சிங்க ஏறஞ்சுங் கங்குலினெம்
மருங்குஞ் சுடர்விளக் காமட வார்குழை மாணிக்கமே.

(இ - ள்.) சிவப்பு நிறத்தைத் தருங் குங்கும மணிந்த முலையையுடைய தையனல்லாய்! தஞ்சைவாணன் வெற்பில் கரிய யானைக்கூட்டங்கள் வெண்சிங்க ஏற்றை யஞ்சுங் கங்குலில் எட்டுத்திக்கும் மடவாரது குழையி லணிந்த மாணிக்கம் ஒளிபொருந்திய விளக்கேற்றினாற் போல வரு

மாதலால், பெரிய மலைபோலும் மதில்சூழ்ந்த எம்பதிக்கு ஏகல் எளிது ; நீ கவலற்க என்றவாறு.

எனவே, தலைவி என் நெஞ்சிலிருக்கின்ருளாதலின், அவள் குழை மாணிக்கவொளியினால் இருள் நீங்கு மென்றவாருயிற்று.

இருமை - பெருமை. குஞ்சரம் - யானை. சுடர் - ஒளி. குழை- காதணி. 'சிங்கஏறு' என்புழி இரண்டனுருபு தொக்கது. (கஅக)

இறையோ னிருட்குறி வேண்டலும், நெறியி னெளிமை கூறு தலும், தலைமகனவனுட் டணியியல் வினுதலும், பாங்கி இறைவிக்கு இறையோன் குறையறிவுறுத்தலும் ஆகிய நான்கும் **வேண்டற் றுரியன.**

பாங்கி நெறியின தருமை கூறலும், இறைமகள் இறைவனைக் குறிவரல் விலக்கலும், பாங்கி இறைவனை வரவு விலக்கலும், ஆகிய மூன்றும் **மறுத்தற்றுரியன.**

பாங்கி யவனுட் டணி யியல் வினுதலும், அவற்குத் தன்னுட் டணி யியல் பாங்கி சாற்றலும், நேரிழை பாங்கியொடு நேர்ந்துரைத் தலும், ஆகிய மூன்றும் **உடன்படற்றுரியன.**

தலைமகள் நேர்ந்தமை பாங்கி தலைவற் குணர்த்தலும், குறியிடை நிறீஇத் தாய் துயிலறிதலும், இறைவிக்கு இறைவன் வரவறி வுறுத் தலும், அவட்கொண்டு சேறலும் ஆகிய நான்கும் **கூட்டற்றுரியன.**

தலைமகன் தலைமகளை யெதிர்ப்படுதலும், தேற்றலும், புணர் தலும் ஆகிய மூன்றும் **கூடற்றுரியன.**

தலைமகன் புகழ்தலும், கையுறை காட்டலும் ஆகிய இரண்டும் **பாராட்டற்றுரியன.**

தலைமகன் தலைவியை இல்வயின் விடுத்தலும், பாங்கி தலைமகளை இற்கொண் டேகலும் ஆகிய இரண்டும் **பாங்கிற்கூட்டற்றுரியன.**

நேராதிறைவி நெஞ்சொடு கிளத்தலும், தலைமகள் ஆற்றின தருமைநினைந் திரங்கலும், பெருமகன் மயங்கலும், தோழி தலைமகள் துயர் கிளந்து விடுதலும் ஆகிய நான்கும் **உயங்கற்றுரியன.**

பாங்கி குறியுய்த் தகறலும், திருமகட் புணர்ந்தவன் சேறலும் ஆகிய இரண்டும் **நீங்கற்றுரியன.**

மூயங்கல் - வருந்துதல்.

இத்துணையும் ஏழாநாட் செய்தியென் றுணர்க.

**இரவுக்குறி முற்றிற்று.**

## கசு. இரவுக்குறி இடையீடு

அஃதாவது, எட்டாநாள் இரவுக்குறிக்கண் வந்த தலைமகன் அல்ல குறிப்படுதலால் இடையீடு பட்டுப் போதல்.

[1] 'அல்லகுறி வருந்தொழிற் கருமை யென்றுங்
கெல்லிக்குறி யிடையீ டிருவகைத் தாகும்.'

என்னுஞ் சூத்திரவிதியான் எல்லிக்குறி யிடையீடு இருவகைப்படும்.

அல்லகுறி என்பது, தலைமகனால் நிகழ்த்தப்படுவனவாகிய புள் ளெழுப்பல் முதலியன. எனவே, நீரிற் கல்லெறிதல், இளநீர்வீழ்த் தல் முதலியனவுங் கொள்க. வருந்தொழிற் கருமை என்பது, தலை மகன் வருகின்ற தொழிற்கருமை.

அல்லகுறி:

இறைவிக் கிகுளை யிறைவர வுணர்த்தல்:

கயல்வென்ற உண்கண்ணி காரண மேதுகொல் கைதையங்கான்
அயனின்ற புன்னையி னன்னமெ லாமட லாழியங்கைச்
சயமங்கை தன்பெரு மான்தஞ்சை வாணன் தரியலர்போல்
துயரம் பெருகி இராவொரு போதுந் துயின்றிலவே.

(இ - ள்.) கயலை வென்று மையுண்ட கண்ணாய்! போர்புரியுஞ் சக்கரத்தைத் தரித்த சயமங்கைக்கு இறைவ னாகிய தஞ்சைவாணன் தரியலர்போற் கைதையங்காட்டின் அயலிலிருக்கும் புன்னையின் அன்னமெல்லாந் துயரம் பெருகி, இவ்விரவின்கண் ஒரு நாழிகையுந் துயின்றில, கார ணம் யாதோ, தெரிந்திலன் என்றவாறு.

கைதை - தாழை. புன்னை - புன்னாகம். அடல் - போர். சய மங்கை - வெற்றிமாது. போது - ஈண்டு நாழிகை. உம்மை - சிறப்பு. (ககo)

தான்குறி மருண்டமை தலைவியவட் குரைத்தல்:

தான் குறி மருண்டமை தலைவி அவட்கு உரைத்தல் என்பது, தலைவி தான் அல்லகுறியிடத்து நின்று தலைவனைக் காணாமையால், மீண்டு விடியற்காலத்து வந்து பாங்கியுடன் கூறல்.

---

1. அகப்பொருள் விளக்கம், களவியல் - சஅ.

அல்லகுறிப்படுங் காரணம் என்னையெனின், தலைவன்முன் னைநாளிரவில் புன்னைமரத்தின்கீழ் நின்று அதன்மே லிருக்கும் மயில்களை யெழுப்ப, அக்குறியிடத்து வந்து நீங்கிய தலைவி மற்ற நாள் குறிக்கு வருவள் என்று தலைவன் வந்து நிற்க, தலைவன் வருங் கால் அணித்தும் அல்லது சேய்த்தும் அல்லதாய ஓர் புன்னைமரத் திருந்த அன்னங்கள் தற்செயலா யெழுந்து ஆரவாரிக்க, அது தோழியாலறிந்த தலைவி அவ்வன்னங்களெழுந்த புன்னைக்கீழ் வந்து நின்று போயினள். தலைவனும் மயிலிருக்கும் புன்னைக்கீழ் நின்று தலைவியைக் காணாய், இருபுன்னைக்கும் நடுவிருந்த தாழைமரங் களிலே ஓர் மரத்தில் தான் வந்து போயதற்கு அடையாளமாகத் தான் அணிந்த மாலையை வைத்துப்போய நாளில் இருவரும் அல்ல குறிப்பட்ட காரணம் என்று உணர்க.

**பேசத் தகுவதொன் றன்றுகண் டாய்பிறி தோர்குறியை**
**நேசத் தவர்குறி யென்றுசென் றியான்குறி நின்றுவந்தேன்**
**வாசத் தமிழ்புனை தோளுடை யான்தஞ்சை வாணனொன்னார்**
**தேசத் தவருமெய் தாவெய்ய நோயெய்திச் சேயிழையே.**

(இ - ள்.) சேயிழையே! தலைவர் நிகழ்த்த நிகழ்ந்த தல்லாதாய்ப் பிறிதொன்றா னிகழ்ந்த அடையாளத்தை நேசத்தையுடைய தலைவர் நிகழ்த்திய அடையாளமாக எண்ணிப்போய்க் குறியினின்றும், மணம்பொருந்திய தமிழ்மாலை புனைந்த தோளுடையானாகிய தஞ்சைவாணன் பகைவர் தேசத்திலுள்ளோரும் எய்தாத கொடிய துன் பத்தை யெய்தி வந்தேன், அத்துன்பம் சொல்லத்தகுவ தொன்று அன்று என்றவாறு.

கண்டாய் - முன்னிலையசை. குறி - அடையாளம். நேசத் தவர் - அன்புடையவர். வாசம் - மணம். ஒன்னார்-பகைவர். (கககூ)

பாங்கி தலைமகன் தீங்கெடுத் தியம்பல் :

பாங்கி தலைமகன் தீங்கெடுத்து இயம்பல் என்பது, பாங்கி தலைவன் பொல்லாங்கை யெடுத்துக் கூறல்.

**வடியோ வெனுங்கண் மடந்தைநல் லாய்தஞ்சை வாணனைவந்**
**தடியோ மெனச்சென் றடையலர் போலயர் கின்றநின்கைத்**
**தொடியோட மென்பணைத் தோளிணை வாடுந் தொழில்புரிந்த**
**கொடியோர் துணிந்துசெய் தார்குறி யாத குறிநமக்கே.**

(இ - ள்.) வடுவோ கண்ணோ என்று ஐயந்தருங் கண்ணையுடைய மடந்தை நல்லாய்! தஞ்சைவாணனை வந்து யாம் அடியோமெனச் சொல்லி யடையாதவர்போல அயர் கின்ற நின் கைத்தொடி யோடிப்போக மெல்லிய மூங்கில் போன்ற தோளிணை வாடுந் தொழிலைக்கொடுத்த கொடி யோர் குறியாத குறியை நமக்குத் துணிந்துசெய்தார் என்றவாறு.

எனவே, நாம் கருதாத அடையாளத்தை நமக்கறிவித்துத் தாம் அக்குறி வாராதொழிந்தாரென்று தலைவன் தீங்கு கூறியவாறென்று உணர்க.

வடி - மாவடு. அடையலர் - பகைவர். தொடி - வளை. பணை- மூங்கில். குறித்தல் - கருதுதல். (௧௧௨)

**தலைவன் புலந்து போதல் :**

தலைவன் புலந்து போதல் என்பது, தலைவன் தான் குறித்த குறியிலிருந்து தலைவி அல்லகுறிப்பட்டு வாராமையாற் புலந்து தன் ஊர்க்குப் போதல்.

**தேனுற்ற வாகையந் தார்த்தஞ்சை வாணனைச் சேரலர்போல்**
**மானுற்ற பார்வை மயில்பொருட் டாக வழிதெரியாக்**
**கானுற்ற கானற் கனையிருள் வாய்வரக் கற்பித்தநீ**
**யானுற்ற நோய்களெல் லாம்படு வாயினி யென்னெஞ்சமே.**

(இ - ள்.) எனது நெஞ்சமே! தேன்பொருந்திய வாகையந்தாரணிந்த தஞ்சைவாணனைச் சேராதவர்கள் போல, மான்போலுற்ற பார்வையினையுடைய மயில் பொருட்டாக வழிதெரியாத காடுபோலப் பொருந்திய சோலையிடத்திற் செறிந்த இருளிலே வரக் கற்பித்த நீ யான் உற்ற நோய்களெல்லாம் இன்று படுவாயாக என்ற வாறு.

வாகையந்தார் - வெற்றிமாலை. சேரலர் - பகைவர். 'மானுற்ற பார்வை' 'கானுற்ற கானல்' இரண்டும் உவம வாசகம். ஈங்கு, 'உற்ற' என்பதற்கு 'வம்புரு வென்று செப்புற்ற தோர்பகை' என்ப தனை உதாரணங் காட்டுவாரும் உளர். மயில் - ஆகுபெயர். கானல் - சோலை. கனையிருள் - செறிந்தவிருள்.

இவ்வாறு புலந்துபோம் தலைவன் தான் வந்து குறியிடத்து நின்றுபோயதற்கு அடையாளமாகத் தன் மாலையைத் தாழைமேல் வைத்துப் போயினன் என்பது மேல்வருஞ் செய்யுளிற் றோற்றிய தென்பது. (கக௩)

இத்துணையும் எட்டாநாட் செய்தியென் றுணர்க.

**புலர்ந்தபின் வறுங்களந் தலைவிகண் டிரங்கல் :**

புலர்ந்தபின் வறுங்களந் தலைவிகண்டு இரங்கல் என்பது, ஒன்பதாநாள் இருள் புலர்ந்தபின் தலைவி வறுங்களங் கண்டு இரங்கல்.

தாதகை தண்டலை சூழ்தஞ்சை வாணன் தடந்துறைவாய்
நீநகை கொண்டென் முன் னின்றனை யேசெந் நிறக்கனிவாய் [பூம்
மேதகு முள்ளெயிற் றொண்முகை கொங்கைவெண் டோட்டுமென்
கேதகை யென்னுநல் லாய்கொண்கர் மாலை கிடைத்ததென்றே.

(இ - ள்.) தாது செறிந்த சோலைசூழ்ந்த தஞ்சை வாணனது பெரிய வையைத்துறையிடத்துச் சிவந்த நிறத்தையுடைய கனியாகிய வாயையும், மேம்பாடுள்ள முள்ளாகிய எயிற்றையும், ஒள்ளிய முகையாகிய கொங்கையையும், வெண்மைநிறம் பொருந்திய தோட்டையும் உடைய மெல்லிய பொலிவாகிய கேதகை யென்னும் பெண்ணே! நினக்குத் தலைவர் சூட்டிய கழுநீர்மாலை கிடைத்ததென்று நீ யழகுகொண்டு என்முன் நின்றனை யாதலால், நல்வினை செய்தாய் என்றவாறு.

கேதகையைப் பெண்ணென்று கூறியவதனாற் கேதகை யுறுப்பெல்லாம் பெண்ணுறுப்பாகக் கூறியவாறு காண்க.

அகைதல் - செறிதல். தண்டலை - சோலை. தகை - அழகு. மேதகு - மேம்பாடு. தோடு - இதழ். கேதகை - தாழை. கொண்கர் - தலைவர். 'தலைமகள் அவலம் பாங்கி தணித்தல்' என்னுங் கிளவிச் செய்யுளில் கழுநீர் மாலை கூறியவதனால், ஈண்டுக் கூறிய மாலை கழுநீர்மாலை யென்று அறியப்பட்டது. 'ஆதலால் நீ நல்வினை செய்தாய்' என்பது சொல்லெச்சம். (கக௪)

### தலைவி தன்றுணைக் குரைத்தல் :

[1]வரலிங் கரிய மயங்கிருள் யாமத்து வந்திளவேய்
நரலுஞ் சிலம்பர் நவமணி யாழி நறவுண்வண்டு
முரலுந் தளையவிழ் மொய்ம்மலர்க் காந்தளஞ் செம்மலர்க்கை
விரலென்று கொல்செறித் தார்நெறித் தாழ்குழல் மெல்லியலே.

[இது பிறசெய்யுட் கவி.]

இதற்குச் செய்யுளிற் கவி யில்லை. என்னை பாடா தொழிந்த தெனின், செய்யுட்பாடி நெடுங்கால மாதலால் முறை யெழுதுவார் விட்டதும், ஏட்டிற் பழுதினு லிறந்ததுவுமாயிற்று. முன்னர் வருங் கிளவிகட்குச் சில இடங்களில் செய்யுட்களில்லாமைக்கும் இவ்வுரைப்படி கண்டுகொள்க. (ககரு)

### தலைமகள் அவலம் பாங்கி தணித்தல் :

தலைமகள் அவலம் பாங்கி தணித்தல் என்பது, தலைமகளது துன்பத்தைப் பாங்கி தணித்துக் கூறல்.

பொய்யா தவர்தங் குறிபிழை யாரவர் பூண்டவன்பு
மெய்யாதல் தேறி யழுங்கன்மின் னேபுய வெற்பிரண்டால்
மையாழி வைய நிலையிட்ட வாணன்தென் மாறைவெற்பின்
உய்யான மென்கழு நீர்நறு மாலை யுடைத்தல்லவே.

(இ - ள்.) புயமாகிய மலையிரண்டினுல் கருங்கடல் சூழ்ந்த வுலகத்தை நிலைக்கச்செய்த வாணன் தென்மாறை வெற்பிடத்திலிருக்கும் மின்னே! இச் சோலையிலிருக்குங் கைதையானது, மெல்லிய கழுநீர்மாலை யுடைத்தாயிராதே இங்ஙனம் உடைத்தா யிருத்தலால், அவர்தங் குறியும் பொய்த்துப் போகாது, அவரும் பிழைத்தல் செய்யார், அவர் நம்மிடத்திற் பூண்ட அன்பு மெய்யாதலைத் தெளிந்து இரங்கலை என்றவாறு.

'புயவெற்பு இரண்டால் வைய நிலையிடல்' - புயவலியால் நிலவுலகத்தைத் தாங்கி நிலைக்கச் செய்தல். தம் - அவர்தம். பிழைத்தல் - தப்பல். வையம் - உலகம். உய்யானம் - ஆகுபெயர். (கககூ)

1. அம்பிகாபதி கோவை - ககஅ.

இறைவன்மேற் பாங்கி குறிபிழைப் பேற்றல் :

இறைவன்மேற் பாங்கி குறி பிழைப்பு ஏற்றல் என்பது, ஒன்பதாநாள் இரவுக்குறிக்கு வந்த இறைவன்மேற் பாங்கி அல்லகுறிப் பட்ட குற்றம் ஏற்றிக் கூறல்.

விம்மூர் துயர்க்கடல் வெள்ளத்துள் ளேயெம்மை வீழ்வித்துநீர்
எம்மூ ரகத்து வரலொழிந் தீரெதி ரேற்றதெவ்வர்
தம்மூரை முப்புர மாக்கிய வாணன் தமிழ்த்தஞ்சைபோல்
உம்மூர் வரத்துணிந் தோமன்பர் கூறுமவ் வூரெமக்கே.

(இ - ள்.) அன்பரே! விம்முதல் நிகழப்பட்ட துன்பக் கடலாகிய வெள்ளத்துள் எங்களை வீழத்தள்ளி எம் ஊரிடத்து நீர் வருதலை யொழிந்தீர் ; ஆதலால், எதிராய்ப் போரேற்ற தெவ்வர்தம் ஊரை முப்புரமாக எரித்த வாணனது தமிழ்த் தஞ்சைபோலும் வளமுடைய உம்மூரிடத்து வரத் துணிந்தோம், அவ்வூர் இத்திசையென்று எமக்கு அறியக்கூறும் என்றவாறு.

அன்பர் - அண்மைவிளி. விம்முதல் - துன்பம் உள்ளடங்காது மேன்மேல் எற்றி யெற்றி வருதல். ஊர்தல் - செல்லுதல். எதிரேற்றல் - போரேற்றல். தெவ்வர் - பகைவர். முப்புரமாக்குதல் - எரித்தல். (ககள)

இறைவிமே லிறைவன் குறிபிழைப் பேற்றல் :

இறைவிமேல் இறைவன் குறிபிழைப்பு ஏற்றல் என்பது, தலைவிமேல் தலைவன் அல்லகுறிப்பட்ட குற்றம் ஏற்றிக் கூறுதல்.

துறந்தன ளாகியம் போருகந் தன்னையித் தொல்வரைமேல்
பிறந்தன ளாகும் பெருந்திரு மாதெனப் பேதையரில்
சிறந்தன ளாதலிற் செந்தமிழ் வாணன்தென் மாறையன்னுள்
மறந்தன ளாயினும் யாமொரு போது மறவலமே.

(இ - ள்.) பெருந்திருமாது தாமரை மலரை நீக்கினளாகி இந்தப் பழைய மலைமேல் வந்துபிறந்தனளாகுமென்று உலகஞ்சொல்லப் பெண்களிற் சிறந்தனளாதலின், செந்தமிழ் வாணன் தென்மாறை போன்றவள் மறந்தனளாயினும், யாம் ஒருபோதும் மறந்திலம் என்றவாறு.

அம்போருகம் - தாமரை. வரை - மலை. என - என்று சொல்ல. பேதையர் - பெண்கள். போது - நாள். (கசுஅ)

அவள் குறிமருண்டமை யவளவற் கியம்பல் :

அவள் குறிமருண்டமை அவள் அவற்கு இயம்பல் என்பது, தலைவி குறிமயங்கியது பாங்கி தலைவற்கு உணர்த்தல்.

தனையா வரும்புக ழுத்தரும் வாணன் தமிழ்த்தஞ்சைமான்
அனையா ளவள்குறி யாமிதென் றேநினைந் தல்லதொன்று
நினையா வருங்கங்குல் நின்குறி யாவந்து நின்றதுநம்
வினையால் விளைந்ததென் றேவெறி தேயன்ப மீண்டனளே.

(இ - ள்.) அன்பனே! தன்னை யாவரும் புகழக் கொடுக்கும் வாணன் தமிழ்த்தஞ்சை மான்போன்றவளாகிய அத்தலைவி இது குறியாமென்று நினைந்து வருங் கங்குலிடத்து நீ நினையாவல்லதொருகுறி நின்குறியாய் வந்து நேர்பட நின்றது, நாம் முன்செய்த தீவினையால் விளைந்ததென்று பயனின்றி மீண்டனள் என்றவாறு.

'இதுகுறியாம்' எனவும், 'நினைந்து வருங் கங்குல்' எனவும், 'நினையா வல்ல தொன்று' எனவும் மாறுக. கங்குல் - இரா. வெறிதே -பயனின்றியே. அன்ப என்பது அண்மைவிளி. (கசுகூ)

அவன்மொழிக் கொடுமைசென் றவளவட் கியம்பல் :

அவன்மொழிக் கொடுமைசென்று அவள் அவட்கு இயம்பல் என்பது, தலைவன் சொல்லிய கொடுமையைத் தோழி தலைமகட்குச் சொல்லல்.

பல்லியம் போலுரு மேறெங்கும் ஆர்ப்பதும் பார்ப்பதின்றி
வல்லியம் போதகம் போர்பயில் கான்வந்து வாணன்தஞ்சை
அல்லியம் போருகை யன்னநின் கேளரு ளாசையினின்
றெல்லியம் போதுசென் றேனென்று கேள்வர் இயம்பினரே.

(இ - ள்.) போர்புரிவோர் முரசுபோல் இடி யெவ்விடத்தும் ஆரவாரிப்பதையுங் கருதுதலின்றிப் புலியும் யானையும்போர்நெருங்கிச்செய்யுங் காட்டில்வந்து, வாணன் தஞ்சை நகரிலுள்ளவர் அகவிதழையுடைய அம்போ

ருகத்தை யுடையவளாகிய திருமகளையொத்த நினது உறவு தரும் ஆசையாற் குறியிடத்து நின்று இராப்போதில் நீ வாராமையான், மீண்டு சென்றேனென்று கொண்கர் இயம் பினர் என்றவாறு.

பல்லியம் - முரசு. உருமேறு - இடி. பார்ப்பது - கருதுவது. வல்லியம் - புலி. போதகம் - யானை. கான் - காடு. அல்லி - அக விதழ். அம்போருகை - திருமகள். கேள் - உறவு. அருளாசை - தருமாசை. நின்று - குறியிடத்து நின்று. எல்லியம்போது - இராப் போது. கேள்வர் - கொண்கர். (உ00)

என்பிழைப் பன்றென்று இறைவி நோதல் :

என் பிழைப்பு அன்றென்று இறைவி நோதல் என்பது, குறி பிழைத்தது என்பிழை யன்றென்று இறைவி நொந்து கூறல்.

வியலூ ரெயிற்புற நொச்சியி னூழ்மலர் வீழ்தொறெண்ணி
மயலூர் மனத்தொடு வைகினன் யான்தஞ்சை வாணன்வெற்பர்
புயலூ ரிருட்கங்குல் வந்தவ மேநின்று போயினரென்
றயலூர் நகைக்குமென் னேயென்ன பாவங்கொ லாக்கினவே.

(இ - ள்.) அகலம் பரந்த மதிற்புறத்து நொச்சி மரத் தினது பழைய மலர் சரசரத்து வீழ்தோறும் வீழ்தோறும் தலைவர் வருகின்றார் என்னும் ஆசை செல்லும் மனத் தோடு யான் இருந்தேன் ; தஞ்சைவாணனது வெற்பிலுள் ளாராகிய தலைவர் புயல்கள் செல்லும் இருளில் வந்து பய னின்றியே நின்று மீண்டுபோயினர் என்று அயலூர் அறி யில் நகைக்கு மாதலால், இவ்வாறு ஆக்கியது என்ன பாவமோ, செய்யுமாறு என்னே என்றவாறு.

வியல் - அகலம். ஊர்தல் - பரத்தல். எயில் - மதில். ஊழ் மலர் - பழையமலர். மயல் - ஆசை. ஊர்தல் இரண்டும் செல்லு தல். என்னே என்பது இகழ்ச்சியான் வந்தது. 'அயலூர் நகைக் கும்' எனவே இகழ்ச்சி பிறந்து அவ்விகழ்ச்சிக்கண், 'என்னே' என்று இழிவுதோன்றியவாறு உணர்க. (உ0க)

இத்துணையும் பகற்செய்தியென்று உணர்க.

அல்லகுறி முற்றிற்று.

## வருந்தோழிற்கருமை.

### தாய் துஞ்சாமை:

*தாய் துஞ்சாமை என்பது, தாய் விழித்திருத்தல்.*

**ஆழிய கன்புவி!யுள்ளன யாவு மடங்கிநள்ளென்**
**றூழி முடிந்தன வோங்கிருள் யாமத்து மோடையினும்**
**தாழியி னும்போ தலர்தஞ்சை வாணன் தரியலர்போல்**
**தோழிநம் மன்னைகண் ணேதுயில் கோடல் துறந்தனவே.**

(இ - ள்.) தோழியே! கடல்சூழ்ந்து அகன்ற புவியி லுள்ளன யாவும் அடங்கி நள்ளென்னும் ஓசையோடே கூடி யுகமுடிவு காலம்போன்று இருள் வளரப்பட்ட யாமத் தும் ஓடையிடத்தும் தாழியிடத்தும் போதுகள் அலருந் தஞ்சைவாணன் தரியலர்போல், நம் அன்னை கண்டுயில் கொள்ளுதலைத் துறந்தனள் என்றவாறு.

ஆழி - கடல். நள்ளென்னு மோசை - அனுகரணவோசை. ஊழி - யுகம். யாமம் - இரவு. தாழி - சால். (உ0உ)

### நாய் துஞ்சாமை:

*நாய் துஞ்சாமை என்பது, தாய் துஞ்சியபின் ஊரிலிருக்கும் நாய் துஞ்சாமை.*

**தண்ணென் புனல்வையை சூழ்தஞ்சை வாணன் தரியலர்போல்**
**பெண்ணென் பிறவியும் பேருடைத் தன்றிப் பெரும்பதிநங்**
**கண்ணென் பவர்வரக் கங்குலின் ஞாளிக் கணங்குரைத்துத்**
**துண்ணென் கடுங்குரல் வாயன்னை துஞ்சினுந் துஞ்சிலவே.**

(இ - ள்.) குளிரென்னும் புனலையுடைய வைகை சூழ்ந்த தஞ்சைவாணன் தரியலர்போல் பெண்ணென்று சொல்லும் பிறவியும் கீர்த்தியுடைத்தன்று; இப் பெரும் பதியிடத்து நம் கண்ணென்று சொல்லப்பட்ட தலைவர் கங்குலில்வர நம் அன்னை துஞ்சினும், துண் என்று சொல் லும் கடிய குரலெழும் வாயையுடைய ஞாளிக்கூட்டங் குரைத்துத் துஞ்சில என்றவாறு.

பாங்கி - முன்னிலை யெச்சம். தரியலர் - பகைவர். பேர் - கீர்த்தி. 'பெரும்பதி' என்புழி ஏழனுருபு தொக்கது. ஞாளிக்கணம்- நாய்க்கூட்டம். 'துண்ணென் கடுங்குரல்வாய் ஞாளிக்கணம்' என இயையும். துண் என்பது அச்சக் குறிப்பு. துஞ்சினும் என்னும் உம்மை துஞ்சுதல் அரிதென்பது தோன்ற நின்றது. (உ0௩)

ஊர் துஞ்சாமை :

ஊர் துஞ்சாமை என்பது, நாய்துஞ்சினும் ஊரிலுள்ளார் துஞ்சா திருத்தல்; இடத்து நிகழ்பொருளின் தொழில் இடத்து மேல் நின்றது.

ஓங்கண் ணல்வெம் பக [1]டுந்திவந் தோரை உடன்றுதும்பைத்
தேங்கண்ணி சூடிச் செருவென்ற வாணன்தென் மாறைமின்னே
தாங்கண் ணனையர் தமைப்பிரிந் தோநந் தனிமைகண்டோ
நாங்கண் ணுறங்கினு மோவுறங் [2]கார்கண் நகரவரே.

(இ - ள்.) உயர்ந்த பெருமையுடைய வெவ்விய யானைப்பகட்டை நடத்திவந்த பகைவரைச் சினந்து தும்பையென்னுந் தேன்பொருந்திய மாலையைச் சூடிப் போரைவென்ற வாணன் தென்மாறை நாட்டு மின்போன்றவளே! தாம் கண்போன்ற நாயகரைப் பிரிந்தோ, அன்றி நமது தனிமைகண்டோ, நாம் கண்ணுறங்கினும் கண்ணுறங்கார் நகரவர் என்றவாறு.

அண்ணல் - பெருமை. பகடு - யானை. உந்தல் - நடத்துதல். உடலுதல் - சினத்தல். போர் பொருவோர் தும்பைமாலை சூடுதல் புறப்பொரு ளிலக்கண வழக்கு. தேங்கண்ணி - தேன்பொருந்திய மாலை. செரு - போர். (உ0௪)

காவலர் கடுகுதல் :

காவலர் கடுகுதல் என்பது, நகர்காப்போர் துடியடித்துக் கொண்டு ஊர்சுற்றிக் கடுகி வருதல்.

புயற்கண் ணியதலைப் பூகமென் பாளைப் புதுமதுநீர் [னுள்
வயற்கண் ணிறைதஞ்சை வாணன்தென் மாறையில் வஞ்சியன்
கயற்கண் ணிணையஞ்சி நீர்மல்கக் காவலர் கைப்பறையின்
செயற்கண் ணிணையல்ல வோபடு கின்றன திண்கடிப்பே.

---

1. (வே. பா.) (1) சேர்ந்துவந்தார். 2. காரிந் நகரவரே.

(இ - ள்.) முகிலைக்கிட்டிய தலையினையுடைய பூகத்தினது மெல்லிய பாளைப் புதிய மதுநீர் வயற்கண் நிறையுந் தஞ்சைவாணன் தென்மாறையில் வஞ்சிக் கொம்புபோல்வாளது கயல்போன்ற கண்ணிணை யஞ்சி நீர் நிறையவல்லவோ காவலரது கைப்பறையின் செயல்பொருந்திய கண்ணிணையின் திண்ணிய கடிப்புப் படுகின்றன என்றவாறு.

அண்ணிய - கிட்டிய. தலை - கமுகினது உச்சி. பூகம்-கமுகு. பறை - துடி. கண்ணிணை - இருபக்கம். கடிப்பு - அடிக்குங் குறுங்கோல். ஓகாரம் - எதிர்மறை.

உரைப்போர் கேட்போர் இன்மையின் கவிக்கூற்றாய துறை; 'வருந்தொழிற்கருமை' கூறுங் கிளவி ஏழினுள்ளும் ஆறு கிளவியும் தலைவி கூற்றாய்க் கூறி, 'இது கவிக்கூற்றாய்க் கூறியது என்னையெனின், அயன்மாக்கள் தன்மையைக் கற்புடைமகளிர் கூறுவது இயல்பன்றாகலின், அவர் கூறாரென்னும் ஒழுக்கம்பற்றிக் கவிக்கூற்றாக் கூறியதென் றுணர்க. இக்கருத்தானன்றே, 'ஊர்துஞ்சாமை' என்னுங் கிளவிச் செய்யுளில், 'தாம் கண்ணனையர் தமைப்பிரிந்தோ' என ஆடவரை நீக்கி மடவார் செயலாய்க் கூறியதூஉம் என்றுணர்க.

[1] 'அடிக்கண் ணதிருங் கழலரி கேசரி தெவ்வனுங்கக்
கொடிக்கண் ணிடியுரு மேந்திய தென்னவன் கூடலன்னாய் !
வடிக்கண் ணிரண்டும் வளநகர் காக்கும்மவ் வேலிளைஞர்
துடிக்கண்ணி ரண்டுங்கங் குற்றலை யொன்றுந் துயின்றிலவே.'

என இறையனார் அகப்பொருள் உரையிற் காட்டியவதனானும் உணர்க. (உ0சு)

நிலவு வெளிப்படுதல் :

நிலவு வெளிப்படுதல் என்பது, தலைவன் வருதற்கு இடையூறாய் நிலவு வெளிப்படுதல்.

தெண்பாற் கதிர்முத்த வெண்ணகை யாய்திகி ரிக்கிரிசூழ்
மண்பாற் புகழ்வைத்த வாணன்தென் மாறைநம் மன்னர்
பண்பாற் பரிக்கும் பரிவரு மாறென் பரந்தநிலா [பொற்றேர்
வெண்பாற் கடலில்வை யம்பதி னுலு மிதக்கின்றவே.

1. இறையனார் அகப்பொருள் - ௩0.

(இ - ள்.) தெளிவாய்ப் பால்போன்ற கதிரையுடைய முத்தம்போன்ற வெள்ளிய நகையையுடையாய்! பரந்த நிலவாகிய வெண்பாற்கடலின் உலகம் பதினுலு மிதவாநின்றன; ஆதலாற் சக்கரவாளகிரிசூழ்ந்த புவியிடத்துப் புகழை வைத்த வாணன் தென்மாறை நாட்டிலிருக்கும் நம் மன்னரது பொற்றேரைக் குணத்திணுற் பரிக்கும் பரிகள் வருமாறு எப்படி? என்றவாறு.

திகிரிக்கிரி - சக்கரவாளம். பண்பு - குணம். பரித்தல்-சுமத்தல். பரி - குதிரை. வையம் என்பது தேர்க்கும் பேராதலின், முன் பதினுலு தேர் மீதுநின்றன கண்டு நம் மன்னர் பொற்றேர் பரிக்கும் பரி வருமாறு என் என ஓர் பொருள் தோன்றியது காண்க.

நிலவு வெளிப்படுதல் பதினுலு நாழிகைக்கு மேற் கூறுவதென்னெனின், மதித்திங்களும் பிறைத்திங்களும் தம்மிற் கலக்கின்ற நாள் அப்பதினைந்தில் இது மதித்திங்களாதலால் இம் மதித்திங்கட்கு முற்கூறும் பிறைத்திங்கட்குப் பிற்கூறும் களவில் இரவுக்குறிக்கு உரித்தாகலானும் மற்றைத் தினம் அட்டமிப் பக்கமாகலானும் என்று உணர்க. (உ0சு)

[1] 'திங்க ளிரண்டி னகமென மொழிப.'

என்னும் இறையனர் அகப்பொருட்சூத்திர வுரையா னுணர்க.

கூகை குழறுதல்:

கூகை குழறுதல் என்பது, கூகை குழறக்கேட்ட தலைவி அஞ்சிக் கூறுதல்.

நம்பே றுடைமை யிருக்கின்ற வாகடல் ஞாலத்துள்ளோர்
தம்பே றெனவந்த சந்திர வாணன் றரியலர்போல்
வம்பேறு கொங்கை மயிலிய லுமஞ்ச மன்றமராங்
கொம்பேறு நள்ளிருள் வாய்க்குழ றுநின்ற கூகைகளே.

(இ - ள்.) கச்சேறி யிருக்கப்பட்ட கொங்கையையுடைய மயில்போன்ற இயலையுடையாய்! கடல்சூழ்ந்தவுலகத்துள்ளோர் தம் தவப்பேறாய் வந்த சந்திரவாணன் தரியலர்போல நாம் அஞ்சத்தக்கதாக வெளியிலிருக்கும்

1. இறையனர் அகப்பொருள் - ௩௨.

மராமரத்தின் கிளையிலேறி இடையிருளின்கண்ணே கூகைகள் குழறுகின்றன; நமது நல்வினைப் பேறு இருக்கின்றவாறு நன்றாயிருந்தது என்றவாறு.

பேறு இரண்டும், நல்வினைப்பேறு. வம்பு - கச்சு. மன்றம் - வெளி. நள்ளிருள் - இடையாமம். 'நன்றாயிருந்தது' என்னுஞ் சொல் வருவித்துரைக்கப்பட்டது. குறிப்புமொழியதனாற் றீதாயிருந்ததென்பது பெறப்பட்டது. மயிலியல் - அன்மொழித்தொகை; அண்மைவிளி. மராங்கொம்பு - ஆச்சாக்கொம்பு. (உ0எ)

கோழி குரல்காட்டுதல் :

கோழி குரல் காட்டுதல் என்பது, இருவர்க்கும் இடையூறாய்க் கோழி குரல் காட்டுதல்.

**மன்பதை யுய்ய வருந்தஞ்சை வாணன்றென் மாறைவெற்பர்**
**கொன்பதி வேல்வலங் கொண்டுவந் தால்தங்கள் கோனடந்தான்**
**என்பது தேறி யிடையிரு ளூரை யெழூப்பும்வெம்முள்**
**பொன்பதி தாள்வளை வாய்ச்செய்ய சூட்டுவன் புள்ளினமே.**

(இ - ள்.) மக்கட்பரப்பு உய்யும்படி வரும் தஞ்சைவாணன் தென்மாறை வெற்பர் அச்சம் பதிந்த வேலை வலங் கையிற்கொண்டு வந்தால், வெவ்விய முள்ளையுடைய அழகுபொதிந்த தாளையும் வளைந்த வாயையும் செய்ய சூட்டையும் உடைய வலியபுள்ளாகிய கோழியினம் தங்கள் கோனாகிய முருகவேள் நடந்துவந்தான் என்பதை அறிவில் தெளிந்து இடையிருளில் ஊரை யெழுப்பும் என்றவாறு.

மன்பதை - மக்கட்பரப்பு. கொன் - அச்சம். தங்கள் கோன் - முருகவேள். பொன் - அழகு. (உ0அ)

**இரவுக்குறி யிடையீட்டில் வருந்தோழிற் கருமை ஏழிற்கும் ஒவ்வோன்றுக்கு நந்நான்கு நாழிகையாகக் கோள்வது.**

இத்துணையும் ஒன்பதாநாட் செய்தியென் றுணர்க.

**இரவுக்குறி இடையீடு முற்றிற்று.**

---

## கரு. வரைதல் வேட்கை

அஃதாவது, இவ்வாறு இடையீடு பட்டதனுற் பத்தா நாள் தலைவி வரைதல் வேட்கையாற் கூறுவது.

[1] 'அச்ச முவர்த்த லாற்ரு மையென
மெச்சிய வரைதல் வேட்கைமூ வகைத்தே.'

என்னுஞ் சூத்திரவிதியால் வரைதல்வேட்கை மூவகைப்படும்.

தலைமகளைப் பாங்கி பருவரல் வினவல் :

விண்டார் பதிகொண்ட வேற்படை வாணன் விரைகமழ்பூந்
தண்டா மரைமங்கை தங்கிய தஞ்சைநின் தாயர்தம்மோ
டுண்டா கியமுனி வோவன்றி யாயத்தொ டுற்றதுண்டோ
வண்டார் குழலிசொல் லாய்செல்வ தேதுன் மனத்திடையே.

(இ - ள்.) பகைவருடைய பதியைக்கொண்ட வேற்படையையுடைய வாணனது மணங் கமழ்கின்ற பொலிவு வாய்ந்த தண்ணிய தாமரைமலரில் இருக்கும் மங்கை தங்கிய தஞ்சையிலிருக்கின்ற வண்டார் குழலி, நின் தாயர் தம்மாலுண்டாகிய முனிவோ? அல்லது நின் ஆயக்கூட்டத்தாரால் வந்த இடையூறுண்டோ? உன் மனத்திடை நிகழ்கின்ற துன்பம் யாதோ? சொல்வாயாக என்றவாறு.

விண்டார் - பகைவர். தண்டாமரை மங்கை - திருமகள். வண்டார் குழலி - அண்மைவிளி. ஆல் உருபு இரண்டிடத்தும் ஒடுவாய்த் திரிந்தன.

[2] 'மனத்தொடு வாய்மை மொழியில் தவத்தொடு
தானஞ்செய் வாரிற் றலை.'

என்றாற்போலக் கொள்க. (உ0க)

அருமறை செவிலி யறிந்தமை கூறல் :

அருமறை செவிலி அறிந்தமை கூறல் என்பது, தலைவி யரிய களவொழுக்கத்தைச் செவிலி யறிந்தமை பாங்கிக்குக் கூறல்.

மாணிக்க மென்கொம்ப ரென்சொல்லு கேள்தஞ்சை வாணன்வெற்பர்
பேணிப் புணர்ந்து பிரிந்தபின் தோன்றலும் பேதைமுகம்
பாணித்த லின்றி மதிகண்டு நாணிய பங்கயம்போல்
நாணிக் கவிழ்ந்தத னாலறிந் தாளன்னை நங்களவே.

1. அகப்பொருள் விளக்கம், களவியல்-சஎ. 2. குறள். வாய்மை-ரு.

(இ - ள்.) மெல்லிய மாணிக்கக் கொம்புபோல்வாய்! யான் யாது சொல்லுவேன், தஞ்சைவாணன் வெற்பராகிய தலைவர் நம்மை விரும்பிப் புணர்ந்து பிரிந்துபோய்ப் பின்னும் மனைக்கண் நீர்வேட்ட காரணம்போலத் தோன்றலும், அவரைக் கண்டவுடன் உன்னுடைய அறிவில்லா முகம் நீட்டித்தலின்றி, மதியைக்கண்டு நாணிய பங்கயம்போல, நாணிக் கவிழ்ந்தபடியினாலே நம் களவை அன்னை யறிந்தாள் என்றவாறு.

'மென்மாணிக்கம்' என இயையும். கொம்பர் - அண்மைவிளி. பேணி - விரும்பி. பாணித்தல் - நீட்டித்தல். நாணல் - குவிதல்.

களவில் தாயறிந்தாள் என்று கூறல் வழுவெனில், வழுவன்று. என்னை, இரவுக்குறியின் இடையீடு பட்டவதனால் வரைதல் வேட்கை தலைவிக்குப் பிறந்தது. பிறக்கவே, பாங்கியொடு வருந்தொழிற்கருமை முதலிய கூறித் தலைவன் வரவை விலக்குவித்தலின், அருமறை செவிலி யறிந்ததாகக் கூறவே, தலைவன் விரைந்து வரைந்துகொள்வனென்று கருதித் தலைவி தானே கூறியதல்லது செவிலியறிந்தா ளல்லளென்று உணர்க. அன்றி, அறிந்தாளெனின் வரைவியலில், 'செவிலி தலைமகள் வேற்றுமை கண்டு பாங்கியை வினாதல்' என்னும் கிளவிக்கு வழுவாம். அன்றியும், செவிலி வெறியாடுதல் முதலியனவற்றால் தலைவிக்கு உற்ற நோய் யாதோ என்று வினவினாள் என்று ஆண்டுக் கூறலின், ஈண்டு அறிந்து வைத்து அங்ஙனம் வினாவில் வினாவழு வருமாதலானும் செவிலி அறிந்தாளல்லள் என்றுணர்க. (உகO)

### தலைமகன் வருந்தொழிற் கருமை சாற்றல்:

தலைமகன் வருந்தொழிற்கு அருமை சாற்றல் என்பது, தலைவி தலைமகன் வருந்தொழிற்கு அருமையைப் பாங்கிக்குக் கூறுதல்.

ஓவலில் வாயன்னை ஞாளியிவ் வூர்க ணுறங்கினுமூர்க்
காவலர் காய்வர் நிலாமதி காலுங் கடுங்குடிஞைச்
சேவலும் வாரன முந்தஞ்சை வாணனைச் சென்றிறைஞ்சா
மேவலர் போல்வெய்ய வாயடை யாவென் மெலிவறிந்தே.

(இ - ள்.) ஒழிவில்லாத வாயையுடைய அன்னையும் ஞாளியும் இவ்வூரும் கண்ணுறங்கினும் ஊர்க்காவலர் அயலார் யாரென்று சினந்து திரிவார்கள்; மதி நிலவைக்

காலும்; தஞ்சைவாணனைப் போய் வணங்காத பகைவரைப் போல என் மெலிவறிந்து கடிய கூகைச்சேவலும் வாரண மும் வெய்ய வாயபடையா என்றவாறு.

பாங்கி - முன்னிலையெச்சம். ஓவல் - ஒழிதல். ஞாளி - நாய். காலுதல் - உமிழ்தல். 'மதிநிலா' என இயையும். குடிஞை-கூகை. சேவல் - ஆண்புள். வாரணம் - கோழி. 'மெலிவறிந்து' என்பத னாற் காரணத்தைக் காரியமாக உபசரிக்கப்பட்டது. (உகக)

தலைமகனூர்க்குச் செலவொருப்படுதல் :

நம்பால் நலனுண்ட நம்பா தகர்தந் நகர்வினவித்
தம்பா லுடன்சென்று சார்குவ மோதரி யாரைவென்று
வம்பார் கழல்புனை வாணன்தென் மாறை வளரும்வஞ்சிக்
கொம்பா கியமருங் குற்கரும் பாமொழிக் கோமளமே.

(இ - ள்.) தரியாரை வென்று வீரத்தால் கச்சார்ந்த கழலையணிந்த வாணன் தென்மாறை நாட்டு வளரும் வஞ் சிக் கொம்புபோன்ற மருங்குலையும் கரும்புபோன்ற மொழி யினையும் உடைய கோமளமே! நம்மிடத்து இன்பத்தை யுண்ட நம்முடைய பாதகர் இருக்கும் நகரம் வினவி இரு வரும் உடன்சென்று அவர் தம்பாற் சேர்குவம், நீ யஞ்சலை என்றவாறு.

தரியலர்-பகைவர். வம்பு கச்சு. ஓகாரம்-அசைநிலை. (உகஉ)

பாங்கி யிறைவனைப் பழித்துரைத்தல் :

வறியார் புகழ்தஞ்சை வாணன்தென் மாறை மடந்தையன்னுள்
அறியாள் துயர்முன் னறிந்தவர் தாமத னலழலின்
பொறியா ருயிர்வெம் பணிமா மணியும் புதையிருள்கூர்
நெறியா ரருள்பெற நாநடு நாளிடை நீந்துதுமே.

(இ - ள்.) மிடியுடையார் புகழப்பட்ட தஞ்சைவாண னது தென்மாறை நாட்டு மடந்தைபோல்வாள் முன்னர் வேட்கை நோயை யறியாள், அவர் தாம் அறிந்தவதனால் நெருப்பின் பொறிபோன்ற உயிர்ப்பையுடைய வெய்ய

நாகம் ஈன்ற மாணிக்கத்தையும் புதைக்கப்பட்ட இருள் செறிந்த நெறியில் வரப்பட்டவரது அருளைப்பெற நாம் இடையாமமாகிய வெள்ளத்திடையே நீந்துவம் என்றவாறு.

அவரது அருளைப் பெறவேண்டி நாம் இறந்துபடாது துன்பப்படுவோம் எனவே, இயற்பழித்த லாயிற்று. வறியார் - மிடியார். உயிர் - உயிர்ப்பு. பணி - பாம்பு. மாமணி - மாணிக்கம். புதைத்தல் - மறைத்தல். நெறி - வழி. நடுநாள் - இடையாமம். நீந்தல் - துன்பமுறல். (உகங)

இறைவி இறையோன்தன்னை நொந்தியற்பட மொழிதல்:

இறைவி......இயற்பட மொழிதல் என்பது, பாங்கி இயற்பழித்தது பொருளாய்த் தலைவி இயற்பட மொழிதல்.

புணரா விரகமும் போகா இரவும் புணர்முலைமேல்
இணரார் பசப்பும் பிறவுமெல் லாமிருள் கூர்ந்தறல்போல்
வணரார் குழற்பிறை வாணுத லாய்தஞ்சை வாணன்வெற்பர்
உணரா திருப்பது வேறென்று மல்லநம் மூழ்வினையே.

(இ - ள்.) அறல்போல் இருள்கூர்ந்து கடைகுழன்று ஆர்ந்த குழலையும் பிறைபோன்ற வாணுதலையும் உடையாய்! கூடாத விரகமும், கழியாத இரவும், நெருங்கிய முலைமேற் கொன்றைப் பூங்கொத்து வைத்தாற்போன்ற பசப்பும், ஒழிந்த துன்பங்களும் இவையெல்லாம் தஞ்சை வாணன் வெற்பர் அறியாதிருப்பது வேறொன்றும் அல்ல; நம் ஊழ்வினையாதலால் அவர்மேற் குறையின்று என்றவாறு.

புணர்தல் - கூடுதல். புணர்தல் - நெருங்குதல். இணர் - பூங்கொத்து; பசப்புப் பொன்னிற மாதலால் கொன்றை என வருவித்தது. வணர் - கடை குழன்றல். உணர்தல் - அறிதல். ஊழ்வினை - பழவினை. (உகச)

இத்துணையும் பத்தாநாட் செய்தியென் றுணர்க.

கனவு நலிபுரைத்தல்:

கனவு நலிபு உரைத்தல் என்பது, தலைவன் கனவிற் கூடினனாக, விழித்தபின்பு பொய்யாய்ப் போன துன்பத்தைப் பதினொன்றாநாள் பாங்கியுடன் தலைவி கூறல்.

[1]இல்லா வருந்துயி லுண்டா யவரும்வந் தெய்திற்கங்குல்
பொல்லாத சேவற் கடுங்குர லார்த்துப் புவிபுரக்கும்
மல்லார் புயன்தமிழ் வாணன்தென் மாறை மருவலர்போல்
அல்லாமை நெஞ்சந் தடுமாற நல்லிடை யாக்கியதே.

(இ - ள்.) பிரிவில் இல்லா அருந்துயிலு முண்டாய வரும் வந்தெய்தின், கங்குலில் பொல்லாமையாகிய கோழி, கொடிய குரலை யார்த்துப், புவியைக் காக்கும் மற்றொழி லார்ந்த புயத்தையுடைய தமிழைக்கற்ற வாணன் தென் மாறை நாட்டைச் சேரா தார்போல, நன்கல்லாத என் நெஞ்சம் தடுமாற்றமாக நல்ல இடையூறுக்கியது என்றவாறு.

தலைவன் பிரிந்தகாலை துயில் அரிதாதலால், 'இல்லா வருந் துயில்' என்றும், தலைவன் வந்தெய்தல் அரிதாதலால், 'அவரும் வந் தெய்தில்' என்றும், இன்பத்தைக் கெடுத்துத் துயிலெழுப்பலால், 'பொல்லாத சேவல்' என்றும், மிகுந்த துன்பத்தைக் கொடுத்தலின், 'நல்லிடை' என்றும் கூறியவாறு. துயிலும் என்னும் எதிரது தழீ இய எச்சவும்மை விகாரத்தாற் றொக்கது.

பாங்கி முன்னிலை யெச்சம். இது, 'கனவொடு மயங்கல்' என்னும் மெய்ப்பாடு. (உசுஙு)

கவினழிபுரைத்தல்:

கவின் அழிபு உரைத்தல் என்பது, விரகத்தால் தலைவி தன் நல னழிந்ததனைப் பாங்கியொடு கூறல்.

வாளினு நீள்விழி வாணுத லாய்தஞ்சை வாணன்தெவ்வின்
நாளினு நாளு நலந்தொலை வேனகை யாரயில்வேல்
வேளினு மேர்நல்ல வெற்பனு நீயுமென் மேனியினும்
தோளினு நோயறி யீரறி யாததென் தொல்வினையே.

---

1. அகப்பொருள் விளக்கத்தில் இச் செய்யுட்கு மாறாக,

'சினவாகை சூடிச் செருவென்ற வாணன்தென் மாறையினம்
மனவாழ் வனையவர் வந்துநல் யாம மணந்ததெல்லாம்
நனவாமெனவே மகிழ்ந்தேன் விழித்தொன்று நான்கண்டிலேன்
கனவாய் முடிந்தது பின்னையென் னேயென்ன கைதவமே.'

என்னும் செய்யுள் காணப்படுகிறது.

(இ - ள்.) வாளினும் நீண்ட விழியையும் ஒளி பொருந்திய நுதலையும் உடையாய், தஞ்சைவாணனது பகையைப் போலச் சென்ற நாளினும் வருநாள் மிகவும் நலனழிதலையுடைய எனது மேனியினும் தோளினும் உற்ற வேட்கைநோயை, ஒளியார்ந்த கூர்வேலையும் வேளினு மிக்க அழகையும் உடைய வெற்பனும் நீயும் அறிதல்செய் யீர்; நீர் அறிதல் செய்யாதது யாதெனின் என் பழவினை என்றவாறு.

'நலந்தொலைவேன் மேனியினும்' எனவும், 'நோய் நகையா ரயில்வேல்' எனவும், 'நீயுமறியீர்' எனவும் மாறுக. நோய் என்புழி இரண்டனுருபு தொக்கது. 'தோளினுநோயறிவீர்' என்று பாட மோதுவாருமுளர்.

தெவ் - பகை. நகை - ஒளி. அயில் - கூர்மை. தொல்வினை - பழவினை. நாளும் என்புழி உம்மை அசைநிலை. (உகசு)

தன்துயர் தலைவற்குணர்த்தல் வேண்டல்:

தன் துயர் தலைவற்கு உணர்த்தல் வேண்டல் என்பது, தலைவி தன் துயரைத் தலைவற்கு அறிவிக்கவேண்டும் என்று பாங்கியொடு கூறல்.

வரைப்பால் மதுரத் தமிழ்தெரி வாணன்தென் மாறைவையை
நுரைப்பால் முகந்தன்ன நுண்டுகி லாயிந்த நோயவர்க்கின்
றுரைப்பா ருளரே லுயிரெய்த லாநமக் கூர்திரைசூழ்
தரைப்பால் வளரும் புகழெய்த லாமவர் தங்களுக்கே.

(இ - ள்.) பொதியவரையிடத்துப் பிறந்த மதுர மாகிய தமிழை ஆராய்ந்த வாணன் தென்மாறையைச் சூழ்ந்து வரும் வையையாற்றின் நுரையையும் பாலையும் முகந்துகொண்டாலொத்த நுண்ணிய நூலாற்செய்த துகிலையுடையாய், யான் வருந்தும் இந்த நோயைத் தலைவர்க்கு இன்று உரைப்பாருண்டாயின் நமக்கு உயிர் எய்தலாம்; சொல்வார்க்குப் பயன் யாதெனின், அவர் தங்களுக்கு நடக்குந் திரையையுடைய கடல் சூழ்ந்த புவியினிடத்தில் வளரும் புகழெய்தலாம் என்றவாறு.

வரை - பொதியமலை. பால் - இடம். நுரைப்பால் - உம்மைத்தொகை. ஊர்திரை - வினைத்தொகை. திரை - ஆகுபெயர். தரை - நிலவுலகம். நுண்டுகில், [1]"குண்டுசுனை பூத்த வண்டுபடு கண்ணி" என்றாற்போல, ஒற்றுமை நயம்பற்றி, நுண்ணிய நூலாற் செய்த துகில் என்று கொள்க. (உகஎ)

### துன்புறல் பாங்கி சொல்லெனச் சொல்லல் :

துன்புறல் பாங்கி சொல்லெனச் சொல்லல் என்பது, யான் துன்புறலைத் தலைவர்க்கு நீ சென்று சொல்லெனத் தலைவி கூறியதற்குத் தலைவியை நோக்கிப் பாங்கி சொல்லல்.

**ஒல்லென வேயென் னுறுதுயர் தாமும் உணரும்வண்ணம்**
**சொல்லென நீயிது சொல்லியென் பேறுன் துயரமெல்லாம்**
**வல்லென வேகொண்ட கொங்கையர் வேள்தஞ்சை வாணன்வெற்**
**அல்லென ஆர்குழ லாயறி யாரல்ல அன்பருமே. [பில்**

(இ - ள்.) விரைவினுள் இது விரைவென்ன என்னுடைய மிக்க துயரைத் தலைவர்தாமும் உணரும்வண்ணம் என்னைச் சொல்லென்று நீ இது சொல்லிப் பெறும் பயன் யாது? சூதென்று சொல்ல ஒப்புமைகொண்ட கொங்கையர்க்கு வேளாகிய தஞ்சைவாணன் வெற்பில் இருளென்று சொல்லப் பொருந்திய குழலினை யுடையாய், உன் துயரமெல்லாம் அன்பரும் அறியாரல்லர் என்றவாறு.

ஒல்லெனல் - விரைவின்கண் வந்தசொல். உறுதுயர் - மிக்க துயர். வல் - சூது. அல் - இருள். ஆர்ந்த - பொருந்திய. (உகஅ)

### அலர்பார்த்துற்ற அச்சக்கிளவி :

அலர் பார்த்து உற்ற அச்சக் கிளவி என்பது, உற்றாருஞ் சொல்லும் அலரைக் கருதி அதனாலுற்ற அச்சத்தால் தலைமகள் கூறுஞ் சொல்.

**மலருந் தொடைவஞ்சி வஞ்சக மாதரு மாரனும்வாய்**
**அலருந் தடங்கை யலருந் தொடாநிற்ப வஞ்சிநெஞ்சம்**
**பலரும் புகழ்தஞ்சை வாணர் பிரானைப் பணியலர்போல்**
**புலரும் பெயருங்கண் ணீர்புல ராது புலரினுமே.**

---

1. திருமுரு - கககூ.

(இ - ள்.) மலருமாலையுடைய வஞ்சிபோல்வாய், ஊரிலுள்ள வஞ்சகமாயிருக்கப்பட்ட மாதரும் மாரனும் வாயலரும் பெரிய கையலருந் தொடாநிற்ப அஞ்சி நெஞ்சமானது, பலரும் புகழப்பெற்ற தஞ்சைவாணர் குலத்துச் சிறந்தானைப் பணியாதார்போலப் புலரும்; நெஞ்சு புலரினும் பெயரப்பட்ட கண்ணீரானது புலராது என்றவாறு.

வஞ்சி - அண்மைவிளி. மாரன் - மன்மதன். வாயலர் - தூற்றுஞ்சொல். கையலர் - மாரன் அம்பாக எய்யும் மலர். பெயர்தல் - நிலைவிட்டுப் பிரிதல். 'நெஞ்சமும் புலரும்' எனவும், 'புலரினும் பெயருங் கண்ணீர்' எனவும் இயையும். (௨௧௯)

### ஆறுபார்த்துற்ற அச்சக்கிளவி :

ஆறுபார்த்துற்ற அச்சக்கிளவி என்பது, வழியைப்பார்த்து அவ்வழி ஏதத்தால் உண்டாகிய அச்சத்தால் தலைவி கூறுஞ் சொல். பார்த்தல் - கருதல்.

**அறியுங் கரியும் பொருநெறிக் கோர்துணை யாயவர்மேல்**
**சொறியுந் திவலை துடைக்கவென் றேகுழை தோய்ந்துநஞ்சும்**
**வரியும் பயில்கண்ணி வாணன்தென் மாறைநம் மன்னர்வந்து**
**பிரியும் பொழுதெல்லி வாய்வினை யேன்மனம் பின்செல்வதே.**

(இ - ள்.) குழையைத் தொட்டு நஞ்சும் வரியும் நெருங்கும் கண்ணாய்! வாணன் தென்மாறையிலிருக்கும் நம் மன்னர் இரவின்கண் வந்து பிரியும்பொழுது பாவியேன் மனம் அவரைப் பிரியாமற் றொடர்ந்துசெல்வது சிங்கமும் யானையும் பொருகின்ற வழிக்கு ஒரு துணையாய் அவர்மேற் சொரியப்பட்ட மழைத்திவலையைத் துடைக்கவென்றோ, சொல்வாயாக என்றவாறு.

அரி - சிங்கம். கரி - யானை. கண்ணி - அண்மைவிளி. எல்லி - இரவு. நஞ்சு - விடம். வரி - செவ்வரி. பயில்கண் - நெருங்குங் கண். (௨௨0)

### காம மிக்க கழிபடர் கிளவி :

காம மிக்க கழி படர் கிளவி என்பது, வேட்கை மிக்குச் சிறப்பச் சிந்தித்துச் சொல்லுஞ் சொல்.

இக்கிளவிச் செய்யுட்குக் கருத்து: கடல், கானல், பொழில்; விலங்கு, புள் இவற்றை நோக்கித் தலைவி இரங்கிக் கூறல்.

[1] மாதுற்ற மேனி வரையுற்ற வில்லிதில் லைநகர்சூழ்
போதுற்ற பூம்பொழில் காள்கழி காளெழிற் புள்ளினங்காள்
ஏதுற் றழிதியென் னீர்மன்னு மீர்ந்துறை வர்க்கிவளோ
தீதுற்ற தென்னுக்கென் னீரிது வோநன்மை செப்புமினே.

இக்கிளவிச் செய்யுள் ஆங்கு, 'நெஞ்சழிதல்' என்னும் மெய்ப்பாடென்று உணர்க. (௨௨௧)

## தன்னுட் கையா றெய்திடு கிளவி:

தன்னுட் கையா றெய்திடு கிளவி என்பது, தலைவி தன்னிடத்துத் துன்பத்தைப் பிறிதொன் றன்மே விட்டுச் சொல்லுஞ் சொல்.

[2] விண்டலை யாவர்க்கும் வேந்தர்வண் தில்லைமெல் லங்கழிசூழ்
கண்டலை யேகரி யாக்கன்னிப் புன்னைக் கலந்தகள்வர்
கண்டிலை யேவரக் கங்குலெல் லாமங்குல் வாய்விளக்கும்
மண்டல மேபணி யாய்தமி யேற்கொரு வாசகமே.

[இதுவும் பிறசெய்யுட் கவி.]

இக் கிளவிச் செய்யுள் எம் மெய்யாயினும் 'ஒப்புமை கோடல்' என்னும் மெய்ப்பாடென்று உணர்க [3]'இன்பத்தை வெறுத்தல்' என்னுஞ் சூத்திரத்திற் காண்க. (௨௨௨)

## நெறி விலக்குவித்தல்:

நெறி விலக்குவித்தல் என்பது, தலைவி தலைவன் வரும் வழியை விலக்கெனப் பாங்கியொடு கூறல்.

ஏவற்கருத்தா, இயற்றுங் கருத்தா, கருவிகருத்தா, கருமகருத்தா எனக் கருத்தா நால்வகையாய்க் கூறப்படும். அவற்றுள் பாங்கியை இயற்றுங் கருத்தாவாக்கி, தலைவியை ஏவுங்கருத்தாவாய்க் கூறலின், 'நெறிவிலக்கல்' என்னாது, 'நெறிவிலக்குவித்தல்' எனக் கூறியதென்று உணர்க இவ்வாறே மேல்வரும், 'குறிவிலக்குவித்தல்' முதலாயினவற்றிற்குங் கொள்க

1. கோவையார் - ௧௱௪.
2. கோவையார் - ௧௱௭.
3. தொல மெய்ப்பாட்டியல் - ௨௪.

ஈன்ரு ளினுமெனக் கன்புடை யாய்சென் றிரந்துகொண்டு
சான்ருண்மை யன்பர் தமக்குரை நீதஞ்சை காவலனைத்
தேன்ருழ் வரைத்தமிழ் சேர்த்திய வாணனைச் சேரலர்க்கும்
தோன்ரு விருங்கங்குல் நீவரு மாருெழி தோன்றலென்றே.

(இ - ள்.) ஈன்றதாய் அன்பினும் என்னிடத்து அன்பு மிக்குடையாய்! தஞ்சை காவலனைத் தேன்ருழ்ந்த பொதியமலையில் தமிழைச் சேர்த்திய வாணனைச் சேராத பகைவர்க்குந் தோன்ருத பெரிய கங்குலிடத்துத் தோன்றலே! வரும்வழியையொழி யென்று மாட்சிமையுடைய அன்பர்க்கு நீ சென்று வேண்டிக்கொண்டு உரைப்பாயாக என்றவாறு.

உம்மை - சிறப்பும்மை. எனக்கு என்புழி வேற்றுமை மயக்கம். சான்ருண்மை - மாட்சிமை. தாழ்தல் - தங்குதல். வரை - பொதியவரை. சேரலர் - பகைவர். உம்மை இழிவு சிறப்பு. தோன்றல் - அண்மைவிளி. (உஉ௫)

குறி விலக்குவித்தல் :

குறி விலக்குவித்தல் என்பது, தலைவி தலைவன் வரும் இரவுக் குறியை விலக்கெனப் பாங்கியொடு கூறல்.

வெற்றிய வாலிய வாணர் பிரான்தஞ்சை வெற்பகத்திப்
பெற்றிய சோலைப் பிறங்கிருள் வாரல்மின் பேதையின்னும்
முற்றிய வேனற் படுகிள்ளை யோட்டு முறைமையளென்
றெற்றிய காதலி னுலிசைத் தாளன்னை யென்றுரையே.

(இ - ள்.) தலைவி இன்னும் முற்றிய தினையிடத்து வீழுங் கிளியோட்டும் முறைமையளென் றிரங்கிய காதலினுல் அன்னை சொன்னுளாதலால், வெற்றியை விரும்பிய வாணர்பிரானது தஞ்சை வெற்பிடத்து இவ்விடையீடு படுவதாகிய சோலையிற் செறிந்த இருட்குறியிடத்து வாராதொழிமினென்று அன்பர்க்கு நீ கூறுவாயாக என்றவாறு.

பாங்கி முன்னிலை அதிகாரப்பட்டு வருதலாற் கொள்க. அன்பர்க்கு என்பது அவாய் நிலையான் வந்தது. பிறங்கல் - செறிதல்.

எற்றல் - இரங்கல். இசைத்தல் - கூறுதல். வாரன்மின் - ஒருமைப் பன்மை மயக்கம். என்னை, [1]"வயக்குறுமண்டிலம்' என்னும் பாலைக்கலியில், 'இரத்திராலையமற் றிவணிலைமை கேட்டீமின்' என்றாற்போலக் கொள்க.

[2] 'ஒருமை சுட்டிய பெயர்நிலைக் கிளவி
பன்மைக் காகு மிடனுமா ருண்டே.'

என்னுஞ் சூத்திரவிதியானும் உணர்க. (உஉச)

வெறி விலக்குவித்தல் :

வெறிவிலக்குவித்தல் என்பது, தலைவி, தாய் வெறியாடுதல் கொண்டாள் என்று தலைவர்க்குக் கூறி வரவு விலக்கெனத் தோழியோடு கூறல்.

**மின்னு திடித்தென அன்னைகொண் டாள்வெறி விந்தைமங்கை**
**மன்னுண்மை மன்னிய வாணன்தென் மாறை வரையில்வண்டியாழ்**
**என்னு அசுண மிறைகொள்ளு நாட ரெனக்கருளால்**
**முன்னு எருவிய நோதணிப் பானின்று மொய்குழலே.**

(இ - ள்.) மொய்குழலே! வெற்றி மங்கையால் அரசாண்மை நிலைபெற்ற வாணன் தென்மாறையில் வண்டிசையை யாழிசையென் றெண்ணி அசுணப்புட்கள் தங்கு நாடர் எனக்கருளினால் முன்னுளருளிய நோயைத் தணிக்கும் பொருட்டாக, இன்று அன்னை மின்னுதிடித்தது போலக் காரணமின்றி வெறியாட்டாளனை வினவ உட்கொண்டாளென்று அன்பர்க்கு உரைத்து வரவு விலக்குவாயாக என்றவாறு.

வெறி - வெறியாட்டாளனை வினுதல். விந்தை மங்கை - வெற்றிமாது. மன்னுண்மை - அரசாண்மை. வண்டு, யாழ் இரண்டும் ஆகுபெயர். இறைகொள்ளுதல் - தங்குதல். நோய் - வேட்கை நோய். தணிப்பான் - வினையெச்சம். மொய்குழல் - வண்டு மொய்க்குங் குழல். (உஉரு)

---

1. கலித். பாலை - உச.
2. தொல். சொல். எச்சவியல் - சுரு.

பிறர் வரைவு விலக்குவித்தல் :

பிறர் வரைவு விலக்குவித்தல் என்பது, தலைவி பிறர்வரைவைத் தலைவர்க்குக் கூறி வரைவு விலக்கெனப் பாங்கியொடு கூறல்.

பொருபால் மதியினைப் போன்மருப் பியானையிற் பொன்னெடின்பந்
தருபால் மொழிவஞ்சி சாரவந் தார்தஞ்சை வாணன்வெற்பின்
ஒருபால் நொதுமல ரென்னவெந் தீயுலை யுற்றசெவ்வேல்
இருபால் மருங்கினுங் கொண்டெறிந் தாலொத்த தென்செவிக்கே.

(இ - ள்.) இன்பத்தைக் கொடுக்கும் பால்போலும் மொழியையுடைய வஞ்சிக்கொம்பு போல்வாய்! தஞ்சை வாணன் வெற்பில் பொரப்பட்ட வெண்மதியை யொக்கும் மருப்பையுடைய யானையின்மேல் பொன்னொடு ஒரிடத்தய லார் சாரவந்தாரென்று சொல்ல, அச்சொல் என் செவிக்கு வெய்ய தீயுலையிற் பழுக்கக்காய்ந்த செவ்வேலை இரண்டு பக்கத்திடத்துங்கொண் டெறிந்தாலொத்ததென்று என் அன்பர்க்குக்கூறி அவர் வரைவு விலக்குவாயாக என்ற வாறு.

நொதுமலர் - அயலார். பால் - வெண்மை; பால் - பால்; பால் - இடம்; பால் - பக்கம், முறையே காண்க. (உஉசு)

குரவரை வரைவெதிர் கொள்ளுவித்தல் :

குரவரை வரைவெதிர் கொள்ளுவித்தல் என்பது, பெரியோரை வரைவு கூறி வர நமர் எதிர்கோடலைச் செய்யென்று தலைவி பாங்கியொடு கூறல்.

தற்பழி யாமலுஞ் சந்திர வாணன் தமிழ்த்தஞ்சைநங்
கற்பழி யாமலுங் காரண மாகக் கயல்விழிநின்
சொற்பழி யார்நமர் சொல்லுவல் லேசென்று சொல்லலையேல்
இற்பழி யாம்வழி யாநம தாருயிர்க் கேதமுமே.

(இ - ள்.) கயல்போன்ற விழியினையுடையாய்! சந்திரவாணன் தமிழ்த் தஞ்சையில் தலைவன் றன்னைப் பழியாமலும், நமது கற்பு அழியாமலும், இவ்விரண்டுங் காரணமாக வல்லேசென்று பெரியோரை மணமொழிந்து வரவும், நமர் எதிர்கொள்ளவும் தலைவர்க்கும் நமர்க்கும் சொல்லு;

நீ சொல்லியக்கால் நமர் நின் சொல்லைப் பழியார்; நீ சொல்லலையேல் நம் மனைக்குப் பழியாம்; நமது ஆருயிர்க்கு ஏதம் வருவதற்கு வழியுமாம் என்றவாறு.

கயல் விழி - அன்மொழித்தொகை. இல்-ஈண்டுக் குலம். ஏதம்-குற்றம். பிறர் வரைவு நேரின் உயிர்போய்விடு மாதலான், 'நம துயிர்க்கேதம்' என்று கூறியவாறு 'வெறிவிலக்குவித்தல்' முதலிய மூன்று கவியுள்ளும் தலைவற்குக் கூறென்று கூறவில்லையெனின், 'விலக்குவித்தல்' 'கொள்ளுவித்தல்' எனத் தலைவி ஏவலாய்ப் பாங்கி செயலாய்க் கூறியதனுனும், 'வரைவுகடா'வினும் இக்கிளவிகளின் பொருள்படத் தலைவற்குக் கூறுதலானும், அதிகாரப்பட்டு வருத லானும் தலைவர்க்குக் கூறென்று கூறியவாறாயிற்று.[1]

[1] 'பருவரல் வினவிய பாங்கிக் கிறைவி
அருமறை செவிலி யறிந்தமை கூறலும்
தலைமகன் வருந்தொழிற் கருமை சாற்றலும்.'

ஆக இரண்டும்,

'அலர்பார்த் துற்ற வச்சக் கிளவியும்
ஆறுபார்த் துற்ற வச்சக் கிளவியும்.'

ஆக விரண்டும், நெறிவிலக்குவித்தல் முதலிய நான்கும் ஆகிய எட்டும் அச்சத்திற்கு உரியன.

'பாங்கி இறைவனைப் பழித்தலும்
தன்புறு பாங்கி சொல்லெனச் சொல்லலும்'

ஆகிய இரண்டும் உவர்த்தற்கு உரியன.

'தலைமக னூர்க்குச் செலவொருப் படுதலும்
பாங்கி யிறைவனைப் பழித்தலும் பூங்கொடி
இறையோன் றன்னைநொந் தியற்பட மொழிதலும்
கனவுநலி புரைத்தலுங் கவினழி புரைத்தலுந்
தன்றுயர் தலைவற் குணர்த்தல் வேண்டலும்
காம மிக்க கழிபடர் கிளவியும்
தன்னுட் கையா றெய்திடு கிளவியும்
குரவரை வரைவெதிர் கொள்ளுவித்தலும்.'

ஆகிய எட்டும் ஆற்றாமைக்கு உரியன. (உஉஎ)

இத்துணையும் பதினேன்றுநாட் செய்தியென் றுணர்க.

வரைதல் வேட்கை முற்றிற்று.

---

1. அகப்பொருள் விளக்கம், களவியல் - சஅ.

## கசா. வரைவு கடாதல்

அஃதாவது, பாங்கி தலைவனொடு வரைவுகூறி வினாதல்.

[1] 'பொய்த்தல் மறுத்தல் கழறல் மெய்த்தலென்
றொருநால் வகைத்தே வரைவு கடாதல்.'

என்னுஞ் சூத்திரவிதியால் வரைவுகடாதல் நான்கு வகைப்படும்.

**வினவிய செவிலிக்கு மறைத்தமை விளம்பல் :**

வினவிய செவிலிக்கு மறைத்தமை விளம்பல் என்பது, முன் வரைதல் வேட்கையில் தலைவி அருமறை செவிலி யறிந்தமை கூறிய வதனைத் தோழி தன்னைச் செவிலி வினவியதாகவும், அதற்குத் தான் மறைத்துக் கூறியதாகவும் தலைவற்குக் கூறுதல்.

இக்கிளவி முதல் 'கவினழி புரைத்தல்' ஈறாகக் கூறிய கிள விகள் பலவற்றுள்ளும் குறிப்பினானும் வெளிப்படையானும் வரைவு கடாவியவாறு கண்டுகொள்க.

தளரா இளமுலை தாங்ககில் லாது தளரிடைகண்
வளராத தென்கங்குல் வாரா யெனத்தஞ்சை வாணன்வெற்பா
விளரார் திருநுத லன்னைக்கோர் மாற்றம் விளம்பியுய்ந்தேன்
உளரா மவர்வலை யுட்பட்டு வாழ்வ துணர்ந்தருளே.

(இ - ள்.) தஞ்சைவாணன் வெற்பனே! செவிலி என்னை ஈங்கு வாராயென அருகழைத்து, எஞ்ஞான்றும் இறுகிய தன்மை தளராத இளமுலைகளைத் தாங்கமாட்டாது தளர்ந்த இடையினையுடையாள் கங்குலின்கண் துயில்கொள்ளாதது என்னென்று வினவ, வெளுப்பார்ந்த திருநுதலையுடைய அன்னைக்கு ஒரு சொல் மறைத்துச் சொல்லி உய்ந்தேன்; எமக்குள்ளாராகிய தாய்மார் வலையுள் அகப்பட்டு யாங்கள் உயிர்வாழ்தல் உணர்ந்தருள்வாயாக என்றவாறு.

தளரிடை - அன்மொழித்தொகை. கண்வளர்தல் - துயிலுதல். கங்குல் - இரவு. விளரார்தல் - மகட்குத் துயில் வாராமையால் யாது நோயோ என்று துன்பத்தால் திருநுதல் வெளுத்தல்.

1. அகப்பொருள் விளக்கம், களவியல் - சக.

ஓர் மாற்றம் - தலைவி துயிலிடைக் கனவுகண்டு வெருவி யெழுந்தாள், அவ்வச்சத்தினால் துயில் வாராதிருந்தாளென்னும் மாற்றம். யான் இங்ஙனம் மறைத்துக் கூறுவிடின் என்னுயிர்க்கு ஏதஞ்செய்வ ரென்பது தோன்ற, 'உய்ந்தேன்' என்று கூறியவாறு. எனவே, குறிப்பால் வரைவு கடாதலாயிற்று. 'தாங்கி நில்லாது' என்று பாடமோதி, தளரிடைக்குத் துவளுமிடை யென்று பொருளுரைப் பாரு முளர். (உஉஅ)

## அலரறிவுறுத்தல் :

அலர் அறிவுறுத்தல் என்பது, ஊரில் தலைவியைத் தூற்றும் அலர் விரிந்த தென்று தலைவனுக்கு அறிவுறுத்தல்.

மணிவரை மாளிகை மாறை வரோதயன் வாணன் வெற்பா
பணிமொழி யாளென்னுங் கொள்கொம்பு மூடிப் படர்ந்தயலார்
அணிமனை தோறுங் கொழுந்துவிட் டம்பல் அரும்பிமண்மேல்
தணிவில தாகவிப் போதலர் பூத்ததுன் தண்ணளியே.

(இ - ள்.) மணிவரைபோன்ற மாளிகையையுடைய மாறை வரோதயனாகிய வாணனது வெற்பிலுள்ளவனே! நினது தண்ணளியாகிய வல்லி தலைவியென்னுங் கொள் கொம்பை மூடிப்படர்ந்து, பக்கத் தழகிய மனைதொறும் கொழுந்துவிட்டு, அம்பலென்னும் அரும்பை யரும்பி, மண்மேல் தணிவில்லாததாக இப்போது அலரென்னும் பூவைப் பூத்தது என்றவாறு.

மணிவரை - மாணிக்கமலை. பணிமொழி - மெல்லிய மொழி. கொள் கொம்பு - கொடிபடரக் கொள்ளுங்கொம்பு. அம்பல் என்பது சொல் நிகழாதே முகிழ் முகிழ்த்துச சொல்வதாயிற்று. இன்னதின் கண்ணதுஎன்பது அயல் அறியலாகாது என்பது. அலர் என்பது, இன்னானோடு இன்னாளிடையது போலும் பட்டது என விளங்கச்சொல்லி நிற்பது. என்னை, [1]'அம்பலு மலருங்களவு' என்னும் இறையனார் அகப்பொருட்சூத்திர வுரையிற் கண்டுகொள்க. இச்செய்யுள், 'இயைபுருவகம்' எனக்கொள்க. (உஉக)

## தாயறிவுணர்த்தல் :

தாய் அறிவு உணர்த்தல் என்பது, இக்களவைத் தாய் அறிந்தாள் என்று தலைவற்குக் கூறுதல்.

1. இறையனார் அகப்பொருள் - உஉ.

திரையிற் பவளம் வடவா முகத்தெழுந் தீக்கொழுந்தின்
கரையிற் படருங் கடற்றுறை நாட கயற்கொடிபொன்
வரையிற் றிகழ்வித்த வாணன்தென் மாறை மலர்ந்தமௌவல்
விரையிற் களவையெல் லாமறிந் தாளன்னை மெய்யுறவே.

(இ - ள்.) பவளக்கொடி திரையால், வடவாமுகக் கனலிலெழுங் கொழுந்துபோலக், கரையிலே படருங் கடற்றுறை நாடனே! கயற்கொடியைப் பொன்மலையிலே விளக்குவித்த வாணன் தென்மாறை நாட்டின் தலைவிக்குச் சூட்டிய முல்லைமாலை மணத்தினாலே அன்னை களவை யெல்லாம் உள்ளபடி யறிந்தாள் என்றவாறு.

எனவே, களவொழுக்கத்தில் ஒழுகற்பாலையல்லை யென்று கூறியதாயிற்று. திரை - அலை. இன் இரண்டும் மூன்றனுருபு. என்னை,

[1] 'இன்னா னேது வீங்கென வரூஉம்
அன்ன பிறவும் அதன்பால வென்மனார்.'

என்னுஞ் சூத்திரவிதியால் உணர்க. கொழுந்தின் - ஐந்தாம் உருபு உவமப் பொருளின்கண் வந்தது. பொன்வரை - மகாமேரு. நிகழ்வித்தல் - விளக்குவித்தல். மௌவல் - முல்லை. விரை - மணம். மெய்யுற - உள்ளபடி. (உரு0)

**வெறியச்சுறுத்தல் :**

வெறி அச்சுறுத்தல் என்பது, அன்னை வெறியாட்டாளனை வினுதல் உட்கொண்டாள் என்று தலைவனுக்கு அச்சமுறுத்திக் கூறல்.

அம்பல் என்பது பெரும்போதாய்ச் சிறிது நிற்க அலரும் என நிற்பது. அலரென்பது அப்பெரும்போது தாதும் அல்லியும் வெளிப்பட மலர்ந்தாற்போல நிற்கும் நிலைமை என வேற்றுமை சொல்லப்பட்டதாம்.

மையுற்ற நீலக்கண் மாமங்கை கோன்றஞ்சை வாணன்வெற்பில்
நெய்யுற்ற வேலன்ப நீதணி யாமையி னெஞ்சினுள்ளே
ஐயுற் றயர்வுற்றெம் மன்னையு மாயுமென் னுரணங்கின்
மெய்யுற்ற நோய்தணிப் பான்வெறி யாடல் விரும்பினரே.

---

1. தொல். சொல். வேற்றுமையியல் - கரு.

(இ - ள்.) மை யெழுதிய நீலமலர்போன்ற கண்ணை யுடைய திருமகட்குக் கணவனாகிய தஞ்சைவாணன் வெற்பில் நெய் தடவிய வேலையுடைய அன்பனே! நீ தலைவிக்குக் கொடுத்த காம வேட்கையாகிய நோயைத் தணியச் செய்யாமையான் அன்னையும் யாயும் எந்நோயோ என்று நெஞ்சினுள்ளே ஐயப்பட்டு அயர்ச்சி யடைந்து, என் ஆரணங்கு போல்வாளது மெய்யுற்ற நோயைத் தணிக்கும் பொருட்டு வெறியாட்டாளனை வினுதல் விரும்பினர் என்றவாறு.

எனவே, வெறியாட்டாளனை வினுதற்கு முன்னமே நீ விரைந்து வரைந்துகொள்வாய் என்பது குறிப்பால் தோன்றிற்று.

மாமங்கை - திருமகள். தணித்தல் - ஆறச்செய்தல். அயர்தல் - கவற்சி. அன்னை - செவிலி. ஆய் - நற்றாய். ஆரணங்கு ஆகுபெயர். தணிப்பான் - வினையெச்சம். (உ௩க)

பிறர் வரைவுணர்த்தல் :

*பிறர் வரைவு உணர்த்தல் என்பது, பிறர் வரைவு கூறி வந்ததனைத் தலைவற்கு அறிவித்தல்.*

**வெடிக்கின்ற இப்பியுள் நித்திலம் பைத்தலை வெம்பகுவாய்த்**
**துடிக்கின்ற திங்களிற் றேன்றுந் துறைவசெஞ் சொற்புலவோர்**
**வடிக்கின்ற முத்தமிழ் வாணன்தென் மாறையெம் மான்மருங்கை**
**ஒடிக்கின்ற கொங்கைகண் டாலெவர் நெஞ்சுரு காதவரே.**

(இ - ள்.) வாய் விள்ளும் இப்பியிற் பாதி உள்ளும் பாதி வெளியுமாய்த் தோன்றும் நித்திலம், பாம்பினது வெய்யவகிர்ந்த வாயிடத்துத்துடிக்கின்ற திங்களைப்போலத் தோன்றும் நீர்த்துறைவனே, செவ்விய சொல்லையுடைய புலவோர் ஆராய்ந்து குற்ற நீங்கித் தெளிந்த முத்தமிழைக் கற்ற வாணன் தென்மாறை நாட்டிலிருக்கும் எங்கள் மான் போன்ற தலைவியது இடையை ஒடிக்கின்ற கொங்கையைக் கண்டால் நெஞ்சுருகாதார் யார் என்றவாறு.

வெடித்தல் - வாய்விள்ளுதல். இப்பி - முத்திப்பி. நித்திலம் - முத்து. பைத்தலை - ஆகுபெயர். பகுவாய் - வகிர்வாய். துடித்தல் - நடுங்குதல்; உவமப்பொருட்குத் துடிப்பு யாது எனின், ஒளியால்

துடித்தல்போலத் தோன்றல். வடித்தல் - ஆராய்ந்து குற்றம் நீங்கித் தெளிதல். முத்தமிழ் - இயல் இசை நாடகம். மான் - ஆகு பெயர். மருங்கு - இடை. உருதல் - உதிர்தல். 'வெடிக்கின்ற விப்பியு ணித்திலம் பைத்தலை வெம்பகுவாய் துடிக்கின்ற திங்களிற் றோன்றுந் துறைவ' என்றது இறைச்சி யென்க. [1]'இறைச்சி தானே பொருட் புறத்ததுவே' என்னுஞ் சூத்திரத்தா னுணர்க. ()

### வரைவெதிர் வுணர்த்தல் :

வரைவெதிர் வுணர்த்தல் என்பது, பாங்கி தலைவனை நோக்கி நீ வரைவு கூறி, எங்கள் நகர்க்கு வந்தாயாகில் எமர் எதிர்கொண்டு வருவரெனக் கூறுதல்.

**குருதிகண் டாலன்ன காந்தளஞ் சாரற் குறிவெறிதே**
**வருதிகண் டாய்தஞ்சை வாணன்வெற் பாவெங்கள் மாநகர்நீ**
**சுருதிகண் டார்ரொடுந் தோன்றிலெங் கேளிர்நின் சொல்லிகவார்**
**பருதிகண் டால்மல ராதொழி யாகயப் பங்கயமே.**

(இ - ள்.) தஞ்சைவாணன் வெற்பனே! குருதி கண்டாலொத்த காந்தட் பூவலர்ந்த எங்கள் சாரற் குறியிடத்தில் பயனின்றியே வருவாய்; எங்கள் மாநகரில் நீ வேதம் வல்ல அந்தணரொடும் வந்து தோன்றி வரைவு கூறினையேல் எங்கள் சுற்றத்தார் நின் சொல்லைக் கடவார்; அஃதென்னெனின், ஞாயிற்றைக் கண்டால் குளத்திலிருக்கும் தாமரை அலராது ஒழியா; ஆதலால், அந்தணரை முன்னிட்டுக்கொண்டு வருவாயாக என்றவாறு.

எனவே, வெளிப்படையால் வரைவு கடாவியது.

குருதி - இரத்தம். அம் - சாரியை. குறி - ஏழாம்வேற்றுமைத்தொகை. கண்டாய் - முன்னிலை யசைச்சொல். சுருதி - வேதம். கண்டார் - முடிவுகண்டார். இகத்தல் - கடத்தல். 'நின் சொல் இகழார்' என்று பாடமோதுவாரு முளர். 'அலராது ஒழியா' என்பது அலருமென்னும் பொருடந்து நின்றது. (உ௩௩)

### வரையுநா ளுணர்த்தல் :

வரையுநாள் உணர்த்தல் என்பது, மணஞ்செய்கின்ற நாளை அறிவித்தல்.

---

1. தொல். பொருள், பொருளியல் - ௩டு.

அலகம் பனகண் ணிவள்கொங்கை மென்சுணங் காகிவண்டு
பலகம் பலைசெய்யப் பூத்தன வேங்கை பனிவரைமேல்
திலகம் பதித்தெனச் சேல்வைத்த வாணன்தென் மாறைமன்னன்
உலகம் பயில்புகழ் போற்சிலம் பாமதி யூர்கொண்டதே.

(இ - ள்.) சிலம்பனே, கூர்மைபொருந்திய அம்பு போன்ற கண்ணையுடைய எங்கள் தலைவியது இறுகி வளர்ந்த முலைமேல் பரந்த மெல்லிய சுணங்குபோல வண்டுகள் பலபல விதமாய் ஆரவாரஞ் செய்ய வேங்கைகள் பூத்தன; பனிவரைமேல் திலகம் பதித்ததுபோன்ற சேற் கொடியை வைத்த வாணனாகிய தென்மாறை மன்னனது உலகமெல்லாமாக வளைந்த புகழ்போல் திங்களைப் பரி வேடம் வளைந்தது என்றவாறு.

எனவே, இது வரையுநாளென வெளிப்படையான் உணர்த் தியவா றாயிற்று.

அலகு - கூர்மை. அம்பு - கண். சுணங்கு - மாமைநிறம். கம்பலை - ஆரவாரம். பனிவரை - இமயமலை. சேல் - ஆகுபெயர். பயிலுதல் - வளைதல். ஊர் - பரிவேடம். 'வண்டு கம்பலை செய்யப் பூத்தன வேங்கை' என்றதனால், 'வேங்கை சண்பகம் வண்டுணா மலர்' என்னும் விதியான், வேங்கைப் பூவை வண்டு அணுகாதாதலால் இங்ஙனங் கூறிய தென்னையெனின், வேங்கை மரத்தினும் சண்பகமரத்தினும் வண்டுண்ணாதிராது, உண்ணின் அதனான் மயங்கி மூர்ச்சையினை யடையும், பூவைக் கொண்ட உவகையால் ஆரவாரிக்கும், அதுபற்றிக் கூறியவாறு. (உ௩௪)

### அறிவு அறிவுறுத்தல்:

அறிவு அறிவுறுத்தல் என்பது, பாங்கி தலைமகளறிவு தலைமகற்கு அறிவுறுத்தல்.

வனநாள் முளரி முகைவென்று வாணன்தென் மாறைவெற்பில்
கனநா ணணிந்துபொற் கச்சற வீசிக் கதித்தெழுந்த
தனநாணு நுண்ணிடைத் தையனல் லாள்பழி சாற்றுவல்யான்
எனநாணி நின்பழி தான்மறைத் தாளன்ப என்னையுமே.

(இ - ள்.) அன்பனே! வாணன் தென்மாறை வெற்பில் நீரில் தோன்றி மலர் மலர்தற்கு நாட்கொள்ளுந்

தாமரை முகையை வென்று, கனமாகிய பொன்னுண் அணிந்து, பொற்கச்சு அற எறிந்து பருத்தெழுந்த முலைக்கு நாணப்பட்ட நுண்ணிய இடையையுடைய தையலாகிய நல்லாள், நீ பிரிந்து செய்த பிழையை யான் சொல்லுவன் என்று நாணி நினது பழியைச் சொல்லாமல் என்னையும் மறைத்தாள் என்றவாறு.

எனவே, இங்ஙனம் அறிவுடையாளை நீ விரைந்து வரைந்து கொள்ளெனக் குறிப்பாற் கூறியவாறாயிற்று.

வனம் - நீர். நாண்முகை - மலர்தற்கு நாட்கொள்ளும் முகை. நாண் - பொன்னுண்; ஓர் - அணி விசேடம். வீசி - எறிந்து. கதித்தல் - பருத்தல். தனம் - முலை; தனத்துக்கு என நான்கனுருபு தொக்கது. (உ௫டு)

## குறிபெயர்த்திடுதல்:

குறிபெயர்த்திடுதல் என்பது, பாங்கி இக்குறி இயல்பல்ல, வேறோர் குறியிடை வருகவென்று கூறுதல்.

ஊரோர் பவரிங் குலாவவுங் கூடும்வந் தொண்சிலம்பா
வேரோர் பொதும்பிற் போய்விளை யாடுக வேற்படையான்
மாரோர் பகைவென்ற வாணன்றென் மாறையெம் மன்னுதவப்
பேரோர் வடிவுகொண் டாலன்ன நீயுமென் பேதையுமே.

(இ - ள்.) ஒள்ளிய சிலம்பை யுடையவனே! உறுதற்றொழிலை ஆராய்ந்து திரிபவர்கள் இக்குறியில் வந்து உலாவவுங் கூடுமாதலால், வேற்படையினாலே எதிர்ந்தோர் பகையைவென்ற வாணன் தென்மாறை நாட்டில் என்னுடைய நிலைபெற்ற தவப்பேறு ஒரு வடிவுகொண்டாலொத்த நீயும் என் பேதையும் வேறாகிய ஓர் சோலையிற்போய் விளையாடுக என்றவாறு.

எனவே, இக்குறிக்கண் வாரற்க எனக் குறிப்பால் வரைவு கடாதலாயிற்று.

ஊறு - உறுதல். ஓர்பவர் - ஆராய்பவர். உம்மை - எதிர் மறை, 'வந்திங்கு' என இயையும். பொதும்பர் - சோலை. மாறு - எதிர்; 'வாளிரண்டு மாறு வைத்தபோல் மழைக்கண் மாதரார்' எனப் பிறரும், 'மாறு' எதிராகக் கூறியவாறு உணர்க. (உ௫சு)

இத்துணையும் பன்னிரண்டாநாட் செய்தியென் றுணர்க.

பகல் வருவானை இரவுவருகென்றல்:

முத்தணி நீல மணித்தகட் டுள்ளெங்கு மொய்கொளவே
வைத்தணி சேர வகுத்தது போற்றஞ்சை வாணன்வையைப்
பைத்தணி வார்திரை தோய்கருந் தாட்புன்னைப் பாசிலைவெண்
டொத்தணி பூந்துறை வாவரு வாயிருள் தூங்கிடையே.

(இ - ள்.) முத்தினிரையை நீல நிறமாகிய நல்ல தகட்டுள் எங்குஞ் செறிவுகொள வைத்து ஒழுங்குசேர வகுத்ததுபோலத், தஞ்சைவாணனது வைகையாற்றிடத்துப், பைத்த அழகாகிய நெடிய அலை தோயப்பட்ட கரிய அடியையுடைய புன்னையினது பச்சிலையில் வெள்ளிய பூங்கொத்தணியப்பட்ட பொலிவினையுடைய துறைவனே, இருள் தூங்கப்பட்ட இடையாமத்து வருவாயாக என்றவாறு.

முத்தணி - முத்துநிரை. மொய்கொள் - செறிவுகொள். பைத்து - பைத்த. அணி - அழகு. வார்திரை - நெடியதிரை, கருந்தாள் - கரிய நிறத்தையுடைய அடி. பாசிலை - பச்சிலை. தொத்து - பூங்கொத்து. பூ - பொலிவு. இச்செய்யுளில் இறைச்சி கூறியவாறு உணர்க. (உ௩எ)

இரவு வருவானைப் பகல்வரு கென்றல்:

இறைவிளை யாடு மிளமுலை சாயற் கிடைநதமஞ்ஞை
கறைவிளை யாடுங் கடிப்புனங் காத்துங் கலையகலா
துறைவிளை யாடு முயர்சிலம் பாவின்னு முன்பொருட்டால்
மறைவிளை யாடு மதிற்றஞ்சை வாணன் மலயத்திலே.

(இ - ள்.) புயல் விளையாடும் மதில்சூழ்ந்த தஞ்சை வாணனது பொதிய மலையிடத்து மானைப்பிரியாது கலை விளையாடும் உயர்ந்த சிலம்பை யுடையவனே! இன்னும் உன் பொருட்டாகப் பூண் விளையாடப்பட்ட இளமுலையை யுடையாளது சாயலுக்கு இடையப்பட்ட மஞ்ஞை ஆங்கிடத்து விளையாடும் சிறந்த தினைப்புனத்தை யாங்கள் பகற்பொழுதிற் காப்போம், அங்கு வருவாயாக என்றவாறு.

இழை - ஆபரணம். சாயல் - இயல். இடைதல் - தோல்வி யடைதல். கழை - மூங்கில். கடி - சிறப்பு. 'உழையகலாது கலை விளையாடும்' என இனியும். 'மானைப் பிரியாது கலைவிளையாடும்' என்றதனால், நீயும் தலைவியைப் பிரியாது விளையாடுக என உள்ளுறை யுவமங் காண்க. (உ௯அ)

இத்துணையும் பதின்மூன்றுநாட் செய்தியென் றுணர்க.

பகலினு மிரவினும் பயின்றுவரு கென்றல்:

குரவுங் கணியும் விரவும்வெற் பாவெய்ய குஞ்சரமேல்
வரவுந் தியதெவ்வை மாற்றிய வாணன்தென் மாறைமின்னும்
அரவும் பணியு நுடங்கிடை யாற்றல ளால்பகலும்
இரவுங் குறிவயி னீவரல் வேண்டும் இவள்பொருட்டே.

(இ - ள்.) குரவமரமும் வேங்கைமரமும் ஒன்றோ டொன்று கலந்திருக்கும் வெற்பை யுடையானே! வெய்ய யானையின்மேல் வரவே நடத்திய பகையை மாற்றிய வாணன் தென்மாறை நாட்டில் மின்னும் அரவும் பணியப் பட்ட ஒசியும் இடையினையுடையாள் உன்னைப் பிரிந்து ஆற்றலள்; ஆதலால், இவள்பொருட்டுப் 'பகலினும் இரவினுங் குறியிடத்தில் நீ வரவேண்டும் என்றவாறு.

எனவே, ஓரறிவுயிராகிய மரங்களும் பிரியாது ஒன்றோ டொன்று கலந்திருக்கின்றமையால், ஆறறிவொடுகூடிய நீ பிரிந் திருக்கத் தகாது என்று உள்ளுறையுவமம் தோன்றியவாறு உணர்க.

குரவு - குரா. கணி - வேங்கை. விரவுதல் - கலத்தல். உந்தல் - நடத்தல். நுடங்கல் - ஒசிதல். நுடங்கிடை - அன்மொழித் தொகை. (உ௯௯)

பகலினு மிரவினும் அகலிவ ணென்றல்:

தாவாத செல்வந் தருந்தஞ்சை வாணன் தடஞ்சிலம்பா
நீவாரல் சார நிலவல ராம்பக னீடிருளார்
மாவா னிலவு நிலமங்கை வார்குழன் மல்லிகைபோல்
ஓவா திரவெறிக் குஞ்சோலை நீழலி னூடுவந்தே.

(இ - ள்.) தன்னை யடைந்தோர்க்குக் கேடில்லாத செல்வத்தைத் தரும் தஞ்சைவாணனது பெரிய சிலம்பை யுடையானே! பகலில்வரின் ; விளங்கப்பட்ட அலராம்; இரவில் வரின் நீண்ட இருளார்ந்த பெரிய வானிலவு, நில மங்கையது குழலின் முடித்த மல்லிகைப் பூப்போல, நீங் காது சோலை நிழலினுள்ளே வந்து எறிக்கும்; ஆதலால், சாரலிடத்து நீ வாரலை என்றவாறு.

தாவாத - கெடாத. நிலவுதல் - விளங்குதல். மா - பெருமை. வான் - ஆகாயம். நிலவு - நிலா. ஓவாது - நீங்காது. 'பகல் நில வலராம்' எனவும், 'இரவு நீடிருளார்' எனவும், 'வந்தே யெறிக்கும்' எனவும், 'சாரல் நீ வாரல்' எனவும் இயையும். சாரல் என்புழி ஏழனுருபு தொக்கது. (உ௬0)

உரவோன் நாடும் ஊரும் குலனும் மரபும் புகழும் வாய்மையும் கூறல்:

தலத்திற்கு மாறைக்கு மன்னவன் வாணன் தமிழ்த்தஞ்சைசூழ்
நிலத்திற்கு மாமணி யாகுநின் னாட்டிற்கு நின்பதிக்கும்
குலத்திற்கு மாசில் குடிமைக்குஞ் சீர்மைக்குங் கோதின்மெய்ம்மை
நலத்திற்கு மாவதன் றுல்வரை யாது நடப்பதுவே.

(இ - ள்.) புவிக்கும் மாறைக்கும் மன்னனாகிய வாண னது தமிழ்த்தஞ்சை சூழ்ந்த நிலத்திற்கும் மாமணியாகும் நின் நாட்டிற்கும் நின் பதிக்கும் நின் குலத்திற்கும் குற்ற மில்லாத நின் குடிமைக்கும் கீர்த்திக்கும் குற்றமில்லாத நினது வாய்மைக்கும் நீ செய்யும் நல்வினைக்கும் நீ வரை யாது நடப்பது ஆகும் முறைமை யன்று என்றவாறு.

உம்மைகள் - எண்ணின்கண் வந்தன. 'தலத்திற்கு மன்னவன்' என்பது அமையாதோ, 'மாறைக்கு மன்னவன்' என்னல் வேண் டுமோ எனின், மாறை தலைமுறைக்காணி யாதலாற் கூறினர். சீர்மை - சீர்த்தி. மெய்ம்மை - வாய்மை. நலம் - செய்யப்படும் நல்வினை. ஆல் - அசை. (உ௬க)

ஆறுபார்த்துற்ற அச்சங் கூறல்:

ஆறு பார்த்துற்ற அச்சங் கூறல் என்பது, வரும் வழியைக் கருதி அவ்வழியில் திரிதரும் விலங்காற் றோன்றும் அச்சங்கூறல்.

புராந்தகர் செஞ்சடை வெண்பிறை போனுதற் புள்ளிமிழ்பூங்
குராந்தொடை மென்குழற் கொம்பினை வேண்டிக் கொடிமுல்லைநீள்
மராந்தழு வுந்தஞ்சை வாணன்வெற் பாவல்சி தேர்ந்திலஞ்சிக்
கராந்திரி கல்லதர் வாயெல்லி நீவரல் கற்பலவே.

(இ - ள்.) முல்லைக் கொடியானது நீண்ட செங்கடப்ப மரத்தைத் தழுவிப்படரும் தஞ்சைவாணன் வெற்பனே! புராந்தகரது செஞ்சடையிற் சூடிய வெண்பிறை போன்ற நுதலையும், வண்டுகள் ஆரவாரிக்கும் பூங்குராமாலை யணிந்த மெல்லிய குழலினையும் உடைய கொம்பு போல்வாளை வேண்டி, நிலத்திற் குழியாய் ஆழ்ந்த நீர்நிலையிடத்து முதலைகள் இரைதேடித் திரியப்பட்ட கல்லதரினிடத்து இராக்காலத்து நீ வருவது முறைமை யன்று என்றவாறு.

புராந்தகர் - ஈசர். புள் - வண்டு. இமிழ்தல் - ஆரவாரித்தல். குராந்தொடை - குரவமாலை. கொம்பு - ஆகுபெயர். மராம் - செங்கடம்பு. 'மராந்தழுவும் வெற்பு' எனக் கூட்டுக. வல்சி - இரை. தேர்ந்து - தேடி. இலஞ்சி - குழிந்தாழ்ந்த நீர்நிலை. கராம்-முதலை. கல்லதர் - இருமருங்கும் நெருங்கிய வழி. எல்லி - இரவு. கற்பு - முறைமை.

ஓரறிவாகிய கடம்பு முல்லைக்கொடியைத் தழுவியதுபோல ஆறறிவொடுங் கூடிய உயர்பிறவியாகிய நீ கொடிபோல்வாளைத் தழுவுவாயாக என்று உள்ளுறையுவமங் கொள்ளக்கிடந்தவாறு உணர்க. (உசஉ)

### ஆற்ருத் தன்மை யாற்றக்கூறல் :

ஆற்ருத் தன்மை யாற்றக் கூறல் என்பது, தலைமகளது ஆற்ருத தன்மையை ஆற்றுதல்செய்யத் தலைவற்குக் கூறல் :

கலங்குந் தெளியுங் கனலெழ மூச்செறி யுங்கண்ணினீர்
மலங்கும் பொலந்தொடி சோரமெய் சோரு மறஞ்செய்கொலை
விலங்கும் படிறுசெய் யாக்குன்ற நாட விரைந்தளிப்பாய்
அலங்குங் கடும்பரித் தேர்வாணன் மாறை யணங்கினையே.

(இ - ள்.) விளங்கப்பட்ட கடிய வேகத்தையுடைய பரி பூட்டிய தேரையுடைய வாணன் மாறையின் மறமாகச்

செய்யுங் கொலைத்தொழிலையுடைய விளங்கும் களவுசெய்யாத மலைநாட்டை யுடையானே! கலங்கும், தெளியும், நெருப்பெழப் பெருமூச்செறியும், கண்களில் நீர்ததும்பும், பொன்னாற் செய்த தொடிகழல் மெய்யிளைக்கும் என்று சொல்லப்பட்ட அணங்குபோல்வாளை விரைந்து அளிப்பாயாக என்றவாறு.

அளியாவிடின் இறந்துபடும் என்பது தோன்றியவாறு. இவ்வாறு கூறவே, வரைந்துகொள்வாயென்று குறிப்பாற் கூறியவாறாயிற்று. மலங்கல் - ததும்பல். சோருதல் - கழலுதல். சோருதல் - இளைத்தல். மறம் - பாவம். கொலை - கொல்லுந் தொழில். விலங்கும் என்புழி உம்மை இழிவு சிறப்பு. படிறு - களவு. குன்றநாடு-மலைநாடு. அலங்கல் - விளங்கல். பரி - குதிரை. அணங்கு-ஆகுபெயர். புன்மையறிவாகிய விலங்கும் களவுசெய்யா எனவே மேலறிவாகிய நினக்கு வரையாது களவிலொழுகத் தகாதெனக் குறிப்பாற் கூறியவாறாயிற்று. (உசுங)

**காவல்மிக வுரைத்தல்:**

காவல்மிக வுரைத்தல் என்பது, குறியிடத்து நீ வருவதற்கும் அவள் வருவதற்கும் இடையூறாகிய காவல் மிக்கென்று கூறுதல்; மிகவுரைத்தல் - மிகவாயினது உரைத்தல்.

**நஞ்சா ரரவந் திரிதரு கானடு நாளிரவில்**
**அஞ்சாது செங்கை யயில்விளக் காவணங் கின்பொருட்டால்**
**மஞ்சார் மதிற்றஞ்சை வாணன்வெற் பாவரல் வன்சொலன்னை**
**துஞ்சாள் கடுந்துடிக் கைநகர் காவலர் துஞ்சினுமே.**

(இ - ள்.) முகில்கள் நிறைந்த மதில்சூழ்ந்த தஞ்சை வாணன் வெற்பில் உள்ளவனே! நஞ்சு பொருந்திய பாம்புகள் திரியப்பட்ட காட்டில் இடையாமத்தில் அச்சமின்றிச் செங்கையிலேந்திய வேலே விளக்காக அணங்குபோல்வாள் காரணமாக வாரற்க; அன்றி, நீ குறியிடத்தில் வருதற்கு இடையீடாகிய கொடுமையையுடைய துடி கொட்டித் திரியும் நகர்காவலர் துஞ்சார்; அவர் துஞ்சினும், தலைவி குறியிடத்தில் வருதற்கு இடையீடாகிய கடுஞ்சொல்லையுடைய அன்னை துஞ்சாள்; ஆதலால், நீ வரைந்து கொள்வாயாக என்றவாறு.

எனவே, வெளிப்படையாக வரைவு கூறியவாறு உணர்க. நடு நாள் இரவு - இடையாமம். அயில் - வேல். (உகச)

காமமிக வுரைத்தல்:

காமமிக வுரைத்தல் என்பது, தலைவி வேட்கை மிகவாயின துரைத்தல்.

தென்னாக வண்டமிழ் வாணன்தென் மாறைச் செருந்தியுடன்
புன்னாக முங்கமழ் பூந்துறை வாசுரர் போற்றமிர்தம்
பின்னாக முன்வந்த பேதைதன் காமப் பெருங்கடற்கு
நின்னாக மன்றியுண் டோபுணை யாவது நீந்துதற்கே.

(இ - ள்.) பொதியமலையிற் பிறந்த வளவிய தமிழைக் கற்ற வாணன் தென்மாறை நாட்டிற் செருந்திப்பூவுடன் புன்னாகப்பூவும் கமழப்பட்ட துறைவனே, சுரர் போற்றப்பட்ட அமுதம் பின்வர முன்னே தோன்றிய எங்கள் தலைவி ஆசையாகிய பெரிய கடலை நீந்துதற்கு மரக்கலமாவது நின் மார்பன்றி வேறுண்டோ என்றவாறு.

தென்னாகம் - பொதியமலை. வண்டமிழ் - வளவிய தமிழ். 'பூ' என்பதனைச் செருந்தியுடனும், புன்னாகத்துடனுங் கூட்டுக. சுரர் - தேவர். பேதை - திருமகள்; எனவே, தலைமகளைத் திருமகளாகக் கூறினார். ஆகம் - மார்பு. புணை - மரக்கலம். செருந்திப்பூவும் புன்னாகப்பூவுங் கூடிமணக்குந் துறைவனேயென்று கூறியவதனால், நீங்கள் இருவீரும் மணத்தொடு கூடியிருப்பீரென உள்ளுறையுவமம் தோன்றியவாறுணர்க. (உகரு)

கனவு நலிபுரைத்தல்:

கனவு நலிபு உரைத்தல் என்பது, தலைவிக்குக் கனவினால் வந்த துன்பத்தைப் பாங்கி தலைவற்கு உரைத்தல்.

மானாத தெவ்வென்ற வாணன்தென் மாறை வளநகர்போல்
பூனாக மெல்லியற் புல்லினை யாகவப் பொய்யைமெய்யாப்
பேனா மகிழ்ந்து பெருந்துயி லேற்றவள் பின்னைநின்னைக்
கானாள் கலங்கின ளாற்கலங் காமனக் காவலனே.

(இ - ள்.) கலங்காத மனத்தையுடைய காவலனே! மாட்சிமையில்லாத பகைவரை வென்ற வாணன் தென்

மாறை வளநகரைப்போன்ற பூண்பொருந்திய மார்பை யுடைய மெல்லியலைக் கனவினிடைத் தழுவினையாக, அந்தப் பொய்யை மெய்யாக விரும்பி மகிழ்ச்சியை யடைந்து பெரிய துயிலையுற்றவள் துயிலுணர்ந்த பின்பு நின்னைக் காணாளாய்க் கலங்கினள் என்றவாறு.

மாணாத - மாட்சிமையில்லாத. செவ் - பகை; ஆகுபெயர். பூணகம் - பூண்பொருந்திய மார்பு. மெல்லியல் - தலைவி. பேணி- விரும்பி. பேண - செய்யா என்னும் வினையெச்சம். ஆல் - அசை. 'பெருந்துயில் ஏற்றவள்' என்றதனால் கனவு வருவிக்கப்பட்டது. ()

கவினழிபுரைத்தல்:

கவின் அழிபு உரைத்தல் என்பது, தலைவி அழகு அழிந்த தனைத் தலைவற்குக் கூறுதல்.

ஏரேற்ற கொங்கை யிளங்கொடி மாந்தளி ரேய்ந்தவண்ணம்
காரேற்ற கங்குலிற் பீரலர் போன்றது காவியுண்கண்
வாரேற்ற பைங்கழல் வாணன்தென் மாறையில் வாவியின்கண்
நீரேற்ற செங்கழு நீர்மலர் போன்றது நின்பொருட்டே.

(இ - ள்.) தலைவனே! நின்பொருட்டு அழகு நிறைந்த கொங்கையையுடைய இளங்கொடி போன்றவளது மாந்தளிர்க்கு ஒப்பாகிய அழகு கருமைநிறைந்த இராக்காலப் பீர்க்கம்பூப்போன்றது; கருங் குவளைபோன்ற உண்கண், வார்கோத்துக் கட்டிய பைம்பொன்னாற் செய்த வீரக்கழல் புனைந்த வாணன் தென்மாறை நாட்டிலுள்ள வாவியிடத்துச் செங்கழுநீர் மலரில் நீர் நிறைய முகந்து கொண்ட மலர்போன்றது என்றவாறு.

ஏர் - அழகு. ஏய்தல் - ஒத்தல். வண்ணம் - அழகு. கார் - கருமை. பீர் - பீர்க்கு. அலர் - பூங்காவி, கருங்குவளை. வார் - கயிறு. கழல் - வீரத்தால் விருதாகக் காலிற் கட்டுவதோர் ஆபரண விசேடம். கருங்குவளை போன்ற கண், அழுதழுது சிவந்து நீர் கோத்த வதனால், நீர்முகந்த செங்கழுநீர்போன்றது என்றுகூறினர்.

'வினவிய செவிலிக்கு மறைத்தமை விளம்பல்' முதலாகப், 'பிறர்வரை வுணர்த்தல்' ஈருகக்கூறிய ஐந்தும் பொய்த்தற்குரியன. 'குறிபெயர்த்திடுதல்' முதலாகப் 'பகலினுமிரவினும் அகலிவணென்

றல்' ஈருகக்கூறிய ஐந்தும் மறுத்தற் குரியன. 'உரவோன் நாடும் ஊரும் குலனும் மரபும் புகழும் வாய்மையும் கூறல்' ஒன்றுங் கழ றற்குரித்து. 'வரைவெதிர் வுணர்த்த'லும், 'வரையுநா ளுணர்த்த' லும், 'அறிவறி வுறுத்த'லும், 'ஆறுபார்த்துற்ற வச்சங்கூற'லும், 'ஆற்ருத்தன்மை யாற்றக்கூற'லும், 'காவன் மிகவுரைத்த'லும், 'காம மிக வுரைத்த'லும், 'கனவு நலிபுரைத்த'லும், 'கவினழிபுரைத்த'லும் ஆகிய ஒன்பதும் மெய்த்தற்குரியன. இவை எல்லாங் குறிப்பி னுனும் வெளிப்படையானும் வரைவு கடாவியவாறு உணர்க.

வரைவுகடாதல் முற்றிற்று.

---

## கஎ. ஒருவழித் தணத்தல்

அஃதாவது, கூறிய பாங்கியொடு வரைதற்குடன்பட்ட தலைவன் தன்னூர்க்கு ஒருவழி போய்வருகிறேனென்று போதல்.

[1] 'செலவறி வுறுத்தல் செலவுடன் படாமை
செலவுடன் படுத்தல் செலவுடன் படுதல்
சென்றுழிக் கலங்கல் தேற்றியாற் றுவித்தல்
வந்துழி நொந்துரை யெனவெழு வகைத்தே
ஒன்றக் கூறிய வொருவழித் தணத்தல்.'

என்னுஞ் சூத்திரவிதியால் ஒருவழித்தணத்தல் எழுவகைப்படும்.

தன்பதிக் ககற்சி தலைவன் சாற்றல் :

திரைகே தகைமணங் கூடுமெம் பாடியிற் சென்றுவந்தியான்
வரைகேன் வருந்துணை வல்லியை நீதஞ்சை வாணன்செவ்வேல்
புரைகேழ் மதர்விழிக் கோங்கரும் பேர்முலைப் பூசல்வண்டு
நிரைகேச வஞ்சியஞ் சேலென்று தேற்றுதல் நின்கடனே.

(இ - ள்.) தஞ்சைவாணனது செவ்வேலையொக்கும் நிறம் பொருந்திய மதர்த்த விழியையும் கோங்கரும்பு போன்ற அழகிய முலையையும் ஆரவாரிக்கும் வண்டு நிரை யாயிருக்குங் கேசத்தையும் உடைய வஞ்சிபோன்றவளே! திரையானது தாழம்பூ மணத்தைக் கூட்டும் எம் ஊரில்

1. அகப்பொருள் விளக்கம், களவியல் - ருo.

யான் சென்று வந்து வரைவேன்; வருமளவும் நீ வல்லியை அஞ்சலென்று தேற்றுதல் நின் கடன் என்றவாறு.

திரை - அலை. கேதகை - தாழை. பாடி - ஊர். கேழ் - நிறம். மதர்விழி - மதர்த்த விழி. பூசல் - ஆரவாரம். கேசம்-அளகம். கடன் - முறைமை. அகற்சி - பிரிவு. (உசஅ)

பாங்கி விலக்கல் :

பறந்தாங் கிவர்பரித் தேர்கட வேலுன் பதியடைந்தால்
மறந்தாங் கமையவும் வல்லையன் பாதஞ்சை வாணனென்னர்
நிறந்தாங் கிவர்கணை போலுண்கண் மாமுகி னீர்மைகொண்டு
புறந்தாழ் கருங்குழல் வெண்முத்த வாணகைப் பொன்னினையே.

(இ - ள்.) அன்பனே! நின் ஊர்க்குப்போய்ச் சேர்ந்தையானால், தஞ்சைவாணன் ஒன்னார் மார்பு தாங்க இவருங் கணையையொக்கும் உண்கண்ணையும், முகிலினது தன்மையைக்கொண்டு புறத்திலே தாழப்பட்ட கருங் குழலையும், வெண்முத்தம்போன்ற ஒளிபொருந்திய நகையையுமுடைய பொன்னையொப்பாளை மறந்து அவ்விடத்தி லிருக்கவும் வல்லையாதலால், பறந்தாற்போற் செல்லும் பரிபூண்ட தேரைச் செலுத்தாது ஒழிவாயாக என்றவாறு.

ஆங்கு - உவமவுருபு. இவர்தல் - செலுத்தல். கடவுதல் - செலுத்துதல். ஆங்கு - அவ்விடம். அமைதல் - அமைந்திருத்தல். நிறம் - மார்பு. இவர்தல் - ஏறுதல். வாள் - ஒளி. பொன் - ஆகுபெயர். (உசக)

தலைவனீங்கல் வேண்டல் :

தலைவன் நீங்கல் வேண்டல் என்பது, தலைவன் பாங்கியுடன் படுத்தி நீங்கற்பொருட்டு வேண்டிக் கூறல்.

அறையும் பொறையு மணந்தவெங் கானத் தணங்கையில்லைத்
திறையும் பிரிவதற் கெண்ணுகி லேனெண்ண லார்வரைமேல்
மறையும் படிவென்ற சந்திர வாணன்தென் மாறையில்வண்
டுறையுங் குழலிசென் றேவரல் வேண்டுமெம் மூரகத்தே.

(இ - ள்.) பகைவர் மலைமேல் மறைந்தொழியும்படி வென்ற சந்திரவாணன் தென்மாறை நாட்டிலிருக்கின்ற

வண்டுறையுங் குழலி! அணங்கை இல்லிடத்து வைத்து, அறையும் பொறையுங் கூடிய வெவ்விய காட்டகத்து இறைப்பொழுதும் பிரிவதற் கெண்ணுகிலேன்; எண்ணிய தென்னெனில், ஓர் காரியத்தால் எம் ஊரகத்துப் போய் வரல்வேண்டும் என்றவாறு.

அறை - கற்குகை. பொறை - துறுகல். மணத்தல் - கூடுதல். இறை - ஆகுபெயர். எண்ணலார் - பகைவர். வரை - மலை. மலர் மணங்கொள்ளுங் காரணத்தால் வண்டுறைவதெனக் கொள்க. (உ௱௰)

## தலைவனைப் பாங்கி விடுத்தல்:

தலைவனைப் பாங்கி விடுத்தல் என்பது, பாங்கி தலைவனை ஊர்க்குப் போய்வருகவென விடுத்தல்.

**இல்லத் துறையு மிவள்பொருட் டானுமக் கியானுமொன்று**
**சொல்லத் தவிர்கிலன் சூழ்கழ லீர்சுடர் தோய்புரிசை**
**வல்லத் தமர்வென்ற வாணன்தென் மாறையில் வந்துவந்து**
**செல்லத் திருவுளம் வைத்தகல் வீர்நுந் திருநகர்க்கே.**

(இ - ள்.) அணிந்த கழலையுடையீர்! இல்லிலிருக்கும் இவள்பொருட்டால் நுமக்கு யானும் ஒரு சொற்சொல்லத் தவிராது சொல்லவேண்டிய தாதலாற் சொல்கின்றேன்: கதிரோனைத் தீண்டும் மதில் சூழ்ந்த வல்லமென்னும் நகரில் அமரை வென்ற வாணன் தென்மாறையில் வந்து வந்து போகத் திருவுள்ளம் வைத்து உம்முடைய திருநகர்க்குச் செல்லுவீர் என்றவாறு.

முல்லை யுரிப்பொருள் - இருத்தல்; 'இல்லத்து உறையும்' என்று கூறியது. சூழ்தல் - அணிதல். சுடர் - கதிரோன். புரிசை-மதில். வல்லம் - ஓரூர். வந்து வந்து என்பது, விரைவின்கண் வந்த அடுக்கு. (உ௱௰௧)

## பாங்கி தலைவிக் கவன்செல வுணர்த்தல்:

**நிலவேய் தரள நிரைத்தன்ன வாணகை நீலநிறக்**
**குலவேய் நிகர்பொற் றொடிநெடுந் தோளி குறுகிவரச்**
**செலவே கருதினர் செந்தமிழ் வாணன் செழுங்கமலத்**
**தலவே தியன்பெறு நாள்பெற்று வாழ்பவன் தஞ்சையிலே.**

(இ - ள்.) நிலவுபொருந்திய முத்தங்களை நிரைத்தா லொத்த ஒளிபொருந்திய நகையினையும், நீலநிறத்தை யுடைய விசேடமாகிய வேய்க்கு நிகராகிய பொற்றொடி யணிந்த நெடிய தோளையும் உடையாய்! நம் அன்பராயி னார் செழுங்கமலத்தை இடமாகவுடைய பிரமன் பெறும் வாழ்நாளைப் பெற்று வாழ்பவனாகிய செந்தமிழ் வாணனது தஞ்சாக்கூரிற் கடுகிவரச் செலவே கருதினர் என்றவாறு.

நிலவு - ஒளி. எய்தல் - பொருந்துதல். தாளம் - முத்தம். வேதியன் - பிரமன். பிரமன் பெறுநாள் சதுர்யுக மிரண்டாயிரம் வட்டந் திருப்பின் ஒரு நாள்; அந்த நாட் கணக்கில் ஆண்டு நூறென்று உணர்க. (உ௩உ)

தலைவி நெஞ்சொடு புலத்தல்:

குளித்தா ரிளங்கொங்கை யாவியி லாவி குளிர்ப்பநம்மை
அளித்தா ரளித்தக லத்தணைத் தாரன் றணங்கின்முன்னே
தெளித்தார் செழுந்தஞ்சை வாணனொன் னாரினஞ் சிந்தைநைய
ஒளித்தா ரவரிங்ங னேநன்று நன்றிவ் வுலகியலே.

(இ - ள்.) அன்பராயினார் இளங்கொங்கை யாகிய வாவியிற் குளித்தார், விரகக் கனலால் வெதும்பிய நம் ஆவி குளிர்ச்சியையடைய நம்மை யளித்தார், அளித்து, மார்பிடத்து அணைத்தார், இயற்கைப்புணர்ச்சி கூடியஅன்று அணங்கின் முன்னே பிரியேன் என்று தெளியச்செய்தார், செழுமையையுடைய தஞ்சைவாணனுக்கு ஒன்னாரைப் போல் நம்முடைய சிந்தை நைய வொளித்தார் அவர்; இவ் விடத்து இவ்வுலகியல் நன்று நன்று என்றவாறு.

தலைவன்மேற் குறையை உலகின்மேல் வைத்துக் கூறினாள். 'நன்று நன்று' என்பது குறிப்புமொழி. ஆவி - வாவி. ஆவி - உயிர். தெளித்தல் - தெளியச் சொல்லுதல். ஒன்னார் - பகைவர். இன் - உவமப்பொருட்கண் வந்தது. புலத்தல் - நொந்துகூறல். (உ௩௩)

இத்துணையும் பதினொன்காநாட் செய்தியென் றுணர்க.

## சென்றோ னீடலிற் காமமிக்க கழிபடர்கிளவி :

சென்றோன் நீடலிற் காமமிக்க கழிபடர் கிளவி என்பது, தலைவன் மாலைக்காலமளவும் வாராது வரவு நீடித்தலாற் காம மிகுந்தவதனால் மிகுந்த நினைவொடு கூடிய சொல்.

மயிலாடு தண்டலை மாறை வரோதயன் வாணனொன்னார்க்
கெயிலா கியகடற் கானலஞ் சேர்ப்பற் கிடையிருள்யான்
துயிலா நிலையொன்றுஞ் சொல்லாய் துணையுடன் சூழ்திரைத்தேன்
பயிலா மலரணை மேற்றுயி லாநிற்றி பாலன்னமே.

(இ - ள்.) வெண்மை நிறம்பொருந்திய அன்னமே! மயிலாடப்பட்ட சோலைசூழ்ந்த மாறைநாட்டின் வரோதயனாகிய வாணன் பகைவர்க்கு அரணாயிருக்கப்பட்ட கடற் கழிக் கரையையுடைய சேர்ப்பற்கு இடையிருளில் யான் துயிலாநிலை யொன்றுஞ் சொல்லாய்; நீயோ துணைபிரியாமல் திரை சூழத்தக்கதாகத் தேன்செறிந்த அம்மலரணை மேல் துயிலாநின்றாய்; இது நினக்குத் தகாது என்றவாறு.

'துணையுடன் திரைசூழ் மலரணைமேல் துயிலாநிற்றி' எனவே, தான் அவையின்றி யிருக்கின்றேனென்று கூறியவாறு உணர்க.

தண்டலை - சோலை. ஒன்னார் - பகைவர். எயில் - அரண். வாணன் ஒன்னாரை நாட்டிலிருக்கவொட்டா னாதலால் அவர் கடலேறிச் செல்வர், அதனால் கடல் அவர்க்கு அரணாயிற்று. கானல்- கழிக்கரை. இடையிருள் - இடையாமம். பயிலுதல் - செறிதல். பாலன்னம் - வெள்ளையன்னம். 'சேர்ப்பன்' என்று தலைவனைக் கூறியவதனால் ஐந்திணையிற் களவிப்பொருளெத்திணை கூறவேண்டுமோ அத்திணைக்குரிய தலைவனும் தலைவியுமாகக் கூறுதல் இலக்கணமாதலின், இத் தலைவனும் தலைவியுமே கூறப்பட்டு வருவர்; வேறு தலைவனும் தலைவியும் அல்லர் எனக் கொள்க.

இவ்வாறு உளம் முதலியவற்றொடு கூறியும் புலம்பியும் அழுதும் பெறும் பயன் யாதோவெனின், மூடிவைத்து வேங்கலத்தை வாய்திறக்கில் ஆவிபோதலால் உட்புழுக்கஞ் சிறிது தணியுமென்றுணர்க. (உ௫௪)

## தலைவியைப் பாங்கி யாற்றுவித்தல் :

தலைவியைப் பாங்கி ஆற்றுவித்தல் என்பது, பாங்கி தலைவிக்குத் துயர் ஆறும்படி கூறல்.

ஆடுகம் வாநம் மகன்றவ ரூரக லாப்புதுநீர்
பாடுகம் வாபொற் பசலைதந் தார்திறம் பாங்கினெல்லாம்
தேடுகம் வாதஞ்சை வாணனன் னாட்டன்பர் தேர்வழிநாம்
சூடுகம் வாகவ லாதவர் கானற் றுறைமலரே.

(இ - ள்.) நம்மை யகன்று அவரூரை யகலா வெள்ள நீரில் ஆடுகம் வா, பொற்பசலையை நமக்குத் தந்தவரது வெற்றியைப் பாடுகம் வா, தஞ்சைவாணன் நன்னாட்டி லுள்ள அன்பர் தேர் சென்ற வழிப்பக்கமெல்லாங் கவற்சி யில்லாது தேடுகம் வா, அவர் கானற்றுறைமலரைச் சூடுகம் வா, அஞ்சலை என்றவாறு.

தலைவி - முன்னிலையெச்சம். 'அஞ்சலை' என்பது வருவிக்கப் பட்டது. கானற் றுறை மலர் - கழிக்கரைத் துறைமலர். திறம் - வெற்றி. (உரு௫)

இத்துணையும் பதினைந்தாநாட் செய்தியென் றுணர்க.

தலைவன் வந்தமை பாங்கி யுணர்த்தல்:

பண்ணுங் குழலும் பழித்தசொற் பாவை பரியலெல்லா
மண்ணும் புகழ்தஞ்சை வாணனொன் னாரென மைக்குவளைக்
கண்ணும் கனையிருட் கங்குலு மாரன் கணைகள்பட்ட
புண்ணும் புலரவந் தார்தம தூர்வயிற் போனவரே.

(இ - ள்.) பண்ணிசையும் யாழிசையும் பழித்த சொல்லையுடைய பாவைபோல்வாய், எல்லா வுலகும் புகழ்கின்ற தஞ்சைவாணன் ஒன்னாரென மைக்குவளைபோன்ற கண்ணில் நீரும், செறிந்த இருளொடு கூடிய இராக்காலமும், மாரன் கணைகள்பட்ட புண்ணும் புலரத் தமது ஊரிடத்துப் போனவர் வந்தார், ஆதலால் நீ வருந்தலை என்றவாறு.

குழல் - யாழ். பாவை - ஆகுபெயர். கண்ணிடத்து நிகழ் பொருளின் தொழில் இடத்துமேல் நின்றது. புலர - என்பது இறுதிவிளக்கு. உம்மைகள் எண்ணின்கண் வந்தன. 'போனவர் வந்தார்' என இயையும். (உ௫௬)

### வந்தோன் தன்னொடு நொந்து வினதல் :

வந்தோன் தன்னொடு நொந்து வினதல் என்புழி, நொந்து-துன்பப்பட்டு ; வினதல் - நினைந்து வினதல்.

**ஒருதலைக் கெய்திய கல்லதர்க் குச்செல்ல வோருயிர்த்தாய்**
**இருதலைப் புள்ளி னியைந்தநுங் கேண்மையை யெண்ணியெம்மூர்**
**வருதலைக் கொண்க நினைந்திலை வாணன்தென் மாறைவண்டு**
**பொருதலைக் குங்குழ லாளழ நீகண்டு போயபின்னே,**

(இ - ள்.) கொண்கனே ! நீ கல்பொருந்திய வழியிற் செல்ல வாணன் தென்மாறையில் வண்டு ஒன்றோடொன்று பொருது மாலையை யலைக்குங் குழலாளை அழக்கண்டு போயினபின், ஒருதலையாய்ப் பொருந்திய ஓர் உயிரை யுடைத்தாய் இருதலைப்புட்போ லியைந்த உம்முடைய வுறவை யெண்ணி எம் ஊரிடத்து வருதலை நினைந்திலை என்றவாறு.

'ஒருதலைக் கெய்திய ஒருயிர்த்தாய்' எனவும், 'கல்லதர்க்குச் செல்ல வண்டு பொருதலைக்குங் குழலாள்' எனவுங் கூட்டுக. ஒருதலை - நிச்சயம். கல்லதர் - கல்வழி. எய்தல் - பொருந்தல். கேண்மை - உறவு. (உ௱௭)

### தலைவன் பாங்கியொடு நொந்து வினதல் :

நொந்து வினதல்-எவ்வண்ணம் ஆற்றியிருந்தீரென்று வினதல்.

**ஐவா யரவுற்ற தன்னவின் னுவிட ராற்றியென்போல்**
**எவ்வா றிருந்திர்நீ ரெல்வளை யீரெதிர்ந் தாரைவென்று**
**மைவா ரணங்கொண்ட வாணன்தென் மாறை மருவலர்போல்**
**ஒவ்வா வலரையுங் கேட்டிரு வீரு மொருதனியே.**

(இ - ள்.) ஒளிவளையீர் ! எதிரேற்ற பகைவரை வென்று அவரேறி வந்த கரிய யானையை வாங்கிவந்த வாணனது தென்மாறை நாட்டை வந்து சேராதவர் போலப் பொருந்தாத பழிச்சொல்லையுங் கேட்டு இருவீரும் ஒரு தனியே ஐந்தலையரவு தீண்டியதேயொத்த பொல்லாத்

துன்பத்தைப் பொறுத்து என்னைப்போல நீர் எவ்வாறிருந்தீர்; இருந்தவகையைச் சொல்லவேண்டும் என்றவாறு.

ஐவாயரவு - ஐந்தலைநாகம். இன்னா இடர் - ஐம்புலனால் வரும் பொல்லாத துன்பம். யான் இத்துன்பம் அனுபவித்திருந்தேன் என்பது தோன்ற, 'என்போல்' என்றார். எல்வளை - ஒளிவளை. மருவலர் - அடையாதவர். அலர் - பழி. ஒருதனி - ஒப்பற்றதனி. நொந்து வினாதல் - எவ்வண்ணம் ஆற்றியிருந்தீர் என்று வினாதல். (உ௫அ)

தலைவியை யாற்றுவித்திருந்த அருமை கூறல் :

இவளா ருயிர்புரந் தியானிருந் தேன்செக்க ரிந்துவன்ன
பவளா டவியிற் பயிலுநித் திலம்பங் கயங்குவியத்
தவளா தவஞ்சொரி தண்டுறை வாதஞ்சை வாணன்தெவ்வின்
துவளாம லாற்றுவி யென்றன்று நீசொன்ன சொல் நினைந்தே.

(இ - ள்.) செக்கர்வானத்துத்தோன்றிய பிறையைப் போலப் பவளக் காட்டில் நெருங்கிய நித்திலம் தாமரை குவிய வெள்ளைக்கிரணஞ் சொரியப்பட்ட தண்டுறைவனே! தஞ்சைவாணன் பகையைப்போலத் தலைவி மனந் துவளாமல் ஆற்றுவி யென்று நீ பிரிந்து போங்காற் சொன்ன சொல்லை நினைந்து இவள் அரிய வுயிரை நீங்காமல் யான் காத்திருந்தேன் என்றவாறு.

புரத்தல் - காத்தல். செக்கர் - செம்மாலை. இந்து - பிறை. நித்திலம் - முத்து. தவளாதவம் - வெண்கிரணம். (உ௫௯)

இவற்றுள், 'தன்பதிக் ககற்சி தலைவன் சாற்ற'லும், 'பாங்கி தலைவிக் கவன்செல வுணர்த்தலும்' ஆகிய இரண்டும் செலவறிவுறுத்தற்கு உரியன. 'தலைமகனைப் பாங்கி விலக்கல்' ஒன்றும் செலவுடன் படாமைக்குரித்து. 'நீங்கல் வேண்டல்' செலவுடன் படுத்தற் குரித்து. 'பாங்கிவிடுத்தல்' செல வுடன்படுதற்குரித்து. 'தலைமகள் நெஞ்சொடு புலத்த'லும், 'காமமிக்க கழிபடர் கிளவி' யும் ஆகிய இரண்டுஞ் சென்றுழிக் கலங்கற்குரியன. 'தலைமகளை யாற்றுவித்த'லும், 'தலைமகன் வந்தமை தலைமகட்குணர்த்த'லும் ஆகிய இரண்டும் தேற்றியாற்றுவித்தற்கு உரியன. 'பாங்கி வந்தோன் றன்னொடு நொந்து வினாதல்' முதல் மூன்றும் வந்துழி நொந்துரைத்தற்கு உரியனவெனக் கொள்க.

ஒருவழித் தணத்தல் முற்றிற்று.

## கஅ. வரைவிடைவைத்துப் பொருள்வயிற்பிரிதல்

அஃதாவது, வரைவை இடையிலென வைத்து வரைதற்கு வேண்டும்பொருள் காரணமாகப் பிரிதல்.

தலைவன் வரைதற்குப் பொருட்காரணமாகப் பிரிந்தான் எனின் பொருளிலனுயிற்று. ஆகவே, பொருவிறந்தான் என்பதனோடு மாறுகொள்ளுமெனின், மாறுகொள்ளாது. பழங் கிடையாய்க் கிடைக்குஞ் செம்பொருள் பலவுளவேனும் அதனையெடுத்து நுகர்வோன் சிறியனுதலானும், ஆள்வினையுடையன் அல்லனெனப் படுதலானும், இவன் தன் ஊக்கத்தா லீட்டிய பொருளைப் பலவாற்ருனும் நுகர்தல் உத்தம விலக்கணமென்று கருதிப் பொருள்வயிற் பிரிந்தானென்று உணர்க.

> [1] 'பிரிவறி வுறுத்தல் பிரிவுடன் படாமை
> பிரிவுடன் படுத்தல் பிரிவுடன் படுதல்
> பிரிவுழிக் கலங்கல் வன்புறை வன்பொறை
> வரும்வழிக் கலங்கல் வந்துழி மகிழ்ச்சியென்
> றொருமையிற் கூறிய வொன்பது வகைத்தே
> வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிவே.'

என்னுஞ் சூத்திர விதியால், வரைவிடை வைத்துப் பொருள் வயிற் பிரிதல் **ஒன்பது வகைப்படும்.**

என் பொருட் பிரிவுணர்த் தேந்திழைக் கென்றல் :

**கழைபோல் வளர்நெற் கவின்பெற வாரி கவர்ந்துவரும் [பில்**
**மழைபோல் வருகுவன் வன்சுரம் போய்த் தஞ்சை வாணன்வெற்**
**இழைபோ லிடையாள் முலைவிலைக் காவன யாவையுங்கொண்**
**டுழைபோ லரிநெடுந் தண்மபி லேசென் றுணர்த்திதுவே.**

(இ - ள்.) மான்போன்ற செவ்வரி பரந்து நீண்ட கண்ணையுடைய மயில் போன்றவளே, வலிய சுரத்திடைப் போய்த் தஞ்சைவாணன் வெற்பிலிருக்கும் நூல்போன்ற இடையாள் முலைவிலைக்கு ஆகவேண்டிய பொருள்களெல் லாங்கொண்டு, கரும்புபோல் வளரப்பட்ட நெல் அழகு பெற நீர் கவர்ந்து கொண்டுவரும் முகில்போல், யான்

1. அகப்பொருள் விளக்கம், களவியல் - ருஅ.

வருவல், நீ தலைவி பக்கற்போய்ப் பிரிவைச் சொல்வாயாக என்றவாறு.

எனவே, தலைவி நெற்பயிராகத் தான் முகிலாகவும், பொருள் நீராகவும், அப்பொருளைக் கண்டு தலைவி மகிழ்ச்சியாற் கரும்பு போல் வளர்வதாகவும் உள்ளுறையுவமங் கொள்ளக் கிடந்தவாறு காண்க.

யான் என்றது தோன்று எழுவாய். கழை-கரும்பு. கவின் - அழகு. வாரி - நீர். கவர்தல் - வாங்கல். மழை - முகில். சுரம்- வழி. இழை - நூல். உழை - மான். அரி - செவ்வரி. மயில் - சிறப்புருவகம். (உகூ0)

பாங்கி நின்பொருட் பிரிவுரை நீயவட்கென்றல்:

வசையும் புகழுநின் மேலள வாந்தஞ்சை வாணன்வெற்பா
மிசையுங் கரும்பினில் வேம்புவைத் தாலன்ன வேட்கையெல்லாத்
திசையும் பரவுந் திருவனை யாள்தன் றிருவுளத்துக்
கிசையும் படிவல்லை யேற்சொல்லி நீபின் எழுந்தருளே.

(இ - ள்.) தஞ்சைவாணன் வெற்பனே! வசை வரினும் புகழ்வரினும் நின்பக்கலாம்; நின் பொருள் வேட்கை நுகரும் கரும்பிற் கைக்கும் வேம்பை வைத்தா லொக்கும்; எல்லாத் திசையி லுள்ளோரும் துதிக்குந் திருவையொப்பாள் தன் திருவுள்ளத்திற்குப் பொருந்தும் படி சொல்லவல்லையேல் சொல்லி, நீ பின் எழுந்தருள்வாயாக என்றவாறு.

வசை - இகழ்ந்து கூறப்படுஞ் சொல். புகழ் - புகழ்ந்து கூறப் படுஞ் சொல். மிசைதல் - நுகர்தல். இசைதல் - பொருந்துதல் (உகூக)

நீடேனென்றவனீங்கல்:

நீடேன் என்று அவன் நீங்கல் என்பது, தலைவன் நீட்டித் திராது விரைந்து வருவலென்று பாங்கியொடு கூறி நீங்குதல்.

காலைப் பொழுது கடும்பரித் தேர்பண்ணிக் கானகம்போய்
மாலைப் பொழுது வருதுவல் யான்றஞ்சை வாணனன்னுட்
டாலைப் பழன மணிந்தவெம் மூர்நும் மகங்குளிரச்
சோலைப் பயில்குயில் போன்மொழி யாயென் றுணிவிதுவே.

(இ - ள்.) சோலையிடத்துப் பழகுங் குயில்போல் மொழியாய்! கதிரோன் உதிக்குங் காலத்திற், கடுகிச் செல்லும் பரியையுடைய தேரைப் பண்ணமைத்துத் தஞ்சை வாணன் நன்னாட்டிடத்துக் கரும்பு வளர்ந்தெழுந்த வயல் சூழ்ந்த எம் ஊர்க்கு, கானகங் கடந்துபோய், நும் அகங் குளிரக் கதிரோன் மறையும் மாலைக்காலத்தில் யான் வருகுவல், என் மனத்தின்கண் துணிவிது என்றவாறு.

தேர் பண்ணல்-தேர் செலுத்தற்கு உரியன வெல்லாம் அமையச் செய்தல். ஆலைப்பழனம் - கருப்பம்வயல். கடும்பரி - கடுகிச்செல்லும்பரி. 'காலைப்பொழுது கடும்பரித் தேர்பண்ணிக், கானகம் போய் மாலைப்பொழுதில் வருகுவல் யான்' எனில், 'வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிவோ ரிருதுவின் கண்ணுடைத் தென் மனார் புலவர்.' என்னுஞ் சூத்திரத்தொடு மாறுகொள்ளுமே யெனின் அற்றன்று; காலைப் பொழுதிற்போய் மாலைப் பொழுதில் வருகுவன் எனப் பாங்கி கருதத் தன் கருத்தில் வருஞான்று மாலைப் பொழுதில் வருவதாய் எண்ணித் தலைவன் கூறியவாறென்க.

இக் கருத்தானே யன்றி, தலைவன் மீண்டு வருங்கால், 'பாகனோடு சொல்லல்' என்னுங் கிளவிச்செய்யுளில், 'சென் மாலையந்திகண் டால்தரி யாளென் றிருந்திழையே' [தஞ். கோவை-உஎச] எனக் கூறியதூஉமெனக் கொள்க. (உசுஉ)

பாங்கி தலைவிக் கவன்செல வுரைத்தல் :

வில்லேய் குறும்பு மிரும்புமெவ் வாயும் விராயவெவ்வாய்க்
கல்லேய் கவலைக் கடங்கடந் தார்தமர் காய்ந்தெதிர்ந்தார்
செல்லேய் [1]முரசச் செருவென்ற வாணன்தென் மாறையினின்
வல்லேய் முலைவிலை தாந்தந்து நாளை மணம்பெறவே.

(இ - ள்.) சினந்து எதிர்ந்தார் இடிக்கொப்பான பல்லியம் முழக்கும் போரை வென்ற வாணன் தென்மாறை நாட்டில் நினது வல்லுக் கொப்பான முலைவிலை தந்து நாளை மணம்பெற வேண்டுமென்பது கருதி, நம் அன்பர், விற்கள் சாத்தியிருக்கின்ற குறும்பும் சிறு மலைகளும் எவ்விடமுங் கலந்து, நடப்போர் கால்களை யறுக்கும் வெவ்விய வாய்களை

1. 'களிற்று' என்பதும் பாடம்.

யுடைய கற்களும் பொருந்திய கவர்வழியையுடைய காட்டைக் கடந்தார் என்றவாறு.

குறும்பு - பாலைநிலத்து வேடரிருக்கும் ஊர். இறும்பு - சிறுமலை. கவலை - கவர்வழி. கடம் - காடு. செல் - இடி. வல் - சூது. (உ௬௩)

பூங்குழை யிரங்கல் :

பூங்குழை இரங்கல் என்பது, தலைமக ளிரங்கல்.

இப்பே ருவகை யினிப்பிரி யேனென்றும் என்முன்சொன்ன
அப்பே ருரைபழு தாமென்ன வேயர வஞ்சுமந்த
மைப்பேர் அலைகடல் வையகந் தாங்கிய வாணன்தஞ்சை
செப்பேர் இளங்கொங்கை மங்கைசெப் பாதன்பர் சென்றதுவே.

(இ - ள்.) பாம்பு ஆயிரந் தலையாற் சுமக்கப்பட்ட நீலநிறப் பெரிய அலைகடல் சூழ்ந்த புவிப்பாரத்தைத் தாங்கிய வாணனது தஞ்சையி லிருக்குங் கடைந்த செப்புப் போன்ற இளங்கொங்கையையுடைய நங்காய்! அன்பர் என்னுடன் சொல்லாது சென்றது, இயற்கைப்புணர்ச்சியிற் கூடிய ஞான்று இப்பெரிய மகிழ்ச்சியை இனிப் பிரியேனென்று என்முன் சொன்ன அப் பெரியசொல் பிரிவலென்று சொல்லிற் பழுதாமென்றோ என்றவாறு.

இவ்வாறு தலைவனை அசதியாடுதல்போல், 'கூறிய வுரையை மறந்தார்' என்று, குறிப்புத்தோன்ற இரங்கிக் கூறினளென்க. உவகை - மகிழ்ச்சி. உம்மை - அசைநிலை. மங்கை - அண்மை விளி. (உ௬௪)

பாங்கி கொடுஞ்சொற் சொல்லல் :

பாங்கி கொடுஞ்சொல் சொல்லல் என்பது, இவ்வாறு நீ யிரங்குவது என்னையென்று கழறிக்கூறல்.

ஆரணத் தானருள் பாரளித் தானடங் காதவரை
வாரணத் தால்வென்ற வாணன்தென் மாறை வயங்கொளிசேர்
பூரணத் தார்மதி போன்முகத் தாயென் புலம்புதிநின்
காரணத் தால்ல வோபிரிந் தாரின்று காதலரே.

(இ - ள்.) பிரமனால் உண்டாகிய நிலவுலகத்தைக் காத்துப் பகைவரை யானைப்படையால் வென்ற சந்திர வாணன் தென்மாறை நாட்டில் விளங்கிய ஒளிசேர்ந்த பூரணைத் திதியினாலே நிறைந்த மதிபோன்ற முகத்தாய்! ஏன் புலம்புகின்றாய்; நின்னை மணம்புணர் காரணத்தால் அல்லவோ காதலர் இன்று பிரிந்தார் என்றவாறு.

ஆரணத்தான் - பிரமன். பூரணை - பூரணைத்திதி. (உசுரு)

### தலைவி கொடுஞ்சொற் சொல்லல்:

தலைவி கொடுஞ்சொல் சொல்லல் என்பது, கழறிய பாங்கியை மனத்தினால் நொந்து கூறல்.

மண்டுந் திரைவையை சூழ்தஞ்சை வாணற்கு வன்புலியும்
செண்டுங் கொடுத்தகல் செம்பியர் போலன்பர் சென்றுழிமுள்
இண்டுங் கழையும் பயிலும்வெங் கானியல் கேட்டுமிந்நோய்
கண்டுங் கலங்கல்செல் லாதிந்த வூரெற் கழறல்நன்றே.

(இ - ள்.) திரைநெருங்கும் வைகை சூழ்ந்த தஞ்சை வாணனுக்கு வலிய புலிக்கொடியையும் செண்டாயுதத்தையும் கொடுத்தகலப்பட்ட சோழரைப்போல அன்பர், சென்றவிடத்தில் முள்பொருந்திய ஈகைச்செடியும் மூங்கிலும் நெருங்கும் வெவ்விய காட்டினிலக்கணத்தைக் கேட்டும் யான் துயருழக்கும் இவ் வேட்கை நோயைக் கண்டும் மனத்திடத்துக் கலக்கஞ் செல்லாது இந்த வூர் என்னைக் கழறுதல் நன்றே என்றவாறு.

**பாங்கி கழறியவதனை ஊரின்மேல் வைத்துக் கூறியது.**

வாணனுக்கு வன்புலியும் செண்டும் கொடுத்தகல் செம்பியர் போலத் தலைவன் சென்றான் என்று தலைவனுக்கு இகழ்ச்சி தோன்றியதெனின், தலைவன் ஊர்விட்டுக் கானிடைச் சென்றதற்கு உவமை கூறியதல்லது பதிகொடுத்தற்கு உவமை கூறியதன்றாதலான், இகழ்ச்சி தோன்றாதென் றுணர்க.

மண்டுதல் - நெருங்குதல். புலியும், செண்டும் - ஆகுபெயர். செம்பியர் - சோழர். இண்டு - ஈகை. கழை - மூங்கில். (உசுசு)

### வருகுவர்மீண்டெனப் பாங்கி வலித்தல் :

வருகுவர் மீண்டு எனப் பாங்கி வலித்தல் என்பது, பாங்கி தலைவர் மீண்டுவருவர் எனக் கூறுதல் ; வலித்தல் - கூறுதல்.

தேர்த்தானை வாணன்தென் மாறைமின் னேயஞ்சல் செம்புருக்கி
வார்த்தா லனைய வழிநெடும் பாலை மடப்பெடைநோய்
பார்த்தா தவந்தணி பாதவ மின்மையிற் பைஞ்சிறகால்
போர்த்தாலு மஞ்ஞைகண் டும்போவ ரோநம் புரவலரே.

(இ - ள்.) தேர்ப்படையையுடைய வாணன் தென் மாறை நாட்டிலிருக்கு மின்னே, அஞ்சலை; செம்பையுருக்கி வார்த்தாலொத்த வெப்பத்தைத் தருகின்ற வழி நெடிதாகிய பாலைநிலத்து மடப்பத்தொடு கூடிய பெடைமயிலினது வெயிலானாகிய துன்பத்தைப் பார்த்து, அவ் வெயிற் றணிக்கின்ற மரங்க ளில்லாமையால், தனது பசிய சிறகி னாலே போர்த்து அகவும் மயில் கண்டும், நம் புரவலர் போவரோ, மீண்டுவருவரோ, என்றவாறு.

எனவே, தலைவன் ஏகுங்கால் சுரத்து நிகழுந்தன்மை பாங்கி யறிந்தவாறென்னையெனின், தலைவன் செல்லுங்கால் சுரம் இத் தன்மையதென்று சொல்லியவாற்றால் அறிந்திருந்தாளாகலின், இவ்வாறு கூறினளென்க.

இவ்வாறு சொல்லியதை [1]'அரிதாயவறனெய்தி' என்னும் கலித்தொகையானும் உணர்க.

தானை - படை. ஆதவம் - வெயில். பாதவம் - மரம். ஓகாரம் - எதிர்மறை. (உகூ௭)

### பருவங்கண்டு பெருமகள் புலம்பல் :

பருவம் கண்டு பெருமகள் புலம்பல் என்பது, தலைவன் பிரியுங்கால் கார்க்கு முன்னே வருவலென்று குறிப்பாற் கூறிப் போயினனாகையால், கார்ப்பருவங் கண்டு தலைமகள் புலம்பிக் கூறுதல்.

குறிப்பாற் கூறியது எங்ஙனமெனின், 'நீடேனென்றவன் நீங்கல்' என்னும் செய்யுளில், 'மாலைப்பொழுது வருகுவல்யான்'

1. கலித். பாலை - க௦.

என்றது, மாலைக்குரித்தாகிய பொழுது கார்காலமென்று குறிப்பா னறிவித்தவா றுணர்க. அக்குறிப்பறிந்து பாங்கி தலைவிக்குக் கூறியவதனால் தலைவி கார்கண்டு புலம்பினாள் என்பது. அன்றியும், மேற்கிளவி இருளை வம்பாகத் தோன்றியது தலைவன் கூறிய கார்ப்பருவமன்றெனப் பொருள் கொள்ளக்கிடந்தது. இவை யாவும் குறிப்பாற் கூறிய தென்றுணர்க.

மிகவும் பரந்த கரியகண் ணீர்செங்கை வெள்வளைபோல்
உகவுந் துறந்தவ ருன்னல ராலுறை கார்பொழிய
மகவுந் துணையுங் கலைதழு வுந்தஞ்சை வாணன்வெற்பின்
அகவும் பெடைமயி லுந்தமி யேனெங்ஙன் ஆற்றுவலே.

(இ - ள்.) சிவந்த கையினிடத்துச் சங்கவளை யுகுந்ததுபோல மிகவும் விரிவாகிய கரியகண்ணினீர் துளித் துளியா யுதிரவும் துறந்ததலைவர் நினைந்திலர்; ஆதலால், காரானது துளிகளைப்பெய்ய மழைத்துன்பத்தா லஞ்சி மகவும் துணையும் முசுக்கலையைத் தழுவும் தஞ்சைவாணன் வெற்பிற் பெடைமயிலும் அகவும்; தனியாயிருக்கப்பட்டயான் எங்ஙனம் ஆற்றியிருப்பேன் என்றவாறு.

'செங்கை வெள்வளைபோல மிகவும்பரந்த' எனக் கூட்டுக. உகுத்தல் - உதிர்தல். உன்னலர் - நினைந்திலர். உறை - துளி. கார் - முகில். துணை - பெண்குரங்கு. கலை - முசுக்கலை.

[1] 'கலையென் காட்சி யுழைக்கு முரித்தே.'

'நிலையிற் றப்பெயர் முசுவின் கண்ணும்.'

என்னுஞ் சூத்திரங்களால் கலை முசுவின் ஆண்பெயரென்று கொள்க. பெடைமயில் என்புழி உம்மைத்தொகை. (உகூஅ)

### இருளை வம்பென்றல் :

இருளை வம்பு என்றல் என்பது, அவ்வாறு புலம்பிய தலைவி தேறும்வண்ணம் பாங்கி இது காலத்தின் வந்த மேகமன்று, இடையே வம்பாகத் தோன்றியதென்று கூறியது. வம்பு - காலமல்லாத காலத்திற் றோன்றும் பொருள்.

---

1. தொல். பொருள். மரபியல் - சுடு, சகூ.

தனஞ்சேர்ந்த வஞ்சிநின் சாயல்கண் டஞ்சித் தனித்தனிபோய்
வனஞ்சேர்ந் தயர்ந்த மயில்களெல் லாந்தஞ்சை வாணன்வெற்பில்
கனஞ்சேர்ந் தலர்துளி காலுமுன் னேவம்பு காலுமென்னு
இனஞ்சேர்ந் தகவின நாந்தனி வாடி யிருத்தல்கண்டே.

(இ - ள்.) திரண்டதனத்தையுடைய வஞ்சி, நினது சாயலைக்கண்டு அஞ்சி ஒன்றோடொன்று கூடாமல் தனித் தனியாய்ப் போய்க் காட்டிற் சேர்ந்து அயர்ந்த மயில்களெல்லாம் தஞ்சைவாணன் வெற்பினிடத்துக் கார்காலம் வந்து மேகங்கள் கூடிப் பருத்த துளிகளையும் முன்னே வம்பாக மழையைப் பெய்யுமென்றெண்ணி, நாம் அன்பரைப் பிரிந்து தனியாய் வாடியிருத்தலைக் கண்டு, கூட்டங் கூடி அகவாநின்றன; ஆதலால், இது தலைவன் கூறிய காலத்தில் வருங் காரன்று என்றவாறு.

காரியத்தைக் காரணமாக உபசரிக்கப்பட்டது. தனம் - முலை. சேர்தல் - திரட்சி; [1]'சேரே திரட்சி' என்னும் உரிச்சொல்லியற் சூத்திரத்தானு முணர்க.

அயர்தல் - இளைத்தல். அலர்தல் - பருத்தல். [2]'தண்கம ழலரி றூல் சிதைய' என்னுந் திருமுருகாற்றுப்படையுட் கூறியதனு னுணர்க அன்றியும், [3]'அலர்முலைப் பாங்கி யருளியல் கிளத்தல்' என்னும் அகப்பொருட் சூத்திரத்தானுமுணர்க. (உகூக)

**இறைமகள் மறுத்தல்:**

இறைமகள் மறுத்தல் என்பது, தலைவி பாங்கி கூறியவதனை மறுத்துக் கூறல்.

வாவித் தகையன்ன மேதஞ்சை வாணன் வரையகத்தென்
பாவித் தனிநெஞ்சு பார்த்தஞ்சு மேகண் பயின்றகண்ணூர்
தூவித் தளைமயில் கோபங்கொள் ளாவரத் தோன்றியைச்சேர்ந்
தாவித் தகந்தள ரும்மணி காலு மராவென்னவே.

(இ - ள்.) வாவியிலிருக்கும் அழகு பொருந்திய அன்னம்போல்வாய்! தஞ்சைவாணன் வரையிடத்து என் கண் பார்த்துப் பாவித் தனிநெஞ்சு அஞ்சாநிற்கும்;

1. தொல். சொல். உரியியல் - கூஎ. 2. திருமுரு - ௩00.
3. இறையனார் அகப்பொருள் - ௩.

நெருங்கிய கண்களார்ந்த சிறகாகிய தழையையுடைய மயில் காந்தளை அரிய மணியையுமிழும் நாகமெனச் சினங் கொண்டு வர அல்லாமையினால் காந்தளைச் சேர்ந்து பெருமூச்செறிந்தன; ஆதலால், வம்பன்று; காலத்தில் வந்த கார் இது என்றவாறு.

எனவே, காந்தள் மலருங் காலம் கார்காலமென்பது தோன்றக் கூறினாளென்க. தகை - அழகு. அன்னம் - ஆகுபெயர். 'வரையகத்தென் கண்பார்த்து' என வியையும். 'கண்பார்த்து' என்னும் வினையெச்சம் தன்வினையைக்கொண்டு முடியாது, 'நெஞ்சஞ்சும்' எனப் பிறவாற்றான் முடிந்தது. என்னையெனின், [1]"உரற்கால் யானை யொடித்துண்டெஞ்சிய, யாமிழற் றுஞ்சிய செந்நா யேற்றை" என்றாற்போலுங் கொள்க.

தூவி - சிறகு. கோபம் - சினம். தோன்றி - காந்தள். ஆவித்தல் - பெருமூச்செறிதல். காந்தள் என்புழி இரண்டனுருபு தொகுத்தல். காலுதல் - உமிழ்தல். (உஎ0)

### அவர் தூதாகிவந்தடைந்த திப் பொழுதெனத் துணைவி சாற்றல் :

அவர் தூதாகி வந்து அடைந்தது இப்பொழுது எனத் துணைவி சாற்றல் என்பது, தலைவி கார்காலம் வந்ததென்று கூறியசொற் கேட்ட பாங்கி, தலைவன் தான் வருகின்ற செய்தியை அறிவித்தற்கு விடுப்ப இப்பொழுது இக்கார் தூதாய் வந்து அடைந்ததென்று கூறல்.

இன்னே வருவர்நின் காதல ரேதில ரேங்கவினிக்
கொன்னே யிரங்கி வருந்தல்கண் டாய்கொற்ற நேமிவிந்தை
மன்னே யெனவந்த வாணன்தென் மாறை வரவுணர்த்த
முன்னே நடந்தன காண்கடுங் கால முகிலினமே.

(இ - ள்.) அலர் தூற்றும் அயலாரேங்க நின் காதலர் இப்போதே வருவர்; இன்று வீணேயிரங்கி வருந்தலை; வெற்றியாழியைப் புனைந்த சயமாதுக்கு இறைவனென வந்த வாணன் தென்மாறை நாட்டில் தலைவர் வரவுணர்த்த விரைவொடு கூடிய முகிலினம் முன்னே நடந்துவந்தன காண்பாயாக என்றவாறு.

---

1. குறுந்தொகை - உருஉ.

இன்னே - இப்போதே. ஏதிலர் - அயலார். கொன்னே - வீணே. கண்டாய் - முன்னிலையசை. கொற்றநேமிவிந்தை - சயமாது. மன் - இறைவன். முகிலினம் - முகிற்கூட்டம். (உஎக)

**தலைமகளாற்றல் :**

இன்புற்ற காலத் திருவர்க்கு மொன்றுயி ரென்றுசொன்னர்
அன்புற்ற காதல ராதலி னுலகன் குரெனநாம்
துன்புற்ற காலத் தவருமு ரூரல்லர் தோழிசொல்லும்
வன்புற்ற காரளிக் குந்தஞ்சை வாணன்தென் மாறையிலே.

(இ - ள்.) கார்போற் கொடுக்குந் தஞ்சைவாணன் தென்மாறை நாட்டில் தோழி சொல்லுஞ் சொல்லும் வற்புறுத்தலைப் பொருந்திய ; அன்றியும், அன்புற்ற காதலர் தாம் இன்புற்றகாலத் திருவர்க்கும் உயிரொன்றென்று சொன்னர் ; ஆதலால், நம்மைப் பிரிந்தாரென்று நாம் துன்பமுற்ற காலத்து அவரும் வாராரல்லர் என்றவாறு.

எனவே, வருவ ரென்பதாயிற்று. 'அன்புற்ற காதலரின்புற்ற காலத்து' எனவும், 'உயிரொன்று' எனவும் மாறுக. உரூரல்லர் - வாராரல்லர். வற்புறுத்தல் - ஆற்றுவித்தலைப் பொருந்தல். காரளிக்கும் என்பது உவமத்தொகை. (உஎஉ)

**அவனவட் புலம்பல் :**

அவன் அவண் புலம்பல் என்பது பொருளீட்டச் சென்ற தலைவன் தன் கருமமுற்றியபின்றையே அவ்விடத்துத் தலைவியை நினைத்துப் புலம்பல்.

விழிகுழி யும்படி தேர்வழி பார்த்தனை வீழ்ந்துவண்டு
கொழுதிமி ருங்குழல் சோரக் கிடந்து குடங்கையின்மேல்
ஒழுகிய அஞ்சன வெள்ளத் துணைங்கு மணங்கைமுன்சென்
றெழுகென நெஞ்சமென் னேயவ ரோவெளி லென்சொல்லுமே.

[1] [இது பிறசெய்யுட் கவி] (உஎ௩)

இத்துணையும் பதினறுநாட் செய்தியென் றுணர்க.

**பதினறும் நாள்**

வரைவிடைவைத்துப் பொருள்வயிற் பிரிந்த தலைமகன்

**ஐம்பத்தோன்றும் நாள்**

மீண்டு வந்தமையால் முப்பத்துநான்கு நாள் இடைப்பட்டதென உணர்க.

---

1. அம்பிகாபதிகோவை - ௩கக.

மீண்டுவருங்காலைப் பாகனொடு செல்லல் :

வன்மா முடுக வலவநிண் டேரினி வாணன்றஞ்சைக்
கென்மா னுறுநெஞ்சின் முன்செல நாகின வேறுபுல்லிப்
பொன்மா மணியும் பிரிந்திருந் தாரும் புலம்பமன்றில்
சென்மாலை அந்திகண் டாற்றரி யாளென் திருந்திழையே.

(இ - ள்.) கழுத்திற்கட்டிய இரும்பிற்செய்த பெரிய மணியும் கணவரைப்பிரிந்த மாதரும் புலம்புறப் பசுவானது மழவிடையைச் சேர்ந்து மன்றத்திற் செல்லும் மாலை யாகிய அந்திக் காலத்தைக் கண்டால், என் திருந்திழை ஆற்றாள்; ஆதலால், பாகனே! வாணன் தஞ்சையூர்க்கு என் ஆசைகொண்ட நெஞ்சு செல்வதற்கு முன்னே, இன்று திண்ணிய தேர்செல்லத் தேரிற் பூட்டிய வலிய குதிரைகளை முடுகச்செய் என்றவாறு.

வல் - வலிமை; விரைவுமாம். மா - 'குதிரை முடுகச்செய்' என்பது செய்யுள் விகாரத்தாற் றொக்கது. வலவன்-தேர்ப்பாகன்; அண்மைவிளி. ஏறு-விடை. [1]'எருமையு மரையும் பெற்றமு மன்ன' என்னும் மரபியற் சூத்திரவிதியானும் உணர்க. பொன் - இரும்பு;

[2] 'வேண்டற்க வென்றிடினுஞ் சூதினை வென்றதூஉம்
தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று.'

என்றார் பிறரும்.

'கங்கையார் தாங்குங் கானப் பெருங்கவலை
யெங்கு மறவோ ரிரைத்தெழுந்தார்—திங்களைக்கண்
டென்றுகாண் வேட்கை மடிசுரப்பத் தோன்றுவ
கன்றுகாண் மெய்குளிர்மின் கண்டு.'

என்றார் பிறரும்.

மாலையந்தி, மீமிசை என்பதுபோல் நின்றது. திருந்திழை - அன்மொழித்தொகை. (உ௪௪)

மேகத்தொடு சொல்லல் :

மேகத்தொடு சொல்லல் என்பது, தலைவன் வருங்காலத்து மேகத்தை நோக்கிச் சொல்லல்.

---

1. தொல். பொருள். மரபியல் - ௬௨.
2. குறள். சூது - ௧.

வேண்டும் பொருளைத் தரும்பொருட் போய்முற்றி மீண்டவென்
தூண்டும் பரிமுன் துனைமுகில் காள்சென்று சொல்லும்இந்து [ரேர்
தீண்டுங் கொடிமதில் சூழ்தஞ்சை வாணனைச் சேரலர்போல்
ஈண்டும் பசலைமெய் போர்த்திருப் பார்தமக் கென்வரவே.

(இ - ள்.) விரும்பப்பட்ட எப்பொருளையும் கொடுக்கும் பொருட்குப் போய் முடிவாகி மீண்ட எனது தேரிலே பாகன் செலுத்தும் பரிமுன்னாக விரைந்தோடும் முகில் காள், திங்களைத் தீண்டும் கொடி கட்டிய மதில்சூழ்ந்த தஞ்சைவாணனைச் சேராதவர்போல் நெருங்கும் பசலைநிறம் மெய்யெங்கும் போர்த்திருப்பவர் தமக்கு எனது வரவினைச் சென்று சொல்வீர் என்றவாறு.

வேண்டல் - விரும்பல். 'பொருட்போய்' என்புழி, நான்கனுருபு தொக்கது. முற்றல் - முடிதல். தூண்டல் - செலுத்தல். பரி - குதிரை. துனைவு - விரைவு, [1]"கதழ்வும் துனைவும் விரைவின்பொருள'' என்னும் சூத்திரவிதியானுணர்க. இந்து - திங்கள். சேரலர் - பகைவர். தீண்டல் - நெருங்குதல். சேரலருந் துன்பத்தால் வேறுபட்டிருப்பர், மாதரும் துன்பத்தால் மெய்ந்நிறம் வேறுபட்டிருப்பாராதலால், உவமை கூறியவாறு உணர்க. (உஎ௫)

பாங்கி வலம்புரிகேட்டு, அவன்வரவறிவுறுத்தல்:

பாங்கி வலம்புரி கேட்டு அவன் வரவு அறிவுறுத்தல் என்பது, பாங்கி வலம்புரியோசையைக் கேட்டுத் தலைவன் வரவை அறிவுறுத்தல்.

பொருகின்ற செங்கயல் போல்விழி யாழ்பண்டு போயநின்கைக்
குருகின் றணித்திறை கொள்வது காண்கநங் கொண்கர்பொற்றேர்
தருகின்ற சங்கத் தருவன்ன வாணன் தமிழ்த்தஞ்சைவாய்
வருகின்ற தென்றுமுன் னேயோகை கூறும் வலம்புரியே.

(இ - ள்.) ஒன்றோடொன் றெதிர்க்கின்ற செங்கயல் போலும் விழியாய், முன்னாள் கழன்று போய நின் கைவளை இன்று புனைந்து தங்குவது அழகுதக; நம் கொண்

1. தொல். சொல். உரியியல் - கக.

கா் ஏறிவரும்பொற்றேரானது, தருகின்ற சங்கநிதியையும் கற்பகத் தருவையும் ஒத்த வாணன் தமிழ்த்தஞ்சை வீதி வாய் வருகின்றதென்று முன்னே வலம்புரிச் சங்கமானது மகிழ்ச்சி கூறுநின்றது, நீ கேட்பாயாக என்றவாறு.

குருகு-வளை. இறைகொள்வது - தங்குவது. காண்க-அழகுதக.

[1]"நித்தில முலையி னார்த நெடுங்கண் ணேக்கப் பெற்றும்
கைத்தலந் தீண்டப் பெற்றும் கனிந்தன மலர்ந்த காண்க."

என்னும் சிந்தாமணிச் செய்யுளில், 'காண்க' என்னுஞ் சொற்கு, 'அழகுதக' என்று நச்சினார்க்கினியர் கூறிய உரையானுமறிக. கொண்கர் - தலைவர். ஓகை - உவகை. (உ௭௬)

வலம்புரி கிழத்தி வாழ்த்தல்

மால்வண் டெனமன்னி வாணன்தென் மாறைமன் னன்புகழே
போல்வண் டமிழ்மன்னர் போற்ற விளங்குக பொன்கொழிக்குங்
கால்வண்டல் வையைக் கரைமல்கு மல்லிகைக் கான்முகையின்
மேல்வண் டிருந்தது போற்கரு மாமுக வெண்சங்கமே.

(இ - ள்.) பொன்கொழிக்கும் வண்டல்பரந்த வாய்க் கால்பொருந்திய வையையாற்றங்கரையில் நிறையும் மல் லிகையினது காம்பொடியக்கூடியமுகையின்மேல்வண்டிருந் ததுபோலக் கரிய முகத்தொடுகூடிய பெரிய வெண்சங்க மானது, திருமால் கைச்சங்கே போல என்றும் அழி யாமையாய் நிலைபெற்ற வண்மைபொருந்திய தமிழ்வேந்த ராலே போற்ற நின்ற வாணனாகிய தென்மாறைநாட்டு மன் னன் புகழ்போல் வண்தமிழ்மன்னர் துதிக்க விளங்குக என்றவாறு.

கால் - வாய்க்கால். வண்டல் - திரைபுரண்டு இருகரையும் பரப்பிய மண். மல்குதல் - நிறைதல். காம்புமுகத்து மெழுகு அமைத்தலால் கருமுகம் என்றது. மா - பெருமை, 'கருமுக மா வெண்சங்கம்' எனக் கூட்டுக. (உ௭௭)

---

1. சிந்தா. விமலை - ௧௧. {இவ்விசேடவுரை அச்சிட்ட பிரதியில் காணப்படவில்லை.

**தலைவன் வந்துழிப் பாங்கி நினைத்தமை வினவல் :**

தலைவன் வந்துழிப் பாங்கி நினைத்தமை வினவல் என்பது, வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிந்தோன் பிரிந்த முப்பத்தைந்தாநாள் வந்தானென்று நாள் வரையறை கூறியது என்னை யெனின்,

'களவொழுக்கமிரு திங்கள்.'

என்று வரையறை கூறினமையாலும்,

[1]"களவினுட் டவிர்ச்சி வரைவி னீட்டம்
திங்க ளிரண்டி னகமென மொழிப."

என்ற இறையனாரகப்பொருளுரையில், 'திங்களிரண்டினகம்' என்பதற்குத் திங்கள் இரண்டின்கண் என்றும், ஐந்து நாள் ஆறுநாள் அவர் வரைவு முடியும் என்றும் கூறினராகலானும், 'ஒருவழித் தணத்தல்' என்பதுவரைக்கும் இவ்வுரையில் பதினைந்து நாளென்று கூறுதலானும், வரைவியல் ஆறும்நாள் மணமுடிந்ததாகக் கூறுதலானும், ஆக ஐம்பத்தாறும்நாளென்று வரையறையாய் நிற்றலின், ஈண்டு முப்பத்தைந்தாநாள் என்று வரையறை கூறியதெனக் கொள்க.

[2]'வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல்
இருதுவின் கண்ணுடைத் தென்மனார் புலவர்.'

என்னுஞ் சூத்திரவிதியான், இருதிங்கள் சென்றதென்று கூருது முப்பத்தைந்தாநாள் சென்றதென்று கூறியது என்னையெனின், இருதிங்கள் சென்று வருவதல்லது இதற்குள்ளாக வருவது அன்றென இலக்கணங் கூறிற்றிலர்; இருதுவின் கண்ணுடைத்து எனக் கூறுதலான், இவ்விருதுவிடை எவ்வளவு வரையறைப்பட்டதோ அவ்வளவே இலக்கணமெனக் கொள்க.

அன்றி, இருதிங்கள் சென்று வந்தானெனின், களவொழுக்கம் மூன்று திங்களாம்; ஆகவே, இலக்கணவழுவாய் அகப்பொருள் சிதைவாமெனக் கொள்க.

**நினையீர் பொருட்குப் பிரிந்தய னுட்டுறி நின்றுழிவேள்
அனையீர் நினைந்து மறிதிர்கொல் லோவஞ்சொ லாலறிவோர்
வனையீ ரிதழ்க்கண்ணி வானன்தென் மாறையை வாழ்த்தலர்போல்
நனையீ ரிதழ்க்கண்வை காவெவ்வ நோயுற்ற நவ்வியையே.**

---

1. இறையனார் அகப்பொருள் - ௩உ.
2. அகப்பொருள் விளக்கம், அகத்திணையியல் - ௬௦.

(இ - ள்.) வேள் அனையீர், அழகிய சொல்லாலே புலவர் புனையப்பட்ட சொல் ஒரிதழும் பொருள் ஒரிதழு மாகிய தமிழ்மாலையையுடைய வாணன் தென்மாறையை வாழ்த்தாதவர் போல், நீரால் நனைந்த இரண்டிதழையுடைய கண்ணுறங்காத துன்பந் தரப்பட்ட வேட்கை நோயை யுற்ற மான்போன்றவளை நினையீர்; அப்பொருள் காரண மாகப் பிரிந்து அயனாட்டிடத்துத் தங்குமிடத்தில் நீர் நினைந்தும் அறிதிரோ என்றவாறு.

அறிவோர் - புலவர். வனைதல் - புனைதல். கண்ணி - தமிழ் மாலை. வைகுதல் - தங்குதல்; கண்ணுக்குத் தங்குதல்; இமைத்தல்; தங்காதது - இமையாதது. எவ்வம் - துன்பம். நோய் - வேட்கை; நவ்வி - மான்; இவ்விரண்டும் ஆகுபெயர். (உஎஅ)

தலைவனினைத்தமை செப்பல்:

கானெடுங் குன்றங் கடந்துசென் றேனொரு காலுமைதோய்
மானெடுங் கண்ணி மறந்தறி யேன்வண்கை வாணன்தஞ்சை
நீனெடும் பெண்ணைக் குரும்பையுஞ் சூது நெருங்குகொங்கைத்
தேனெடுங் கண்ணிமென் பூங்குழன் மாதர் திருமுகமே.

(இ - ள்.) மைதோய்ந்து மான்போன்ற நெடிய கண் ணையுடையாய், வளவிய கையினையுடைய வாணன் தஞ்சை நகரின்கண் நீலநிறமாகிய நெடிய பனையினது குரும்பையும் சூதும் ஒப்புநெருங்குங் கொங்கையையும், வண்டு உறை யும் நெடிய மாலையணிந்த மெல்லிய பொலிவினையுடைய கூந்தலையும், மாதர் அழகிய முகத்தையும், காடும் நெடிய குன்றும் கடந்து சென்றேனாகிய யான் ஒருகாலும் மறந் தறியேன் என்றவாறு.

எனவே, மறந்திலனாதலால் நினைந்திலன் என்று கூறியவா றாயிற்று.

[1] 'உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியேன்
ஒள்ளமர்க் கண்ணாள் குணம்.'

என்பதனு னுணர்க.

1. குறள். காதற்சிறப்புரைத்தல் - ௫.

'கானெடுங்குன்றம்' என்புழி உம்மைத்தொகை. நீலம் நீல் எனக் கடைக்குறை; 'நீனிற வண்ணன்' என்புழிப்போல. பெண்ணை - பனை. சூது - வல். தேன் - வண்டு. (உ௭௯)

ஆற்றுவித்திருந்த அருமை சாற்றல்:

ஆற்றுவித்திருந்த அருமை சாற்றல் என்பது, பாங்கி தலைவியை யாற்றுவித்திருந்த அருமையைத் தலைவற்குக் கூறல்.

உயரா மலகந் தருங்கனி நீர்நசைக் குண்சுரம்போய்
வியராமல் இல்லின் விடுத்தகன் றுளைமென் பூஞ்சிலம்பா
அயராமல் அஞ்சலென் றுற்றுவித் தேனிவ் அவனியெல்லாம்
மயராமல் வந்த பிரான்றஞ்சை வாணன்தென் மாறையிலே.

(இ - ள்.) இப்புவியெல்லாம் மயங்காமல் வந்த பிரானாகிய தஞ்சைவாணனது தென்மாறைநாட்டின் மெல்லிய பூமலிந்த சிலம்பனே! உயர்ந்த நெல்லியின் அரிய கனியை நீர்வேட்கைக்கு உண்ணப்பட்ட சுரத்திடை உடன்போய் வியர்வடையாமல் இல்லின்கண்விடுத்து நீர் பிரிந்த வளை இளையாமல் அஞ்சலென்று ஆற்றுவித்தேன் என்றவாறு.

ஆமலகம் - நெல்லிக்கனி. அருங்கனி - மழையின்றி அங்கங்கு ஒவ்வொன்றுயிருக்குங்கனி. நீர்நசை - நீர்வேட்கை. வியராமல் - வியர்வடையாமல். அயராமல் - இளையாமல். மயராமல் - மயங்காமல். (உ௮0)

'என்பொருட் பிரிவுணர்த் தேந்திழைக் கென்றல்' என்பது பிரிவறிவுறுத்தற்கு உரியது;

'பாங்கி நின்பொருட் பிரிவுரை நீயவட் கென்றல்' என்பது பிரிவுடன் படாமைக்கு உரித்து;

'தலைமகன் நீடேனென்றல்' என்பது பிரிவுடன் படுத்தற்கு உரித்து;

'பாங்கி தலைவிக்கு அவன் செலவுணர்த்தல்' என்பது பிரிவுடன்படுதற்கு உரித்து;

'தலைமகளிரங்க'லும், 'கொடுஞ்சொற் சொல்ல'லும், 'பருவங் கண்டு பெருமகள் புலம்ப'லும், 'மறுத்த'லும், 'அவனவட் புலம்ப' லும் ஆகிய ஐந்தும், பிரிவுழிக் கலங்கற்கு உரிய;

'பாங்கி கடுஞ்சொற் சொல்ல'லும், 'வருகுவர் மீண்டெனப் பாங்கி வலித்த'லும், 'பருவமன்று வம்பென்ற'லும், 'அவர் தூதாகி வந்தடைந் திப்பொழு தென்ற'லும், ஆகிய நான்கும் வன்புறைக்கு உரிய;

'தலைமகளாற்றல்' என்பது வன்பொறைக்கு உரித்து;

'தலைமகன் மீண்டு வருங்காலைப் பாகனொடு சொல்ல'லும், மேகத்தொடு சொல்ல'லும், ஆகிய இரண்டும் வருவழிக் கலங்கற்கு உரிய;

'பாங்கி வலம்புரிகேட்டு அவன்வரவறிவுறுத்தல்' முதலிய ஐந்தும் வந்துழி மகிழ்ச்சிக்கு உரிய.

**வரைவிடைவைத்துப் பொருள்வயிற்பிரிதல் முற்றிற்று.**

முதலாவது களவியல் முற்றிற்று.

## இரண்டாவது

# வரைவியல்

---

வரைவு என்பது, தலைமகன் தலைமகளைக் குரவர் முதலாயினோர் கொடுப்பவும் கொடாதொழியவும் வதுவைச் சடங்கொடு பொருந்தி மணஞ்செய்து கோடல்.

ஆதியில் எடுத்துக் கோடற்கண்ணே களவு என்றும் கற்பு என்றும் கைகோள் இரண்டென வைத்து, அவ்விரண்டுக்கும் நடுவே **வரைவியல்** என்று கூறியதனால் முன்னதனோடு மாறுகொள்ளுமெனின் மாறுகொள்ளாது ; என்னை, கற்பிற்கு நிமித்தமாய வரைவு கூறுதலான் இதுவும் கற்பின்பாற்படும். ஆயின், இதனைக் கற்பின் பாற்படுத்துக் கூறாது, வரைவியல் என வேறாகக் கூறியது என்னையெனின், வரைவு மலிவு முதலாக உடன்போக்கிடையீடு ஈறாகப் பலவகைப்பட்டு, ஒவ்வோர் வகைக்குக் கிளவிகளும் பலவாக அதிகாரப்பட்டு நடத்தலின், விளங்குதற்கு, வரைவியல் என வேறு கூறப்படும். என்னை, புணர்தலும் புணர்தல்நிமித்தமும் குறிஞ்சியாயினவாறுபோல, இல்வாழ்க்கையும் இல்வாழ்க்கைநிமித்தமும் ஆய வரைவும் கற்பெனப்படுமென்று உணர்க.

[1] 'வரைவு மலிவே யறத்தொடு நிலையென்
றுரையமை யிரண்டும் வரைவிற் குரிய
கிளவித் தொகையெனக் கிளந்தனர் புலவர்.'

என்னுஞ் சூத்திரவிதியால், வரைவுமலிவும் அறத்தொடுநிலையும் என வரைவு இரண்டுவகைப்படும். அவற்றுள்,

---

1. அகப்பொருள் விளக்கம், வரைவியல் - உ.

## கச. வரைவுமலிவு

வரைவுமலிவு என்பது, வரைவுதொடங்கிநடக்கும் முயற்சி மிகுதல்.

[1] 'வரைவுமுயல் வுணர்த்தல் வரைவெதிர் வுணர்த்தல்
வரைவறிந்து மகிழ்தல் பராவல்கண் டுவத்தலென்
றொருநால் வகைத்தே வரைவு மலிதல்.'

என்னுஞ் சூத்திரவிதியால், வரைவுமலிதல் நால்வகைப்படும்.

காதலன் முலைவிலைவிடுத்தமை பாங்கி காதலிக்குரைத்தல் :

தொலைவிலை யாகிய பல்பொருள் காதலர் சூதமர்நின்
முலைவிலை யாக முகந்தளித் தார்முனை வேந்தர்தம்மைத்
தலைவிலை யாகத் திறைகொண்ட வாணன் தமிழ்த்தஞ்சைநீ
உலைவிலை யாகுக பொன்வண்ண மாறுக ஒண்ணுதலே.

(இ - ள்.) ஒள்ளிய நுதலை யுடையாய்! காதலர் எடுக்க எடுக்கத் தொலையாத பலவாகிய பொருள்களைச் சூதுபோற் பொருந்தும் நின் முலைவிலையாக வம்பண அளவையான் முகந்தளித்தார் ; பகைவேந்தர்தம்மை அவர்கள் தலையைக் கொள்ளாது விடுதற்கு அவர்கள் கொடுக்கும் பொன்னை விலையாகத் திறைகொண்ட வாணன் தமிழ்த் தஞ்சையி லிருக்கின்ற நீ வருத்தமில்லையாகுக, பசலை நிறத்தை யொழிப்பாயாக என்றவாறு.

சூது முலை - உவமத்தொகை. அமர்தல் - பொருந்துதல். முலை விலை - கோடற்குரியார் கொடுத்தற்குரியார்க்குக் கொடுக்கும் பொருள். முனை - பகை. திறை - கப்பம். உலைவு - வருத்தம். பொன்வண்ணம் - பசலை. அம்பணம் - மரக்கால். (உஅக)

காதலி நற்றாயுள்ளமகிழ்ச்சி யுள்ளல் :

காதலி நற்றாய் உள்ளமகிழ்ச்சி உள்ளல் என்பது, தலைவன் விடுத்த முலைவிலைப் பொருள்களைக் கண்டு, மகட்கு, மணக்காலம் என்று, நற்றாய்மகிழும் உள்ளத்து மகிழ்ச்சியை தலைவி நினைத்தல்.

---

1. அகப்பொருள் விளக்கம், வரைவியல் - ௩.

கயமா மலரெனுங் கண்ணியை வண்டெனுங் காளைபல்புள்
இயமா மணம்புண ரீர்ந்துறை நாட ரெதிர்ந்தவர்மேல்
வயமா நடத்திய வாணன்தென் மாறை வருகுவரேல்
நயமா மணவணி கண்டியாயு மின்புறு நம்மினுமே.

(இ - ள்.) குளத்திற்றாமரைமலரென்னுங் கண்ணியை வண்டென்னுங்காளை பல புள்ளினேசையே முரசமாக மணம் புணரப்பட்ட குளிர்ந்த துறையையுடைய நாடர், எதிர்ந்த பகைவர்மேல் யானையைச் செலுத்திய வாணன் தென்மாறைநாட்டில் வருகுவாராகில், அவரது நன்மணக் கோலத்தைக் கண்டு நம்மினும் யாயும் இன்புறும் என்றவாறு.

மாமலர் - திருவிருக்குமலர். 'கயமாமலரெனுங் கண்ணியை வண்டெனுங் காளை பல்புள், இயமா மணம்புண ரீர்ந்துறை நாடர்' என்றதனால், குலமே குளமாகவும், குளத்திற்பூத்த தாமரைப்பூ தலைவியாகவும், தாமரை மலர்மணம் உண்ண வரும்வண்டு தலைவனாகவும், பல புள்ளியமே வாத்தியமாகவும் உள்ளுறையுவமந் தோன்றியதெனின், இவ்வாறு தலைவன் மணமுடியாமல் உடன்போக்கு நிகழ்தலான் இறைச்சிப்பொருளென்று கொள்க. இயம் - ஒசை. ஈர்ந்துறை - குளிர்ந்ததுறை. 'ஈர்ங்கைவிதிரார்' என்றாற்போலக் கொள்க. வயமா - யானை. மணவணி - மணக்கலம். உம்மை - சிறப்பு. (உஅஉ)

**பாங்கி தமர்வரைவெதிர்ந்தமை தலைவிக்குணர்த்தல் :**

பாங்கி தமர் வரைவு எதிர்ந்தமை தலைவிக்கு உணர்த்தல் என்பது, பாங்கி தலைவன்றமர் மணங்கூறி வந்துழித் தலைவி தமர் மணம் எதிர்ந்தமை தலைமகட்குக் கூறல்.

மணிப்பா லிகைமுத்நம் வைத்தாங் கடம்பலர் வார்திரைதூய்
அணிப்பாய் துவலை யரும்புந் துறைவர்க் கணியெதிர்ந்து
பணிப்பா சிழையல்குல் வெண்ணகை யாய்நமர் பாரநின்னேய்
தணிப்பான் முரசறைந் தார்தஞ்சை வாணன் தமிழ்நிலத்தே.

(இ - ள்.) பசிய பொன்னாற்செய்த மேகலையணிந்த பாம்பின்படம்போலும் அல்குலையும் வெள்ளிய நகையையும் உடையாய்! தஞ்சைவாணன் தமிழ்நிலத்தின் மணிப்பா

லிகையின் முத்தம் வைத்தாற்போல அடம்பமலரில் நெடிய திரை தூவப்பட்ட நிரையாய்ப் பரந்த திவலை தோன்றுந் துறைவர் தமக்கு அணியால் நமர் மணமெதிர்ந்தது பார், நின் வேட்கைநோய் தணிக்கும்பொருட்டு முரசறைந்தார்; அம்முரசொலி கேட்பாயாக என்றவாறு.

ஆங்கு - உவம உருபு.

1 'பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாங்கு.'

என்புழிப்போல. வார்திரை - நெடியதிரை. தாய் - தாவி:

2 'உருவப் பல்பூத் தூஉய் வெருவர.'

என்புழிப்போல. துவலை - திவலை. அணியெதிர்ந்து என்புழி ஆல் நமர் என வருவிக்க. பணி - பாம்பு. நோய் - வேட்கை. எஞ்ஞான்றும் மணச்சடங்குபோற்றேன்றும் துறைவராதலால் இங்கு வரவே மணச்சடங்கு உண்டாமென்பது தோன்றிநின்றது. (உஅரு)

தலைமகளுவகையாற்று துளத்தொடு கிளத்தல்:

தலைமகள் உவகையாற்றாது உளத்தொடு கிளத்தல் என்பது, தலைவி மகிழ்ச்சி யடங்காது நெஞ்சொடு கூறல்.

சோகா குலமெய்தல் காண்டுநெஞ் சேநந் துறைவரெனும்
மீகா னுடன்பள்ளி நீள்வங்க மேறி நிலம்புரக்கும்
மாகா விரியன்ன வாணன்தென் மாறைமன் னன்பகையும்
ஏகா விருட்கங்கு லாங்கடற் காலை யெனுங்கரையே.

(இ - ள்.) நெஞ்சே! நம்முடைய துறைவரென்னும் மீகாமனுடன் படுக்கையாகிய மரக்கலமேறி, நிலத்தைக் காக்கும் பெரிய காவிரிக்கொப்பாகிய வாணனாகிய தென் மாறை மன்னனுக்குப் பகையாகினுரும் ஏகுதற்கரிய இருண்ட கங்குலாங் கடலைக்கடந்து காலையென்னுங் கரையைக் காண்குதும்; ஆதலால், நீ சோகத்தால் ஆகுலமெய்தலை என்றவாறு.

---

1. திருமுரு - உ.
2. திருமுரு - உசக.

சுப்பிரயோகம், விப்பிரயோகம், சோகம், மோகம், மரணம் என்னும் மாரன் அம்பால்வரும் அவத்தை ஐந்தனுள், 'சோகம்' அசோக பாணத்தால்வரும் அவத்தையென்றுணர்க. ஆகுலம் - துன்பம். காண்டும் - எதிர்காலமுற்று வினைச்சொல். நீகான் - மீகாமன். பள்ளி - படுக்கை. வங்கம் - மரக்கலம். புரத்தல் - காத்தல். காலை - விடியற்காலம். பகையும் என்புழி உம்மை இழிவு சிறப்பு. இதனுள் இயைபுருவகம் வந்தவாறு காண்க. (உஅச)

### தலைவனைப்பாங்கி வாழ்த்தல் :

மாரியஞ் சுங்கொடை வாணன்தென் மாறையில் வாழிவண்டார்
வேரியந் தொங்கல் விரைகமழ் மார்ப விடாதவம்பல்
சேரியம் பொய்கைத் துறையலர் வாடநின் செவ்விமணம்
தூரியஞ் சங்கதி ரக்காட்டி நீயன்று சூட்டலரே.

(இ - ள்.) வண்டு உண்ணும் கள்பொருந்திய மாலை மணங்கமழும் மார்பனே, மறந்துவிடாத அம்பலையுடைய சேரியாகிய பொய்கைத்துறையிலே தோன்றிய அலர் வாட நின் அழகாகிய மணக்கோலத்தால் அன்று சூட்டின அலரை இன்று பலருமறியத் தூரியமும் சங்கும் அதிர நீ சூட்டிக்காட்டு; முகில் அஞ்சுங் கொடையையுடைய வாணன் தென்மாறைநாட்டில் நெடுங்காலம் வாழ்வாயாக என்றவாறு.

மாரி - முகில். அஞ்சும் என்னும் பெயரெச்சம் தன்வினை முதலைக்கொண்டு முடியாது, பிறவாற்றான் முடிந்தது. வாழி - முன்னிலை வினைமுற்றுச்சொல் ;

[1] 'வாழிய என்னும் செயவென் கிளவி
இறுதி யகரங் கெடுதலு முரித்தே.'

என்பதனுன், வாழி என்பது நெடுங்காலம் என்பது அவ்வுரையானுணர்க. ஆர்தல் - உண்டல். வேரி - கள். தொங்கல் - மாலை. விரை - மணம். மார்ப - அண்மைவிளி. அம்பல் - முகிழ் முகிழ்த்தல். அலர் - வாய்திறந்து ஒருவர் ஒருவரை நோக்கித் தூற்றுஞ் சொல். செவ்வி - அழகு. மணம் - மணச்சடங்கு. தூரியம் - முரசம். அலர் - மாலை ; ஆகுபெயர். (உஅரு)

1. தொல். எழுத்து. உயிர்மயங்கியல் - கக.

**தலைவி மணம்பொருட்டாக அணங்கைப் பராநிலைகாட்டல்:**

*தலைவி மணம்பொருட்டாக அணங்கைப் பராநிலைகாட்டல் என்பது, தலைவி மணம்பொருட்டாகத் தெய்வத்துக்குச் சிறப்புச் செய்து வாழ்த்திக்கொண்டு நிற்கும் நிலையைப் பாங்கி தலைவற்குக் காட்டல்.*

உரவிப் பெருங்கலித் துன்பங்கள் பொய்முத லூழியின்பம்
வரவிப் படிதன்னை வாழ்வித்த வாணன்தென் மாறையன்னுள்
புரவிப் புனைநெடுந் தேரண்ண லேநின் பொருட்டணங்கைப்
பரவிப் பரவிநின் றேவரம் வேண்டுதல் பார்த்தருளே.

(இ - ள்.) *புரவிபூட்டிய அலங்கரித்த நெடிய தேரையுடைய மன்னவனே! வலிய இப்பெருங் கலியுகத் துன்பங்கள் போய்க் கிரேதாயுகத்து இன்பம் வர இப்புவியை வாழச்செய்த வாணன் தென்மாறை நாடுபோல்வாள் நின் பொருட்டாகத் தெய்வத்தை வாழ்த்தி வாழ்த்தி நின்று வரம் வேண்டுதலைப் பார்த்தருள்வாயாக என்றவாறு.*

*உரம் - வலி. கலி - கலியுகம். முதலூழி - கிரேதாயுகம். படி - புவி. புரவி - குதிரை.* (உஅசு)

**பராநிலைகண்ட தலைவன் மகிழ்தல்:**

இவ்வித் தகமிவட் கெய்திய தெவ்வண மெவ்வுலகும்
வவ்வித் திகழ்புகழ் வாணன்தென் மாறை மணம்பொருட்டால்
நவ்வித் தொகையின நாணுமென் னோக்கி நறைபுகையாச்
செவ்வித் தகைமலர் தூய்த்தெய்வம் வாழ்த்துந் திருத்தகவே.

(இ - ள்.) *எவ்வுலகத்தையும் கவர்ந்து திகழப்பட்ட புகழையுடைய வாணன் தென்மாறைநாட்டில் மான் தொகுதியினம் நாணப்பட்ட மெல்லிய நோக்கையுடையாள் மணங் காரணமாக நறும்புகையைப் புகைத்து நாட்கொண்ட அழகையுடைய மலரைத் தூவித் தெய்வத்தை வாழ்த்துஞ் சிறந்த முறைமையாகிய இவ்வல்லபம் இவட்குப் பொருந்தியது எப்படி என்றவாறு.*

வித்தகம் - வல்லபம். பொருட்டு - காரணம். 'மென்னேக்கி மணம்பொருட்டு' என இயையும். நவ்வி - மான். தொகையினம் - தொக்கவினம். நறை - நறும் புகை. செவ்வி - காலம். தகை - அழகு. தூய் - தூவி. திருத்தகவு - சிறந்த முறைமை. (உ௮எ)

'காதலன் முலைவிலை விடுத்தமை பாங்கி காதலிக்குணர்த்த'லும், 'தலைவி மணம்பொருட்டாக அணங்கைப்பராநிலை காட்ட'லும் வரைவு முயல்வுணர்த்தல். 'பாங்கி தமர்வரை வெதிர்ந்தமை தலைமகட்குணர்த்தல்' ஒன்றும் வரைவெதிர்வுணர்த்தல். 'நற்ருயுள்ள மகிழ்ச்சி யுள்ள'லும், 'உவகையாற்ரு துளத்தொடு கிளத்த'லும், 'தலைவனைப் பாங்கி வாழ்த்த'லும் வரைவறிந்து மகிழ்தல். தலைமகளணங்கைப் பராநிலைகண்டோன் மகிழ்தல்' ஒன்றும் பராவல்கண்டுவத்தல் எனக்கொள்க.

வரைவுமலிவு முற்றிற்று.

இத்துணையும் ஐம்பத்தோன்ருநாட் செய்தியென் றுணர்க.

---

## உ௦. அறத்தொடு நிற்றல்

அறத்தொடு நிற்றல் என்பது, களவை முறையே வெளிப்படுத்தி நிற்றல். முறையே வெளிப்படுத்தி நிற்றலாவது, தலைவி பாங்கிக்கு அறத்தொடு நிற்கும், பாங்கி செவிலிக்கு அறத்தொடு நிற்கும், செவிலி நற்றாய்க்கு அறத்தொடு நிற்கும், நற்றாய் தந்தை தன்னையர்க்கு அறத்தொடு நிற்கும் என்று கொள்க. அறத்தொடு நிற்றற்குப் பொருள், **முறையே வெளிப்படுத்தி நிற்றல்** என்பது. இப்பொருள் எவ்விடத்திற்குமாகாது, இவ்விடத்திற்குமாத்திரம் என்று கொள்க. என்னை, இக்களவொழுக்கம் புனைந்துரையாற் புலவர் நாட்டப்பட்டதன்றி வேறன்று என்பது. ஆதலால், இக்களவு வெளிப்படுத்தற்கு மாத்திரமே அறத்தொடு நிற்றல் என அவரால் நாட்டப்பட்ட பெயராயிற்றெனக் கொள்க.

[1] 'முன்னிலை முன்னிலைப் புறமொழி யென்றாங்
கன்ன விருவகைத் தறத்தொடு நிலையே.'

என்னுஞ் சூத்திரவிதியான், **அறத்தோடுநிற்றல் இருவகைப்படும்.**

### கையறு தோழி கண்ணீர் துடைத்தல்:

கையறு தோழி கண்ணீர் துடைத்தல் என்பது, ஆற்றிக் கையற்ற தோழி அருகிருந்து கண்ணீர் துடைத்தல்; கையறல் - செயலறல்.

வரைவுமலிவான் மனமகிழ்ச்சி யடைந்திருக்கும் தலைவி அழுது கொண்டிருத்தல் மாறுபாடு எனின், மாறுபடாது. என்னை, களவுப் புணர்ச்சியால் அலர் மிகவும் எழுதல்கண்டு தந்தையர் முதலாயினோர் வெறுப்படைந்ததறிந்த தலைவன் பிரிந்தேகப், பிரிவாற்றாமல் தலைவி அழுதனள் என்க. வெறுப்படைந்ததனால் மணத்தை மறுக்க, அதனால் தலைவன் பிரிந்தேக ஆற்றாமையினால் தலைவி அழுதனள் என்று செய்யுளிற் கூறியதின்றெனின், மேலே, 'கற்பொடுபுணர்ந்த கவ்வை'யின், மகள் எங்கே போயினாள் என்று செவிலி பாங்கியை வினவுழி, [2]'வெறுத்தா ரொறுத்துரை மேலுநங் கேளிர் விழைதவின்றி, மறுத்தா ரவற்கு மணமதனால்' என்பதனாற் கண்டுகொள்க.

**அயிரார் திரைவந்துன் வண்டலம் பாவை யழித்தனவோ**
**செயிராத அன்னை செயிர்த்தன ளோசெறி நாரைதிண்போர்**
**வயிரா நரலும் வயற்றஞ்சை வாணன்தென் மாறையிலென்**
**உயிரா கியதைய னீகலுழ் வானென் னுளங்குழைந்தே.**

---

1. அகப்பொருள் விளக்கம், வரைவியல் - ௫.
2. தஞ்சைவாணன் கோவை - ௩௨௪.

(இ - ள்.) நெருங்கிய நாரைகள் வலிய போர்க்களத்தில் ஒலிக்குங் கொம்புபோல் ஒலிக்கும் வயலையுடைய தஞ்சைவாணன் தென்மாறைநாட்டில் என்னுயிர்போன்ற தையலே! நீ உளங்குழைந்து கலுழக் காரணம் என்னை, நுண்மணலார்ந்த திரைவந்து உன் வண்டலம்பாவை யழித்தனவோ, ஒருகாலுஞ் சினவாத அன்னை சினந்தனளோ, யான் அறியக் கூறுவாயாக என்றவாறு.

அயிர் - நுண்மணல். வண்டலம்பாவை - மண்ணாற்செய்த பாவை. செயிர்த்தல் - சினத்தல். வயிர் - போர்க்களத்தில் ஒலிக்கும் கொம்பு. நரலுதல் - ஒலித்தல். கலுழ்தல் - அழுதல். என் - யாதுகாரணம். இதனுள், 'கூறுவாயாக' என்பது சொல்லெச்சமாக நின்றது. (உஅஅ)

தலைமகள் கலுழ்தற்காரணங் கூறல் :

தாரணி கொண்ட விருதோ ளொருவர் தனித்துழியென்
வாரணி கொங்கை மணந்துசென் றார்தஞ்சை வாணனொன்னார்
தேரணி வென்ற செழும்புகர் வேல்விழித் தேனினஞ்சூழ்
காரணி மென்குழ லாயது வேகலுழ் காரணமே.

(இ - ள்.) தாரை அழகாகக்கொண்ட இருதோளையுடைய ஒருவர் தனித்தவிடத்து என் வாரணிந்த கொங்கையைக் கூடிச் சென்றார்; தஞ்சைவாணன் ஒன்னாரது தேர்நிரையை வென்ற செழுமையாகிய இரத்தக்கறை நிறத்தையுடைய வேல்போன்ற விழியையும் வண்டினஞ் சூழ்ந்த மேகத்தின் அழகைக்கொண்ட மெல்லிய குழலையும் உடையாய்! யான் அழுங் காரணம் அது என்றவாறு.

தார் - மாலை. வார் - கச்சு. தேரணி - தேர்நிரை. புகர் - உதிரக்கறை. கார் - மேகம். அணி - அழகு. (உஅகூ)

தலைவன் தெய்வங் காட்டித்தெளிப்பத்
தெளிந்தமை யெய்தக் கூறல் :

தலைவன் தெய்வங் காட்டித் தெளிப்பத் தெளிந்தமை எய்தக் கூறல் என்பது, தலைவன் தெய்வத்தைக் காட்டிக் கரியென்று சூளுறவு சொல்ல, மெய்யென்று தெளிந்து அதனைப் பாங்கிக்குப் பொருந்தக் கூறல்.

துதித்தே னணங்கொடு சூளுமுற் றேனென்ற சொல்லைமெய்யா
மதித்தே னயர்ந்து மதியிலி யேன்தஞ்சை வாணன்வையை
நதித்தே னினம்புணர் மாதர்கண் போல நகைக்குநெய்தல்
பொதித்தே னுகர்ந்தக லுங்கழிக் கானற் புலம்பர்வந்தே.

(இ - ள்.) தஞ்சைவாணன் வையைநதியிலே குலாவப்பட்ட வண்டினம் மடவார்கண்போல் ஒளிவிடும் நெய்தற்பூவினிடத்துப் பொதிந்த தேனை நுகர்ந்து பிரிந்துபோங் கழிக்கரைச் சோலையுடைய புலம்பர்வந்து துதித்துத் தெய்வத்துடனே சூளையும் உற்றேன் என்று அவர் சொன்ன சொல்லை மெய்யாய் மதியிலியாகிய யான் மறந்து மதித்தேன் என்றவாறு.

சூள் - ஆணைகூறல். அயர்ந்து - மறந்து. தேனினம் - வண்டினம். நகை - ஒளி. பொதிதல் - நிறைதல். வண்டினம் தலைவனாகவும், நெய்தற்பூ தானாகவும், தேன் தன்னிடத்து இன்பமாகவும், அவ்வண்டு தேன் நுகர்ந்து நீங்கியதுபோலத் தலைவன் தன்னிடத்து இன்பம் நுகர்ந்து பிரிந்து போயினான் என்னும் உள்ளுறையுவமம் கொள்ளக்கிடந்தது. இவ்வாறு தெய்வத்தொடு சூளும் உற்றேன் என்று சொல்லியது எக்கிளவிப் பொருள் எனின், வன்புறையில், 'பிரியேன்' என்னும் கிளவியிலென்று உணர்க. ஆணைகூறல் அக்கிளவிச் செய்யுளில் இல்லையாலெனின், 'பிரியேன்' என்றது வேறோர் கிளவியினும் இல்லையால், அதுவே பொருள் என்று உணர்க. (உகூ0)

### இறைவி தலைவன் இகந்தமை இயம்பல் :

இறைவி தலைவன் இகந்தமை இயம்பல் என்பது, இறைவி தலைவன் நீங்கினமை கூறல்.

வரியோல வண்டலை தண்டலை சூழ்தஞ்சை வாணன்வண்மைக்
குரியோ னுயர்வையை யொண்டுறை வாயுர வோர்தெளித்தும்
கரியோர் பிறரில்லை யென்றகன் றாரினிக் காரிகையாய்
பெரியோர் மொழிபிற ழாரென்று தேறுதல் பேதைமையே.

(இ - ள்.) காரிகையாய்! பண்ணையொலிக்கப்பட்ட வண்டுகள் செலவும் வரவுமாய் அலையப்பட்ட சோலைசூழ்ந்த தஞ்சைவாணனாகிய கொடைக்கு உரியோனுடைய உயர்ந்த

வையையாற்றின் ஒள்ளிய துறையிடத்தில் உரவோர் தெய்வ முன்னாகத் தெளியச்செய்தும் கரியோர் பிறிதொரு வருமில்லையென்று நம்மைப் பிரிந்து போயினர்; ஆதலால், இனிப் பெரியோர் சொல்லியசொல் தப்பார் என்று தெளிவது பேதைமை என்றவாறு.

வரி - பண். ஓலம் - ஆரவாரித்தல். தண்டலை - சோலை. உரவோர் - அறிவோர். தெளித்தல் - தெய்வத்தின் முன்னாகத் தெளியச்செய்தல். உம்மை - சிறப்பு. கரியோர் - சான்று கூறுவோர். பிறழ்தல் - மாறுபடுதல். பெரியோர் மொழிபிறழார் என்று தேறுதல் பேதைமை யென்பது,

[1] 'இன்பத்தை வெறுத்தல் துன்பத்துப் புலம்பல்.'

என்னும் மெய்ப்பாட்டியற் சூத்திரத்தில் 'அறனளித் துரைத்தல், ஆங்கு நெஞ்சழிதல்' என்பதனால், 'அறனளித் துரைத்தல்' என்னும் மெய்ப்பாடு கூறியவாறுணர்க. (உகக)

பாங்கி இயற்பழித்தல்:

பாங்கி இயற்பழித்தல் என்பது, தலைமகன் இயலைப் பாங்கி பழித்துக் கூறல்.

மழவே துறந்து மறந்தவர் போற்றஞ்சை வாணன்வென்றி
முழவேய முந்நீர் முழங்கிருங் கானல் முழுதுலகும்
தொழவே தருந்தெய்வ நோக்கிச்செல் லேனென்று சொல்லியுநீ
அழவே துறந்தன ரால்நல்லர் நல்லரவ் வாடவரே.

(இ - ள்.) தஞ்சைவாணனது வெற்றி முரசொலிக்கு ஒப்பாகக் கடல் முழங்கப்பட்ட பெரிய கழிக்கரைச் சோலையிடத்து உலகமுழுதும் தொழத்தக்க தெய்வத்தை நோக்கிப் பிரியேன் என்று சொல்லியும் இளமைப் பருவத்தே துறந்து மறந்தவர்போல நீ அழத்தக்கதாகத் துறந்து போயினராதலால் அவ்வாடவர் நல்லர் நல்லர் என்றவாறு.

மழவு - இளமை. முழவு - முரசு. ஏய - ஒப்பாக. முந்நீர் - கடல். இருமை - பெருமை. கானல் - சோலை. 'உலகமுழுதும்' என இயையும். நல்லர் நல்லர், தீயர் தீயர், என இகழ்ச்சிக் குறிப்

1. தொல். பொருள். மெய்ப்பாட்டியல் - உஉ.

பின்கண் வந்த அடுக்குமொழி. 'அவ்வாடவர் நல்லர் நல்லர்' என இயையும். (உ௬உ)

**தலைமகள் இயற்பட மொழிதல்:**

தலைமகள் இயற்பட மொழிதல் என்பது, அங்ஙனங் கூறக் கேட்ட தலைமகட் சொற்பொருள் ஓரியல்புபட மொழிதல்.

மாகப் புயன்மண் ணில் வந்தன வாணன்தென் மாறைமுந்நீர்
நாகப் புகர்ச்செய்ய புள்ளிப்பைங் கான்ஞெண்டு நாகிளந்தண்
பூகக் குளிர்நிழற் பேடையொ டாடும் புலம்பரின்னுர்
ஆகக் கருதினல் லாயினி யாரினி யாருளரே.

(இ - ள்.) நல்லாய்! வானத்திடத்திலிருக்கும் மேகம் மண்ணிடத்தில் வந்ததுபோன்ற வாணன் தென்மாறை நாட்டுக் கடலிடத்துப் புன்னைமரத் தடியிலிருக்கும் புகராகிய சிவந்தநிறப் புள்ளியையும் பசிய காலையும் உடைய ஆண்ஞெண்டு நாகுப்பருவத்தையுடைய வளமையையும் தட்பத்தையுமுடைய குளிர்ந்த கமுகினிழலில் பெடை ஞெண்டைப் பிரியாமற் கூடும் புலம்பரைப் பொல்லாராகக் கருதின் நமக்கு இனியராயுள்ளார் இனி யார் என்றவாறு.

அவரே நமக்கு இனியராய் வந்து கூடுவாராதலால் அவரை இயற்பழித்துக் கூறத்தகாது என்றவாறுயிற்று.

மாகம் - ஆகாயம். புயல் - மேகம். நாகம் - புன்னை. நாகு - இளங்கன்றுப் பருவம் நீங்கிக் கருக்கொள்ளுங் காலம்: என்னை, பசு எருமை முதலியவற்றின் கருக்கொள்ளும் பருவத்திற்கு நாகு என்னும் பெயர் உலகவழக்கினுங் கண்டுகொள்க. புலம்பன் - நெய்தற்றலைவன். பூகம் - கமுகு. பெடை - பெடை ஞெண்டு. இன்னுர் - பொல்லார். இனியார் - நல்லார்.

புன்னைமர நிழலிலிருக்கும் ஆண்ஞெண்டு பூகமர நிழலிலிருக்கும் பெடையொடு கூடும் புலம்பர் என்பதனுல், தலைவன் தலைவியை வந்து கூடுமென உள்ளுறையுவமங்கொள்ளக் கிடந்ததெனின், அங்ஙனங் கூட்டம் பெருளாய்ப் பிரிந்து வருந்துகின்றுளாதலால் உள்ளுறையுவமமாகாது இறைச்சியிற் பிறக்கும் பொருளாயிற்றெனக் கொள்க. இறைச்சியிற் பிறக்கும் பொருளாவது,

[1] 'இறைச்சி தானே பொருட்புறத் ததுவே.'

1. தொல். பொருள். பொருளியல் - ௩௫.

[1] 'இறைச்சியிற் பிறக்கும் பொருளுமா ருளவே
திறத்தியன் மருங்கிற் றெரியு மோர்க்கே.'

என்றாராகலின், 'இறைச்சி' யென்றும் 'இறைச்சியிற் பொருள்' என்றுங் கூறிய சூத்திரங்கட்கு நச்சினார்க்கினியர் செய்தவுரையிற் கண்டுகொள்க. (உகரு)

**தெய்வம் பொறைகொளச் செல்குவமென்றல் :**

தெய்வம் பொறைகொளச் செல்குவம் என்றல் என்பது, தெய்வத்தின் முன் பிரியேனென்று ஆணைகூறிப் பிரிந்துபோனாரால் செய்வங் கொடுந்தெய்வமாதலால் சீறுதபடி அவர் எங்கட்குக் குற்றஞ் செய்தார் அல்லர், நீ பொறுத்துக்கொள் என்று வேண்டிக் கோடற்கு இருவேமும் போதுவோம் என்று தலைவி பாங்கியுடன் கூறியது.

மாதங்க நல்குங்கை வாணன்தென் மாறைவை யைத்துறைவர்
ஏதம் பயந்தில ரெங்கட்கு நீயெம் மிகந்ததனுல்
கோதம் படாதி கொடுந்தெய்வ மேயென்று கூர்பலிதூய்ப்
பாதம் பரவநல் லாயிரு வேமும் படர்குவமே.

(இ - ள்.) நல்லாய்! புலவோர்க்குப் பெருமையையுடைய தங்கங்களைக்கொடுக்குங் கையையுடைய வாணன் தென்மாறைநாட்டு வையைத்துறைவர் எங்கட்குக் குற்றத்தைத் தந்தார் அல்லர்; எம்மைப் பிரிந்ததனாலே கொடுந்தெய்வமே, நீ குற்றப்படாதை யென்று மிகுந்த பலிகளைத் தூவிப் பாதத்தைத் துதிக்க இருவேமும் செல்வோம் என்றவாறு.

நல்கும் - கொடுக்கும். ஏதம் - குற்றம். பயந்திலர் - கொடுத்திலர். இகத்தல் - பிரிதல். கோது - குற்றம். அம் - அசைநிலை. படர்தல் - செல்லுதல். (உகசு)

**இல்வயிற்செறித்தமை செப்பல் :**

இல்வயிற் செறித்தமை செப்பல் என்பது, தலைவி தன் மெய் வேறுபாட்டாலும் ஊரிலுள்ளார் அலர்தூற்றலாலும் நற்றாய் உளத்தில் வெறுப்பாகி மனையிடத்தில் என்னைக் காவல் செய்தாளென்று பாங்கிக்குக் கூறல்.

---

1. தொல். பொருள். பொருளியல் - ருகூ.

தன்போ லுலகம் புரக்கின்ற வாணன் தமிழ்த்தஞ்சையார்
மன்போ லெவர்க்கும் வழங்கியுண் ணுதவர் வைத்திழக்கும்
பொன்போ லிறுகப் பொதிந்துகொண் டாளன்னை பூவையென்
வண்போ தியமட வாரலர் தூற்றிய வாறுகண்டே. [மேல்

(இ - ள்.) பூவைபோல்வாய்! தன்னுயிர்போல உலகத்திலுள்ள வுயிரையெல்லாங் காக்கின்ற வாணனாகிய தமிழ்த் தஞ்சையார் வேந்தைப்போல, யாவர்க்கும் வழங்கியுண்ணுதவர் வைத்து இழக்கப்பட்ட பொன்னைப்போல என்னை அன்னை என்மேற் பொல்லாங்கு கூறப்பட்ட நமக்கு அயலாராகிய மடவார் அலர்தூற்றிய முறைமையைக் கண்டு இறுக முடிந்துகொள்ளுதல் போலுஞ் செறிப்புச் செய்தாள் என்றவாறு.

புரத்தல் - காத்தல். பொதிதல் - முடிதல். ஆறு - முறைமை. வன்பு - பொல்லாங்கு. 'உண்ணுதவர் வைத்திழக்கும் பொன்போல்' எனவே, அன்னையும் தன்னை யிழப்பவளாதலால், 'அவர் போல் பொதிந்து கொண்டாள்' என உள்ளுறையுவமங் கொள்க.

செவிலி கனையிருள் அவன்வரக் கண்டமை கூறல்:

செவிலி கனையிருள் அவன் வரக் கண்டமை கூறல் என்பது, செவிலி செறிந்த இருட்குறியிடத்துத் தலைவன் வரக்கண்டாள் எனத் தலைவி பாங்கிக்கு உரைத்தல்.

வெங்கார் முகவெம் புருவமின் னேயன்னை மேலொருநாள்
எங்கா தலரிரு ளெய்தல்கண் டாளிந்த ஏழுலகும்
மங்காமல் வந்தருள் வாணன்தென் மாறைவண் டானமஞ்சச்
சங்காழி கொண்டெறி யுங்கண்டல் வேலியந் தண்துறைக்கே.

(இ - ள்.) வெவ்விய விற்போன்ற வெய்ய புருவத்தையுடைய மின்னே, இந்த ஏழுலகும் கெடாமல் வந்து காக்கப்பட்ட வாணன் தென்மாறை நாட்டில் வண்டானம் அஞ்சக் கடலானது சங்கைக்கொண்டெறியும் தாழை வேலி செய்தாற் போன்றிருக்கின்ற தண்ணியதுறையின் கண் எம்முடைய காதலர் இருட்குறி வருதலை முன்னம் ஒருநாள் அன்னை கண்டாள் என்றவாறு.

கார்முகம் - வில். மங்காமல் - கெடாமல். வண்டானம்-நாரை. 'ஆழிசங்கு' என இயையும். கண்டல் - தாழை. சங்கு கொண்டெறிதல் - திரை விசையால் சங்கினை யுந்துதல்.

இவற்றுள், 'கலுழ்தற் காரணங் கூறல்' ஒன்றும் ஒழித்து, ஏனைய வெல்லாம், பாங்கி வினவாதொழியவும், தலைவி அறத்தொடு நிற்கும் நிலை தனக்கு உரியவாமாறு அறிந்துகொள்க. (உ௬௬)

செவிலி தலைமகள் வேற்றுமைகண்டு பாங்கியை வினுதல்:

பொன்னுற்ற கொங்கையு முத்துற்ற கண்ணுமிப் போதுகண்டேன்
பன்னுற்ற சொல்லுமின் பாலுங்கொள் ளாபதி னாலுலகும்
மன்னுற்ற வண்புகழ் வாணன்தென் மாறையென் மானனையாட்
கென்னுற்ற தென்றறி யேன்புனங் காவல் இருந்தபின்னே.

(இ - ள்.) பொன்போன்ற பசலைநிறம் பொருந்திய கொங்கையும் முத்துப்போல நீருற்ற கண்ணும் இப்போது கண்டேன்; அதுவன்றியும் யான் சொல்லுஞ்சொல்லும் இனிய பாலும் உட்கொள்ளாள்; ஆதலின், பதினாலுலகும் மன்னுற்ற வளவிய புகழையுடைய வாணன் தென்மாறை நாட்டில் புனங் காவலிருந்தபின் என் மான்போன்றவட்கு யாதுற்றதென்று யான் அறியேன், என்றவாறு.

'பதினாலுலகும்' என்புழி உம்மை முற்றும்மை. 'புனங்காவலிகந்தபின்னே' என்று பாடமோதுவாரு முளர். (உ௬௭)

பாங்கி வெறிவிலக்கல்:

பாங்கி வெறி விலக்கல் என்பது, செவிலி வெறியாட்டாளனை யழைத்து மகட்கு நோயுற்றவாறும், அது தீருமாறும் சொல்ல வேண்டுமென்று கேட்புழி, தெய்வம் வந்தாடும்போது, பாங்கி அத் தெய்வத்தை ஆடவேண்டா என்று விலக்குதல்.

வெறியாட்டாளன் ஆடு பலிகொடுத்தால் தீரும் என்புழி, அவ் வாட்டைக் கொல்லாமல் விலக்கல் எனினும் அமையும்.

அறியாமை யானென்று கேட்கலுற் றேநும்மை யாவதொன்றும்
குறியா மறியுயிர் கொள்ளவென் றேகுரு திப்பலிகூர்
வெறியால் இவளுயிர் மீட்கவென் றேவென்றி வேல்வலத்தீர்
சிறியார் மனையில்வந் தீர்தஞ்சை வாணன் சிலம்பினின்றே.

(இ - ள்.) வெற்றிவேலை வலத்தில் உடையவரே, நும்மை யாம் அறியாமையினால் ஒன்று கேட்கலுற்றேம், ஆவதொன்றுங் குறியாது மறியுயிரைக் கொள்ளவென்றோ, அந்த இரத்தப்பலி தரும் மிகுந்த வெறியினாலே இவள் உயிரை மீட்கவென்றோ தஞ்சைவாணன் சிலம்பினின்றுஞ் சிறியார் மனையில் வந்தீர், திருக்கோயிற்கு எழுந்தருள்வீர் என்றவாறு.

மறி - ஆடு. 'திருக்கோயிற்கு எழுந்தருள்வீர்' என்றது, அவாய் நிலையான் வந்தது. (உகஅ)

வெறிவிலக்கியவதனாற் செவிலி பாங்கியை வினாதல் :

மண்குன்ற வந்த கலியினை மாற்றிய வாணன்தஞ்சை
ஒண்குன்ற மங்கையர் முன்னர்மின் னேயுமை யாள்மகனைப்
பண்குன்ற வென்றசொல் வள்ளிதன் கோனைப்பைந் தாரயிலால்
வெண்குன் றெறிந்தசெவ் வேளையிவ் வாறென் விளம்பியதே.

(இ - ள்.) உலகங் குன்றவந்த கலியுகத்தைமாற்றிய வாணன் தஞ்சையது ஒள்ளிய குன்றிடத்து மின்னே, உமையாள் மகனைப் பண்குறைய வென்ற சொல்லையுடைய வள்ளிக்கு நாயகனைப் பசிய மாலைசூடிய வேலினாலே வெண் குன்றமாகிய குருகுபெயர்க் குன்றத்தை யெறிந்த செவ் வேளை மங்கையர்முன்னர் இவ்வாறு நீ விளம்பியது என்ன? என்றவாறு.

அயில் - வேல். வெண்குன்று - கிரவுஞ்சகிரி. 'குன்றமின்னே' எனவும், 'செவ்வேளை மங்கையர் முன்னே' எனவும், 'விளம்பிய தென்னே' எனவும் இயையும். (உகக)

தோழி பூத்தரு புணர்ச்சியால் அறத்தொடுநிற்றல் :

தோழி பூத்தரு புணர்ச்சியால் அறத்தொடு நிற்றல் என்பது, பூவைக் கொடுத்ததனாற் புணர்ந்த களவை வெளிப்படுத்திக் கூறல்.

போருறை தீக்கணை போலுநின் கண்கண்டு போதவஞ்சி
நீருறை நீலமு நீயுநண் பாகென்று நின்மகட்கோர்
தாருறை தோளவர் தந்தனர் வாணன் தமிழ்த்தஞ்சைசூழ்
காருறை சோலையில் யாம்விளை யாடிய காலையிலே.

(இ - ள்.) அன்னாய்! போருறைந்த தீய கணையை யொக்கும் நினது கண்ணைக்கண்டு மிகவும் அஞ்சி நீரிலே ஒளிந்து உறைந்த நீலமும் நீயும் உறவாக என்று, நினது மகட்கு, ஒரு தாருறைந்த தோளையுடையவர், வாணன் தமிழ்த் தஞ்சையைச் சூழ்ந்து புயலுறைந்த சோலையிடத்து யாம் விளையாடிய காலத்தில், நீலப்பூவைத் தந்தனர், என்றவாறு.

நண்பு - உறவு. தார் - மாலை. கார் - புயல். (௩00)

**புனல்தருபுணர்ச்சியால் அறதொடுநிற்றல்:**

புனல்தரு புணர்ச்சியால் அறத்தொடுநிற்றல் என்பது, புனலாற் கூடும் புணர்ச்சியை வெளிப்படுத்திக் கூறல்.

ஒழிதோற் றியசொல்ல லுன்மக ளோதிக் குடைந்தகொண்டல்
பொழிதோற் றிரளுந்தி வந்தசெந் நீருந்திப் பொற்பினுக்கோர்
சுழிதோற் றிடும்பகை தீர்க்கின்ற போதொரு தோன்றலுமவ்
வழிதோற்றி வந்தெடுத் தான்தஞ்சை வாணன்தென் வையையிலே.

(இ - ள்.) அன்னையே! நின் மகள் ஓதிக்கு ஒப்ப நில்லாது உடைந்த மேகம் தோற்ற பகை தீர்த்தற்காய்ப் பொழியப்பட்ட, யானைத்திரளைத் தள்ளிக்கொண்டு வந்த, சிவந்த நீர்வெள்ளம் தஞ்சைவாணன் தென்வைகையிடத்துப் பெருக, நின் மகளுந்திக்குத் தோற்றுப்போன பகையைத் தீர்த்தற்கு யாம் நீராடிய காலத்தில் சுழிவந்து நின் மகளை வாங்கிக்கொண்டு போம்போதில், அவ்வழியிலே வருவான் ஒரு வேந்தன் வந்து எடுத்தான், ஆதலால், நின் கருத்தில் தோன்றியதனைச் சொல்லுதல் ஒழிவாயாக என்றவாறு.

எனவே, புணர்ச்சியுண்மை குறிப்பினாற் றோன்றியவாறாயிற்று. ஓதி - கூந்தல். கொண்டல் - மேகம். தோல் - யானை. உந்தி - தள்ளி. உந்தி - கொப்பூழ். தோன்றல் - வேந்தன். (௩0௧)

**களிறுதருபுணர்ச்சியால் அறத்தொடுநிற்றல்:**

களிறுதரு புணர்ச்சியால் அறத்தொடு நிற்றல் என்பது, களிறு தரு புணர்ச்சியாற் களவை வெளிப்படுத்தல்.

மண்ணலை யாமல் வளர்க்கின்ற வாணன்தென் மாறைவெற்பில்
அண்ணலை யாயிழை பாகனென் றஞ்சின மஞ்சனந்தோய்
கண்ணலை நீரிடப் பாகமு மேல்வந்த கைக்களிற்றின்
புண்ணலை நீர்வலப் பாகமுந் தோயப் பொருதஅன்றே.

(இ - ள்.) அன்னையே! இப்புவியை அலையாமல் வளர்க்கின்ற வாணன் தென்மாறை வெற்பில் யாம் சோலையில் விளையாடுகையில், ஓர் யானை பாயவரும்போது நின் மகள் அலறிக்கூவ, அப்போது அவ்வழியில் வருகின்றதோர் ஒரு வேந்தன் விரைந்துவந்து, அஞ்சலையென்று, நின் மகளை இடப்பக்கத்தில் அணைத்துக்கொண்டு வலக்கையில் வேல்வாங்கி மேல்வந்த கையொடுங் கூடிய யானைமுகத்திலழுத்திப் பொருதவன்று ஆனைப்புண்ணில் அலைபோல் வருங் குருதிநீர் வலப்பாகமெல்லாம் நனைத்தலால் வலப்பால் சிவந்தும், அவள் அழுதபோது மைகரைந்து கண்ணுகிய கடலில் வருநீர் இடப்பாகம் நனைத்தலால் இடப்பாகங் கறுத்தும், ஆணுருவும் பெண்ணுருவும் ஒன்றாய்த் தோன்றியவதனால் அவ்வேந்தனை ஆயிழைபாகன் என்ன யாம் அஞ்சினம் என்றவாறு.

எனவே, குறிப்பால் புணர்ச்சியுண்மை யறிவித்தவாறு காண்க. அண்ணல் - வேந்தன். ஆயிழை பாகன் - சிவன். அஞ்சனம்-மை. அலை - கடல். (௩0௨)

தலைமகள் வேற்றுமைகண்டு நற்றாய் செவிலியை வினுதல் :

தண்டார் தழுவிய வேலண்ணல் வாணன்தென் றஞ்சைவெற்பில்
வண்டார் குழலிதன் வண்ணமுங் கண்ணும் வடிவுமுன்னுள்
கண்டா ரறியும் படியன வேயல்ல காரணமொன்
றுண்டா லுயிரனை யாயயி ராம லுரையெனக்கே.

(இ - ள்.) உயிரனையாய்! தண்ணிய மாலை யணிந்த வேலையுடைய பெருமை பொருந்திய வாணனது அழகிய தஞ்சை வெற்பிடத்து வண்டார்ந்த குழலையுடையாளது நிறமும் கண்ணும் முன்னாள் கண்டார்க்கு இப்போது

வேறுபட்டிருத்தலால் அறியுந்தன்மையனவே யல்ல; இவ்வடிவு வேறுபடுதற்குக் காரணம் ஒன்று உண்டு, ஆதலால் அக்காரணத்தை ஐயுறாமல் எனக்கு உரைப்பாய் என்றவாறு.

ஐயுறுதல் - சொல்லத்தகாதென்று மறைத்தல். தண்டார் - மாலை. தழுவிய - அணிந்த. தென் - அழகு. வண்ணம் - நிறம். அயிர்த்தல் - அயர்ப்புறுதல். (௩௦௩)

செவிலி நற்றாய்க்கு முன்னிலைமொழியால் அறத்தொடுநிற்றல்:

செவிலி நற்றாய்க்கு முன்னிலைமொழியால் அறத்தொடு நிற்றல் என்பது, முன்னிலைப் புறமொழியால் உணர்த்தாது, முன்னிலை மொழியினாலே களவை வெளிப்படுத்திக் கூறல்.

மலைவந்த தோவெனும் வாரண வாணன்தென் மாறைமதிச்
சிலைவந்த தோவெனு நன்னுத லாயொரு செல்வரிங்கோர்
கலைவந்த தோவென வந்துவி னுவிநங் காரிகைக்கு
முலைவந்த தோவில்லை யோவென்னு நாளின் முயங்கினரே.

(இ - ள்.) மலைவந்ததோ என்று ஒப்புக்கூறும் வாரணத்தையுடைய வாணன் தென்மாறைநாட்டில் மதி வந்ததோ சிலை வந்ததோ என்று ஐயந்தரு நல்ல நுதலையுடையாய்! புனங் காக்குநாளில் ஒரு தலைவர் வந்து இங்கோர் கலை வந்ததோ என்று வினவி, நம்முடைய பெண்ணுக்கு முலைவந்ததோ இல்லையோ என்னும் பெதும்பைப் பருவத்து முயங்கினர் என்றவாறு.

வாரணம் - யானை. 'வந்ததோ' என்பதனை மதிக்குங் கூட்டுக. மதி ஈண்டுப் பிறை. முயங்கல் - புணர்தல். 'செல்வர் வந்து' என இயையும். ஓகாரம் அனைத்தும் ஐயம். (௩௦௪)

'தலைவி பாங்கிக்கு முன்னிலைமொழியால் அறத்தொடு நிற்ற'லும், 'செவிலி நற்றாய்க்கு முன்னிலைமொழியால் அறத்தொடு நிற்ற'லும் ஆகிய இரண்டும், 'பூத்தரு புணர்ச்சி' முதல் மூன்றும் முன்னிலைமொழி; 'வெறிவிலக்கல்' ஒன்றும் முன்னிலைப்புறமொழி.

அறத்தொடு நிற்றல் முற்றிற்று.

இத்துணையும் ஐம்பத்திரண்டாநாட் செய்தியென் றுணர்க.

## உக. உடன்போக்கு

அஃதாவது, தலைவன் தன் ஊர்க்குத் தலைவியை உடன்கொண்டு போதல்.

[1] 'போக்கே கற்பொடு புணர்ந்த கௌவை
மீட்சியென் றாங்கு விளம்பிய மூன்றும்
வெளிப்படைக் கிளவியின் வழிப்படு தொகையே.'

என்னுஞ் சூத்திரத்தால், உடன்போக்கு மூவகைப்படும்.

[1] 'போக்கறி வுறுத்தல் போக்குடன் படாமை
போக்குடன் படுத்தல் போக்குடன் படுதல்
போக்கல் விலக்கல் புகழ்த றேற்றலென்
றியாப்பமை யுடன்போக் கிருநான்கு வகைத்தே.'

என்னுஞ் சூத்திரவிதியால், உடன்போக்கு எட்டுவகைப்படும்.

**பாங்கி தலைவற்கு உடன்போக்குணர்த்தல் :**

பாங்கி தலைவற்கு உடன்போக்கு உணர்த்தல் என்பது, காப்புக் கைம்மிகலால் உன் ஊர்க்கு உடன்கொண்டு போதியெனப் பாங்கி தலைவற்கு உரைத்தல்.

மைந்நீர் நெடுங்கண் மடந்தை யுடன்தஞ்சை வாணன்வெற்பா
செந்நீர் விழவணி நின்னகர்க் கேகொண்டு சேர்ந்தருண்மற்
றிந்நீர்மை யல்லதொ ராறுமின் றிங்கெம் மையரென்றால்
முந்நீ ருலகுங்கொள் ளார்விலை யாக முலையினுக்கே.

(இ - ள்.) தஞ்சைவாணன் வெற்பா! இவ்விடத்து எம் ஐயர் கருத்துச் சொல்லின் முலையினுக்கு விலையாக முந்நீர் சூழ்ந்த இவ்வுலகத்தையும் கொள்ளார்கள்; ஆதலால், குங்கும நீராடும் வசந்தத்திருவிழா அலங் காரத்தையுடைய நின் நகர்க்கு மையெழுதிய நீர்மையை யுடைய நெடிய கண்ணையுடைய மடந்தையை உடன் கொண்டு சேர்ந்தருள்வாய்; இம்முறை யல்லாது நீ வரைவ தற்கு வேறோர் வழியில்லை என்றவாறு.

'வெற்பா இங்கெம்மையர்' எனவும், 'முலையினுக்கு விலையாக முந்நீ ருலகுங் கொள்ளார்' எனவும், 'நின்னகர்க்கு மைந்நீர் நெடுங்

1. அகப்பொருள் விளக்கம், வரைவியல் - க0, கக.

கண்' எனவும், 'உடன்கொண்டு' எனவும் இயையும். மற்று-வினை மாற்று. செந்நீர் • குங்குமநீர். ஆறு - வழி. (௩௦௫)

தலைமகன் மறுத்தல் :

பாரோ முலைவிலை யென்பர்நின் கேளிரென் பல்கிளைவாழ்
ஊரோ அணியதன் றெண்டொடி யாய்விந்தை யுண்கண்க
தாரோ வளரும் புயன்தஞ்சை வாணன் தரியலர்போல் [ளோ
யாரோ தனிநடப் பாரருங் கானம் இவளுடனே.

(இ - ள்.) ஒள்ளிய வளையினையுடையாய்! நின் சுற்றத்தார் பாரை முலைவிலையென்று சொல்வாரோ? உடன் கொண்டு போதற்கு என் சுற்றத்தார் வாழுகின்ற ஊர் அணித்தன்று; அன்றியும், போவாமென்னில் சய மாதின் மையுண்ட கண்களோ தாரோ வளரும் புயத்தையுடைய தஞ்சைவாணனுக்குத் தரியலர்போல அரிய காட்டில் இவளுடன் தனியாய் நடப்பவர் யார் என்றவாறு.

எனவே, தரியலர் செல்லுங் கானத்தில் ஏனோர் சேறல் அரிது என்று கூறியவாறாயிற்று. பாரோ என்புழி ஓகாரம் என்பர் என்பத னோடு கூட்டுக; அவ்வோகாரம் வினா. ஊரோ, யாரோ என்புழி, ஓகாரம் இரண்டும் அசைநிலை. கண்களோ, தாரோ என்புழி ஓகார மிரண்டும் எண்ணின்கண் வந்தன. (௩௦௬)

அவளுடன்படுத்தல் :

அவள் உடன்படுத்தல் என்பது, பாங்கி தலைவனை உடன் படுத்தல்.

சுருளேய் குழலுஞ் சுணங்கேய் முலையுஞ் சுமந்துகற்புப்
பொருளே யெனச்சுரம் போதுமப் போது புகழ்வெயிலான்
மருளேய் கலியிருண் மாற்றிய வாணன்தென் மாறையினின்
அருளே யொழியவுண் டோநிழ லாவ தணங்கினுக்கே.

(இ - ள்.) சுருள்பொருந்திய குழற்பாரமும் சுணங் கியைந்த முலைப்பாரமும் சுமந்து, பொருளாவது கற்பே யெனத் தெளிந்து, சுரத்திற் செல்லும்போது தன் புகழுரு வாகிய வெயிலினாலே மயக்கம் பொருந்திய கலியாகிய

இருளை மாற்றிய வாணன் தென்மாறை நாட்டிலிருக்கின்ற அணங்கினுக்கு நிழலாவது நின் அருளையே நிழலென்று கொள்ளுவதல்லாது வேறொன்றை நிழலென்று கொள்ளப் படாது என்றவாறு.

சுருள் - கடைகுழற்சி. சுணங்கு - மாமைநிறம். உம்மை-எண். பொருளே என்புழி ஏகாரத்தைக் கற்பொடு கூட்டித் தேற்றப் பொருண்மை யுரைக்க. மருள் - மயக்கம். அருளே என்புழி ஏகாரம் ஈற்றசை. (௩0எ)

தலைவன் போக்குடன்படுதல் :

நஞ்சோ அழலோ வெனுஞ்சுர மோசெல்ல நாடியவென்
நெஞ்சோ கொடியது நேரிழை யாய்நிழல் மாமதியோ
மஞ்சோ தவழ்மதில் சூழ்தஞ்சை வாணன் வரையிலவம்
பஞ்சோ அனிச்சங் கொலோவெனுஞ் சீறடிப் பைந்தொடிக்கே.

(இ - ள்.) நேரிழையாய்! ஒளியையுடைய மதியும் முகிலும் தவழப்பட்ட மதில்சூழ்ந்த தஞ்சைவாணன் வரையிலுள்ள இலவம்பஞ்சோ அல்லது அனிச்சம்பூவோ என்று சொல்லப்பட்ட சிறிய அடியையும் பசிய தொடியையும் உடையாட்கு நஞ்சோ அழலோ என்று சொல்லப்பட்ட காட்டிற் செல்லக்கருதிய என் நெஞ்சோ மிகக் கொடியது என்றவாறு.

பைந்தொடி - அன்மொழித்தொகை. அழல் - நெருப்பு. நிழல் - ஒளி. அனிச்சம் - ஆகுபெயர்.

நஞ்சோ அழலோ என்புழி ஓகாரமும், பஞ்சோ என்புழி ஓகாரமும், அனிச்சங்கொலோ என்புழி கொல்லும் ஐயம். சுரமோ என்புழி ஓகாரமும், கொலோ என்புழி ஓகாரமும் அசைநிலை. நெஞ்சோ என்புழி ஓகாரம் சிறப்பு. மதியோ மஞ்சோ என்புழி ஓகாரம் எண்ணின்கண் வந்தன. (௩0அ)

தலைவிக் குடன்போக் குணர்த்தல் :

தலைவிக்கு உடன்போக்கு உணர்த்தல் என்பது, தலைவனுடன் போதலைப் பாங்கி தலைவிக்கு உரைத்தல்.

பாலன்ன பாயற் பகையென்னுஞ் சீறடி பட்டுருவும்
வேலன்ன கூர்ங்கல் மிதிக்குங்கொ லென்றனர் மேதினிக்கு
மாலன்ன வாணன்தென் மாறைநன் னாட்டு வயலுகளுஞ்
சேலன்ன நீள்விழி யாய்தெரி யாதன்பர் சிந்தனையே.

(இ - ள்.) மேதினிக்கு மால்போன்ற வாணனது தென்மாறைநாடு சூழ்ந்த வயலிற் பிறழப்பட்ட சேலை யொத்த நீண்ட விழியினையுடையாய்! மல்லிகைப்பூவால் நிரைத்தலால் அப் பாலையொத்த படுக்கையைப் பகை யென்று சொல்லப்பட்ட சீறடியாயின், அது பட்டு உருவப் பட்ட வேல்போன்ற கூரியகல்லை மிதிக்குமோ என்றதனால் அன்பர் நினைத்த சிந்தனை யாதோ தெரியாது என்றவாறு.

'மல்லிகைப்பூவால் நிரைத்தல்' என்பது அவாய்நிலையான் வந்தது. பாலன்னபாயல் - வண்ணவுவமம். பாயல் - படுக்கை. உகளுதல் - புரளுதல். கொல் - ஐயம். (௩௰௧)

தலைவி நாணழிவிரங்கல் :

தலைவி நாணழிவு இரங்கல் என்பது, உடன்போக்கில் நாணழியுமே யென்றதற்குத் தலைவி யிரங்கிக் கூறல்.

மறவாகை வேலங்கை வாணனை மாறையர் மன்னனைத்தம்
உறவாக வெண்ணி யுருதவர் போலுயி ரோம்பியென்றும்
துறவாத நாணந் துறப்பது வேண்டலிற் றொல்லுலகில்
பிறவா தொழிகைநன் றேயொரு காலமும் பெண்பிறப்பே.

(இ - ள்.) வீரத்தால் வெற்றிகொண்ட வேலை அகங் கையிற் பிடித்த வாணனை மாறைநாட்டார்க்கு மன்ன வனைத் தமக்கு உறவாக எண்ணி யுருத பகைவர்போல் உயிர்காத்தற்பொருட்டு என்றுந் துறத்தற்குத் தகுதியல் லாத நாணத்தைத் துறப்பது வேண்டிற்றாகலான், பழைய தாகிய உலகில் ஒருகாலமும் பெண்பிறப்புப் பிறவா தொழித்துவிடல் நன்று என்றவாறு.

மறம் - வீரம். வாகை - வெற்றி. அங்கை - அகங்கை ;

[1] 'அகமென் கிளவிக்குக் கைமுன் வரினே
முதனிலை யொழிய முன்னவை கெடுதலும்
வரைநிலை யின்றே யாசிரி யர்க்க.'

என்னுஞ் சூத்திர விதியானுணர்க. ஓம்பல் - காத்தல். (௩கo)

**கற்புமேம்பாடு பாங்கி கழறல் :**

கற்பு மேம்பாடு பாங்கி கழறல் என்பது, கற்பின் மேம்பாட்டைப் பாங்கி தலைவிக்குக் கூறுகிற்றல்.

**செந்நாண் மலரிற் றிருவன்ன கோலத் தெரிவையர்க்கு**
**மெய்ந்நா ணுயிரினு மிக்கதென் றுல்விர வாவரசர்**
**தந்நாண் முறைமை தவிர்த்தருள் வாணன் தமிழ்த்தஞ்சைநாட்**
**டந்நா ணுமுமட வாய்கற்பு நோக்க லழகிதன்றே.**

(இ - ள்.) மடப்பத்தையுடையாய்! சிவந்த முறுக்கவிழ் பருவத்ததாய தாமரைமலரிலிருக்கின்ற திருவை யொத்த அழகையுடைய தெரிவையர்க்கு மெய்யின்கணிருக்கின்ற நாண் உயிரினுஞ் சிறந்ததென்று சொல்லின், உறவு கலவாத வேந்தர் தம்முடைய வாழ்நாள் முறைமை தவிர்த்துக் கிளையாயுள்ளவரிடத்து அருளைத் தரும் வாணன் தமிழ்த் தஞ்சை நாட்டில் சொல்லப்பட்ட அந்நாணமும் கற்பைக் கருதுமிடத்தில் அழகிதன்று என்றவாறு.

திருவென்று கூறினமையால், செந்நாண்மலர் - தாமரைமலர். கோலம் - அழகு. விரவுதல் - கலத்தல்.

[2] 'உயிரினுஞ் சிறந்தன்று நாணே நாணினுஞ்
செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று.'

என்னுஞ் சூத்திரத்தானுணர்க. (௩கக)

**தலைவியொருப்பட்டெழுதல் :**

**பலரே சுமந்த வுரைகளுந் தாயர்தம் பார்வைகளும்**
**சிலரே சுமந்து திரியவல் லார்செய்ய செண்பகநாண்**
**மலரே சுமந்த வயற்றஞ்சை வாணனை வாழ்த்தலர்போல்**
**அலரே சுமந்து சுமந்திந்த வூர்நின் றழுங்குகவே.**

---

1. தொல். எழுத்து. புள்ளிமயங்கியல் - உo.
2. தொல். பொருள். களவியல் - உஉ.

(இ - ள்.) பலர் ஏசிச்சொல்லும் அந்த வார்த்தைகளும் தாயர் சினந்து பார்க்கின்ற கொடிய பார்வைகளும் சுமந்து திரிய வல்லமையுடையார் சிலருளர், என்னல் முடியாது; சிவந்த சண்பக நாண்மலரைச் சுமந்த வயல் சூழ்ந்த தஞ்சைவாணனை வாழ்த்தாத பகைவர்போல வசைகூறுஞ் சொல்லையே சுமந்து சுமந்து இந்த வூரிலுள்ளார் நின்றிரங்குக என்றவாறு.

'சுமந்து திரியவல்லார் சிலரே' எனக் கூட்டுக. 'என்னல் முடியாது' என்பது அவாய்நிலையான் வந்தது. 'இந்தவூர் நின்றழுங்குகவே' என்பது, இடத்து நிகழ்பொருளின் தொழில் இடத்து மேல் நின்றது. அழுங்குதல் - இரங்குதல்; கெடுதல் என்று பொருள் கூறுவாருமுளர். இவள் கற்புடையளாதலால், கூறிய சொற் பிழையாள்; ஆதலால், அவ்வாறன்றி மீண்டும் வந்து மணமுடித்தலின் அது பொருளன்மையுணர்க. இரங்கல் பொய்க்குமோ வெனில், இவள் உடன்போயினபின்னர் அவ்வூரிலுள்ளார் இரங்குதலின் பொய்யாதாயிற்று. (ருகஉ)

பாங்கி சுரத்தியல்புரைத்துழித் தலைமகள் சொல்லல்:

**செல்லிற் கொடிய களிற்றண்ணல் வாணன்றென் மாறைமன்னன்**
**வில்லிற் கொடிய புருவமின் னேயென் விளம்புதிநீ**
**சொல்லிற் கொடியநம் மன்னையைப் போல்பவர் சூழ்ந்திருக்கும்**
**இல்லிற் கொடியகொல் லோசெல்லு நாட்டவ் விருஞ்சுரமே.**

(இ - ள்.) இடியினுங் கொடியதாகிய களிற்றுப் பெருமையையுடைய வாணனாகிய தென்மாறை மன்னனது கையிற் பிடித்த வில்லினுங் கொடிய புருவத்தையுடைய மின் போன்றவளே! யான் செல்லும் நாட்டில் அப்பெரிய சுரமானது, சொல்லிலே கொடியளாகிய நம் அன்னையைப் போல்வார் சூழ்ந்திருக்கும் இல்லினுங் கொடியதோ என்றவாறு.

'சுரம் கொடியகொல் நீ விளம்புதி' என்றியையும். செல்லின் என்புழி, சிறப்பும்மை தொகுத்தல். செல் - இடி. அண்ணல் - பெருமை. கொல்-அசை. ஓகாரம்-எதிர்மறை. சுரம்-காடு. (ருகரு)

### பாங்கி கையடை கொடுத்தல் :

பாங்கி கையடை கொடுத்தல் என்பது, பாங்கி தலைமகளைத் தலைமகற்குக் கையடை கொடுத்தல் ; கையடை - அடைக்கலம்.

[1]'வடமால் வரைநிரை சாயினும் வண்புயல் வாரிபுகும்
கடனு கியநெறி கைவிட நீங்கினுங் கந்தலைக்கும்
அடன்மா களிற்றன்ப நின்னையன் னூர்பின்னை யென்னையென்
[2]உடனுய கேண்மை யொழிந்தறி யாரிவ் வுலகத்திலே.' [னூர்

[இது பிறசெய்யுட் கவி.]

### பாங்கி வைகிருள் விடுத்தல் :

பாங்கி வைகிருள் விடுத்தல் என்பது, பாங்கி யிருளார்ந்த இடையாமத்தில் விடுத்தல் ; வைகுதல் - தங்குதல்.

பொழிநான மன்றலம் பூங்குழல் நீங்கள் புணர்ந்துசெல்லும்
வழிநாடி நும்பின் வருகுவல் யான்தஞ்சை வாணன்வையைச்
சுழிநாணு முந்திநின் றெல்கிளைக் கேற்பன சொல்லியின்னு
மொழிநா வடங்க மொழிந்தய லாரை முகங்கவிழ்த்தே.

(இ - ள்.) மான்மதம் பொழியப்பட்ட மணத்தோடு கூடிய பூவையணிந்த குழலையும் தஞ்சைவாணன் வையைச் சுழி நாணப்பட்ட வுந்தியையும் உடையாய், நின் பழமை யால் வருகின்ற சுற்றத்தார்க்கு ஏற்பனசொல்லி, அய லாரை அலர்கூறிய நாவடங்க மொழிந்து தலைவனையச் செய்து, நீங்கள் கூடிச்செல்லும் வழிதேடி யானும் பின்னே வருவேன் என்றவாறு.

நானம் - மான்மதம். மன்றல் - மணம். புணர்தல் - கூடல். கிளை - சுற்றம். இன்னு மொழி - அலர் மொழி. 'மன்றலம் பூங்

1. அம்பிகாபதிகோவை - ருஉங.

2 'பறந்திருந் தும்பர் பதைப்பப் படரும் புரங்கரப்பச்
சிறந்தெரி யாடிதென் தில்லையன் னுடிறத் துச்சிலம்பா
அறந்திருந் தன்னரு ளும்பிறி தாயி னருமறையின்
திறந்திரிந் தார்கலி யும்முற்றும் வற்றுமிச் சேணிலத்தே.'

2. கோவையார்-உகஉ ; இது சில பிரதிகளிற்காணப்படுகிறது.

குழல், தஞ்சைவாணன் வையைச் சுழிநாணு முந்தி' எனக் கூட்டி, ஆகுபெயராகக் கூறுக. (௩௧௫)

### தலைமகளைத் தலைமகன் சுரத்துய்த்தல் :

*தலைமகளைத் தலைமகன் சுரத்துய்த்தல் என்பது, ஐம்பத்து மூன்றுநாள், தலைமகன் தலைமகளைச் சுரத்திற் செலுத்தல்.*

**தளிபோற் கொடைபயில் சந்திர வாணன் தமிழ்த்தஞ்சையான்**
**அளிபோற் குளிர்ந்த இளமரக் காவு மவன்புகழின்**
**ஒளிபோல் விளங்கிய வெண்மணல் யாறு முவந்துகண்டு**
**நளிபோ தவிழ்குழ லாய்மெல்ல மெல்ல நடந்தருளே.**

(இ - ள்.) குளிர்ச்சியையுடைய மலர் முறுக்கவிழப் பட்ட குழலையுடையாய்! மேகம்போற் கொடுக்குந் தொழில் பழகிய சந்திரவாணனாகிய தமிழ் விளங்கப்பட்ட தஞ்சையான் அன்புபோல் குளிர்ந்த இளமரச் சோலையும் அவனது புகழின் ஒளியைப்போல வெண்மணல் செறிந்த கான் யாறும் கண்டு மகிழ்ந்து மெல்ல மெல்ல நடந்தருள்வாயாக என்றவாறு.

*தளி - மேகம். பயிலுதல் - பழகுதல். அளி - அன்பு. கா - சோலை. ஆறு - கான்யாறு. உவத்தல் - மகிழ்தல். நளி - குளிர்ச்சி. 'கண்டுவந்து' என இயையும்.* (௩௧௬)

### தலைமகன் றலைமக ளசைவறிந் திருத்தல் :

*அசைவு - வருத்தம். [1]"அன்புகொண் மடப் பெடை யசைஇய வருத்தத்தை' என்றார் பிறரும்; அசைஇய - வருந்திய.*

**வரமாமை வேற்படை வாணன்தென் மாறை வணங்கலர்கள்**
**புரமான வல்லழல் பொங்குவெங் கானிற் பொருந்தியகூர்**
**அரமான கல்லுன் னடிமல ராற்றல வாதலினும்**
**சுரமாறு மெல்லைநல் லாயிருப் பாமிந்தச் சோலையிலே.**

(இ - ள்.) நல்லாய், வரத்தையுடைய மாமைநிறம் பொருந்திய வேற்படையையுடைய வாணன் தென்

1. கலித். பாலை - ௧௦.

மாறையை வணங்காதார் நகரைப்போல, வலிய அழல் பொங்கி பெழும் வெய்ய காட்டில் கூர்பொருந்திய அரத் துக்கொப்பான கற்கள் உன் அடிமலர் பொறுக்குந்தன் மைய அல்ல; ஆதலால், சுரம் ஆறுமளவும் நாம் இந்தச் சோலையிலே யிருப்பாம் என்றவாறு.

மாமை - குருதிப் புள்ளி நிறம். 'மா வைவேற்படைவாணன்' என்று பாடமோதிப், பெருமையுங் கூர்மையுமுடைய வேற்படை யெனப் பொருள் கூறுவாருமுளர். 'கூர் பொருந்திய' என இயை யும். அரமான என்புழி உவமைத்தொகை. புரமான - புரம்போல. ஆற்றல் - பொறுத்தல்.

[1] 'ஆற்றுவா ராற்றல் பசியாற்றல்.'

என்றார் பிறரும். சுரம் - வழி. ஆறுதல் - வெப்பந் தணிதல். எல்லை - அளவு. (நகஎ)

உவந்தலர்சூட்டி யுண்மகிழ்ந்துரைத்தல் :

உவந்து அலர் சூட்டி உள்மகிழ்ந்து உரைத்தல் என்பது, தலை மகளை மகிழ்ந்து அவள் கூந்தற்கு அலரைச்சூட்டி, அதனால் பரவச மகிழ்ச்சியடைந்து கூறுதல்.

உவகை அறிவொடுகூடியது; மகிழ்ச்சி அறிவழிந்தது. என்னை?

[2] 'உள்ளக் களித்தலுங் காண மகிழ்தலும்
கள்ளுக்கில் காமத்திற் குண்டு.'

என்னுங் குறட்குப் பரிமேலழகர் உரையானும் உணர்க.

அடிமலர் போற்றவும் போற்றியன் பாலிவ ளாய்முடிக்கியான்
கடிமலர் சூட்டவுங் காட்டிய தாற்கள்வர் காய்ந்தெறியும்
துடிமலர் சீர்க்கெதிர் கூகை யிரட்டுஞ் சுரத்திடைபோர்
வடிமலர் வேற்படை யான்வாணன் மாறையென் மாதவமே.

(இ - ள்.) கள்வர் சினந்து அடிக்குந் துடியின்கண் விரிவாகிய தாளவோசைக்கு எதிராகக் கூகை யொலிக்குங் காட்டிடை ஒப்பற்ற கூர்மை விரிந்த வேற்படை யுடைய

1. குறள். ஈகை - ரு.
2. குறள். புணர்ச்சி விதும்பல் - க.

வாணன் தென்மாறை நாட்டிலிருக்கின்ற என்னுடைய மாதவம், இவளடி மலரைப் போற்றவும், போற்றி அன்பால் இவளாய்ந்து முடித்த கொண்டைக்கு யான் மணமலரைச்சூட்டவும் காட்டியது என்றவாறு.

போற்றல் - ஈண்டு வருடல்; வருடி - வருத்தந்தீர்த்து. கடிமலர் -மணமலர். காய்தல் - சினத்தல். எறிதல் - அடித்தல். துடி - பாலைநிலத்துப் பறை. மலர்தல் - விரிதல். சீர் - தாளவோசை. இரட்டுதல் - ஒலித்தல். சுரம் - காடு. வடி - வடித்தற்றொழில். ஆல் - அசை. (நகஅ)

### கண்டோரயிர்த்தல் :

கண்டோர் அயிர்த்தல் என்பது, வடிவின் மேம்பாட்டாற் கண்டோர் ஐயமுற்றுக் கூறுதல்.

சையத் திரள்புயன் சந்திர வாணன் தனிபுரக்கும்
வையத் துறைகின்ற மானிட ரோவன்றி வானவரோ
நையப் படுமழல் வெஞ்சுரத் தூடு நடந்தவரென்
றையப் படுவதல் லாலுண்மை சால அறிவரிதே.

(இ - ள்.) வருகின்றோர் உளம் நையப் பாலை அழல்படும் வெய்ய சுரத்தில் நடந்த இவர், மலைபோல் திரண்ட புயத்தை யுடையவனாகிய சந்திரவாணன் ஒப்பிலாது காத்தளிக்கும் புவியின்கண் உறைகின்ற மானிடரோ! அல்லது, வானுலகின்கணுள்ளவரோ என்று ஐயப்படுவதல்லாமல் உண்மையை மிகவும் அறியவரிது என்றவாறு.

சையம் - மலை. திரள்புயம் - வினைத்தொகை. புரத்தல் - காத்தல். வையம் - புவி. 'அழல்படும்' என இயையும். சால-மிகவும்.

### கண்டோர் காதலின் விலக்கல் :

கண்டோர் காதலின் விலக்கல் என்பது, கண்டோர் காதலினால் போக்கை விலக்கி, எம் பாடியில் தங்கிப்போம் என்று கூறுதல்.

கண்டோராவார் - பாலைநிலத்து எயிற்றியர். ஆடவர் கண்டோர் எனில் வருங்குற்றம் என்னையெனின், 'கலந்துடன் வருவோர் புலம்பல் தேற்றல்' [செய். நசஎ] என்னுங் கிளவிச் செய்யுளில், யான் தலைவனைக் கண்டேன், என் காதலி தலைவியைக் கண்டாள் என்பதனோடு மாறுபடுமென்று உணர்க.

மாலுந் திருவு மெனவரு வீர்தஞ்சை வாணன்தெவ்வூர்
போலுஞ் சுரமினிப் போகவொண் ணுது பொருப்படைந்தான்
ஆலும் புரவி யருக்கனிக் கங்குல் அடற்கடமான்
பாலுந் தசையுமுண் டேதங்கு விரெங்கள் பாடியிலே.

(இ - ள்.) மாலும் திருவும் என்று சொல்ல வருவீர், தஞ்சைவாணன் பகைவரிருக்கும் ஊர்போலும் பாழாகிய சுரம் இன்று இவ்விடம் விட்டு அப்பாற் போகத்தகாது; ஆரவாரஞ் செய்யும் புரவிபூட்டிய தேரில் வரும் அருக்கன் அத்த வெற்படைந்தான்; இருள் வருங்காலமாகிய இக்கங்குலில் போர்செய்யும் கடமான்பாலும் தசையும் யாங்கள் தருதும், அதனை யுண்டு எங்கள் பாடியில் தங்குவீர் என்றவாறு.

தெவ்வூர் பாழாய் மக்களியக்கமின்றி யிருத்தலின், சுரம் உவமையாயிற்று. 'அருக்கன் பொருப்படைந்தான்' எனக் கூட்டுக. ஆலுதல் - ஆரவாரித்தல். அடல் - போர். (௩௨0)

கண்டோர் தன்பதியணிமை சாற்றல் :

கண்டோர் தன் பதி அணிமை சாற்றல் என்பது, இவ்விடத்தில் நும் ஊரில் வைகிப் போதல் பொருந்தாது, எம்பதிப்போதல் வேண்டுமென்று தலைவன் கூறியவழித், தலைவன்றன்பதி அணித்தென்பதனைக் கண்டோர் கூறுதல்.

தொடங்கும் பிறைநுதற் றோகையு நீயுமுன் தோன்றுகின்ற
கடங்குன் றிரண்டுங் கடந்துசென் றுற்கம லத்தடமும்
கிடங்கும் புரிசையுஞ் சூழ்ந்தெதிர் தோன்றுங் கிளைத்தபைந்தார்த்
தடங்குங் குமநெடுந் தோள்வாணன் மாறையுந் தஞ்சையுமே.

(இ - ள்.) வளர ஆரம்பிக்கும் பிறைபோலும் நுதலையுடைய தோகைபோன்றவளும் நீயும் முன்னே தோன்றுகின்ற காடும் சிறுமலையும் ஆகிய இரண்டும் கடந்து சென்றால், கமலப்பொய்கையும் அகழும் புரிசையும் சூழ்ந்து வாவியிற் கிளைத்த நீலத்தார் அணிந்த பெருமையுடைய குங்குமம் பூசிய நெடிய தோளையுடைய வாணன் மாறையும் தஞ்சையும் எதிராகத் தோன்றும் என்றவாறு.

தொடங்குதல் - ஆரம்பித்தல். தோகை - ஆகுபெயர். கடம் - காடு. குன்று - சிறுமலை. கிடங்கு - அகழ். புரிசை - மதில். கிளைத்தல் - தோன்றுதல். 'கிளைத்த பைந்தார்' என்பது,

[1] 'குண்டுசுனை பூத்த வண்டுபடு கண்ணி.'

என்றாற்போல, ஒற்றுமை நயத்தாற் செயப்படுபொருண்மேல் நின்றது. (ருஉக)

### தலைவன் தன்பதியடைந்தமை சாற்றல்:

*தலைவன் தன்பதி அடைந்தமை சாற்றல் என்பது, தலைவன் தலைமகட்குத் தன்பதி யடைந்தமை யுணர்த்தல்.*

**சந்தனந் தோய்ந்து நயங்குமுத் தாரந் தரித்துவிம்மும்**
**நந்தனந் தாங்கி நடுங்கிடை போல நடந்திங்ஙனே**
**நொந்தனங் காலென்று நோவல்பொன் னேயொரு நோயுமின்றி**
**வந்தனங் காணிது காண்வாணன் மாறை வளநகரே.**

(இ - ள்.) பொன்போன்றவளே ! சந்தனந்தோய்ந்து விளங்கப்பட்ட முத்துமாலை யணிந்து பூரிக்கும் நமது தனந்தாங்கி நடுங்கும் இடைபோல நடந்து இவ்விடத்தில் கால் நொந்தனம் என்று நோவற்க; ஒரு துன்பமும் இன்றி வந்தனம், வாணன் மாறை வளநகர் இது காண்பாய் என்றவாறு.

தான் அவள் என்னும் வேற்றுமையின்மையான், 'நம் தனம்' என்று கூறினானென்க. பொன் - ஆகுபெயர். நோய் - துன்பம். 'வந்தனங்காண்' என்புழி, காண் உரையசை. (ருஉஉ)

இவற்றுள், 'பாங்கி தலைவற்கு உடன்போக்கு உணர்த்த'லும், 'தலைவிக்கு உடன்போக்கு உணர்த்த'லும், ஆகிய இரண்டும் போக்கறிவுறுத்தல்.

'தலைமகன் மறுத்த'லும், 'தலைவி நாணழிவிரங்க'லும் ஆகிய இரண்டும் போக்குடன்படாமை.

'பாங்கி தலைவனை யுடன்படுத்த'லும், 'தலைவி கற்பின்மேம்பாடு பூண்முலைப் பாங்கி புகற'லும் ஆகிய இரண்டும் போக்குடன் படுதல்.

---

1. திருமுரு - கககூ.

‘தலைவன் போக்குடன்படுத’லும், ‘தலைவி யொருப்பட்டெழுத’லும், ‘பாங்கி சுரத் தியல்புரைத்துழித் தலைமகன் சொல்ல’லும் ஆகிய மூன்றும் உடன்போக்குடன்படுதல்.

‘பாங்கி கையடை கொடுத்த’லும், ‘வைகிருள் விடுத்த’லும், ‘தலைமகன் தலைமகளைச் சுரத்துய்த்த’லும் ஆகிய மூன்றும் போக்கல்.

‘தலைவன் தலைவி அசைவறிந்திருத்த’லும், ‘கண்டோர் காதலின் விலக்க’லும் ஆகிய இரண்டும் விலக்கல்.

‘தலைவன் தலைவியை யுவந்தலர்சூட்டி யுண்மகிழ்ந்துரைத்த’லும், ‘கண்டோரயிர்த்த’லும் ஆகிய இரண்டும் புகழ்தல்.

‘கண்டோர் தன்பதியணிமை சாற்ற’லும், ‘தலைவன் தன்பதி யடைந்தமை தலைவிக் குணர்த்த’லும் ஆகிய இரண்டும் தேற்றல் எனக் கொள்க.

உடன்போக்கு முற்றிற்று.

---

## ௨௨. கற்பொடுபுணர்ந்த கவ்வை

அஃதாவது, தலைவி தலைவனது உடைமையாய்க் கற்பொடு கூடிய வதனை அயலார் விராய சேரியர் பலரும் அறிதல்.

[1] 'செவிலி புலம்பல் நற்றாய் புலம்பல்
கவர்மனை மருட்சி கண்டோ ரிரக்கம்
செவிலிபின் றேடிச் சேறலென் றாங்குக்
கற்பொடு புணர்ந்த கவ்வையை வகைத்தே.'

என்னுஞ் சூத்திர விதியால், கற்பொடு புணர்ந்த கவ்வை ஐவகைப் படும்.

செவிலி பாங்கியை வினாதல் :

நலம்புனை யாயமு நீயுநற் றாயொடு நானுநன்பொன்
சிலம்புயர் சோலையுஞ் சிற்றிலும் பேரிலுந் தெண்டிரைமேல்
வலம்புரி யூர்வயல் சூழ்தஞ்சை வாணனை வாழ்த்தலர்போல்
புலம்புற மாதரெங் கேமக ளேதனிப் போயினளே.

(இ - ள்.) நலம்புனைந்த ஆயமும் நீயும் நற்றாயொடு நானும் நல்ல அழகிய மலையிடத்து உயர்ந்த சோலையும் அவள் விளையாடுஞ் சிற்றிலும் அவள் இயங்கித் திரியும் பெரிய மனையும், தெளிந்த திரையின்மேல் வலம்புரிச் சங்கு ஊர்ந்துவரும் வயல்சூழ்ந்த தஞ்சைவாணனை வாழ்த்தாத பகைவர்போலப், புலம்புதலடைய மாதர் எங்கே தனியாய்ப் போயினாள், யான் அறியச் சொல்வாயாக என்றவாறு.

நலம் புனை யாயம் - தலைவிக்கு அழகாய் அலங்கரிக்கும் ஆயம். ஒடு - எண்ணொடு. (௩௨௩)

பாங்கி செவிலிக்குணர்த்தல் :

வெறுத்தா ரொறுத்துரை மேலுநங் கேளிர் விழைதலின்றி
மறுத்தா ரவற்கு மணமத னாற்றஞ்சை வாணர்பிரான்
கறுத்தார் புரத்து நடந்தனள் காளைபின் காமர்கற்பால்
பொறுத்தா ளழற்சுரந் தன்னையன் னாய்நின் பொலங்கொடியே.

---

1. அகப்பொருள் விளக்கம். வரைவியல் - ௧௩.

(இ - ள்.) அன்னாய்! நின்பொலங்கொடி, நம் சுற்றத்தார் வெறுத்தார், அதன்றியும், ஒறுத்த சொல்லைச் சொல்லுதன்மேலும் விழைதலின்றி அத்தலைவற்கு மணத்தை மறுத்தார்; அதனால் தஞ்சைவாணர் குலத்துக் குப்பிரான் கோபித்த பகைவரூராகிய காட்டில் காளைபின் நடந்தனள், அழகிய கற்பினால் சுரத்தழல்தன்னைப் பொறுத்தாள் என்றவாறு.

ஒறுத்துரை - சினத்துப் பல்காற் கூறுதல். விழைதல் - விருப்பம். கறுத்தல் - கோபித்தல். காளை - பாலை நிலத்துத் தலைவன். காமர் - அழகு. 'மணத்தை மறுத்தார்' எனவும், 'சுரத்தழறன்னை' எனவும் இயையும். (நஉச)

பாங்கியி னுணர்ந்த செவிலி தேற்றுவோர்க்
கெதிரழிந்து கூறல்:

மாரு வளவயல் சூழ்தஞ்சை வாணன்தென் மாறையென்கண்
ஆரு வருந்துய ராற்றுகின் றீரறி வேகொளுத்தி
ஊரு வனகடிந் தென்முலை யூறமிர் தூட்டியின்சொல்
கூரு வளர்த்ததற் கோவென்னை நீத்ததென் கோல்வளையே.

(இ - ள்.) வளம்மாறுத வயல் சூழ்ந்த தஞ்சை வாணன் தென்மாறையில் என்னிடத்தில் ஆறுத அருந்துயரை யாற்றுகின்றவரே, அறிவைப்பொருத்தித் துன்பமாவன கடிந்து என் முலையினூறும் அமிழ்தத்தை யூட்டி இனிய சொல்லைக் கூறி அரிதாய் வளர்த்ததற்கோ என் அழகிய வளையையுடையாள் என்னை விட்டு நீங்கியது என்றவாறு.

'வளமாறு' என இயையும். ஏகாரம் - ஈற்றசை. கொளுத்தல் - பொருத்தல். ஊறு - துன்பம். கூறு - கூறி. நீத்தல் - துறத்தல். கோல்வளை - ஆகுபெயர்; கோலம் - அழகு; கோல் எனக் கடைக்குறை. கோல் - வளையிற் புள்ளி யென்பாருமுளர். அழிந்து கூறல் - நொந்துகூறல். (நஉ௫)

செவிலிதன் அறிவின்மைதன்னை நொந்துரைத்தல்:

செவிலி தன் அறிவின்மைதன்னை நொந்து உரைத்தல் என்பது, தலைவி போதற்குத் தன் குறிப்பினால் அறிவித்த தன்மையை அறிந்திலேன் என்று தன் அறிவின்மைதன்னை நொந்து கூறல்.

**வழியா வரும்பெரு நீர்த்தஞ்சை வாணனை வாழ்த்தலர்போல்**
**கழியாத அன்புடைக் காளைபின் னாளைக் கலந்துகொண்டல்**
**பொழியாத வெஞ்சுரம் போகுவல் யானென்று போங்குறிப்பால்**
**ஒழியாதென் முன்புசொன் னாள்பேதை யேனென்றை யோர்ந்திலனே.**

(இ - ள்.) வாய்க்கால் நிறைந்து வழிந்து வரும் பெரிய நீர் சூழ்ந்த தஞ்சைவாணனை வாழ்த்தாத பகைவர் போல, நீங்காத அன்பையுடைய காளைபின்னே நாளைக் கலந்து ஒருகாலும் கார்வந்து பெய்யாத வெவ்விய காட்டில் யான் போகுவலென்று போங்குறிப்பை யெல்லாம் விடாது என்முன்பு சொன்னாள்; யான் அறிவிலேன் ஆதலால், ஒன்றையும் ஆராய்ந்தறிந்திலேன் என்றவாறு.

வழியா - வழிந்து. கழியாத - நீங்காத. ஒழியாது - விடாது. ஆல் - அசை. ஒன்றை என்புழிச் சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. (௩உ௬)

செவிலி தெய்வம் வாழ்த்தல்:

**இணங்கிப் புவனத் தெவருமில் லாவென் இளங்கொடியாள்**
**உணங்கிக் கழித லொழியவென் பால்வர உன்னையன்பால்**
**வணங்கிப் பலமுறை வாழ்த்துகின் றேன்தஞ்சை வாணன்தெவ்வை**
**அணங்கித் திரள்புயத் தான்மல யாசலத் தாரணங்கே.**

(இ - ள்.) பகைவரை வருத்தியவதனாற் பூரித்துத் திரண்ட புயத்தை யுடையவனாகிய தஞ்சைவாணனது பொதியமலையி லிருக்கின்ற அரியதெய்வமே! இப்புவனத்து நட்புக் கூடுதற்கு எவரும் இல்லாத என் இளங்கொடிபோல்வாள் வாடிப் பாலைவனத்துப் போதலையொழிய, என்னிடத்து வர, உன்னை அன்பாற் பலமுறை வணங்கித் துதிக்கின்றேன்; வரின் நினக்குச் சிறப்புச் செய்வேன் என்றவாறு.

இணங்க - இணங்கு எனத்திரிந்து நின்றது;

[1] 'காப்பி ஜெப்பி ஞார்தியி னிழையின்.'

என்னும் வேற்றுமையியற் சூத்திரத்தான், இழைத்தல் என்னும் சொல் இழை என நின்றுற்போலக் கொள்க. உணங்கி - வாடி. கழிதல் - போதல். அணங்கி - வருத்தி. மலயாசலம் - பொதிய மலை. ஆரணங்கு - அரிய தெய்வம். 'வரின் நினக்குச் சிறப்புச் செய்வேன்' என்பது அவாய்நிலையான் வந்தது. இவை மூன்று கிளவியும் செவிலி புலம்பற்கு உரியவாம் என்க. (௩உஎ)

### செவிலி நற்றாய்க்கறத்தொடு நிற்றல் :

செவிலி நற்றாய்க்கு அறத்தொடுநிற்றல் என்பது, செவிலி நற்றாய்க்கு உடன்போக்கை வெளிப்படுத்திக் கூறல்.

**சகநல்க வந்தருள் சந்திர வாணன்தென் தஞ்சைநல்லாய்**
**முகநல்கி நல்க முலைகொடுத் தாரின்முத் தங்கொடுத்தார்**
**மிகநல்ல ரென்பது மன்பதை தேற விடலைபின்னே**
**மகநல்கு மந்தியங் கானடந் தாளுன் மடந்தையின்றே.**

(இ - ள்.) உலகத்தில் மகிழ்ச்சி கொடுக்க வந்தருளப்பட்ட சந்திரவாணனது அழகிய தஞ்சையிலிருக்கின்ற நல்லாய்! முகங்கொடுத்து மேலைக்கு மகிழ்ச்சி அவள் கொடுக்க எண்ணி முலைகொடுத்தாரின் முத்தங்கொடுத்த கணவரே மிக நல்லர் என்பது உலகத்து மக்களெல்லாம் தெளிய, உன் மடந்தை இன்று மகப்பெறு மந்திகள் இயங்குங் காட்டில் விடலைபின்னே நடந்தாள் என்றவாறு.

சகம் என்புழி ஏழனுருபு தொக்கது. நல்லாய் - நற்றாய். மன்பதை - மக்கட்கூட்டம். தேற - தெளிய. மக - குரங்குக்குட்டி;

[2] 'கோடுவாழ் குரங்குங் குட்டி கூறுப.'

[2] 'மகவும் பிள்ளையும் பறழும் பார்ப்பும்
அவையு மன்ன வப்பா லான.'

என்பதனுன் உணர்க. மந்தி - பெண்குரங்கு;

[2] 'குரங்கு முசுவு மூகமு மந்தி.'

என்பதனுன் உணர்க. கான் - காடு. (௩உஅ)

1. தொல். சொல். வேற்றுமையியல் - எஉ.
2. தொல். பொருள். மரபியல் - கஙு, கச, சுஅ.

நற்றாய் பாங்கியொடு புலம்பல் :

முன்னே யிதனை மொழிந்தனை யேல்நுந்தை முந்தைமணம்
பின்னேய் குழலி பெறுளல்ல ளேபிற ராதெவர்க்குந்
தன்னேயம் வைத்தரு ளுந்தஞ்சை வாணன் தமிழ்ச்சிலம்பில்
பொன்னே யனையநல் லாயவ மேசுரம் போக்கினையே.

(இ - ள்.) எவர்க்கும் நிலைவிட்டுப் பெயராது தன்னுடைய அன்பை வைத்துக்காக்கும் தஞ்சைவாணன் பொதியமலையிடத்துப் பாற்கடற்பிறந்த மடவார் பலருள்ளும் திருமகளே யொப்பாகிய நல்லாய்! சுரம்போவதற்கு முன்னமே இதனை மொழிந்தனையாகின் நுந்தந்தை முற்காலத்தில் என்னை மணஞ்செய்ததுபோலப் பின்னுதல் பொருந்திய குழலையுடையாள் மணம் பெறுவாளே, இச் செய்தியை என்னுடன் சொல்லாமல் மகளை வீணே சுரத்திற் போக்கினையே என்றவாறு.

நுந்தை - நுந்தந்தை. முந்தை - முன்பு. மணம் என்புழி உவமத்தொகை. பிறழ்தல் - பெயர்தல். நேயம் - அன்பு. பொன்னே என்புழி ஏகாரம் பிரிநிலை; அவளுடன் பிறந்தார் பலருள்ளும் அவளையே பிரித்து வாங்குதலின். அவம் - வீண். சுரம் - கான். ()

அதுகேட்ட பாங்கி அழுங்கக்கண்டு நற்றாய் புலம்பல் :

இல்லுங் கழங்கா டிடங்களு நோக்கி யிரங்கல்வம்பும் [னுர்
வல்லும் பொருங்கொங்கை மங்கைநல் லாய்தஞ்சை வாணனென்
புல்லுந் துணைவியர் போல்வினை யேன்பெற்ற பூவையன்னுள்
செல்லுஞ் சுரத்தழ லன்றுன்கண் ணீரெற் றெறுகின்றதே.

(இ - ள்.) கச்சும் சூதும் தம்முட்பொருங் கொங்கையையுடைய மங்கை நல்லாய்! தஞ்சைவாணனுக்குப் பகையாயினோர் கூடும் மனைவியர்போலத் தீவினைசெய்து யான் பெற்ற பூவைபோன்ற மகள் வருந்திச்செல்லும் பாலைச் சுரத்தில் விழுந்திருக்கும் அழலன்று, அழுகின்ற நினது கண்ணீரே யென்னைச் சுடுகின்றது; மகள் இயங்கித் திரிகின்ற மனையையும் அவள் கழங்காடுகின்ற இடங்களையும் நோக்கி நீ கலுழற்க என்றவாறு.

கழங்காடுதல் - கழற்சிக்காய் எழு கைப்பிடித்தாடுதல். இரங்கல் - அழுதல். வம்பு - கச்சு. வல்லு - சூது. வம்பும் வல்லும் பொருதல் - வல் ஒப்புப் பார்க்க வருங்கால் வம்பே மறையற்க என்புழி, நீ யொப்பாகாயென்று வம்பு விலக்குழி, ஒன்றோடொன்று பொருதலாயிற்று. தெறுதல் - சுடுதல். (௩௩0)

நற்றாய் பாங்கியோடு புலம்பல் :

நேயம் புணைதுணை யாகவெங் கானக நீந்தலெண்ணி
ஆயம் புலம்ப அகன்றன ளோகல் லகங்குழைய
மாயம் புகலொரு காளைபின் வாணன்தென் மாறையன்னீர்
சேயம் புயமலர் போலடி நோவவென் சில்வளையே.

(இ - ள்.) வாணன் தென்மாறை நாடுபோன்ற பெண்காள்! கல்லும் நெஞ்சங்குழையப் பொய் சொல்லப்பட்ட ஒரு காளையின் எனது சில்வளையை யுடையாள் சிவந்த தாமரை மலரையொக்கும் அடிகள்நோவ வெவ்விய காடாகிய வெள்ளத்தை நீந்த எண்ணி, அன்பினைத் தெப்பமும் துணையுமாக ஆயக்கூட்டம் புலம்பப் பிரிந்து போயினள் என்றவாறு.

நேயம் - அன்பு. புணை துணை என்புழி உம்மைத்தொகை. நீந்தல் என்பதனால் வெள்ளம் வருவிக்கப்பட்டது. எகாரம் ஈற்றசை. கல் என்புழி சிறப்பும்மை தொக்குநின்றது.

[1] 'குன்றின், நெஞ்சுபக வெறிந்த அஞ்சுடர் நெடுவேல்' என்பதுபோலக், கற்கு நெஞ்சு கூறினரென்று உணர்க. மாயம் - பொய். அம்புயம் - தாமரை. சில்வளை - ஆகுபெயர். (௩௩௧)

நற்றாய் அயலார் தம்மொடு புலம்பல் :

மேனுள் வரங்கிடந் தென்போல் வருந்தி மிகவுமெய்ந்நொந்
தீனு தவர்துன்ப மெய்துவ ரோவிமை யோருலகம்
தானுண நீடு மதிற்றஞ்சை வாணன் தமிழ்ச்சிலம்பின்
மானுர் விழியனை யாள்விளை யாடிய வண்டல்கண்டே.

1. குறுந்தொகை. கடவுள்வாழ்த்து.

(இ - ள்.) தேவருலகத்தார் நாண நீண்ட மதில் சூழ்ந்த தஞ்சைவாணன் தமிழ்ச்சிலம்பில் விழிமான் போன்றவள் விளையாடிய வண்டலம்பாவையைக் கண்டு பண்டைநாளில் வரங்கிடந்து என்னைப்போற் பத்துமாதஞ் சுமந்து வருந்தி மிகவும் மெய்நொந்து பெறாதார் துன்பம் எய்துவரோ, யானும் பெறுதிராது, பெற்றுத் துன்பத்தை எய்தினேன் என்றவாறு.

மேனாள் - பண்டைநாள். ஈனாதவர் - பெறாதவர். வண்டல் - ஆகுபெயர். எய்திலரே என்பது முன்னிலையெச்சம். (௩௩௨)

நற்றாய் தலைமகள்பயிலிடம் தம்மொடு புலம்பல் :

நற்றாய் தலைமகள் பயிலிடம் தம்மொடு புலம்பல் என்பது, நற்றாய் தலைவி பழகி விளையாடும் இடங்களோடு நொந்துகூறல்.

செயலைத் தருவின் திருநிழ லேபெருஞ் சிற்றில்லமே
வயலைக் கொடிநொச்சி மண்டப மேதஞ்சை வாணனென்னூர்
இயலைத் தனித்தனி தந்தன ளேநமக் கின்றிதன்றே
கயலைப் பொருதகண் ணள்மேலும் வாழ்விக்குங் கட்டளையே.

(இ - ள்.) அசோகத்தருவின் அழகிய நீழலே! பெரிதாய் வளர்த்த சிற்றில்லமே! வெளியிலே செய்த கொடிகட்டிய மதில்சேர்ந்த மண்டபமே! தஞ்சை வாணனுக்குப் பகைவரிலக்கணத்தை நமக்கு இன்று தனித்தனி தந்தாள் கயலுடனே போர்புரிந்த கண்ணாள்; இனிமேலும் நம்மை வாழ்விக்கும் கட்டளை யிதுவன்றோ என்றவாறு.

செயலை - அசோகு. திரு - அழகு. பெருஞ்சிற்றில் - அவர் விளையாடுஞ் சிற்றிலினும் பெரிதாய் வளர்த்த சிற்றில். வயலை - வெளி. நொச்சி - மதில். 'தனித்தனிதருதல்' பகைவர் பலராதலால் அவரவர் படுந்துன்பங்களை வேறுவேறு கொடுத்தல். மேலும் - இனிமேலும். கட்டளை - முறைமை.

இவை ஐந்தும் நற்றாய் புலம்பற்கு உரியவாமென்க. (௩௩௩)

**நிமித்தம்போற்றல் :**

நிமித்தம் போற்றல் என்பது, சகுனப்புள்ளைத் துதித்தல்.

வடியேய் புகர்முக வாள்வல வாணன்தென் மாறையுள்யான்
அடியே தொழுந்தெய்வ மாகநிற் பேணி யரும்பலியிப்
படியே தருகுவ லென்றுமின் னேயிப் பதியுவகைக்
கொடியே வரக்கரை நீகொடி யேன்பெற்ற கொம்பினையே.

(இ - ள்.) இப்பதியிடத்து மகிழ்ச்சிகொண் டிருக்கின்ற காகமே! பாவியாகிய யான்பெற்ற கொம்புபோல் வாளை ஈண்டுவர நீ அழையாய், அழைத்தவுடனே வருவள்; அவள் வந்தால், வடித்ததொழில்பொருந்திய புகர்நிறத்தை முகத்திலுடைய வாட்டொழிலில் வல்ல வாணனது தென் மாறையுள் யான் வழிபடுகடவுளாக நின்னைப்போற்றி, சோறு தசை முதலிய அரிய பலியை இன்று கொடுத்தாற் போல் என்றும் தருவேன் என்றவாறு.

வடி - வடித்ததொழில். புகர் - இரத்தக் கறைப் புள்ளி. அடி தொழுந் தெய்வம் - வழிபடுகடவுள். பேணி - போற்றி. அரிய பலி - கிடையாதபலி. இன்னே - இப்போதே. கொடி - காகம். கரைதல் - அழைத்தல். காகமழைத்தல் ஊர்க்குப் போயினர் வருவரென்னும் உலகியல்புபற்றிக் கூறினளென்று உணர்க. 'இன்னே வர' என இயையும். (௩௩௪)

**சுரந்தணிவித்தல் :**

சுரம் தணிவித்தல் என்பது, சுரத்தின்வெம்மை குளிருமாறு கூறுதல்.

வெஞ்சுர நாடு வியன்சுர லோகமும் வெங்கடுங்கான்
ஐஞ்சுர தாரு வனங்களு மாக அகிற்புகைபோல்
மஞ்சுர வாட்க மாமதில் சூழ்தஞ்சை வாணன்வெற்பில்
பஞ்சுர மாகு மொழிச்சுரு ளோதியென் பைந்தொடிக்கே.

(இ - ள்.) அந்நகரினுள்ளார் குழற்கு ஊட்டும் அகிற் புகைபோன்ற முகில் தவழப்பட்ட வலிய பொன்மதில் சூழ்ந்த தஞ்சைவாணனது வெற்பிடத்துப் பஞ்சுரமென்னும் பண்ணுக்கு ஒப்பாகிய மொழியையும் சுருண்ட குழ

லையும் உடைய என் பசிய தொடியையணிந்தாட்கு, வெய்ய பாலையுலகும், விரிவாகிய தேவருலகும், வெய்யகடியகாடும், அத்தேவருலகிலுண்டாகிய பஞ்சதருச்சோலையுமாக என்றவாறு.

சுரநாடு - பாலையுலகம். வியன் - விரிவு. ஐந்து சுரதரு வாவன - சந்தானம், அரிசந்தனம், மந்தாரம், பாரிசாதம், கற்பகம். பஞ்சுரம் - பாலைநிலத்துப்பண். ஓதி - குழல். மொழிச் சுருளோதி - உம்மைத்தொகை. பைந்தொடி - அன்மொழித் தொகை. (௩௩௫)

**தன்மகள் மென்மைத்தன்மைக்கு இரங்கல் :**

தன் மகள் மென்மைத் தன்மைக்கு இரங்கல் என்பது, நற்றாய் தன்மகள் மெல்லிய இயல்பாகிய தன்மைக்கு இரங்கல்.

[1] தாமே தமக்கொப்பு மற்றில் லவர்தில்லைத் தண்ணனிச்சப்
பூமேல் மிதிக்கிற் பதைத்தடி பொங்குநங் காயெரியும்
தீமேல் அயில்போற் செறிபரற் கானிற் சிலம்படிபா
யாமே நடக்க அருவினை யேன்பெற்ற அம்மனைக்கே.

[இது பிறசெய்யுட் கவி.] (௩௩௬)

**இளமைத்தன்மைக்கு உளமெலிந்திரங்கல் :**

இளமைத் தன்மைக்கு உளம் மெலிந்து இரங்கல் என்பது, நற்றாய் தலைவி இளமைத்தன்மைக்கு மனமெலிந்து இரங்கிக் கூறல்.

இரும்பா மனங்கொண்ட வாறென்னை நீதன்னை யேத்தியென்றும்
வரும்பா வலர்க்கருள் வானன்தென் மாறை வளவயலில்
கரும்பார் மொழியா யழலென்று கண்ணீர் துடைத்தணைத்துன்
அரும்பா முலைசெய்ய வாய்ப்பசும் பாவைக் களிக்குமின்னே.

1. திருக்கோவையார் - உ௨அ.

இச் செய்யுளுக்கு மாறாக,

'அரக்காம்பல் நாறும்வா யம்மருங்குற் கன்னோ
பரற்கான மாற்றின கொல்லோ—அரக்கார்ந்த
பஞ்சிகொண் டூட்டினும் பையெனப் பையெனவென்று
அஞ்சிப்பின் வாங்கு மடி.' —நாலடியார், ௩௯௬.

என்னும் வெண்பா சில பிரதிகளில் காணப்படுகிறது.

(இ - ள்.) விளையாடும் பாவையை நோக்கி, தன்னைத் துதித்துவரும் புலவர்க்கு என்றும் அருளப்பட்ட தென் மாறைநாட்டு வளவயலில் வளருங் கரும்புபோன்ற மொழியினை யுடையாய்! அழாதையென்று கண்ணீர் துடைத்து அணைத்து, உன் மார்பில் அரும்பாத முலையைச் செய்ய வாயையுடைய பசும்பொன்னாற் செய்த பாவைக்களிக்கும் இளமைத் தன்மையையுடைய மின்போன்றவளே! என்னை விட்டுப் பிரிந்துபோக நீ இரும்பையொக்கும் மனங் கொண்ட முறைமை எப்படி என்றவாறு.

பாவலர் - புலவர். பசும்பாவை என்றதனால் பொன் வருவிக்கப்பட்டது. மின் - ஆகுபெயர். (௩௩௭)

அச்சத்தன்மைக்கு அச்சமுற்றிரங்கல்:

அச்சத்தன்மைக்கு அச்சமுற்று இரங்கல் என்பது, நற்றாய் தலைவியது வெருவுந்தன்மையை நினைந்து தான் அச்சமுற்று இரங்குதல்.

**நாள்மா தவிமலர் நாறிருங் கூந்தல் நடந்தவழிக்**
**கோள்மா குமிறுங் கொடுங்குரல் கேட்டொறுங் கூர்ங்கணையால்**
**வாள்மா முனைவென்ற வாணன்தென் மாறை மணிவரைவேய்த்**
**தோள்மா வெருவுங்கொல் லோவென்றென் ஆருயிர் சோர்கின்றதே.**

(இ - ள்.) குருக்கத்தியினது முறுக்கவிழ் மலர்மணக்கும் கரிய கூந்தலையுடையாள் நடந்த பாலைவழியில் கொலை செய்யும் விலங்குகள் குமிறப்பட்ட கொடிய குரலைக்கேட்குந்தோறும், கூரிய கணையினால் வாள்பிடித்துவரும் பெரிய பகையை வென்ற வாணன் தென்மாறை நாட்டில் இருக்கின்ற மணிவிளையும் வரையிடத்து உண்டாகிய வேய் போலுந் தோளையுடைய திருப்போல்வாள், அஞ்சுமோ என்று என் அரிய உயிர் வாடுகின்றது என்றவாறு.

'மாதவிநாள்மலர்' என இயையும். மாதவி - குருக்கத்தி. கோள் - கொலை. மா - விலங்கு. குமிறுதல் - சினந்து முழங்குதல். கேட்குந்தோறும் என்னுஞ் சொல் கேட்டொறும் என விகாரப் பட்டு நின்றது. முனை - பகை. வெருவுதல் - அஞ்சுதல். சோர்தல் - வாடல்.

இவை ஐந்தும் மனமருட்சிக்குரியவாமாறு காண்க. (௩௩௮)

கண்டோர் இரக்கம் :

**நொந்துங் கலுழ்ந்துந் துணைவிய ராற்றலர் நோக்கொடின்சொல்**
**தந்துங் கவையுந் தணந்துசென் றுளெனத் தாள்பணியார்**
**மைந்துங் கதமுங் கடிந்தருள் வாணன்தென் மாறையன்னுள்**
**பந்துங் கழங்குமெல் லாங்கண்டு வாடும் பயந்தவளே.**

(இ - ள்.) தம்மிடத்துப் பார்க்குங் குளிர்ந்தபார்வை யோடு இனியசொல் தந்ததனையும் அயலார் தூற்றும் அலரையும் விட்டு நீங்கிச்சென்றுளென நொந்தும் கலுழ்ந்தும் துணைவியராற்றலர், தாள்பணியாதார் வலியையும் சினத்தையும் போக்கிய வாணன் தென்மாறையன்னுள் விளையாடிய பந்தும் கழங்கும் மற்றுமுள்ளன யாவற்றையும் கண்டு பயந்தவள் வாடும் என்றவாறு.

கலுழ்தல் - அழுதல். 'நோக்கொடு இன்சொற் றந்ததற்கு நொந்தும் கவையைத் தணந்ததற்குக் கலுழ்ந்தும் ஆற்றலராயினர்' என நிரனிறையாய்ப் பொருள் கொள்க. தந்ததும் என்பது தந்தும் என விகாரப்பட்டு நின்றது. சண்டோர் - மாதரார்.

[1] 'பாலொடு தேன்கலந் தற்றே.'

என்புழிக், 'கலந்ததற்றே' என்பது, 'கலந்தற்றே' என நின்றாற் போற்கொள்க. கவ்வை கவை என இடைக்குறை. தணந்து - விட்டு நீங்கி. மைந்து - வலி. கதம் - சினம். பயந்தவள் - ஈன்றாள்.

இஃதொன்றும் கண்டோரிரங்கற்கு உரித்து. (ரு௩ க)

செவிலி ஆற்றாத்தாயைத் தேற்றல் :

செவிலி ஆற்றாத் தாயைத் தேற்றல் என்பது, செவிலி ஆற்றாத நற்றாயைத் தேறுமாறு கூறுதல்.

**நன்றே யிதென்று முகமுக நோக்கி நகைநகையா**
**மன்றே அலர்சொல்லு மாதர்முன் னேதஞ்சை வாணன்தொல்சீர்**
**சென்றே பரந்த திசைகளெல் லாஞ்சென்று தேர்ந்தணங்கை**
**இன்றே தருவனன் னேவருந் தாதிங் கிருந்தருளே.**

---

1. குறள். காதற்சிறப்புரைத்தல் - க.

(இ - ள்.) அன்னே, இவள் ஒருவன் பின்னே சுரம் போயின இது நன்றாயிருந்ததென்று ஒருவர் முகம் ஒருவர் நோக்கி நகையை நகைத்து வெளியிலே அலரைத் தூற்றும் மாதர்முன்னே, தஞ்சைவாணனது பழகிய கீர்த்தி போய்ப் பரந்த திசைகளெல்லாம் போய்த் தேடி அணங்குபோல் வாளை இற்றைப்பொழுதே தருவேன்; யான் போய்வருமளவும் வருந்தாது இங்கிருந்தருள் என்றவாறு.

முன் ஏகார மூன்றும் ஈற்றசை; பின் ஏகாரம் ஒன்றுந் தேற்றம். 'நன்றேயிது' என்னுங் குறிப்புமொழி அசதிக்கண் நிதையுணர்த்திநின்றது. நகையா - நகைத்து. மன்று - வெளி. நேர்தல்- தேடல். அணங்கு - ஆகுபெயர். (௩௪௰)

ஆற்றிடை முக்கோற்பகவரை வினாதல் :

ஆற்றிடை முக்கோற்பகவரை வினாதல் என்பது, செவிலி தேடிப் போங்கால் வழியிடை எதிர்வரும் முக்கோலுடைய அந்தணரை வினவுதல்.

**ஒருவெண் குடையிரு நீழல்முக் கோல்கொண் டொழுக்கத்தினால்**
**அருவெங் களரியைந் தாறுசெல் வீரரு வீரேழுபார்**
**மருவெண் திசைபுகழ் வாணன்தென் மாறையென் வஞ்சியன்னாள்**
**பொருவெஞ் சுடரிலை வேலொரு காளைபின் போயினளே.**

(இ - ள்.) ஒரு வெண்குடையினது பெரியநீழலிலே மூன்று தண்டுகொண்டு ஆசாரத்தினால் அரிய வெவ்விய களர்நிலத்தி லியைந்து வழிச்செல்வீர், ஏழுபாரினும் மருவிய எண்டிசையினுள்ளோரால் புகழப்பட்ட வாணனது தென்மாறை நாட்டிலிருக்கும் என்னுடைய வஞ்சிக்கொம்பு போன்றவள் போர்செய்யும் சுடர்பொருந்திய இலைபோலும் வேலையுடைய ஒரு காளைபின் போயினள்; மீண்டு வரக் கூறி அருள்புரிவீராக என்றவாறு.

இருமை - பெருமை. முக்கோல் - திரிதண்டு. ஒழுக்கம் - ஆசாரம். இயைந்து - பொருந்தி. ஆறு - வழி. 'மீண்டுவரக் கூறல்' அவாய் நிலையான் வந்தது. ஒன்றுமுதல் எட்டளவும் ஒழுங்காய்த் தொகை காட்டிவருதலால் செய்யுட்கு இஃதோர் அலங்காரந் தோன்றியவாறு காண்க. (௩௪௧)

மிக்கோ ரேதுக் காட்டல் :

மிக்கோர் ஏது காட்டல் என்பது, செவிலி வினயதற்கு மிக்கோர் அது உலகியல்பென்று காரணமெடுத்துக் காட்டல்.

இயங்கா வனமென் மகளொரு காளைபின் னேகினளென்
றுயங்கா தொழியஃ துலகியல் பாலுல வும்புயல்தோய்
வயங்கா டகமதில் சூழ்தஞ்சை வாணன் மணங்கமழ்தார்
புயங்காதல் கொண்டணைந் தாளய னர்தந்த பூமகளே.

(இ - ள்.) ஒருவருஞ் சஞ்சரியாத வனத்தில் என் மகள் ஒரு காளைபின் ஏகினளென்று வருந்தாதொழி; அவ்வாறு ஏகுதல் உலகவியல்பு; யாங்ஙனமெனின், வானத்து உலவும் புயலைத்தீண்டி விளங்கப்பட்ட பொன் மதில் சூழ்ந்த தஞ்சைவாணனது மணங்கமழ் மாலையணிந்த புயத்தைக் காதல்கொண்டு அயனர் படைத்த பூமிதேவி யணைந்தாள் என்றவாறு.

இயங்கல் - சஞ்சரித்தல். ஏகினள் - போயினள். உயங்கல் - வருந்தல். வயங்கல் - விளங்கல். ஆடகமதில் - பொன்மதில். அயனர் - பிரமனர். பூமகள் - பூமிதேவி. (௩௨௨)

செவிலி யெயிற்றியொடு புலம்பல் :

செவிலி எயிற்றியொடு புலம்பல் என்பது, செவிலி பாலைநிலத்துப் பெண்ணொடு புலம்பிக் கூறல்.

செருமக ளேயும் புயத்தய லான்பின் செலவிடுத்தென்
ஒருமக ளேயென் றுனையயிர்த் தேன்புனை ஓவியம்போல்
வருமக ளேதஞ்சை வாணனென் னார்துன்னும் வன்சுரத்தோர்
அருமக ளேயுரை யாயவள் போன அதரெனக்கே.

(இ - ள்.) போர்மகள்பொருந்திய புயத்தையுடைய அயலான்பின்னே போகவிடுத்து உன்னை என் ஒப்பற்ற மகளேயென்று ஐயமுற்றேன், அலங்கரிக்குஞ் சித்திரப் பாவைபோல் வரப்பட்ட பெண்ணே! தஞ்சைவாணனது பகைவராயுள்ளார் நெருங்கும் வலிய காட்டிலிருக்கும் எயினருக்கு அருமையாகிய மகளே! அம்மகள் போனவழியை எனக்குச் சொல்வாயாக என்றவாறு.

செருமகள் - வீரமகள். அயிர்த்தல் - ஐயமுறல். ஓவியம் - சித்திரப்பாவை. அதர் - வழி. இப்பாட்டில் இரண்டு முன்னிலை வந்ததற்கு இலக்கணமும் உதாரணமும் களவியலிற் கூறினும், ஆண்டுக் [செய். ககூ.] காண்க. (௩௪௩)

செவிலி சுரவொடு புலம்பல் :

இரவேய் குழலியிவ் வேதிலன் பின்செல்லல் என்றுசொல்லாக்
குரவே அறவுங் கொடியைகண் டாய்கொடிக் கோகனகம்
தரவே யெனவந்த சந்திர வாணன் தரியலர்போம்
சுரவேய் அழல்வழி யேதனிப் போயவென் தோகையையே.

(இ - ள்.) தருதற்குக் கொடியொடுகூடிய பதுமநிதி யெனவந்த சந்திரவாணன் தரியலர்போங் காட்டில் மூங்கி லழல்பொருந்திய வழியில் தனியேபோன என் தோகை போல்வாளை நீ இவ்விடைக் கண்டுழி, இருள்போன்ற குழ லாய்! இவ்வயலான்பின் செல்லாதே என்று சொல்லாத குரவே, நீ மிகவும் கொடியை என்றவாறு.

எனவே, நீ சொன்னால் மீளாளல்லள்; வாளாவிருத்தலான் அறவுங் கொடியை யென்று கூறினாள். ஏதிலன் - அயலான். 'குரவேகொடியை' என இயையும். கொடை மிகுதியாற் கட்டிய கொடி வாணன்மேலேற்றுக. கோகனகம் - பதுமநிதி. வேயழல் - மூங்கிலிற் பிறந்த அழல். தோகை - ஆகுபெயர். (௩௪௪)

சுவடு கண்டிரங்கல் :

சுவடு கண்டு இரங்கல் என்பது, செவிலி நிலத்தின்மேற் காலழுந்திய குறியைக் கண்டு இரங்கிக் கூறல்.

தொடுசிலைக் கானவ ரோடிய வேற்றுச் சுவடுவையே
அடுசிலைக் காளை யடியவை யேயறிந் தோரறிய
இடுசிலைப் பார்புரக் குந்தஞ்சை வாணன் இசைக்குருகப்
படுசிலைப் பாவை பதமிவை யேவண்டு பாடுகவே.

(இ - ள்.) அம்பு தொடுக்குஞ் சிலையையுடைய ஆற லைக்கானவர் எதிர் நிற்கமாட்டாது ஓடிய வேறுபட்ட அடிச்சுவடு உவையே, அவரைப் பொருஞ் சிலையுடனே

அம்பு பக்கத்தில் வீழத் துரத்திய காளையது அடிச்சுவடு அவையே, தனது வீரத்தை அறிவுடையோரறியச் சயத்தம் பம் நாட்டி உலகத்தைக்காக்குந் தஞ்சைவாணனது பொதிய மலையிடத்திருக்கும் பாவைபடி இவை என்றவாறு.

எனவே, அடிச்சுவடு கண்டவுடன் தலைவியை நினைந்திரங்கிய வாறுயிற்று. பலராய் வந்தெதிர்த்துத் தலைவனெதிர் நிற்கமாட்டாது ஒருவர் போனவழி யொருவர் போகாதோடுவாரது அடிச்சுவடு, ஒருவரடிபோ லொருவரடி யிராது வேறுபட்டுத் தோன்றுதலால், 'கானவரோடிய வேற்றுச்சுவடு உவை' என்றும், தனித்து நிற்றலின், 'பாவைபதமிவை' என்றும் கருதிக் கூறினுளென்க. இடுசிலை - வெற்றியாலிடுஞ் சயத்தம்பம். இசைக் குருகப்படுசிலை - இராவணனைப் பிணிக்கக் குறுமுனி பாடும் இசைக்கு உருகப்பட்ட பொதியமலை. வண்டு - அம்பு. பாடு - பக்கம். உகுதல்-விழுதல். ()

செவிலி கலந்துடன்வருவோர்க் கண்டு கேட்டல்:

செவிலி கலந்துடன் வருவோர்க்கண்டு கேட்டல் என்பது, உடன்போக்குப் போய்த் தலைவனும் தலைவியும்போல அன்பு கலந்து ஆற்றிடை வருவோர் இருவரைக்கண்டு செவிலி வினுதல்.

யானகம் போத வருந்தநும் போல்வனப் பெய்திவெய்ய
கானகம் போயினர் கண்டனி ரோகற்ப காடவிசூழ்
வானகம் போர்பயில் வானவற் கீந்தருள் வாணன்றஞ்சைத்
தேனகம் போருக மாதனை யாளுமொர் செல்வனுமே.

(இ - ள்.) கற்பகக்காடு சூழ்ந்த வானிடத்தைப் போர் செய்யுஞ் சேரனுக்குக் கொடுத்தருளப்பட்ட வாணனது தஞ்சாக்கூரின் வாவியிலிருக்குந் தேனெளிவிடப்பட்ட தாமரையிலிருக்கும் மாதுபோல்வாளும், ஒருசெல்வனும் உங்களைப்போல் அழகுபொருந்தி யான் நெஞ்சு மிகவருந்த வெய்ய காட்டிடத்துப் போயினர்; நீங்கள் கண்டீரோ, சொல்வீராக என்றவாறு.

அகம் - நெஞ்சு. போத - மிக. வனப்பு - அழகு. கானகம் - காட்டிடம். கற்பகாடவி - கற்பகக்காடு. வானகம் - வானிடம். வானவன் - சேரன். நகுதல் - ஒளிவிடல். (நடசசு)

### கலந்துடன்வருவோர் புலம்பல் தேற்றல் :

கலந்துடன் வருவோர் புலம்பல் தேற்றல் என்பது, செவிலி யிரங்கிப் புலம்புதலை எதிர்வந்தோர் தேற்றிக் கூறல்.

**யான்கண்ட அண்ணலு மெண்ணருங் காதலின் ஏகியவென்**
**மான்கண் டனகண் மயில்கண்ட மாதரு மாதருமம்**
**தான்கண்ட தண்ணளிச் சந்திர வாணன் தரியலர்போம்**
**கான்கண்ட மெய்குளி ரப்பொய்கை சூழ்தஞ்சை காண்பர்களே.**

(இ - ள்.) யான் காணப்பட்ட தலைவனும் என்னுடைய தலைவியாகிய மானை யுவமைகண்டாற்போலும் கண்ணை யுடைய இம்மயில்போன்றவள் கண்ட எண்ணுதற்கரிய காதலினால் தலைவன்பின் போகிய மாதரும் பெரிய தருமத்தைக் கண்ட தண்ணளியையுடைய சந்திரவாணன் தரியலர் செல்லும் காட்டைக்கண்ட உடம்பு குளிர இப்போது பொய்கை சூழ்ந்த தஞ்சையைக் காண்பார்கள் என்றவாறு.

'யான்கண்ட அண்ணலு மென்மயில்கண்ட மாதரும்' என்று கூறவே, எனக்கவள் தோன்றாமல் மறைந்து நின்றாள்; இவளும் அத்தன்மையளாதலின், இவள் அவளைக் கண்டதாகவும் தான் அவனைக் கண்டதாகவும் கூறினார். மயில் ஆகுபெயர். தண்ணளி - அன்பு. தலைவியை யான் கண்ட என்று கூறாது, என் மயில் கண்ட மாதர் என்று கூறியதென்னையெனின், தலைவன் காணுந் தன்மைய ளல்லது, அயலார் காணுந் தன்மையளல்லள் ஆதலால் இவ்வாறு கூறினார். என்னை,

[1] 'மலரன்ன கண்ணாள் முகமொத்தி யாயிற்
பலர்காணத் தோன்றல் மதி.'

என்னுந் திருக்குறளினு னுணர்க. (௩௪௭)

### செவிலி புதல்வியைக்காணாது கவலைகூர்தல் :

செவிலி புதல்வியைக் காணாது கவலைகூர்தல் என்பது, செவிலி தன் புதல்வியைக் காணாது துன்பம் மிகுதல்.

**நாணினுந் தாரணி கற்புநன் றென்று நயந்துமுத்தம்**
**பூணினும் பாரமி தென்னுமென் பொன்னையிப் போதெனக்குச்**
**சேணினுஞ் சார்புகழ் வாணன்தென் மாறைமன் சேரலரைக்**
**காணினுங் காணவந் தோவரி தாலிந்தக் கானிடையே.**

---

1. குறள். நலம்புனைந்துரைத்தல் - ௯.

(இ - ள்.) நாணைப்பார்க்கவும் முல்லைமாலை பணிந்த கற்பு நன்று என்பதனை விரும்பிச் சென்றாள் ஆதலால், முத்தாரம் பூணினும் பாரமென்று சொல்லும் மெல்லிய இயல்பினையுடைய என் பொன்னை எனக்கிப்போது, சேணினுஞ்சேர்ந்த புகழையுடைய வாணனுகிய தென்மாறை மன்னன் பகைவரை இந்தக் கானிடைக் காணினும், காண அரிது, அந்தோ யான் என் செய்வேன் என்றவாறு.

நயந்து என்புழிச், 'சென்றாளாதலால்' என்னுஞ் சொல் வருவித்து முடிக்க. 'எனக்கிப்போது' என இயையும். சேண் - தூரம். காணினும் என்னும் உம்மை அவர் கரந்து திரிதலின் அருமை தோன்ற நின்றது. அந்தோ - இரக்கக் குறிப்பு. ஆல் - அசை. ()

இவ் வொன்பதும் செவிலி பின்தேடிச் சேறற்கு உரியவாமாறு உணர்க.

கற்பொடுபுணர்ந்த கவ்வை முற்றிற்று.

இதுகாறும் ஐம்பத்து மூன்றுநாட் செய்தியென் றுணர்க.

## ௫௩. மீட்சி

அஃதாவது, மீண்டு வருதல். செவிலி புதல்வியைக் காணாது மீண்டு வருதலும், உடன்போய தலைவனும் தலைவியும் மீண்டு வருதலும் அடங்கப் பொதுப்பட மீட்சி யென்று கூறினர்.

[1]'தெளித்தல் மகிழ்ச்சி வினுதல் செப்பலென
வெளிப்பட வுரைத்த மீட்சிநால் வகைத்தே.'

என்னுஞ் சூத்திர விதியால், மீட்சி நால்வகைப்படும்.

தலைவி சேணகன்றமை செவிலி, தாய்க் குணர்த்தல்:

[2]ஏடார் மலர்க்குழல் வல்லியை யன்னையித் தீவினையேன்
நாடா இடமில்லை ஞாலத் தகல்வயின் நன்கமலக்
காடார் பழனக் கழனிநன் னடு கடந்துதன்னூர்
வாடா வளமனை கொண்டுசென் றனெரு வள்ளலின்றே.

[இது பிறசெய்யுட் கவி.] (௩௪௧)

தலைவன் தம்மூர்சார்ந்தமை சாற்றல்:

தலைவன் தம்மூர் சார்ந்தமை சாற்றல் என்பது, ஐம்பத்து நான்காநாள், தலைவன் மீட்சியில் தலைவியது ஊரைத் தாம் சார்ந்தமை தலைவிக்குச் சாற்றல்.

நினையான் எதிர்ப்பட்ட நீடிருங் குன்றிது நீகுடைந்த
சுனையா மதுமலர்ச் சோலைக ளாமுவை தூயவண்டல்
மனையா மிவையினி வாணன்தென் மாறையை வாழ்த்தலர்போல்
இனையா தெழுந்தருள் மானனை யாய்நம் எழில்நகர்க்கே.

(இ - ள்.) மானனையாய்! நின்னை யான் முன் எதிர்ப்பட்ட நீண்ட பெரிய குன்று இது; நீ குடைந்து விளையாடிய சுனையாம் அது; நீ விளையாடிய மலர்ச்சோலைகளாம் உவை; மாசிலாத வண்டலம்பாவை செய்து விளையாடிய சிற்றில்லம் இவை; இன்று வாணன் தென்மாறையை வாழ்த்தாதவர்போல வருந்தாது, நமது எழிலையுடைய நகர்க்கு எழுந்தருள் என்றவாறு.

---

1. அகப்பொருள் விளக்கம், வரைவியல் - ௨௦.
2. அம்பிகாபதிகோவை - ௪௦௮.

தான் அவள் என்னும் வேற்றுமை யின்மையான், 'நம் எழி னகர்' எனக் கூறினன். இனி - இன்று. இனையாது-வருந்தாது. ()

**தலைவி முன் செல்வோர் தம்மொடு தான்வரல் பாங்கியர்க் குணர்த்தி விடுத்தல் :**

புனையல ரேதிலர் காதலர் தாயர் பொருமையிற்போய்
இனைதுயர் யாதொன்று மின்றிவெங் கானிகந் தியானுமம்பொன்
வனைகழ லானும் வருவதெல் லாஞ்சென்று வாணன்தஞ்சை
துனைவுட னேகுகின் றீர்சொல்லு விரென் துணைவியர்க்கே.

(இ - ள்.) வாணனது தஞ்சைக்கு விரைவுடன் செல்கின்றீர், புனைந்து அலரைத் தூற்றுகின்ற அயலார், என்னிடத்துக் காதலையுடையராகிய தாயர் இவர்களது பொருமையினல் போய்வருந்துந் துன்பம் ஒன்றுமின்றி வெவ்விய காட்டை நீங்கிப்போய் மீண்டு யானும் அழகியபொன்னால் வனைந்த கழலையுடையானும் வருகின்ற செய்தியெல்லாஞ் சென்று என் துணைவியர்க்குச் சொல்லுவீர் என்றவாறு.

புனைதல் - இல்லதனை யுண்டாக்கிக் கூறுதல். ஏதிலர் - அயலார். இனைதுயர் - வருந்துந்துயர். இகந்து - நீங்கி. துனைவு - விரைவு.

[1] 'கதழ்வுந் துனைவும் விரைவுப் பொருள.'

என்பதனுற் கண்டுகொள்க. (ரு௰௪)

**முன்சென்றோர் பாங்கியர்க்குணர்த்தல் :**

போதலர்ந் தல்லை முனியுமெல் லோதிப் புனையிழைதன்
காதலன் பின்வரக் கண்டனம் யாங்கண்டல் வேலிமுந்நீர்
மாதலந் தன்னிரு தோள்வைத்த வாணன்தென் மாறைவண்ணச்
சூதலந் தொல்கவிம் மித்திரள் மாமுலைத் தோகையரே.

(இ - ள்.) தாழைக்காட்டை வேலியாகவுடைய கடல் சூழ்ந்த பெரிய புவியைத் தன் இருதோளில் வைத்த

1. தொல். சொல். உரியியல் - கக.

வாணன் தென்மாறைநாட்டில் அழகுபொருந்திய சூது இடுக்கண்பட்டுச் சுருங்கப்பூரித்துத் திரண்ட பெரிய முலையையுடைய தோகைபோல்வீர்! போதுகள் மலர்ந்து இருளைச் சினக்கும் மெல்லிய குழலினையும் புனைந்த பூணினையும் உடையாள் தன் காதலன் பின்வர யாம் கண்டனம் என்றவாறு.

அல் - இருள். ஓதி - கூந்தல். மெல்லோதிப் புனையிழை - அன்மொழித் தொகை. கண்டல் - தாழை. புயவலியால் குறும் படக்கிப் பூமியைக்காத்தலான், 'மாதலந் தன்னிருதோள்வைத்த வாணன்' எனக் கூறினர். அலத்தல் - இடுக்கண்.

[1] 'அலந்தோர்க் களிக்கும் பொலம்பூட் சேஎய்.'

எனவும்,

[2] 'அற்றார்க்கும் அலந்தார்க்கும்.'

எனவும் பிறருங் கூறியவாற்றானுணர்க. விம்முதல்-பூரித்தல். (நடுஉ)

பாங்கியர்கேட்டு நற்றாய்க்குரைத்தல்:

வாளேய் விழிநின் மயிலனை யாள்தஞ்சை வாணன்வெற்பில்
வேளே யனைய விடலைபின் னேசுர மீண்டினிநம்
கேளேய் பதிவரு மென்னநல் லோர்சொல்லக் கேட்டனமிந்
நாளே யனையநன் னாளுள வோசென்ற நாள்களிலே.

(இ - ள்.) வாள்போன்ற விழியினையுடைய நின் மகளாகிய மயில்போன்றவள் தஞ்சைவாணன் வெற்பிடத்துக் காமனையொத்த விடலை பின்னே சுரம்போய் மீண்டு நம் சுற்றத்தாரிருக்கும் நகரின்கண்ணே வருமென்று நல்லோர் சொல்லக் கேட்டனம்; ஆதலின், இந் நாளைப்போன்ற நன்னாள் கழிந்த நாள்களிலே யுளவோ என்றவாறு.

வேள் - காமன். விடலை - பாலைநிலத் தலைவன். கேள் - சுற்றம். ஏகாரம் மூன்றும் ஈற்றசை. (நடுங)

---

1. திருமுரு - உஎக.
2. அப்பர். கோயிற் பெரிய திருத்தாண்டகம் - உ.

நற்றாய் கேட்டவனுளங்கொள வேலனை வினுதல்:

தென்மாறை நன்னகர் மன்னவன் வாணன் செழுந்தஞ்சைசூழ்
பொன்மா திரத்துப் புலனுணர் வீர்சுரம் போய்வருவோன்
என்மாளை யென்மனை யிற்றரு மோதன்னை யீன்றநற்றாய்
தன்மா நகருய்க்கு மோசொல்லு வீரொன்று தாளெனக்கே.

(இ - ள்.) தென்மாறை நன்னகர்க்கு மன்னவனுகிய வாணனது செழுந் தஞ்சையைச் சூழ்ந்த அழகிய திக்கி னுள்ளார் நினைக்கும் அறிவை யெல்லாம் அறிவீர்! சுரம் போய் மீண்டுவருந் தலைவன் மானனையாளை என் மனை யிலே தருமோ, தன்னையீன்ற நற்றாயிருக்கும் தன் பெரிய நகர்க்கே செலுத்துமோ, எனக்கு ஒன்று சொல்வீர் என்ற வாறு.

பொன் - அழகு. மாதிரம் - ஆகுபெயர். புலன் - அறிவு. உய்த்தல் - செலுத்தல். வேலன் - முருகவேளடையாளமாய்க் கையிலே வேல்பிடித்துத் திரிபவன்; வெறியாட்டாளன். (௩௫௪)

'தலைவி சேணகன்றமை செவிலி தாய்க்குணர்த்த'லும், 'தலைவன் தம்மூர் சார்ந்தமை சாற்ற'லும் இரண்டும் தெளிதல்; 'தலைவி முன் செல்வோர் தம்மொடு தான் வரல் பாங்கியர்க்கு உணர்த்தி விடுத்த' லும், 'பாங்கியர் நற்றாய்க்கு உணர்த்த'லும் இரண்டும் மகிழ்ச்சி; 'நற்றாய் தலைமகனுளங்கொள வேலனை வினுதல்' ஒன்றும் வினுதல்; 'முன்சென்றோர் பாங்கியர்க்கு உணர்த்தல்' ஒன்றும் செப்பல்.

**மீட்சி முற்றிற்று.**

இதுகாறும் ஐம்பத்து நான்காநாட் செய்தியென் றுணர்க.

## உசு. தன்மனை வரைதல்

அஃதாவது, உடன்போய்மீண்டுவந்த தலைவன் தலைவியைத் தன் ஊர்க்குக் கூட்டிப்போய்த் தன் மனையின்கண் வரைந்துகோடல்.

[1] 'வினுதல் செப்பல் மேவலென் றிறைவன்
தனுதில் வரைத முன்மூ வகைத்தே.'

என்னுஞ் சூத்திர விதியால், தன்மனைவரைதல் மூவகைப்படும்.

நற்றாய் மணனயர் வேட்கையிற் செவிலியை வினுதல் :

நற்றாய் மணனயர் வேட்கையிற் செவிலியை வினுதல் என்பது, தலைவி நற்றாய் தன்மனையின் மணஞ்செய்யும் விருப்பினுற் செவிலியை வினுதல்.

தாமாக மேவினு நம்மனைக் கேவந்து தண்சிலம்பார்
மாமா தினைமணஞ் செய்வதற் கேமரு வார்கமலப்
பூமாது கேள்வன் புகழ்த்தஞ்சை வாணன் பொருப்பிலினி
யாமா றுபிரஜை யாய்சொல்வ மோவவ ரன்னையர்க்கே. (௩௱௫)

செவிலிக் கிருவர் வரைந்தமை யுணர்த்தல் :

என்னு மியம்புவ தியாய்க்கினி நாமன்னை யின்றுதம்மில்
கொன்னுரு நித்திலக் கோதைநம் மாதைக் கொடிநெடுந்தேர்க்
கன்னுடர் மண்கொண்ட வாணன்றென் மாறையிற் காதலர்தாம்
நன்னுண் மணம்புணர்ந் தாரென்று தூதர் நவின்றனரே.

(இ - ள்.) அன்னையே! கொடிகட்டிய நெடுந்தேரையுடைய கன்னுடர் மண்ணைக்கொண்ட வாணன் தென்மாறை நாட்டில் காதலர்தாம் தம்மில்லத்துப் பெருமையார்ந்த முத்துமாலையைத் தரித்த நம்மாதை நல்லநாளிலே மணம் புணர்ந்தாரென்று வந்த தூதுவர் சொன்னுர், இன்று நாம் ஆய்க்கு இயம்புவது இனி யென்னும் என்றவாறு.

கொன் - பெருமை. நித்திலக்கோதை - முத்துமாலை. நவிலல் - சொல்லல். (௩௱௬)

---

1. அகப்பொருள் விளக்கம், வரைவியல் - உ௩.

வரைந்தமை செவிலி நற்றாய்க் குணர்த்தல் :

எனைக்கே ளிருநின் றியற்றவங் கேமண வின்பமெய்தி
அனைக்கேண்மை நண்ணிய அண்ணல்பின் னாகநம் மன்னையின்றிம்
மனைக்கே வருமென வந்துசொன் னார்தஞ்சை வாணன்வெற்பில்
சுனைக்கேழ் நனைக்கழு நீர்க்குழ லாய்சில தூதரின்னே.

(இ - ள்.) தஞ்சைவாணன் வெற்பிடத்திருக்குஞ் சுனையிற்பூத்த நிறத்தையுடைய கள்பொருந்திய கழுநீரைச் சூடிய குழலாய், எல்லாக்கேளிரும் மணப்பந்தரில் வந்து நின்று மணச்சடங்கு செய்ய, தலைவனாரில் மணவின்பத்தை யெய்தி அத்தன்மைத்தாகிய நட்பைப்பொருந்திய தலைவன் பின்னே நம் அன்னைபோல்வாள் இன்று இம் மனையிடத்து இப்போது வருமெனச் சில தூதர் வந்து சொன்னார் என்றவாறு.

எனைக்கேளிரும் - எல்லாக்கேளிரும். அனைக்கேண்மை - அத்தன்மைத்தாகிய வுறவு ;

[1] 'அனைநிலை வகையோ டாங்கெழு வகையால்.'

என்னுஞ் சூத்திரத்து, உரையாசிரியர் உரையானுணர்க. அண்ணல் - தலைவன். ஆக - பிரிவிலசைநிலை ;

[2] 'ஆக வாக லென்ப தென்னும்
ஆவயின் மூன்றும் பிரிவி லசைநிலை.'

என்னுஞ் சூத்திரத்தானுணர்க. [3]'காரெதிர் கானம் பாடினே மாக' என்னும் உதாரணத்தானு முணர்க. அன்னை - காதல் பற்றிவந்த சொல். கேழ் - நிறம். நனை - கள். இன்னே - இப்போதே.

தலைவன் பாங்கிக்கு யான்வரைந்தமை
நுமர்க்கு இயம்புசென் றென்றல்:

கோபுரஞ் சோலை கொடிமதில் மாடங் குலாவிமையோர்
மாபுரம் போலுந்தென் மாறை வரோதயன் வாணன்வெற்பில்
நீபுரந் தேதந்த மாதையங் கியாம்வரை நீர்மைபொன்செய்
நூபுரஞ் சூழடி யாய்சென்று கூறு நுமர்தமக்கே.

1. தொல். பொருள். புறத்திணையியல் - ௧௬.
2. தொல். சொல். இடையியல் - ௩௨ ; நச்சினார்க்கினியம்.
3. புறம் - ௧௪௪.

(இ - ள்.) பொன்னால் செய்த சிலம்பு சூழ்ந்த அடியினையுடையாய்! கோபுரமும் சோலையும் கொடியும் மதிலும் மாடமும் விளங்கப்பட்ட அமராவதியை யொக்கும் தென்மாறை நாட்டில் வரோதயனாகிய வாணன் வெற்பில் நீ பாதுகாத்துத் தந்த மாதை என்னூரில் வரைந்த நீர்மையை நுமர் தங்களுக்குச் சென்று சொல்லாய் என்றவாறு.

'கோபுரஞ் சோலை கொடிமதில் மாடம்' என்புழி, எண்ணும்மை தொக்கு நின்றன. குலவுதல் - விளங்குதல். இமையோர் மாபுரம் - அமராவதி. புரத்தல் - காத்தல். வரைநீர்மை - வினைத்தொகை. நூபுரம்-சிலம்பு. (நடுஅ)

பாங்கி தானது முன்னேசாற்றிய துரைத்தல்:

அன்னைக் கியம்பின னாண்டகை யான்முன் னறிந்துதென்னன்
தன்னைப் பணிந்துகுற் றேவல்செய் யாது சமர்க்கெழுந்த
மன்னைப் புறங்கண்ட வாணன்தென் மாறை வரையிலெங்கள்
பொன்னைப் புணர்ந்துநுங் கேள்முன்னர் நீபொன் புனைந்ததுவே.

(இ - ள்.) ஆண்டகையே! பாண்டியனைப் பணிந்து குற்றேவற்றொழின் முறைமை செய்யாது போர்க்கு எழுந்த மன்னைப் புறங்கண்ட வாணன் தென்மாறை வரையில் எங்கள் பொன்போன்றவளைக் கூடி நும் சுற்றத்தார் முன்னம் நீ திருப்பூட்டியது யான் முன்னை யறிந்து அன்னைக்கு இயம்பினேன் என்றவாறு.

ஆண்டகை - ஆண்மைவிளி. தென்னன் - பாண்டியன். குற்றேவல் - சிற்றாளாய்ச் செய்யுமேவல். பொன் - ஆகுபெயர். பொன் புனைதல் - திருப்பூட்டுதல். (நடுகூ)

'மணனயர் வேட்கையி னற்றாய் செவிலியை வினாதல்' ஒன்றும் வினாதல். 'வரைந்தமை பாங்கி செவிலிக்குணர்த்த'லும், 'வரைந்தமை செவிலி நற்றாய்க் குணர்த்த'லும், 'பாங்கி தானது முன்னே சாற்றிய துரைத்த'லும் மூன்றுஞ் செப்பல். 'தலைமக னுமர்க்கியம்பு சென்றென்றல்' ஒன்றும் மேவுதல்.

தன்மனை வரைதல் முற்றிற்று.

## உ௫. உடன்போக்கு இடையீடு

அஃதாவது, நம் மனையில் வரைந்துகொள்ளாது தன் ஊரில் வரைந்தான் என்று தலைவிசுற்றத்தார் வெறுப்படைதலால் தலைவியை உடன்கொண்டு போம்போது தலைவிசுற்றத்தார் இடையீடுபட்டு மீண்டு தலைவி வருதல்.

[1] 'போக்கறி வுறுத்தல் வரவறி வுறுத்த
னீக்க மிரக்கமொடு மீட்சி யென்றுங்
குடன்போக் கிடையீ டொருநால் வகைத்தே.'

என்னுஞ் சூத்திர விதியால் உடன்போக்கிடையீடு ஒருநால் வகைப்படும்.

நீங்குங்கிழத்தி பாங்கியர்தமக்குத் தன்செல
வுணர்த்தி விடுத்தல் :

நீங்கும் கிழத்தி பாங்கியர் தமக்குத் தன் செலவு உணர்த்தி விடுத்தல் என்பது, ஐம்பத்தைந்தா நாள், தன் ஊரைவிட்டு நீங்குங் கிழத்தி எதிர் வருவோர் தம்மொடு தலைவனுடன் செல்லுந் தன் செலவைப் பாங்கியர்க்கு உணர்த்திவிடுத்தல்.

வளவேய் மிடைந்த வழிப்படர் வீர்செங்கை வாணன்தஞ்சைத்
தளவேய் நகையென் துணைவியர் பாற்சென்று சாற்றுமின்போர்க்
களவே லனையவோர் காளையின் போயினள் கான்பனிநீத்
திளவேனில் வல்லிபெற் றுங்கெவ்வ நீத்தெழி லெய்தியென்றே.

(இ - ள்.) வளம் பொருந்திய மூங்கில் மிடைந்த வழியில் செல்கின்றீர்! பனிக்காலத்தை நீத்து இளவேனிற் காலத்தை வல்லி பெற்றாற்போல், துன்பமெல்லாம் ஒழித்து அழகைப்பொருந்திக் சுரட்டிடத்தில், போர்க்களத்தின் முருகவேலையொத்த ஓர் காளையின் போயினள் என்று, சிவந்த கையையுடைய வாணன் தஞ்சையிலிருக்கும் தளவையொத்த நகையையுடைய என் பாங்கியர்பாற் சென்று சொல்லுமின் என்றவாறு.

மிடைதல் - நெருங்குதல். படர்தல் - செல்லுதல். தளவு - முல்லை. கான் - காடு. எவ்வம் - துன்பம். எழில் - அழகு. சுற்றத்தார் செய்த வெறுப்பை, 'எவ்வம் நீத்து' எனக் குறிப்பாற் கூறியவாறு உணர்க. (௩௬0)

---

1. அகப்பொருள் விளக்கம், வரைவியல் - உஎ.

தலைமகள் தன்செலவு ஈன்றாட்குணர்த்தி விடுத்தல்:

வரயார நுங்களை வாழ்த்துகின் றேன்தஞ்சை வாணன்வெற்பில்
சாயாத மாதவத் தாழ்சடை யீரன்பர் தம்மொடின்றியான்
சேயாறு தேர்மிசைச் செல்வதெல் லாமெங்கள் சேரியிற்சென்
றியாயா கியகொடி யாட்கினி தாக வியம்புமினே.

(இ - ள்.) தஞ்சைவாணன் வெற்பில் கேடில்லாத மாதவத்தினைக் கொண்ட தாழ்ந்த சடையுடைய அந்தணீர், நுங்களை வாய்நிறைய வாழ்த்துகின்றேன்; தலைவர் தம்முடனே இன்று யான் சேண்வழியில் தேரின்மீது செல்வதெல்லாம் எங்களூரின்கண் சென்று தாயாகிய கொடியாட்கு இப்போதே இன்பாகச் சொல்லும் என்றவாறு.

சாயாத - கேடில்லாத. சேயாறு - சேண்வழி. 'இனிதாக' என்பது குறிப்பாற் கூறிய வெறுப்புமொழி. (நூசூக)

நற்றாய்க்கு அந்தணர் மொழிதல்:

மருள்கொண்ட சிந்தை மலைகிழ வோய்தஞ்சை வாணன்வெற்பில்
வெருள்கொண்ட மென்பிணை வென்றகண் ணாள்வென்றி வேல்வலங்கை
அருள்கொண்ட நெஞ்சினெ ரண்ணல்பின் னேயகன் றுளகல்வான்
இருள்கொண்ட கொண்டல்செல் லாவரை சூழ மிருஞ்சுரத்தே.

(இ - ள்.) தஞ்சைவாணன் வெற்பினிடத்து மகளைக் காணேம் என்று மயக்கங்கொண்ட சிந்தையினையுடைய மலைக்கரசியே! வெருட்சி கொண்ட மென் பிணைமானை வென்ற கண்ணாளாகிய நின்மகள் வெற்றிவேலை வலங்கையினும் அருளை நெஞ்சினும் கொண்ட ஓர் வேந்தன் பின்னே, அகன்ற வானிடத்துச் சூல்கொண்ட மேகம் ஒருகாலுஞ் சென்றறியாத மூங்கில்சூழ்ந்த பெரிய காட்டிடத்தே யகன்றாள் என்றவாறு.

மருள் - மயக்கம். வெருள் - வெருட்சி. பிணை - பெண்மான். 'வென்றி வேல்வலங்கை, அருள்கொண்ட நெஞ்சில்' என்புழி, உம்மைத்தொகை. வென்றிவேல் வலங்கையினும், அருள் நெஞ்சினும் என்றது, மாற்றார் வணங்காக்கால் வேல் செலுத்தலும், வணங்குங்கால் அருள்செலுத்தலும் கருதியென்க. வரை - மூங்கில். (நூசூஉ)

நற்றாய் அறத்தொடு நிற்றலின் தமர்பின் சேறலைத்
தலைவிகண்டு தலைவற்குணர்த்தல் :

நற்றாய் அறத்தொடு நிற்றலின் தமர் பின் சேறலைத் தலைவி கண்டு தலைவற்கு உணர்த்தல் என்பது, அந்தணர் மொழிய அறிந்த நற்றாய் குறிப்பான் அறத்தொடு நிற்றலின் தமர் சினந்து குழாங் கொண்டு பின்சேறலைத் தலைவிகண்டு தலைவற்குணர்த்தல்.

உவலைப் பதுக்கை முரம்புசெல் லாம லுலகமங்கை
தவலைத் தவிர்த்த தமிழ்த்தஞ்சை வாணன் றரியலர்போம்
கவலைக் கடத்துச் சிலைந்திரை கோலிக் கடும்பகழித்
துவலைப் படைக்கடல் தோன்றல்பொற் றேர்வங்கஞ் சூழ்கின்றதே.

(இ - ள்.) தோன்றலே! தழைகளொடு கூடிய குறுந் தூறுகள் மூடி மேடுசெல்லாமல் நிலமங்கையது வளங்கெடு தலைத் தவிர்த்த தமிழ்த் தஞ்சைவாணன் பகைவர் செல் லுங் கவர்வழியில், வில்லாகிய திரைகளை யுண்டாக்கிக் கடிய அம்பாகிய திவலைகளைச் சிதறிப் படையாகிய கடல் நினது பொற்றேராகிய மரக்கலத்தைச் சூழ்கின்றது என்றவாறு.

உவலை - தழை;

[1] 'உவலைக் கூரை யொழுகிய தெருவில்.'

என்னும் முல்லைப்பாட்டிற்கு நச்சினார்க்கினியார், 'தழையாலே வேய்ந்த கூரை' என எழுதிய வுரையானுமுணர்க. பதுக்கை - சிறுதூறு. முரம்பு - மேடு. தவல் - கேடு. கவலை - கவர்வழி. கடம் - காடு. திரை - அலை. பகழி - அம்பு. வங்கம் - மரக்கலம். இஃது இயைபுருவகம். (ஙசுங)

தலைமகளைத் தலைமகன் விடுத்தல் :

ஆறலை வெஞ்சிலைக் கானவ ரேலென்னை யம்பொன்றினுல்
தூறலை யஞ்சல னுண்ணிடை யாய்நும ரேலவர்முன்
சேறலை யஞ்சுவல் செல்வல்பைம் பூகச் செழும்பழுக்காய்த்
தாறலை தண்டலை சூழ்தஞ்சை வாணன் தமிழ்வெற்பிலே.

---

1. முல்லைப்பாட்டு - உக.

(இ - ள்.) நுண்ணிடையாய்! ஈண்டுக் கூடிவருகின்றோர் வழியை அலைக்கும் வெய்ய சிலையையுடைய வேடராகில் என் கையிற்பிடித்த ஓரம்பினால், புறப்பொருளில் தும்பைத்திணையின் நூழிலாட்டு என்னுந் துறைதோன்றக், கொன்றுகுவித்தலை அஞ்சேன்; நம் சுற்றத்தவரேயாகில் அவர்முன் செல்லுதலை அஞ்சுவேன்; ஆதலான், நீ வாரலை; பசிய கமுகினது செழித்த பாக்குத்தாறு காற்றுலைசையுஞ் சோலை சூழ்ந்த தஞ்சைவாணன் தமிழ் வெற்பிடத்தில் யான் செல்வேன் என்றவாறு.

ஆறலைத்தல் - வழிபறித்தல். நூறல் - கொல்லுதல். 'நுமரேல் அஞ்சுவேன்' என்றது, நுமரெதிர்ந்துழி அவரைக் கொலைசெய்ய வேண்டும்; செய்துழி, நீ துயருழத்தி; ஆதலால், 'அஞ்சுவல்' என்றான். தாறு - குலை. தண்டலை - சோலை. நூழிலாட்டு என்பது, ஒருவன் பலரைக் கொன்று குவித்தல்; என்னை,

[1] 'பல்படை யொருவற் குடைதலின் மற்றவன்
ஒள்வாள் வீசிய நூழிலும்.'

என்னுஞ் சூத்திரத்தானுணர்க. இதற்கு உதாரணம் மதுரைக் காஞ்சியிற் கண்டு கொள்க. 'யான் செல்வேன்' என்பது அவாய்நிலையான் வந்தது. (௩௬௪)

தமருடன்செல்பவள் அவன்புறநோக்கிக் கவன்றுஆற்றல்:

தமருடன் செல்பவள் அவன் புறநோக்கிக் கவன்று ஆற்றல் என்பது, தமருடன் செல்லப்பட்ட தலைவி அவன் புறங்காட்டிப் போதலை நோக்கிக் கவலைப்பட்டுத் தேறுதல்.

ஏமா னெனவஞ்சு மெற்காத் தலினவ் விரவிபொற்றேர்
வாமானின் வாழ்வன வாகபன் னுட்டஞ்சை வாணனென்னூர்
போமா னதரிடத் தென்னையர் தோன்றப் புறங்கொடுத்த
கோமான் மணிநெடுந் தேர்நுகம் பூண்ட குரகதமே.

(இ - ள்.) தஞ்சைவாணனுக்குப் பகைவராயுள்ளார் செல்லும் மான் சஞ்சரிக்கும் வழியிடத்து என் தந்தையர் தோன்றுதலைக் கண்டு புறங்கொடுத்துச் செல்கின்ற தலைவ

1. தொல். பொருள். புறத்திணையியல் - கஎ.

னது மணியிழைத்த நெடுந்தோ் நுகத்திற்பூட்டிய குதிரைகள், அம்புகண்ட மான்போல அஞ்சுகின்ற என்னைக் காத்தலால், அவ்வாதித்தனது பொற்றேரிற் பூட்டிய வாவுங் குதிரைகள்போலப் பன்னாள் வாழ்வனவாக என்றவாறு.

ஏ - அம்பு. வாமான் - வாவுமான்.

[1] 'செய்யு மென்னும் பெயரெஞ்சு கிளவிக்கு
மெய்யொடுங் கெடுமே யீற்றுமிசை யுகரம்.'

என்பதனானுணர்க. அதர் - வழி. குரகதம் - குதிரை. 'கவன்றுற்றல்' என்பதனால், இக்கிளவி இரக்கத்தின்பாற்படும். (நஃகு)

'நீங்குங் கிழத்தி பாங்கியர் தமக்குத் தன் செலவுணர்த்தி விடுத்த'லும், 'தன்செலவு ஈன்றாட் குணர்த்தி விடுத்த'லும், 'ஈன்றாட் கந்தணர் மொழித'லும் ஆகிய மூன்றும் போக்கறிவுறுத்தற் குரிய. 'அறத்தொடு நிற்றலிற் றமர் பின்சேறலைத் தலைவி கண்டுரைத்தல்' ஒன்றும் அலரறிவுறுத்தற்குரித்து. 'தமருடன் செல்பவள் அவன்புறநோக்கிக் கவன்றுற்றல்' ஒன்றும் இரக்கத்துக் குரித்தெனக்கொள்க.

## உடன்போக்கு இடையீடு முற்றிற்று.

இதுகாறும் ஐம்பத்தைந்தாநாட் செய்தியென் றுணர்க.

---

1. தொல். சொல். வினையியல் - சக.

## உகூ. வரைதல்

அஃதாவது, ஐம்பத்தாறுநாள், தலைவன் மீண்டு தலைவியில்லின் வாராநின்றுழி, தலைவி தமர் எதிர்கொண்டுபோய் அழைத்துவந்தபின் உலக இயற்கையின்படி பலவிதமாக அருங்கலம் முதலிய வேண்டுவன கொடுத்து அந்தணரையும் சான்றோரையும் முன்னிட்டு மணச் சடங்குடனே வதுவை முடித்துக்கோடல்.

சென்றோன் மீண்டுவந்து அந்தணரையுஞ் சான்றோரையும் முன்னிட்டு வரைந்துகொண்டுழிக் கண்டோர் மகிழ்ந்து கூறல் :

தன்னூர் வரைதலும் தன்மனைவரைதலும் என்னும் இவ்விரண்டொழித்து,

[1] '... ... எவற்றினுங் கிழவோ
னந்தணர் சான்றோர் முன்னிட் டருங்கலந்
தந்து வரைதல் தகுதி யென்ப.'

என்னுஞ் சூத்திரவிதியால், சென்றோன் மீண்டுவந்து அந்தணரையும் சான்றோரையும் முன்னிட்டு வரைந்துகொண்டுழிக் கண்டோர் மகிழ்ந்து கூறல்.

சேலார் புனல்வையை சூழ்தஞ்சை வாணன்தென் மாறையினம்
வேலா னெனப்பிறர் வேட்டவர் யார்மணம் வெண்டுகிலின்
பாலா ரமளியும் பாற்கட லானது பங்கயக்கண்
மாலா யினனிவ னுந்திரு வாயினள் மாதுமின்றே.

(இ - ள்.) கயலார்ந்த புனல் பெருகி வரப்பட்ட வையை சூழ்ந்த தஞ்சைவாணன் தென்மாறை நாட்டில் வெண்டுகிலின் பான்மையார்ந்த பாயலும் பாற்கடல்போன்றது; இவ்வேந்தனும் செந்தாமரைக்கண் மாலை யொப்பான் ஆயினன்; இம்மாதரும் திருவையொப்பாராயினர்; ஆதலான், நம் வேலானென மணம்வேட்டவர் பிறர் யார் என்றவாறு.

சேல் - கயல். ஆர்தல் - பொருந்தல். புனல் - நீர். அமளி - பாயல். இங்ஙனம் ஒரு தலைவனுக்கும் தலைவிக்கும் ஒருகால் மண முடிப்பதன்றிப் பலகால் மணமுடிந்ததாகக் கூறுதல் உலகின்கண்

1. அகப்பொருள் விளக்கம், வரைவியல் - உக.

வழங்குவதன்றே, இவ்வாறு கூறியது என்னையெனின், உடன் போய்த் தன் ஊரின்கண்ணே வரைதலும், மீண்டுவந்து தன் மனையின்கண்ணே வரைதலும், அந்தணர் சான்றோரை முன்னிட்டுத் தாய்தமரறிய மணச்சடங்கின்முறையே முடியாமையான் அவையிரண்டும் மணமாகா; அஃதென்னையெனின், உலகியல்பின்கண் தாய்தமர் அறியாது, மணச்சடங்கும் இன்றி, ஒருவன் உரிமை கருதித் தாலிகட்டு மணம் மணமென்று உலகின்கண் உள்ளார் கைக்கொள்ளார்; அவர்க்கே மீண்டும் மணச்சடங்குடனே மணமுடிப்பார்; ஆதலால், அந்தணர் முதலாயினரை முன்னிட்டு அவன் மனையின் மணச்சடங்குடனே முடித்தலின் இதுவே மணமாயினவாறு உணர்க. இவ்வாறு நாள்முறையாய்க் கூறிவந்து, ஐம்பத்தாறுநாள் மணம் முடிந்ததென்று கூறியது என்னையெனின்,

[1] 'திங்க ளிரண்டி னகமென மொழிப.'

என்னும் அகப்பொருட் சூத்திரத்து உரையில், இருதிங்களும் நாலு நாளிருக்க மணமுடிப்பது இயல்பென்று இலக்கணங் கூறினமை யாற் கூறியதென்று உணர்க. (௩௬௬)

**வரைதல் முற்றிற்று.**

## இரண்டாவது வரைவியல் முற்றிற்று.

1. இறையனாரகப்பொருள் - ௩௨.

மூன்றாவது

# கற்பியல்

---

அஃதாவது, கற்பிக்கப்படுதலாற் கற்பாயிற்று. கற்பித்தலாவது என்னையெனின், அறிவும் ஆசாரமும் தலைவனாற் கற்பிக்கப்படுதலும், இருமுதுகுரவராற் கற்பிக்கப்படுதலும், செவிலியாற் கற்பிக்கப்படுதலும், அந்தணர் முதலிய சான்றோராற் கற்பிக்கப்படுதலும் எனக் கற்பித்தல் பலவாயின; ஆதலால், கற்பியல் எனப் பெயராயிற்று.

ஆயின், இவ்வாறு களவினொழுகல் கற்பின்கணொழுகல் உலகின்கண் இன்றெனின், நன்று சொன்னாய், அறிவுடையோர் மக்கட்கு மணஞ்செய்யுங்கால் இத்தன்மையாவானை நினக்கு மணஞ்செய்ய நினைத்தேம், இது நினக்கு இயைபோ, இயைபின்மையோ என வினவி, அவரவர் கூற்றின்படி செய்வர். அவர் கூறாக்கால் குறிப்பான் உணர்ந்து செய்வர் எனக் கொள்க. தலைவியைத் தாயரும் இவ்வாறு வினவிக் குறிப்பான் உணர்ந்து செய்வர் எனக் கொள்க. இங்ஙனம் இருவருள்ளமும் ஒத்தவழி மணஞ்செய்தலியல்பாயிற்று; ஆகவே, உள்ளப்புணர்ச்சி நிகழ்ந்ததாம்; உள்ளப்புணர்ச்சி நிகழ்ந்தபோதே மெய்யுறுபுணர்ச்சி நிகழ்ந்ததாயிற்று. இதனை,

[1] 'உள்ளத்தா லுள்ளலுந் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தாற் கள்வே மெனல்.'

என்னும் குறட்குப் பரிமேலழகருரையில், 'நினைத்தலுஞ் செய்தலோடொக்கும்' எனக் கூறியதனானுணர்க. எனவே, உலகின்கண் நிகழுங் கற்பொழுக்க மெல்லாம் கந்திருவ மணத்தின்வழிக் கற்பென்றே கொள்க.

---

1. குறள். கள்ளாமை - ௨.

## ௨எ. இல்வாழ்க்கை

அஃதாவது, தலைவனும் தலைவியும் இல்லின்கண் வாழும் வாழ்க்கையைக் கூறுதல்.

[1] 'கிழவோன் மகிழ்ச்சி கிழத்தி மகிழ்ச்சி
பாங்கி மகிழ்ச்சி செவிலி மகிழ்ச்சியென்
றீங்கு நால்வகைத் தில்வாழ்க் கையே.'

என்னும் அகப்பொருள் விளக்கச் சூத்திரவிதியால், இல்வாழ்க்கை நால்வகைப்படும்.

தலைவன் தலைவிமுன் பாங்கியைப் புகழ்தல்:

நின்மே லடுத்த பசலையின் காரண நின்துணைவி
என்மே லடுத்த வியல்பினன் றேபெற்ற தேழுலகும்
தன்மே லடுத்த புகழ்த்தஞ்சை வாணன் தமிழ்க்கிரிநுண்
பொன்மே லடுத்தன போர்சுணங் கீன்ற புணர்முலையே.

(இ - ள்.) நுண்ணிய பொன்மேலே நெருங்க வைத்தாற்போன்ற சுணங்கைப்பெற்று இடைவெளியின்றி நெருங்கிய முலையிணையுடையாய்! தன்னிடத்துத் தோன்றிய புகழ் ஏழுலகும் நெருங்கிய தஞ்சைவாணன் தமிழ்ச் சிலம்பிடத்திருக்கும் நின்மேலே நெருங்கிய பசலை நீங்குங் காரணமாக நின் துணைவி என்மேலே நெருங்கிய அன்பின் முறைமையினன்றே இல்வாழப் பெற்றது என்றவாறு.

அடுத்தல் - நெருங்குதல். இன் - நீங்கற் பொருண்மையுணர்த்தும் உருபாகலான் நீக்கத்தை யுணர்த்தி நின்றது. இயல்பு - முறைமை. தமிழ்க்கிரி - பொதியமலை. நுண்பொன் - தகட்டிற் சிதறிய சிறுமைப்பட்ட பொன். புணர்முலை - நெருங்குமுலை. இல்வாழ்க்கை அதிகாரத்தான் வந்தது. (௩௬௭)

தலைவனைப் பாங்கி வாழ்த்தல்:

தெரியா டகவிதழ்ப் பூங்கொன்றை வேணியுந் தேவியும்போல்
பிரியா துறையப் பெறுகுதி ராற்பிறை மானுநெற்றிப்
புரியாழ் நிகர்மொழிப் பூவையு நீயும் புணர்ந்துபல்கேழ்
வரியார் சிலையண்ண லேதஞ்சை வாணன்தென் மாறையிலே.

1. அகப்பொருள் விளக்கம், கற்பியல் - ௩.

(இ - ள்.) பல நிறத்தையுடைய கட்டுதலார்ந்த சிலையையுடைய அண்ணலே! தஞ்சைவாணன் தென்மாறை நாட்டில், பிறைபோலும் நெற்றியையும் நரம்புகட்டிய யாழிசைபோன்ற மொழியையும் உடைய பூவை போல்வாளும் நீயும் கூடி, தெரிந்தெடுத்த பொன்போன்ற இதழையுடைய கொன்றைப்பூவைத் தரித்த வேணியனாகிய சிவனும் தேவியாகிய உமையும்போல எஞ்ஞான்றும் பிரியாதிருக்கப்பெறுவீர் என்றவாறு.

தெரியாடகம் - பொன்களிற் றெரிந்தெடுத்த பொன். கொன்றைவேணி - சிவன். தேவி - உமை. ஆல் - அசை. புரி - நரம்பு. யாழும் பூவையும் ஆகுபெயர். கேழ் - நிறம். வரிதல் - கட்டுதல். ( )

பாங்கி தலைவியை வரையுநாளளவும்
வருந்தாதிருந்தமை யுரையாயென்றல் :

**கோங்கநன் மாமுகைக் கொங்கைநல் லாய்மணங் கூடுமெல்லை**
**யாங்கன மாற்றி யிருந்தனை நீயிப மாசயிலம்**
**தாங்கன மாறத் தலம்புனை வாணன் தமிழ்த்தஞ்சைவாழ்**
**பூங்கன மார்குழ லாரலர் மாலைப் பொறைசுமந்தே.**

(இ - ள்.) கோங்கினது நல்ல பெரிய முகைபோன்ற கொங்கையையுடைய நல்லாய்! நீ மணங்கூடுமளவும் திக்கயமும் பெரிய குலவரையும் பூமிபாரமெடுத்த இளைப்பாற, அப்பாரத்தைத் தரித்த வாணன் தமிழ்த்தஞ்சையில் வாழும், பூவைத்தரித்த முகில்போன்ற குழலார் தூற்றப்பட்ட அலராற்கட்டிய மாலையினது பாரத்தைச் சுமந்து எவ்வணம் ஆற்றியிருந்தனை என்றவாறு.

இபம் - திக்கயம். மாசயிலம் - குலவரை. தலம் - பூமி. கனம் - முகில்; இதற்குப் பாரமாகிய குழலார் என்று பொருள் கூறுவாரும் உளர். (௩௬௯)

பெருமகளுரைத்தல் :

பெருமகள் உரைத்தல் என்பது, தலைவி தான் வருந்தாதிருந்த காரணம் பாங்கிக்கு உரைத்தல்.

மைதோய்ந் தலர்ந்த மலர்த்தடஞ் சூழ்தஞ்சை வாணனென்னார்
மெய்தோய்ந்த செந்நிற வேல்விழி யாய்துயர் வெள்ளம்வெற்பர்
கைதோய்ந் தளிப்பவ சோகத்த வாய்நிறங் கால்வனவாய்
நெய்தோய்ந் தனதழை யேபுணை யாக்கொண்டு நீந்தினனே.

(இ - ள்.) கருநிறம் பொருந்தி யலர்ந்த நீலமலரை யுடைய வாவிசூழ்ந்த தஞ்சைவாணனுக்குப் பகைவராயுள்ளார் மெய்யிரத்தத்திற் றோய்ந்து சிவந்த நிறத்தையுடைய வேல்போன்ற விழியினையுடையாய்! வெற்பர் கைதொட்டு அளிப்ப அசோகம் என்கின்ற பெயரினை யுடையனவாய் நிறத்தை யொழுக்குவனவாய் நெய்யிற் றோய்ந்தாற்போன்ற தழையையே தெப்பமாகக் கொண்டு துயர வெள்ளத்தை நீந்தினேன் என்றவாறு.

மை தோய்ந்து அலர்ந்த மலர் - நீலமலர். தடம் - வாவி. தோய்ந்து - தொட்டு. அளிப்ப - கொடுப்ப. நெய் - புழுகு. புணை - தெப்பம். (௩௭௦)

தலைவனைப் பாங்கி வரையுநாளளவும்
நிலைபெறவாற்றிய நிலைமை வினாதல்:

வரையுமிந் நாளள வெவ்வாறு நீரேம் மடந்தைமுகை
புரையுமென் கொங்கை பிரிந்திருந் தீர்முன் பொருப்பெடுத்தே
நிரையுமிந் ஞாலமுங் காத்தருள் தானன் பதாகையினீள்
திரையுங் குயிலும் விடாநெடு மோசை செவிமடுத்தே.

[இது பிறசெய்யுட் கவி.] (௩௭௧)

மன்றல்மனைவரு செவிலிக்கிருவ யன்புறவுணர்த்தல்:

மன்றல் மனைவரு செவிலிக்கு இருவர் அன்புற உணர்த்தல் என்பது, கலியாண மனையில்வந்த செவிலிக்கு இருவரது அன்பும் உறவும் உணர்த்தல்.

வளங்கொண்ட தஞ்சைவரோதயன் வாணன்தென் மாறையன்னாள்
இளங்கொங்கை கொண்டுழு தீரங்கொண் மார்பின்முத் தேற்பவித்தி
விளங்கொண் பிறைநுதல் வேர்தரும் போகம் விளைத்தன்புசேர்
உளங்கொண் டருத்துத லாலன்னை யூர னுவப்புறுமே.

(இ - ள்.) அன்னாய் ! வளமைகொண்ட தஞ்சையில் வரோதயனான வாணன் தென்மாறைபோன்ற தலைவி தன் இளங் கொங்கையைக் கொண்டு உழுது ஈரங்கொண்ட மார்பிடத்து முத்துமாலையினது முத்தைப்பொருந்த வித்தி விளங்கும் ஒள்ளிய பிறைபோன்ற நுதலின் வேரைத்தரும் போகத்தை விளைத்து அன்புசேர் உள்ளங்கொண்டு நுகர்வித்தலான் ஊரன் மகிழ்ச்சியுறும் என்றவாறு.

ஈரம் - அன்பு. அருத்துதல் - நுகர்வித்தல். உவப்பு-மகிழ்ச்சி. வேர் - வியர்வை. (௩௭௨)

பாங்கி இல்வாழ்க்கை நன்றென்று செவிலிக்குரைத்தல் :

சினவேய் சுளியுங் களிற்றண்ணல் வாணன்தென் மாறையினம்
மனவே யகலல்குல் வல்லியன் னுள்மறை யோர்முதலாம்
சனவே தனைகெடத் தானங்க ளீதலிற் சாலவுநன்
றெனவே நடக்கின்ற தாலன்னை நாடொறும் இல்லறமே.

(இ - ள்.) அன்னை ! தன் நிழலைச் சுளித்துப்பாயுஞ் சினம்பொருந்திய களிற்றுவேந்தனாகிய வாணன் தென் மாறை நாட்டில் நம்முடைய பட்டிகை சூழ்ந்த அகன்ற அல்குலையுடைய வல்லிபோல்வாள், மறையவர் முதலாகிய சனங்களது வேதனை கெடத் தானங்கள் ஈதலின் மிகவும் நன்றென இல்வாழ்க்கை நாடொறும் நடக்கின்றது என்றவாறு.

'சுளியுஞ்சினவேய்' எனமாறுக. மனவு - இடையிற்கட்டும் பட்டிகை. 'மறையோர் முதலாம்' எனவே, நாவலர் மிடியர் பிணியாளரையும் கொள்க. தானங்கள் - அன்னம் ஆடை நிதி முதலியன. (௩௭௩)

மணமனைச் சென்றுவந்த செவிலி
பொற்றொடி கற்பியல் நற்றாய்க்குணர்த்தல்

ஒன்றோ நமக்குவந் தெய்திய நன்மை உடன்றெதிர்ந்தார்
வன்றோ லமர்வென்ற வாட்படை வாணன்தென் மாறையில்வாழ்
நின்றோகை கற்பி னிலைமையெண் ணுதெதிர் நின்றுவெந்நிட்
டுன்றோ வடக்கிருந் தான்மடப் பாவை யருந்ததியே.

(இ - ள்.) கோபித்து எதிர்ந்தார் வலிய யானைப் போரை வென்ற வாட்படையையுடைய வாணன் தென் மாறையில் வாழப்பட்ட நின் தோகைபோல்வாளது கற்பி னிலைமையை யெண்ணுது, மடப்பாவை போன்ற அருந்ததி யானவள் ஒப்பென்று எதிர்நின்று தோல்வியையடைந்து புறங்கொடுத்ததனாலன்றோ தவஞ்செய்வதற்கு வடக்கிருந் தாள்; ஆதலால், மகளால் நமக்கு எய்திய நன்மை ஒன்றோ, பல என்றவாறு.

உடன்று - கோபித்து. தோல் - யானை. வெந்நிட்டு - புறங் கொடுத்து; தோல்வி யடைந்தோர் தவஞ்செய்தற்கு வடக்கிருத்தல் இயல்பென்றுணர்க. கவுசிகன் வசிட்டனோடு எதிர்த்துத் தோல்வி யடைந்து வடதிசையிற் றவஞ்செய்ததனுனும் உணர்க. அன்னை யென்பது முன்னிலையெச்சம். (௩எ௪)

நன்மனை வாழ்க்கைத்தன்மை யுணர்த்தல்:

நன்மனை வாழ்க்கைத்தன்மை உணர்த்தல் என்பது, செவிலி நற்றாய்க்குத் தலைமகள் மனைவாழ்க்கைத்தன்மையை யுணர்த்தல்.

விண்மே லமரர் விரும்பம ராவதி வெள்ளமுந்நீர்
மண்மே லடைந்தன்ன வாழ்க்கைய தானது வாணன்தஞ்சை
பண்மே லளிமுரல் குங்குமத் தோளவர் பங்கயம்போல்
கண்மே லருள்பெற்று வாழ்மட மாதர் கடிமனையே.

(இ - ள்.) வாணன் தஞ்சைமா நகரின்மேலே வண்டு பண்ணை முரலப்பட்ட குங்குமமாலை யணிந்த தோளை யுடையவரது பங்கயம்போன்ற கண்ணினிடத்து அருளைப் பெற்று வாழப்பட்ட மடமாதர் மணமனை யானது, விண் ணுலகில் அமரர் விரும்பும் அமராவதி, வெள்ளமாகிய கடல் சூழ்ந்த மண்ணுலகின்மேல் வந்தடைந்தாலொத்த வாழ்க்கையதானது என்றவாறு.

அமராவதி - இந்திரபுரம். முந்நீர் - கடல். 'அளிபண்' என மாறுக. முரலுதல் - ஒலித்தல். கடி - மணம். (௩எ௫)

செவிலி நற்றாய்க்கு இருவர்காதலையு மறிவித்தல்:

**நனையகத் தல்கிய நாண்மல ரோதி நயந்துறையும்**
**மனையகத் தல்லிடை வைகுத லால்தஞ்சை வாணனென்னார்**
**வினையகத் தல்குதல் செல்லுவ ரேனுமவ் வேந்தர்பொற்றேர்**
**முனையகத் தல்கல்செல் லாதொரு நாளும் முகிழ்நகையே.**

(இ - ள்.) முகிழ் நகையே! கள் உள்ளே தங்கிய முறுக்கவிழ் மலரை யணிந்த கூந்தலாள் விரும்பி யுறையும் மனையகத்து இராக்காலத்தில் தங்குதலான், தஞ்சை வாணன் ஒன்னார் போர்த்தொழிலிடத்துத் தங்குதலாற் செல்லுவரேனும், அத்தலைவர் பொற்றேர் ஒருநாளும் படையகத்துத் தங்குதல் செல்லாது என்றவாறு.

எனவே, இரவின்கண் மனையிடத்துத் தங்குதலல்லது மற்றோரிடத்துத் தங்குதலில்லையென்று கூறியவாறாயிற்று.

நனை - கள். அகம் - உள். அல்குதல் - தங்குதல். நாண்மலரோதி - ஆகுபெயர். நயந்து - விரும்பி. அல் - இரவு. வைகுதல்- தங்குதல். முனை - படை. 'செல்லுவரேனும்' என்னும் உம்மையால், செல்லார் என்பது தோன்றிநின்றது. மலர்நகை மடவார்க்கியல்பு என்றதனால், 'முகிழ்நகை' எனக்கூறினார். முன்னம், 'வறிதுநகை தோற்றற்'கும் [செய் - கடு.] இவ்வாறே முகிழ்நகை தோன்றியதென்று உணர்க.

'தலைவன் தலைவிமுன் பாங்கியைப் புகழ்தல்' கிழவோன் மகிழ்ச்சி; 'தலைவனைப் பாங்கி வாழ்த்தல்' முதல், 'செவிலிக்கில் வாழ்க்கை நன்றறைதல்' ஈறாகிய ஆறனுள், 'பெருமகளுரைத்தல்' கிழத்திமகிழ்ச்சி; அல்லன ஐந்தும் பாங்கிமகிழ்ச்சி; 'செவிலி நற்றாய்க்குத் தலைமகள் கற்பிய லுரைத்தல்' மூன்றும் செவிலிமகிழ்ச்சியெனக் கொள்க.
(௩எசு)

**இல்வாழ்க்கை முற்றிற்று.**

## உஅ. பரத்தையிற் பிரிவு

அஃதாவது, தலைமகன் பரத்தைமேற் காதலாய்த் தலைவியைப் பிரிந்து பரத்தையர் சேரியிற் போதல். பரத்தையிற் பிரிவு என்றேதவே,

[1] 'பொதுநலத்தார் புன்னலந் தோயார் மதிநலத்தின்
மாண்ட அறிவி னவர்.'

என்பதனால், தலைவன் அறிவிலனும், தலைவியிடத்து அன்பும் இலனும், பெருமையும் இலனும், பட்டியும் ஆம் எனின், அற்றன்று. அரசுரிமைய னாதலின், அவ்வரசுரிமைக்குப் பரத்தையரினும் வரைதற்குரியராய்த் தொன்றுதொட்டு நடக்கும் முறைமையராயும், வரையாத வுரிமையராய்ச் சேரியின்கண் உறைவாரும் ஆய இவரும் பிறந்த ஞான்றுதொட்டு இவர்க்கென வரித்திருக்கப் படுதலானும், அவரை நீக்குதல் தகுதியன்மையானும், பரத்தையிற் பிரிதல் குற்றமன்றெனக் கொள்க. அன்றியும், காலைக் கடன்கழித்தலும், உலகத்திலிருந்து நாடுகாவற்றொழில் செலுத்தலும், விருந்துடன் அடிசில் கைதொடலும், நாவலரோடு கல்வி பயிறலும், ஆடல் பாடல் களிற் களித்தலும், மடவாரோடு கூடலும், துயிறலும், துயிலுணர்ந்து தேவர்ப்பராவலும் ஆகிய காலவரையறை யெட்டினுள், ஆடல் பாடல் ஒன்றாதலானும், அதற்குரியர் பரத்தையராதலானும், அதற்குரிய காலத்தில் அவரிடத்தில் மனம்செல்லுதல் இயல்பாதலானும், பரத்தையிற் பிரிதலாற் குற்றமின்றெனக் கொள்க. ஆயின், பரத்தையர் சேரியில் செல்லுமா றென்னையெனின், அவர் பலரோடும் விளையாடற் பொருட்டும், அவருட் புணர்தற்குரியரைப் புணர்தற்பொருட்டும் பரத்தையர் சேரியிற் செல்லுமென்று உணர்க.

காதலன்பிரிவுழிக் கண்டோர்புலவிக்
கேதுவிதாமவ் விறைவிக்கென்றல் :

மாறையர் காவலன் வாணன்தென் தஞ்சையில் வாணுதற்கிவ்
வாறையர் காரண மாகுமென் றேகொங்கை யானையுடன்
சாறையர் வீதிய ரிப்பறை யார்ப்பத் தயங்குகுழல்
தூறையர் தூறைகொள் வான்வய லூரனைச் சூழ்ந்தனரே.

(இ - ள்.) விளங்கும் குழலையுடைய பரத்தையர் அறிவைக் கொள்ளைகொள்ளும்பொருட்டாகக் கொங்கையாகிய யானையுடன் திருவிழாச்செய்யும் வீதியில் வண்டா

---

1. குறள். வரைவின்மகளிர் - ரு.

கிய பறைகள் ஆரவாரிக்க வயலூரனைச் சூழ்ந்தனர்; ஆதலால், மாறையர் காவலனாகிய வாணன் தென்தஞ்சையிலிருக்கும் வாணுதற்கு இம்முறைமை புலவி செய்தற்குக் காரணமாம் என்றது.

இவ்வாறு - இம்முறைமை. அயர்தல் இரண்டும் செய்தல். சாறு - விழா. அரி - வண்டு. சூறையர்-பரத்தையர். சூறை - கொள்ளை. புலவியும் அறிவும் அவாய்நிலையான் வந்தன. (௩௭௭)

*தனித்துழியிறைவி துனித்தழுதிரங்கல் :*

**வன்போ தணிதொங்கல் வாணன்தென் மாறை மகிழ்நர்நம்மேல்**
**அன்பொடு நன்னெஞ் சறிவறை போக அழலுள்வெந்த**
**பொன்போ னிறங்கொண் டிரவுங்கண் ணீரும் புலர்வதுபார்த்**
**தென்போ லவரிங்ங னேயிமை யாம லிருப்பவரே.**

(இ - ள்.) போதுகளாற் கட்டிய மாலை யணிந்த வாணன் தென்மாறையி லிருக்கும் வன்மையாகிய மகிழ்நர் நம்மேல் வைத்த அன்புடனே அவ்வன்பு இருக்கும் நெஞ்சறிவு கீழ்போக அழலுள் வெந்த பொன்போன்ற நிறத்தைக்கொண்டு இரவும் கண்ணீரும் எப்போது புலருமென்று புலர்வதுபார்த்து, இவ்விடத்தில் என்னைப்போல் உறக்கமின்றி இமையாம லிருப்பவர் யார் என்றவாறு.

'தொங்கலணி' எனவும், 'வனமகிழ்நர்' எனவும், 'இங்ஙனென்போல்' எனவும் இயையும். தொங்கல் - மாலை. மகிழ்நர் - கணவர். அறைபோதல் - கீழ்போதல். அழல் - நெருப்பு. (௩௭௮)

*ஈங்கிதுவென்னெனப் பாங்கி வினாதல் :*

*ஈங்கு இது என்னெனப் பாங்கி வினாதல் என்பது, மற்றை நாட் காலையில் வந்த பாங்கி தலைவியை நோக்கி நீ அழுதுகொண்டிருத்தற்குக் காரணம் என்னென்று வினாதல்.*

**எம்மா திரமும் புரவலர்த் தேடி யிரந்துழல்வோர்**
**தம்மா துயரந் தணித்தருள் வாணன் தமிழ்த்தஞ்சைவாழ்**
**நம்மாவி யன்னவர் நாடொறு நாடொறு நல்கவுநீ**
**விம்மா வருந்துவ தென்பிரிந் தாரின் விளங்கிழையே.**

(இ - ள்.) விளங்கிழாய், எத் திக்கினுங் கொடுப் போரைத் தேடி யிரந்து வருந்துவோர் தம்முடைய பெரிய துயரைத் தவிர்த்தருளப்பட்ட வாணன் தமிழ்த் தஞ்சை யில் வாழும் நமது ஆவிபோன்றவர் நாடோறும் நாடோ றும் இன்பமளிக்கவும் நீ விம்முதலுற்றுப் பிரிந்தாரைப் போல் வருந்துவது என் என்றவாறு.

மாதிரம் - திக்கு. புரவலர் - கொடுப்போர். உழல்வோர் - வருந்துவோர். தணித்தல் - ஆற்றல். நல்கல் - அளித்தல். விம்மா என்பது வினையெச்சம். இன் உவமவுருபு.

எடுத்துக் கோடற்கண்ணே, அகப்பொருள் என்பதற்கு இன் பப்பொருள் என்று பொருள்கூறியவர், இவ்வாறு துன்பமுறுதலைக் கூறியது என்னையெனின், புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல் ஊடல் என்பன இன்பத்திற்கு உறுப்பாகலின், இவ்வைந்தினில் ஒன்று நீங்கினும் அவ்வின்பத்திற்கு உறுப்புக் குறையாம்; அஃ தென்னையெனின், புணர்தலே இன்பமென்றும் ஏனைய துன்ப மென்றும் கூறுகின்றுழி, பிரியாது புணர்ந்துழி வெறுப்படையும், பிரிந்துழித் துன்பமுற்றிலரேல் அவர் அறிவிலராம். இருத்தலும் ஊடலும் இவ்வாறே கொள்க. ஆதலால், துன்பமுறுவிடின் இன்பக்குறைபாடே யெனக்கொள்க. (நஎகூ)

## இறைமகன் புறத்தொழுக் கிறைமகளுணர்த்தல் :

இறைமகன் புறத்தொழுக்கு இறைமகள் உணர்த்தல் என்பது, தலைவன் தன்னிடத்து ஒழுகும் ஒழுக்கம் இன்று பரத்தையரிடத்து ஒழுகுகின்றானென்று தலைவி பாங்கிக்குக் கூறல்.

'புறத்தொழுக்கு' என்பதற்குப் பொருள் பரத்தையரிடத்து ஒழுகும் ஒழுக்கம் என்று கொண்டவாறு என்னையெனின், வட நூலார் புறத்தைப் பரம் என்று கூறுவாராதலால், பரத்தையர் என் னுஞ் சொற்குப் புறமுடையவர் என்னும் பொருள்கூறி நின்றவாறு உணர்க. புறமுடையர் என்பது என்னையெனின், இவரின்பம் இன்பமன்றென்று தெய்வப்புலமைத் திருவள்ளுவனார், 'வரைவின் மகளிர்' என்னும் அதிகாரத்தால் இன்பத்திற்குப் புறம் இவரின் பம் என்று கூறியவாற்றானுணர்க.

[1] 'இருமனப் பெண்டிருங் கள்ளுங் கவறுந்
திருநீக்கப் பட்டார் தொடர்பு.'

என்பதனானும் உணர்க.

---

1. குறள். வரைவின்மகளிர் - கo.

தாராக நல்கினர் காரிகை யாய்தஞ்சை வாணன்தன்னைச்
சேரா தவரென்னத் தீவினை யேனையச் செங்கண்வன்கட்
காரா கழனிக் கரும்பினஞ் சாயக் கதழ்ந்துசெந்நெல்
ஆரா தயலிற்பைஞ் சாயாரு மூரர் அயலவர்க்கே.

(இ - ள்.) அழகையுடையாய்! தஞ்சை வாணனைச் சேராதவர்போலத் தீவினையுடைய யான் வருந்தச், சிவந்த கண்ணையும் தறுகண்மையையும் உடைய எருமை கழனியிடத்துக் கரும்புக்கூட்டம் சாய மிதித்து, விரைந்து போய்ச் செந்நெல்லையும் ஆராது, வயல்வரம்புகடந்து அயலிலிருக்கும் கோரையை யருந்தும் ஊரையுடையவர் அயலாராகிய பரத்தையர்க்குத் தார்பொருந்திய தமது மார்பைக் கொடுத்தனர் என்றவாறு.

எனவே, கரும்புபோன்ற குலக்கிழத்தியும் செந்நெல்போன்ற தானும் வருந்த மனத்தி லென்னாது வரம்புகடந்து அயலிலிருக்கும் கோரைபோன்ற பரத்தையரைக் கூடினனென உள்ளுறையுவமங் கொள்ளக்கிடந்தவாறு காண்க. தார் - மாலை. ஆகம் - மார்பு. வன்கண் - தறுகண்மை. காரா - எருமை;

[1] 'பெற்றமு மெருமையு மரையு மாவே.'

என்பதனுனுணர்க. கதழ்ந்து - விரைந்து. பைஞ்சாய்-கோரை. ()

தலைவியைப் பாங்கி கழறல்:

புனையலங் காரநங் கற்பியல் போற்றியும் போற்றருஞ்சீர்
மனையறம் பாவித்தும் வாழ்வதல் லாற்றஞ்சை வாணனன்னா
டனையவண் டார்குழ லாரணங் கேநமக் கன்பரிந்நாள்
இனையரென் றூர்மயில் லாவுரை யாட லியல்பல்லவே.

(இ - ள்.) தஞ்சைவாணன் நன்னாடு போன்ற வண்டார்ந்த குழலையுடைய ஆரணங்குபோல்வாய், அலங்கரிக்கும் அலங்காரம் நம் கற்பிலக்கணமே யென்று கற்பிலக்கணத்தை வழுவாமற் காத்தும், துதித்தற்கரிதாகிய சிறப்பையுடைய இல்லறத்தை யுண்டாக்கியும் அவர் வாழ்வதே

1- தொல். பொருள். மரபியல் - ௬௦.

யல்லது இப்போது தம்மிடத் தன்பையுடையவர் இத்தன் மையரென்று விருப்பமில்லாததாக அவர் புறத்தொழுக் கைக் கூறுதல் நமக்கு முறைமையன்று என்றவாறு.

புனைதல் - அலங்கரித்தல். போற்றல் - காத்தல். இயல் - இலக்கணம். மனையறம் - இல்லறம். இனையர் - இத்தன்மையர். ஆர்வம் - விருப்பம்.

[1] 'அன்பீனு மார்வ முடைமை.'

என்பதனுற் கொள்க. (௩அக)

தலைவி செவ்வணியணிந்து சேடியைவிடுப்புழி அவ்வணியுழையர்கண் டழுங்கிக்கூறல்:

செவ்வணி அணிந்து சேடியை விடுப்புழி அவ்வணி உழையர் கண்டு அழுங்கிக் கூறல் என்பது, தலைவி பூத்தகாலை மூன்றுநாள் போக்கி நாலாநாள் நீராடியபின் செம்பூச்சூடிச் செவ்வாடை யுடுத் துச் செஞ்சாந்துபூசிச் சேடியைவிடுக்கப் பரத்தையர் சேரியிலிருக் குங்கால் அவ்வலங்காரத்தை அயல்மனையில் உள்ளார் கண்டு இரங் கிக்கூறல்.

வேளாண் மரபு விளக்கிய வாணன்மின் னூர்கழல்சூழ்
தாளான் வளங்கெழு தஞ்சையன் னீர்சங்கந் தந்தநன்னீர்த்
தோளா மணியன்ன தொல்குல வோடையிற் றோன்றியபூ
வாளா அலர்தொடுப் பார்க்கெங்கு னேவந்து வாய்த்ததுவே.

(இ - ள்.) வேளாண் குலத்தை விளங்கச்செய்த வாணனென்னும் ஒளியார்ந்த கழல்சூழ்ந்த தாளையுடையவ னது வளம்பொருந்திய தஞ்சையை ஒப்பீர்! சங்கம் ஈனப் பட்ட நல்ல நீர்மையையுடைய வடுப்படாத முத்தம் போன்று தொன்றுதொட்டு வழுவில்லாது வரப்பட்ட குலமாகிய ஓடையில் தோன்றிய பூ வறிதே அலர்தொடுப் பார்க்கு எவ்விடத்திலேயிருந்து வாய்த்தது என்றவாறு.

பூவின்றி அலர்தொடுப்பார்க்கு ஒரு பூ வந்து வாய்க்கில் எவ் வாறு அலர்தொடார் என்றவாறாயிற்று. மரபு - குலம். மின்-ஒளி. தோளாமணி - தொளைபடா முத்தம். பூ - திங்கடோறும் வரும்

2. குறள். அன்புடைமை - ௪.

மாதர்சூதகம். வாளா - சும்மா. 'சங்கந் தந்தநன்னீர்' என்பதனை, 'மலர்ச் சந்தநன்னீர்' என்று பாடமோதி, வெண்மலர்போன்ற அழகையுடைய முத்தமென்று பொருள் கூறுவாருமுளர். இவ்வாறு செவ்வணி யணிந்து சேடியை விடுத்தல் உலகின்கண் வழக்க மின்றெனின், புலவர் நாட்டப்பட்ட செய்யுள் வழக்கமெனக் கொள்க. ()

### பரத்தையர்கண்டு பழித்தல்:

பரத்தையர் கண்டு பழித்தல் என்பது, அச்சேரியிற்போய சேடியைப் பரத்தையர் கண்டு பழித்துக் கூறல்.

படியொன்று சாலி யனையவர் சேரிப் படர்பவளக்
கொடியொன்று நீல மலர்ந்தது காட்டக் கொடியவெம்போர்
வடியொன்று கூரிலை வேல்வல்ல வாணன்தென் மாறையிற்பொற்
றொடியொன்று தோண்மட வார்சேரி வாய்வந்து தோன்றியதே.

(இ - ள்.) புவியிற் பொருந்திய நெற்போன்றவர் சேரியினின்றும் நடந்துவந்த பவளக்கொடி யொன்று நீலம் பூத்ததைக் காட்டும்பொருட்டுக் கொடிய வெவ்விய போரைச் செய்யப்பட்ட வடித்தற்றொழில் பொருந்திய கூரிய இலைபோன்ற வேற்றொழில் வல்ல வாணன் தென் மாறையில் பொற்றொடி யணிந்த தோளையுடைய மடவார் சேரியிடத்து வந்து தோன்றிற்று என்றவாறு.

படி - புவி. சாலியனையவர் - இற்கிழத்தியாகிய தலைவி. படர்தல் - அச்சேரியினின்றும் இச்சேரியில் வருதல். நீலம் - பொய்; பவளக்கொடி நீலமாதல் பொய் என்பதுபற்றிக் கூறினர். எனவே, தலைவி பொய்யடையாளஞ் செய்தனுப்பியதெனப் பழித்துக் கூறியவாறு காண்க. வடி - வடித்தல். அகவணியாகிய நாணம் முதலிய குணங்கள் இல்லாமையான் புறவணியுடையார் என்பது தோன்ற, 'பொற்றொடி யொன்று தோள்மடவார்' என்று கூறினர்.

### பரத்தையருலகியல்நோக்கிவிடுத்தலின் தலைவன்வரவு கண்டுவந்து வாயில்கள்மொழிதல்:

பரத்தையர் உலகியல் நோக்கி விடுத்தலின் தலைவன் வரவு கண்டு வந்து வாயில்கள் மொழிதல் என்பது, தலைவி நீராடிய ஞான்று பரத்தையர் தங்கள் சேரியில் தலைவனிருத்தல் உலக முறைமைக்கு இயலாதென்று விடுத்தலின், தலைவன் வருதலைக் கண்டு வந்து தாதிகள் பாங்கிக்கு மொழிதல்.

வாருந்து பச்சிள நீர்முலை யார்மதன் வாணன்தஞ்சை
யாருந் தொழத்தகு மெம்பெரு மாட்டிதன் னேவலினல்
சேரும் பரத்தையர் சேரியி லேசென்ற சேடியைக்கண்
டூருந் திரைப்புன லூரன்வந் தானின் றுலகியற்கே.

(இ - ள்.) கட்டிய கச்சைப் பூரித்துத் தள்ளப்பட்ட பசிய இளநீர்போன்ற முலையார்க்கு மதனையொத்த வாணன் தஞ்சையில் கற்பினல் யாவரும் தொழத்தகும் எம்பெரு மாட்டி தனதேவலினல் முன் தலைவன் போய்ச்சேரும் பரத்தையருடைய சேரியிலே சென்ற சேடியைக் கண்டு ஊரப்பட்ட அலையையுடைய புனல் சூழ்ந்த ஊரன் இன்று உலகியற்கு வந்தனன் என்றவாறு.

வார் - கச்சு. திரை - அலை. புனல் - நீர். உலகியல் - தலைவி நீராடிய ஞான்று தலைவன் பரத்தையிற் பிரியாமை தரும நூலியல்பு. (௩அ௪)

வரவுணர்பாங்கி யரிவைக்குணர்த்தல்:

தள்ளா வளவயல் சூழ்தஞ்சை வாணன் தரியலர்போல்
உள்ளா துனைப்பண் டகன்றன ராயினு முள்ளியிப்போ
தெள்ளாது வந்துன் கடையினின் றார்நம் மிறைவர்குற்றம்
கொள்ளா தெதிர்கொள்வ தேகுண மாவது கோமளமே.

(இ - ள்.) கோமளமே, நம்மிறைவர், தள்ளாத வளத்தையுடைய வயல் சூழ்ந்த தஞ்சைவாணன் தரியலர்போல், உன்னை நினையாது முன்பு சென்றன ராயினும் இப்போது நினைத்து இகழாது வந்து உன் கடை வாசலில் நின்றனர்; அவர் செய்த குற்றத்தை மனத்திற் கொள்ளாமல் எதிர் கொள்வதே குணமாவது என்றவாறு.

தள்ளா - நீங்காத. உள்ளாது - நினையாது. பண்டு-முன்னம். உள்ளி - நினைந்து. கடை - கடைவாசல். கோமளம் - இளமையழகு. 'உன்னையுள்ளாது' எனவும், 'இப்போதுள்ளி' எனவும் இயையும். (௩அ௫)

தலைவனைத் தலைவி யெதிர்கொண்டுபணிதல் :

மருவிற் பெருநல மன்னுவ தாந்தஞ்சை வாணன்வெற்பர்
ஒருவிற் பசலை யுருக்குவ தாநமக் கூடலெவ்வா
றிருவிற் புருவ விளங்கொடி யேயெய்து மெய்நலில்லாத்
திருவிற் புனைநறுந் தார்வரை மார்பர் திருமுனின்றே.

(இ - ள்.) இரண்டு விற்போன்ற புருவத்தையுடைய இளங்கொடியே! தஞ்சைவாணன் வெற்பர் நம்மை மருவினராயின் பேரழகு நிலைபெறுவதாம்; அவர் நீங்கின் பசலைநிறமும் உருக்குவதாம்; இத்தன்மையாகிய நமக்கு ஊடலெவ்வாறு, விடுதலில்லாத் திருவைப்போல் அணியப்பட்ட நறிய தாரை யணிந்த வரை போன்ற மார்பர் திருமுன்னின்று பணிதும் என்றவாறு.

நலம் - அழகு. ஒருவுதல் - நீங்குதல். எய்தும் - பணிதும். எய்தல் - விடுதல். இன் உருபு ஒப்புப்பொருண்மைக்கண் வந்தது. புனைதல் - அணிதல். திருமுன் - தகுதி வழக்கு. எய்தும் என்றது பணிதும் என்னும் பொருள்கொள்ளுமோ எனின், தேவர் கூறிய கடவுள் வாழ்த்தில்,

[1] 'தேவாதி தேவ னவன்சேவடி சேர்து மன்றே.'

என்பதனில், சேர்தும் என்பதற்கு வணங்குதும் என நச்சினார்க்கினியர் உரை யெழுதினர். சேர்தும் என்பதும் எய்தும் என்பதும் ஒருபொருட்கிளவியாதலால், எய்தும் என்பதற்குப் பணிதும் எனவே பொருள் கொள்க. (௩அசு)

புணர்ச்சியின் மகிழ்தல் :

மன்னவர் காம நெடுங்கடல் வாணன்தென் மாறையன்னுள்
தொன்னலம் வார்முலை மத்தந் தழீஇத்தடந் தோளிணையாம்
பன்னக நாணிற் கடைந்திகழ் வார்திரைப் பட்டநன்னீர்
இன்னமிழ் தார்ந்திமை யோரமை யாவின்பம் எய்தினரே.

(இ - ள்.) தலைவர் காதலாகிய நெடுங் கடலில் வாணன் தென்மாறையன்னாளது அழகு பழகிய வார்

1. சிந்தாமணி. கடவுள் வாழ்த்து - க.

முலையாகிய மத்தைத் தழுவிய பெரிய தோளிணையாகிய பன்னகநாணினாற் கடைந்து, இதழின்கண் நெடிய அலையால் உண்டாகப்பட்ட நன்னீராகிய இனிய அமுதத்தை ஆர்ந்து இமையோரது தெவிட்டாத இன்பத்தை யெய்தினர் என்றவாறு.

நலம் - அழகு; தொல் - பழமை; மாறிப்பொருள்கொள்க. மத்தம் - மத்து. பன்னகம் - பாம்பு; திரை - அலை. அமையா - தெவிட்டா. கூற்று, கவிக்கூற்று.

களவிற்புணர்ச்சி யெல்லாம் தலைவன் கூற்றாய் நிகழ்த்தி இப்புணர்ச்சி கவிக்கூற்றாயினவாறு என்னையெனின், தலைவி நாணுடையளாதலால் தலைவி செயலின்றித் தலைவன் செயலாய் முடிதலின் தலைவன் கூற்றாய் நிகழ்ந்தது; கற்பியல் அவ்வாறன்றி இருவர் செயலும் ஒத்து நிகழ்தலின் இருவர் கூற்று ஒருகவிக்கண் கூறலாகாமையின் கவிக்கூற்றாய் நிகழ்ந்தவாறு காண்க. (௩அ௭)

## வெள்ளணியணிந்து விடுத்துழித் தலைமகன் வாயில்வேண்டல்

வெள்ளணி அணிந்து விடுத்துழித் தலைமகன் வாயில் வேண்டல் என்பது, தலைவி புதல்வனைப் பயந்து நெய்யாடிய செய்திக்கு அடையாளமாகிய வெள்ளாடை முதலியன அணிந்து சேடியை விடுப்புழி அச்சேடியை வாயிலாகத் தலைவன் வேண்டிக் கூறல்.

என்பாற் குறையை நினைந்து மருதெதிர் கொள்ளவல்லே
தன்பாற் புலவி தணிசென்று நீதஞ்சை வாணன்வையம்
அன்பாற் பரவும் புகழுடை யானரு ளேயனையாய்
உன்பாற் புலவி யுருள்வண்ண வார்குழ லொண்ணுதலே.

(இ - ள்.) வையம் அன்பாற் பரவும் புகழுடையானாகிய தஞ்சைவாணனது அருளைப்போல்வாய்! அழகு பொருந்திய வார்தந்த குழலையுடைய ஒண்ணுதலாள் நின்னிடத்தில் புலவியையுருள்; ஆதலால், என்னிடத்தில் குறையை நினைந்து மருதவண்ணம் எதிர்கொள்ள நீ விரைந்து சென்று அவடன்னிடத்துப் புலவியை ஆறச் செய்வாய் என்றவாறு.

வல் - விரைவு;

[1] 'செல்லாமை யுண்டே லெனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க்குரை.'

என்பதனானறிக. புலவி - ஊடல். வையம் - உலகு. பரவுதல் - துதித்தல். ஒண்ணுதல் - ஆகுபெயர். (௩௮௮)

### தலைவிநெய்யாடியதிகுளை சாற்றல் :

தலைவி நெய்யாடியது இகுளை சாற்றல் என்பது, தலைவி புதல்வனைப்பயந்து நெய்யாடியதனைப் பாங்கி தலைவற்குச் சொல்லல்.

மலர்புரை யேர்கொண்ட வாட்கணெங் கோமங்கை வாணன்தஞ்
பலர்புகழ் பாலற் பயந்துநெய் யாடினள் பாங்கெவர்க்கும் [சைப்
அலர்புரை நீடொளி யாடியுட் பாவையன் னுட்குளநீர்
புலர்புன லூரவென் னேதிரு வுள்ளமிப் போதுனக்கே.

(இ - ள்.) மலரை யொப்பாய்! அழகுகொண்ட ஒளி பொருந்திய கண்ணையுடைய எமக்கரசாகிய மங்கை, வாணன் தஞ்சையிற் பலரும் புகழப்பட்ட பாலனைப்பெற்று நெய்யாடினள்; பாங்கியர் எவர்க்கும் அலரையொப்பாய் நீண்ட வொளியையுடைய கண்ணுடியுட் பாவைபோன்றுளிடத்து உள்ளன்பு புலர்ந்த புனலூர! இப்போது உனக்குத் திருவுள்ளம் யாதோ என்றவாறு.

'பலர் புகழ்' என்புழிச் சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. பயந்து - ஈன்று. பாங்கு - பாங்கியர். 'பாங்கிலன் றமியாளிடந் தலைப்படலும்.' என்பதனானுணர்க. ஆடி - கண்ணாடி. 'அன்னுட்கு' என்புழி, வேற்றுமை மயக்கம். உளநீர் - உள்ளன்பு. ஓகாரம் - ஐயம்; என்னை, பரத்தையர் சேரிக்குச் செல்லத் திருவுளமோ, ஈண்டு உறையத் திருவுள்ளமோ என ஐயந்தருதலான் எனக் கொள்க. (௩௮௯)

### தலைவன் தன்மனத்துவகை கூறல்

மையணி வேல்விழி வாணுதல் கூர்ந்தது வாணன் றஞ்சைக்
கொய்யணி நாண்மலர்க் கொம்பரன் னுள்குழ விப்பயந்து
நெய்யணி மேனியி லையவி பூண்ட நிலையறிந்தே
கையணி வால்வளை யைக்கண்ட நாளினுங் காதன்மையே.

1. குறள். பிரிவாற்றாமை - க.

(இ - ள்.) மையணி வேல்போன்ற விழியையும் வாணு தலேயும் உடையாய்! வாணன் தஞ்சையிற் கொய்யப்பட்ட அழகாகிய நாண்மலரையுடைய கொம்புபோன்றவள் புதல் வனைப் பெற்று நெய்யணிந்த மேனியில் வெண் சிறுகடுகு பூண்ட நிலைமை யறிந்து கையிலணிந்த ஒள்ளிய வளையினை யுடையாளைக் கண்ட நாளினும் காதற்றன்மை மிகுந்தது என்றவாறு.

வேல்விழிவாணுதல், அன்மொழித்தொகை. கூர்தல் - மிகுதல். அணி - அழகு. நாண்மலர் - முறுக்கவிழ்மலர். குழவி-மகவு.

[1] 'குழவியு மகவு மாயிரண் டல்லவை
கிழவ வல்ல மக்கட் கண்ணே.'

என்பதனுனுணர்க. பயந்து - பெற்று. ஐயவி - வெண்சிறுகடுகு,

[2] 'நெய்யோ டையவி யப்பியை துரைத்து'

என்பதனுனுணர்க. குழவி என்புழி இரண்டனுருபுதொக்கது. வால்வளை - ஆகுபெயர். காதன்மை - ஆசைத்தன்மை. வாணுதல் - அண்மைவிளி. (௩௧0)

தலைவிக்கவன்வரல் பாங்கி சாற்றல் :

ஏரார் புதல்வன் பிறந்தனன் வாழிய வென்னுமுன்னே
வாரார் வளமனை வந்துநின் ருர்கங்குல் வாணன் தஞ்சை
நீராவி நீல நெடுங்கண்மின் னேநின்னை நீப்பதல்லால்
தேரா தொழிகுவ ரோபெரி யோர்தஞ் சிறுவனையே.

(இ - ள்.) நெடுங்காலம் வாழ்க, அழகார்ந்த புதல் வன் பிறந்தனனென்று சொல்வதற்கு முன்னே வருந் தகுதியில்லார் கங்குலிடத்து வளவிய நம் மனையில் வந்து நின்றனர்; வாணன் தஞ்சையில் நீர்பொருந்திய வாவியிற் பூத்த நீலம் போன்ற நெடிய கண்ணையுடைய மின்னே! நின்னைப் பிரிவதேயல்லது, பெரியர் தம் சிறுவனைத் தேர்ந் தறியாது விடுவரோ என்றவாறு.

---

1 தொல். பொருள். மரபியல் - ௨௩.
2 திருமுரு. ௨௨௮.

ஏர்-அழகு. வாழிய-நெடுங்காலம் பற்றிய சொல். என்னை,

[1] 'வாழிய வென்னுஞ் செயவென் கிளவி'

என்பதனுன் உணர்க. ஆவி-வாவி. மின்-ஆகுபெயர். நீத்தல்-பிரிதல். தேர்தல் - பிறந்தகாலத்தை யாராய்ந்தறிதல். (௩௯௧)

தலைவியுணர்ந்து தலைவனோடு புலத்தல்:

வயங்கே முலகும் புரக்கின்ற வாணன்தென் மாறையன்ன
நயங்கேழ் பெருவள நல்குநல் லூர நயந்துநண்ணி
முயங்கேல் சிறுவற் பயந்தவென் மேனியின் முத்துவடம்
தயங்கே ரகமுழு தும்பழு தாமது தானினக்கே.

(இ - ள்.) விளங்கப்பட்ட ஏழுலகத்தையும் காக்கின்ற வாணன் தென்மாறையன்ன இன்பமும் ஒளியும் பெரிய வளமும் நல்கப்பட்ட நல்லூரையுடையானே, சிறுவனைப் பயந்த என் மேனியை விரும்பிப் பொருந்தி முயங்கற்க; முயங்கில், அதுதான் நினக்கு இன்பமாகிய பரத்தையர் முலைமேல் அணிந்த முத்துவடந் தயங்கப்பட்ட அழகு பொருந்திய நெஞ்சு முழுதும் பழுதாம் என்றவாறு.

வயங்கல் - விளங்கல். புரத்தல்-காத்தல். நயம்-இன்பம். கேழ்-ஒளி. தயங்கல்-விளங்கல். ஏர்-அழகு. அகம்-நெஞ்சு. 'மேனிநயந்து' என இயையும். (௩௯௨)

தலைவி பாணனை மறுத்தல்:

தலையா கியதன்மை யூரற்கு வாணன் தமிழ்த்தஞ்சைசூழ்
மலையா கியமதில் வையைநன் னாட்டெங்கை மான்படுக்கும்
கலையாகு நின்னிசைக் கண்ணிகொண் டேஎதிர் கன்றுதின்னிப்
புலையா கடக்கவெம் மிற்போக போக புறங்கடையே.

(இ - ள்.) தலைமைத் தன்மை யாகிய ஊரற்கு வாணனது தமிழ்த் தஞ்சையைச் சூழ்ந்த மலையாகிய மதிலையுடைய வையை சூழ்ந்த நல்ல நாட்டின் எங்கையாகிய மானைச் சிக்கவைக்கும் மானுக்கு இனமாகிய கலைபோன்ற நின் இசையாகிய கண்ணிகொண்டு திரியப்பட்ட கன்று

1 தொல். எழுத்து. உயிர்மயங்கியல் - ௧௦.

தின்னி யென்னும் புலையா, எம் இல்லினின்றுங் கடக்கப் புறங்கடையிற் போக போக என்று கல்லெறிந்தனள் என்றவாறு.

எங்கை - என் தங்கை. கண்ணி-மான்படுக்குங் கண்ணி. கலை - இசைநூல். 'கன்று தின்னி' இகழ்ச்சிப் பெயர். 'போக போக' என்பது வெறுப்பின்கண் வந்த அடுக்கு. மேற்செய்யுளில் கல்லெறிந்தாய் என்று பாணன் தலைவியோடுங் கூறியவாறு. இச்செய்யுளில், 'கல்லெறிந்தனள்' என்பது வருவிக்கப்பட்டது. (௩௬௩)

வாயில்மறுக்கப்பட்டபாணன் கூறல்:

வாயில் மறுக்கப்பட்ட பாணன் கூறல் என்பது, கல் எறிந்த தலைவியுடன் பாணன் கூறல்.

நினக்கே தருநின் னெடும்புன லூரனு நீயுமவன்
தனக்கே தருவை தமிழ்த்தஞ்சை வாணன் தடங்கிரிசூழ்
புனக்கே கயமன்ன நின்னடி போற்றிப் புகன்றுகன்றும்
எனக்கே தருமிகை யாலெம்பி ராட்டி யெறிந்தகல்லே.

(இ - ள்.) எம்பிராட்டி! நின்னுடைய கணவனாகிய நெடும்புனலூரனும் நினக்கே தருவன், நீயும் அவன்றனக்கே தருவை, யான்செய்த குற்றத்தால் நீ யெறிந்த கல், தமிழ்த் தஞ்சைவாணனது விசாலமாகிய மலைசூழ்ந்த புனத்திலிருக்கும் மயில் போன்ற நின்னுடைய அடியைத் துதித்துத் தலைவன் வரவைக் கூறிய அதனால் மனங்கன்றும் எனக்கே தரும் என்றவாறு.

ஏகாரம் மூன்றும் பிரிநிலை; ஆடவாரிலும் மடவாரிலும் பாணரிலும் பிரித்து வாங்குதலின். தடங்கிரி-பெரியமலை. கேகயம்-மயில். கன்றல் - வெம்புதல். மிகை - குற்றம். (௩௬௪)

விறலி வாயில் மறுத்தல்

வண்புன லூர்வையை சூழ்தஞ்சை வாணனை வாழ்த்தலர்போல்
கண்புன லூருமென் காதல்கண் டேநின் கடைத்தலைக்கே
தண்புன லூரன்வந் தானென்று சாற்றினை தானமுறப்
பண்புன லூர்களெல் லாம்பாடி யேற்றுண்ணும் பாண்மகளே.

(இ - ள்.) ஈவுபெறப் புனல்சூழ்ந்த ஊர்கடோறும் பண்ணைப்பாடி இரந்துண்ணும் பாண்மகளே! வளவிய புனல் செல்லும் வையையாறு சூழ்ந்த தஞ்சவாணனை வாழ்த்தலர்போல் கண்ணிடத்துப் புனலூர்ந்துவரும் என் காதலைக்கண்டு நின்கடைத்தலையின்கண் தண்ணிய புனலூரன் வந்தனனென்று சொல்லினை, இச்சொற்கு மனம் பொறுத்தேன் சொல்லாய் என்றவாறு.

ஊர்தல்-செல்லுதல். ஊர்தல்-பெருகுதல். ஊரன்-மருதநிலத்துத் தலைவன். தானம்-ஈவு.

'இச்சொற்கு மனம் பொறுத்தேன் சொல்லாய்' என்றது வருவிக்கப்பட்டது. (௩௯௫)

விருந்தொடு வந்துழிப்பொறுத்தல் கண்டு இறையோன் மகிழ்தல்:

புரவே யெதிர்ந்த நமக்கு விருந்தின்று போலவென்றும்
வரவே புணர்ந்தநம் மாதவம் வாழிய வாணன்தஞ்சைக்
குரவேய் கருமுகிற் கொந்தள பாரங் குரும்பைக்கொங்கை
அரவேய் நுடங்கிடை யாள்விழி யூர்சிவப் பாற்றுதற்கே.

(இ - ள்.) வாணன் தஞ்சையிலிருக்கும் குரவலர் மாலை சூடிய கருமுகில் போன்ற அளகபாரத்தையும், குரும்பைபோன்ற கொங்கைப் பாரத்தையும் தாங்க ஆற்றாதாள்போல, பாம்பையொத்த ஒசியப்பட்ட இடையானது விழியின்கண் ஊரப்பட்ட சிவப்பாற்றுதற்கு நம்மைக் காக்க எதிராய்வந்த விருந்து இன்று வரப்புணர்ந்த நமது மாதவம் எஞ்ஞான்றும் வாழ்க என்றவாறு.

புரக்க - காக்க. 'நமக்கு' என்புழி, வேற்றுமை மயக்கம். போல-அசைநிலை.

[1] 'ஒப்பில் போலியு மப்பொருட் டாகும்.'

என்பதனானுணர்க. குரவு - ஆகுபெயர். கொந்தள பாரம் - அளக பாரம். நுடங்கல் - ஒசிதல். 'மாதவம் என்றும் வாழிய' என இயையும். (௩௯௬)

1. தொல். சொல். இடையியல் - ௩௦.

விருந்துகண்டொளித்த வூடல்வெளிப்பட நோக்கிச்
சீறேலென்றவள் சீறடிதொழுதல் :

தெரியோர் பொருட்டன்று தேர்வின்றி யூடல் செயிர்த்தவர்க்குக்
கரியோர் தெளித்தன்ன காரணங் காட்டுவர் கானுண்டுதேன்
வரியோர் தொடைப்புயன் வாணன்தென் மாறை மலர்த்திருவே
பெரியோர் பொறுப்பரன் றேசிறி யோர்கள் பிழைத்தனவே.

(இ - ள்.) மணத்தை உண்டு வண்டுகள் பண்ணை வாசிக்கும் மாலையை யணிந்த புயத்தையுடைய வாணன் தென்மாறை நாட்டிலிருக்குந் திருவை யொப்பாய்! ஆராய்ச்சியின்றி ஊடுதல் ஒருபொருளை யுடைத்தன்று, தெரிவாயாக; கோபித்த வாக்கால் ஆற்றுதலின்றிச் சான்றோருள்ளோர் தெளிவித்து என்னை காரணங் காட்டுவர், என்னிடத்துக் குற்றம் உண்டாயினுஞ் சிறியோர்கள் பிழைத்தன செய்தக்கால் பெரியோர்கள் பொறுப்பர், ஆதலால் யான் தொழுகின்றேன், என் பிழையைப் பொறுத்தருள வேண்டும் என்றவாறு.

'ஊடலோர் பொருட்டன்று தேர்' என மாறுக. செயிர்த்தவர்- கோபித்தவர். கரியோர் - சான்றோர். கான் - மணம். தேன் - வண்டு. வரி - பண். ஓர்தல் - ஈண்டு வாசித்தல். தொடை - மாலை. அன்றும், ஏகாரமும் அசைநிலை. 'சீறடிதொழுதல்' என்னுங் கிளவிப் பொருளானும், வருஞ்செய்யுளில், 'என்பாத மிறைஞ்சுதல்' என்று தலைவி கூறுதலானும், 'தொழுகின்றேன்' என்னுஞ் சொல் வருவிக்கப்பட்டது. (௩௯௭)

இஃதெங்கையர்காணின் நன்றன்றென்றல் :

இஃது எங்கையர் காணின் நன்று அன்று என்றல் என்பது, எங்கையராகிய பரத்தைமார் காணின் நீர் செய்த பணிவு குற்றமாய் முடியும் என்றல்.

எண்போன நெஞ்சமு நீருமென் பாத மிறைஞ்சுதல்நுங்
கண்போலு மெங்கையர் காணினன் றேகயன் மாதிரத்துத்
திண்போ தகந்தொறுந் தீட்டிய வாணன் செழுந்தஞ்சைசூழ்
அண்போ தளவிய நீர்வையை நாட்டுறை மன்னவரே.

(இ - ள்.) கயற்கொடியைத் திக்குகளில் இருக்குந் திண்ணிய யானைகடோறும் எழுதியவாணன் செழுமையை யுடைய தஞ்சையைச் சூழ்ந்த வளவியபோது கலந்துவரப் பட்ட நீரையுடைய வைகைநாட்டில் உறையும் மன்னவரே! என்னை எண்ணுதல்போன நெஞ்சமும் நீரும் என் பாதம் வணங்குதலை நமக்குக் கண்ணையொக்கும் எனக்குத் தங்கையராகிய பரத்தையர் காணின் நன்றோ என்றவாறு.

எண் – எண்ணுதல். இறைஞ்சுதல் – வணங்குதல். எங்கையர் – என் தங்கைமார். 'நன்றோ' என்புழி, ஓகாரம் எதிர்மறை. கயல் – ஆகுபெயர். மாதிரம் – திக்கு. போதகம் – யானை. தீட்டல் – எழுதல். அளவுதல் – கலத்தல். (௩௬௮)

அங்கவர்யாரையு மறியேனென்றல்:

மன்னும் புலவியை மாற்றியுந் தேற்றியும் வல்லவண்ணம்
இன்னுந் தெளிந்திலை யென்னேயென் னேயென்செய் கேளிதற்கு
முன்னம் படிந்து முழுகுநன் னீர்க்கங்கை முன்னுறையும்
அன்னம் படியுங்கொ லோஉவ ராழியி லாரணங்கே.

[இது பிறசெய்யுட் கவி.] (௩௬௯)

காமக்கிழத்தியைக் கண்டமை பகர்தல்:

போயே தெருவில் தனிவிளை யாடும் புதல்வற்புல்ல
நீயே திலையல்லை நின்மக னேயிவன் நீயுமவன்
தாயே வருகெனச் சேயன்ன வாணன் தமிழ்த்தஞ்சைமான்
ஏயே யெனநிற்ற லானறிந் தேன்தன்னை யெங்கையென்றே.

(இ-ள்.) மகிழ்ந! முருகவேளையொத்தவாணன் தமிழ்த் தஞ்சையிலிருக்கும் மான்போன்ற பரத்தையானவள் தெருவிற்போய்த் தனியே விளையாடும் புதல்வனைத் தழுவியெடுத் தலைக் கண்டு யான், நீ அயலாளல்லை, நினக்கு மகனே இவன், நீயும் அவன்தாயே, வருக என்றழைக்க, அவள் அம்மொழி கேட்டு நாணத்தினால் ஏயேயென நிற்றலான் அவள் தன்னை எங்கையென்றறிந்தேன் என்றவாறு.

மகிழ்ந என்பது முன்னிலை எச்சம். புதல்வன் - மகன். புல்லல் - தழுவல். ஏதிலர் - அயலார். சேய் - முருகன். ஏயே என்பது நாணத்தின் வந்த அடுக்குமொழி. எங்கை - எனக்குத் தங்கை. (௬00)

தலைவியைப் பாங்கி கனித்தல் :

மாவா ரணமன்ன வாணன்றென் மாறைநம் மன்னர்நின்னைப்
பாவாய் பணியவும் பார்க்கிலை நீயிடப் பாகமங்கை
தாவாத சங்கரன் கங்கைதன் கொங்கை தழீஇயிதழிப்
பூவார் சடைமுடி மேல்வைத்த போதும் பொறுத்தனளே.

(இ - ள்.) பாவை போன்றவளே! பெரிய யானை யொத்த வாணன் தென்மாறை நாட்டில் நம் மன்னர் நின்னைப் பணிதலைச்செய்யவும் நீ பார்க்கிலை; சங்கரன் இடப் பாகத்தை நீங்காத அம்பிகை, சங்கரன் கங்கைதன் கொங்கையைத் தழுவிக் கொன்றைப் பூவார்ந்த சடைமுடியின் மேல் வைத்தபோதும் பொறுத்தனள், இது கேட்டிலையோ என்றவாறு.

மங்கை - அம்பிகை. தாவாத - நீங்காத. இதழி - கொன்றை. உம்மை - சிறப்பு. (௬0௧)

தலைமகள் புலவிதணியாளாகத் தலைமகனூடல் :

தழங்கார் புனல்வையை சூழ்தஞ்சை வாணன் தனதருள்போல்
பழங்காத லெண்ணலென் பைதனெஞ் சேயிவள் பண்டுபைம் [பொற்
கழங்கா டிடமுங் கடிமலர்க் காவுங் கடந்துபுள்ளும்
வழங்கா வழிநமக் கோர்துணை யாய்வந்த மானல்லளே.

(இ - ள்.) துன்பமுற்ற என்னெஞ்சே! இவள் முன்பு செம்பொன்னாற் செய்த கழங்காடப்பட்ட இடமும், விளையாடப்பட்ட மணத்தொடு கூடிய மலர்ச்சோலையும் விட்டு நீங்கிப் புட்களும் இயங்காத பாலைநிலத்தின் வழியில் நமக்கொரு துணையாய்வந்த மான்போன்றவளல்லள், நிறைந்து ஒலிக்கும் புனலையுடைய வையையாறு சூழ்ந்த தஞ்சை வாணன் தன்னுடைய அருள்போன்ற தலைவி பழங்காதலை எண்ணவேண்டா என்றவாறு.

'ஆர்தழங்கு புனல்' என இயையும். தழங்கு புனல் - வினைத்தொகை. பைதல் - துன்பம். கடி - மணம். கா - சோலை. கடத்தல் - விட்டு நீங்கல். வழங்கல் - உலாவல். மான் - ஆகுபெயர். ()

பாங்கி அன்பிலைகொடியையெனத் தலைவனை யிகழ்தல் :

பாங்கி அன்பிலை கொடியை எனத் தலைவனை இகழ்தல் என்பது, பாங்கி தலைவனை அன்பிலாய் கொடியாய் என இகழ்ந்து கூறல்.

மைந்நாண் மலர்த்தொடை வாணன்தென் மாறையெம் மன்ன
தந்நாண் முயங்கி அமிழ்தென வார்ந்தனிர் ஆர்வமுற்று [வுவந்
முந்நாண் மதிவட்ட மென்முலை மாதை முனிந்துநஞ்சென்
றிந்நாண் மிகவுவர்த் தீர்புல வாநிற்றிர் எங்களையே.

(இ - ள்.) கருநிறம் பொருந்திய முறுக்கவிழ் மலர் மாலையணிந்த வாணன் தென்மாறை நாட்டிலிருக்கும் எமக்கு மன்னரே! அந்நாள் மூன்றும் பூரணைநாள் மதியினது வட்டம் போன்ற மெல்லிய முலைவட்டத்தையுடைய மாதை விருப்பமுற்றுப் புணர்ந்து மகிழ்ந்து அமுதென இன்பத்தை நுகர்ந்தீர்; இந்நாள், நஞ்சென்று முனிந்து, மிகவும் வெறுத்து எங்களோடு புலவாநின்றீர் என்றவாறு.

மைந்நாண்மலர்-குவளைமலர். மன்ன-அண்மைவிளி. உவந்து-மகிழ்ந்து. முயங்கி - புணர்ந்து. ஆர்தல் - நுகர்தல். ஆர்வம் - விருப்பம். [1] நந்தை, பத்திரை, சயை, இருத்தை, பூரணை என முதற்றிதிதொடுத்துப் பஞ்சமிவரைக்கும் முதலாம் வட்டம், சட்டிதொடுத்துத் தசமிவரைக்கும் இரண்டாம் வட்டம், ஏகாதசிதொடுத்தும் பூரணைவரைக்கும் மூன்றாம் வட்டமாதலின், 'முந்நாண் மதிவட்டம்' என்றார். உவர்த்தல் - வெறுத்தல். புலத்தல் - ஊடுதல். எங்களை என்புழி, வேற்றுமை மயக்கம். 'அந்நாள் முந்நாள்' எனவும், 'ஆர்வமுற்று முயங்கி யுவந்தமிழ்து' எனவும், 'இந்நா ணஞ்சென்று முனிந்து மிக' எனவும், 'எங்களைப் புலவாநிற்றிர்' எனவும் இயையும். (௩0௩)

1. நந்தை-க, ௬, கக : பத்திரை-௨, ௭, க௨ : சயை-௩, ௮, க௩ : இருத்தை - ௪, ௯, க௪ : பூரணை - ௫, க0, க௫ : என மதிவட்டங் கொள்ளப்படுவதனை பிங்கலந்தையில் வானவர் வகைத்தொகுதியுட் காண்க.

ஆயிழைமைந்தனுமாற்றாமையும்வாயிலாகவரவெதிர்கோடல்:

ஆயிழை மைந்தனும் ஆற்றாமையும் வாயிலாக வரவு எதிர்கோடல் என்பது, தலைவன் பரத்தையர் சேரிக்குத் தேரின் மேலேறிப் போம்போது தெரிந்தெடுத்த அணியை யணிந்த புதல்வன் குறுக்காக நிற்க, அப்புதல்வனைத் தழுவி யெடுத்துக்கொண்டு தலைவன் ஆற்றாமையுடன் வந்துழி, தலைவி புதல்வனும் தலைவனாற்றாமையும் தூதாகத் தலைவனை எதிர்கொள்ளுதல்.

**வெள்ளம் பரந்தன்ன வேட்கைசென் றாலு மிகப்பெரியோர்**
**உள்ளஞ் சிறியவர் மேற்செல்வ ரோவொளிர் கோமளஞ்செய்**
**வள்ளங் கமல மலர்த்தஞ்சை வாணன்தென் மாறையன்னப்**
**புள்ளம் புனல்வய லூரபுன் காமம் புகல்வதன்றே.**

(இ - ள்.) கடல் புரண்டுவந்தாற் போலும் வேட்கை செல்லினும் மிகவும் பெரியராயினோர் உள்ளஞ் சிறியவராகிய பரத்தையர்பால் செல்வரோ, செல்லார்; விளங்காநின்ற அழகாற்செய்த கிண்ணம்போன்ற கமலமலரில் தஞ்சைவாணன் தென்மாறை அன்னப் புள்ளிருக்கும் அழகிய புனலையுடைய வயலூர! புல்லிய காமத்தை ஒரு பொருளாய்ச் சொல்வதன்று என்றவாறு.

எனவே, நீ பரத்தையர் சேரிக்குப் போன தன்மையை யல்லை என்றவாறாயிற்று. வெள்ளம் - கடல். [1]'கடலன்ன காமமுழந்து' என்றார் பிறரும். உள்ளஞ்சிறியவர் - பரத்தையர். ஓகாரம் - எதிர்மறை. கோமளம் - அழகு. வள்ளம் - கிண்ணம். மலர் என்புழி, ஏழாம்வேற்றுமைத் தொகை. அம் - அழகு. புகல்வது - சொல்வது. தாமரைமலரில் அன்னப்புள்ளிருக்கும்; ஒழிந்த பூவில் இராதெனப் பொருள் கொண்டவதனான், தலைவன் தன்னிடத்தல்லது பரத்தையர்பால் செல்வான் அல்லனென்பதாக உள்ளுறையுவமம் தோன்றியவாறுணர்க. 'வள்ளங் கமலமலர் அன்னப்புள்ளம்புனல்' எனக் கூட்டுக. (௪0௪)

மணந்தவள் போயபின்வந்த பாங்கியோ
டிணங்கிய மைந்தனையினிதிற் புகழ்தல்:

**இருமையி லேயும் பயன்கொளெல் லாந்தன்னை யீன்றநமக்**
**கொருமையி லேவந் துறத்தகைந் தான்மைந்த னெண்சுடர்போல்**
**வருமயி லேகொண்டு மாதடிந் தானன்ன வாணன்தஞ்சைத்**
**திருமயி லேயனை யாய்புன லூரனைத் தேருடனே.**

1. குறள். நாணுத்துறவுரைத்தல் - எ.

(இ - ள்.) ஒள்ளிய ஞாயிறுபோல் ஒப்புச்சொல்ல வரும் வேல்கொண்டு மாமரமாகநின்ற சூரனை வெட்டிய முருகவேள்போன்ற வாணன் தஞ்சை நகரிலிருக்கும் அழகிய மயில் போன்றவளே! மைந்தன் இம்மை மறுமைகளில் தரும் பயன்களையெல்லாம், தன்னைப்பெற்ற நமக்கு, ஒருமையாகிய இப்பிறப்பிலே வந்து பொருந்தப் பரத்தையர் சேரிக்குப்போம் புனலூரனைத் தேருடனே தகைந்து மனைக்கு அழைத்துக்கொண்டு வந்தனன் என்றவாறு.

இருமை - இம்மை, மறுமை. ஒருமை - இப்பிறப்பு. உறுதல்- பொருந்துதல். சுடர் - ஞாயிறு. அயில் - வேல். ஏகாரம் - அசைநிலை. தடிதல் - வெட்டுதல்;

[1] 'சூர்முதல் தடிந்த சுடரிலை நெடுவேல்'

என்பதனானுணர்க. 'மைந்தனிருமையிலே' எனவும், 'வந்துறப் புனலூரனைத் தேருடனே தகைந்தான்' எனவும் மாறுக. (௪௱௫)

தலைவி தலைவனைப் புகழ்தல் :

கொண்டானில் துன்னிய கேளிர்மற் றில்லைக் குறிப்பினென்று
தண்டா தவர்சொன்ன சால்புகண் டேன்தல மேழ்புரக்கும்
வண்டார் மலர்ப்புயன் வாணன்தென் மாறை மகிழ்நர்முன்னாள்
உண்டா கியபழங் கேண்மையிந் நாளும் ஒழிந்திலரே.

(இ - ள்.) தலம் ஏழையுங் காக்கும் வண்டார்ந்த மாலையணிந்த புயத்தையுடைய வாணன் தென்மாறையிலிருக்குந் தலைவர் முன்னாள் உண்டாகிய பழகிய நண்பு இந்நாள்வரைக்கும் ஒழிந்திலர்; ஆதலால், கருதுமிடத்துக், கணவனினும் அணித்தான கேளிர் இல்லையென்று அறிவில் நீங்காத பெரியோர் சொன்ன மாட்சிமையை இன்று கண்டேன் என்றவாறு.

பாங்கி-முன்னிலையெச்சம். கொண்டான்-கணவன். உடலும் உயிரும் நெஞ்சும் அன்பும் ஒன்றாய்க் கலந்த தன்மை தந்தை தன்னையர் முதலாயினோர்க்கு இல்லையாதலால், 'கொண்டானிற் றுன்னிய கேளிர்மற் றில்லை' என்று கூறினாளென்றுணர்க.

---

1. திருமுரு - ௪௬.

துன்னுதல் - கிட்டுதல். கேளிர் - சுற்றத்தார். மற்று - அசை. குறித்தல் - கருதல். தண்டாதவர்-நீங்காதவர். சால்பு-மாட்சிமை. மலர் - ஆகுபெயர். மகிழ்நர் - கணவர். கேண்மை - நட்பு. (௪0௬)

பாங்கி மனைவியைப் புகழ்தல் :

சிறந்தார் புகழ்தருந் தீம்புன லூரன்செய் தீமையெல்லாம்
மறந்தார்வ மெய்தி வணங்குத லாலிவள் வாணன்றஞ்சை
நிறந்தா ரகையன்ன நித்திலம் போலு நெடுங்குலத்தில்
பிறந்தார் நிறைந்தகற் போர்வடி வேபெற்ற பெற்றியளே.

(இ - ள்.) இத் தலைவி மிக்காயினோர் புகழ்தரும் இனிமை யாகிய புனலூரன் செய்த தீமையெல்லாம் மறந்து விருப்பமுற்று அவன் அத்தன்மையன் என்று கருதாது வணங்குதலான் வாணன் தஞ்சை நகரின்கண் ஒளியின் தாரகை யொத்த முத்துப்போல் உயர்குலத்திற் பிறந்த மடவாருடைய நிறைந்த கற்பிலக்கணமெல்லாம் ஒருரு வாகப் பெற்ற பெற்றியள் என்றவாறு.

சிறந்தார் - மிக்கோர்.

[1] 'உலக முவப்ப வலனேர்பு திரிதரு.'

[2] 'பகல்கான் றெழுதரு'

என்பனபோலப், 'புகழ்தரு' என்பது ஓர் சொல். ஆர்வம் - விருப்பம். நிறம் - ஒளி. நெடுங்குலம் - உயர்குலம்; நெடுமால் என்பது போல.

இச்சொன்ன கிளவிகளெல்லாம், 'வாயில்வேண்டல்' முதல் நான்கு வகைக்கும் ஒக்குமாறு அறிந்துகொள்க. (௪0௭)

பரத்தையிற் பிரிவு முற்றிற்று.

---

1. திருமுரு. க.
2. பெரும்பாணாற்றுப்படை - உ.

## உகூ. ஓதற் பிரிவு

அஃதாவது, தலைவன் கல்வி காரணமாகப் பிரிதல். தலைமகனை எய்தியிருந்தே இவன் ஓதுவான் பிரிவானேன் எனின், முன்ஞான மில்லாதானாகவே, ஞானத்தின் வழியது ஒழுக்கமாகலானும், ஒழுக்கத்தின் வழித்துக் குலமாகலானும், இவையெல்லாம் குறையீடாமே யெனின், ஆகாது; கற்பான் பிரியுமென்பது அன்று; பண்டே குரவர்களாற் கற்பிக்கப்பட்டுக் கற்றான், அறம் பொருள் இன்ப வீடுபேறுகள் நுதலிய நூல்களெல்லாம்; இனிப் பரதேயத்து அவை வல்லோர் உளரெனிற் காண்பல் என்று அவை வல்லார்கள் உள வழிச்சென்று தன் ஞானம் மேற்படுத்து அவர் ஞானங் கீழ்ப்படுத்தற்கு எனக் கொள்க.

### கல்விக்குப்பிரிவு தலைமகன னுணர்ந்த தோழி தலைமகட் குணர்த்தல்:

மல்வித்த கங்கொண்ட தோளுடை யான்தஞ்சை வாணன்தொல்சீர்
நல்வித் தகன்புவி நாவில்வைத் தோன்வையை நாடனையாய்
கல்வித் தடங்கடல் நீந்திய காதலர் கற்றவர்முன்
சொல்வித்த வென்றழ லார்சுரம் போகத் துணிந்தனரே.

(இ - ள்.) மற்றொழிலில் வல்லபங்கொண்ட தோளுடையானாகிய தஞ்சைவாணனது பழைய புகழாகிய நல்ல விதையினை அகன்ற புவியினுள்ளோர் நாவில் பயிராக வைத்தவனது வைகைநாடு போன்றவளே! கல்வியாகிய பெரியகடலை நீந்திக் கரைகண்ட தலைவர் திசைகளிற் கற்றவர்முன் தாங்கற்ற கல்வியானுண்டாகிய கீர்த்தியாகிய வித்தை விதைக்க என்றெண்ணி அழலார்ந்த சுரத்தின்கட் போகத் துணிந்தனர் என்றவாறு.

மல் - மற்றொழில். வித்தகம் - வல்லபம். வித்து - விதை. புவி - ஆகுபெயர். தடங்கடல் - பெரியகடல். சொல் - கீர்த்தி. வித்த - வித்தை விதைக்க. (சு௱அ)

### தலைமகள் கார்ப்பருவங்கண்டு புலம்பல்:

யாணர்க் குழன்மொழி யென்செய்கு வேன்கல்வி யெல்லையெல்
காணப் பிரிந்தவர் காண்கில ராற்கடன் மேய்ந்துதஞ்சை [லாம்
வாணற் கெதிர்ந்தவர் மங்கையர் போலுமென் வல்லுயிரின்
ஊணற்ப மென்னவெண் ணுவரு மேத முருமுடனே.

(இ-ள்.) அழகினையுடைய குழலிசைபோன்ற மொழியாய்! தஞ்சைவாணனுக்கு எதிராகிய பகைவர் மனைவியர் போலுந் துன்பமுழந் திருக்கின்ற என்னுடைய வலிய உயிரை இனிய ஊணாக நுகர்தல் எளிதென எண்ணிக் கடல்நீரை உட்கொண்டு இடியுடனே மேகம் வாராநின்றது; இதனைக் கல்வி யெல்லையெல்லாம் காணப் பிரிந்த தலைவர் காண்கிலர், ஆதலால், யான் என்செய்கேன் என்றவாறு.

யாணர் - அழகு. செய்யா என்னும் வினையெச்சம், செய்து என்னும் இறந்தகால வாய்பாடாகப் பொருள் கொள்க. உரும் - இடி. (௪௦௯)

தலைமகளைப் பாங்கி ஆற்றுவித்தல்:

காதற் கயம்படிந் துன்னொடு காமக் கனிநுகரா
தோதற் ககன்ற வுணர்வுடை யோருடை நீருலக
மாதர்க் கமைந்தருள் வாணன்தென் மாறை வரக்கடவர்
ஆதற் கணங்கனை யாய்புய லேது அறிந்தருளே.

(இ - ள்.) அணங்கனையாய்! காதலாகிய குளத்திற் படிந்து உன்னொடு கூடிக் காமமாகிய கனியை நுகராது ஓதற்பிரிவாகப் பிரிந்த அறிவுடையோர் பூமிதேவியார்க்கு உடையோனாகி அமைந்தருளப்பட்ட வாணன் தென்மாறையில் வரக்கடவராதற்கு வந்த புயல் நிமித்தமென்று அறிந்தருள்வாய் என்றவாறு.

கயம் - குளம். புயல் - மேகம். ஏது - நிமித்தம். (௪௧௦)

ஓதற் பிரிவு முற்றிற்று.

---

## ௩௦. காவற் பிரிவு

அஃதாவது, நாடுகாத்தற்குப் பிரியும் பிரிவு. இவன் நாட்டைப் பிறர் புகுந்து நலிதலும் கைக்கொள்வதும் செய்யப்பட்டவை நீக்கு தற்குப் பிரிய ஆண்மையும் மதிப்பும் இலனும் எனின், நாட்டை நலிவாருளராக நலிவு காத்தற்குப் பிரியுமென்பது அன்று; நாட் டகத்துநின்று நகரத்து வந்து முறைசெய்ய மாட்டாத மூத்தோரும் பெண்டிரும் இருகைமுடவரும் கூனரும் குருடரும் பிணியுடை யாரும் என இத்தொடக்கத்தார் முறைக்கருமங் கேட்டுத் திருத்து தல் பொருட்டாகவும், வளனில்வழி வளந்தோற்றுவித்தற்கும், 'தேவர் குலமே சாலையம்பலமே' என்றித் தொடக்கத்தனவற்றை ஆராய்தற்கும், மதிசூடி யோம்புதற்கும் பிரியும் என்பது. அல்ல தூஉம், பிறந்தவுயிர் தாயைக்கண்டு இன்புறுவதுபோலத் தன்னாற் காக்கப்படும் உயிர்வாழ் சாதிகள் தன்னைக் கண்டு இன்புறுதலின் தான் அவர்கட்குத் தன்னுருவு காட்டுதற் பொருட்டாகவும் பிரியு மெனக் கொள்க.

தோழி தலைவன்காவற் பிரிவுணர்த்தல்:

விண்காவல் கொண்ட திலோத்தமை தான்முதல் மெல்லியலார்
கண்காவல் கொண்டருள் காரிகை காவலர் கார்க்கடல்சூழ்
மண்காவல் கொண்ட மனத்தின ராயினர் வாணன்தஞ்சைப்
பண்காவல் கொண்ட மொழிச்செய்ய வாயிதழ்ப் பைங்கிளியே.

(இ-ள்.) விண்ணுலகப் பதவிக்கு உலகில் தவஞ் செய்து ஒருவர் வாராதபடிக்கு இடையூறு செய்து காவல் கொண்ட திலோத்தமை முதலாகிய மடவார் கண்களை அயலில் நோக்காமற் காவலாய்க் கொண்டருளப்பட்ட அழகையும், வாணன் தஞ்சைநாட்டில் பண்ணைத் தன் வாயி னின்றும் போகாமற் காவல்கொண்ட மொழியையும், சிறந்த வாயிதழையுமுடைய பைங்கிளியே! காவலர் கரிய கடல்சூழ்ந்த மண்ணைக் காவல்கொண்ட மனத்தினராயினர் என்றவாறு.

விண் - விண்ணுலகு. காரிகை - அழகு. 'காரிகை பண் காவல் கொண்ட' என இயையும். (௩௪௪)

தலைமகள் கூதிர்ப்பருவங்கண்டு வருந்தல்:

மன்னுயிர் காவலன் வாணன்தென் மாறையில் வந்தளியார்
என்னுயிர் மாவல ரேந்திழை யாயித யம்புலர்த்திக்
கொன்னுயிர் வாடை கொடும்பனி நீரிற் குளிர்குழைத்துப்
பின்னுயி ராமலென் மேற்பூசு நாளுமென் பேசுவதே.

(இ - ள்.) உலகத்தில் நிலைபெற்ற உயிர்களைக் காக்கின்ற காவலனாகிய வாணன் தென்மாறையில் ஏந்திழையாய்! நெஞ்சையுலர்த்தி அச்சத்தை வீசும் வாடைக்காற்றுக் கொடியதாகிய பனிநீரிலே குளிரைக்குழைத்துப் பின் யான் மூச்சு விடாமல் என்மேற் பூசுநாளினுங் காவலர் வந்து என் உயிரை அளியார், இனிப்பேசுவது என் என்றவாறு.

புலர்த்தல் - உலர்த்தல். கொன் - அச்சம். உயிர்த்தல் - வீசுதல். உயிராமல் - மூச்சுவிடாமல். 'பூசுநாளுங் காவலர் வந்தளியார் பேசுவதென்' என இயையும். (௪கஉ)

தோழி ஆற்றுவித்தல்:

வரற்கால மென்றென் றெனப்பல கூடல் வளைத்துநிரம்
விரற்கால இன்று மெலியன்முன் னேசென்று மேதினிகாத்
துரற்கால குஞ்சர மஞ்சமஞ் சூர்ந்துறை வீசுகின்ற
சரற்காலம் வந்தடைந் தார்தஞ்சை வாணன் தமிழ்வெற்பரே.

(இ - ள்.) மின்னே! போய் நாட்டைக் காத்து உரல் போன்ற கால்களை யுடையனவாகிய குஞ்சரங்கள் அஞ்சும்படி முகில் நடந்து துளிகளையெறியப்பட்ட சரற்காலமென்றறிந்து தஞ்சைவாணன் தமிழ்வெற்பர் வந்தடைந்தனர்; ஆதலால், தலைவர் வருங்காலம் எப்போது எப்போது என்று பலகால் கூடல் வளைத்து விரல் உதிரமொழுக இன்று மெலியவேண்டா என்றவாறு.

'என்றென்று' என்பது விரைவின்கண் வந்த அடுக்குமொழி. கூடல் வளைத்தல் - பிரிந்த கணவன் வருதற்கு விரலால் வளைத்துக் குறிபார்த்தல். கால - ஒழுக. குஞ்சரம் - யானை; சாதியொருமை. உறை - துளி. (௪க௩)

காவற் பிரிவு முற்றிற்று.

## ௩௧. தூதிற் பிரிவு

அஃதாவது, இருவர் அரசர் தம்மிற் பொராநின்றவிடத்து அவரைச் சந்துசெய்வித்தற்குப் பிரியும் பிரிவு. அரசரைச் சந்து செய்வித்தற்குப் பிரியுமெனின், தூதுவராவார் பிறர்க்குப் பணிசெய்து வாழ்வார், அவர் பொருவிறப்பு என்னையோவெனின், தூதுவர் போலச் சந்து செய்வித்தற்குப் பிரியுமென்பது அன்று; இருவரசரும் நாளைப் பொருதும் என்று முரண்கொண்டிருந்த நிலைமைக்கண், தான் அருளரசனாதலின், 'இம்மக்களும் இவ்விலங்குகளும் எல்லாம்பட இவை இருகுலத்திற்கும் ஏதம் நிகழ்ந்தது என்செய்யுமோ, யான் இப்போரொழிப்பன்' என்று இருவரையும் இரந்து சந்து செய்வித்தலும் ஒன்று. தேவரும் அசுரரும் பொருத காலத்து, தேவரையும் அசுரரையும் மிக்கசெய்தாரை யான் ஒறுப்பல் என்று பாண்டியன் மாகீர்த்தி சந்து செய்வித்ததுபோல, இவரையும் மிக்க செய்தாரை ஒறுப்பல் என்று சந்து செய்வித்தது எனக் கொள்க.

தலைமகனுணர்ந்ததோழி தலைமகட்குணர்த்தல் :

தூதாக அன்பர் செலத்துணிந் தாரென்றுஞ் சொற்புலவோர்
மாதாக வன்பசி தீர்த்தருள் வாணன்தென் மாறையிந்து
மீதாக அம்பு கிடந்தன போலுண்கண் மெல்லியலிப்
போதாக வம்புகல் வோரிக லார்தம் புரம்புகவே.

(இ - ள்.) எஞ்ஞான்றுஞ் சொல்லிலேவல்ல நாவலர்களது பெரிய தாகத்தையும் வலிய பசியையும் தீர்த்தருளப்பட்ட வாணன் தென்மாறை நாட்டில் சந்திரன்மேல் அம்பு கிடந்தனபோன்ற முகத்தின்மேல் மையுண்ட கண்ணையுடைய மெல்லியலே! இப்போது பூசலைச் சொல்வோராகிய மாறுபாடுடைய இருபெரு வேந்தரும் பாசறை நீங்கித் தம் புரங்களிற் சென்று புக அன்பர் தூதாகப் போகத் துணிந்தனர் என்றவாறு.

இந்து - சந்திரன். மெல்லியல் - அண்மைவிளி. ஆகவம் - போர். இகலார் - மாறுபாடுடைய இருபெருவேந்தர். (௩௧௪)

தலைவி முன்பனிப்பருவங்கண்டு வருந்தல் :

மலிகின்ற வண்புகழ் வாணன்தென் மாறையை வாழ்த்தலர்போல்
மெலிகின்ற சிந்தையு மேனியுங் கொண்டு விளர்ப்பெனும்பேர்
பொலிகின்ற கஞ்சுகம் போர்த்திருந் தேனைப் புரந்தருளார்
நலிகின்ற முன்பனி நாளில்நண் ணார்முனை நண்ணினரே.

(இ - ள்.) நிறைகின்ற வளவிய புகழையுடைய வாணன் தென்மாறை நாட்டை வாழ்த்தாதவர்போல மெலிகின்ற நெஞ்சையும் மேனியையும் உடைத்தாய் விளர்ப்பு என்கின்ற பேர் பொலிகின்ற சட்டை போர்த்திருந்த என்னை மாறுபாடுடைய இருபெரு வேந்தரது படையின்கட் சென்றார், வருத்தஞ் செய்கின்ற முன்பனி நாளினும் வந்து காத்தருளார் என்றவாறு.

மலிதல் - நிறைதல். சிந்தை - நெஞ்சு. மேனி - வடிவு. கஞ்சுகம் - சட்டை. 'விளர்ப்பெனும்பேர் பொலிகின்ற கஞ்சுகம் போர்த்திருந்தேனை' என்றது, முன்பனிக்குளிர்க்குக் கஞ்சுகம் போடவேண்டுதலான், வேட்கை நோய்தந்து விளர்ப்பென்னுங் கஞ்சுகத்தைப் போர்த்திருந்தேன் என்று கூறினாளெனவுணர்க. புரத்தல் - காத்தல். நண்ணார் - மாறுபாடுடைய இருபெருவேந்தர். முனை - படை. நண்ணினர் - சென்றனர். (௪௧௫)

தோழி ஆற்றுவித்தல் :

சுற்றுங் குழலின் பிணிவிடுப் பான்வந்து தோன்றினர்பார்
முற்றும் பொழிகின்ற முன்பனி நாள்முகி லுங்கடலும்
வற்றும் பருவத்து மண்புரப் பான்தஞ்சை வாணனென்னார்ச்
செற்றும் படையின்வெம் போர்தணிப் பானன்று சென்றவரே.

(இ - ள்.) சொருகுங் குழலையுடையாய், மேகமும் கடலும் வறக்குங் காலத்தும் உலகத்தைக் காப்போனாகிய தஞ்சைவாணன் ஒன்னாரை வெகுளும் படைபோல் இருபெருவேந்தர் பொரும் வெவ்விய போரைத் தணிக்கும் பொருட்டுத் தூதாக அன்று சென்றவர், பார்முழுதும் பொழிகின்ற முன்பனிக் காலத்தில் நின் வேட்கை நோயைத் தீர்க்கும்பொருட்டு வந்து தோன்றினர், நீ புலம்பலொழியாய் என்றவாறு.

சுற்றல் - சொருகுதல். குழல் - அண்மை விளி. பான் இரண்டும் வினையெச்சம். நாள் என்புழி, ஏழனுருபு தொக்கது. உம்மை - எதிர்மறை. செற்றல் - வெகுளல். படையின் - படை போல். (௪௧௬)

தூதிற் பிரிவு முற்றிற்று.

## ௯௨. துணைவயிற் பிரிவு

அஃதாவது, நண்பாகிய வேந்தனுக்குப் பகைவேந்தர் இடையூறுற்றவழி, அவ்விடையூறு தீர்த்தற்குத் தலைமகன் துணையாகப் பிரிதல். தன் உழையரில் ஒருவனைப் படைகூட்டிச் செல்லவிடாது, தான் போதல்வேண்டும் என்பது என்னையெனின், நட்புமிக்கால் தானே யவனுயிருத்தலின், அவன் கருமம் தன் கருமமாயெண்ணி விரைவினெழுந்து அப்பகை நீக்கத் தானே போயினன் எனக்கொள்க.

துணைவயிற்பிரிந்தமை தோழி தலைமகட்குணர்த்தல்:

நண்பான மன்னர்க் கிடர்தணிப் பானெண்ணி நல்லுதவிப்
பண்பான மன்னர் படர்தலுற் றூர்பனி நீர்பொழியும்
தண்பா னலந்தொடை அப்புய வாணன் தமிழ்த்தஞ்சைவாழ்
வெண்பால் நலங்கொள்செவ் வாயன்ன மேயன்ன மென்னடையே.

(இ - ள்.) பனிபெய்யும் நீரைப் பொழிகின்ற தண்ணிய கருங்குவளை மாலை யணியப்பட்ட அழகிய புயத்தையுடைய வாணன் தமிழ்த்தஞ்சையில் வாழ்கின்ற வெண்மை நிறம் பொருந்திய பாலின் இனிமையைக் கொள்ளுஞ் செய்யவாயையும் அன்னம்போன்ற மெத்தென்ற நடையையும் உடையாய்! நம் மன்னர் தமக்கு நட்பான மன்னர்க்குப் பகை வந்தால் பகை வந்த துன்பத்தைத் தணிக்கும் பொருட்டாக் கருதி நல்லுதவிக் குணத்தினாலே செல்லலுற்றார் என்றவாறு.

இடர் - துன்பம். தணித்தல் - தீர்த்தல். எண்ணல் - கருதல். பண்பு - குணம். படர்தல் - செல்லுதல். பானல் - கருங்குவளை. அம் - சாரியை. தொடை - மாலை. அம் - அழகு. நலம் - ஆகுபெயர். 'செவ்வாய் நடை' என்புழி, உம்மைத்தொகை. மென்னடை - ஆகுபெயர். பின்பனிக்காலமாதலால், 'பனிநீர்பொழியுந் தண்பானல்' என்று கூறியவாறுணர்க. (சகஅ)

தலைமகள் பின்பனிப்பருவங்கண்டு புலம்பல்:

இன்னற் படுகின்ற என்னையெண் ணார்தமக் கின்றுணையாம்
மன்னற் குதவிப் பிரிந்தநங் காதலர் வாணன்தஞ்சைக்
கன்னற் கடிகை யறிவதல் லாற்பகல் காண்பரிதாம்
பின்னற் கனையிருள் கூர்துன்ப மேவிய பின்பனியே.

(இ - ள்.) தமக்கு இனிய துணையாகிய மன்னர்க்கு உதவியாகப் பிரிந்த நம்முடைய காதலர், வாணனது தஞ்சை நகரில் நாழிகை யறிவிக்கும் வட்டிலான் நாழிகை யறிவதல்லது ஞாயிற்றைக் காண்பதரிதாம், பின்னலாகிச் செறிந்த இருள் மிகுந்து துன்பத்தைப் பொருந்திய பின் பனிக்காலத்துத் துன்பப்படுகின்ற என்னை நினையார், யான் என்செய்கேன் என்றவாறு.

இன்னல் - துன்பம். கன்னற் கடிகை - நாழிகை. பகல் - ஞாயிறு. 'காண்பரிதாம்' என்னும் பெயரெச்சம்,

[1] 'சத்த மெச்சமொடு சிவணுங் குறிப்பி
னெச்சொ லாயினு மிடைநிலை வரையார்.'

என்னுஞ் சூத்திரவிதியால், இடையே பலசொல் வரினும், பனி என்னும் பெயரைக்கொண்டு முடிந்தது. (௪௧௯)

தோழி யாற்றுவித்தல் :

வடுக்கண் டனையகண் மங்கைநல் லாய்தஞ்சை வாணன்வெற்பின்
அடுக்கங் குளிர அசைகின்ற வாடை யகன்றவர்க்கு
நடுக்கஞ்செய் பின்பனி நாளின்வந் தாரமர் நண்பனுற்ற
இடுக்கண் களையவென் றேயகன் கானம் இகந்தவரே.

(இ - ள்.) தஞ்சைவாணன் வெற்பிடத்து மாவடுவைக் கண்டாற்போன்ற கண்ணையுடைய மங்கைநல்லாய்! மலைப்பக்கமெல்லாங் குளிர அசைந்து வருகின்ற வாடைக் காற்று பிரிந்தவர்க்கு நடுக்கஞ் செய்யப்பட்ட பின்பனிக் காலத்து, போரிடத்து நட்புக்கொண்ட வேந்தனுற்ற துன்பத்தை நீக்கவென்று அகன்ற சுரத்தைக் கடந்தவர் வந்தார், நீ புலம்பல் ஒழிவாய் என்றவாறு.

வடு - மாவடு. அடுக்கம் - மலைப்பக்கம். வாடை - வாடைக் காற்று. அமர் - போர். இடுக்கண் - துன்பம். கானம் - சுரம். இகந்தவர் - கடந்தவர். (௪௨௰)

துணைவயிற் பிரிவு முற்றிற்று.

1. தொல். சொல். வினையியல் - ௩௦.

## ௫௫. பொருள்வயிற் பிரிவு

அஃதாவது, பொருளீட்டுதல் காரணமாகப் பிரியும் பிரிவு; எனின், முன் பொருளிலனுமாகவே, 'உள்ளுநர்ப் பணித்தலும் இரந்தோர்க் கீதலும், நள்ளுநர் நாட்டலும் நயவா ரொறுத்தலும்' என்னும் இவையெல்லாம் பொருட் குறைபாடுடையார்க்கு நிகழாமையான், இக்குறைபாடெல்லாம் உடையனும்; அவை யுடையானது பொருவிறப்பு என்னையோவெனின், பொருளிலனுய்ப் பிரியுமென்பதன்று; தன் முதுகுரவரால் படைக்கப்பட்ட பலவேறு வகைப்பட்ட பொருள்களெல்லாங் கிடந்தது, மன்னன் அதுகொண்டு துய்ப்பது ஆண்மைத்தன்மை யன்றெனத் தனது தாளாற்றலாற் படைத்த பொருள்கொண்டு வழங்கி வாழ்தற்குப் பிரியும் என்பது. அல்லதூஉம், தேவகாரியமும் பிதிர்க்காரியமும் தனது தாளாற்றலாற்படைத்த பொருளாற் செயத் தனக்குப் பயன்படுவன: என்னை, தாயப்பொருளாற் செய்தது தேவரும் பிதிரரும் இன்புறாராகலான் அவர்களையும் இன்புறுத்தற்குப் பிரியுமெனக் கொள்க.

தோழி தலைமகட் குணர்த்தல்:

**மஞ்சைப் புனைமதில் மாறை வரோதயன் வாணர்பிரான்**
**தஞ்சைப் பதியண்ண லெண்ணவர் போற்றனி நாமிருக்க**
**நெஞ்சைப் பொருள்வயின் வைத்துநங் கேள்வர்நன் னீண்மதியின்**
**பிஞ்சைப் புரைநுத லாய்பிரி வானின்று பேசினரே.**

(இ - ள்.) நல்ல நீண்ட பிறைபோலும் நுதலையுடையாய்! முகிலையணிந்த மதில்சூழ்ந்த மாறைநாட்டில் வரத்தினுல் உதயஞ்செய்த வாணர் குலத்துக்கு அதிபனுகிய தஞ்சைப்பதியில் வேந்தனை யெண்ணுதவர்போலத் தனியாய் நாமிருக்கத் தன்னெஞ்சைப் பொருளிடத்துவைத்து நம் கணவர் பிரியும் பொருட்டாக இன்று சொல்லினர் என்றவாறு.

மஞ்சு - முகில். வரோதயன் - முற்றுவினையெச்சம். அண்ணல் - வேந்தன். எண்ணலர் - பகைவர். மதியின்பிஞ்சு - பிறை. வான் - வினையெச்சம். (௩௨௰)

தலைவி இளவேனிற் பருவங்கண்டு புலம்பல்:

நங்க ணிரங்க அரும்பொருள் தேட நடந்தவன்பர்
செங்க ணிருங்குயி லார்ப்பது கேட்கிலர் செந்தமிழோர்
தங்க ணிடும்பை தவிர்த்தருள் வாணன்றென் தஞ்சைவஞ்சி
திங்கள் நிவந்தது போற்கவி னூர்முகத் தேமொழியே.

(இ - ள்.) புலவர் தம்மிடத்து உண்டாகிய மிடித் துன்பத்தைத் தீர்த்தருளப்பட்ட வாணன் தென்தஞ்சையி லிருக்கும் வஞ்சிக்கொம்பானது திங்களை யேந்தியது போன்ற அழகார்ந்த முகத்தையும் இனிமையாகிய மொழி யையும் உடையாய்! நம்முடைய கண்ணனது கலுழ அரிய பொருள் தேடநடந்த அன்பர் இளவேனிற் காலம் வந்து செங்கண்ணையுடைய கருங்குயில் ஆரவாரிப்பது கேட்கிலர், யான் என்செய்கேன் என்றவாறு.

இடும்பை - துன்பம். வஞ்சி - வஞ்சிக்கொம்பு. நிவத்தல் - ஈண்டு ஏந்தல். கவின் - அழகு. ஆர்தல் - பொருந்துதல். (௪௨௧)

தலைவியைத் தோழி யாற்றுவித்தல்:

வார்த்தன பார மடமயி லேகுயில் மாருதமாம்
தேர்த்தனி விரன் திருநாளும் வந்தது சேர்மின்சென்றூர்
தார்த்தட மேரு வெனும்புய வாணன்தஞ் சாபுரிநின்
றூர்த்தது கேட்டுவந் தார்பொருள் தேட அகன்றவரே.

(இ - ள்.) வார்கட்டிய தனபாரத்தையுடைய மட மயிலே போல்வாய்! தார்பொருந்திய பெரிய மேருவென் னும் புயத்தையுடைய வாணன் தஞ்சாபுரியினின்று தென் றற்றேரையுடைய ஒப்பிலாத வீரனென்னுங் காமன் திரு விழா வந்தது; பிரிந்து சென்றவர்கள் தலைவியிடத்துப் போய்ச் சேர்மினென்று குயிலார்த்தது கேட்டுப் பொருள் தேடப் பிரிந்துபோனவர் நம் பக்கல் வந்தனர், நீ புலம்பல் ஒழிவாய் என்றவாறு.

வார் - கச்சு. மாருதம் - தென்றல். வீரன் - மாரன். 'குயில் ஆர்த்தது' எனவும், 'அகன்றவர் வந்தார்' எனவும் இயையும். (௪௨௨)

தலைவன் தலைமகளது உருவுவெளிப்பாடு
கண்டு சொல்லல்:

தலைமகன் தலைமகளது உருவுவெளிப்பாடு கண்டு சொல்லல் என்பது, கல்விவயிற்பிரிவு முதலாய ஐந்தினுள்ளும் தூது முதலியவும் காரணமாகிய பிரிவின்கண் அவ்வினை ஓர் ஆண்டின்கண் முடியாது நீட்டித்துழித் தலைமகன் தலைமகளது உருவுவெளிப்பாடு கண்டு சொல்லுதல்.

மைக்குஞ் சரநிரை யாற்றஞ்சை வாணன் மருவலரைக்
கைக்குங் களங்கெழு பாசறை யூடு கயலும்வில்லும்
மொய்க்குஞ் சுடரிள வம்புலி தானு முயங்கியெல்லாத்
திக்குந் தொழவரு மேசுரு ளோலைத் திருமுகமே.

(இ - ள்.) தஞ்சைவாணன் கரிய யானைக்கூட்டத்தில் பகைவரைக் கோபிக்குங் களம்போன்ற பாசறையுள்ளே கயல்போன்ற கண்ணும் வில்போன்ற புருவமும் மொய்க்கும் ஒலியையுடைய இளம்பிறைபோன்ற நுதலும் கூடிச் சுருண்ட ஓலையையுடைய திருமுகமானது எல்லாத் திக்கினும் யான் தொழவரும் என்றவாறு.

குஞ்சரம் - யானை. நிரை - கூட்டம். கெழு - உவமவுருபு. கைத்தல் - கோபித்தல். முயங்குதல் - கூடுதல். கயலும் வில்லும் புலியும் மூவேந்தர் இலச்சினையாதலான் அம்மூவரும் இலச்சினையிட்டு வரவிடுத்த சுருளோலைத் திருமுகமென்று எட்டுத் திக்குந் தொழவருமென்று சிலேடையால் ஒருபொருள் தோன்றியவாறு உணர்க. (௩௨௩)

பாசறைமுற்றி மீண்டு ஊர்வயின்வந்த தலைவன்
பாகற்குச் சொல்லல்:

மால்கொண்ட வாரண வாணன்தென் மாறை வலவநண்ணார்
கால்கொண்ட வாளமர் கையகல் பாசறைக் கையின்முட் [தேர்
கோல்கொண்ட வாறுநின் னேவல்கொண் டியானிக் கொடிநெடுந்
மேல்கொண்ட வாறுநம் மூர்வந்த வாறும் வியப்பெனக்கே.

(இ - ள்.) மதத்தால் மயக்கங்கொண்ட யானையையுடைய வாணன் தென்மாறை நாட்டிலிருக்கும் வலவனே, பகைவரிடங்கொண்ட வாள்பொருந்திய பாசறையைக்

கையகலப்பட்ட நீ கையிடத்தில் தாற்றுக்கோல் கொண்டவாறும், நின் ஏவலைக்கொண்டு யான் இந்தக் கொடி பொருந்திய நீண்ட தேர்மேற் கொண்டவாறும், நம்மூர் வந்தவாறும் வியப்பாய் இருந்தது என்றவாறு.

மால் - மயக்கம். கால் - இடம். அமர்தல் - பொருந்தல். கையகலல் - நீங்குதல். முட்கோல் - தாற்றுக்கோல். வியப்பு - அதிசயம். (சஉச)

தலைமகளோடிருந்த தலைமகன் கார்ப்பருவங்கண்டு சொல்லல்:

கொத்தல ரோதியங் கொம்பரன் னாள்பொங்கு கொங்கைவிம்ம
முத்தல ராக முயங்கினர் யாமுழு நீர்விழிபோல்
மைத்தலர் நீல மலர்வயல் சூழ்தஞ்சை வாணன்வண்மைக்
கைத்தல மான இனிப்பொழி வாழிய கார்முகிலே.

(இ - ள்.) கார்காலத்து முகிலே, கொத்தாயிருக்கும் மலரைத்தரித்த கூந்தலையுடைய அழகிய கொம்புபோல்வாளது மிகுந்த கொங்கை பூரிக்க முத்துமாலை விரிந்த மார்பை யாம் முயங்கினம்; நிறைந்த நீரிற் கண்போலக் கருமையுடைத்தாய் அலரப்பட்ட நீலமலர் பொருந்திய வயல்சூழ்ந்த தஞ்சைவாணன் கொடையையுடைய கைத்தலத்துக்கு ஒப்பாக இனிப் பொழிவாய், உலகமெங்கும், வாழ்க என்றவாறு.

ஓதி - கூந்தல். பொங்குதல் - மிகுதல். விம்முதல் - பூரித்தல். முத்து - ஆகுபெயர். மைத்து - வினையெச்சம். வண்மை - கொடை. மான - ஒப்பாக. வாழிய - உலகம் வாழ்க. (சஉரு)

இதுகாறும் ஐம்பத்தாறுநாட் செய்தியென் றுணர்க.

மூன்றாவது கற்பியல் முற்றிற்று.

## தஞ்சைவாணன் கோவை

முற்றிற்று.

# அகப்பொருட்செய்தி

## நாள்வரையறை

| பாட்டு | முதல் | பாட்டு | வரை | நாள் : |
|---|---|---|---|---|
| க | * | நந | * | முதல்நாள் |
| நச | * | நஅ | * | இரண்டாநாள் |
| நகூ | * | சுஅ | * | மூன்றாநாள் |
| சுகூ | * | அகூ | * | நாலாநாள் |
| கூ0 | * | க00 | * | ஐந்தாநாள் |
| க0க | * | கருகூ | * | ஆறாநாள் |
| கசு0 | * | கஅகூ | * | ஏழாநாள் |
| ககூ0 | * | ககூந | * | எட்டாநாள் |
| ககூச | * | உ0அ | * | ஒன்பதாநாள் |
| உ0கூ | * | உகச | * | பத்தாநாள் |
| உகரு | * | உஉஎ | * | பதினொன்றாநாள் |
| உஉஅ | * | உநசு | * | பன்னிரண்டாநாள் |
| உநஎ | * | உநஅ | * | பதின்மூன்றாநாள் |
| உநகூ | * | உருந | * | பதினான்காநாள் |
| உருச | * | உருரு | * | பதினைந்தாநாள் |
| உருசு | * | உஎந | * | பதினாறாநாள் |

**பதினாறுநாள்** வரைவிடைவைத்துப் 'பொருள்வயிற்பிரிந்த தலைமகன் **ஐம்பத்தொன்றநாள்** மீண்டுவந்தமையால் முப்பத்துநான்குநாள் இடைப்பட்டதென உணர்க.

| | | | | |
|---|---|---|---|---|
| உஎச | * | உஅஎ | * | ஐம்பத்தொன்றாநாள் |
| உஅஅ | * | ந0ச | * | ஐம்பத்திரண்டாநாள் |
| ந0ரு | * | நசஅ | * | ஐம்பத்துமூன்றாநாள் |
| நசகூ | * | நருச | * | ஐம்பத்துநான்காநாள் |
| நருரு | * | நசுரு | * | ஐம்பத்தைந்தாநாள் |
| நசுசு | * | சஉரு | * | ஐம்பத்தாறாநாள் |

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஒருதலைக் | ௨௨௦ | சகநல்க | ௨௭௪ |
| ஒருவெண் | ௨௮௨ | சந்தனந் | ௨௬௯ |
| ஒலிதெண் | ௧௨௧ | சீதையா | ௨௬ |
| ஒல்கா | ௧௭௦ | சிமையார் | ௧௦௮ |
| ஒல்லென | ௧௯௩ | சிலைபயில் | ௧௧௮ |
| ஒழிதோற் றிய | ௨௫௫ | சிறந்தார் தெரிந்த | ௧௪௨ |
| ஒன்றே | ௩௦௬ | சிறந்தார் புகழ் | ௩௨௯ |
| ஓங்கண்ணல் | ௧௮௩ | சினவேய் | ௩௦௬ |
| ஓவலில் | ௧௮௮ | சின்ஞாண் | ௧௩௭ |
| கண்சாயல் | ௧௩௩ | சீதள | ௬௧ |
| கந்தார | ௧௯௪ | சீயங்கொ லோ | ௪௬ |
| கயமா | ௨௪௧ | சுருளேய் | ௨௫௯ |
| கயல்வென்ற | ௧௭௪ | சுழிநீ ரலை | ௧௬௭ |
| கருவிருந் | ௧௫௭ | சுற்றுங் | ௩௩௫ |
| கரைத்தாவி | ௮௬ | சூடத் தகுவன | ௧௨௭ |
| கலங்குந் | ௨௧௦ | சூரார் | ௫௯ |
| கலைதொடக் | ௧௨௪ | செங்கேழ் | ௧௫௫ |
| கழைபோல் | ௨௨௨ | செந்நாண் | ௨௬௨ |
| களவரும் | ௧௧௭ | செயலார் | ௧௧௫ |
| கறையார் | ௨௮ | செயலைத் | ௨௭௭ |
| கனஞ்சாய | ௧௪௯ | செருமக ளேயும் | ௨௮௩ |
| கனமே | ௬௩ | செவ்வண்ண | ௧௨௫ |
| காதற் | ௩௩௧ | செழியன் | ௧௬௬ |
| காலைப் | ௨௨௩ | செல்லிற் | ௨௬௩ |
| காலையம் | ௧௪௧ | செறிவளர் | ௧௦௪ |
| கானலங் | ௧௪௮ | செறிவேழ | ௨௦ |
| கானெடுங் | ௨௩௬ | சென்றே | ௪௦ |
| கானேய் | ௬௬ | சேலார் | ௩௦௦ |
| கூரவுங் | ௨௦௮ | சையத் திரள் | ௨௬௭ |
| குருதிகண் | ௨௦௪ | சோகா குல | ௨௪௨ |
| குவளை | ௮௧ | சோலையில் | ௧௧௦ |
| குளித்தா | ௨௧௭ | தண்டா மரை | ௯௧ |
| குனிநாண் | ௧௩௭ | தண்டார் | ௨௫௬ |
| குன்றா கிய | ௧௪௫ | தண்ணென் | ௧௮௨ |
| கையுந் | ௧௨௮ | தண்பட்ட | ௮௭ |
| கோண்டானில் | ௩௨௮ | தமிழ்தங் கிய | ௨௭ |
| கொத்தல | ௩௪௧ | தருகற் பக | ௫௭ |
| கொலைகா | ௬௭ | தருந்தாரு | ௧௩௪ |
| கோங்கநன் | ௩௦௪ | தரையார | ௮௯ |
| கோபுரஞ் | ௨௯௩ | தலங்கா | ௬௮ |

| | பக்கம் |
|---|---|
| தலத்திற்கு | ௨௦௯ |
| தலையாகிய | ௩௨௦ |
| தழங்கார் | ௩௨௫ |
| தழல்கண்ட | ௭௨ |
| தளரா | ௨௦௦ |
| தளிபோற் | ௨௬௫ |
| தள்ளா | ௩௧௫ |
| தற்பழி | ௧௯௮ |
| தனஞ்சேர்ந்த | ௨௨௯ |
| தனையா | ௧௮௦ |
| தன்கண் | ௧௨௧ |
| தன்போ | ௨௫௨ |
| தாதகை | ௧௭௭ |
| தாமாக | ௨௯௨ |
| தாமே தமக் | ௨௭௯ |
| தாரணி | ௨௪௭ |
| தாராக | ௩௧௨ |
| தாவாத | ௨௦௮ |
| தாளிணை | ௯௯ |
| திரண்மா | ௩௨ |
| திருந்தார் | ௧௧௦ |
| திரைகே | ௨௧௪ |
| திரையிற் | ௨௦௨ |
| திவாகரனே | ௧௨௫ |
| திளைக்குந் | ௭௭ |
| துதித்தே | ௨௪௮ |
| துறந்தன | ௧௭௯ |
| தூதாக | ௩௩௪ |
| தூற்று | ௧௨௯ |
| தேண்பாற் | ௧௮௪ |
| தெரியாடக | ௩௦௩ |
| தெரியோர் | ௩௨௩ |
| தென்மாறை | ௨௯௧ |
| தென்பால் | ௪௫ |
| தென்னை | ௨௧௨ |
| தேங்கிய | ௧௯ |
| தேர்த்தானை | ௨௨௭ |
| தேறுத | ௨௫ |
| தேனுஞ் | ௧௦௩ |
| தேனுற்ற | ௧௭௬ |

| | பக்கம் |
|---|---|
| தேன்வந்த | ௧௧௯ |
| தோடங்கும் | ௨௬௮ |
| தொடுசிலைக் | ௨௮௪ |
| தொடைக்கணி | ௧௪௭ |
| தொடையே | ௧௧௩ |
| தொலைவிலை | ௨௪௦ |
| நங்கணிரங்க | ௩௩௯ |
| நஞ்சா | ௨௧௧ |
| நஞ்சோ | ௨௬௦ |
| நண்பான | ௩௩௬ |
| நந்துசுற் | ௧௫௨ |
| நம்பால் | ௧௮௯ |
| நம்பே | ௧௮௫ |
| நலம்புனை | ௨௭௧ |
| நல்லார் | ௨௨ |
| நறையல | ௧௧௪ |
| நனையகத் | ௩௦௮ |
| நன்றே | ௨௮௧ |
| நாணினுந் | ௨௮௬ |
| நாள்மா | ௨௮௦ |
| நாமாவி | ௧௩௩ |
| நாவியுங் | ௩௫ |
| நிலவேய் | ௨௧௬ |
| நினக்கே | ௩௨௧ |
| நினையான் | ௨௮௮ |
| நினையீர் | ௨௩௫ |
| நின்மே | ௩௦௩ |
| நீவே றுரைக் | ௯௭ |
| நெஞ்சுக | ௧௪௬ |
| நேயம் | ௧௩௬ |
| நேயம்புனை | ௨௭௬ |
| நோந்துங் | ௨௮௧ |
| படம்பட்ட | ௨௪ |
| படியொன்று | ௩௧௪ |
| பண்ணுங் | ௨௧௯ |
| பயில்காள | ௧௪௮ |
| பரக்கின்ற | ௧௨௬ |
| பரவாத | ௧௬௩ |
| பருந்தொன்று | ௨௩ |
| பலரே | ௨௬௨ |

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பல்லியம் | ௧௮௦ | போயே | ௩௨௪ |
| பறந்தாங் | ௨௧௫ | போருறை | ௨௫௪ |
| பாகையுந் | ௭௧ | மஞ்சூட்டி | ௧௩௯ |
| பாரணங் கோதிருப் | ௧௩ | மஞ்சைப் | ௩௩௮ |
| பாரித்த | ௬௫ | மணிபொன் | ௪௧ |
| பாரோ | ௨௫௯ | மணிப்பா விகை | ௨௪௧ |
| பாலன்ன | ௨௬௧ | மணிவரை | ௨௦௧ |
| பால்போல் | ௮௨ | மண்குன்ற | ௨௫௪ |
| புகழார் | ௧௦௦ | மண்டுந் | ௨௨௬ |
| புணரா | ௧௯௦ | மண்ணலை | ௨௫௬ |
| புதியேன் | ௮௬ | மண்ணோர் | ௧௬௮ |
| புயலே சுமந்து | ௧௦ | மண்ணிற் | ௧௬ |
| புயலே றதிர் | ௧௬௧ | மண்ணும் | ௧௨௦ |
| புயற்கண் | ௧௮௩ | மந்தார | ௧௬௫ |
| புரவே | ௩௨௨ | மயலார் | ௪௮ |
| புராந்தகர் | ௨௧௦ | மயனோர் | ௧௩௫ |
| புறங்கூ | ௭௦ | மயிலாடு | ௨௧௮ |
| புனங்காவ | ௯௪ | மருப்பா | ௧௦௧ |
| புனமும் | ௧௫௨ | மருவாய | ௫௨ |
| புனையலங் | ௩௧௨ | மருவிற் | ௩௧௬ |
| புனையலரே | ௨௮௯ | மருள்கொண்ட | ௨௯௬ |
| புனையாழி | ௫௫ | மலருந் | ௧௯௩ |
| பூட்டிய | ௭௯ | மலர்புரை | ௩௧௮ |
| பூந்தழை | ௧௫௯ | மலிகின்ற | ௩௩௪ |
| பூவலர் | ௧௪௩ | மலைநாடு | ௩௧ |
| பெருமால் | ௪௭ | மலைமாது | ௧௫௭ |
| பெறவரி | ௧௫௬ | மலைமுழு | ௫௬ |
| பேசத் தகுவ | ௧௭௫ | மலைவந்த | ௨௫௭ |
| பேணற் | ௧௪௪ | மல்குற்ற | ௧௦௮ |
| போய்போ | ௧௩௬ | மல்லார் | ௧௦௭ |
| பொய்யா தவர் | ௧௭௮ | மல்லையம் | ௧௬௯ |
| பொருகின்ற | ௨௩௩ | மல்வித்த கங் | ௩௩௦ |
| பொருபால் | ௧௯௮ | மழவே | ௨௪௯ |
| பொருமணி | ௮௫ | மழைவளர் | ௬௪ |
| பொழிநான | ௨௬௪ | மறலா | ௮௦ |
| பொறைகொண்ட | ௬௦ | மறவாகை | ௨௬௧ |
| பொன்னிய | ௯௮ | மற்றே | ௧௩௦ |
| பொன்னுற்ற | ௨௫௩ | மன்பதை | ௧௮௬ |
| போதலர்ந் | ௨௮௯ | மன்றும் | ௫௧ |
| போயா | ௧௩௧ | மன்னவர் | ௩௧௬ |

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மன்னு உல | ௩௬ | மையணி | ௩௧௮ |
| மன்னிய | ௩௭ | மையார் | ௧௫ |
| மன்னும்புல | ௩௨௪ | மையுற்ற | ௨௦௨ |
| மன்னுயிர் | ௩௩௩ | மைவா ளிலங்கு | ௯௩ |
| மாகந் தரி | ௧௬௩ | யாணர்க் | ௩௩௦ |
| மாகப் புயன் | ௨௫௦ | யாரும்பர் | ௭௨ |
| மானுத | ௨௧௨ | யாரே யிவரென் | ௯௦ |
| மாணிக்க | ௧௮௭ | யானகம் | ௨௮௫ |
| மாதங்க | ௨௫௧ | யான்கண்ட | ௨௮௬ |
| மாதுற்ற | ௧௯௫ | வகைகொண்ட | ௧௬௦ |
| மாரியஞ் சுங் | ௨௪௩ | வகையும் | ௨௨௩ |
| மாலாய் | ௫௮ | வஞ்சங் | ௧௭௧ |
| மாலுந் திருவு | ௨௬௮ | வடமால் | ௨௬௪ |
| மால்கொண்ட | ௩௪௦ | வடியேய் | ௨௭௮ |
| மால்வண் | ௨௩௪ | வடியோ | ௧௭௫ |
| மாவாரண | ௩௨௫ | வடுக்கண் | ௧௩௭ |
| மாறு வள | ௨௭௨ | வடுவரி | ௧௫௮ |
| மாறையர் | ௩௦௯ | வண்கொடி | ௩௮ |
| மானு கரன் | ௫௨ | வண்டலை | ௭௭ |
| மான்காள் | ௧௫௪ | வண்புன | ௩௨௧ |
| மிகவும் | ௨௨௮ | வயங்கே | ௩௨௦ |
| மிக்கா ருள | ௯௮ | வரமாமை | ௨௬௫ |
| மின்னு | ௧௯௭ | வரலிங் | ௧௭௮ |
| மின்னே | ௧௬௪ | வரற்கால | ௩௩௩ |
| முகத்திற் | ௬௨ | வரியோல | ௨௪௮ |
| முகையா | ௧௬௯ | வருநீர் | ௧௦௩ |
| முதிரா | ௧௬௫ | வரைப்பால் | ௧௯௨ |
| முத்தணி | ௨௦௭ | வரையுமிந் | ௩௦௫ |
| முயங்கிய | ௧௩௪ | வலம்புரி | ௫௬ |
| முலையார் | ௧௪௩ | வலைப்பெய்த | ௧௩௮ |
| முன்னா | ௧௭௨ | வல்லா ரிளங் | ௯௯ |
| முன்னே | ௨௭௫ | வழியா | ௨௭௩ |
| மூரற் கதிர் | ௧௬௮ | வழுதியர் | ௨௦ |
| மேவிக் கலை | ௫௩ | வளங்கனி | ௬௯ |
| மேனுள் | ௨௭௬ | வளங்கொண்ட | ௩௦௫ |
| மைக்குஞ் சர | ௩௪௦ | வளவேய் | ௨௯௫ |
| மைதோய்ந் | ௩௦௫ | வறியார் | ௧௮௯ |
| மைந்நாண் | ௩௨௬ | வனநாள் | ௨௦௫ |
| மைந்நீர் | ௨௫௮ | வனமார் | ௮௮ |
| மைப்போ | ௧௨௨ | வனைந்தா | ௧௦௧ |

| | பக்கம் |
|---|---|
| வனையுங் | ௧௨௭ |
| வன்பணி | ௧௧௨ |
| வன்போ | ௩௧௦ |
| வன்மா | ௨௩௨ |
| வாக்குந் | ௯௨ |
| வாமக் கலை | ௫௦ |
| வாயார | ௨௯௬ |
| வாருந்து | ௩௧௫ |
| வார்த்தன | ௩௩௯ |
| வாவுங் கலை | ௯௬ |
| வாவித் | ௨௨௯ |
| வாளினு | ௧௯௧ |
| வாளேய் | ௨௯௦ |
| வானக் | ௩௧ |
| விடவார் கணை | ௧௬௨ |
| விடையான் | ௧௨௯ |
| விண்காவல் | ௩௩௨ |
| விண்டலை | ௧௯௫ |
| விண்டார் | ௧௮௭ |
| விண்மே லமரர் | ௩௦௭ |
| விம்மூர் | ௧௭௯ |
| வியலூ ரெயிற்புற | ௧௮௧ |
| விரையக | ௧௦௫ |
| விரையூர் | ௧௧௨ |
| விழிகுழி யும் | ௨௩௧ |
| வில்லார் | ௧௦௨ |
| வில்லேய் | ௨௨௪ |
| வின்மலை | ௩௦ |
| வேங்கார் | ௨௫௨ |
| வெங்குல | ௧௬௨ |
| வெங்கோல் | ௬௯ |
| வெஞ்சுர | ௨௭௮ |
| வெடிக்கின்ற | ௨௦௩ |
| வெண்டா மரை | ௧௦௬ |
| வெண்டோ | ௧௧௬ |
| வெம்போர் | ௧௭௧ |
| வெயிலுந் | ௧௬௭ |
| வெவ்வே | ௧௨௦ |
| வெள்ளம் | ௩௨௭ |
| வெறுத்தா | ௨௭௧ |
| வெற்றிய வாவிய | ௧௯௬ |
| வேண்டும் | ௨௩௩ |
| வேளாண் | ௩௧௩ |


செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை

முற்றிற்று